# சௌந்தர கோகிலம்

BY

VADUVUR K. DURAISWAMI AYYANGAR, B. A.

FUBLISHERS

B. RATHNA NAYAGAR & SONS,

GEORGE TOWN, MADRAS.

Rights Reserved]

[Price Rs. 3—0—0.

# சௌந்தர கோகிலம்

(ஓர் இனிய தமிழ் நாவல்)

## இரண்டாம் பாகம்

வடுவூர் - கே. துரைஸாமி ஐயங்கார், B. A.,
நூலாசிரியர்.

நான்காம் பதிப்பு

B. இரத்தின நாயகர் & ஸன்ஸ்,
புஸ்தக வியாபாரிகள்,
ஜார்ஜ் டவுன், சென்னை.

காபி ரைட்] 1948 [விலை ரூ. 3-0-0

PRINTED AT THE
THIRUMAGAL VILASAM PRESS
G, T, MADRAS,

Copy Right and Rights of Translation in any other Languages, are strictly reserved by the Publishers.

# ஸௌந்தர கோகிலம்

8-வது அதிகாரம்

## மதிகாணு இரவோ! மழைகாணு இளம்பயிரோ!

கோகிலாம்பாளென்ற நமது ஏந்தெழில் மடவன்னம் அமர்ந்து சென்ற பெட்டி வண்டியின் சாரதியும் போலீஸ் ஜெவானும் ஆனைகவுனி போலீஸ் ஸ்டேஷன் சப் இன்ஸ்பெக்டரிடம் போய் ஆஜராயினர். அவர் ஜெவானை நோக்கி கம்பீரமாக நிமிர்ந்து பார்த்து, "யார் இவன்? என்ன விசேஷம்?" என்று கேட்க, ஜெவான், "எஜமானே! இவன் புரசைப்பாக்கம் துபாஷ் ராஜரத்ன முதலியாருடைய வண்டிக்காரன். அவருடைய வீட்டு ஜனங்களைப் பெட்டி வண்டியில் வைத்து ஓட்டிக்கொண்டு வந்த இவன் இடது பக்கமாக வராமல் வலது பக்கமாக வந்தான். அதற்காக இவனை சார்ஜ் செய்து அழைத்துக்கொண்டு வந்தேன்" என்று பணிவாகவும் மரியாதையாகவும் கூறினன்.

உடனே சப் இன்ஸ்பெக்டர், "வண்டி எங்கே?" என்ருர் ஜெவான், "எஜமானே! வண்டியில் இருந்த அம்மாள் எங்கேயோ நிரம்பவும் அவசரமாய்ப் போகவேண்டுமாம். அதனுல் அவர்கள் இவனை அனுப்பிவிட்டு, வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள். நான் வண்டியின் நம்பரைக் குறித்துக்கொண்டு வந்தேன்" என்ருன்.

சப் இன்ஸ்பெக்டர் வண்டிக்காரனை நோக்கி, "ஏனடா! அடேய்! வண்டியை நீ வலது பக்கமாக ஏன் ஓட்டினுய்?" என்ருர். வண்டிக்காரன் சப் இன்ஸ்பெக்டரை நோக்கி வணக்கமாகக் கும்பிட்ட வண்ணம் பணிவாய்ப் பேசத்தொடங்கி, "இல்லீங்க சாமி! நானு சரியாத்தான் ஓட்டிக்கினு வந்தேனுங்க. குருதெ புச்சுங்க; அது என்னுத்தையோ கண்டு மெரண்டு இஸ்த்துதுங்க. அப்ப,

எதிருலே ரெண்டு மூணு வண்டி சேந்தாப்பலே வந்துடுச்சுங்க; அதுங்களைக் கண்டு குதிரெ ரவையூண்டு வடக்காலே நவந்து பூட்டுதுங்க. அம்படத்தானுங்க. நானு ஒணும்னு வலது பக்க மாவே ஓட்டிக்கினு வால்லீங்க" என்ருன்.

சப் இன்ஸ்பெக்டர், "அதைப்பற்றி நமக்கு அக்கரை இல்லை. வண்டிக்காரனே வேண்டுமென்று வலது பக்கமாக ஓட்டுகிருனு, அல்லது, அவனை மீறி குதிரையே வலது பக்கமாக இழுத்துக் கொண்டு போகிறதா என்பதை நாங்கள் கண்டு பிடிக்கிறது சாத் தியமான காரியமல்ல. எந்த வகையிலும் வண்டி வலது பக்கம் வந் தால், அதுவே போதுமானது. ஆகையால், உன்மேல் குற்றம் ஏற்படுகிறது. உன் பெயரென்ன? உனக்கு ஜாமீன் கொடுக்க யாராவது வந்திருக்கிருர்களா?" என்ருர்.

வண்டிக்காரன், "எம்பேரு முருகேஸனுங்க. எனக்கு சாமீனு குடுக்க சாணுபேரு இருக்காங்க. எங்க எசமானரு வங்களாவுக்கு வந்தீங்கன்னு, லெச்ச ரூவாய்க்கி ஒணுமானுலும் அவுங்களே சாமீனு குடுப்பாங்க. வாங்க போவலாம்" என்ருன்.

அதைக் கேட்ட சப் இன்ஸ்பெக்டர் புளியாக நகைத்து, "ஓகோ! நாங்கள் உன்னேடு அவர்களுடைய பங்களாவுக்கு வர வேண்டுமோ! எங்களுக்கு இங்கே வேறே வேலை இல்லையென்று நினைத்துக் கொண்டாயா? அடேய் முருகேஸ்! நாங்கள் யாரும் உன்னேடு வரமுடியாது. யாராவது இங்கே வந்து ஜாமீன் கொடுத் தால், உன்னை விடுகிறேம். இல்லாவிட்டால், நீ இங்கேயே லாக் காப்பில் இருக்கவேண்டும்" என்ருர்.

முருகேசன், "எசமானே! நீங்க வரமுடியாதுன்னு என்னெ யாச்சும் வெளியே உடுங்க. நாம் போயி மனிசரெ இட்டாறே னுங்க" என்று பணிவாகக் கூறினன்.

சப் இன்ஸ்பெக்டர் மறுபடியும் புளியாக நகைத்து, "உன்னை வெளியில் அனுப்பிவிட்டால், அதன் பிறகு ஜாமீன் எதற்காக? வெளியில் உன்னை விட்டால், நீ மறுபடி திரும்பி வரமாட்டாயென்ற அவநம்பிக்கையினுல்தானே நாங்கள் ஜாமீன் கேட்கிறேம். அதைத் தெரிந்துகொள்ளாமல் பேசுகிருயே!" என்ருர்.

முருகேசன். "எங்கிளுக்கு என்னசாமி தெரியும். நாங்க படிக் காத முட்டாளுங்கதானே. எங்கிளுக்கு எல்லாத்தியும் நீங்கதாஞ் சாமி சொல்லிக் குடுக்கணுங்க. எஞ்சாமி! நானு பயந்து ஒரு கேவி கேக்கறேனுங்க. எங்க மனிசருக்குத் தெரியாமே என்னெ நீங்க நடுப்பாதையிலே புடிச்சிகினீங்க; என்னெயும் உடமாட்டேண்டு றீங்க. நீங்களும் இத்தெ வுட்டு வர மாட்டேண்டுறீங்க. எனக்கு வேண்டிய மனுசரு அவுங்கதான். அவுங்க ஊட்டுலே இருக்காங் களே. எனக்கு சாமீனு குடுக்கணுமின்னு அவுங்களுக்கு சோசியம் தெரியுமா சாமீ! அவுங்களே எப்பிடி வருவாங்க சாமீ!" என்றான்.

அதைக்கேட்ட சப் இன்ஸ்பெக்டர் கோபங்கொண்டு, "அடேய்! என்ன அதிகப் பிரசங்கித்தனமாய்ப் பேசுகிறாய்! நிறுத்து உன் குறும்பை. உன்னைச் சேர்ந்தவர்கள் அவர்களாக இந்தச் சங்கதி யைத் தெரிந்துகொண்டு வந்து ஜாமீன் கொடுத்தால்தான், நாங்கள் உன்னை விடலாமேயன்றி, நாங்கள் ஜாமீனுக்காக உன்னோடு கூட வந்து அலையவும் முடியாது; எங்களுக்கெல்லாம் வேறே முக்கிய மான வேலையிருப்பதால், நீ சொல்லும் இடத்திற்குப் போய் உனக்கு ஜாமீன் கொடுக்க மனிதரை அழைத்துவரவும் முடியாது. உன்னுடைய மனிதர்கள் உன்னைத்தேடி, நீ இங்கே இருப்பதாகத் தெரிந்துகொண்டு வந்து ஜாமீன் கொடுக்கிறவரையில் நீ லாக்காப் பில் இரு" என்று கூறினார்.

அதைக் கேட்ட வண்டிக்காரன் நிரம்பவும் பணிவாகப் பேசத் தொடங்கி, "எசமானே! நானு அப்பிடி நாடோடி கேடோடி இல் லீங்க; தக்க பெரிய மனிசரு வூட்டுலே இருக்கறவனுங்க. வண்டி நம்பரே நீங்க தெரிஞ்சுக்கினீங்க. என்னெப் புடிச்சாந்த இந்த ஐயாவே நான் அந்த ஊட்டுலே ரொம்ப காலமா வேலெயிலே இருக் கறத்தெப் பாத்திருக்காங்க. என்னோடெ ரோக்கியதெப் பத்தி இந்த ஐயாவையே கேட்டுப்பாருங்க. நான் அப்பிடியெல்லாம் தப் புத் தண்டாவுக்குப் போகப்பட்டவன் இல்லீங்க. இந்தக் குத்தத் துக்கு இண்ணெக்கெல்லாம் போட்டா அஞ்சுரூவா அவதாரம் போடப் போறாங்க. அதுக்காவ பயந்துக்கிணு நான் இந்த உத்தியோ வத்தையும் பொஞ்சாதி புள்ளெ குட்டிங்களெயும் உட்டுப்புட்டு ஓடி ஒளிஞ்சிக்கப் போறேனுங்க. பாதகமில்லீங்க. நானே சொந்த சாமீனு குடுக்கறேனுங்க. எசமானே! தயவு பண்ணுங்க. நானு அவசரமாய் போவணுங்க. எசமானரு ஊட்டுக் கொயந்தே தனி

யாப் போவுதுங்க. அப்பாலே, ஏதாச்சும் ஒலித்திரியம் வந்திச் சின்னு, அவுங்க என்னே மாட்டிக்கிவாங்க. சாமீ! சாமீ! கொஞ் சூண்டு தயவு பண்ணுங்க" என்று கெஞ்சிக் கூத்தாடினன். அதைக் கேட்ட சப் இன்ஸ்பெக்டர் அவனைப் பிடித்துவந்த ஜெவானை நோக்கி, "என்ன ஓய்! இவனை உனக்குத் தெரியுமா? விடலாமா?" என்ருர். ஜெவான், "இவனும் மினியன் என்ற இன்னொருவனும் வெகு காலமாய் அந்த ராஜரத்ன முதலியார் வீட்டில்தான் இருந்து வருகிருர்கள். இருவரும் யோக்கியர்கள்தான். இவனுடைய சொந்த ஜாமீனிலேயே இவனை விடலாம்" என்ருன்.

அதைக் கேட்ட சப் இன்ஸ்பெக்டர் சிறிது நேரம் ஏதோ யோசனை செய்தபின் வண்டிக்காரனைப் பார்த்து, "அடே முருகேஸ்! மினியன் என்று இன்னொரு வண்டிக்காரன் இருக்கிருனமே. அவன் இப்போது எங்கே இருக்கிருன்?" என்ருர்.

முருகேசன், "ஆமாஞ் சாமீ! அவன் இப்ப எங்க எசமானர் வங்களாவுலேதான் இருக்கருனுங்க. அவன் சாதியிலே பறையன். நானு செம்படவனுங்க. இப்ப வண்டியிலே என்னெடே கூட ஒரு மொதலியாரைய்யாவும் ஒக்காந்து வரவேண்டி இருந்திச்சுங்க. அதுக்காவ, மினியனை அனுப்பாமே, என்னெ அனுப்பிச்சாங்க. மொதலிமாருங்க, பறையருக்குப் பக்கத்துலே இடிச்சிக்கினு ஒக் காரப் பிடாதல்ல. அதுக்காவத்தான் என்னெ அனுப்பிச்சாங்க" என்ருன்.

சப் இன்ஸ்பெக்டர், "சரி; நீயே இருநூறு ரூபாய்க்கு ஜாமீன் கொடுத்திருப்பதாக முச்சலிக்கை எழுதிக் கையெழுத்துச் செய்து விட்டுப்போ. விசாரணைத் தேதி என்றைக்கென்று உனக்கு நோட் டீஸ் வரும். அப்போது வந்து ஆஜாாகவேண்டும்" என்ருர்.

முருகேசன் அதற்கிணங்கி, இருநூறு ரூபாய்க்கு ஜாமீன் கொடுத்திருப்பதாக எழுதப்பட்ட முச்சலிக்கையில் கையெழுத்துச் செய்துவிட்டு சப் இன்ஸ்பெக்டருக்கும் ஜெவானுக்கும் கும்பிடு போட்டபின் அவ்விடத்தை விட்டு வெளியில் வந்து சேர்ந்தான். அவனைப் பிடித்துச்சென்ற போலீஸ் ஜெவான் மறுபடியும் முன் னிருந்த இடத்திற்குப் போய் நின்றுகொண்டான். ராஜரத்ன முதலியாரது பெட்டி வண்டியில் வரும் வண்டிக்காரனை வண்டியி

லிருந்து இறக்கி ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் அவ்விடத்தில் அரை நாழிகை காலமாவது அவனை நிற்கவைத்து பிறகு விடும்படி போலீஸ் பெரிய இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளை முதல்நாளிர வில் அந்த ஜெவானுக்கு உத்தரவு செய்திருந்தாராதலால், அந்த ஜெவான் தான் இன்ஸ்பெக்டரது விருப்பப்படியே காரியத்தை முடித்துவிட்டதாக எண்ணித் தனக்குத்தானே மிகுந்த சந்தோஷ மடைந்தவனாய்த் தனது அலுவலைப் பார்க்கத் தொடங்கினான். ஸ்டேஷனை விட்டு வெளியில் வந்த முருகேசன் தன் எஜமானரது பெட்டி வண்டி ஒருகால் தன் வருகை எதிர்பார்த்து எங்கே யாவது நிறுத்தப்பட்டிருக்குமோ, அல்லது, அது வெகு தூரத் திற்கு அப்பால் போய்க்கொண்டிருக்குமோ என்ற நினைவினால் தூண்டப்பட்டவனாய், நாற்புறங்களிலும் இரண்டு மூன்று தரம் திரும்பித் திரும்பிப் பார்த்துவிட்டு, வண்டி செல்லவேண்டிய திக் கில் வெகுதூரம் வரையில் தனது பார்வையைச் செலுத்தி உற்று நோக்கினான் பெட்டி வண்டி எங்கும் காணப்படவில்லை. அவன் உடனே அவ்விடத்தை விட்டுத் தங்கசாலைத் தெருவை நோக்கி விரைவாகச் செல்லலானான். வண்டி தங்கசாலைத் தெரு 2075-ம் நம்பர் வீட்டிற்குப் போவதாகக் கோவிந்தசாமி சொல்லியது அவ னுக்கு நன்றாக நினைவிருந்ததாதலால், தான் விரைவாக அங்கே சென்றால், அவர்களைக் கண்டுபிடித்துவிடலாம் என்ற நினைவு உண் டானதாகையால், முருகேசன் ஓட்டமும் நடையுமாக வேகமாய்ச் சென்று கால்நாழிகை நேரத்தில் தங்கசாலைத் தெருவை யடைந் தான். அந்தத் தெரு தெற்கு வடக்கில், ஒன்றேகால் மைல் நீள மிருக்கிறது. அந்தத் தெருவின் இரண்டு பக்கங்களிலும் மொத் தத்தில் சுமார் 520 வீடுகள் இருக்கின்றன. நமது முருகேசன் சென்ற ரஸ்தா ஷை தங்கசாலைத் தெருவின் நடுமத்தியில் போய்ச் சேர்ந்ததாகையால், அவன் அந்தத் தெருவின் இரண்டு கோடிகளி லும் தனது பார்வையைச் செலுத்தி, எந்த வீட்டிலாவது தங்கள் பெட்டி வண்டி நிறுத்தப்பட்டிருக்கிறதோவென்று நன்றாகக் கவ னித்துப் பார்த்தான். கண்காணும் தூரம் வரையில் அந்தப் பெட்டி வண்டி காணப்படவில்லை. உடனே அவன் அங்கிருந்த வீடுகளின் நம்பர்களை விசாரிக்கத் தொடங்கியதன்றி, 2075-வது நம்பர் வீடு எங்கே இருக்கிறதென்று சிலரிடம் கேட்க, அவர்கள் அந்த வீடு அநேகமாய் வடக்குக் கோடியில்தான் இருக்கவேண்டுமெனக் கூறி னர். ஆகவே, அவன் உடனே அங்கிருந்து புறப்பட்டு அந்தத்

தெருவோடு ஓட வாரம்பித்து, வழி நெடுக்க கவனித்த வண்ண மாய்ச் சென்று அரைநாழிகை சாவகாசத்தில் அந்தத் தெருவின் வடக்கு முடிவை யடைந்து கடைசி வீட்டின் நம்பரென்னவென்று விசாரித்தான். அது இருநூற்றைம்பதுக்குமேல் போகவில்லை. அவன் நிரம்பவும் திகைத்துக் கவலைகொண்டு அங்குள்ள வீடுகளில் காணப்பட்ட சில மனிதரிடம் பேச்சுக் கொடுத்து, 2075-வது நம்பர் வீடு எங்கே இருக்கிறதென்று கேட்க, அவர்களும் குழப்ப மடைந்து, நிச்சயமான தகவல் எதையும் சொல்ல மாட்டாதவர் களாய், "அந்த வீடு அநேகமாய்த் தெற்குக்கோடியில்தான் இருக்க வேண்டும்; இந்தப் பக்கத்தில் இல்லை" என்றனர். அதைக் கேட்ட முருகேசன் ஏமாற்றமும் கலக்கமு மடைந்து அந்தக் கோடியை விட்டு மறுபடியும் திரும்பித் தெருவோடு தெற்கு திக்கில் ஓடிவரத் தொடங்கினான். அவ்வாறு வந்தவன் வழியில் குறுக்கிட்ட மனிதர்க ளிடத்திலெல்லாம், "2075-ம் நம்பர் வீடு எங்கே யிருக்கிறது?" என்ற கேள்வியையே கேட்டு. எவ்வித நிச்சயமான மறுமொழியை யும் பெறாமல், ஒன்றேகால் மயில் தூரமிருந்த அந்த நீண்ட வீதி யின் தெற்குக் கோடிக்குப் போய்ச்சேர ஏறக்குறைய ஒரு நாழிகை சாவகாசம் பிடித்தது. அவ்விடத்தை யடைந்த வண்டிக்காரன் அங் கிருந்த வீடுகளின் நம்பர்களை விசாரித்தான். ஒரு வரிசை முதலாவது நம்பரில் ஆரம்பமாயிற்று; இன்னொரு வரிசை 513-வது நம்பரில் முடிந்தது. 513-வது நம்பருக்கு மேற்பட்ட நம்பரே அந்தத் தெரு வில் இல்லையென்றும், 2075-என்பது 275-ஆக இருக்க வேண்டு மென்றும், அவன் தப்பாகச் சொல்லுகிறானென்றும் ஜனங்கள் கூறி, 275-வது நம்பர் வீட்டில் போய் விசாரிக்கும்படி அவனுக்கு யோசனை சொன்னார்கள். அவன் மிகுந்த கலக்கமும் கலவரமு மடைந்து அந்த இடத்தை விட்டு வெறிகொண்டவன்போலமறுபடி யும் வடக்கு திக்கில் ஓடவாரம்பித்து, "275-வது நம்பர் எங்கே இருக்கிறது" என்ற கேள்வியையே கேட்டுக்கொண்டு போக அந்த இலக்கமுள்ள வீட்டை அவன் கண்டுபிடிப்பதற்கு அவன் இன் னொருமுறை அந்தத் தெருவின் பெரும் பாகத்தையும் கடந்து கிட் டத்தட்ட வடக்கு முனைக்கே போக நேர்ந்தது. அவன் 275-ம் நம்பர் வீட்டை யடைந்து விசாரிக்க, அந்த வீட்டிலிருந்தவர்கள் அது ஓர் அச்சுக்கூடமென்றும், அவ்விடத்திற்குப் புரசைப்பாக் கத்திலிருந்து யாரும் வரவில்லையென்றும் கூறினர். அந்தச்செய்தி, யைக் கேட்ட முருகேசன் விவரிக்க இயலாத கலக்கமும் குழப்ப

மும் ஏமாற்றமும் விசனமு மடைந்து, தான் அதற்குமேல் என்ன, செய்வதென்பதை யறியாதவனாய்த் திகைத்துக் கால் நாழிகை நேரம் வரையில் அப்படியே நின்றுவிட்டான். சிறிது நேரத்தில் அவனுக்கு ஒரு யோசனைத் தோன்றியது. போலீஸ் ஸ்டேஷனண்டை வண்டி தன்னைவிட்டுப் பிரிந்துபோன இடத்திற்குப் போய், அவ்விடத்திலுள்ள வண்டிச் சுவடுகளைப் பின்பற்றித் தொடர்ந்துபோய்ப் பார்க்கலாமென்ற எண்ணம் உண்டானதாகையால், அவன் அவ்விடத்தை விட்டு முன்னிலும் அதிக விசையோடு நடந்து கால் நாழிகை காலத்தில் போலீஸ் ஸ்டேஷனிருந்த இடத்திற்கருகில் போய்ச் சேர்ந்து, கீழே குனிந்து வண்டிச் சுவடுகளை ஆராய்ச்சி செய்ய வாரம்பித்தான். அவ்விடத்தில் தாறுமாறாகவும், குறுக்கு நெடுக்காகவும், ஒன்றன்மேல் ஒன்றாகவும் ஏராளமான வண்டிச்சுவடுகள் பதிந்து கிடந்தனவாதலால், அவைகளிலிருந்து முருகேசன் எவ்வித முடிவிற்கும் வரமாட்டாதவனாய்ச் சிறிது நேரம் தயங்கிக் கலங்கி அவ்விடத்திலேயே நின்றான். கோகிலாம்பாள் ஏதோ அவசர காரியமாய்ப் போகிறாளென்பதை மாத்திரம், அவன் தெரிந்து கொண்டிருந்தானே யன்றி, இன்ன இடத்திற்குப் போகவேண்டுமென்ற கருத்துடன் அவள் புறப்பட்டுவந்தா ளென்பதை அவன் தெரிந்து கொண்டவனன்று. தனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவனான கோவிந்தசாமி எந்த ரஸ்தாவின் வழியாக வண்டியை ஓட்டச் சொன்னானோ, அந்த வழியாகவே முருகேசன் அதை ஒட்டிக் கொண்டு வந்தவனாதலால், அவர்கள் இன்ன வேலைக்காக இன்னாரிடம் போயிருக்கிறார்க ளென்பதை அறிந்துகொள்ளாத நிலைமையிலிருந்தா னாதலால், அவன் அதற்குமேல் அவர்களைத் தேடிப்பிடிப்பது சாத்தியமற்ற காரியமென்றும், தான் வீண்காலதாமதம் செய்வதை விட, உடனே பங்களாவிற்குப் போய், நிகழ்ந்த விஷயத்தை யெல்லாம் பெரிய எஜமானியம்மாளிடம் சொல்வதே சரியான காரியமென்று தீர்மானித்துக் கொண்டவனாய். உடனே அவ்விடத்தை விட்டுப் புரசைப்பாக்கத்தை நோக்கி நிரம்பவும் அவசரமாக நடக்கத்தொடங்கி அரை நாழிகை சாவகாசத்தில் ராஜரத்ன முதலியாரது பங்களாவிற்கு வந்து சேர்ந்தான். அவன் சிறிதும் உழைப்பின்றி எப்போதும் வண்டியிலேயே போய் மெலுக்காக இருந்திருந்து பழகிய பட்டணத்து வண்டிக்காரனாதலால், போலீஸ் ஸ்டேஷனிலிருந்த தங்கசாலைத் தெருவிற்கு ஓடி, ஒன்றேகால் மயில் நீளமுள்ள அந்தத் தெருவின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு

கோடிக்கு இரண்டு மூன்று தரம் ஓடி யலைந்து மறுப்படி போலீஸ் ஸ்டேஷனை யடைந்து அங்கிருந்து புரசைப்பாக்கம் பங்களாவிற்கு வந்ததனால் அவன் முற்றிலும் தளர்ந்து சோர்ந்து தவிக்கலானான். அவனது உடம்பு வியர்த்து வெலவெலத்துப் போயிற்று. கால்கள் தள்ளாடி அங்குமிங்கும் சென்றன. மேல்மூச்சும் இறைப்பும் தோன்றுகின்றன. நாவறண்டு போய்விட்டது. வரட்சியும் தாகமும் அதிகரித்து அவனை வதைக்க வாரம்பித்தன. அத்தகைய பரிதாபகரமான நிலைமையில், முருகேசன் பங்களாவிற்குள் நுழைந்து, தான் வந்திருப்பதாகப் பூஞ்சோலை யம்மாளுக்குச் செய்தி சொல்லி யனுப்பினான்.

அப்போது பூஞ்சோலையம்மாள் என்ன நிலைமையி லிருந்தாளென்பதை நாம் கூறுமுன் இன்னொரு முக்கியமான விஷயத்தைத் தெரிவிப்பது அவசியமாக விருக்கின்றது. அதற்கு முந்திய நா ளிரவில் புஷ்பாவதி யம்மாள் அந்த பங்களாவிலேயே இருந்தாளென்பது முன்னரே சொல்லப்பட்ட விஷயம். ஆனால், கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தாரான சுந்தரமூர்த்தி முதலியார் மாத்திரம், தாம் மறுநாட் காலையில் அங்கு வருவதாகக் கூறிவிட்டுத் தமது சொந்த ஜாகைக்குப் போய்விட்டார். அதன் பின்னர் சௌந்தரவல்லி யம்மாளுக்கும் கற்பகவல்லி யம்மாளுக்கும் நேர்ந்த சந்திப்பின் விவரமும், கற்பகவல்லி யம்மாள் பூஞ்சோலை யம்மாளுக்குக் கடிதம்எழுதி வைத்துவிட்டு, பங்களாவை விட்டுப் புறப்பட்டுப்போன செய்தியும் முன்னரே கூறப்பட்டுள. அந்த இரவு கழிய, பொழுதுவிடிந்த பின்னர், பூஞ்சோலை யம்மாளும் கோகிலாம்பாளும் கற்பகவல்லி யம்மாளது சயன அறைக்குச் சென்று அந்த அம்மாளால் எழுதி வைக்கப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த காலத்திலும், அதன் பிறகு கோவிந்தசாமி கொணர்ந்து கொடுத்த கண்ணபிரானது கடிதத்தைப் படித்த காலத்திலும், புஷ்பாவதி அவர்களோடுகூட இருக்கவில்லை யென்பது தெரிந்த விஷயம். புஷ்பாவதி எப்போதும் காலை வேளையில் சிறிது தாமதமாகவே படுக்கையை விட்டெழுந்துவரும் சுபாவமுடையவள். அதுவுமன்றி, முதல் நாள் முழுதும் ஒன்றன் பின்னொன்றாக நேர்ந்த பலவகைப்பட்ட சம்பவங்களால் ஏற்பட்ட மனவெழுச்சியினாலும் தேக அலட்டலினாலும் மற்ற நாட்களைவிட அதிகமாய் அலுத்துப் போயிருந்தமையால், புஷ்பாவதி எழுந்து தேகசுத்தி செய்துகொண்டு பூஞ்சோலை யம்மாள் இருந்த இடத்

திற்கு வந்த காலத்தில், அவர்கள் கண்ணபிரானது கடிதத்தைப் படித்து, கோகிலாம்பாள் புறப்பட்டுப் போய் அவனைப் பார்ப்ப தென்ற முடிவிற்கு வந்திருந்தனர். ஆனாலும், தாயும் மகளும் ஆழ்ந்து யோசனைசெய்து, கற்பகவல்லியம்மாளது கடிதத்தை மாத் திரம் புஷ்பாவதிக்குக் காட்டுவதென்றும், கண்ணபிரானது கடி தத்தை அவளுக்குக் காட்டுவதால் தங்களுக்கு இழுக்கு நேருமாத லால், அதைக் காட்டாமல் மறைத்து விடுவதென்றும், கோகிலாம் பாள் தங்களுடைய பந்துவான ஒருவரது வீட்டிற்கு ஓர் அவசர காரியத்தின் நிமித்தம் போய்வரப் போகிறாளென்று சொல்வதென் றும் தீர்மானித்துக்கொண் டிருந்தனராதலால், புஷ்பாவதி யம்மாள் வந்ததைக் கண்டவுடனே அன்பும் மரியாதையும் நிறைந்த குரலில் அவளை அழைத்து உட்காரச் செய்து, கற்பகவல்லி யம்மாளது கடி தத்தை எடுத்து அவளிடம் கொடுத்தனர். அந்தக் கடிதத்தை வாங்கி ஆவலோடு படித்த புஷ்பாவதி யம்மாளது மனம் கட்டிலடங் காத பெருங் களிப்பும் இன்பமும் அடைந்ததானாலும், அவளது முகம் வாட்டமடைந்து அளவற்ற துயரத்தைத் தோற்றுவித்தது. அந்தச் செய்தியை அவள் எதிர் பார்க்காதவள்போலவும் அதை ஒரு பெருத்த இடிபோலக் கருதுகிறவள்போலவும் தோன்றி, "ஆகா என்ன காலவித்தியாசம் இது! இந்த அம்மாள் ஏன் இப்படிப் புறப்பட்டுப் போகவேண்டும்! நாம் யாராவது இவர்களை தூஷித் தோமா! இவ்விடத்தில் இருக்கவேண்டாமென்று சொன்னோமா! ஏன் இப்படித் திடீரென்று புறப்பட்டு, யாரிடமும் சொல்லிக்கொள் ளாமல் போகவேண்டும்! இவர்களுடைய குமாரர் சிறைச்சாலையில் இருக்கிறார். அவரைத் தப்பவைத்து வீட்டிற்கு அழைத்து வருவ தல்லவா அத்யாவசியமான முதல் காரியம். அதை விட்டு இந்த அம்மாள் தற்கொலை செய்துகொள்வதற்கு இப்போதுதான் சமயம் பார்த்தார்களா! சகலமான விஷயங்களையும் நன்றாகத் தெரிந்து கொண்டிருப்பவர்களாகக் காணப்பட்ட இந்த அம்மாள் இவ்வித மான முடிவுக்கு வந்தது மகா ஆச்சரியகரமாக இருக்கிறது. நம்மு டைய கோகிலாம்பாளின் விஷயத்தில் இவர்கள் எங்களுக்குப் போட்டியாக வந்தார்களே என்ற பொறாமை கொஞ்சம் எங்களு டைய மனசில் இருந்ததானாலும், இந்த அம்மாளோடு பழகி இவர் களுடைய நற்குணத்தையும் நன்னடத்தையையும் பார்த்த பிறகு, ஒருவிதமான கவர்ச்சியும், காந்த சக்தியும் என்னை இவர்களிடம் இழுத்துக்கொண்டே இருந்தன. எது எப்படி இருந்தாலும், இந்த

அம்மாள் தற்கொலை செய்துகொள்வதாக எழுதியிருப்பதைக் கேட்பது பரமசங்கடமாக இருக்கிறது. இந்த மகா கஷ்டமான சங்கதியைக் கேட்கவா, நான் இன்று எழுந்தவுடன் நேராக இங்கே வந்தேன். ஐயோ! இந்த சமயம் என் மனம் துடிக்கிற துடிப்பை அந்தக் கடவுள்தான் அறியவேண்டும். அதிருக்கட்டும். நீங்கள் இந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன் என்ன செய்தீர்கள். இந்த அம்மாளைத்தேடி அழைத்துவர, ஆள்களை அனுப்பினீர்களா?" என்று மனநைந்து நிரம்பவும் உருக்கமாகக் கூறினாள். அவளது சொற்களைக் கேட்ட கோகிலாம்பாள், பூஞ்சோலையம்மாள் ஆகிய இருவரது கண்களிலிருந்தும் கண்ணீர் மளமள வென்று பெருகி வழிந்தது. அபாரமாகப் பொங்கியெழுந்த துயரப் பெருக்கினால், அவர்கள் நிலைகலங்கிப் போயினர். பூஞ்சோலையம்மாள், "அம்மா! இந்தக் கடிதத்தைப் படித்த உடனே சுமார் 25-ஆள்களைப் பிடித்து நாலா பங்கங்களிலும் போய்த்தேடி, இந்த அம்மாள் எங்கே இருந்தாலும் அழைத்து வரும்படி அனுப்பி இருக்கிறோம். ஆனாலும், இந்த அம்மாள் நேற்று இரவிலேயே புறப்பட்டுப் போய்விட்டார்களாகையால், இந்நேரம் வரையில் அவர்கள் உயிரோடிருக்க வேண்டுமே என்ற கவலைதான் பெரிதாக எழுந்து வதைக்கிறது. ஈசன் செயல் எப்படி இருக்கிறதோ பார்க்கலாம்" என்றாள்.

புஷ்பாவதி, "திடீரென்று நேர்ந்த அவமானத்தைத் தாங்கமாட்டாமல், அந்த ஆத்திரத்தில் தற்கொலை செய்துகொள்ள வேண்டுமென்ற ஒரு துடிப்பு ஏற்பட்டிருந்தாலும், கொஞ்ச நேரத்திற்குப் பிறகாவது, தங்களுடைய பிள்ளையாண்டானுடைய நினைவு வாராதா? அதனால் அந்தத் தீர்மானம் கொஞ்சம் தளர்வடையாதா? அநேகமாய் அந்த அம்மாள் உயிரோடுதான் இருப்பார்களென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நீங்கள் சொல்வதுபோல, கடவுள் செயல் எப்படி இருக்கிறதோ. நீங்கள் ஏராளமான ஆள்களை அனுப்பி இருக்கிறீர்கள். என் தமையனார் இன்று காலையில் வந்து என்னை அழைத்துக்கொண்டு போவதாகச் சொல்லிவிட்டுப் போனவர் அநேகமாய் இந்நேரம் வாசலில் வந்திருக்கலாம். அவரிடம் நான் இந்தச் செய்தியைச் சொல்லி, அவரும் பல இடங்களில் போய்த் தேடிப் பார்க்கச் சொல்லுகிறேன். முக்கியமாக அவர் இப்போது முதல் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விசாரிக்கும்படி செய்ய வேண்டும். ஏனென்றால், அந்த அம்மாளுடைய உயிருக்கு ஏதா

வது கெடுதல் நேரிட்டிருந்தால், அந்தச் செய்தி எப்படியும் இந்நேரம் போலீஸ் ஸ்டேஷனிற்கு எட்டி இருக்கும். போலீசாருக்கு எவ்வித தகவலும் தெரியாமலிருந்தால் அநேகமாய் அந்த அம்மாள் உயிரோடிருப்பதாகவே நாம் எண்ணிக் கொள்ளலாம்" என்றாள்.

அவள் அவ்வாறு பேசி வாய் மூடுவதற்குள் ஒரு வேலைக்காரன் வாசற்படியண்டை வந்து நின்று பூஞ்சோலையம்மாளைப் பார்த்தபடி "அம்மா! மயிலாப்பூரிலிருந்து சின்ன ஜெமீந்தார் ஐயா வந்திருக்கிறார்கள். அவர்களுடைய தங்கைச்சியம்மாளை அழைத்துக்கொண்டு போகவேண்டுமாம்" என்று கூறினான். அதைக் கேட்ட புஷ்பாவதி யம்மாள் துள்ளியெழுந்து, "ஆ! வந்துவிட்டாரா! சரி; அவர் என்னை அழைத்துக் கொண்டுபோய் மயிலாப்பூரில் விட்டுவிட்டு வேறே முக்கிய ஜோலியாக ஓரிடத்திற்குப் போகவேண்டு மென்று நேற்றைக்கே சொல்லியிருந்தார். ஆகையால், நான் அவரை அதிக நேரம் காக்கவைப்பது சரியல்ல. நான் உங்களெல்லோரையும் விட்டுப் பிரிந்து போகவேண்டியவளாக இருக்கிறேன். ஆனாலும் இங்கே இருக்கும் நிலைமையைக் கவனித்தால், நான் போய்விட்டு வருகிறேனென்ற சொல்லை என் வாயில் வைத்து எப்படிச் சொல்லுகிறதென்பது தெரியவில்லை" என்று கூறிய பின், வேலைக்காரனை நோக்கி, "அப்பா! நீ போய் ஐயாவை முன் ஹாலில் உட்காரச் சொல்" என்றாள். அதைக் கேட்டுக்கொண்ட வேலைக்காரன் உடனே அவ்விடத்தை விட்டுப் போய்விட்டான். அப்போது பூஞ்சோலையம்மாளை நோக்கி, அம்மா! பட்டணத்திலுள்ள என்னுடைய சொந்தக்காரர் ஒருவர் வீட்டிலிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. ஒரு முக்கியமான காரியத்தை உத்தேசித்து நாங்கள் யாராவது உடனே அங்கே போய்விட்டு வரவேண்டும். இந்தக் கற்பகவல்லி யம்மாள் நிரம்பவும் பரிதாபகரமாகவும் இளக்கமாகவும் புஷ்பாவதி யம்மாளைப்பற்றி எந்த நிமிஷத்தில் என்ன செய்தி வருமோ என்பது தெரியவில்லை. ஆகையால், நான் வீட்டைவிட்டு அசையக்கூடாது. நம்முடைய கோகிலாம்பாளைத்தான் ஒரு பெட்டி வண்டியில் வைத்து அனுப்பப்போகிறேன். இன்னம் ஐந்து நிமிஷத்தில் வண்டி தயாராகிவிடும். அவளும் புறப்பட்டுப் போய்விடுவாள். நான் மாத்திரம் தனியாக இருப்பது மனசுக்கு நிரம்பவும் கஷ்டமாயிருக்கும். உங்கள் ஜாகையில் நீங்கள் அவசரமாய்க் கவனிக்கவேண்டிய அலுவல் எதுவு மில்லாவிட்டால் இன்னம் இரண்டொருதினம்

ளிங்களோ டிருந்துவிட்டுப் போனால், எங்களுக்கெல்லாம் அது ஒரு பெருத்த ஆறுதலாகவும், நன்மையாகவும் இருக்கும்'' என்றாள்.

அதைக் கேட்ட புஷ்பாவதி யம்மாள், "இந்த மகா கஷ்டமான சந்தர்ப்பத்தில் உங்களெல்லோரையும் விட்டுப்போவது என் மன சுக்கே கொஞ்சமும் சம்மதமில்லாததாகத்தான் இருக்கிறது. இருக் கட்டும். நான் என் தமையனாரிடம் போய், விஷயத்தைச் சொல்லி, என்னை இந்த ஒரு பொழுதாவது இங்கேவிட்டு வைக்கும்படிசொல் லிப் பார்க்கிறேன். எனக்கு அங்கே அவசரமான ஜோலி எதுவு மில்லை. ஆனாலும், நான் இப்பேர்ப்பட்ட புதிய இடங்களில் இருப் பது அவருடைய மனசுக்குப் பிடிக்கிறதில்லை. அதைப்பற்றித் தான் யோசிக்கிறேன். இருக்கட்டும்; நான் போய் இதோ ஐந்து நிமிஷத் தில் திரும்பி வருகிறேன்'' என்று கூறிவிட்டு, எழுந்து வெளியில் போய்க் கால்நாழிகை நேரம் கழித்து, சந்தோஷத்தைக் காண்பித்த முகத்தோற்றத்தோடு திரும்பி வந்து சேர்ந்து, "அம்மா! இந்தக் கற்பகவல்லி யம்மாளுடைய கடித விஷயத்தை என் தமையனார் கேட்டவுடன் நிரம்பவும் துடிதுடித்துப் போனதன்றி தாம் உடனே போலீஸ் ஸ்டேஷன் முதலிய இடங்களுக்கெல்லாம் போய் இந்த அம்மாளைத் தேடி அழைத்துக் கொண்டு வருவதாகச்சொல்லி விட்டுப் போய்விட்டார். இந்த நிலைமையில் நான் இங்கேஇருப்பது உங்களுக்கு ஓர் ஆறுதலாக இருக்குமென்றும், அதைப்பற்றி நீங் கள் எங்களை அவமதிப்பாக நினைத்துக்கொள்ள மாட்டீர்களென் றும் அவரே சொல்லிவிட்டுப் போய்விட்டார். உங்களுடைய பிரி யம் போலவே நான் இன்று முழுதும் இங்கேயே இருந்து, நாளைய தினம் காலையில் எங்களுடைய ஜாகைக்குப் போகிறேன்'' என்றாள்.

அதைக் கேட்ட பூஞ்சோலை யம்மாள் மிகுந்த களிப்படைந்த வளாய், "அம்மா! உண்மையான பிரியம் உடையவர்கள் ஆபத்து வேளையில் கைவிடமாட்டார்களென்று ஜனங்கள் சொல்லுவார்கள். நீங்கள் நேற்றுமுதல் எங்களோடிருப்பது எங்கள் மனசுக்கு ஆயி ரம் யானையின் பலத்தை உண்டாக்குகிறது. நீங்கள் எவ்வளவோ மேலான நிலைமையி லிருப்பவர்கள்; பிரியத்திற்குக் கட்டுப்பட்டிருந் தாலன்றி வேறு எதைக் கருதியும் நீங்கள் எப்படிப்பட்ட இடத்தி லும் போயிருக்கக் கூடியவர்களல்ல ரென்பது எங்களுக்குத் தெரி யாதா? எப்பேர்ப்பட்டவர்கள் வருந்தி யழைத்தாலும், நீங்கள் அநா

வசியமாக ஓரிடத்திற்குப் போகிறவர்களா. எங்களிடம் வைத்திருக்கும் அபாரமான பிரியத்தினாலும், மதிப்பினாலும், எங்கள் துன்பத்தை உங்களுடையதாக எண்ணி, நீங்கள் இங்கே இருக்க இணங்குகிறீர்கள். இதை நாங்கள் பெருத்த பாக்கியமாக மதிக்க வேண்டும்; அப்படியே மதிக்கிறோம். இதனால் நாங்கள் உங்களிடம் வைத்துள்ள பிரியமும் மதிப்பும் முன்னிலும் பன் மடங்கு அதிகரிக்குமே யன்றி, உங்களைப் பற்றி நாங்கள் வித்தியாசமாக ஏன் நினைக்கிறோம்? அப்படி நினைக்கவே மாட்டோம்" என்றாள்.

அப்போது வேலைக்காரன் தோன்றி பெட்டி வண்டி ஆயத்தமாயிருப்பதாகக் கூற, முன்னர் விவரிக்கப்பட்டபடி கோகிலாம்பாள் புறப்பட்டுப்போய் வண்டியிலேறிக் கொள்ள, கோவிந்தசாமியும், வணடிக்கார முருகேசனும் வண்டியை ஓட்டிக்கொண்டு போய் விட்டார்கள். அதன்பிறகு பூஞ்சோலை யம்மாளும் புஷ்பாவதியும் சௌந்தரவல்லி யம்மாள் இருந்த இடத்திற்குப் போய், அவளுடன் சிறிதுநேரம் சம்பாஷித்திருந்தனர். முதல் நாளிரவிலேயே கற்பகவல்லி யம்மாள் புறப்பட்டு எங்கேயோபோய்விட்டாளென்ற செய்தியைக் கேட்ட சௌந்தரவல்லி யம்மாள் அதைப்பற்றி நிரம்பவும் ஆநந்த மடைந்தாளானாலும் அது விஷயத்தில் எவ்வித சம்பந்தமும் அற்றவள்போல நடந்து சந்தோஷத்தையாவது விசனத்தையாவது தோற்றுவியாமல் அசட்டையாக இருந்தாள். பூஞ்சோலை யம்மாளோ கவலைகொண்டு, விசனக் கடலில் ஆழ்ந்தவளாய், வாய் ஓயாமல் கற்பகவல்லி யம்மாளது குணாதிசயங்களைப்பற்றிப் புகழ்வதும், அவள் உயிருடனிருக்கிறாளோ உயிர் துறந்து விட்டாளோ வென்று பலவித யூகங்கள் செய்வதும், அந்த அம்மாளைத் தேடிப் பிடிப்பதற்கான வழிகளைப்பற்றிப் பேசுவதுமாய் இருக்க, புஷ்பாவதி யம்மாள் அவளது, நோக்கத்தின்படி மறுமொழி கொடுத்து வஞ்சக நடனம் புரிந்து கொண்டே இருந்தாள். தனது தாய் ஓயாமல், கற்பகவல்லி யம்மாளைப் பற்றியே பன்னிப் பன்னிப் பேசிக் கொண்டிருந்தது சௌந்தரவல்லி யம்மாளுக்கு முற்றிலும் அருவருப்பாகவும் துன்பகரமாகவும் இருந்தமையால், அவள் ஏதோ ஒருபொய் முகாந்திரத்தைக் கூறி அவ்விடத்தை விட்டு வேறிடத்திற்குப் போய்விட்டாள். அவளது மனநிலைமை இன்னபடி இருந்ததென்பதைப் புஷ்பாவதி யம்மாள் மாத்திரம் எளிதில் யூகித்து அறிந்துகொண்டாளேயன்றி, பூஞ்சோலையம்மாள் அதைப்

பற்றி எவ்வித சம்சயமும் கொள்ளாமல் தனது இதர விஷயங்களி லேயே தன் முழு மனத்தையும் கவனத்தையும் செலுத்தி மிகுந்த விசனமும் கவலையும் கொண்டு தவித்திருந்தாள். பொழுது போய்க் கொண்டே இருந்தது. கோகிலாம்பாள் அந்நேரம் போலீஸ் ஸ்டே ஷனுக்குப் போயிருக்கலாமென்றும், கண்ணபிரானோடு பேசி அவ னுக்கு ஆறுதல் கூறி அவனைத் தேற்றிக்கொண் டிருக்கலாமென்றும் பலவாறு அந்த அம்மாள் எண்ணமிட்டுக் கொண்டிருந்த சமயத் தில் ஒரு வேலைக்காரன் உள்ளே வந்து, "எஜமானே! வண்டிக்கார முருகேசன் வந்திருக்கிறான்" என்றான். அதைக் கேட்ட பூஞ் சோலை யம்மாள் திடுக்கிட்டு வியப்படைந்து, "அவன் மாத்திரமா வந்திருக்கிறான்? வண்டி வரவில்லையா என்றாள்.

வேலைக்காரன், "ஆம் எஜமானே! அவன் மாத்திரம் தான் வந் திருக்கிறான். வண்டியைக் காணோம்" என்றான்.

பூஞ்சோலை யம்மாள் சகிக்க இயலாத ஆவல்கொண்டு, "நம் முடைய குழந்தை ஏன் வரவில்லை யென்பதைப்பற்றி அவன் ஏதா வது தகவல் தெரிவித்தானா?" என்றாள்.

வேலைக்காரன், "இல்லை; எஜமானே! அவன் தங்களோடு தனி மையில் ஏதோ சங்கதி சொல்லவேண்டு மென்று சொன்னான். அவன் இதோ தோட்டத்து வாசலண்டை வந்து நிற்கிறான்" என் றான்.

அதைக் கேட்ட பூஞ்சோலை யம்மாளது மனதில் இன்ன தென்று விவரிக்க இயலாத ஒருவித சஞ்சலமும், கவலையும், ஆவ லும், கலக்கமும் தோன்றி வதைக்க வாரம்பித்தன. அந்த அம் மாள் அந்த வேலைக்காரனை உடனே வெளியில் அனுப்பிவிட்டு புஷ்பா வதியை நோக்கி, "அம்மா! ஐந்து நிமிஷநேரம் நீங்கள் இவ்விடத்தி லேயே இருங்கள். நான் போய் இதோ வந்துவிடுகிறேன்" என்று நயமாகக் கூறிய வண்ணம் சரேலென்று எழுந்து, அவ்விடத்தை விட்டு வெளியில் சென்று, பல தாழ்வாரங்களையும் கூடங்களையும் கடந்து தோட்டத்திற்குச் செல்லும் வாசலை யடைந்து, அவ்விடத் தில் நின்றுகொண்டிருந்த முருகேசனைப் பார்த்து, "ஏனடா முரு கேசா நீ மாத்திரம் வந்தாய்? குழந்தை எங்கே? வண்டி எங்கே? நீ மாத்திரம் வந்த காரணமென்ன?" என்று ஆவலோடு வினவினாள்.

உடனே முருகேசன் தனது வறலாற்றைச் சுருக்கமாக எடுத்துக் கூறினன். பெட்டி வண்டி ஆனைகவுனியண்டை சென்ற காலத்தில், ரஸ்தாவின் நடுவில் நின்ற போலீஸ் ஜெவான், வண்டி தப்பான பக்கத்தில் போனதென்று பிடித்துக்கொண்டது, பிறகு தன்னுேடிருந்த மனிதன் அவனைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டு அந்த ஜெவான் வண்டியைப் போகவிட்டுத் தன்னை மாத்திரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப்போனது, அவ்விடத்தில் தனக்கும் சப் இன்ஸ்பெக்டருக்கும் நேர்ந்த சம்பாஷணை, முடிவில் தான் அங்கிருந்து விடப்பட்டு வெளியில் வந்தது, வந்தவுடன் பெட்டி வண்டியைத் தேடிக்கொண்டே போய், தனக்குச் சொல்லப்பட்ட கதவிலக்கமுள்ள வீடு எங்கே இருக்கிறதென்று தான் தங்கசாலைத் தெருவில் அலைந்தது, எங்கும் வண்டி காணப்படாமையால் முடிவில் தான் என்ன செய்வதென்பதை யறியாது திரும்பி வந்தது ஆகிய வரலாறு முழுதையும் அவன் விரிவாகக் கூறினன்.

அந்த விருத்தாந்தத்தைக் கேட்ட பூஞ்சோலையம்மாள் மனக்குழப்பமும் முகவாட்டமு மடைந்து சிறிது நேரம் பேசாமல் நின்றபின், "எனடா? உன்னுேடு வண்டியில் இருந்த மனிதன் தங்கசாலைத் தெரு 2075–வது இலக்கமுள்ள இடத்திற்கு உன்னை வரச்சொன்னதாகச் சொல்லுகிருயே அந்த வீடுதான் உனக்கு அகப்படவில்லையே அந்தத் தெருவில் போலீஸ் ஸ்டேஷன் எங்கே இருக்கிறதென்று வது விசாரித்துக்கொண்டு நீ அங்கே போயிருக்கக்கூடாதா? அவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குத்தானே போனுர்கள்?" என்றுள்.

முருகேசன், "சாமீ! நானு வண்டியிலே குந்திக்கினு இருந்தது மாத்திரந்தானுங்க; ஓட்டினதெல்லாம் அவுருங்க வண்டி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவுதுன்னு அவுங்க யாரும் எங்கிட்டச் சொல்லவே இல்லீங்க; ஊட்டு நம்பரெத்தான் அந்த ஐயா சொன்னுரு; அதுவுமில்லாமே, தங்கசாலெத் தெருவுலே போலீஸ் ஸ்டேஷன் எங்கனே இருக்குதுங்க? அந்தத் தெருவிலே ஸ்டேஷனே இல்லீங்களே. நீங்க யாரே ஒணு னுலும் கேட்டுப்பாருங்க எசமானே!" என்றுன்.

அதைக் கேட்டவுடன் பூஞ்சோலையம்மாள், "தங்கசாலைத் தெருவில் போலீஸ் ஸ்டேஷனே இல்லையா? நிச்சயந்தானு அது?" என்று அழுத்தமாக வினவ, முருகேசன், "இல்லீங்க சாமீ! அது

எனக்கு நிச்சயமாய்த் தெரியும் எசமான். அதைப்பத்தி சந்தேகமே இல்லெ'' என்று உறுதியாகக் கூறினான்.

பூஞ்சோலையம்மாள், "சரி; இருக்கட்டும், ஒருவேளை அதற்குப் பக்கத்தில் எங்கேயாவது ஸ்டேஷன் இருக்கலாம். அவர்கள் அங்கே போய்விட்டு, இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவார்கள். நீ உன்னுடைய லாயத்துக்குப் போ. ஏதாவது காரியமிருந்தால், நான் மறுபடி உனக்குச் சொல்லியனுப்புகிறேன்" என்று கூறி முருகேசனை அனுப்பிய பின் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுத் திரும்பி உட்புறம் செல்லலானாள். அப்போது அந்த அம்மாளினது மனதில் பலவகைப்பட்ட எண்ணங்களும் உணர்ச்சிகளும் தோன்ற வாரம்பித்தன. கோகிலாம்பாள் முக்கியமான ஒரு காரியத்தினிமித்தம் சென்ற தருணத்தில் நடு வழியில் போலீசாரால் ஏற்பட்ட இடையூறு அபசகுணம் போலத் தோன்றி, அந்த அம்மாளது மனத்தில் உறுத்தியதானாலும், போலீசார் வண்டியை இழுத்துக்கொண்டு போகாமலும், கோகிலாம்பாளை கிலேசத்திற்கு உள்படுத்தாமலும் விட்டு வண்டிக்காரனை மாத்திரம் அழைத்துப் போனது பெருத்த நன்மையென அவள் மதித்து அதைப் பற்றி நிரம்பவும் மகிழ்ச்சியடைந்தாள். ஆயினும், அதுகாறும் அன்னிய மனிதரோடு பேசியும், தனிமையில் இருந்தும் அறியாதவளான கோகிலாம்பாள் அதற்கு முன் பழகாத புது மனிதனை ஒருவனுடன் தனிமையில் விடப்பட்டிருந்ததைக் குறித்து மிகுந்த கவலையும், கலக்கமும், கிலேசமும் அடைந்தாள். ஆயினும், கோகிலாம்பாள் ஒழுங்கான முறையில் நடக்கும் சுபாவம் வாய்ந்திருந்ததோடு, வியவகார ஞானம், புத்திசாலித்தனம், திறமை முதலிய குணங்களும் உடையவளாயிருந்தமையால், அவள் தான் கருதிச் சென்ற காரியத்தை முடித்துக்கொண்டு எவ்வித இடருமின்றி வெகு சீக்கிரத்தில் திரும்பி வீட்டுக்கு வந்து சேர்ந்துவிடுவாளென்ற உறுதியான நம்பிக்கை அந்த அம்மாளின் மனத்தில் வேரூன்றியிருந்தது. ஆகவே, தான் தன் மனத்தை யடைக்கிக்கொண்டு சிறிது நேரம் பொறுத்திருந்தால், கோகிலாம்பாள் நல்ல செய்தியோடு திரும்பி வந்துவிடுவாள் என்ற தீர்மானத்தோடு அந்த அம்மாள் புஷ்பாவதி இருந்த இடத்தை நோக்கி நடந்தாள். அவ்வாறு நடக்கையில் அந்த அம்மாளினது மனத்தில் இன்னொரு முக்கியமான சந்தேகம் எழுந்தெழுந்து வருத்தத் தொடங்கியது. கோகிலாம்பா

ளைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்ற அந்த மனிதன் போலீஸ் ஸ்டேஷன் இன்ன இடத்திலிருக்கிறதென்றும், அங்கே வரவேண்டு மென்றும் முருகேசனிடம் சொல்லிவிட்டுப் போக வேண்டியது ஒழுங்காக இருக்க, அதை விட்டு தங்கசாலைத்தெரு 2075-ம் இலக்க முள்ள வீட்டிற்கு வரும்படி பொய்யான தகவலை ஏன் கொடுக்க வேண்டுமென்ற கேள்வி அடிக்கடி அந்த அம்மாளினது மனத்தில் தோன்ற வாரம்பித்தது. தான் கோகிலாம்பாளை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போன விஷயத்தை முருகேசன் முதலிய எவரும் தெரிந்து கொள்ளக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையினுல், அவன் அவ்வாறு பொய்யான தகவலைச் சொல்லியிருப்பானே என்ற சந்தேக முதித்ததானாலும், போலீஸ் ஜெவானுல் இடையூறு நேர்ந்திராவிடில் முருகேசன் வண்டியிலேயே போலீஸ் ஸ்டேஷன் வரையிலும் சென்று வெளியில் காத்திருக்கையில், அது போலீஸ் ஸ்டேஷனென்பதை அவன் எப்படியும் தெரிந்துகொண்டிருப்பானுதலால், அந்தத் தகவல் முருகேசனுக்குத் தெரியக் கூடாது என்ற கருத்தோடு, அந்த மனிதன் அதை மறைத்துப் பொய்யான இடத்தைக் காட்டியிருப்பானென்று நினைப்பதும் தகுதியற்றதாகத் தோன்றியது. முருகேசன் தாங்கள் சென்ற போலீஸ் ஸ்டேஷனுக்கு வருவது யுக்தமல்லவென்ற எண்ணம் அந்த மனிதனுக்கு இருந்திருக்குமாயின், “நீ இந்த ஜெவானோடு போய் சப் இன்ஸ்பெக்டரிடம் உன் பெயரைப் பதிவு செய்துவிட்டு, பங்களாவுக்குத் திரும்பிப் போய்விடு. நீ எங்களைத் தேடிக்கொண்டு வர வேண்டாம்” என்று சொல்வதே ஒழுங்கான நடவடிக்கை. தாங்கள் இன்ன இடத்திற்குப் போகிறோமென்பது ஆனைகவுனி போலீஸ் ஜெவானுக்குத் தெரியக் கூடாதென்று அந்த மனிதன் ஒருவேளை பொய்யான தகவல் கொடுத்திருப்பானோ வென்று சந்தேகிக்கவும் இடமில்லாதிருந்தது. ஏனெனில், அந்த ஜெவானுக்குத் தெரியாமல், அந்த மனிதன் முருகேசனைத் தனிமையில் சிறிதுதூரம் அப்பால் அழைத்துப்போய் உண்மையான தகவலை அவனிடம் கூறியிருக்கலாமல்லவா. ஆகவே, அந்த மனிதன் என்ன எண்ணத்தினுல் அவ்வாறு பொய்யான தகவலைச் சொல்லியிருப்பானென்பதைப் பற்றி பூஞ்சோலையம்மாள் பலவாறு சந்தேக முற்ருளானுலும், மற்றபடி கோகிலாம்பாளுக்கு அதனுல் பெருத்த பொல்லாங்கு எதுவும் நேருமென்று அந்த அம்மாள் சிறிதும் எதிர் பார்க்கவே இல்லையாதலால், அந்த மடந்தை இரண்டொரு நாழிகை காலத்தில் எப்படியும்

திரும்பி வந்து சேருவா ளென்ற முடிவான எண்ணத்தோடு புஷ்பா வதியிருந்த இடத்தை யடைந்தாள்.

அந்த அம்மாளினது முகம் அப்போதும் ஒருவிதமான குழப் பத்தையும் கவலையையும் காட்டியதை நிரம்பவும் சூட்சுமத்தில் யூகித் தறிந்துகொண்ட புஷ்பாவதியம்மாள், "ஏனம்மா உங்கள் முகம் ஒரு மாதிரியாக இருக்கிறது? ஏதாவது விசேஷம் உண்டா?" என்றாள்.

பூஞ்சோலை யம்மாள், "வேறொன்றுமில்லை நாம் வீட்டிலிருந் தாலும் வெளியில் போனாலும். நாம் குற்றம் செய்தாலும் செய்யா விட்டாலும், போலீசார் நம்மை மறக்காமல் நமக்கு விசேஷமான மரியாதை காட்டி வருகிறார்கள். அன்றையதினம் நிச்சயதார்த்த காலத்தில் அவர்கள் நமக்கு உண்டாக்கிக் கொடுத்த பெருத்த பெரு மையோடு அவர்கள் நம்மை விட்டு விடுவார்களென்று நான் நினைத் தேன். இப்போது நம்முடைய கோகிலாம்பாள் பெட்டிவண்டியில் உட்கார்ந்து போனபொழுது ஆனைகவுனியண்டைபோலீஸ்ஜெவான் ஒருத்தன் வண்டியை மடக்கி அது தப்பான வழியில் வந்ததென்று சொல்லி வண்டியை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோக எத் தனித்தானாம். இவர்கள் அவசரமாய்ப் போகவேண்டு மென்று சொன்னதன்மேல் போலீசார் வண்டியோடு கோகிலாம்பாளை அனுப்பிவிட்டு, வண்டிக்காரனை ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போய் அவ்விடத்தில் அவனிடம் ஜாமீன் வாங்கிக்கொண்டு விட்டார் களாம். அவன் வந்து அந்த சங்கதியைத்தான் சொன்னான்" என்று நிரம்பவும் துன்பகரமான குரலில் கூறினாள்.

உடனே புஷ்பாவதி. "நிரம்ப நன்றாயிருக்கிறது சங்கதி. எல் லாம் வேடிக்கையாப்பிசகு. நாம் யாரையும் நோவதற்கில்லை. வண்டிக் காரன் இங்கே வந்து விட்டானே. கோகிலாம்பாளுடன் யார் போனது ?" என்றாள்.

"பூஞ்சோலை யம்மாள் வண்டிக்காரனோடு இன்னொர் ஆளும் இருந்தான். அவன் வண்டியை ஓட்டிக்கொண்டு போனானாம்" என்றாள்.

புஷ்பாவதி, "கோகிலாமபாள் இன்று சாயங்காலத்திற்குள் திரும்பி வந்துவிடுமா ?" என்றாள்.

பூஞ்சோலை யம்மாள், "இல்லை இல்லை. இன்னம் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வந்து விடுவாள்" என்றாள்.

அவ்வாறு அவர்களிருவரும் சம்பாஷித்தபடியே இரண்டு மூன்று நாழிகை காலம் இருக்க, வேலைக்காரி யொருத்தி தோன்றி போஜனம் தயாராகிவிட்ட தென்றும், அவர்கள் ஸ்நானத்திற்கு வரலாமென்றும் கூறினள்.

பூஞ்சோலையம்மாள் இன்னதென்று அறிய இயலாத ஒருவித வேதனையடைந்தவளா யிருந்தமையால் அவளுக்கு போஜனத்தில் விருப்பம் செல்லவில்லை. ஆயினும் தன் வீட்டிற்கு விருந்தாளிகளாக வந்திருந்த புஷ்பாவதியம்மாளைத் தான் தக்கபடி உபசரித்து காலத்தில் உண்பிக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டு அந்த அம்மாள் புஷ்பாவதியை அழைத்துக்கொண்டு செல்ல, இருவரும் தங்களது ஸ்நானம், போஜனம் முதலியவற்றை முடித்துக்கொண்டனர். சௌந்தரவல்லி யம்மாள் அதற்கு முன்னரே தனது காரியத்தை முடித்துக் கொண்டு போய்ப் படுத்துத் தூங்குகிருளென்று வேலைக்காரிகள் தெரிவித்தனராதலால், பூஞ்சோலையம்மாளும், புஷ்பாவதியும் அவளின்றியே தமது காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு, பூஞ்சோலை யம்மாளின் விடுதிக்குப் போய்ச் சேர்ந்தனர். பகல் பன்னிரண்டு மணியாயிற்று. அப்பொழுதும் கோகிலாம்பாள் வரவில்லை. ஒருமணி, இரண்டுமணி, மூன்று மணியும் ஆயிற்று. புஷ்பாவதி பூஞ்சோலையம்மாளுடன்பேசிக்கொண் டிருந்தபொழுது அப்படியே தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள். ஆனல், பூஞ்சோலை யம்மாளுக்கு மாத்திரம் இருக்கையே கொள்ளவில்லை. பொழுது ஏறிக்கொண்டே போனது பாம்பின் விஷம் தலைக்கேறுவது போலவே இருந்தது. அநேகமாய்க் கோகிலாம்பாள் கண்ணபிரானோடு பேசிவிட்டு அவனுக்காக வக்கீலை அமர்த்துவதற்காகவே போயிருக்கவேண்டு மென்றும், இல்லையாகில், அவ்வளவு அதிகமாக காலதாமதமாவதற்கு வேறு காரணமில்லையென்றும், அவள் எப்படியும் சீக்கிரம் வந்துவிடுவாளென்றும் அவள் ஆயிரந்தடவை நினைத்து நினைத்து ஆவலே வடிவாக மாறி நெருப்புத்தணல்களின்மேல் நிற்பவள்போலத் தத்தளித்திருந்தாள். பிற்பகல் நான்குமணியாய் விட்டது. அந்த அம்மாளினது தேகம் கட்டிலடங்காமல் துடிதுடித்துப் பறக்கிறது. மனமோ பதறுகிறது. வழியைப் பார்த்துப் பார்த்துக் கண்களிரண்டும் பூத்துப் போயின. காலையில்கூட எவ்வித ஆகாரமும் சாப்பிடா

மல் சென்ற கோகிலாம்பாள் பிற்பகல் நான்கு மணி வரையில் பட்டினியாக இருப்பாளே யென்ற நினைவும், அவள் வேறு எவ்விடத்திலும் போஜனம் செய்ய வெட்கப்படும் சுபாவ முடையவளாயிற்றே யென்ற நினைவும் தோன்றி அந்த அம்மாளது மனத்தைப் புண்படுத்தலாயின. கோகிலாம்பாள் வக்கீலிடம் போயிருந்தாலும், அல்லது, அவரை அழைத்துக்கொண்டு மாஜிஸ்டிரேட்டின் கச்சேரிக்கே போயிருந்தாலும், அந்நேரம் எப்படியும் வீட்டிற்குத் திரும்பி வந்திருக்க வேண்டுமாதலால், அத்தகைய விபரீதமான காலஹரணம் ஏற்படுவதற்கு எவ்விதமான முகாந்திரம் இருந்திருக்கு மென்பதை எண்ணி யெண்ணி பார்த்து, எவ்வித முடிவிற்கும் வரமாட்டாதவளாய்க் கடைசியில் தானே நேரில் புறப்பட்டு, கண்ணபிரான் அடைபட்டிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் அவனைத்தேடிப் பார்க்கவேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டவராய், அவள் உடனே வேறொரு வண்டியை ஆயத்தப்படுத்தச் செய்தாள். அப்போதும் புஷ்பாவதி யம்மாள் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாளாதலால், அவள் விழித்துக்கொண்டால், தான் ஓர் அவசர காரியமாக வெளியில் போயிருப்பதாகவும், சிறிதுநேரத்தில் திரும்பிவந்து விடுவதாகவும் சொல்லி, அவளுக்குத் தேவையான சௌகரியங்களைச் செய்து கொடுத்துக்கொண் டிருக்குமாறு வேலைக்காரர்களிடம் கூறி விட்டு, தன்னோடு கூட ஒரு வேலைக்காரனையும் வேலைக்காரியையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டுச்சென்றாள். அந்த அம்மாளது உத்தரவின் படி, வண்டிக்கார முருகேசன் வண்டியை அந்தப்பேட்டைக்கு சம்பந்தப்பட்ட போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓட்டிக் கொண்டுபோய் வாசலில் நிறுத்தினான். வேலைக்காரன் வண்டியை விட்டுக்கீழே இறங்கி ஸ்டேஷன் வாசலில் இருந்த ஒரு போலீஸ் ஜெவானுடன் பேசி, முதல்நாள் போலீஸ் இன்ஸ்பெக்டரால், தபால் திருட்டு சம்பந்தமாய்க் கைதுசெய்யப்பட்டவரான கண்ணபிரான் முதலியாரை எந்த ஸ்டேஷனில் வைத்திருக்கிறார்கள் என்று விசாரிக்க, அவன் கீழும் மேலும் பார்த்து, சிறிது நேரம் தயங்கி, "நீ யார்? அந்தத் தகவலை நீ எதற்காகக் கேட்கிறாய்?" என்று நிரம்பவும் அமர்த்தலாக வினவினான். வண்டிக்காரன், "நான் துபாஷ் ராஜரத்தின முதலியார் வீட்டு வேலையாள். அந்த வீட்டு எஜமானியம்மாள் அதோ வண்டியில் வந்திருக்கிறார்கள், கைதி செய்யப்பட்டிருக்கும் கண்ணபிரான் முதலியாருக்கு இவர்களுடைய வீட்டுப்பெண்ணைக் கட்டிக்கொடுப்பதாக இருந்தார்கள். அவர்கள் ஏதோகாரியமாக அவரைப்பார்க்கவேண்டு

மாம். அவர் இருக்கிற இடம் தெரியவில்லை. உங்களுக்குத் தெரிந்திருந்தால், சொல்லுங்கள்" என்று நயந்துகேட்க, ஜெவான், "அந்தத் திருட்டு சைனுபஜார் வீதியில் நடந்ததாகையால், அதற்குப் பக்கத்தில் இருக்கும் பூக்கடை போலீஸ் ஸ்டேஷனில்தான் அவர் அடைபட்டிருக்க வேண்டும். அங்கேபோய் விசாரித்துப் பாருங்கள்" என்முன்.

அதைக் கேட்டுக்கொண்ட வேலைக்காரன் உடனே வண்டிக்குப் போய்ப் பூஞ்சோலையம்மாளிடம் அந்தச் செய்தியைக் கூற, வண்டியை அங்கே ஓட்டும்படி அந்த அம்மாள் ஆக்ஞாபித்தாள். உடனே வண்டி புறப்பட்டு, அரைநாழிகை நேரத்தில் பூக்கடை போலீஸ் ஸ்டேஷன் வாசலுக்கெதிரில் வந்து நின்றது. பூஞ்சோலையம்மாளும் வேலைக்காரனும் வண்டியை விட்டுக் கீழே இறங்கி, கோகிலாம்பாள் ஏறிவந்த பெட்டிவண்டி அங்கு எவ்விடத்திலாயினும் நிறுத்தப்பட் டிருக்கிறதோ வென்பதைத் தெரிந்துகொள்ள நினைத்துத் தமது பார்வையை நாற்புறங்களிலும் செலுத்திப் பார்த்தார்கள். எவ்விடத்திலும் வண்டி காணப்படவில்லை. கோகிலாம்பாள் அப்போது அவ்விடத்தில் இல்லை யென்றும், அவள் காலையில் அவ்விடத்திற்கு வந்து கண்ணபிரானைப் பார்த்துவிட்டு வேறு எவ்விடத்திற்கோ போயிருக்க வேண்டுமென்றும் அவர்கள் நிச்சயித்துக்கொண்டார்கள். ஆயினும், அந்த ஸ்டேஷனில் இருந்த போலீசாரிடத்திலாவது கண்ணபிரானிடத்திலாவது விசாரித்துப் பார்த்தால், கோகிலாம்பாள் எங்கே போவதாகச் சொல்லிவிட்டுப் போனுள் என்ற தகவலைத் தெரிந்து கொள்ளலாமென்ற யோசனை தோன்றியதாகையால், பூஞ்சோலையம்மாள் வேலைக்காரனை ஸ்டேஷனிற்குள் அனுப்பினுள். அவன் தாழ்வாரத்தில் ஏறி நின்றுகொண்டு சைகை செய்ய, உட்புறத்தில் நின்ற ஒரு ஜெவான் வெளியில் வந்து, "என்ன விசேஷம்?" என்று வினவினுன். உடனே வேலைக்காரன் தாங்கள் கோரிவந்த காரியம் இன்னதென்பதைச் சுருக்கமாக எடுத்துரைத்தான். அதைக் கேட்ட போலீஸ் ஜெவான், "தபால் திருட்டு சம்பந்தமாகக் கைதி செய்யப்பட்ட மனிதனை இன்று காலையிலேயே சப் ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார்களே, அவன் இப்போது இங்கே இல்லையே!" என்முன்.

வேலைக்காரன் மிகுந்த பிரமிப்பும் திகைப்பும் மனக்குழப்பமும் அடைந்தவனுய்ச் சிறிதுநேரம் தயங்கி நின்றபின் மறுபடி

பேசத்தொடங்கி, "அவரை சப் ஜெயிலுக்கு அழைத்துப் போன போது காலையில் எத்தனை மணி இருக்கலாம்?" என்றான்.

ஜெவான், "காலையில் ஏழரை, அல்லது, எட்டுமணி இருக்கும், நீ ஏன் அந்தத் தகவலைக் கேட்கிறாய்?" என்றான்.

வேலைக்காரன், "இங்கே வந்து அவரைப் பார்ப்பதற்காக துபாஷ் ராஜரத்ன முதலியார் வீட்டிலிருந்து, ஓர் அம்மாள் வந்தார்கள். அந்த அம்மாள் இந்நேரம் வரையில் வீட்டிற்குத் திரும்பி வரவில்லை. அந்த அம்மாளைத் தேடிக்கொண்டுதான் நாங்கள் வந்தோம். நீங்கள் சொல்வதைப்பார்த்தால், அந்த அம்மாள் இங்கே வருவதற்கு முன்னாகவே கண்ணபிரான் முதலியார் இவ்விடத்தை விட்டுப் போயிருப்பார்போலத் தோன்றுகிறதே!" என்றான்.

ஜெவான், "அந்த அம்மாள் எத்தனை மணிக்குப் புறப்பட்டு வந்தார்கள்?" என்றான்.

வேலைக்காரன், "அங்கிருந்து அவர்கள் புறப்பட்டபோது காலை சுமார் எட்டுமணி இருக்கலாம்; அங்கே இருந்து இவ்வளவு தூரம் வர, ஓர் அரைமணி நேரமாவது பிடித்திருக்கும். இவர் சரியாக எட்டு மணிக்கு முன்னாகவே போயிருந்தால், அதற்குப் பிறகுதான் அவர்கள் இங்கே வந்திருப்பார்கள். ஒரு வேளை அவர்கள் இங்கே வந்து விசாரித்து, அவர் சப் ஜெயிலுக்குப் போய்விட்டாரென்பதைத் தெரிந்துகொண்டு புறப்பட்டு சப் ஜெயிலுக்குப் போயிருப்பார்களோ என்னவோ" என்றான்.

ஜெவான் சிறிதுநேரம் யோசனை செய்தபின், "நான் காலையிலிருந்து பகல் 1-மணி வரையில் இங்கே இருந்தேன். பிறகு வீட்டிற்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு 2-மணிக்கு வந்தேன். அதுமுதல் இங்கேதான் நான் இருக்கிறேன். இங்கே காலையிலிருந்து பெண்பிள்ளை யாரும் வரவேயில்லை. நீ குறிக்கிற அம்மாள் தனியாக வந்தார்களா? அல்லது வேறு யாரையாவது கூட அழைத்துக்கொண்டு வந்தார்களா? அவர்களுக்கு வயசு எவ்வளவு இருக்கும்?" என்றான்.

வேலைக்காரன், "அந்த அம்மாளுக்கு வயசு பதினாறு அல்லது பதினேழுதான் இருக்கும். அவர்கள் பெட்டி வண்டியில் வந்தார்

கள். அவர்களோடு வண்டிக்காரன் ஒருவனும், இன்னோர் ஆளும் வந்தார்கள்" என்றான்.

ஜெவான் இன்று காலை முதல் இதுவரையில், பெட்டி வண்டியில் யாரும் இங்கே வரவில்லை. அதுவுமல்லாமல், நீ குறிக்கிறபடி யௌவனப் பிராயமுள்ள அம்மாள் யாரும் இங்கே வந்ததாகவே எனக்கு ஞாபகமில்லை. இங்கே இந்த கண்ணபிரான் முதலியாரை சப் ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார்களென்ற செய்தியை அவர்கள் நடுவழியிலேயே யாராவது போலீஸ்காரரிடம் தெரிந்து கொண்டு ஒருவேளை சப் ஜெயிலுக்குப் போயிருக்கலாம். நீங்கள் நேராக சப் ஜெயிலுக்குப் போய் விசாரித்துப் பாருங்கள். அங்கேயுள்ளவர்கள் ஏதாவது தகவல் கொடுப்பார்கள்" என்றான்.

வேலைக்காரன், "இன்று காலையில் கண்ணபிரான் முதலியார் ஓர் ஆளிடம் ஒரு கடிதம் கொடுத்து அதை எங்களுக்கு அனுப்பினார்: தமக்கு வக்கீல் வைக்கும் விஷயமாக நேரில் பேச வேண்டுமென்றும், இங்கேயுள்ள அதிகாரி தம் விஷயத்தில் அபிமானம் வைத்திருக்கிறாரென்றும். அந்த அம்மாள் உடனே புறப்பட்டு வரவேண்டுமென்றும் அவர் அந்தக் கடிதத்தில் எழுதி இருந்தாரே; ஏது அவரை இவ்வளவு சீக்கிரமாக சப் ஜெயிலுக்கு அனுப்பியது?" என்றான். ஜெவான் மிகுந்த வியப்படைந்து, "ஆ! அப்படியா! இங்கே அடைப்பட்டிருந்த முதலியாரா அப்படிக் கடிதம் எழுதி யனுப்பினார்? இது நிச்சயமான சங்கதிதானா? கடிதத்தின் எழுத்து அவருடைய எழுத்துத்தானென்று நீங்கள் சந்தேகமறத் தெரிந்து கொண்டீர்களா?" என்றான்.

வேலைக்காரன், "ஆம். அது அவருடைய கைப்பட எழுதப்பட்ட கடிதந்தான். அம்மாதிரி எழுதக்கூடியவர்கள் வேறே யாருமில்லை" என்றான்.

ஜெவான், "சரி. அப்படியானால் அவரே கடிதம் எழுதி யாரிடத்திலாவது கொடுத்து அனுப்பி இருக்கலாம். இந்த ஸ்டேஷனுக்கு எஜமானரான சப் இன்ஸ்பெக்டருடைய அநுமதியின்மேல் அவர் அப்படிச் செய்திருக்கலாம். நாங்கள் யாராவது ஒருவரைக் கைதி செய்து ஸ்டேஷனுக்கு அழைத்து வந்தால், 24-மணி நேரத்திற்கு மேல் இவ்விடத்தில் வைத்துகொள்ளக்கூடாது என்பது சட்டம்.

அதுவுமன்றி, அவரைக் காலையிலேயே சப் ஜெயிலுக்கு அனுப்பும்படி பெரிய இன்ஸ்பெக்டருடைய கண்டிப்பான உத்தரவு வந்ததாகவும் கேள்வியுற்றேன். அதனால், அவரை உடனே சப் ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார்கள்போ லிருக்கிறது" என்றான்.

வேலைக்காரன், "ஓகோ! அப்படியா சங்கதி! ஆனால் நீங்கள் எங்களுக்கு ஓர் உதவி செய்கிறீர்களா? நீங்கள் சொல்வதிலிருந்து, ஸ்டேஷன் சப் இன்ஸ்பெக்டர்தான் அந்த முதலியார் விஷயத்தில் அபிமானம் காட்டியவரென நினைக்கவேண்டி யிருக்கிறது. புரசைப்பாக்கம் துபாஷ் ராஜாரத்தின முதலியாருடைய வீட்டுப் பெரிய அம்மாள் வந்திருப்பதாக அவரிடம் சொல்லுங்கள். நாங்கள் அவரிடம் போய்ப் பேசி உண்மையான தகவலைத் தெரிந்துகொண்டு போகிறோம்" என்று நயமாகவும் பணிவாகவும் கூறினான்.

ஜெவான், "சப் இன்ஸ்பெக்டர் இப்போது இங்கே இல்லை. அவர் ஏதோ அவசர காரியமாக வெளியில் போயிருக்கிறார். அவர் திரும்பி வந்தால்கூட, நீங்கள் இதைப்பற்றிக்கேட்டால், அவர் எவ்விதமான தகவலும் கொடுக்கமாட்டார். கண்ணபிரான் முதலியார் இங்கே இருந்த காலத்தில், அவரைப் பார்த்த சப் இன்ஸ்பெக்டருக்கு அவருடைய விஷயத்தில் இரக்கம் உண்டாயிருக்கலாம்; அதனால் அவர் ரகஸியத்தில் ஏதாவது உதவி செய்திருக்கலாம். அவர் இப்போது எங்கள் வசத்தில் இல்லை. இனி அவருக்கும் எங்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. ஆகையால், சப் இன்ஸ்பெக்டர் தமக்கும் அவருக்கும் எவ்விதமான பரிச்சயமும் இருந்ததாகவாவது தாம் உதவி செய்ததாகவாவது காட்டிக்கொள்ளவே மாட்டார். அவர் எப்பொழுதும் மாவிலும் படாமல் மாங்காயிலும் படாமல் பேசும் தந்திர சுபாவமுடையவராகையால் அவர் தமக்கு எந்த விஷயமும் தெரியாதென்றே சொல்லிவிடுவார். அவரைக் கண்டு கேட்பதில் உங்களுக்கு எள்ளளவும் அநுகூலம் ஏற்படவே போகிறதில்லை. அவருக்காக நீங்கள் இங்கே காத்திருக்கும் நேரத்தில் சப் ஜெயிலுக்குப் போய் விசாரித்தால் உங்களுக்குச் சரியான சங்கதி தெரிந்து போகும். ஆகையால், நீங்கள் புறப்பட்டு நேராக சப் ஜெயிலுக்குப் போங்கள்!" என்றான்.

அதைக் கேட்ட வேலைக்காரன் சிறிது நேரம் எண்ணமிட்டுத் தயங்கி நின்றபின், "அப்படியானால் நாங்கள் சப் இன்ஸ்பெக்ட

ருக்காகக் காத்திருப்பதில் எவ்வித அநுகூலமும் ஏற்படாதென்று சொல்லுகிறீர்கள்?" என்றான்.

ஜெவான், "ஆமப்பா! நான் மலையாள பாஷையிலா சொல்லுகிறேன்; தமிழில்தானே சொல்லுகிறேன். ஒரு தரம் சொன்னாலும் அதே சங்கதிதான். ஆயிரம் தரம் பன்னிப் பன்னிப் பேசினாலும் அதே சங்கதிதான். நான் சொல்லக்கூடிய தகவலை நான்தான் ஒரேயடியாகச் சொல்லிவிட்டேனே; மறுபடியும் திருப்பித் திருப்பி அதையே நீ கேட்கிறாயே! நான் உன்னோடு பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டே ஒருவேளை அந்த சப் இன்ஸ்பெக்டர் வந்தாலும் வருவார். அப்புறம் அவர் என்மேல் ஏதாவது சந்தேகம் கொண்டாலும் கொள்வார். நீ தயவுசெய்து வெளியில் போ அப்பா! இந்தப் போலீஸ் உத்தியோகம் கத்திமுனையோடு விளையாடுவது போன்றது. நீ போ அப்பா! உனக்குப் புண்ணியமுண்டு" என்று நயமாகவும் கண்டிப்பாகவும் கூறினான். அதைக் கேட்ட வண்டிக்காரன் ஒருவாறு கிலேசமடைந்தான். அந்த ஜெவான் தன்னிடம் அவ்வளவு தூரம் தாராளமாகப் பேசியதைக் குறித்து மிகுந்த நன்றி விசுவாசம் அந்த வேலைக்காரனது மனத்தில் உதித்தது. அவன் அதைத் தனது முக இளக்கத்தால் வெளிப்படுத்திய வண்ணம் நிரம்பவும் பணிவாகவும் பட்சமாகவும் பேசத்தொடங்கி, "ஐயா! நீங்கள் இவ்வளவு தூரம் சங்கதி தெரிவித்ததே பெரிய காரியம். இனி நான் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கவில்லை. நமஸ்காரம் ஐயா! நான் உத்தரவு வாங்கிக்கொள்ளுகிறேன்" என்று கூறி நிரம்பவும் பணிவாகவும் நன்றி யறிதலோடும் அவனுக்கு ஒரு கும்பிடு போட்டவுடன் அவ்விடத்தை விட்டு நடந்து ஸ்டேஷனுக்கு வெளியில் வந்தான்.

அவன் எவ்விதமான செய்தி கொண்டுவருவானோ வென்று கட்டிலடங்கா ஆவலும் மனக்குழப்பமு மடைந்து தத்தளித்தவண்ணம் பெட்டி வண்டியினது மறைவில் நின்றுகொண்டிருந்த பூஞ்சோலையம்மாள் ஸ்டேஷனிற்குள்ளிருந்து வந்த வேலைக்காரனது முகம் வாட்டத்தையும் ஏமாற்றத்தையும்தோற்றுவித்ததை உணர்ந்துகொண்டாள். உடனே அந்த அம்மாளது மனவேதனையும் தவிப்பும் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்தன. மிகுந்த ஆவலும் பதைபதைப்பும் கொண்டு அந்த அம்மாள் எதிர்கொண்டு சிறிது தூரம்

சென்று, "என்ன அப்பா! குழந்தை எங்கே போயிருக்கிறதாம்" என்று வினவினாள். உடனே வேலைக்காரன் தனக்கும் போலீஸ் ஜெவானுக்கும் நடந்த சம்பாஷணை முழுதையும் ஆதியோடந்தமாய் அப்படியே கூறவே, அதைக் கேட்ட பூஞ்சோலையம்மாள் மிகுந்த கலவரமும் நடுக்கமும் அடைந்தாள். எக்காரணம் பற்றியும் கோகிலாம்பாள் காலையிலிருந்து அவ்வளவு நேரம் வரையில் வீட்டிற்குத் திரும்பி வராமலிருக்க ஏதுவில்லை யென்ற எண்ணம் அந்த அம்மாளினது மனத்தில் தெளிவாகப்பட்ட தானாலும், எதற்கும் தாம் உடனே சப் ஜெயிலுக்குப் போய்க் கண்ணபிரானைக் கண்டு அவனுடன் பேசி உண்மையான வரலாற்றை அறிந்து, அதற்குத் தகுந்தபடி நடந்துகொள்ள வேண்டுமென்ற முடிவைச் செய்துகொண்டவளாய் உடனே ஏறி வண்டிக்குள் உட்கார்ந்துகொண்டு சப் ஜெயிலுக்கு ஓட்டும்படி ஆக்ஞாபித்தாள். உடனே வேலைக்காரனும் ஏறி உட்கார, வண்டி புறப்பட்டு விரைவாகச் சென்று அரைநாழிகை சாவகாசத்தில் சப் ஜெயிலின் வாசலையடைந்தது. அந்த சொற்ப காலத்திற்குள் பூஞ்சோலையம்மாளினது மனம் அபாரமான சஞ்சலத்தி லாழ்ந்து கட்டிலடங்காமல் துடிதுடித்துப் பறந்துகொண்டே இருந்தது. தேகம்முள்ளின் மேல் இருப்பதைப்போல சகிக்கவொண்ணாத துன்பத்தையடைந்து இருக்கை கொள்ளாது தத்தளித்தபடி இருந்தது. வண்டி சப் ஜெயில் வாசலையடைந்த உடனே பூஞ்சோலை யம்மாளும் மற்றவர்களும் அவ்விடத்தில் யார் இருந்தனரென்பதை உணரும் பொருட்டு சுற்றுமுற்றும் பார்த்தனர். சப் ஜெயிலின் வாசலில் கத்தி துப்பாக்கிகளுடன் பாராக் கொடுத்து அங்குமிங்கும் உலாவிய வண்ணம் நின்று கொண்டிருந்த இரண்டு ஜெவான்களைத் தவிர வேறு மனிதரே காணப்படவில்லை. ஆகவே, வேலைக்காரன் மாத்திரம் கீழே இறங்கினான். அந்த வேலைக்காரன் நிரம்பவும் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும், உண்மையாகவும் நடப்பவனாதலால். அவர்கள் புரசைப்பாக்கத்திலிருந்து புறப்பட்டு வந்தபோதே பூஞ்சோலையம்மாள் அவனிடம் சிற்சில தகவல்களை மாத்திரம் தெரிவித்து வைத்திருந்தாள். கண்ணபிரான் ஸ்டேஷன் அதிகாரிகளினது அநுசரணையைப் பெற்று தனக்கு வக்கீல் வைத்து உதவிசெய்யும் விஷயமாய்ப் பேசும்பொருட்டு. யாராவது வரவேண்டுமென்று கடிதம் எழுதியனுப்பியதாகவும், ஓர் அவசர காரியத்தை உத்தேசித்து தான் வீட்டில் இருக்க நேர்ந்தமையால், கோகிலாம்பாளையே அனுப்பி

வைத்ததாகவும் அந்த அம்மாள் ஒருவிதமாக வேலைக்காரனிடம் தெரிவித்து வைத்திருந்தாளாதலால், அவன் பூக்கடை போலீஸ் ஸ்டேஷனில் ஜெவானுடன் எல்லா விஷயங்களையும் சுதாவாகவே பேசிவிட்டு வந்து சேர்ந்ததன்றி, சப் ஜெயில் வாசலிலும் தானே போய் விஷயத்தைத் தெரிந்துகொண்டு வருவதாகப் பூஞ்சோலையம்மாளிடம் கூறிவிட்டு வண்டியிலிருந்து கீழே இறங்கி, பாராக்காரர்கள் நின்ற இடத்திற்குப் போய், அவர்களிடம் நயமாகப் பேச்சுக்கொடுத்து. "ஐயா! தபால் திருட்டு சம்பந்தமாகக் கைதி செய்யப்பட்ட ஒரு யௌவனப் புருஷரைப் பூக்கடை போலீஸ் ஸ்டேஷனிலிருந்து இன்று காலையில் இங்கே கொண்டு வந்ததாகச் சொன்னார்கள். அது நிஜந்தானா?" என்றான்.

பாராக்காரன், "ஆம், நிஜந்தான். நீங்கள் யார்?" என்றான்.

வேலைக்காரன், "பெட்டி வண்டியில் துபாஷ் ராஜரத்தின முதலியாருடைய சம்சாரத்தம்மாள் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய பெண்ணை இந்த முதலியாருக்குக் கட்டிக்கொடுக்க இருந்தார்கள். அந்த சமயத்தில் இவரைப் பிடித்துக்கொண்டுவந்து அடைத்திருக்கிறார்கள். அவரைப் பார்த்து, அவருக்கு வக்கீல் அமர்த்துவது முதலிய காரியங்களைச் செய்யவேண்டும். அதற்காக எஜமானியம்மாள் வந்திருக்கிறார்கள். கொஞ்சநேரம் உள்ளே போய் அவருடன் பேச உத்தரவு கொடுக்கவேண்டும்" என்றான்.

பாராக்காரன், "உள்ளே போய்க் கைதிகளுடன் பேசுவதற்கு நாங்கள். உத்தரவு கொடுக்க எங்களுக்கு அதிகாரமேது? நீங்கள் யாராவது ஒரு வக்கீலை அமர்த்தி அவர் மூலமாய் மாஜிஸ்டிரேட்டுக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு வாங்கிக்கொண்டு வாருங்கள். உங்களை உள்ளே விடுகிறோம்" என்றான்.

அதைக் கேட்ட வேலைக்காரன் கலக்கமும் குழப்பமும் அடைந்து, "நீங்களே உள்ளே விடமுடியாதா? மாஜிஸ்டிரேட்டின் உத்தரவு பெற்றுத்தான் ஆகவேண்டுமா?" என்றான்.

பாராக்காரன், "எங்களுக்கு அந்த அதிகாரம் இல்லை. அவரிடம் தான் போகவேண்டும்" என்றான். அதைக் கேட்டுக்கொண்ட வேலைக்காரன் அதற்குமேல் தான் என்ன சொல்வதென்பதை அறியாதவனாய்ச் சிறிது நேரம் தயங்கி நின்றபின், "சரி, அப்படி

யானால் நீங்கள் சொன்னபடியே செய்கிறோம்" என்று கூறியபின் அவ்விடத்தை விட்டுத் திரும்பி வண்டியை நோக்கி இரண்டோரடி நடந்தபின் எதையோ நினைத்துக் கொண்டு மறுபடி திரும்பிப் பாராக்கார னண்டை சென்று, "ஐயா! இன்னொரு சிறிய விஷயம். நான் மறுபடி தொந்தரவு கொடுப்பதைப்பற்றிக் கோபித்துக்கொள் ளக் கூடாது. இன்று காலையில், அந்த ஐயாவைக் கொண்டுவந்து இங்கே அடைத்தார்களே, அதற்குப் பிறகு ஒரு பெட்டி வண்டி யில் ஒரு யௌவனப் பெண் அவரைப் பார்ப்பதற்காக இங்கே வந்ததா? நீங்கள் இப்போது எனக்குச் சொன்னதுபோல, அந்தப் பெண்ணுக்கும் சொன்னதன்மேல், பெண் திரும்பிப் போய் மாஜிஸ்டிரேட்டின் உத்தரவு பெற்றுக்கொண்டு வந்து உள்ளேபோய் இவரைப் பார்த்துவிட்டுப் போனதா? அதை மாத்திரம் சொல்லி விடுங்கள். நான் போய்விடுகிறேன்" என்றான்.

அதைக் கேட்ட பாராக்காரன் சிறிது நேரம் பேசாமல் நின்று ஆழ்ந்து யோசனை செய்து, "இங்கே இருக்கும் கைதிகளைப் பார்க்க வும், அவர்களுக்கு ஆகாரம் கொடுக்கவும் ஒரு நாளையில் எத்தனை யோ ஜனங்கள் வருகிறார்கள் போகிறார்கள். ஆனாலும், இன்று காலை யிலிருந்து வயசுப் பெண் யாரும் வரவில்லை" என்றான்.

வேலைக்காரன், "பெட்டிவண்டியில் யாரும் இங்கே வந்ததை நீங்கள் பார்க்க வில்லையே?" என்றான்.

பாராக்காரன், "பெட்டிவண்டியில் யாரும் வந்ததாக ஞாபக மில்லை" என்றான்.

வேலைக்காரன் கைகுவித்துக் கும்பிட்ட வண்ணம், "சரி; அப் படியானால் நான் போய்வருகிறேன். மாஜிஸ்டிரேட்டின் உத்தர வைப் பெற்றுக்கொண்டு வருகிறோம்" என்று கூறியபின் அவ் விடத்தை விட்டுப் போய்ப் பெட்டிவண்டியை யடைந்து, தனக்கும் பாராக்காரனுக்கும் நடந்த சம்பாஷணை முழுதையும் அப்படியே பூஞ்சோலை யம்மாளிடம் கூறினான்.

கோகிலாம்பாள் காலையிலிருந்து அவ்விடத்திற்கும் வரவில்லை யென்ற செய்தியைக் கேட்டதும் அந்த அம்மாளுக்கு இடி விழுந் ததுபோல ஆய்விட்டது. அன்று காலையில் ஆனைகவுனி போலீஸ்

ஸ்டேஷனை விட்டுச் சென்றபின் கோகிலாம்பாள் போலீஸ் ஸ்டேஷனுக்கும் போகாமல் சப் ஜெயிலுக்கும் போகாமல் வேறு எங்கே போயிருப்பாள் என்ற பெருத்த திகைப்பும் கலக்கமும் தோன்றி மனத்தை அபாரமாக உலப்பத் தொடங்கின. கண்ணபிரானது கடிதத்தைக் கொணர்ந்த மனிதன் ஏதாகிலும் துர் எண்ணத்தோடு அவளை எங்கேயாவது கொண்டுபோய் விட்டானோ, அல்லது, அவர்கள் இருவருக்குமே வழியில் வேறு ஏதேனும் எதிர்பாராத அபாயம் நேர்ந்திருக்குமோ என்ற பலவித எண்ணங்களும் சந்தேகங்களும் தோன்றி அவளது மனத்தைக் கட்டிலடங்காத சஞ்சலத்திற்கும், கவலைக்கும், ஆவலுக்கும் உள்ளாக்கின. கோகிலாம்பாளை அழைத்துச் சென்ற மனிதன் முருகேசனிடம் தப்பான விலாசத்தைச் சொன்னதிலிருந்து, அவனால் ஏதேனும் கெடுதல் நேர்ந்திருக்குமோவென்ற நினைவே பலப்பட்டுத் தோன்றியது. அங்ஙனமாயின், உலகானுபவமற்ற சிறு பெண்ணான கோகிலாம்பாளை அவன் எவ்விதமான மோசவலையில் வீழ்த்தி இருப்பானோ, அவ்விடத்தில் அகப்பட்டுக்கொண்டு அந்த மடந்தை எவ்வாறு தத்தளிக்கிறாளோ என்று எண்ண எண்ண பூஞ்சோலையம்மாளது உயிரில் பெரும்பாகமும் போய்விட்டதென்றே கூறவேண்டும். அந்த அம்மாளது தேகம் கிடுகிடென்று ஆடியது. கைகால்களெல்லாம் வெடவெடவென்று உதறுகின்றன. மனமோ கண்ணைப் பறிக்கத் தக்க விசையோடு சுற்றும் பம்பரம்போலச் சுழன்று எங்கெங்கே போய் அலைந்து தத்தளிக்கிறது. அதற்குமேல் தாம் என்ன செய்கிறது, கோகிலாம்பாளை எங்கே போய்த் தேடுகிறது என்ற நினைவும், ஆவலும் பெரும்புயல்போலவும் காட்டாற்று வெள்ளம் போலவும் அபாரமான விசையோடு அந்த அம்மாளது மனதில் வந்து வந்து மோதி அந்த மனது அடிபோடு குழம்பி எவ்வித யோசனை செய்யவும் சக்தியற்றதாய்ப் போகும்படி செய்துவிட்டன. அப்போது கோகிலாம்பாளைப் பற்றிய நினைவே மனத்தை முற்றிலும் கவர்ந்து கொண்டமையால் கண்ணபிரானை விடுவிக்க வேண்டுமென்ற எண்ணம் அவ்வளவாகத் தலைகாட்டவில்லை. ஆகவே, அந்த அம்மாள் பிரமித்துத் திகைத்து ஸ்தம்பித்து அப்படியே கற்சிலைப்போல உட்கார்ந்து போய்விட்டாள்.

அதை உணர்ந்த வேலைக்காரன், "அம்மா! நாம் இனி கொஞ்சமும் காலதாமசம் பண்ணாமல், உடனே மாஜிஸ்டிரேட்டின் கச்

சேரிக்குப் போவோம். இப்போது சுமார் 4-மணி ஆயிருக்கும் போலிருக்கிறது. 5-மணிக்குக் கச்சேரி கலைந்து மூடப்பட்டுப் போகும். ஆகையால், நாம் அவசரமாக அங்கே போவோம். அவ்விடத்தில் வக்கீல்கள் யாராவது இருப்பார்கள். நாம் யாரை யாவது ஒருவரை உடனே அமர்த்தி இப்போதே மனுக்கொடுக்கச்செய்து கண்ணபிரான் முதலியாரை உடனே ஜாமீனில் விடும்படி கேட்கச் செய்வோம். அதுவுமன்றி, அவரை நாம் பார்க்கவும் அவருக்கு நாம் ஆகாரம் கொண்டுவந்து கொடுக்கவும் உத்தரவு கொடுக்கும்படியும் கேட்கச் செய்வோம். அதற்காவது எப்படியும் உடனே உத்தரவு கிடைத்துவிடும். நாம் வந்து இவருடன் பேசி, இவர் அனுப்பிய கடிதத்தின் உண்மையை நன்றாகத் தெரிந்து கொள்வோம். இவருடைய கடிதத்தைக் கொண்டுவந்த மனிதன் இன்னான் என்பதும் உடனே தெரிந்துபோகும். அதைக் கொண்டு நாம் நம்முடைய குழந்தை எங்கே போயிருக்கிறதென்று தேடிப் பார்ப்போம்" என்றான்.

பூஞ்சோலையம்மாள் அந்த சமயத்தில் எவ்வித யோசனையையும் ஆழ்ந்து செய்யவும், அதன் யுக்தாயுக்தங்களையும் ஆராயவும் திறனற்றவளாயிருந்தமையால், "சரி, அப்படியே செய்வோம்" என்று உடனே ஆமோதித்துவிட்டாள். அடுத்த க்ஷணத்தில் வேலைக்காரன் ஏறி வண்டியில் உட்கார்ந்தான். வண்டிக்காரன் குதிரையை நன்றாகத் தூண்டி வேகமாய் ஓட்டத்தொடங்கினான். கால் நாழிகைநேரத்தில் வண்டி மாஜிஸ்டிரேட்டின் கச்சேரியை யடைந்து, ஒரு பக்கத்தில் நிறுத்தப்பட்டது. தான் முதலில் போய் வக்கீல் ஒருவரைக் கண்டு பேசி அவரிடம் விஷயங்களைச் சொல்லி அவரை அமர்த்திவிட்டு வந்து பூஞ்சோலையம்மாளை அழைத்துக்கொண்டு போவதாகக் கூறியவண்ணம் வேலைக்காரன் வண்டியை விட்டுக்கீழே இறங்கிப் போய் மாஜிஸ்டிரேட்டின் கச்சேரியி லிருந்த வக்கீல்களின் அறைக்குள் நுழைந்து, அவ்விடத்திலிருந்த ராமராவ் என்ற ஒரு பிரபல வக்கீல் வேலையில்லாமல் தனிமையில் இருந்ததைக் கண்டு அவரிடம் நெருங்கி, அவரிடம் விஷயங்களைச் சுருக்கமாகத் தெரிவிக்கவே, அவர் உடனே அளவற்ற ஊக்கமும்சுறுசுறுப்பும் காட்டி, தாம் எப்படியாவது பிரயாசைப்பட்டுக் கண்ணபிரானை ஜாமீனில் விடும்படி செய்ய முயன்று பார்ப்பதாகவும், மாஜிஸ்டிரேட்டின் கச்சேரி கலைவதற்கு அரைமணி சாவகாசமே இருந்ததாகையால், பூஞ்

சோலையம்மாளை உடனே அழைத்து வரும்படியும் கூற, உடனே வேலைக்காரன் ஓடோடியும் சென்று அந்த அம்மாளை வக்கீலின் அறைக்கு அழைத்து வந்தான். வக்கீல் அந்த அம்மாளுடன் சம்பாஷித்து சகலமான தகவல்களையும் விரைவில் தெரிந்துகொண்டு தமது பிரயாச தட்சிணை இன்னதென்று கூறி, அதையும் உடனே பெற்றுக் கொண்டு பத்துநிமிஷ நேரத்தில் ஒரு மனுவெழுதி எடுத்துக்கொண்டு பூஞ்சோலையம்மாளுடன் மேன்மாடத்திற்குச் சென்று பிரதான மாஜிஸ்டிரேட்டின் முன்னர் ஆஜராகி அந்த மனுவைக் கொடுத்து கண்ணபிரான் முதலியார் தக்க கண்ணியம் வாய்ந்த சர்க்கார் உத்தியோகஸ்தர் என்றும். அவருக்கு ஒரு பெருத்த தனிகருடைய வீட்டில் பெண் கொடுக்கப் போகிறார்களென்பதைக் கண்டு யாரோ விரோதிகள் கட்டுப்பாடாக அவர்பேரில் அந்தக் குற்றத்தை சிருஷ்டித் திருக்கிறார்களென்றும், அவர் உண்மையில் குற்றம் செய்யாத நிரபராதி என்றும், அவர் இல்லாத காலத்தில் அவருடைய வீட்டில் திருட்டு சொத்து புதைக்கப்பட் டிருந்ததென்ற விஷயத்தைத் தவிர அவரைநேரில் அந்தக் குற்றத்தோடு சம்பந்தப்படுத்தக் கூடிய ருஜு எதுவுமில்லையென்றும், ஆகையால் அவரை உடனே ஜாமீனில் விடவேண்டுமென்றும், அதற்காக தாம் ரொக்கமாக எத்தனை ஆயிரம் ரூபாய்க்கு வேண்டுமானாலும் ஜாமீன் கட்ட சம்மதிப்பதாகவும் கூறி நிரம்பவும் திறமையாகத் தமது கட்சியின் நியாயங்களை எடுத்துப்பேசினார். அதைக் கேட்ட நியாயாதிபதி சிறிதுநேரம் ஆழ்ந்து யோசனை செய்து, "இதை நான் சம்பிரதாயப்படி போலீசாருக்கு அனுப்பி, இதைக்குறித்து அவர்கள் ஏதாவது ஆட்சேபனை சொல்லுகிறார்களாவென்பதைத் தெரிந்துகொண்டு, அதற்கு மேல் உத்தரவு பிறப்பிக்கிறேன். கச்சேரி கலைவதற்கு இன்னம் 15-நிமிஷ நேரந்தானிருக்கிறது. அதற்குள் இது போலீஸாருக்குப் போய்த் திரும்பி என்னிடம் வர அவகாசம் இராது. ஆகையால், நீங்கள் நாளையதினம் காலை சரியாகப் பதினொரு மணிக்கு வந்து சேருங்கள். அதற்குள் இதை என்னிடம் அனுப்பி விடும்படி நான் போலீசாருக்கு எழுதி யனுப்பிவிடுகிறேன்" என்றார்.

அதைக் கேட்ட வக்கீல், "சம்பிரதாயத்துக்கு விரோதமான காரியத்தைச் செய்யும்படி நான் கேட்டுக்கொள்வது தகாத வேண்டுகோளாகையால் தாங்கள் இப்போது சொன்ன பிரகாரம் நாளையதினம் காலையிலேயே வருகிறோம் அதற்குமுன் இன்னொரு சிறிய

விஷயத்தில் கோர்ட்டார் எங்களுக்கு அநுமதி கொடுக்கவேண்டும். சிறைச்சாலையிலிருக்கும் எங்கள் கட்சிக்காரரை நாங்கள் உடனே போய்ப் பார்த்து, எங்களுக்குத் தெரியவேண்டிய சில முக்கியமான தகவல்களைத் தெரிந்துகொள்ளவும், அவருக்குச் சொந்த ஆகாரம் கொடுக்கவும் அநுமதி தரவேண்டும்" என்றார். அதை மாத்திரம் நியாயாதிபதி ஏற்றுக்கொண்டு, அதற்குத் தேவையான அநுமதியை எழுத்துமூலமாக உடனே எழுதிக் கொடுக்கச் செய்ததன்றி ஜாமீன் மனுவை உடனே போலீசாருக்கு அனுப்பி வைத்தார். தமக்குக் கிடைத்த அநுமதிச் சீட்டைப் பெற்றுக்கொண்ட வக்கீல் பூஞ்சோலை யம்மாளையும், வேலைக்காரனையும் அழைத்துக்கொண்டு வெளியில் சென்று பெட்டிவண்டியில் அவர்களோடு உட்கார்ந்து கொண்டு வண்டியை உடனே சப் ஜெயிலுக்கு ஓட்டச் செய்தார். பத்துநிமிஷ நேரத்தில் வண்டி அங்கே போய்ச் சேர்ந்தது. உடனே வக்கீலும் பூஞ்சோலை யம்மாளும்வண்டியை விட்டிறங்கி, வெளியில் நின்ற பாராக்காரர்களிடம் மாஜிஸ்டிரேட்டின் அநுமதிச் சீட்டைக் காட்ட, அவர்கள் சிறைச்சாலையிலிருந்த வார்டரைக்காட்டிவிட்டார் கள். வார்டர் அவர்களிருவரையும் உள்ளே அழைத்துக்கொண்டு போய்க் கண்ணபிரான் அடைபட்டிருந்த அறையின் வாசலுக்குப் போய்ச் சேர்ந்தான்.

அளவிட இயலாத அபாரமான விசனத்தினாலும், அவமானத்தினாலும், ஏக்கத்தினாலும் வாடித் துவண்டு தளர்ந்து முற்றிலும் சோர்ந்து பைத்தியங்கொண்டவன் போலவும் உயிரற்ற சவம் போலவும் அந்த அறைக்குள் உட்கார்ந்திருந்தவடிவழகனான கண்ண பிரானைக் காணவே, பூஞ்சோலை யம்மாளுக்குத் தன்னை மீறி அழுகையும் விசனமும் பொங்கிப் போய்விட்டன. அந்த அம்மாளது தேகம் பதறியது. மனம் அனலிடு மெழுகாக உருகித் தத்தளித்தது. கண்களினின்றும் கண்ணீர் பொங்கி தாரைதாரையாக வழிந்தோட வாரம்பித்தது. சகிக்க வொண்ணாத மன எழுச்சியினால், அந்த அம்மாள் தேம்பித் தேம்பி யழத் தொடங்கினாள். தான் சிறிதும் எதிர்பாராவிதமாய் திடீரென்று அங்கே வந்து தோன்றிய பூஞ்சோலை யம்மாளையும் வக்கீலையும் காணவே. கண்ணபிரான் திடுக்கிட்டெழுந்தான். தனது நிராதரவான நிலைமையில் கோகிலாம் பாளின் தாயார் தன்னைக் காணும்பொருட்டு சிறைச்சாலைக்கு வந்தது அவனது மனத்தின் அளவற்ற களிப்பையும் மனோதிடத்தை

யும் உற்சாகத்தையும் உண்டாக்கியதாலும், தன்னை நிரம்பவும் கண்ணியமாக மதித்திருந்தவர்களான தன் மனைவியின் வீட்டாரது முகத்தில் தான் எப்படி விழிக்கிறதென்ற அவமானமும் கிலேசமும் தோன்றி அவனது தேகத்தை முற்றிலும் குன்றச் செய்தன. அவனது முகம் வாட்டமடைந்து சூம்பிப் போய்க்கீழே கவிழ்ந்தது. பூஞ்சோலையம்மாளுடன் வந்திருந்த இன்னொரு மனிதர் யாராக இருக்கலாமென்றும், அவர்கள் தன்னிடம் என்னவிதமான கேள்விகளைக் கேட்பார்களோ வென்றும், தான் நிரபராதி யென்பதை எப்படி அவர்களுக்குத் தான் மெய்ப்பிக்கிறது என்றும் சிந்தனை செய்தவனாய் முன்பக்கத்துக் கம்பியண்டை மெதுவாக வந்து நின்றான். உடனே வக்கீல் கண்ணபிரானைப் பார்த்து, "கண்ணபிரான் முதலியாரே! இதோ வந்திருக்கும் அம்மாள் யார் என்பது உமக்குத் தெரிகிறதா?" என்றார்.

கண்ணபிரான்:—தெரிகிறது. இவர்கள் புரசைபாக்கம்துபாஷ் முதலியாரவர்களுடைய சம்சாரம். அவர்களுடைய அடையாளம் நன்றாய்த் தெரிகிறது. நீங்கள் யாரென்பதுதான் தெரியவில்லை.

வக்கீல்:—நான் வக்கீல். உமக்காக வாதாடுகிறதற்கு என்னை இவர்கள் அமர்த்தி இருக்கிறார்கள். உம்மை ஜாமீனில் விடும்படி நாங்கள் மாஜிஸ்டிரேட்டினிடம் கொஞ்ச நேரத்திற்கு முன் மனுச் செய்து கொண்டோம். அதை அவர் போலீசாருக்கு அனுப்பி இருக்கிறார். நாளையதினம் காலை 11-மணிக்கு அவர் உத்தரவு பிறப்பிப்பார்; அநேகமாய் உம்மை ஜாமீனில் விட்டு விடுவாரென்று நம்புகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக நான் உம்மிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய தகவல்களையெல்லாம், நான் நாளைய தினம் காலையில் சாவகாசமாய்க் கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறேன். அதற்கு இப்போது அவசரமொன்றுமில்லை, இந்த அம்மாளுடைய மூத்தபெண்ணை நீர் நன்றாகப் பார்த்திருக்கிறீரல்லவா. அந்தப் பெண்ணை, நீர் இன்று காலையில் போலீஸ் ஸ்டேஷனில் இருந்த போதாவது, அங்கிருந்து இங்கே வந்த பிறகாவது இதுவரையில் பார்த்ததுண்டா?—என்றார்.

அந்த விபரீதமான கேள்வியை உணர்ந்த கண்ணபிரான் திடுக்கிட்டு மிகுந்த குழப்பமும் சஞ்சலமும், மனவேதனையும் ஆவலும் கொண்டவனாய், "நான் பார்க்கவில்லையே! அந்தப் பெண் பங்க

ளாவிலிருந்து புறப்பட்டு இங்கே வந்ததா என்ன?" என்று கட்டில டங்கா வியப்பும் துடிதுடிப்பும் தோன்றக் கூறினன்.

வக்கீல், "அந்தப் பெண்ணுக்கு நீர் இன்று காலையில் ஒரு கடிதம் அனுப்பியதுண்டா?' என்றார்.

கண்ணபிரான்:—(மட்டிலடங்கா வியப்பும் பதைப்பும் ஆவலும் அடைந்து) ஆம். நான் கடிதம் அனுப்பியது நிஜந்தான். அதை நேற்று இரவில் அல்லவா அனுப்பினேன்; இன்று காலையிலல்லவே

வக்கீல்:—நேற்று இறவிலா அனுப்பினீர்! சரி, இருக்கட்டும்; யாரோ ஓர் அதிகாரியின் உதவி உமக்குக் கிடைத்திருப்பதாகவும், அவருடைய அநுமதியின்மேல் கடிதம் எழுதியதாகவும் சொல்லியிருக்கிறீரே. அந்த அதிகாரி யார் என்பது உமக்குத் தெரியுமா? அவர் எழுதச்சொல்லி நீர் அந்தக்கடிதத்தை எழுதினீரா, அல்லது, நீரே சுதாவாக அதை எழுதினீரா? அதை அவர் யாரிடம் கொடுத்தனுப்பினர்? வயசான பெரியவர்களான உம்முடைய தாயாரும், மாமியாரும் இருக்கையில் யௌவனப் பிராயத்துப் பெண்ணை நீர் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரும்படி என்ன காரணத்தினல் எழுதினீர்? இந்த விவரங்களை யெல்லாம் நன்றாகச் சொல்லும்—என்றார்.

வக்கீல் அந்தக் கேள்விகளைக் கேட்ட மாதிரியிலிருந்து, ஏதோ விபரீத சம்பவம் நேர்ந்திருக்க வேண்டுமென்று சுலபத்தில் யூகித்துக்கொண்ட கண்ணபிரான் கட்டிலடங்கா மனவேதனையும் திகிலும் குழப்பமு மடைந்து தத்தளித்தவனய்ப் பேசத்தொடங்கி, தன்னைக் கைதுசெய்து அழைத்துவந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் முதல் நாள் இரவில் தான் அடைபட்டிருந்த இடத்திற்கு வந்து, தன்னோடு அன்பாகவும் இரக்கமாகவும் பேசியது, தான் குற்றமற்றவனென்பதை அவர் விசாரித்து சந்தேகமறத் தெரிந்து கொண்டதாகக் கூறியது, தான் சாப்பிடும்படி தன்னை அவர் உபசரித்தது, தன் தாயாரை அழைத்து வர ஒரு ஜெவானை அனுப்பியது, சிறிது நேரத்தில் அந்த ஜெவான் திரும்பிவந்து, தன் தாயாரும், மாமியாரும் காலையிலிருந்து ஸ்மரணைதப்பிக் கிடந்ததாகவும், பெண்களிருவரும் விசனித்துப் படுத்த படுக்கையா யிருந்ததாகவும், அந்த ஜெவான் கோகிலாம்பாளைக் கண்டதாகவும், தான் கடிதம் எழுதி யனுப்பினல் அவள் புறப்பட்டு வர சம்மதித்ததாகவும் தெரிவித்தது, அதன் பிறகு

தான் கடிதம் எழுதி இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தது, அதை அவர் அந்த ஜெவானிடம் கொடுத்தனுப்பியது ஆகிய விருத்தாந்தங்கள் யாவற்றையும் நடந்ததுபோலவே எடுத்துரைத்தான்.

அவன் கூறிய வரலாற்றைக்கேட்ட பூஞ்சோலையம்மாள் சகிக்க வொண்ணாத வியப்பும் பிரமிப்பும் அடைந்து, "ஆ! என்ன! என்ன! நேற்று ஜெவானாவது பங்களாவுக்கு வரவாவது! இது முழுப்புரட்டாக இருக்கிறதே! நாங்கள் யாரும் ஸ்மரணைதப்பிப் படுத்திருக்கவுமில்லை. அவன் வரவுமில்லை. கோகிலாம்பாள் எவனுடனும் தனியாகப் பேசவுமில்லை; தான் வருவதாகச் சொல்லவுமில்லையே! யாரோ ஒரு மனிதன் இன்று காலையில் அந்தக் கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். அதைப் பார்த்தவுடன் என்ன அவசர காரியமோவென்று நினைத்து அவள் புறப்பட்டு வந்தாள். அவளுடன் கூட வண்டிக்கார முருகேசனும், அந்தக் கடிதத்தைக் கொண்டு வந்தவனும் வந்தார்கள். வண்டி ஆனைகவுனி போலீஸ் ஸ்டேஷனண்டை வந்தவுடன், வழியில் நின்ற ஒரு போலீஸ் ஜெவான் வண்டி தப்பான பக்கத்தில் வந்ததென்று சொல்லி, அதட்டி, முருகேசனை ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போய் விட்டான். கடிதம் கொண்டுவந்த மனிதன் தாங்கள் தங்கசாலைத் தெரு 2075-வது இலக்கமுள்ளவீட்டிற்குப்போவதாகவும், போலீஸ் ஸ்டேஷனில் பெயரைபதிந்து வைத்துவிட்டு அந்த விலாசத்துக்கு வரும்படியும் முருகேசனிடம் சொல்லிவிட்டு வண்டியை ஓட்டிக் கொண்டு போய்விட்டானும். முருகேசன் போலீஸ் ஸ்டேஷனுக் குப் போய்க் கொஞ்ச நாழிகையில் அங்கிருந்து வெளியில் வந்து தங்கசாலைத் தெருவுக்குப்போய்த் தேடித் தேடிப் பார்த்தானும். 2075-என்ற இலக்கமுள்ள வீடே அந்தத் தெருவில் இல்லையாம். அவன் உடனே பங்களாவுக்கு வந்து அந்தத் தகவலைத் தெரிவித்தான். கோகிலாம்பாள் ஸ்டேஷனுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்து விடுவாள் என்று நினைத்து நாங்கள் வெகுநேரம் வரையில்காத்துக் காத்துப் பார்த்தோம். பெண் திரும்பி வரவே இல்லை. அவள் எங்கே போயிருக்கிறாளென்ற இடமே தெரியவில்லை. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விசாரித்ததில். அங்கே யாரும் வரவில்லையென்று சொல்லிவிட்டார்கள். இங்கே வாசலில் இருக்கும் பாராக் காரர்களும் அவள் இங்கே வரவில்லையென்று சொல்லிவிட்டார்கள். அவளை எந்த மோசக்காரர்கள் எந்த விதமான கொடுமைக்கு

ஆளாக்கி விட்டார்களோ தெரியவில்லையே!" என்று கூறிப் பதறித் தவித்துத் தனது கைகளைப் பிசைந்துகொண்டு கண்ணீர் விடுத்துக் கலங்கி யழத் தொடங்கினுள்.

அந்த வரலாற்றைக் கேட்ட கண்ணபிரான் தாங்கவொண்ணுத அபரிமிதமான பிரமிப்பும், திகைப்பும், கலவரமும், பதைபதைப்பும் அடைந்து, "ஆகா! என்ன ஆச்சரியம்! ஏதோ பெருத்த மோசடி நடந்துவிட்டதுபோ லிருக்கிறதே! அந்த ஜெவான் சொன்ன வரலாறு முழுதும் பொய்யாக இருந்தால், அவனும், அந்த இன்ஸ்பெக்டரும் ஏதோ கெட்ட எண்ணத்தை வைத்துக்கொண்டு என்னிடம் அம்மாதிரி தந்திரமாகப் பேசிக் கடிதம் எழுதி வாங்கிக் கொண்டு போனதாகவல்லவா நினைக்கவேண்டி யிருக்கிறது. கடிதம் கொண்டுவந்த மனிதன் போலீஸ் உடைகளைப் போட்டுக் கொண்டே வந்திருந்தானு? அவன் பார்வைக்கு எப்படி இருந்தான்?" என்றுன். பூஞ்சோலை யம்மாள், "அவன் போலீஸ் உடுப்புகள் போட்டுக்கொண் டிருக்கவில்லை. அவன் உயரமாகவும் கருப்பாகவும் இருந்தான். முகத்தில் அம்மைத் தழும்புகள் இருந்தன. அவனுடைய காதில் சிவப்புக்கல் கடுக்கன் இருந்தது" என்றுள்.

கண்ணபிரான், "சரிதான். அதே மனிதன்தான் நேற்று புரசைப்பாக்கத்துக்குப் போய் வந்ததாகச் சொல்லி முடிவில் கடிதத்தை வாங்கிக்கொண்டு போனவன். சந்தேகமே இல்லை" என்றுன்.

அவர்களிருவரும் கூறிய வரலாறுகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வக்கீல், "சரி; நேரமாகிறது; வாருங்கள் போவோம். ஐயா முதலியாரே! அநேகமாய் நாளையதினம் உம்மை ஜாமீனில் விட்டுவிடுவார்கள். அதன்பிறகு நான் மற்ற தகவல்களையெல்லாம் உம்மிடம் கேட்டுக்கொள்ளுகிறேன். உமக்குச் சொந்த ஆகாரம் கொடுக்கவும் மாஜிஸ்டிரேட் உத்தரவு பிறப்பித்திருக்கிருர். இப்போது இந்த அம்மாள் வீட்டுக்குப் போனவுடன் உமக்கு ஆகாரம் அனுப்புவார்கள். அதுபோலவே நீர் இங்கிருந்து வெளியில் வருகிற வரையில் ஒவ்வொரு வேளையிலும் ஆகாரம் வரும். நீர் கவலைப்படாமல் இரும்" என்றுர்.

உடனே கண்ணபிரான், "ஐயா! என்னுடைய ஆகாரத்தைப் பற்றியாவது என்னைப் பற்றியாவது கவலையில்லை. இப்போது முதலில் நீங்கள் போய் அந்தப் பெண்ணைக் கண்டுபிடிப்பதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்யுங்கள். பெண் க்ஷேமமாய் வீடுவந்து சேர்ந்ததென்று செய்தியைக் கேட்கிறவரையில், எனக்குப் பசியாவது, தாகமாவது, தூக்கமாவது உண்டாகப் போகிறதில்லை. கவலையினால் என் மனம் வேதனைப்பட்டுத் தவித்துக்கொண்டே இருக்கும். பெண் வந்து சேர்ந்தவுடனே அந்தத் தகவலை எனக்கு நீங்கள் எப்படியாவது தெரிவிக்கவேண்டும்" என்று கூறி நிரம்பவும் பரிதாபகரமான பார்வையோடு பூஞ்சோலையம்மாளது முகத்தை நோக்கினான். பூஞ்சோலையம்மாளது மனதும் கண்களும் கலங்கி இளக்கமடைந்தன. தேகம் துடிதுடித்தது. அந்த அம்மாளது நிலைமை கண்ணபிரான் மீது தாங்கள் சிறிதும் அருவருப்பே கொள்ளவில்லையென்றும் தாங்கள் அவன்மீது வைத்த மதிப்பும் வாஞ்சையும் எப்போதும் மாறாமல் இருக்குமென்று அவனுக்கு உறுதிசெய்து கொடுப்பது போலத் தோன்றியது. அதைக் கண்ட கண்ணபிரானது உள்ளம் குளிர்ந்தது. அந்த ஒரு நிமிஷநேரம் அவனது மனம் ஆநந்த பரவசமடைந்தது, ஆயினும் தனது ஆருயிர்க் காதலியான கோகிலாம்பாள் எங்கே இருக்கிறாளோ. என்ன நிலைமையில் இருக்கிறாளோ என்ற குழப்பத்திலும் கவலையிலும் அவன் தனது சொந்த நினைவை அடியோடு விலக்கிவிட்டான். அப்போது வக்கீல், "சரி; பெண் அகப்பட்டவுடனே இங்கே செய்தி சொல்லியனுப்புவார்கள். மறுபடி ஒருவேளை அந்த இன்ஸ்பெக்டர் இங்கே வந்து ஏதாவது தந்திரம் செய்யப் போகிறார். ஜாக்கிரதையாக நடந்துக்கொள்ளும்" என்று கூறியபின் பூஞ்சோலையம்மாளை யழைத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு வெளியில் சென்று வண்டியண்டைப் போய்ச் சேர்ந்தார்.

சேர்ந்தவர் பூஞ்சோலையம்மாளை நோக்கி "அம்மா! நீங்கள் இப்போது உங்களுடைய ஜாகைக்குத்தானே போகிறீர்கள்? எனக்கு நேரமாகிறது. நான் இப்படியே வீட்டுக்குப் போகிறேன். நாளையதினம் காலையில் சரியாக 11-மணிக்கு நீங்கள் மாஜிஸ்ரேட்டின் கச்சேரிக்கு வந்து சேருங்கள். நாம் மேல் காரியங்களை அங்கே செய்து கொள்ளுவோம்" என்றார்.

அதைக்கேட்ட பூஞ்சோலையம்மாள் மிகுந்த கலக்கமும் மனக்குழப்பமு மடைந்து "ஐயா! என்னுடைய பெண்ணைக் கண்டுபிடிக்

காமல் நான் எப்படி என்னுடைய பங்களாவிற்குத் திரும்பிப் போவேன்! நானே பெண்பிள்ளை. இந்த ஊரிலோ திக்கு திசை தெரியவில்லை. என்னுடைய சொந்தக்காரர்களுக்கு நான் செய்தி சொல்லியனுப்பி அவர்களை வரவழைக்கக்கூட அவகாசமில்லாமல் போய்விட்டது. இந்த சமயத்தில் தாங்களும் இப்படி என்னைக் கைவிட்டு விட்டுப் போனால், நான் என்ன செய்வேன்! தயவுசெய்து தாங்களும் என்னோடு இன்னும் கொஞ்சநேரமிருந்து எனக்கு உதவி செய்யவேண்டும். தங்களுடைய பொழுது வீணாவதற்காக நான் தங்களுக்குத் தக்கபடி சன்மானம் செய்துவிடுகிறேன். தாங்கள் எப்படியாவது வரத்தான் வேண்டும்" என்று நிரம்பவும் உருக்கமாகவும் பரிதாபகரமாகவும் இறைஞ்சி வேண்டிக்கொண்டாள்.

அதைக்கேட்ட வக்கீல், "அம்மா! நான் என்னுடைய பொழுது வீணாய்ப் போகுமே என்று கவலைப்படவில்லை. நான் பொழுதை வீணாக்குவதில் உங்களுக்கு ஏதாவது நன்மை உண்டாகக் கூடியதாக இருந்தாலும் பரவாயில்லை. இந்த ஊரின் சுற்றளவு 27-மயில், இதில் லக்ஷம் சந்துக்களும் தெருக்களும் இருக்கின்றன. இதில் சாதாரணமாக வெளியில் வந்து போய்க்கொண்டிருக்கும் மனிதர்களையே நாம் கண்டுபிடிப்பது துர்லபம். அதுவுமன்றி இப்போது அஸ்தமன வேளையாகி விட்டது. மோசக் கருத்தோடு பெண்ணைக் கொண்டுபோயிருப்பார்கள். அவளைப் பத்திரமான மறைவிடத்தில் ஒளித்து வைத்திருப்பார்கள். நான் கச்சேரியில் நேருக்குநேர் வந்திருக்கும் மனிதர்களோடு வாக்குவாதம்செய்து பணம் சம்பாதிப்பதில் கெட்டிக்காரனேயன்றி, ஒளிய வைக்கப்பட்டிருப்பவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் அவ்வளவு சமர்த்தனல்ல. இந்தக் கண்ணபிரான் முதலியார் சொல்வதைப் பார்த்தால், போலீஸ் இன்ஸ்பெக்டரே ஏதோ மோசக் கருத்தோடு பெண்ணை வருவிக்க வேண்டுமென்று நினைத்து இவரை ஏமாற்றி இவரிடம் கடிதம் எழுதி வாங்கிக்கொண்டு போனதாகத் தெரிகிறது ஆனைகவுனி போலீஸ் ஸ்டேஷனண்டை ஜவான் உங்களுடைய வண்டிக்காரனைப் பிடித்துக்கொண்டு போனதும், கடிதம் கொண்டுவந்து கொடுத்தவன் வண்டிக்காரனிடம் தப்பான விலாசத்தைச் சொன்னதும் முன்யோசனையின்மேல் செய்யப்பட்ட காரியங்களாகவே தோன்றுகின்றன. மற்ற திருடர்களையும் மோசக்காரர்களையும் கண்டுபிடிக்

கிறவர்களான போலீசாரே இவ்விதமான படுமோசத்தில் இறங்கி இருக்கையில், அதை நாம் சுலபத்தில் கண்டு பிடிக்க முடியுமென்று நான் நினைக்கவில்லை. அதுவுமன்றி, அந்தப் போலீஸ் இன்ஸ் பெக்டர் சாதாரணமான மனிதனன்று. அவன் எப்பேர்ப்பட்ட கொடிய அட்டூழியத்தையும் நிரம்பவும் துணிவாகச் செய்துவிட்டு, தனக்கு ஒன்றுமே தெரியாதென்று கடைசிவரையில் சாதித்து விடக்கூடிய மகா பாதகன். அவன் எதையும் கூசாமல் செய்வான். அவனிடம் நாம் இப்போது போய், இந்த சங்கதியைப் பற்றிக் கேட்டால், அவன் தனக்கு ஒன்றுமே தெரியாதென்று சொல்லி அடியோடு மறுப்பதோடு, நம்மை வைது அதட்டி அனுப்புவான். கண்ணபிரான் முதலியாரைத் தான் பார்க்கவே இல்லையென்றும். அவர் கடிதம் எழுதியது தனக்குத் தெரியவே தெரியாதென்றும் சொல்லி, போலீசாரைப் பற்றி நாம் அவதூருகப் பெசுகிருே மென்று அவன் நம்மீது குதிரையேறப் பார்ப்பான். ஆகையால், நாம் அவனிடம் போவது உசிதமாகப் படவில்லை. பெண் அவனு டைய வசத்திலிருக்கையில், நாம் ஊரிலெல்லாம் அலைந்துதேடுவதும் வீண் வேலை. அதனுல்தான் நான் போகிறேனென்று சொன் னேன், உங்களுக்கு இஷ்டமிருந்தால், நீங்களே போலீஸ் இன்ஸ் பெக்டருடைய ஜாகைக்குப் போய் அவனைக் கண்டு பேசிப்பாருங் கள்" என்ருர்.

அதைக் கேட்ட பூஞ்சோலையம்மாள் கட்டிலடங்கா மனவேத னையும் சகிக்கவொண்ணுத கலக்கமும் கலவரமும் அடைந்து தத் தளித்துத் தவித்தவளாய்த் தனது கைகளைப் பிசைந்துகொண்டு "ஐயோ! அந்த மோசக்காரர்கள் என் குழந்தையை எங்கே கொண்டுபோய் வைத்திருக்கிருர்களோ, என்ன செய்துவிட்டார் களோ தெரியவில்லையே! அந்த துஷ்டர்கள் ஏதாவது துன்மார்க்க மான செய்கைக்கு அவளை வற்புறுத்துவார்களோ என்னமோ தெரியவில்லையே! அப்படிப்பட்ட காரியம் ஏதாவது நடந்திருந்தால், அவள் தன்னுடைய பிராணனை விட்டுவிடுவாளே! ஐயோ! என் குழந்தை இந்நேரம் உயிரோடிருக்கிறதோ, அல்லது, இறந்து போய்விட்டதோ, என்ன விபரீதம் நடந்திருக்கிறதோ தெரியவில் லையே. அவள் இப்பேர்ப்பட்ட மகா அபாயகரமான நிலைமையில் இருக்கையில், அவளைத் தேடாமலும், விடுவிக்க முயலாமலும், நான் எப்படி என்னுடைய பங்களாவுக்குப் போவேன். என்உடம்பு

அங்கே எப்படி இருக்கை கொள்ளும்; இந்த இராப்பொழுதைநான் எப்படிக் கழிப்பேன்? என் கண்கள்தான் தூக்கத்தை அறியுமா? என் மனம் இதை சகித்திருக்குமோ? ஐயா! தங்களுடைய பொழுது வீணாய்ப் போவதைப்பற்றி நூறல்ல இருநூறு ரூபாய் வேண்டு மானாலும் தருகிறேன். அதுவுமன்றி, தாங்கள் இந்த சமயத்தில் என்னுடைய அநாதரவான நிலைமையைப் பார்த்து என் விஷயத் தில் இரக்கம் கொண்டு ஜீவகாருண்ய மொன்றையே முக்கியமாகக் கருதி, என் பெண்ணை தேடுவதில் எனக்கு உதவிசெய்ய வேண் டும்" என்று நிரம்பவும் பணிவாகக் கெஞ்சி வேண்டிக்கொண்டாள்.

வக்கீல் அந்த உருக்கமான வேண்டுகோளை தாட்சணியமின்றி மறுக்க மாட்டாதவராய், "சரி; நீங்கள் இவ்வளவு தூரம் சொல்லும் போது, நான் உங்களோடு வராமல் வீட்டுக்குப் போவது சரியல்ல. நானும் வருகிறேன். நாம் இப்போது நேராகப் போலீஸ் இன்ஸ் பெக்டருடைய வீட்டுக்குப் போய் விசாரிப்போம், அவருடைய வீடு எங்கே இருக்கிறதோ தெரியவில்லை. நான் இந்தப் பாராக் காரர்களிடம் அதைக் கேட்டுத் தெரிந்துகொண்டு வருகிறேன். நீங் கள் இப்படியே இருங்கள்" என்று கூறி அவ்விடத்தை விட்டுப் பாராக்காரர்களண்டை போய்ப் பேசிவிட்டுத் திரும்பிவந்து, "அவ ருடைய வீடு தங்கசாலைத் தெருவுக்குப் பக்கத்திலுள்ள செங்கான் கடைத் தெருவில் இருக்கிறதாம். போவோம் வாருங்கள்" என்று கூறினர்.

உடனே எல்லோரும் ஏறி உள்ளே உட்கார, வண்டி புறப்பட் டுத் தங்கசாலைத் தெருவை நோக்கிச் செல்ல வாரம்பித்தது. வக்கீல் பூஞ்சோலை யம்மாளை நோக்கி, "நாம் இப்போது போலீஸ் இன்ஸ் பெக்டரிடம் பேசும்போது, நிரம்பவும் ஜாக்கிரதையாகப் பேச வேண்டும். அவர் பேரில் நாம் சந்தேகம் கொண்டு அங்கே வந் திருக்கிறோமென்பது தெரியாதபடி தந்திரமாகப் பேசவேண்டும். பூக்கடை போலீஸ் ஸ்டேஷனிலிருந்தபடி கண்ணபிரான் முதலி யார் ஒரு கடிதம் எழுதி, அதை ஒரு ஜெவானிடம் கொடுத்தனுப் பியதாகவும், பெண் பெட்டி வண்டியில் வந்த விவரத்தையும், ஆனை கவுனி யண்டை நேர்ந்த இடையூறையும், பிறகு பெண்ணை அந்த ஜெவான் அழைத்துப் போனதையும், அதன் பிறகு இது வரையில் பெண் காணப்படாமலிருப்பதையும் மாத்திரம் சொல்லி, அந்த

ஜெவானுடைய அடையாளங்களையும் தெரிவிப்போம்; அந்த ஜெவான் இன்னான் என்பதை அவர் கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவும் பெண்ணின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கவும் வேண்டுமென்றுகேட்டுக்கொள்ளுவோம். அதற்கு அவர் என்ன பதில் சொல்லுகிறாரென்பதைத் தெரிந்துகொண்டு யுக்தம்போல நடந்துகொள்வோம்" என்றார். பூஞ்சோலையம்மாள் அப்படியே செய்யலாமென்று மறுமொழி கூறினாள். அரை நாழிகை காலத்தில் வண்டி செங்கான்கடைத் தெருவில் இருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரது மாளிகையின் வாசலில் போய் நின்றது. உடனே வக்கீல் கீழே இறங்கி, வாசற்குறட்டிலேறித் திண்ணையண்டை போக, அதன்மேல் படுத்திருந்த ஒரு போலீஸ் ஜெவான் திடுக்கிட்டெழுந்து நின்று, வந்திருப்பது யாரென்று உற்றுப் பார்த்து "யாரைத் தேடுகிறீர்கள்?" என்றான்.

உடனே வக்கீல், "போலீஸ் இன்ஸ்பெக்டர் ஐயாவைப்பார்க்க வேண்டும். உள்ளே இருக்கிறார்களா?" என்று வினவினார்.

உடனே அந்த ஜெவான், "இன்ஸ்பெக்டர் ஐயா வீட்டில் இல்லை" என்றான்.

வக்கீல் :—வீட்டுக்கு எப்போது வருவார்?

ஜெவான் :—அவர் எப்போது வருவாரென்பதை நான் நிச்சயமாய்ச் சொல்ல முடியாது.

வக்கீல் :—அவரை இப்போது நான் எங்கே பார்க்கலாம்?

ஜெவான் :—நீங்கள் நேராகக் காஞ்சீபுரத்துக்குப் போனால் அவரைப் பார்க்கலாம்.

வக்கீல் :—ஏது அவர் காஞ்சீபுரத்துக்குப் போனது?

ஜெவான் :—அந்த ஊரில்தான் அவருடைய சம்சாரத்தின் தாய் வீடு இருக்கிறது அங்கே அந்த அம்மாளுக்கு உடம்பு அசௌக்கியமென்று நேற்று மத்தியானம் செய்திவந்தது. அதற்காக அவர் நேற்று இரவில் புறப்பட்டுப்போனார். அவர் எத்தனை நாளைக்கு ரஜா எடுத்துக்கொண்டிருக்கிறாரோ, எப்போது வருவாரோ தெரியவில்லை.

வக்கீல் :—ஓகோ! அப்படியா சங்கதி! ஆனால் இப்போதுவீட்டில் அவர்களுடைய ஜனங்கள் யாருமில்லையோ ?

ஜெவான் :—யாருமில்லை, அதோ நடைக் கதவு சாத்தி வெளியில் பூட்டப்பட் டிருக்கிறதைப் பாருங்கள்.

வக்கீல் :—(சிறிது நேரம் யோசனை செய்து தயங்கி) சரி; அப்படியானால், என்ன செய்கிறது. அவர் வந்தபிறகுதான், நான் வந்து பார்க்கவேண்டும். ஏனப்பா, எனக்கு இன்னம் ஒரே ஒரு சங்கதி தெரியவேண்டும். பூக்கடை போலீஸ் ஸ்டேஷனில் வேலைசெய்யும் ஜெவான்களிலாவது, இங்கே இவரிடம் வேலைசெய்யும் ஆள்களிலாவது காதில் சிவப்புக் கடுக்கன், அம்மைப் புள்ளிகள் விழுந்த முகம் உள்ள மனிதன் எவனாவது இருக்கிறானா ?

ஜெவான் :—(சிறிது நேரம் யோசனை செய்து) இவரிடம் நாங்கள் ஆறுபேர் ஜெவான்கள் வேலை செய்கிறோம். நீங்கள் சொன்ன அடையாளங்கள் உள்ளவன் யாருமில்லை. பூக்கடை ஸ்டேஷனிலும் எனக்குத் தெரிந்த வரையில் அந்த மாதிரியான மனிதன் யாருமிருப்பதாகத் தோன்றவில்லை. ஆனால், அதை நான் நிச்சயமாய்ச் சொல்வது சரியல்ல. நீங்கள் அங்கே போய் விசாரித்துப் பாருங்கள்—என்றான்.

உடனே வக்கீல் அவ்விடத்தை விட்டு ரஸ்தாவிற்கு வந்து தாம் தெரிந்து கொண்ட தகவல்களைப் பூஞ்சோலையம்மாளிடம் தெரிவித்த வண்ணம் வண்டியில் ஏறிக்கொண்டு வண்டியைப் பூக்கடைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓட்டச் செய்தார். வண்டி புறப்பட்டு விசையாகச் சென்று, கால் நாழிகை காலத்தில் அந்த ஸ்டேஷன் வாசலில் போய் நின்றது. வக்கீல் மறுபடி கீழே இறங்கி ஸ்டேஷனுக்குள் நுழைந்து, அவ்விடத்தில் இருந்த ஒரு ஜெவானைப் பார்த்து “உள்ளே சப் இன்ஸ்பெக்டர் ஐயா இருக்கிறாரா ?” என்றார்.

ஜெவான் :—இல்லை ; என்ன விசேஷம் ?

வக்கீல் :—பெரிய இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளையைக் கண்டு அவருடன் ஒரு சங்கதியைப் பற்றிப் பேசவேண்டும், இன்ஸ்

பெக்டர் இப்போது எங்கே இருப்பார் என்ற விஷயத்தை இந்த ஸ்டேஷன் சப் இன்ஸ்பெக்டரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலா மென்று வந்தேன்.

ஜேவான்:—பெரிய இன்ஸ்பெக்டர் நேற்று இரவு இங்கே வந்து விட்டுப்போனார். அதன் பிறகு எங்கே போனுரென்பது தெரியாது. அவர் நினைத்த இடத்திற்குப் போவார்; இன்ன இடத்தில்தா னிருப்பாரென்று யாரும் திட்டமாய்ச் சொல்லமுடியாது. சப் இன்ஸ்பெக்டர் இருந்தால்கூட அவருக்கும் அந்தத் தகவல் தெரிய ஏதுவில்லை.

வக்கீல்:—தபால் திருட்டு சம்பந்தமாய் இங்கே சிறைவைக்கப் பட்டிருந்த முதலியார்ப் பையனிடம் பேசிவிட்டுப்போனவர் மறுபடி இங்கே வரவில்லையா?

ஜேவான்:—வரவில்லை.

வக்கீல்:—நேற்று அவர் இங்கே வந்தபோது அவர் மாத்திரமா வந்திருந்தார்? அல்லது, அவரோடு கூட யாராவது ஜெவான்கள் வந்திருந்தார்களோ?

ஜேவான்:—யாரோ ஜெவான்களும் வந்திருந்த மாதிரிதான் இருக்கிறது.

வக்கீல்:—அவர்களுள் அம்மைப் புள்ளிகள் விழுந்த முகத்தோடும், சிவப்புக்கல் கடுக்கன் போட்டுக்கொண்டும் யாராவது ஒரு ஜெவான் இருந்தானே?

ஜேவான்:—(சிறிது யோசித்து) ஆம், அவனுடைய பெயர் கோவிந்தசாமி. அவன் இன்ஸ்பெக்டருடன் கூடவே எப்போதும் இருந்து அவருக்கு ரைட்டர் வேலைசெய்யும் ஜெவான். அவனும் நேற்று வந்த மாதிரிதான் இருக்கிறது.

வக்கீல்:—அவனுடைய வீடு எங்கே இருக்கிறதென்பது உனக்குத் தெரியுமா?

ஜேவான்:—அவனுக்கு வீடுமில்லை. ஒன்றுமில்லை. அவன் சோற்றுக்கடையில் சாப்பிட்டுவிட்டு எப்போதும் இன்ஸ்பெக்டருடைய வீட்டிலேயே இருப்பான்,

வக்கீல்:—நாங்கள் பல ஸ்டேஷன்களிலும் போய் பெரிய இன்ஸ்பெக்டர் இருக்கிறாராவென்று விசாரித்தோம். அவர் எங்கும் இல்லையென்றே சொல்லிவிட்டார்கள். அவர் ஒருகால் எங்கேயாவது ஊருக்குப் போயிருக்கிறாரோ என்ற சந்தேகம். அவரோடு

எப்போதும் இருக்கும் ஜெவானாகிய கோவிந்தசாமியைக் கண்டால், அவர் எங்கே போயிருக்கிறாரென்பதைத் தெரிந்து கொள்ளலாமென்று நினைத்தேன்.

ஜெவான்:—பெரிய இன்ஸ்பெக்டர் வெளியூருக்குப் போயிருந்தால் அவனும் கூடவேதான் போயிருப்பான். அவன் கூட இல்லாவிட்டால், இவருக்கு ஒரு நிமிஷம் கூட எந்தக் காரியமும் ஆகாது —என்றான்.

வக்கீல், "ஓகோ! அப்படியா சங்கதி! இருக்கட்டும். நான் போய் வேறே எங்கேயாவது விசாரித்துப் பார்க்கிறேன்" என்று கூறிய வண்ணம் அவ்விடத்தை விட்டு வெளியில் வந்து அவ்விடத்தில் தாம் தெரிந்துகொண்ட தகவல்களையெல்லாம் பூஞ்சோலையம்மாளிடம் தெரிவித்தார்.

அதைக் கேட்ட பூஞ்சோலையம்மாள் மிகுந்த ஏக்கமும் கலக்கமும் கொண்டு சகிக்கவொண்ணாத கவலையைக்காட்டிய முகத்தோடு, 'நாம் இப்போது என்ன செய்கிறது?" என்றாள்.

வக்கீல், "இன்ஸ்பெக்டர் ஊருக்குப் போயிருப்பதாக, அவருடைய வீட்டுவாசலிலிருந்த ஜெவான் சொன்னது நிஜமாயிருக்குமென்று நான் நினைக்கவில்லை; தம்மை யாராவது தேடிக்கொண்டு, வந்தால், அவர்களைப் பார்க்கக்கூடாதென்று நினைத்து அவர் வீட்டுக்குள்ளே இருந்தாலும் இருக்கலாம். உங்களுக்குக் கடிதம் கொண்டு வந்து பெண்ணை அழைத்துவந்தவன் இன்ஸ்பெக்டருடைய ஜெவான் கோவிந்தசாமி என்ற முக்கியமான விஷயத்தை நாம்தெரிந்துகொண்டோம். இப்போது இரவு வேளை ஆய்விட்டது. நாம் எங்கேயும் போய்த் தேட முடியாது; வேறு எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவும் முடியாது. நீங்கள் உங்கள் ஜாகைக்குப் போய்ப் பொழுது விடிகிற வரையில் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்திருங்கள். நாளைய தினம் காலையில் நான் அங்கே வந்து சேருகிறேன். அதற்குள் அநேகமாய்ப் பெண் திரும்பி உங்களிடம் வந்துவிடலாம்.

வராவிடில் நாம் அதற்குமேல் யோசனைசெய்து மேல் நடவடிக்கை நடத்தலாம். என் வீடு இங்கே பக்கத்தில்தா னிருக்கிறது. நான் இப்படியே போகிறேன்" என்றார்.

அதைக் கேட்ட, பூஞ்சோலை யம்மாளுக்குத் தன் கண்களைக் கட்டி நடுகாட்டில் விட்டதுபோல இருந்தது. அந்த அம்மாளது மனம் ஒரே திகிலும், குழப்பமும், கவலையும், கலவரமுமே வடிவாய் நிறைந்து போய்விட்டது. கோகிலாம்பாளைக் காணாமல். தான் அந்த இரவை எப்படிக் கழிக்கிறது, அந்தப் பெருந்துயரத்தையும் வேதனையையும் எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்கிறது என்ற மலைப்பும் கவலையும் அப்போதே அபரிமிதமாய்ப் பெருகி வதைக்கலாயின. ஆயினும், அதற்குமேல் தான் செய்யக் கூடிய முயற்சி ஒன்றுமில்லையென்ற எண்ணமும், தான் அந்த வக்கீலை உபத்திரவிப்பது மரியாதையல்லவென்ற எண்ணமும், தோன்றின. ஆகவே, அந்த அம்மாள் அவருக்கு மறுபடியும் ஒரு பெருத்த பணத்தொகையை எடுத்து வழங்கி, மறுநாள் காலையில் அவர் அவசியம் தனது பங்களாவிற்கு வரவேண்டுமென்ற உறுதி மொழியைப் பெற்றுக்கொண்ட பின் அவரை அனுப்பிவிட்டு வண்டியில் உட்கார்ந்து கொண்டாள். கோகிலாம்பாள் மாயமாய் மறைக்கப்பட்டுப் போனதைக் குறித்துப் பூஞ்சோலையம்மாள், வேலைக்காரன் முதலியோர் விசனக் கடலிலாழ்ந்து உயிரற்ற சவங்கள் போலத் துவண்டு அப்படியப்படியே வண்டியில் ஏங்கிக் கிடந்ததற் கிணங்க, வண்டியின் குதிரையும், கோகிலாம்பாளைக் குறித்துத் துயருறுகின்றதோ என்று நினைக்குமாறு தளர்ந்து ஓய்ந்து தள்ளாடித் தூங்கி வழிந்துகொண்டு பங்களாவை நோக்கிப் போய்க்கொண் டிருந்தது.

* * * *

நாம் இந்த அதிகாரத்தை முடித்து அடுத்த அதிகாரத்தைத் தொடங்குமுன் இன்னொரு சிறிய வரலாற்றைக் கூறுவது அவசியமாதலால், அதையும் சுருக்கமாக விளக்குவோம். அன்றையதினம் காலையில் கோகிலாம்பாள் தங்களது பங்களாவிலிருந்து புறப்பட்டுப் போவதற்குச் சிறிது நேரத்திற்குமுன், புஷ்பாவதி யம்மாள் வெளியில் போய் கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தாருடன் பேசிக்கொண்டிருந்து அவரை அனுப்பிவிட்டு வந்தாளென்று சொன்னோமல்லவா. அந்த இளைய ஜெமீந்தார் கோகிலாம்பாளை முதலில் மணந்து அதன் பிறகு செளந்தரவல்லியையும் கலியாணம் செய்துகொண்டு, அவர்க

ளிருவரது அபாரமான சொத்துக்கள் யாவும் தமக்கே வந்து சேரும்படி செய்துகொள்ள வேண்டுமென்று கருதியிருந்தாரென்பது முன்னரே கூறப்பட்ட விஷயம். ஆகவே, முதல் நாளைய இரவில் கண்ணபிரானது அன்னை கற்பகவல்லியம்மாள் தற்கொலை செய்துகொள்ளும் கருத்துடன் அந்த பங்களாவை விட்டுப் போய் விட்டாளென்ற செய்தி அவருக்கு மிகுந்த களிப்பையும் நம்பிக்கையையும் உண்டாக்கியது. தான் கண்ணபிரானைத்தான் மணப்பேனென்று கோகிலாம்பாள் ஒரே உறுதியான எண்ணத்தோடு இருக்கிறாளென்று அவர் புஷ்பாவதியின் மூலமாய்க் கேள்வியுற்றாராலும், தாம் எவ்வாறாயினும் முயன்று அவளது பிரியத்தைத் தம் மீது திருப்ப வேண்டுமென்று நமது சுந்தரமூர்த்தி முதலியார் தீர்மானம் செய்துகொண்டார். கற்பகவல்லியம்மாள் பங்களாவை விட்டுப் போனது அவரது எண்ணத்திற்கு நிரம்பவும் அநுகூலமாகத் தோன்றியது. அவர் பல இடங்களிலும் போய்க் கற்பகவல்லியம்மாளைத் தேடிப்பார்த்துக் கண்டு பிடிப்பதாய்ப் போயிருக்கிறாரென்று புஷ்பாவதியம்மாள் பூஞ்சோலையம்மாளிடம் கூறினாளானாலும், அவர் அவ்வாறு செய்ய உத்தேசிக்கவில்லை. ஏதோ அவசர காரியமாய் நமது கோகிலாம்பாள் தங்கள் சொந்தக்காரரான ஒருவருடைய வீட்டிற்குப் போகிறாளென்பதைப் புஷ்பாவதி சொல்லக் கேட்டாராதலால், அவரது மனத்தில் அது விஷயமாய் எண்ணிறந்த யோசனைகளும் சந்தேகங்களும் தோன்ற வாரம்பித்தன. எப்போதும் வெளியில் தனிமையில் போயறியாத யௌவனச் சிறுமியான கோகிலாம்பாள் தனியாய்ப் போகிறாள் என்றால் அதில் ஏதோ விசேஷமிருக்க வேண்டுமென்று அவர் உடனே யூகித்துக் கொண்டார். அந்த விஷயம் இன்னது என்பதையும், அவள் இன்ன இடத்திற்குப் போகிறாள் என்பதையும், அங்கே இருப்பவர் யாவர் என்பதையும், அவர்களுக்கும் இவர்களுக்கும் என்னவிதமான உறவு முறைமை என்பதையும் தாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற தடுக்கவொண்ணாத ஆவல் அவரது மனத்தில் எழுந்து அவரை ஊக்கத்தொடங்கியது. ஆகவே, கோகிலாம்பாளுக்குத் தெரியாமல், தாம் தமது மோட்டார் வண்டியை அவளது பெட்டி வண்டிக்குப்பின்னால் சிறிது தூரத்தில் விடுத்துக்கொண்டே பின்தொடர்ந்து சென்று தமது சந்தேகங்களை நிவர்த்திசெய்துகொள்ள வேண்டுமென்று அவர் தீர்மானித்துக்கொண்டார். ஆயினும் தமக்கு உதவியாக இன்னொரு மனிதனையும் தம்முடன் கூட அழைத்

துக்கொண்டு போகவேண்டுமென்ற யோசனை தோன்றியது. ஆகவே, அவர் புஷ்பாவதியம்மாளை உள்ளே அனுப்பிவிட்டு, அந்த பங்களாவில் வேலைக்காரர்கள் குடி இருப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த கட்டிடங்களை நோக்கி நடந்து அங்கு ஒரு தனியான கட்டிடத்தில் இருந்த வண்டிக்கார மினியனைக் கண்டார். இந்தக் கதையின் தொடக்கத்தில், கடற்கரையில் விபத்து நேர்ந்த காலத்தில், கோகிலாம்பாள், சௌந்தரவல்லி ஆகிய இருவரும் ஏறிவந்த ஸாரட்டை ஓட்டிய வண்டிக்காரனது பெயர் மினியனென்பது நமது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அந்த விபத்தில் அவனது கால்கள் சுளுக்கிக்கொண்டதும், அவனுக்கு நமது சுந்தரமூர்த்தி முதலியார் பிராந்திப்புட்டி கொடுத்து, அவனிடம் சம்பாஷித்த விவரங்களும் முன்னரே கூறப்பட்டிருக்கின்றன. அதன் பிறகு மினியனது கால்கள் சரியான நிலைமைக்கு வரப் பலநாட்கள் ஆயின. சுந்தரமூர்த்தி முதலியார் அந்த பங்களாவிற்கு வந்தபோதெல்லாம் மினியனிருந்த இடத்திற்குப்போய் அவனைப் பார்த்து அவனுக்குப் பல மருந்துகளும் பிராந்தி புட்டிகளும் கொடுத்து அவனது மாறாத பிரியத்தையும் நன்றி விசுவாசத்தையும் அடைந்திருந்தார். அதுவுமன்றி, தனது எஜமானியம்மாளது இளைய குமாரியான சௌந்தரவல்லி யம்மாளை சுந்தரமூர்த்தி முதலியாருக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்ற செய்தியையும் அவன் எப்படியோ தெரிந்துகொண்டிருந்தானாதலால், அவரும் தனக்கு ஒரு வகையில் எஜமானர் என்ற எண்ணம் அப்போது முதலே அவனது மனத்தில் உண்டாகிவிட்டது. ஆகவே, அவன் அவரிடத்தில் அளவற்ற பய பக்தி விசுவாசம் வைத்து அவரை ஒரு தெய்வம்போலவே மதித்து அவர் காலாலிடும் வேலையைத் தலையால் செய்யத்தக்க நிலைமையில் இருந்தான்.

மேலே குறிக்கப்பட்ட தினத்தன்று காலையில் இளைய ஜெமீந்தார் தனது இருப்பிடத்திற்கு வந்ததைக் கண்ட மினியன் ஆநந்த பரவசமடைந்து துள்ளியெழுந்து, "சாமீ! வாங்க சாமீ! தாசனுங்க நமஸ்காரமுங்க" என்று கூறி மிகுந்த பணிவும் வணக்கமும்தோற்றுவித்து அவருக்கு ஒரு கும்பிடு போட்டான்.

உடனே இளைய ஜெமீந்தார், "மினியா! ஏதாவது அலுவலாயிருக்கிறாயா? அரைமணி நேரம் நீ என்னோடுகூட வரமுடியுமா?" என்றார்.

மினியன், "வாறேனுங்க எசமான். நான் சொம்மாத்தான் குந்திக்கினு இருந்தேனுங்க. இப்பவே வரணுமா?" என்று நிரம்பவும் துடியாக மறுமொழி கூறினன். உடனே இளைய ஜெமீந்தார், "இப்பொழுதேதான் போகவேண்டும். உள்ளே போய் உன்னுடைய காசாரி உடுப்புகளைப் போட்டுக்கொண்டு சீக்கிரம் வா என்றார். அவன் மிகுந்த ஊக்கமும் உற்சாகமும் கொண்டு விசையாகஉள்ளே சென்று தனது உடுப்புகளை அணிந்துகொண்டு ஐந்து நிமிஷத்தில் வந்து சேர்ந்தான். சுந்தரமூர்த்தி முதலியார் அவனைத் தம்மோடு கூட அழைத்துக்கொண்டு போய்த் தமது மோட்டார் வண்டி இருந்த இடத்தை யடைந்து, "மினியா! நீ வண்டியில் ஏறி உள் பக்கத்தில் உட்கார்ந்து கொள்" என்றார். அவன் சிறிது தயங்கி, "எசமான் ஒக்கார்ற எடத்துலெயா?" என்றான். உடனே சுந்தரமூர்த்தி முதலியார், "இல்லையடா கீழே கால்களை வைக்கும் இடத்தில் உட்கார்ந்துகொள். நீ வண்டிக்குள் உட்கார்ந்திருப்பது வெளியில் தெரியக்கூடாது. அதற்கும் அநுகூலமாக நீ கீழேயே உட்கார்ந்துகொள்" என்றார். மினியன் அப்படியே உட்கார்ந்துகொள்ள, இளைய ஜெமீந்தார் வண்டியின் கதவைத் தாளிட்டுவிட்டு முன் பக்கத்தில் ஏறி உட்கார்ந்து வண்டியைஓட்டிக்கொண்டு பங்களாவிற்கு வெளியில் சென்று, அதை யடுத்தாற்போல இருந்த ரஸ்தாவில் வண்டியை மெதுவாக விடுத்துக்கொண்டு சிறிது தூரம் போவதும் பிறகு திரும்பி வருவதுமாய் இருக்க, அரை நாழிகை காலம் கழிந்தது. கோகிலாம்பாள், கோவிந்தசாமி, முருகேசன் ஆகிய மூவரும் இருந்த பெட்டி வண்டி பங்களாவை விட்டு வெளிப்பட்டு, அவர்கள் இருந்ததற்கு எதிர்ப் பக்கத்தில் அதே ரஸ்தாவில் செல்ல வாரம்பித்தது. அந்தப் பெட்டி வண்டியை அரை பர்லாங்கு தூரம் முன்னல் போகவிட்டு நமது சுந்தரமூர்த்தி முதலியார் அதைத் தொடர்ந்து தமது மோட்டாரை மெதுவாக விடுத்துக் கொண்டே செல்லலானார். கோகிலாம்பாள் பெட்டி வண்டியின் உட்பக்கத்தில் இருந்தமையால், பின்புறத்தில் சுந்தரமூர்த்தி முதலியார் மோட்டார் வண்டியில் வந்துகொண்டிருக்கிறாரென்பதை அவள் சிறிதும் நினைக்கவே இல்லை. கோவிந்தசாமியும், முருகேசனும் வண்டியின் முன் பக்கத்திலிருந்து ஓட்டிக்கொண்டு போயினராதலால், அவர்கள் பின் புறத்தில் யார் வந்தார்க ளென்பதைப் பார்க்கவே இல்லை. அவர்கள் பார்த்திருந்தாலும், நமது சுந்தரமூர்த்தி முதலியாருடைய அடையாளம் அவர்களுக்குத் தெரிந்திருக்

காது. அந்த நிலைமையில் வண்டிகள் முன்னும் பின்னுமாய் ஆனை கவுனியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தன. இளைய ஜெமீந்தார் என்ன கருத்தோடு தன்னை மோட்டார் வண்டியில் உட்கார வைத்துக்கொண்டு போகிறார் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் மினியனது மனத்தில் பிரமாதமாக எழுந்து வதைத்ததானாலும், அவன் அவரிடம் அதைப்பற்றிக் கேட்காமல் தன் மனத்தை அடக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். சுந்தரமூர்த்தி முதலியார் பெட்டி வண்டியைப் பின்பற்றித் தமது வண்டியை விடுத்த வண்ணம் மினியனோடு சம்பாஷிக்கத் தொடங்கி, "என்ன மினியா?" என்றார். அவன், "என்னுங்க சாமீ" என்றான்.

சுந்தரமூர்த்தி முதலியார் :—கலியாண சங்கதியெல்லாம் உன் காதில் விழுந்ததா?

மினியன் :—(மிகுந்த கலக்கமும் விசனமும் தளர்ச்சியுமடைந்து) எல்லாச் சங்கதியும் காதுலே உளுந்துச்சிங்க. என்னமோ பொல்லாத வேளையிங்க. மூத்த கொயந்தே நல்ல தங்கமான மனசுள்ளதுங்க. அதுக்கு வந்து வாச்சவரும் அதுக்குமேலே நூறு பங்கு நல்லவருன்னு சொல்லிக்கறாங்க. ஆனா அவுங்க கொஞ்சம் ஏளெப்பட்டவங்க; இருந்தாலும் பரவாயில்லீங்க. அப்படிப்பட்ட மனிசருக்கு என்னென்னவோ இல்லாத பொல்லாத தொந்தரவெல்லாம் வந்திருக்குதுங்க.

சு. முதலியார் :—அவர் பார்வைக்கு நல்ல குணம் உடையவராகத்தான் இருக்கிறார். ஆனால், போலீசாரிடம் விசாரித்ததில், அவர் உண்மையில் அந்தத் திருட்டில் சேர்ந்தவரென்றும், அவர் இரண்டு வருஷ காலத்திற்காவது தண்டனை யடைவாரென்றும் சொல்லுகிறார்கள். அவர் சுத்த ஏழையாம்; வெகு சீக்கிரத்தில் சுலபமான வழியில் பணக்காரர் ஆகி, பெண் வீட்டாருக்குச் சமமானவர்கள் ஆகிவிட வேண்டுமென்ற எண்ணத்தினால் அவர் அப்படிச் செய்ததாகவும் சொல்லுகிறார்கள். அதுவுமன்றி; நேற்று ஒரு சாயப்பு வந்து சொன்ன சங்கதிகளைக் கேட்டாயா?

மினியன் :—ஐயோ! அது சுத்த அசிங்கமுங்க. அது நெசமாயிருக்குமா எசமானே!

சு. முதலியார் :—என்னவோ, அப்பா! இதையெல்லாம் நாம் எப்படி நிச்சயிக்கிறது. அதைக் கேட்டவர்கள் எல்லோரும் அப்படியும் உலகத்தில் நடக்குமா என்றுதான் ஒருவரைப்போல எல்லோரும் ஆச்சரியப் பட்டார்கள். விஷயம் நிஜமோ பொய்யோ. அத்தனை ஜனங்களுக்குமுன் இம்மாதிரியான அவமானம் ஏற்பட்ட பிறகு, அந்த மனிதர்களுடைய சம்பந்தத்தை இவர்கள் நாடினால், அதைப் பற்றி ஜனங்கள் எப்போதும் தூஷித்துக்கொண்டே தானிருப்பார்கள்.

மினியன் :—ஆமாங்க சாமி! ஒலேவாயெ அடக்கினாலும் அடக்கலாம்; ஊருவாயெ அடக்க முடியாதல்ல. இன்னமே இவங்க அந்தப் பொண்ணே அந்த எடத்துலே கட்டிக் குடுக்கறது நல்லதில்லீங்க.

சு. முதலியார் :—நீ அப்படிச் சொல்லுகிறாய். அந்தப் பெண்ணும் அதன் தாயாரும் இன்னமும் ஒரே பிடிவாதமாக இருக்கிறார்கள். அந்தக் கண்ணபிரான் முதலியார் தண்டனை யடைந்தாலும், அவர் வந்த பிற்பாடுகூட அவரைத்தான் அந்தப் பெண் கட்டிக் கொள்ளப் போகிறதாம்.

மினியன் :—அப்பிடியானால், எஜமானுக்கும் சின்னக் கொயந்தெக்கும் கண்ணாளம் எப்ப நடக்குமுங்க?

சு. முதலியார் :—அதில் ஓர் இடைஞ்சல் இருக்கிறது. ஆதியிலிருந்தே எனக்குப் பெரிய பெண்ணின்மேல்தான் ஆசை. அதைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்றுதான் நாங்கள் முதலில் கேட்டோம். அதற்கு முன்னாகவே, இவர்கள் அதைக் கண்ணபிரான் முதலியாருக்குக் கட்டிக்கொடுக்க முடிவு செய்து விட்டதாகவும், சின்னப் பெண்ணை எனக்குக் கட்டிக் கொடுப்பதாகவும் சொன்னார்கள். அதற்கு நாங்கள் இரண்டாம் பட்சமாக இணங்கினோம். இப்போது நிலைமை மாறிப்போய் விட்டது. மூத்தபெண் அந்தக் கண்ணபிரான் முதலியாரைக் கட்டிக்கொண்டால், ஊர் ஜனங்கள் இவர்களை ஜாதியிலிருந்து விலக்கி விடுவார்கள். நாங்கள் சின்னப் பெண்ணைக் கட்டிக்கொண்டால், எங்களுடைய கதியும் அதே மாதிரிதான் முடியும். ஆகையால், இவர்களுக்கு எங்களுடைய சம்பந்தம் வேண்டுமானால், இவர்கள் இனி அந்தக் கண்ணபிரான்

முதலியாரை மறந்துவிடவேண்டும். அந்த மூத்த பெண்ணுக்கு வேறே புதிய மனிதன் ஒருவனைத் தேடிப் பிடிப்பதைவிட்டு, அதன் மேல் ஆசை வைத்துள்ளவனை எனக்கே அதைக் கட்டிக்கொடுத்து சின்னக் குழந்தையை வேறே யாருக்காவது கட்டிக்கொடுங்களென்று நாங்கள் சொன்னோம். இவர்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லை.

மினியன்:—அது தப்புத்தானுங்க. எசமான் கேக்கறபடியே இவுங்க அந்த மூத்த கொயந்தெயெ எசமானுக்கே கட்டிக்குடுக்கலாமுங்க. இன்னொரு தரம் கேட்டுப் பாருங்களேன் சாமீ!

சு. முதலியார்:—நாங்கள் ஆயிரம் தடவை சொல்லிப்பார்த்து விட்டோம். அந்த மூத்த பெண் கண்ணபிரான் முதலியார் பேரிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிறது. வக்கீல் வைத்து வாதாடச் செய்து அவரைத் தப்பவைத்து அழைத்து வந்து அவரையே கட்டிக்கொள்ள வேண்டுமென்று அந்தப்பெண் ஒரே பிடிவாதமாகப் பேசுகிறது. மூத்த பெண் தானேபோய் வக்கீல் வைக்கவோ, அல்லது, யாராவது தங்கள் சொந்தக்காரரைக் கொண்டு வக்கீல் வைக்கச் செய்யவோ, எண்ணி இதோ நமக்கு முன்னால் ஒரு பெட்டி வண்டியில் தனியாய்ப் போகிறது பார்.

மினியன்:—(நிமிர்ந்து முன்னால் பார்த்து) ஆமா சாமீ! நம்ப முருகேஸனல்ல வண்டி ஓட்டறான். உள்ளற பொண்ணுமாத்திரமா இருக்குதுங்க?

சு. முதலியார்:—ஆம்; பெண் மாத்திரந்தான் இருக்கிறது. பெண் எங்கே போகிறதென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றுதான் நான் உன்னை அழைத்துக்கொண்டு வந்தேன். வேறே காரியம் ஒன்றுமில்லை. பெண் ஒருவேளை இவர்களுடைய சொந்தக்காரர் யாரிடமாவது போனால், அந்த வீட்டு அடையாளத்திலிருந்து அவர்கள் இன்னார் என்பதை நீ சொல்லக்கூடுமென்று நினைத்தும் உன்னை அழைத்துக்கொண்டு வந்தேன்.

மினியன்:—என்ன அதிசயம் சாமி இது! இது காலம் தனியாவங்களாவெ உட்டு வெளியே வந்தறியாத கொயந்தே இன்னக்கித் துணிஞ்சி போவுது பாருங்க சாமீ!—என்றான் அவ்வளவோடு அவர்கள் தங்களது சம்பாஷணையை நிறுத்திக்கொள்ள நேர்ந்தது. அதுவு

மன்றி, இளைய ஜெமீந்தார் அவ்விடத்தில் தமது மோட்டார் வண்டியையும் நிறுத்திவிட்டு முன் பக்கத்தில் தமது கவனத்தைச் செலுத்தினர். அவ்விடத்தில்தான் கோகிலாம்பாளது பெட்டிவண்டி ரஸ்தாவின் தப்பான பக்கத்தில் விடப்பட்டதென்று போலீஸ் சேவகன் வண்டியை நிறுத்தும்படி செய்தான். அந்த ஜெவானுக்கும் வண்டியிலிருந்த கோவிந்தசாமிக்கும் நடந்த சம்பாஷணை சுந்தரமூர்த்தி முதலியாரின் செவிக்கு எட்டவில்லை. ஆயினும், வண்டிக்கார முருகேசனை அந்த ஜெவான் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போனதையும் வண்டியில் இருந்த இன்னொரு மனிதன் அதை ஓட்டிக்கொண்டு மேலே சென்றதையும் உணர்ந்தஇளைய ஜெமீந்தார் பெட்டி வண்டியைத் தொடர்ந்தே தமது மோட்டார் வண்டியை விடுத்துக்கொண்டு செல்லலானர்.

கோகிலாம்பாளது வண்டி தங்கசாலைத் தெருவைக் கடந்து அதற்கு அப்பால் சென்று பக்கத்தில் இருந்த கெங்கான்கடை வீதியை யடைந்து போலீஸ் இன்ஸ்பெக்டரது மாளிகையின் வாசலில்போய் நின்றது. உடனே கோவிந்தசாமியும் நமது பெண்ணரசியும் வண்டியை விட்டுக் கீழே இறங்கி உள்ளே சென்றார்கள். கோவிந்தசாமியின் கையில் ஒரு மூட்டையிருந்தது. அந்த மாளிகையின் வாசலில் இரண்டு போலீஸ் ஜெவான்கள் நின்றனர். மூன்றுவது வீட்டின் வாசலில் தமதுமோட்டார் வண்டியைக் கொணர்ந்து நிறுத்திய சுந்தரமூர்த்தி முதலியார் இன்ஸ்பெக்டரது மாளிகையின் வாசலில் நின்ற பாராக்காரர்கள் தம்மீது சந்தேகம் கொள்ளுவார்களென்று எண்ணி, அவர்களைஉற்றுப்பார்க்காமல் கீழேஇறங்கி பக்கத்திலிருந்த வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்திருந்த சில மனிதரண்டை போய் நயமாகப் பேச்சுக் கொடுத்து, பக்கத்திலிருந்த பெருத்த மாளிகை போலீஸ் இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளையினுடைய மாளிகையென்றும், அவருடைய மனைவி குழந்தைகள் முதலியோர் எவரும் அப்பொழுது வீட்டில் இல்லையென்றும், அவர் மாத்திரம் தனியாயிருந்து வருகிறாரென்றும், அவர் பொல்லாத துஷ்டரென்றும், விபசார நாட்டமுள்ளவரென்றும் தெரிந்துகொண்டு, அவ்விடத்தைவிட்டு நடந்துவந்து தமது மோட்டார் வண்டியையடைந்து கீழே பார்ப்பதுபோலே, போலீஸ் இன்ஸ்பெக்டரது மாளிகை வாசலைப் பார்த்தார். கோகிலாம்பாளுடன்மூட்டையை எடுத்துச்சென்ற மனிதன் மறுபடி திரும்பிவந்து, கோகிலாம்பாளது பெட்டிவண்டி

யண்டை நெருங்கி, குதிரையைப் பிடித்து நடத்தி ஒதுப்புரமான ஓரிடத்திற்கு வண்டியைக் கொண்டுபோய்க் குதிரையை வண்டியினின்றும் விலக்கி விட்டு சிறிது தூரத்திற்கப்பால் கொண்டுபோய்க் கட்டி அதற்குப் புல் போட்டபின் மறுபடியும் மாளிகைக்குப்போய் விட்டான்

அதை கவனித்துக் கொண்டிருந்தவரான சுந்தரமூர்த்தி முதலியாரது மனத்தில் விபரீதமான பல எண்ணங்களும் சந்தேகங்களும் தோன்றின. அவரது மனம் பொங்கி எழுந்து துடிக்க தேகம்கட்டிலடங்காமல் பறந்தது. போலீஸ் இன்ஸ்பெக்டர் மகாதந்திரமான சூழ்ச்சிவலை விரித்து, அதற்குள் நமது மடமானை வீழ்த்தியிருக்கிருரென்று சுந்தரமூர்த்தி முதலியார் சிறிதும் சந்தேகிக்கவே ஏதுவில்லையாதலால், கோகிலாம்பாளது கற்பின் உறுதியைப்பற்றி அவர் உடனே சம்சயம் கொள்ளலானுர். அவள் தன்னுல் காதலிக்கப்படுபவனுன கண்ணபிரானை விடுவிக்கவேண்டுமென்று இன்ஸ்பெக்டரிடம் கேட்டுக்கொள்வதற்காக வந்திருக்கிருளென்றும், சொந்தக்காரர் ஏதோ அவசர நிமித்தம் கடிதமெழுதி யிருக்கிருர்களென்று அவர்கள் புஷ்பாவதியிடம் கூறியது பொய்யான தகவல் என்றும், இன்ஸ்பெக்டர் கோகிலாம்பாளைக் கண்டு மோகித்து, ஓர் ஆளை அனுப்பி ஏதோ தந்திரம் செய்திருக்க வேண்டுமென்றும், தாம் இன்ஸ்பெக்டரது பிரியப்படி நடந்து அவரது தயவைச் சம்பாதித்து அவர்மூலமாய்க் கண்ணபிரானை விடுவித்துக் கொள்ள அவர்கள் உத்தேசிக்கிருர்கள் என்றும், அவர்கள் கொணர்ந்த மூட்டையில் அநேகமாய் பக்ஷண பலகாரங்களே இருக்கவேண்டுமென்றும், அந்த ஆள் குதிரையை வண்டியிலிருந்து அவிழ்த்து அதற்குப் புல் போட்டதிலிருந்து, கோகிலாம்பாள் வெகு நேரம் வரையில் உள்ளே இருந்துவிட்டு வெளியில் வரப்போகிருளென்றும், பரஸ்திரீ நாட்டமுடையவரான இன்ஸ்பெக்டர் தனியாக இருக்கும் இடத்தில் கோகிலாம்பாள் வெகு நேரம் இருக்க உத்தேசிப்பதைக் கொண்டு, அவள் அவருடையபிரியப்படி நடந்துகொள்ள சம்மதித்தே வந்திருக்கிருளென்றும் சுந்தரமூர்த்தி முதலியார் தீர்மானித்துக்கொண்டார். உடனே அவரது தேகம் பதறியது; கைகால்களெல்லாம் துடிதுடித்தன. அந்த நிமிஷத்தில் கோகிலாம்பாளும், இன்ஸ்பெக்டரும் என்ன நிலைமையி லிருக்கிருர்களோ என்பதை அவர் தமது மனத்தால் நினைக்க நினைக்க, கட்டிலடங்காத

மூர்க்கமான ஆவேசமும், ஆத்திரமும் எழுந்து அவரைத் தூண்ட வாரம்பித்தன. அவரது இரத்தம் பொங்கிக் கொதித்துக் கொந்தளிக்க வாரம்பித்தது. மூளை கலங்கியது. அறிவு தடுமாறியது. தேகம் கட்டிலடங்காமல் முறுக்கிக் கொள்ளுகிறது. ஒரே உதையில் அந்த மாளிகையைத் தூளாக்கி, இன்ஸ்பெக்டரையும் கோகிலாம்பாளையும் சக்கை சக்கையாய்க் கிழித்தெறிந்து விடவேண்டுமென்ற சகிக்கவொண்ணாத பெருத்த ஆவேசம் தோன்றி அவரைத் தூண்டியது. அந்த நிலைமையில் தாம் என்ன செய்வதென்பதைப் பற்றி அவர் சிறிதுநேரம் சிந்தனை செய்து பார்த்தார். உடனே இன்ஸ்பெக்டரது மாளிகைக்குள் நுழைந்து அவர்களைப் பார்த்து விடவேண்டுமென்ற துடிதுடிப்பு அவரது மனத்தில் தோன்றியதானாலும், வெளியில் பாராக்காரர்கள் தம்மைப் பிடித்துக் கைது செய்துவிடுவார்கள் என்ற எண்ணம் அதைத் தடுத்தது. தாம் உடனே போய் மேல் அதிகாரிகளிடம் அதைப்பற்றிப் பிராது செய்து, அவர்களை அழைத்து வரலாமாஎன்ற யோசனை தோன்றிய தானாலும், பெண்ணும் அதன் அன்னையும் சம்மதித்து அதற்கு இணங்கி இருக்கையில், தாம் பிராது கொடுப்பது செல்லாதென்ற நினைவும் தோன்றியது. ஆகையால், எந்த வழியிலும், தாம் அப்போது எவ்வித முயற்சியும் செய்வது பயனற்றதென்ற எண்ணம் உண்டாயிற்று. ஆகவே, அவர் பத்துநிமிஷ காலம்வரையில் சிந்தனை செய்து தமது ஆவேசத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு, வண்டிக்குள்ளிருந்த மினியனை அழைத்து, நிகழ்ந்திருக்கும் விஷயங்கள் யாவற்றையும், தாம் அவ்விடத்தில் கேட்டுத் தெரிந்துகொண்ட தகவல்களையும் அவனிடம் சவிஸ்தாரமாகக் கூறினார். அதைக் கேட்ட மினியனும் அவரைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாய்ப் பதறித் துடித்து, "சாமீ! ஒங்க சொல்லே இந்த நாய் மறுத்துப் பேசினதாக எண்ணப்படாது. என்னதான் இருந்தாலும், அந்தக் கொயந்தே அப்பிடிப்பட்ட கெட்ட நடவடிக்கெயிலே எறங்கற கொயந்தெயே இல்லீங்க; நான் நம்பிக்கையாகச் சொல்லுவேனுங்க; நாம்ப கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம். என்னதான் செய்யுறாங்கன்னு கவனிக்கலாம்" என்றான்.

அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி முதலியார் ஆழ்ந்து யோசனை செய்து ஒருவித முடிவிற்கு வந்தவராய் "அப்பா மினியா! என்னதான் இருந்தாலும் இந்தப் பெண் தனியாக இந்த இடத்திற்கு வந்

ததே தவறு. இருந்தாலும் பரவாயில்லை. நான் உண்மையை வெகு சுலபத்தில் கண்டுபிடித்து விடுகிறேன். இதன் உண்மையைத் தெரிந்து கொண்டுதான், நான் இவளுடைய தங்கையைக் கட்டிக் கொள்ளும் விஷயத்தை ஊர்ஜிதப்படுத்தவேண்டும். இந்த விஷயத்தில் நீ எனக்கு ஓர் உதவி செய்யவேண்டும். செய்கிறாயா;" என்றார்.

மினியன், "எசமானே! நீங்க என்ன செய்யச் சொன்னாலும் அப்படியே செய்யக் காத்திருக்கேன்;, சொல்லுங்க சாமீ!" என்றான்.

உடனே சுந்தரமூர்த்தி முதலியார் அவனைப் பார்த்து. "நான் மோட்டாரைத் திருப்பிக் கொஞ்சதூரத்திற்கப்பால் கொண்டு போய் உன்னைக் கீழே இறக்கிவிடுகிறேன்; நீ உடனே இந்த இன்ஸ்பெக்டருடைய மாளிகையின் வாசலை யடைந்து, உங்களுடைய பெட்டி வண்டியண்டை போய் உட்கார்ந்துகொள். இவர்கள் வந்த போது, முருகேசனை ஏதோ காரணத்தினால் போலீஸ்காரன் பிடித்துக் கொண்டு போனானல்லவா. அப்போது நீ ஏதோ ஒரு காரியமாய் தூரத்தில் வந்ததாகவும், அதைப் பார்த்து, வண்டியை ஓட்டுவதற்கு யாரும் இல்லையே என்று கவலைப்பட்டு, பெட்டிவண்டியைத் தொடர்ந்து வந்ததாகவும், நீயும் அவர்களுடைய வண்டிக்காரன் என்றும், இந்த அம்மாள் வருகிற வரையில் இருந்து வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோவதற்காகக் காத்திருப்பதாகவும்ஜெவான்களிடம் சொல்; அவர்கள் அதை நம்பி சும்மா இருந்துவிடுவார்கள். வண்டியும் குதிரையும் இருப்பதைப் பார்த்தால், எப்படியும் கோகிலாம்பாள், அந்திப் பொழுதுக்குள் வெளியில் வந்து வீட்டுக்குப் போவாள். எவ்வளவு நேரமானாலும், ஆகட்டுமென்று, நீ இவ்விடத்திலேயே இரு. தெரிகிறதா?" என்றார்.

மினியன், "இத்தானு ஒரு பெரமாதமுங்க. அப்பிடியே செய்யறேனுங்கே" என்று துடியாக மறுமொழி கூறினான்.

சுந்தரமூர்த்தி முதலியார், "இதுமட்டுமல்ல. நீ இன்னொரு காரியமும் செய்ய வேண்டும். கோகிலாம்பாள் வெளியில் வந்து உன்னைக் கண்டால். அநேகமாய் உன்னை மாத்திரம் வண்டியையோட்ட அழைத்துக்கொண்டு, வேறே யாரையும் அழைத்துக்கொள்ளாமல்

வீட்டுக்குப் போவாளென்பது நிச்சயம். நீ வண்டியை யோட்டும் போது ஒரு காரியம் செய். அவர்களுக்குத் தெரிந்த மனிதர்கள் யாராவது பார்த்தால் வித்தியாசமாக நினைத்துக்கொள்வார்களென்றும், ஆகையால், வண்டியின் ஜன்னல்களை நன்றாக மூடிவிடும்படியும் சொல். அவள் அப்படியே செய்வாள். நீ வண்டியைப் பல தெருக்களின் வழியாகவும் ஓட்டி கடற்கரை யோரமாக மயிலாப்பூருக்குப் போகும் பெரிய ரஸ்தாவோடு வந்து கோட்டைக்கு அப்பாலுள்ள மரத்தோப்பை யடைந்து, அவ்விடத்தில் வண்டியை நிறுத்திவிட்டு ஒன்றுக்குப் போய் வருவதாகச் சொல்லிவிட்டு, பக்கத்திலுள்ள பாலத்தடியில் போய் உட்கார்ந்துகொள். ஒருவேளை நடுவழியில், கோகிலாம்பாள் உன்னைக் கூப்பிட்டு, "எங்கே வேறொரு பாதை வழியாகப் போகிறாயே" என்று கேட்பாளேயானால், நேராகப் புரசைப்பாக்கம் போகும் பாதையை அடைத்து செப்பனிடுகிறார்களென்றும், அதனால் வேறு தெருக்களின் வழியாய்ச் சுற்றிக்கொண்டு போவதாகவும் சொல்லிவிடு. தெரிகிறதா?" என்றார்.

மினியன் (சிறிது தயங்கி) "அப்பிடியே செய்யறேனுங்க. எசமான் அங்கனெ என்னாச்சும் அம்மாளுக்குத் தொந்தரவு பண்ணப் போறீங்களோ என்னமோ" என்றான்.

இளைய ஜெமீந்தார், "அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் தற்செயலாக வருகிறதுபோல, எதிர்த்திக்கிலிருந்து அங்கே வந்து அம்மாளிடம் பேசி, நிஜத்தைத் தந்திரமாக விசாரிக்கிறேன். அது தனியான இடம்; இங்கே ஜனநடமாட்டம் அதிகம். ஆகையால், அங்கே விசாரிப்பதுதான் நல்லது" என்றார்.

மினியன், "சரி; அதிருக்கட்டுங்க. அந்த ரஸ்தா மைலாப்பூருக்குப் போற ரஸ்தாங்கறது பின்னாலே தெரிஞ்சு பூட்டுதானா, அம்மாமாரு எம்மேலே கோவிச்சுக்குவாங்க; என்னை வேலெயிலே இருந்து நீக்கினாலும் நீக்கிடுவாங்களே சாமி!" என்றான்.

சுந்தரமூர்த்தி முதலியார், "அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது. அவர்கள் உன்னைத் தள்ளினால், அவர்கள் கொடுப்பதைவிட இரட்டிப்புச் சம்பளம் கொடுத்து உன்னை நான் வைத்துக்கொள்கிறேன். நீ பயப்படாதே!" என்றார்.

அதைக் கேட்ட மினியன் சந்தோஷமடைந்து, அவருடைய விருப்பத்தின்படி செய்வதாக ஒப்புக்கொண்டான். உடனே அவர் தமது மோட்டார்வண்டியை ஓட்டிக்கொண்டு பக்கத்திலிருந்த தெருவில் திரும்பி அவ்விடத்தில் மினியனை இறக்கிவிட, அவன் மறுபடி திரும்பி நடந்து இன்ஸ்பெக்டரது மாளிகையின் வாசலையடைந்தான். சுந்தரமூர்த்தி முதலியார் முடக்கில் ஒளிந்து நின்று, அவன் பெட்டிவண்டியண்டை போய் உட்கார்ந்து கொள்ளுகிறானென்று பார்த்து நிச்சயப்படுத்திக்கொண்டு உடனே தமது மோட்டார் வண்டியை விசையாக ஓட்டிக்கொண்டு போய்விட்டார். கோட்டைக்குப் பக்கத்திலிருக்கும் தோப்பில் அவர் நிறைவேற்ற உத்தேசித்த காரியத்தை மினியனிடம் அவர் உள்ளபடி தெரிவிக்காமல் தமது மனத்திற்குள்ளாகவே மறைத்து வைத்திருந்தாரென்பதை நாம் இவ்விடத்தில் குறிப்பிடுவது அத்தியாவசியமான விஷயம். அந்தச் சூழ்ச்சியை நிறைவேற்றுவதற்கு அவர் அவசரமாய்ப் பல இடங்களுக்குப்போக வேண்டி யிருந்ததாதலால், வண்டியை நிரம்பவும் துரிதமாக ஓட்டிக்கொண்டு போய்விட்டார்.

---

## 9-வது அதிகாரம்

### திவான் சாகேப், காந்திமதி யம்மாள், ராஜா பகதூர்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளையின் சயன மாளிகைக்குள் போய் அகப்பட்டுக்கொண்ட நமது உத்தம குண மங்கையான கோகிலாம்பாள் அவ்விடத்திலிருந்து தப்பி வெளியில் வந்தாளா, அங்ஙனமாயின், தனது கற்பிற்குச்சிறிதும் இழுக்கின்றி அந்தக் காமாதுரனிடத்திலிருந்து வர இயன்றதா என்ற வரலாற்றை அறிந்துகொள்ளுவதற்கு முன் நாம் அவசரமாக நமது சென்னைமா நகரத்தை விட்டுப் புறப்பட்டு மேற்குக் கடற்கரையையடுத்துள்ள மலையாள தேசத்திற்குப் போய், அவ்விடத்தி லிருந்தவர்களும், நமது கதையில் நெருங்கிய சம்பந்தமுடையவர்களுமான சில மனிதர்களைப் பார்த்துவிட்டு வருவது முக்கிய காரியமாதலால், அதைநாம் உடனே கவனிப்போம். திருவாங்கூர் என்பது மலையாள தேசத்திலுள்ள ஒரு பெரிய சமஸ்தான மென்பதும், சேரள வம்சத்தைச் சேர்ந்த சுதேச அரசர் அந்த சமஸ்தானத்தை இப்போதும் ஆண்டுவருகிறா ரென்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயங்கள்.

நமது இங்கிலீஷ் அரசருக்குப் பதிலாக அவரிடம் சர்வ அதிகாரமும் பெற்ற கவர்னர் ஜெனரல் என்பவர் இராஜப் பிரதிநிதியாக இருந்து எப்படி நமது இந்தியாவை ஆளுகின்றாரோ, அதுபோலவே திருவாங்கூர் சமஸ்தானத்திலும் திவான் என்ற பெயருடன் ஓர் இராஜப்பிரதிநிதி இருந்து, அதன் நிர்வாகம் முழுதையும் நடத்துவது வழக்கமாக இருந்துவருகிறது. அநேகமாய் அரசருடைய அதிகாரம் முழுதையும் திவானே செலுத்தி வந்தார். அவருக்கு மாதச் சம்பளமும் பல்லாயிரக்கணக்கில் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த சமஸ்தானத்திலுள்ள பிரஜைகளை ஆக்கவும் அழிக்கவும் அவருக்கு சர்வ அதிகாரமும் இருந்ததென்று சொல்வது மிகையாகாது. அத்தகைய மகோன்னத பதவியான திவான் உத்தியோகத்தை, நமது கதை நிகழ்ந்த காலத்திற்குமுன், ஒரு முதலியார் வகித்திருந்தார். அடியில் விவரிக்கப்படும் சம்பவங்கள் நிகழ்ந்தகாலத்தில் அவருக்கு வயது முப்பத்தைந்து நடந்தது. அவர் அழகான தேகமும், சிவந்த மேனியும், வசீகரமான முகத்தோற்றமும், அத்யாச்சரியகரமான குண அமைப்பும் வாய்ந்தவர். ஓயாமலும், சலியாமலும் உழைக்கும் சுபாவம், மகா கூர்மையான புத்தி, எத்தகைய பெரிய காரியத்தையும் அபூர்வமான திறமையோடு செய்து முடிக்கும் அற்புத சாமார்த்தியம் முதலிய சிறப்புகள் அவரிடம் சம்பூர்ணமாக அமைந்திருந்தன. அதுவன்றி, ஜீவகாருண்யம், பச்சாதாபம், ஈகை, சாந்தம், மிருதுவசனம் முதலிய உத்தம லக்ஷணங்களுக்கு ஓர் உற்பத்தி ஸ்தானமாகவும் அவர் விளங்கினார். இரவிலும், பகலிலும் அவரது மனம் தெய்வ பக்தியைப் பெருக்கிக்கொண்டு கடவுளின் நாமங்களையே மனனம் செய்துகொண்டிருக்கும். அவர் இங்கிலீஷ் கல்வியைக் கரைகண்டு அதில் உயர்வான பரீட்சையில் தேறிப் பட்டம் பெற்றிருந்தாராயினும், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரண்டு பாஷைகளிலும் அவருக்கு அபாரமான பயிர்ச்சியும் ஞானமும் ஏற்பட் டிருந்தமையால், மேல் நாட்டுக் கல்வியை மாத்திரம் கற்போரிடம் காணப்படும் குற்றங் குறைபாடுகள் எதுவும் அவரிடம் காணப்படவில்லை. ஒவ்வொருவனுக்கும் தாய் தகப்பன்மார்களே பிரத்தியக்ஷ தெய்வமென்ற கொள்கையை அவர் மனப்பூர்வமாகக் கடைப்பிடித் தொழுகியவர். அவர் அந்த சமஸ்தானத்தின் நிர்வாகத்தை ஏற்று நடாத்திய சொற்ப காலத்திற்குள், அவரே கலியுக தர்மராஜன் என்று எல்லோரும் கூறி அவரைப் புகழும்படியான என்று மழியாப் பெருங்கீர்த்தியை அவர் தேடிக்கொண்டதன்றி. ஏழைகள், தனிகர்கள்,

வலியவர், எளியவர், துஷ்டர்கள், சிஷ்டர்கள் ஆகிய எல்லோரும் அவரை மெச்சும்படியாக நடந்து வந்தார்.

அந்த உத்தம புருஷருக்கு வாய்த்திருந்த மனையாட்டியின் குணாதிசயங்கள், ஒவ்வோர் அம்சத்திலும் அவரது குணாதிசயங்களுக்குப் பொருத்தமானவைகளாகவே அமைந்திருந்தன. அந்த அம்மாளுக்கு அப்போது வயது முப்பது நிறைந்திருந்ததானாலும், எவரும் அந்த அம்மாளின் வயதை இருபதிற்குமேல் மதிக்கவில்லை. அந்த மாதரசியை அழகைக் கடைந்தெடுத்த ஸாரம் என்றாலும், மிருதுத் தன்மையின் திரள் என்றாலும், கலியாண குணங்களின் சட்டகம் என்றாலும், கற்பின் நிலையம் என்றாலும் எதுவும் முற்றிலும் பொருந்தும். அத்தகைய பெருத்த பதவியை வகிக்கும் புருஷர்களது மனைவிமார் அவசியம் இங்கிலீஷ் பாஷை கற்றிருக்க வேண்டுமென்பதும், தமது புருஷர்கள் வெள்ளைக்காரர்களோடுசம்பாஷிக்கும் பொழுது அவர்களும் வெள்ளைக்காரர்களோடும், அவர்களது மனைவிமார்களோடும் சம்பாஷிக்கும் திறமையுடையவர்களாயிருக்க வேண்டுமென்பதும் தற்கால நாகரிகத்திற்கு ஏற்ற அம்சங்களென்று பலர் கருதுகின்றனரானாலும், நமது திவான் முதலியாருடைய தேவியார் நமது புராதன காலத்து சாவித்திரி தேவிபோலவும், சீதாதேவி போலவுமே எவ்விஷயத்திலும் ஒழுகி வந்தார். திவான் முதலியாரும், அவரது மனையாட்டியும் ஈருடலும் ஒரு யிருமா யிருந்தனரென்று சொல்வதைக் காட்டிலும் மகாவிஷ்ணுவும், லக்ஷ்மிதேவியும் போல இருந்தனரென்பதே அவர்களது உண்மையான சம்பந்தத்தை உள்ளபடி கூறுவதாகும். அவர்களுக்குப் பன்னிரண்டு வயதடைந்த ஒரே ஒரு புதல்வன் இருந்தான். அந்த திவான் தமது ஆளுகையில் அந்த சமஸ்தானத்திலுள்ள குடிமக்கள் எல்லோரும் க்ஷேமகரமாகவும் மங்களகரமாகவும் இருந்து அமோகமாய்ப் பெருகி நல்வாழ்வு வாழவேண்டுமென்ற ஒரே கருத்தையே இரவு பகல் பிரணவ மந்திரமாக வைத்து ஜெபித்து இராஜாங்க நிர்வாகம் முழுதையும் நீதிநெறி தவறாமல் நடத்தி வந்ததன்றி பல இடங்களுக்கும் தாமே போய் முக்கியமான விஷயங்களை யெல்லாம் நேரில் பார்வையிட்டு வந்தார். அவர் அப்போதைக்கப்போது தமது உத்தியோக முறைமைப்படி சகலமான பரிவாரங்களுடன் வெளியூர்களுக்குப் போய்ப் பலதினங்கள் வரையில் முகாம் செய்து, அவ்வவ்விடங்களிலுள்ள குடி ஜனங்களின் குறைகளையும் இடர்களையும்

நேரில் விசாரித்தறிந்து, அதததற்குத் தக்க பரிகாரம் செய்து வந்த தன்றி, தனியாகவும், தமது மனையாட்டியை மாத்திரம் அழைத்துக் கொண்டும் மோட்டார் வண்டியில் உட்கார்ந்து முப்பது மயில், நாற்பதுமயில் தூரத்திற் கப்பாலுள்ள ஊர்களுக்குப்போய்த் தாம் இன்னார் என்பதைக் காட்டிக் கொள்ளாமலேயே இருந்து ஜனங்களோடு பழகி அவர்களது நிலைமையை உணர்ந்துகொண்டு வந்து பொது ஜனங்களுக்குத் தேவையான நன்மைகளையும் சௌகரியங்களையும் செய்து கொடுப்பார். சர்வாந்தர்யாமியான கடவுளைப்போல, அவர் எந்த நிமிஷத்திலும் எந்த இடத்திலும் காணப்படுவார். ஆனால், அவர் இன்னார் என்பதை எவரும் கண்டுகொள்ளமாட்டார்கள். அவ்வாறு அந்த உத்தமகுண திவான் ஜனங்களுக்குத் தோன்றாத் துணைவராய் இருந்து ஜனோபகாரச் சிந்தையில் ஈடுபட்டு அல்லும் பகலும் அநவரதமும் அதே நோக்கமாய்ப் பாடுபட்டு வந்தார். அது நிரம்பவும் விசாலமான பெரிய சமஸ்தானமாதலால், அந்த ஒரு மனிதரால் ஜனங்களுக்கு எவ்வளவு அதிகமான நன்மைகள் செய்ய இயலுமோ அதற்குமேல், அதிகமாகவே செய்து வந்தாரானாலும், அவருக்கும் தெரியாமல் ஆங்காங்கு ஏதேனும் குற்றங் குறைபாடுகள் இருந்தும் வந்தன.

ஒருநாள் பிற்பகலில் அவர் தமது மோட்டார் வண்டியில் தமது மனையாட்டியை உட்காரவைத்துக்கொண்டு, தமது தலைமை நகரமான திருவநந்தபுரத்தை விட்டுப் புறப்பட்டு அதற்குமுன் தாம் அதிகமாய்ப் போயிராத ஒரு திக்கில் பிரயாணம் செய்துகொண்டு போய்ப் பல ஊர்களையும் கடந்து அவ்வவ்விடத்தின் நிலைமையை அறிந்துகொண்டு வெகுதூரம் சென்று முடிவாக சிந்தாநாஸ்தி என்ற ஓர் ஊருக்குப்போய், அவ்விடத்தில் இருந்த ஒரு தாமரைத் தடாகத்தின் பக்கத்தில் வண்டியை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கித் தமது மனைவியையும் அழைத்துக்கொண்டு அந்தத் தடாகத்தில் நிரம்பவும் நேர்த்தியாக மலர்ந்திருந்த புஷ்பங்களையும் மற்ற வேடிக்கைகளையும் அந்த அம்மாளுக்குக் காட்டியபடி சிறிதுநேரம் நின்று கொண்டிருந்தார். அந்த ஊர் திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்ததானாலும், அது தமிழ் நாட்டின் எல்லையை அடுத்திருந்ததாதலால், அவ்விடத்தில் மலையாள தேசத்தாரும் தமிழ்த்தேசத்தாரும் கலப்பாகவே குடியிருந்து வந்தனர். அங்கு தமிழ் மலையாளம் ஆகிய இரண்டு பாஷைகளும் பேசப்பட்டதன்றி இரண்டு ஜாதியாருடைய ஆசார

வேறுபாடுகளும் கலந்தும் வேறுபட்டும் விநோதமாகக் காணப்பட்டன.

நமது திவானும் அவரது மனைவியான காந்திமதி யம்மாளும் அந்த இடத்தை யடைந்தது பிற்பகல் ஐந்துமணி சமயமாதலால், அந்த ஊர்ப் பெண்பிள்ளைகள் இடுப்பில் குடமும், கையில் அழுக்குத் துணி மூட்டையுமாக வருவதும், துணிகள் துவைப்பதும், தண்ணீர் எடுத்துப்போவதுமாய்க்காணப்பட்டனர். ஆனால்,எல்லோரதுமுகங்களும் ஒருவிதமான படபடப்பையும், விசனத்தையும், ஆத்திரத்தையும் தோற்றுவித்தன. எவரும் வாய் விட்டு ஓங்கிப் பேசவே எண்ணவில்லை. அவர்கள் ஒருவரோடொருவர் தணிவான குரலில் கொசகொசவென்று மெதுவாக ஏதோ ஒரு சம்பவத்தைப் பற்றி நிரம்பவும் மனவருத்தத்தோடும், கவலையோடும் பேசிக்கொண்டதாகத் தெரிந்தது, நமது திவான் அன்னிய ஸ்திரீகளின் முகத்தை ஏறெடுத்துப் பார்ப்பது பெருத்த ஒழுக்கத்தவறு என்ற கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்தவராதலால், அவர் அங்கு வந்து போய்க்கொண்டிருந்த மாதர்களின் முகத்தோற்றத்தையும் படபடத்த நிலைமையையும் கவனியாமல் தமது இயற்கையின்படி குதூகலமாகவும் சிரித்த முகத்தோடும் தமது ஆருயிர் மனையாட்டியோடு சம்பாவித்து அங்கிருந்த இயற்கை அதிசயங்களை அவளுக்குக் காட்டுவதிலேயே தமது முழுக்கவனத்தையும் செலுத்தியிருந்தாரானாலும், அவரது மனையாட்டி அவருடன் சம்பாஷித்தவண்ணம் அங்கு வந்துபோன ஸ்திரீகளைக் கவனித்தாளாதலால், அந்த ஊரில் அன்று ஏதோ ஒரு விபரீத சம்பவம் நேர்ந்திருக்க வேண்டுமென்ற எண்ணம் அந்த அம்மாளது மனத்தில் சரேலென்று தோன்றியது. உடனே அவள் தனது புருஷனை நோக்கி, "இந்த ஊரில் இன்றைய தினம் விபரீதமானகாரியம் ஏதோ ஒன்று நடந்திருக்கும் போலிருக்கின்றது. ஜனங்கள் ஓங்கிப் பேசாமல் ரகஸியமாக ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுகிறார்கள். எல்லோருடைய முகமும் ஆத்திரத்தையும் விசனத்தையும் காட்டுகிறது" என்று மிருதுவாகக் கூறினாள். அதைக் கேட்ட திவான் உடனே சரேலென்று தமது கவனத்தைச் செலுத்தி குளத்தின்படித்துறையில் நின்றுகொண்டிருந்த ஸ்திரீகளை உற்றுநோக்கித் தமது மனைவி கூறியது உண்மைதானென்பதை நிச்சயித்துக்கொண்டு மறுபடி அவளை நோக்கி, "ஆம்; நீ சொல்வது நிஜந்தான். இந்த ஊரில் ஏதோ விசேஷ சம்பவம் நடந்ததாயிருக்க

வேண்டும். இருக்கட்டும். நீ இவ்வளவு சூக்ஷுமமாக இதைக் கண்டுபிடித்தாயே இவர்களுடைய நிலைமையிலிருந்து விஷயம் இன்னவிதமானதாகத்தான் இருக்கவேண்டுமென்று நீ யூகித்துச் சொல்லமுடியுமா? எங்கே, சொல் பார்க்கலாம்" என்றார்.

அதைக் கேட்ட பெண்மணி நயமாக புன்னகை செய்து நிரம்பவும் பணிவாய்ப்பேசத்தொடங்கி, "அதெல்லாம் ஆண்பிள்ளைகளாகிய தங்களைப்போன்ற துரைசிங்கங்களுக்குத்தான் தெரியும். அடுப்பில் குழம்பு கொதிக்கையில், அதன் வாசனையைக் கொண்டு, அதற்கு உப்பு குறைவா, புளி குறைவா, மிளகாய் குறைவா என்பதைச் சொல்லச் சொன்னால், நான் தடையில்லாமல் உடனே சொல்லிவிடுவேன். இந்தப் பெண்பிள்ளைகளின் விசனகரமான முகங்களைப் பார்க்கப்பார்க்க, என்தேகம் கட்டிலடங்காமல்துடிக்கிறது. இன்னதென்று கண்டுபிடிக்க முடியாத ஒருவித அநுதாபமும் இரக்கமும் இளக்கமும் தோன்றி என் மனசை இம்சிக்கின்றன. உடனே விசாரித்து விஷயத்தைத் தெரிந்துகொண்டு, நம்முடைய உதவி உபயோகப்படுமானால், நாம் ஏதாவது செய்யவேண்டுமென்ற ஒருவிதமான துடிதுடிப்பு என் மனசில் பெருகி வதைக்கிறது; அதைத்தான் நான் சொல்ல முடியும். அதற்குமேல் அதிகமாக எதையும் நான் யூகித்துச் சொல்லக்கூடவில்லை!" என்றாள்.

அதைக் கேட்ட திவான் சந்தோஷமாகப் புன்னகை செய்து, "அப்படியானால் நீமகா சாமர்த்தியசாலிஎன்றுதான்சொல்லவேண்டும். சில பெண்பிள்ளைகளுக்குத் தாம் சாப்பிடும்போதுகூட, உப்பு அதிகமா, புளிப்பு அதிகமா, காரம் அதிகமா என்பது தெரிகிறதில்லை. புருஷன் சாப்பிட்டுப் பார்த்து, இன்னது அதிகம் குறைவு என்று இடித்திடித்துச் சொன்னால்கூட ஆபிசு காலம் வரையில் சில பெண்பிள்ளைகளுக்கு மனசில் உறைக்கிறதே இல்லைபல்லவா. அதை உத்தேசிக்க, நீ மகா திறமைசாலி என்றுதான் எண்ணிக்கொள்ள வேண்டும். வேண்டுமென்றே பிறருக்குத்துன்பம் இழைத்து, அவர்கள் துக்கித்து அழும்படி செய்து, அதைக் கண்டு சந்தோஷமடைகிற ஸ்திரீகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் படும் துயரத்தைக் கண்டும் அல்லது கேட்டும் மனம் இளகாமல் அசட்டையாக இருக்கும் ஸ்திரீகளும் உலகத்தில் இருக்கிறார்கள். அப்படியெல்லாம் இல்லாமல் நீபிறருடைய முகவாட்டத்தைக் கண்டு இரக்கங்கொண்டு, உன்னுலான உதவியை அவர்களுக்குச்செய்யவேண்டு

மென்று துடிதுடித்து நிற்பதாய்ச் சொல்லுகிருயே! அந்த விதத்தி லும் நீமகா சிலாக்கியமான மனுஷிதான். ஆகையால், உன்னை நீயே இளக்காரப்படுத்திப் பேசியது உன்னிடம் அபாரமான பெருமைகள் இருப்பதையே காட்டியது. அது இருக்கட்டும்; இவர்கள் விசாரப் படுவதைப் பார்த்தால், இதுவரையில் நல்ல யோக்கியமான் மனித ராக இருந்த ஒருவருக்கு ஏதாவது திடீரென்று கெடுதல் நேர்ந்திருக்க வேண்டும். அல்லது, அவர் எதிர்பாராதவிதமாய்க் கெடுதலில் இறங்கிஇருக்கவேண்டும். இவர்கள்பயந்து ரகசியமாய்பேசுவதைப் பார்த்தால், பெரிய அதிகாரி, அல்லது, ஊரிலுள்ள பெரிய மனிதர் இதில் சம்பந்தப்பட் டிருந்தால், தாம் இதைப்பற்றி வெளிப்படை யாகப் பேசினுல், அவர் தங்களுக்கும் ஏதாவது துன்பம் செய் வாரோ என்று பயப்படுவதாகவும் எண்ணவேண்டி இருக்கிறது. அதுவுமன்றி, இவர்களுடைய உடம்பு பதறுகிறதைப் பார்த்தால், இன்று நேர்ந்த கெடுதல், அப்படிப்பட்ட அதிகாரியோ, அல்லது, பெரிய மனிதரோ எவ்வித நியாயமுமின்றி அக்கிரமமாக அதைச் செய்திருக்க வேண்டுமென்றும், அதைக் கண்டு அப்படிப்பட்ட துஷ்டரைக்கண்டிக்க தமக்குச்சக்தி இல்லையே என்று நினைத்து எல் லோரும் இப்படி அசக்தராய்ப் பதறுகின்றனரென்றும் நாம் யூகிக்க வேண்டி யிருக்கிறது" என்ருர்.

அதைக் கேட்ட பெண்மணி பெரிதும் வியப்படைந்து, "பலே! பலே! எதெதையோ கொண்டு என்னென்னவோ முக்கியமான விஷ யங்களை யெல்லாம் வெகு சுலபத்தில் கண்டுபிடித்து விட்டீர்களே! இருக்கட்டும், நான்போய் இவர்களோடு பேசி, விஷயம் இன்ன தென்பதைத் தெரிந்துகொண்டு வரட்டுமா?" என்ருள்.

திவான், 'இவர்கள் உண்மையை உன்னிடம் சொல்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. அல்லது, இவர்கள் ஏதாவது சொன்ன லும் உண்மையை மறைத்து ஒன்று கிடக்க வேருென்று சொல்லி வைப்பார்கள். நீ போய்க் கேட்கவேண்டாம் வா. நாம் ஊருக்குள் போவோம். அங்கே நான் தந்திரமாக விசாரித்து உண்மையை அறிந்துகொண்டு வருகிறேன்" என்று கூறினர்.

அதற்கு அவரது மனையாட்டி உடனே இணங்க, இருவரும் அவ்விடத்தை விட்டு, சுமார் நூறு கஜ தூரத்திற்கு அப்பால் ராஜ

பாட்டையில் இருந்த தமது மோட்டார் வண்டியைநோக்கி நடக்கத் தொடங்கினர். அப்போது அந்த ராஜபாட்டையில் ஜனங்கள் பெருத்த கும்பலாக நிறைந்து போய்க்கொண் டிருந்தது அவர்களது திருஷ்டியில் பட்டது. அவர்களிருவரும் திடுக்கிட்டு அந்த ஜனக்கூட்டத்தை உற்று நோக்கினர். அவர்கள் எல்லோருக்கும் முன்னால்நான்கு போலீஸ் ஜெவான்கள் கத்தி துப்பாக்கிகளுடன் நடந்தனர். அவர்களுக் கிடையில் ஒரு யௌவனப் புருஷன் கைவிலங்கு கால்விலங்குகள் பூண்டவனாய்க் காணப்பட்டான். அவனை அந்த ஜெவான்கள் அந்த ஊரிலிருந்து திருவனந்தபுரம் இருந்த திக்கில் நடத்தி அழைத்துக் கொண்டு போனதாகத் தெரிந்தது. அவர்களுக்கு சுமார் இருபது கஜத்திற்குப் பின்னால் அந்த ஊர் ஆண் பிள்ளைகள் வேடிக்கை பார்த்துக்கொண்டு பின் தொடர்ந்து சென்றதும் தெரிந்தது; அவர்களுக்குப் பின்னால், சுமார் இருபது, அல்லது, இருபத்திரண்டு வயதடைந்த ஒரு யௌவனப் பெண், "ஐயோ! அப்பா!" வென்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு தலைவிரி கோலமாய்த் தொடர்ந்து செல்ல முயல்வதுமாய் இருக்க, வேறு இரண்டு மூன்று ஸ்திரீகள் அவளைப் பிடித்துக்கொண்டு, அவளுக்குப் பலவிதமான ஆறுதல் மொழிகள் கூறி, அவளைத் திருப்பி ஊருக்கு அழைத்துக் கொண்டுபோக முயன்றுகொண் டிருந்தனர். அவ்வாறு அலறிப் புடைத்து விழுந்து நைந்து கலங்கியழுதவண்ணம் ஜெவான்களைத் தொடர்ந்து வந்த யௌவன ஸ்திரீயைக்கண்டஜனங்களெல்லோரும் கட்டிலடங்கா மனக்கலக்கமும் பச்சாதாபமு மடைந்து, "ஐயோ பாவம்! ஐயோ பாவம்! இந்தப் பெண்ணின் கொடுமையைப் பார்க்க சகிக்கவில்லையே! ஆகா! கடவுளின்சோதனை இப்படியும்இருக்குமா!" என்று முற்றிலும் அங்கலாய்த்துக்கொண்டு அந்த மகா பரிதாபகரமான காட்சியைக் காண விரும்பாதவராய்த் தங்களது முகத்தை அப்புறம் திருப்பிக் கொள்வோரும், அந்த இடத்தையே விட்டு அப்பால் போவோரும், அவளிடம் நெருங்கி ஆறுதல் கூறுவோருமாய் இருந்தனர். அந்த விபரீதக் காட்சியைக் கண்டகல்லும் கரைந்துருகுமென்றால், தயாள குணமும் எளிதில் இளகும் தன்மையும் வாய்ந்த நமது திவானும் அவரது மனையாட்டியும் அதைக்கண்டுஎவ்வாறு தவித்திருப்பாரென்பது கூறாமலே விளங்கும். அந்தப் பெண்ணின் கோரமான நிலைமையைக் கண்டவுடன் அவர்களது உயிர் உடலை விட்டுப் போய் விட்டதென்றே சொல்லவேண்டும். அவர்களது தேகம் துடிதுடித்துக் கட்டிலடங்காமல் தவிக்கிறது; மனம்

பதறுகிறது. அந்தப் பெண் பாசாங்கு செய்யவில்லையென்பதும் போலீஸ் ஜெவான்களால் அழைத்துச் செல்லப்பட்ட யௌவனப் புருஷன் அவளது கணவனென்பதும், அவர்களது விஷயத்தில் ஏதோ பெருத்த அக்கிரமம் நடந்துவிட்டதென்பதும் அவர்களது மனத்திற்கு ஸ்பஷ்டமாகத் தெரிந்தமையால், அவர்களிருவரும் தம்மை மறந்து ஆவேசங்கொண்டவர்கள் போல மாறி, அந்த யௌவனப்பெண் சென்றுகொண்டிருந்த இடத்தைநோக்கிவிசையாக நடந்தனர். முன்னால் சென்று நெருங்கிய திவான் அங்கிருந்த மனிதர்களை நோக்கி, "ஐயா! ஏன் இந்தப் பெண் அழுகிறது? ஜெவான்கள் அந்த மனிதரை எதற்காகப் பிடித்துக் கொண்டு போகிறார்கள்? என்று நயமாகக் கேட்க, அங்கிருந்த மனிதர் எவரும் நமது திவானை மதிக்கவும் இல்லை; மறுமொழி கூறவுமில்லை. அவர் ஒருவருக்குப் பின் மற்றொருவராய்ப் பலரிடம் கேட்டுப் பார்த்துவிட்டார். அங்கிருந்தோர் அளவற்ற விசனத்தில் ஆழ்ந்திருந்தமையால், அதுசம்பந்தமான வரலாற்றை வாயில் வைத்துப்பேச அவர்கள் விரும்பாதவர்கள்போல அசட்டையாக இருந்துவிட்டனர். திவானை அவமானம் ஒருபுறத்தில் வதைக்கிறது; விஷயத்தைத் தெரிந்துகொண்டு, அதற்கு ஏதாகிலும் தாம் பரிகாரம் தேடவேண்டுமென்ற ஆவல் இன்னொரு புறத்தில் எழுந்து தூண்டுகிறது. முன்னால் சென்ற போலீஸ் ஜெவான்களிடம்தாம் கேட்டு விஷயத்தைதெரிந்துகொள்ளலாமென்றாலோ அவர்கள் சுமார் அரை பர்லாங்கு தூரத்திற்கு முன்னால் விசையாகப் போய்க்கொண்டிருந்தமையால், தாம் மோட்டார் வண்டியில் ஏறிச் சென்றாலன்றி சுலபத்தில் அவர்களிடம் போய்ச் சேர இயலாதென்பதை உணர்ந்த திவான் தாம் அதற்குமேல் என்ன செய்வதென்பதை யறியாதவராய்த் தவித்து நிற்க, அதை யுணர்ந்த அவரது மனையாட்டி சரேலென்று மற்றப் பெண்பிள்ளைகளின் நடுவில் புகுந்து, அவ்விடத்தில் தலை மயிரை விரித்துவிட்ட வண்ணம் கண்ணீரை ஆறாய்ப் பெருக்கி மார்பில் ஓயாமல் அறைந்து புலம்பித் தவித்தவளாய்க் காணப்பட்ட அந்தயௌவன ஸ்திரீயைப் பிடித்துக் கரைபுரண்டெழுந்த வாஞ்சையோடு கட்டியணைத்துத் தூக்கியெடுத்து, இன்னொருத்தியை ஏவி அவளது தலைமயிரை ஒழுங்குப்படுத்தி முடிந்துவிடச்செய்து தனது முன்றானையால் அவளது கண்ணீரை ஒற்றி முகத்தைத் துடைத்து விட்டு, பெற்ற தாய்போல, அன்பு ததும்பிய குரல்கொண்டு நிரம்பவும் மிருதுவாகவும் ஹிதமாகவும் பேசத்தொடங்கி, "அம்மா! அழாதே;

இத்தனை ஜனங்கள் உங்கள் விஷயத்தில் மனப்பூர்வமான இரக்கங் காண்பிப்பதிலிருந்து உங்கள் விஷயத்தில் ஏதோ அநியாயமான காரியம் நடந்திருக்கிறதாகத் தெரிகிறது. நாங்கள் திருவநந்தபுரத்தில் இருக்கிறவர்கள். அரண்மனையிலுள்ள பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களெல்லோரும்எங்களுக்கு இஷ்டமானவர்கள். உன்னுடைய விருத்தாந்தம் இன்னதென்பதை நீ சொல்வாயானால், எங்களால் கூடிய உதவியை உனக்குச் செய்கிறோம்" என்று தேன்மாரி பொழிவதுபோலமுற்றிலும் இனிமையாகக் கூற, அதுகாறும்,மற்ற ஜனங்கள் கூறிய ஆறுதல் மொழிகளையும் துக்க சமனத்தையும் பொருட்படுத்தாமல் பேய் கொண்டவள்போலத் தன்னை மறந்து அழுது புலம்பி விழுந்தெழுந்து வந்துகொண்டிருந்த அந்த ஸ்திரீயின் புண்பட்ட மனதில் நமது திவான் முதலியாரது மனையாட்டியின் சொற்கள் தேவாமிருத வருஷம்போல நிரம்பவும் ஹிதமாகவும் ஆறுதலாகவும் படவே, அவள் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த ஆவேசமும் துயரமும் தோற்றுவித்து, திவானினது மனையாட்டியை இறுகக் கட்டியணைத்துக் கோவெனக் கதறி விம்மியழுது, "ஐயோ! அம்மா! என் கொடுமையை நான் என்னவென்று என் வாயில்வைத்துச் சொல்லுவேன் தாயே! உலகத்திலுள்ள கோடாநுகோடி ஜனங்களையெல்லாம் காப்பாற்றும் தெய்வம் என் விஷயத்தில் மாத்திரம் இப்படிச் சதி செய்துவிட்டதே! இனி இந்த ஜென்மத்தில் என் கலியும் நீங்கப் போகிறதா! இனி மனிதர்களால் எங்கள் துன்பம்விலகப் போகிறதா! இதுவரையில் இந்த அக்கிரமத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பாழுந் தெய்வம் இனிமேலா கண்ணைத் திறந்து பார்க்கப் போகிறது! ஐயோ! கோவில்களிலுள்ள தெய்வங்களெல்லாம்வெறுங் கல்களாய் நிற்கின்றனவே! இந்த உலகத்தில் தெய்வமே இல்லாமல் போய் விட்டதே! ஐயோ! என்னுடைய உயிர்போகவும் மாட்டாமல் இருக்கவும் மாட்டாமல் கிடந்து துடித்து வீண்பாடு படுகிறதே! ஐயோ! அம்மா! நான் இனி என்ன செய்வேன்!" என்று கன்னகடூரமாக நெடுங்குரல் பாய்ச்சி ஓலமிட்டலறி நமது திவானின் மனையாட்டியை இறுகக்கட்டிப்பிடிக்க, அந்தப் பரம ஸங்கடமானகாட்சியைக் கண்டு நெருப்புக் குவியலின்மேல் வீழ்ந்த புழுவைப் போலத் துடித்துக் கண்ணீர் விடுத்து நமது திவானின் மனையாட்டி முன்னிலும்பன்மடங்கு அதிக ஹிதமாகவும் உருக்கமாகவும் அவளைநோக்கி, "அம்மா! வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்; எங்களால் ஏதாவது அநுகூலம் ஆகுமானல், அதை நாங்கள் உடனே செய்கிறோம். இந்

தப் போலீஸ் ஜெவான்களுடனும் நாங்கள் பேசி, அவர்களால் ஏதாவது நன்மை செய்ய இயலுமானால் அதையும் செய்யச் சொல்லுகிறேம். நீ கூசாமல் சொல்" என்று வாஞ்சையோடு வற்புறுத்திக் கூறினள்.

உடனே அந்த யௌவன ஸ்திரீ சிறிது தெளிவடைந்து, "அம்மா! என் வயிற்றெரிச்சலை நான் என்னவென்று சொல்லப் போகிறேன்! உலகத்தில் மற்றப் பெண்களுக்குப் புருஷன் இறந்த பிறகு விதவைத்தனம் உண்டாகும். எனக்கு என் புருஷர் ராஜாவைப்போல் இருக்கும்போதே விதவை நிலைமையைவிடப் பதினுயிர மடங்கு அதிக துக்ககரமான நிலைமை உண்டாகிவிட்டதம்மா! நாங்கள் கள்ளர் ஜாதியில் பிறந்தவர்கள். ஆனாலும், எங்களுடைய முன்னோர்கள் திருட்டு புரட்டு முதலிய கெட்ட காரியங்களில் இறங்காமல் நிலத்தை உழுது பயிர்ச்செலவு செய்து மானமாகவும் கண்ணியமாகவும் நாணயமாகவும் ஜீவனம் செய்து வந்தவர்கள். என் தாய் தகப்பன்மாருக்கு என்னைத் தவிர வேறே குழந்தைகள் பிறக்கவில்லை. நான் என்னுடைய பதினன்காவது வயதில் பெரிய மனுஷியானேன். அப்போது எங்களுக்குச் சுமார் பதினுயிரம் ரூபாய் பெறுமானமுடைய ஆஸ்தியிருந்தது. என் தகப்பனர் எங்களுக்குச் சமதையான ஒரு தக்க குடும்பத்தில் நல்ல குணவானை ஒருவரைத் தேடிப்பிடித்து அவருக்கு என்னைக் கட்டிக்கொடுத்தார். அவர்களும் இந்த ஊரில் இருப்பவர்களே. எங்களைத் தவிர இந்த ஊரில் என் பாட்டனர் காலத்திலேயே பங்கு பிரித்துக் கொண்டு வேருகப் போய் இருக்கும் என் சிற்றப்பனுக்கும், பெரியப்பனுக்கும் ஆண் பெண் மக்களும் இருக்கிறர்கள். என் பெரியப்பனுடைய பிள்ளை ஒருவருக்கும் என் புருஷருக்கும் கொஞ்ச காலமாக அதிக சிநேகம் ஏற்பட்டுப் போயிருந்ததாகையால், அவர்கள் எப்போதும் ஒருவரோடொருவர் இணைபிரியாமலே இருந்து சிரித்து விளையாடிப் பேசிக்கொண்டே இருப்பார்கள். என்னுடைய கலியாணம் என் புருஷர் வீட்டிலேதான் நடந்தது. அப்போதும் என் பெரியப்பன் பிள்ளை என் புருஷருக்குப் பக்கத்திலேயே மாப்பிள்ளைத் தோழன்போல இருந்து சடங்குகளை நடத்தி வைத்தார்; கலியாணம் முடிவடைந்தவுடன், உலகத்தின் முறைமைப்படி, மறுவுண்ணலுக்காக நானும், என் புருஷரும் என்னுடைய பிறந்த வீட்டிற்கு வந்தோம். அப்போது காலை 9-மணி சமயமிருக்கலாம். எங்கள்

தாய் தகப்பன்மார் மேளதாளத்துடன் ஊர்வலமாக எங்களை அழைத்துக் கொண்டுபோய் வீட்டு வாசலில் நிற்கவைத்து ஆரத்தி எடுத்து திருஷ்டி தோஷம் கழித்து சிதர்தேங்காய் உடைத்து எங்களை வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு போய் ஊஞ்சலில் உட்கார வைத்து இன்னம் செய்யவேண்டியசடங்குகளையெல்லாம்செய்தார்கள். அப்போது அங்கே வந்து கூடியிருந்த ஜனங்களெல்லோருக்கும் கற்கண்டு வாழைப்பழம் சந்தனம் வெற்றிலை பாக்கு முதலியவை வழங்கப்பட்டன. அந்த சமயத்தில் அவ்விடத்தில் தாம்பூலம் வாங்கிக்கொண்டவர்கள், வாங்கிக்கொள்ளாதவர் ஆகிய சிலர் ஏதோ சங்கதியைத் தெரிந்துகொண்டு சரேலென்று ஒருவர் பின் ஒருவராய் எழுந்து வெளியில் போயினர். அதைக் கண்ட என் தகப்பனார் அதன் காரணமென்னவென்று விசாரித்தார். எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் உள்ள என் பெரிய தகப்பனாருடைய வீட்டில் யாரோ சில போலீஸ்காரர்கள் வந்து சோதனை போட்டுக் கொண்டிருப்பதாகவும், அங்கே போய் வேடிக்கை பார்ப்பதற்காகவே ஜனங்கள் எழுந்து போகிறார்களென்றும் சிலர் சொன்னார்கள். அதைக் கேட்க, அங்கே இருந்த மற்ற ஜனங்களும் நாங்களும் நிரம்பவும் பயமும் கவலையும் ஆச்சரியமும் அடைந்தோம். எங்களுக்கு ஆகவேண்டிய சடங்குகளை சீக்கிரம் முடித்துக்கொள்ளவும், வெளியில் போய் போலீசார் என்ன செய்கிறார்களென்பதைப் பார்க்கவும் எல்லோரும் ஆவல் கொண்டு, மிகுதியிருந்த சடங்குகளை சீக்கிரமாக முடித்துக்கொண் டிருக்கையில், போலீஸ்ஜெவான்களில் மூன்று பேர் நாங்கள் இருந்த இடத்துக்கே வந்து விட்டார்கள். அவர்களைக் கண்டவுடன் எங்களுடைய உடம்பு நடுங்கியது. மனசில் பெருத்த திகில் உண்டாயிற்று. எங்களண்டையில் வந்த ஜெவான்கள் நாங்கள் இருந்த ஊஞ்சல் பலகையண்டை நெருங்கிவந்து என் புருஷருடைய கைகளை நீட்டச் செய்து அவருடைய விரல்களில் இருந்த மோதிரங்களைப் பார்த்துவிட்டு, அவைகளுள் விலை அதிகம் பெறத்தக்கதாயிருந்த ஒரு மோதிரத்தைக் கழற்றிக் கொடுக்கும்படி கேட்டார்கள். அந்த மோதிரம் கலியாண காலத்தில் என் பெரிய தகப்பனார் பிள்ளை இரவலாக என் புருஷருடைய கையில் போட்டு வைத்திருந்தார். அந்த மோதிரத்தை அவர்கள் கேட்கவே, என் பெரிய தகப்பனாருடைய வீட்டை அவர்கள் சோதனை போட்டதாக கொஞ்ச நேரத்திற்குமுன் சொன்னதற்கும், மோதிரத்துக்கும் ஏதோ சம்பந்த மிருக்கிறதென்று எல்லோரும் நினைத்துக்கொண்ட

னர். என் புருஷர் உடனே அந்த மோதிரத்தைக் கழற்றி ஜெவான்களிடம் கொடுக்க, அவர்கள் அதை வாங்கிக்கொண்டு வெளியில் போய்விட்டார்கள். போனவர்கள் ஐந்து நிமிஷ நேரத்தில் திரும்பி வந்து அந்த மோதிர சம்பந்தமாக என் புருஷரைக் கைதி செய்திருப்பதாகச் சொல்லி, அவரைப் பிடித்து மரியாதைக் குறைவாக இழுத்துக்கொண்டு என் பெரிய தகப்பனுருடைய வீட்டுக்குப் போய், அங்கே இருந்த என் பெரிய தகப்பனுருடைய பிள்ளையையும் என் புருஷரையும் சில சொத்துக்களோடு நடத்தி யழைத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்விட்டார்கள். என் தகப்பனர் வெளியில்போய் விசாரித்ததில், எங்களுடைய கலியாணத்துக்கு சில தினங்களுக்கு முன்பு, என் பெரிய தகப்பனர் மகன் யாரோ ஒருவருடைய வீட்டில் கன்னம் வைத்து உள்ளே நுழைந்து சில சாமான்களையும் நகைகளையும் திருடிக்கொண்டு வந்து தங்கள் வீட்டில் ஒளித்து வைத்திருந்ததாகவும், போலீஸார் எப்படியோ உளவறிந்து வந்து சோதனை போட்டு சொத்துகளைக் கண்டுபிடித்து எடுத்துக்கொண்டு போனதாகவும், என் புருஷர் இரவலாக வாங்கிப் போட்டுக்கொண்டிருந்த மோதிரமும் அந்தத் திருட்டில் சம்பந்தப்பட்டதாகையால், என் புருஷரும் அந்தத் திருட்டில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டுமென்று நினைத்துப் போலீசார் என் புருஷரையும் அழைத்துக்கொண்டு போனதாகவும், என்தகப்பனர் கேள்வியுற்றூர். அதற்குப் பிறகு அந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. என் பெரிய தகப்பனரும் என் தகப்பனரும் தலைக்கு ஆயிரம் ரூபாய் வீதம் செலவு செய்து எதிர்க்கட்சி யாடினர்கள். என் புருஷர் உண்மையிலேயே அந்தத் திருட்டில் சேரவில்லை. அவருக்கு மோதிரம் இரவல் கொடுக்கப் பட்டதென்று என் பெரிய தகப்பனுருடைய மகன் ஒப்புக் கொண்டானுலும், போலீஸ்காரர் அவனை அடித்து வைது பயமுறுத்தி, என் புருஷரும் அந்தத் திருட்டில் சம்பந்தப்பட்டவரென்று சொல்லும்படி செய்துவிட்டார்கள். என் பெரிய தகப்பனர் மகன் இரண்டு வருஷ தண்டனையும், என் புருஷர் ஒரு வருஷ தண்டனையும் அடைந்தார்கள். எங்களுடைய அவமானமும் துயரமும் எப்படி இருந்திருக்குமென்று நீங்களே யோசித்துப் பாருங்கள். நானும் என் தாய் தகப்பன்மாரும் அந்த ஒருவருஷ காலம் முழுதையும் அழுதழுதே போக்கினேம். நாங்கள் சரியான காலத்தில் குளிக்காமல், முழுகாமல், சாப்பிடாமல் வியாகுலப்பட்டு இளைத்துப் போனேம். அந்த ஒரு வருஷகாலம் தீர்ந்தவுடன், என்

புருஷர் சிறையிலிருந்து வெளியில் வந்தார். என் தகப்பனார் சிறைச் சாலை வாசலுக்குப் போய் வண்டியில் என் புருஷரை உட்கார வைத்து எங்களுடைய வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தார். பரம ஸாதுவும் மானியுமான என் புருஷர் எங்களுடைய முகத்தில் விழிப்பதற்குக்கூட நிரம்பவும் கிலேசமடைந்து குன்றிப் போனார். ஏதோ காலவித்தியாசத்தினால் அந்தக் கெடுதல் நேர்ந்து விட்டதென்றும், அவர் விஷயத்தில் எங்களுக்கு எவ்வித சந்தேக மும் இல்லையென்றும் நாங்கள் பலமுறை சொல்லிச் சொல்லி அவ ரைத் தேற்றினோம். நான் புத்தியறிந்து கிட்டத்தட்ட இரண்டு வருஷகாலம் கழிந்து விட்டதாகையால், எனக்கும் அவருக்கும் சாந்திகழிக்க வேண்டுமென்று எங்கள் தாய் தகப்பன்மார் தீர் மானித்து, எங்களுடைய புரோகிதரை வரவழைத்து ஒரு முகூர்த்த நாள் குறித்தார்கள். அந்த நாள் சுமார் பதினைந்து தினங்களுக்கு அப்பால் வந்தது. என்புருஷர் பகல்காலங்களில் வீட்டிற்குள்ளேயே இருப்பதும், இராக்காலங்களில் மாத்திரம் வீட்டுத்திண்ணையில் வந்து உட்கார்ந்து கொள்ளுவதுமா யிருந்தார். அவர் சிறைச்சாலை யிலிருந்து வெளிப்பட்டபிறகு பத்தாவது நாள் போலீஸ் ஸ்டேஷனி லிருந்து ஏட் ஐயா ஒருவரும் இன்னம் மூன்று ஜெவான்களும் எங் களுடைய வீட்டுக்கு வந்து, என் தகப்பனாரைக் கூப்பிட்டு எங்கள் வீட்டைச் சோதனை போடவேண்டு மென்றார்கள். மடியில் கன மிருந்தாலல்லவா வழியில் பயம். எங்களுக்கும் என் புருஷருக்கும் அதைப்பற்றி பயமே உண்டாக வில்லை. "நீங்கள் குசாலாய்ச் சோதனை போட்டுக்கொள்ளுங்கள்" என்று நாங்கள் சொல்லிவிட் டோம். ஒரு ஜெவான் என் புருஷரை ஓரிடத்தில் இருக்கச்செய்து அவருக்குக் காவலாக அங்கேயே இருந்தான். மற்றவர்கள் எங்க ளுடைய வீட்டுக்குள் புகுந்து இண் இடுக்கு மூலை முடக்குகளில் எல்லாம் இருந்த பெட்டி பேழை அடுக்குப்பானை தட்டுமுட்டு சாமான்கள் ஆகிய எல்லாவற்றையும் எடுத்துக்கடை பரப்பித் தாறு மாறாகப் போட்டு சோதனைசெய்தார்கள். கடைசியாக ஒரு சேவ கன் பரண்மேலேறி அவ்விடத்திலிருந்த எருமுட்டைகள் விறகு கள் முதலியவற்றை யெல்லாம் கீழே தள்ளிவிட்டான். அவைகளுக் குள்ளிருந்து ஒரு துணி மூட்டையும் கீழே விழுந்தது. போலீசார் அதை எடுத்துக்கொண்டு வீட்டு வாசலுக்கு வந்து பலர் முன்பு வைத்து அவிழ்த்துப் பார்க்க சுமார் ஐநூறுரூபாய் பெறத்தக்க நகை கள் அதற்குள் இருந்தன. உடனே ஏட் ஐயாவுக்குப் பலமான

ஆவேசம் வந்துவிட்டது. ஜெவானுடைய காவலிலிருந்த என் புரு ஷரிடம் அந்த ஏட் ஓடி அவருடைய தலைமயிரைக் கெட்டியாய் இடதுகையால் பிடித்துக்கொண்டு, வலதுகையால் பளீர்பளீரென்று என் புருஷருடைய கன்னத்தில் அடித்து, விலாவில் குத்தி, காலால் துடையைப் பார்த்து உதைத்துப் பலவாறு இம்சித்துப் பல்லை நற நற வென்று கடித்து, "அடா பயலே! நீ ஜெயிலிலிருந்து வந்து சரி யாய்ப் பத்துநாள் கூட இன்னம் ஆகவில்லை. உன் திருட்டுப் புத்தி இன்னமும் போகவில்லையே! இந்த நகைகளை யெல்லாம் திருடி மூட் டையாகக்கட்டிகொண்டுவந்துவைத்துக்கொண்டிருக்கிறாயே. போ, நாயே போ கச்சேரிக்கு" என்று சொல்லி அதட்டிப் பலவாறு வதைக்க, என் புருஷர் அப்படியே குன்றிப்போய், "ஐயா! நான் ஒரு பாவத்தையுமறியேன்! சத்தியமாகச் சொல்லுகிறேன். இந்த மூட்டையை நான் இப்போதுதான் பார்க்கிறேன்; இதற்கு முன் பார்த்ததேயில்லை" என்று பணிவாகச் சொன்னார் அதைக் கேட்ட ஏட் ஐயாவுக்கு கோபம் இன்னம் அதிகமாய் வந்துவிட்டது. அவர் மறுபடி என் புருஷருடைய முகத்தில் பேய்போல அறையவே, அவ ருடைய மூக்கு உடைந்துபோனமையால் இரத்தம் கடகடவென்று ஓடி வந்தது. அந்த வதையைக் கண்ட நாங்களெல்லோரும் ஐயோ அப்பா வென்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அலறி அந்தப் போலீஸாரின் காலில் விழுந்து கெஞ்சினோம். அவர்கள் எங்களை உதறித் தள்ளிவிட்டு, நகை மூட்டையை எடுத்துக் கொண்டு என்புருஷருக்கு விலங்கிட்டு அவரை அழைத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்விட்டார்கள். என் புருஷர் குற்ற வாளியே அல்லரென்பது எங்களெல்லோருக்கும் அவருடையதாய்த் தகப்பன்மாருக்கும் நிச்சயமாய்த் தெரியுமாகையால். எப்பாடு பட்டாவது அவரை மீட்க வேண்டுமென்று முடிவு செய்து கொண்டு இரண்டு வீட்டுச் சொத்துகளை யெல்லாம் செலவிட்டுக் கடைசி வரையில் பிரயாசைப்பட்டுப் பார்த்தோம். எங்களுடைய முயற்சி எல்லாம் பலிக்காமல் வீணாய்ப் போய்விட்டது. போலீசா ரால் தயாரிக்கப் பட்டிருந்தபொய்ச்சாட்சிகள் சொன்னதை நியாயா திபதி உண்மையென்று நம்பி என் புருஷர் குற்றவாளிதான் என்று நிச்சயித்து அவரைத் தண்டித்துவிட்டார். அதற்கு முன் அவர் ஒரு வருஷகாலம் சிறைப்பட்டிருந்தவராகையால், அதையும் கருதி, அந்த இரண்டாவது திருட்டுக்குஏழு வருஷகாலதண்டனைகொடுத்து விட்டார். அவருக்காக வழக்காடியதால், எங்கள் சொத்து சுதந்

திரங்களும், அதுபோலவே, என் புருஷர் வீட்டுச் சொத்து சுதந்திரங்களும் எல்லாம் அடியோடு போய்விட்டமையாலும் என் புருஷருக்கு அநியாயமாக அவ்வளவு கடுமையான தண்டனை கிடைத்துவிட்டதே என்ற ஏக்கத்தினாலும், அவமானத்தினாலும் என்னுடைய தாய்தகப்பன் மாரும், மாமன் மாமியாரும் பெருத்த வியாகுலத்தில் விழுந்து இரவு பகல் உருகி உருகி ஒருவர் பின்னொருவராய் இறந்து போய்விட்டார்கள். நான் மாத்திரம் இன்னம் இருந்து என் ஆயிசு காலம் முடியத் துயரத்தில் ஆழ்ந்து கிடக்க வேண்டுமென்று கடவுள் என் தலையில் எழுதி விட்டார் போலிருக்கிறது. நான் எத்தனை நாள் பட்டினி கிடந்தாலும், என் உடம்பை எப்படி வதைத்தாலும் என் பிராணன் மாத்திரம் போகவில்லை. எங்கள் வீடும் போய் விட்டது; சொந்த ஜனங்களும் போய்விட்டார்கள். நான் மாத்திரம் திக்கற்ற பாவியாய் இருந்து ஜீவனம் செய்ய நேர்ந்தது. நான் இரண்டு பெரிய மனிதர்களுடைய வீட்டில் வாசல் பெருக்கும் உத்தியோகம் செய்து, ஒழிந்த நேரத்தில் கூலிக்கு நெல்குத்தி உழைத்து மானமாய் ஜீவனம்செய்து, மிச்சப்பட்டதை சீட்டுப்போட்டேன். மாதம் 4-அணா வாடகை கொடுத்து நான் ஒருவருடைய வீட்டுப் பின்புறத்திலிருந்த ஒரு குடிசையில் குடியிருந்து வந்தேன். ஏழு வருஷ காலம் எப்போது கழியுமென்று நான் நாள்களை எண்ணிக்கொண்டே இருந்தேன். என் புருஷர் உலகத்தாருடைய கண்ணுக்குக் குற்றவாளியாகத் தோன்றினாலும், என் மனசாற அவர் நிரபராதி என்பது நிச்சயமாக என் மனசிற் பட்டதாகையால், நான் அவர் மேல் வைத்திருந்த ஆசை நாளுக்குநாள் வளர்ந்து மலைபோலப் பெருகிக்கொண்டே இருந்தது. நான் அரும் பாடுபட்டு என்னுடைய கற்பைக் காப்பாற்றிக்கொண்டு, அந்த ஏழு வருஷகாலம் எப்போது தொலையுமோ வென்று இரவு பகல் அதே தியானமாய் இருந்தேன். என் புருஷர் என்னிடம் க்ஷேமமாய் வந்து சேர வேண்டுமென்று நான் எங்கள் குல தெய்வமாகிய ஐயனாரப்பனைப் பிரார்த்தித்துக்கொண்டே இருந்தேன். ஏழு வருஷகாலம் முடிந்தது. நான் பல தினங்கள் சிறைச்சாலை வாசலில் போய் நின்று அவருடைய வருகைக்காக ஆவலோடு காத்திருந்து அவரை அழைத்துக்கொண்டு என் குடிசைக்கு வந்து சேர்ந்தேன். நான் நெல் குத்தி சீட்டுப்போட்டதில் என்னிடம் பத்துவராகன் பணம் சேர்ந்திருந்தது. அதை வைத்துக்கொண்டு செலவு செய்து, நான் அவரிடம் வைத்திருந்த மதிப்பையும் வாஞ்சையையும் வெளியிட்டு, என்

சக்திக்குத் தகுந்தபடி கஞ்சியையோ கூழையோ அவருக்குவார்த்து உபசரித்ததன்றி, அவரை அழைத்துக்கொண்டு எங்கள் குல தெய்வ மாகிய ஐயனாரப்பன் கோவிலுக்குப்போய் மாவிளக்குப்போட்டுத் தேங்காய் உடைத்து அர்ச்சனைபண்ணி பிரார்த்தனை செலுத்தி சாமி கும்பிட்டுவிட்டு வீட்டுக்கு வந்தேன். அவருக்கும் எனக்கும்விவாகம் ஆனது முதல், உலகாசாரப்படி நடத்த வேண்டிய சடங்கு நடத்தப் படாமல் இருந்தமையால், அதைஉடனே நடத்திவிட வேண்டுமென்று நாங்கள் தீர்மானித்துக் கொண்டோம். மற்றவர்களைப்போல் நாங் கள் ஊரார் அறிய அதை நடத்த முடியவில்லையாகையால் நாங்களே அதற்கு ஒரு வெள்ளிக்கிழமையைக் குறிப்பிட்டுக் கொண்டோம். என்னிடமிருந்த பணத்தில் அவருக்கு இரண்டு வராகனில் பட்டுக் கரை வேஷ்டி ஒரு ஜோடியும், ஐந்துரூபாயில் எனக்கு ஒரு சேலையும், இன்னும் பட்டுப்பாய் தலையணை முதலியவைகளும் நான் வாங்கிக் கொண்டு வந்தேன். அன்றையதினம் சாப்பாட்டையும் விசேஷ மாகத் தயார்செய்து அவருக்குத் திருப்தியாகப் போட்டேன். அன் றைய பகல் பொழுது கழிந்தது. அந்தி வேளை வந்தது. நான் விளக்குக்குக் குங்குமப் பொட்டு இட்டு அதைக் கொளுத்திவைத்து விட்டு அவருக்குச் சாப்பாடு போட்டு நானும் சாப்பிட்டேன். பிறகு அவரைப் பட்டுபாயில் உட்காரவைத்து நானும் பக்கத்தில் உட்கார்ந்து அவருக்கு வெற்றிலை பாக்கு எடுத்துக் கொடுக்க ஆரம் பித்தேன். அப்போது ஒரு போலீஸ் ஜெவான் கொஞ்ச தூரத்தில் நின்றபடி என் புருஷருடைய பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு, அவ ரைப் போலீஸ் இன்ஸ்பெக்டர் உடனே அவசரமாக அழைத்துக் கொண்டு வரச் சொல்லுகிறாரென்றான்.

அதைக் கேட்டவுடனே எங்களுக்கு அடிவயிற்றில் ஒரு கூடை நெருப்புத்தணலைக் கொட்டியதுபோல இருந்தது. எங்க ளுடைய சந்தோஷமெல்லாம் இருந்த இடம் தெரியாதபடி ஓடி ஒளிந்துகொண்டது. பெருத்த திகிலும் இன்னதென்று சொல்ல முடியாத ஒருவிதக் குழப்பமும் எங்கள் மனசில் உண்டாய்விட்டன நாங்கள் நல்ல வேளை பார்த்து இருவரும் சந்தோஷமாக உட் கார்ந்து பேச ஆரம்பிக்கையிலேயே, போலீஸ்காரன் வந்து கூப்பிட் டது அபசகுனமாகவும் அச்சானியம்போலவு மிருந்தது. என் புரு ஷர் கள்ளச் சாதியில் பிறந்த மனிதராக இருந்தாலும், இரண்டு தடவை அக்கிரமமாக தண்டனை அடைந்தவராதலால், அவருடைய

இயற்கையான மனேஜிடம் போய்விட்டதன்றி, அவர் போலீசா ரென்றாலே அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்தார். அந்த நிலைமையில் அந்தப் போலீஸ் ஜெவான் திடீரென்று வந்து கூப்பிடவே, அவர் ஏதோ பெரிய குற்றத்தைச் செய்துவிட்டவர்போல நடுநடுங்கி திருடனைப்போல விழிக்கத் தொடங்கினர். எங்களுக்கு மறுபடியும் ஏதோ கெடுதல் நேரப்போகிறதென்று அப்போதே என் மனசில் யாரோ சொல்வதுபோல ஒரு தோற்றம் உண்டாயிற்று. உடனே நான் துணிந்து அந்த ஜெவானைப் பார்த்து, "ஐயா! என்னுடைய புருஷரை நான் சிறைச்சாலையிலிருந்து நேராக இங்கே அழைத்து வந்தேன். அதுமுதல் இவர் இந்த இடத்தைவிட்டுப் போகாமல் இவ்விடத்திலேயே இருந்துவருகிறார். இவரை மறுபடி நீங்கள் எந்தப் படுகுழியில் தள்ள எண்ணி இருக்கிறீர்களோ தெரியவில்லையே! என்ன காரணமாக இன்ஸ்பெக்டர் கூப்பிடுகிறார்? அதைச் சொல்லும்" என்றேன். அந்த ஜெவான், "விவரம் எதுவும் எனக்குத் தெரியாது. கையோடு இவரை அழைத்துக்கொண்டு வரும்படி இன்ஸ்பெக்டர் என்னை அனுப்பினர்" என்றான். அதைக் கேட்ட நான், "ஐயா! இன்றையதினம் நாங்கள் விசேஷநாள் கொண்டாடுகிறோம். அதுவும் இப்போது இரவுகாலம்; என்ன பேசவேண்டுமானாலும், நாளையதினம் காலையில் வந்து பேசிக் கொள்ளுங்கள். பொழுது விடிகிறதற்குள், எதுவும் முழுகிப் போய்விடாது. இவர் பேயல்ல, பூதமல்ல, கொள்ளைக்காரரல்ல; ஒரு ராத்திரிக்குள் ஊரையெல்லாம் விழுங்கிவிடமாட்டார்" என்றேன். உடனே ஜெவான், "அவர் பெரிய இன்ஸ்பெக்டர். அவரிடம் இப்படியெல்லாம் முரட்டுத்தனமாக நடந்துகொள்வது கெடுதலாக முடியும். இவரை அவர் அதிகநேரம் காக்கவைக்கமாட்டார்; இரண்டொரு பேச்சில் அனுப்பிவிடுவார். நான் திரும்பிப்போய் இவர் வரவில்லையென்று அவரிடம் சொன்னால், அவர் கோபித்துக்கொண்டு, இவருக்கு விலங்கு போட்டுப் பிடித்து இழுத்துக்கொண்டுவரச் சொல்லுவார். அது உங்களுக்கு இஷ்டமானால் சொல்லுங்கள். நான்போகிறேன்" என்றான். அதைக் கேட்ட என் புருஷர் உடனே எழுந்து, "சரி; ஒரு தவறும் செய்யாதிருக்கையில் எனக்கென்ன பயம். நான் போய்க் கேட்டுவிட்டு வருகிறேன். நீ இரு" என்று சொல்லிக் கொண்டே புறப்பட்டார். அவரைத் தனியாக அனுப்பிவிட்டு, நான் மாத்திரம் வீட்டில் இருக்க என் மனம் இசையவில்லை. ஆகையால், நானும் அவருடன் கூட வருவதாகச் சொல்லிப் புறப்பட்

டேன். நாங்கள் இருவரும் அந்த ஜெவானுடன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனோம். அவ்விடத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் இருந்தார். அதற்குமுன் என் புருஷரைக் கைதி செய்துகொண்டு போன காலத்தில் ஏட் வேலை பார்த்தவருக்கு இன்ஸ்பெக்டர் வேலை ஆய்விட்டதாகச் சொல்லிக்கொண்டார்கள். அந்த இன்ஸ்பெக்டர் என் புருஷரைப் பார்த்தவுடன் கிரம்பவும் கோபித்துத் தாண்டிக் குதித்து. "அடேய்! நாய்ப் பயலே! இதற்குமுன் இரண்டு தடவை ஜெயில் களி தின்று செக்கிழுத்தும், உனக்கு இன்னம் புத்தி வரவில்லையா? முதலில் வீட்டில் கன்னம் வைத்துத் திருடினாய்; பிறகு நகை மூட்டையை அபகரித்தாய்; இப்போது ஒரு ஜதை ஆடுகளைத் திருடி சின்னத்தம்பி வாண்டையானிடம்விற்று உன்னுடைய திரட்டி கலியாணத்துக்கு வேஷ்டி புடவையெல்லாம் வாங்கினாயாம். நீ உன் புத்தியை விடமாட்டாய்போலிருக்கிறது. நீ இனி இந்த ஊருக்குள்ளேயே தலைகாட்டாமல் அடித்து விட்டால்தான் உன் கொட்டம் அடங்கும். அடேய்! யாரடா ஜெவான்கள் இந்தத் திருட்டு நாயை லாக்காப்பில் அடையுங்கள்" என்று சொல்லி என் புருஷருடைய தொடையைப் பார்த்து ஓர் உதை கொடுத்தார். அதைக் கொஞ்சமும் எதிர்பார்க்காத என் புருஷர், "அம்மாடி!" என்று சுருண்டு கீழே விழுந்துவிட்டார். உடனே மற்ற சேவகர்கள் வந்து கூடி அவரைப் பிடித்துக் கருங்கல் தரையில் போட்டுப் பரபரவென்று இழுத்துக் கொண்டு போய்ப் பக்கத்திலிருந்த ஓர் அறைக்குள் போட்டுப் பூட்டி விட்டார்கள். அந்த அக்கிரமத்தைக் கண்டு சகிக்கமாட்டாதவளாய் நான் வாய்விட்டுக் கதறி, "ஐயோ! தெய்வமே! என் புருஷர் ஒரு பாவத்தையு மறியாத பரம ஸாதுவல்லவா. அவர் பேரில் அடாப்பழி சுமத்துகிறீர்களே! நீங்கள் க்ஷேமமா யிருப்பீர்களா! உங்கள் பிள்ளை குட்டிகள் உங்களுக்கு உதவுமா? வேண்டாமையா! இதுவரையில் எங்கள் குடியைக் கெடுத்தது போதும். நடந்து போனதோடு திருப்தியடைந்து இவரை விட்டு விடுங்கள். ஏழை அழுத கண்ணீர் சும்மா விடாது; உங்களுடைய குலத்தை அடியோடு வேரறுத்து நாசம் பண்ணிவிடும். நிரபராதிகளான எங்கள் வயிறு எரிகிறமாதிரி நீங்கள் எரிந்துபோவதற்கு அதிக காலம் பிடிக்காது" என்று சொல்லிப் புலம்பி யழ, அதைக்கேட்டு கிரம்பவும் கோபம் கொண்ட இன்ஸ்பெக்டர் என்னைப் பார்த்து நறநறவென்று பல்லைக் கடித்து, "போ, பிள்ளை! வெளியில். மரியாதையாகப் போய்விடு. இங்கே இருக்கும் ஜெவான்கள் முரடர்கள். துணி துவைப்பதுபோல உன்னைப்

போட்டுத் துவைத்து விடுவார்கள். ஜாக்கிறதை; தாறுமாறான பேச்சைப் பேசினால், உன் முப்பத்திரண்டு பல்களையும் உடைத்து உன் கையில் கொடுத்து விடுவார்கள். மானங்கெட்ட பிசாசே! போ வெளியில்; ஸ்டேஷனுக்குள் நிற்காதே" என்று அதட்டித் தாறுமாறாய் வையத் தொடங்கினர். அதைக் கேட்ட மற்ற ஜெவான்களும் என்னை அதட்டி என்மேல் கைபோட ஆரம்பித்தார்கள். நான் அதற்குமேல் அங்கே இருக்கப் பயந்து, "உங்களுக்கெல்லாம் ஐயனாரப்பன்தான் கூலிகொடுக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டுவெளியில் வந்துவிட்டேன். நாங்கள் முகூர்த்தநாள் ஏற்படுத்தியதையும் அதே காலத்தில் என் புருஷர் கைதியானதையும் நினைக்க நினைக்க, என் வயிறு அகோரமாய்ப் பற்றி எரிந்தது. என் உடம்பு பதறியது. உயிர் பூலோகத்துக்கும்எமலோகத்துக்குமாக ஊஞ்சலாடியது. "ஆ! பாவி! நான் என்ன் ஜென்மமெடுத்தேன்! எத்தனையோ கோடி ஜனங்கள் நிறைந்த இந்த உலகத்தில் வேறு யாருக்காவது இப்படிப்பட்டகதி நேர்ந்ததா? எனக்கு மாத்திரமா இவ்விதமான விபரீதம் நேரவேண்டும்! பாழும் தெய்வமே! உனக்குக் கண்ணில்லையா? யாதொரு குற்றமும்செய்யாதநிரபராதியை இப்படிப்பட்டகொடுமைக்குஉள்ளாக்குகிறார்களே!எல்லாவற்றையும்பார்த்துக்கொண்டு நீ கல்போலச்சும்மா உட்கார்ந்திருக்கிறாயே! ஐயோ! என் வயிறு பற்றி எரிகிறதே! என் உயிர் தள்ளாடுகிறதே! எங்களை இப்படிப்பட்ட மானக் கேட்டிற்கு ஆளாக்குவதை விட, எங்களுடைய உயிர் போய்விடும்படி செய்து விடக் கூடாதா" என்று பலவாறு பிரலாபித்து அழுது புலம்பிக் கொண்டே நான் அந்த ஸ்டேஷனுக்கெதிரில் நடுப்பாதையிலேயே படுத்திருந்து இரவைப் போக்கினேன். இது நேற்றைய தினம் நடந்தது. இன்றைய தினம் இந்த வழக்கு நியாயாதிபதியின் முன் விசாரணைக்கு வந்தது என் புருஷர் ஆடுகளைத் திருடிவிட்டதாக யாரோ சிலர் பொய்ச்சாட்சி சொன்னார்கள். நியாயாதிபதி அதை உண்மையென்று நம்பி இதற்குமுன் இரண்டு தடவை என் புருஷர் தண்டனை அடைந்ததைக் கருதி, அவருக்குப் பத்துவருஷத்திற்குக் கடுங்காவல் தண்டனை கொடுத்துவிட்டார். அவரைத் திருவனந்தபுரம் பெரிய சிறைச்சாலையில் அடைப்பதற்காக ஜெவான்கள் அழைத்துக் கொண்டு போகிறார்கள். மேல் நியாயஸ்தலத்தில் அப்பீல்செய்து கொள்வதற்கு ஏராளமாகப்பணம்வேண்டுமாம். என்னிடம் இருந்த பணமெல்லாம் செலவாகி விட்டது. ஐயோ! என் புருஷர் இந்தப் பத்து வருஷகாலத்தையும் கடத்திவிட்டு மறு

படியும் வரப்போகிறார்! அவருடைய முகத்தை நான் இனி பார்க்கப் போகிறேனே! பாழுந்தெய்வம் எங்கள் எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டதே! எங்கள் வீட்டு விளக்கை அணைத்து, என்னைக் கன்னிகழியாமல் அடிக்கிற அந்த இன்ஸ்பெக்டருடைய தலையில் இன்னமும் இடி விழாமல் இருக்கிறதே! இவன் ஏழேழு தலைமுறைக்கும் என்னைப்போல வயிறெரிந்து திண்டாடித் தவிக்க வேண்டும். இத்தனைக்கும் வாயையே திறக்காமல் என் புருஷர் தலையைக் குனிந்துக்கொண்டு போகிறாரே! அந்தப் பொறுமையொன்றே இந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டர் அழிந்து நாசமாய்ப் போகச்செய்து விடப்போகிறது பாருங்கள். இந்த சமஸ்தானத்தில் யாரோ தெற்கத்தி முதலியார் ஒருவர் திவானாக வந்திருக்கிறாரும். அவருடைய சொந்த தேசத்திலிருந்து யாரோ பல முதலிமார்களை அந்த திவான் கொண்டுவந்து வேலையில் வைத்திருக்கிறாராம். இந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டரும் அவர்களுள் ஒருவனும். இவன் வந்தபோது சாதாரண ஜெவானாக வந்தானும். இங்கே வந்து, பொய் வழக்கு ஜோடித்து நல்லகெட்டிக்காரன் என்று பெயர் வாங்கி இப்போது இன்ஸ்பெக்டர் வேலைக்கு வந்திருக்கிறானும். நீங்கள் என் புருஷரைப்பற்றி அந்த திவானிடம் சிபார்சு செய்தால்கூட அவர் எங்கள் விஷயத்தில் இரக்கங்கொள்ள மாட்டார்; தங்களுடைய சொந்தஊர் மனிதரிடத்திலேயே தாக்ஷண்யம் பாராட்டுவார். இனி எங்களுக்கு தெய்வ சகாயத்தினுல் நல்ல காலம் பிறந்தால் பிறக்கலாமே யன்றி மனிதரால் நன்மை ஏற்படுமென்று நான் நினைக்கவில்லை இதற்குமுன் இரண்டு தடவை நான் எப்படியோ சகித்துக்கொண்டு இருந்து விட்டேன். இந்தத் தடவை என்னுல் சகிக்க முடியவில்லை. நானும் கூடவேபோகிறேன். என்புருஷர் சிறைச்சாலைக்குள் போனவுடன், நான் திவானுடைய வீட்டு வாசலில் நின்று பெரிய கல்லை எடுத்து என் தலையை உடைத்துக்கொண்டு அப்படியே விழுந்து செத்துப்போகப் போகிறேன். அதுதான் என்னுடைய முடிவான தீர்மானம். என்னை யாரும் தடுக்கவேண்டாம். பேசாமல் விட்டு விடுங்கள்'' என்று கூறிக் கோவெனக் கதறியழுது கண்ணீரை மாலை மாலையாய் ஓடவிட்டாள்.

அவளது பரிதாபகரமான வரலாற்றைக் கேட்டுக்கொண்டே இருந்த திவான் முதலியாருடைய மனைவி, சிறிது தூரத்தில் நின்று அந்த விருத்தாந்தங்களைக் கேட்டுக் கண்கலங்கி நின்ற தனது கண

வனை நோக்கி, "எனக்குமயக்கம் வருகிறது. நான் கீழே விழுந்துவிடு வேன்போ லிருக்கிறது. என்னைக் கொண்டுபோய் மோட்டார்வண் டியில் விட்டுவிடுங்கள்" என்று மிருதுவாகக் கூறினாள். அதைக் கேட்ட மற்றஜனங்களெல்லோரும் தங்கள் ஊர்ப்பெண்பிள்ளையைக் கவனிப்பதை விட்டு திவானுடைய மனைவியை உற்றுக் கவனித்த னர் பக்கத்திலிருந்து, அந்தப் பரிதாபகரமான வரலாற்றைக் கேட் டுக் கொண்டிருந்த திவான் உடனே ஓடித் தமது மோட்டார் வண்டி யைக் கொணர்ந்து அதன் கதவைத் திறந்து தமது மனைவியைப் பிடித்து அழைத்துக் கொண்டுபோய் அதில் ஏற்றி உட்காரவைக்க, அந்த அம்மாள் பொறிக் கலக்க மடைந்தவளாய் அப்படியே சாய்ந்து விட்டாள்.

அப்போது நமது திவான் முதலியாரது நிலைமை இருவிதத்தில் துன்பகரமாக இருந்தது. தமது ஆளுகையில் அத்தகைய பாமபாத கச் செய்கையைப் போலீசார் செய்கிறார்களே என்ற நினைவினால் அவரது தேகமும் மனமும் கட்டிலடங்காமல் பதறின. அந்த யௌவன தம்பதிகளின் இல்லற வாழ்க்கை அநியாயமாய்ச் சீர்குலைந்து போய் விட்டதேயென்ற பரிதாபமும் மனஇளக்கமும்தோன்றி அவ ரை அபாரமாய் வதைத்து அவரது மனத்தை நிலைகுலைக்கலாயின. அதோடு, அந்த வரலாற்றைக் கேட்ட; மிருதுவான தன்மையுடைய தமது மனையாட்டின் மனம் விஸனத்தைத் தாங்கமாட்டாது உட் கார்ந்து போய்விட்டதைப்பற்றிய பெருங்கவலையும் அவரை மிகுந்த சஞ்சலத்திற்குள்ளாக்கியது. தாமே அந்த சமஸ்தானத்தின் திவான் என்பதை அப்போது தாம் வெளியிடுவது உசிதமல்லவென்று முடிவு செய்துகொண்ட முதலியார் தமது மனையாட்டி வண்டியில் உட்கார்ந் தவுடன், முன்னே குறிக்கப்பட்ட யௌவன ஸ்திரீயின் முன்னர் போய் நின்று, "அம்மா! இந்தப் போலீசார் உன்னுடைய புருஷ ரைத் திருவனந்தபுரம் சிறைச்சாலைக்குத்தான் கொண்டுபோவார்கள். நீ அவ்வளவு தூரம் நடந்துவர உன்னால் சாத்தியப்படாது. நீ வந்து எங்களுடைய மோட்டார் வண்டியில் என் சம் சாரத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொள் நாங்கள் இன்னம் கொஞ்சநேரத்தில் உன்னை அந்த ஊரில் கொண்டுபோய் விட்டு, உன்னுடைய வரலாற்றை திவானிடம் தெரிவிக்கிறோம். அவர் உட னே இதைப்பற்றி விசாரித்து, நீ சொல்லுகிற வரலாறு நிஜமான தாயிருந்தால், உன் புருஷரை விடுவிக்க உத்தரவு செய்வார். நீ

அவரை அழைத்துக்கொண்டு ஊருக்கு வந்து சேரலாம்" என்று அன்பு ததும்பிய குரலில் கூறினார். வீரம்மாள் என்ற பெயர் கொண்ட அந்த யௌவன ஸ்திரீ திவான் கூறிய சொற்களைக் கேட்டு, எதிர்பாராத அத்தகைய அதிர்ஷ்டம் தங்களுக்கும் நேருமா என்ற மலைப்பும் வியப்பும் அடைந்து, அவர் கூறியது மெய்யோ பொய்யோ என்பதை நிச்சயிக்க மாட்டாதவளாய்ச் சிறிதுநேரம் தயங்கி மௌனமாக நின்றாள். அவளுக்குப் பக்கத்திலிருந்த ஜனங்களெல்லோரும் திவானது சொற்களைக் கேட்டு மிகுந்த களிப்பும் பிரமிப்பு மடைந்து, "வீரம்மா! இந்த ஐயா சொல்கிறது போலச் செய். இந்த ஐயாவும் அம்மாளும் பார்வதி பரமசிவன்போலவே இருக்கிறார்கள். உங்களுக்கு இனிநல்லகாலம் பிறக்கும். கவலைப் படாதே; நீ போய் வண்டியில் உட்கார்ந்துகொள். இவர்கள் உன்னை நல்ல வழியில் விடுவார்கள்; போய், அம்மாளுக்குப் பக்கத்தில் குந்திக்கொள்" என்று வற்புறுத்திக் கூறினர். அதைக் கேட்ட வீரம்மாள் ஆறுதலும் சந்தோஷமும் அடைந்தவளாய்ச் சென்று மோட்டார் வண்டியில் ஏறி திவான் முதலியாரது மனையாட்டிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். தங்களுடைய வாழ்நாள் முழுதும் பாழ்த்து வீணாய்ப் போய்விட்டதென்றும், இனி தாங்கள் தப்ப வகையில்லையென்றும், தங்களது துன்பம் துயரம் முதலியவற்றிற்குப் பரிகாரமாகத் தான் தனது உயிரை மாய்த்துக்கொள்வதே முடிவென்றும் தீர்மானித்திருந்த வீரம்மாளுக்கு நமது திவான் முதலியாரும் அவரது மனையாட்டியாரும் ஆதரவளித்தது தெய்வமேநேரில் தோன்றி அபயப் பிரதானம் கொடுத்ததுபோல இருந்ததன்றி, ஒருவித நம்பிக்கையையும் மனோதிடத்தையும் இன்பகரமான மன எழுச்சியையும் உண்டாக்கியது. உடனே திவானும் ஏறி உட்கார்ந்து கொண்டு, தமது மனைவியை நோக்கி, "உனக்கு உடம்பு இப்போது எப்படி இருக்கிறது? நாம்போகலாமா? உனக்குவேண்டுமானால் இந்தக் குளத்திலிருந்துகொஞ்சம் ஜலம்கொண்டுவந்துகொடுக்கட்டுமா?" என்று கூற, அந்த அம்மாள் சிறிது தெளிவடைந்து, "இப்போது உடம்பு கொஞ்சம் சரிப்பட்டுவிட்டது. நேரமாகிறது. நாம் ஊருக்குப் போகலாம்" என்றாள்.

உடனே திவான் முதலியார் தமது மோட்டார் வண்டியை விடுத்துக்கொண்டு சென்று இரண்டு நாழிகை காலத்தில் திருவனந்தபுரத்தை யடைந்து தமது மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தார். அப்

போது இரவு வேளை வந்துவிட்டது. வீரம்மாளுக்குத் தமது மாளிகையிலேயே போஜன மளித்து, அன்றைய இரவில் தன்னுடன் கூடவே வைத்திருக்கும்படி தமது மனைவிக்கு உத்தரவு பிறப்பித்து விட்டு, திவான் தமது பிரத்தியேக விடுதியை அடைந்து தமது கையாலேயே சில தாக்கீதுகள் தயாரித்துத் தமது சேவகர்கள் மூலமாய்ச் சில உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பினார். அன்றைய இரவில் அவருக்கும் அவரது மனையாட்டிக்கும் போஜனத்திலாவது நித்திரையிலாவது மனம் நாட்டங் கொள்ளவில்லை. வீரம்மாளின் மனநிலைமையும் அதுபோலவே இருந்ததானாலும் திவான் முதலியாரின் மனையாட்டி தனக்குச் செய்த உபசரணையைத் தடுக்க லாற்றாதவளாய்ச் சிறிதளவு போஜனமுண்டு வசதியான படுக்கையில்சயனித்து அந்த இரவைப் போக்கினாள். பெருத்த அரண்மனைபோலத் தோன்றிய அந்த மாளிகையின் வைபவங்களைக் கண்ட வீரம்மாள் முற்றிலும் பிரமிப்பும் திக்பிரமையும் கொண்டு, அதன் சொந்தக்காரர்களும், அவ்வளவு பட்சமாக அழைத்துவந்து உபசரித்து வைத்திருப்பவர்களுமான அந்த உத்தமகுண தம்பதிகள் யாரோ, எந்த நிலைமைக்குரியவர்களோ என்பதை யறியாது மனத்தடுமாற்ற மடைந்தவளாய் அன்றைய இரவைக் கழித்தாள்.

மறுநாட் காலையில் திவான் முதலியார் தமது ஸ்நானம் பூஜை முதலியவைகளை முடித்துக்கொண்டு தமது மாளிகையிலேயே கச்சேரியாக உபயோகித்து வந்த ஒரு பெருத்த மண்டபத்தில் தமது ஆசனத்தில் உட்கார்ந்து, எதிரில் மேஜைமீது கட்டுக் கட்டாய்க் கிடந்த சமஸ்தான சம்பந்தமான காகிதங்களையும் தஸ்தாவேஜுகளையும் ஒவ்வொன்றாய் எடுத்துப் படித்து உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தார். சிறிது தூரத்தில் மறைவாக ஐந்தாறு சேவகர்கள் அவரது பணிவிடைகளைச் செய்வதற்கு ஆயத்தமாக நின்று கொண்டிருந்தனர்.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஒரு சேவகன் திவானுக்கெதிரில் மெதுவாக வந்து நின்று, 'எஜமானே! போலீஸ் இன்ஸ்பெக்டர் ருக்மாங்கத முதலியார் வந்திருக்கிறார். சரியாய்ப் பத்து மணிக்கு அவர் இங்கே வந்து எஜமானைப் பார்க்க வேண்டுமென்று எஜமானுடைய உத்தரவு ஆனதாம். அதற்காக வந்தாராம்" என்றான்.

உடனே திவான் தாம் செய்த வேலையை நிறுத்திவிட்டு நிமிர்ந்து, "சரி; அவரை உள்ளே அனுப்பு" என்றார். சேவகன்

உடனே வெளியில் போய் இன்ஸ்பெக்டரை உள்ளே அனுப்பினன். அவர் அஞ்சி நடுங்கிப் பதுங்கி ஒதுங்கித் தமது தேகத்தைக் குன்ற வைத்துக்கொண்டு திவானுக்கெதிரில் வந்து குனிந்து நமஸ்காரம் செய்தார். திவான் என்ற பதவி, மகாராஜனுக்குப் பிரதிநிதி ஸ்தானமாதலால், போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலிய அற்ப உத்தியோகஸ்தர்கள் திவானுடன் பேசும் சந்தர்ப்பம் கூடக் கிடைப்பதே அரிது. அவராகவே தம்மைப் பார்க்கவேண்டுமென்று வரவழைத்திருந்ததைக் கண்டு, இன்ஸ்பெக்டர் அதன் காரணம் இன்னதென்பதையும், அது நன்மைக்கோ, கெடுதலுக்கோ என்பதையும் அறியமாட்டாமல் தத்தளித்துக் கலவரமடைந்து வந்திருந்தாராகையால், திவானினது முகத்தோற்றத்தை அறிந்துகொள்ளுகிற வரையில் இன்ஸ்பெக்டரது உடம்பில் பிராணனே இல்லையென்று கூறவேண்டும். திவானினது முகம் சந்தோஷமும் புன்னகையும் தோற்றுவித்ததைக் காணவே, இன்ஸ்பெக்டருடைய உயிர் திரும்பியது. அவரது மனது துணிபும் உற்சாகமும் கொண்டது. தமக்கு ஏதோ நன்மை செய்யக் கருதியே திவான் தம்மை வரவழைத்திருக்கிறார் என்று இன்ஸ்பெக்டர் நிச்சயித்துக்கொண்டு குனிந்து அவருக்குக் கூழைக்கும்பிடு போட்ட வண்ணம் நின்றார்.

உடனே திவான், "ஐயா! இன்ஸ்பெக்டரே! இப்படி வந்து நாற்காலியில் உட்காரும்" என்று அன்போடும் நயமாகவும் கூறி உபசரித்தார். அதற்குமுன் எந்த திவானும் எந்த இன்ஸ்பெக்டருக்கும் காட்டியிராத அவ்வளவுபெரிய மரியாதை தமக்குக் காட்டப்படுவதைக் கண்ட இன்ஸ்பெக்டர் ஆநந்த பரவசமடைந்து பூரித்துப்போய்ச் சிறிது தயங்கி நின்றார். அதைக் கண்ட திவான், "ஐயா! ஏன் யோசிக்கிறீர்? வந்து உட்கார்ந்துகொள்ளும். நீரும் தஞ்சாவூர் மனிதர். நானும் தஞ்சாவூர் மனிதன்; நீரும் முதலியார் நானும் முதலியார். நாம் நமது குடும்பப் பூர்வோத்திரங்களை விசாரிக்கப்போனல், ஒருவருக்கொருவர் தூர பந்துவாகக்கூட இருப்போம். நான் வெளியில் வரும்போது உத்தியோக தோரணையே யன்றி, என் வீட்டிற்குள் அதையெல்லாம் நான் வகித்துக் கொள்வதில்லை. இங்கே நான் எல்லாரோடும் சிநேகபாவமாகத்தான் இருப்பதுவழக்கம். பரவாயில்லை, வந்து உட்காரும்" என்று பட்சமாகக் கூறி உபசரிக்க, உடனே இன்ஸ்பெக்டர் நிரம்பவும் களிப்படைந்து அருகில் நெருங்கி வந்து ஓர் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டார்,

உடனே இவன், "ஐயா! முதலியாரே! நான் உம்மை ஒரு முக்கியமான காரியார்த்தமாக வரவழைத்தேன். இப்போது இந்த சமஸ்தானம் முழுதிற்கும் ஒரே ஒரு போலீஸ் சூப்பரின்டெண்டெண்டு இருப்பது உமக்குத் தெரிந்த விஷயம். இதை இரண்டு பிரிவாகப் பிரித்து இன்னொரு புதிய சூப்பரின்டெண்டெண்டை வைக்க வேண்டுமென்று ஒரு யோசனை இருந்துவருகிறது. அதற்கு மகாராஜனுடைய அநுமதி கிடைத்துவிடுமென்றே எதிர் பார்க்கிறேன். அந்தப் புதிய உத்தியோகத்திற்கு நல்ல படிப்பாளியாகப் பார்த்து ஒருவரை நேராக நியமிக்கவேண்டுமென்பதுமகாராஜனுடைய எண்ணமாயிருக்கலாம். இந்த சமஸ்தானத்தில் இப்போது இருக்கும் இன்ஸ்பெக்டர்களுள் அதிக திறமை வாய்ந்தவர் யாரோ அவரை நியமிக்க வேண்டுமென்பது என்னுடைய எண்ணம். நம்முடைய சமஸ்தானத்தில் உள்ள இன்ஸ்பெக்டர்களின் ஜாப்தா வொன்றை நான் தருவித்துப் பார்த்ததில் உம்முடைய பெயர் ருக்மாங்கத முதலியாரென்றும், உம்முடைய சொந்த இடம் தஞ்சாவூரென்றும் எழுதப்பட்டிருந்தன. அந்த விவரத்தைப் பார்த்தவுடனே, எல்லோரிலும் நீரே திறமைசாலியாக இருப்பீரென்று நான் உடனே தீர்மானித்துக் கொண்டு, உமக்கே இந்த வேலையைக் கொடுக்க வேண்டுமென்ற நினைப்போடு உம்மை வரவழைத்தேன். இந்தக் காலத்தில் நம்மவர்க்குள் ஜாதியபிமானம் குறைந்து போய்விட்டது. வெள்ளைக்காரர்களைப் பாரும். அவர்கள் ஒருவருக்கொருவர் விட்டு கொடுக்காமல், எவ்வளவோ உதவி செய்து ஒருவரையொருவர் உத்தியோகத்தில் ஆகாசத்தில் தூக்கி விடுகிறார்கள். அப்படிச் செய்ய நம்மவர்கள் பயப்படுகிறார்கள். சுயஜாதியார் ஒருவருக்கு வேலை செய்துகொடுத்தால், தன்னுடைய வேலை போய்விடப் போகிறதே என்கிற பயமும் சுயநலமுமே பெரிதாக இருந்து வருகின்றன. என் சுபாவம் அப்படிப்பட்டதல்ல. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய கொள்கை. நம்மிடம் அதிகாரமிருக்கிறவரையில் நம்மாலான உதவிகளை நம்முடைய சுய ஜாதி மனிதர்களுக்கு செய்ய வேண்டுமென்பது என்னுடைய ஆசை. நான் இந்த வேலையை உமக்குச் செய்து வைக்கிறேன். நீர் எனக்கு அவமானம் தேடி வைக்காமல் திறமையாக நடந்து கொள்ளுவீரா? உம்முடைய தர்பாரில் நீர் ஏராளமான குற்றவாளிகளைப் பிடித்துத் தண்டனைக்குக் கொண்டு வரவேண்டும். வழக்கு பொய்யானதோ நிஜமானதோ அதைப்பற்றி அக்கரையில்லை

நீர் தண்டனை செய்துவைத்த வழக்குகளின் தொகை பெரிய தொகையாக இருக்கவேண்டும். அந்த வாக்குறுதியை நீர் எனக்குச் செய்து கொடுப்பீரா?" என்றார். அதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் ஆநந்தத்தினால் மெய்ம்மறந்துபோய், "அவசியம் நான் தங்கள் பிரியப்படி நடந்துகொள்ளுவேன். என்னால் தங்களுக்கு ஒரு நாளும் கெட்ட பெயர் வரவே வராது. மகா திறமைசாலியான இன்ஸ்பெக்டரை திவான் நியமித்தார் என்று எல்லோரும் தங்களைப் புகழும்படி நான் வெகு சீக்கிரத்தில் செய்வேனென்பதைத் தாங்கள் உறுதியாக வைத்துக்கொள்ளலாம்" என்றார்.

அதைக் கேட்ட திவான் முகமலர்ச்சி காட்டி, "சரி; சந்தோஷம். உமக்கே நான் இந்த வேலையைச் செய்து வைக்கிறேன். உம்மை இந்த உத்தியோகத்தில் நியமிப்பதற்கு நான் உம்மைப்பற்றி ஏதாவது சிபார்சு செய்யவேண்டுமாகையால் உம்முடைய வரலாறு கொஞ்சம் எனக்குத் தெரியவேண்டும். நீர் முதலில் என்ன வேலையிலிருந்தீர்? பிறகு என்னென்ன வேலைக்கு உயர்த்தப்பட்டு இந்த இன்ஸ்பெக்டர் வேலைக்கு வந்தீர்? நீர் ஏதாவது நல்ல வழக்குகளில் குற்றவாளிகளை தண்டனைக்குக் கொண்டுவந்து உத்தியோக உயர்வை அடைந்ததுண்டா? நீர் ஏதாவது பொய்வழக்குஜோடித்து நியாயாதிபதிக்குத் தெரியாதபடி திறமையாக அதை நடத்தி, கைதிகளைத் தண்டித்ததுண்டா? எல்லா விவரங்களையும் என்னிடம் நீர் உள்ளபடி சொல்லவேண்டும். உம்முடைய சாமர்த்தியம் எவ்வளவு என்பது என் மனசாரத் தெரியவேண்டும். நீர் பொய்வழக்கு ஜோடித்ததைப்பற்றி நான் உம்மேல் கோபங் கொள்வேனென்று நீர் கொஞ்சமும் பயப்படவேண்டாம். இந்தப் போலீஸ் இலாகாவில் பொருத்தமாகப் பொய் சொல்வதும், நிஜம்போலக் குற்றவாளிகளை நிர்மாணம் செய்வதும் இகழ்வல்ல. அதுதான் போலீசாருக்கு அத்யாவசியமான யோக்கியதை. ஆகையால், நீர் என்னிடம் எதையும் ஒளிக்காமல் உண்மையைச் சொல்லலாம். நீர் ஆதியிலிருந்து நடத்திய எல்லா வழக்குகளையும் சொல்லவேண்டாம். அவைகளைக் கேட்க, எனக்கு இப்போது அவகாசயில்லை. கடைசியிலிருந்து சில வழக்குகளைச் சொல்லும்" என்றார்.

அவர் கூறியது உண்மையென்றே நம்பிய போலீஸ் இன்ஸ்பெக்டர், "எஜமானுக்குத் தெரியாத விஷயமொன்றுமில்லை. போலீஸ் இலாகாவில் பொய் சொன்னால்தான் நல்ல பெயரும் உத்தியோக

உயர்வும் ஏற்படுகின்றன. பொய்சொல்லாமல், உண்மையாய்நடக்கி றவர்கள் வெகுசீக்கிரம் தம்முடைய உத்தியோகத்தையும் இழந்து வீட்டுக்குப் போய்ச் சேரவேண்டியிருக்கிறது. நான் முதன் முதலில் 4-வது வகுப்பு ஜெவான் வேலையில் அமர்ந்தேன், என்னோடு கூட ஜெவான் எட்டு முதலிய வேலைகளுக்கு வந்தவர்களும், எனக்கு முன்னுகவே அந்த வேலைகளில் இருந்தவர்களும் இன்னமும் அதே நிலைமையில் இருந்து வருகிறார்கள். நான் கண்டுபிடித்து நியாயஸ்த லத்துக்கு அனுப்பிய குற்றவாளிகள் எல்லோரும் தவறாமல் தண் டனை அடைந்து விட்டார்கள். ஒவ்வொரு வழக்குக்கு ஒவ்வொரு படியாக என் உத்தியோகம் உயர்ந்தது. நான் வெகு சீக்கிரத்தில் முதல் வகுப்பு ஜெவான் ஆனேன்; பிறகு கடைசி வகுப்பு எட்டு வேலைக்குவந்து படிப்படியாக உயர்ந்து முதல்வகுப்பு எட்டுஆனேன் அதிலிருந்து எனக்குக் கடைசி வகுப்பு இன்ஸ்பெக்டர் உத்தி யோகம் கிடைத்தது. நேற்றையதினம் சிந்தா நாஸ்தி என்ற ஊரி லுள்ள ஒரு கள்ளனுக்கு ஒரு வழக்கில் பத்து வருஷ தண்டனை செய்து வைத்தேன். அதனால் எனக்கு முதல்வகுப்பு இன்ஸ்பெக்டர் வேலை ஆகுமென்று நான் நினைத்திருந்தேன். இந்த சமயத்தில் புதி தாய் ஒரு சூபரின்டென்டெண்டு வேலையை உற்பத்தி செய்யப்போ வதாய்த் தாங்கள் சொல்லுகிறீர்கள்? அந்த வழக்கில் நான் குற்ற வாளியைத் தண்டனைக்குக் கொண்டுவந்த திறமையையே தாங்கள் ஆதாரமாக வைத்துக்கொண்டு எனக்கு அந்த சூபரின்டென் டெண்ட் வேலையைச் செய்துவைக்கலாம்" என்றார்.

திவான் :—(சந்தோஷமாகப் புன்னகை செய்து) ஓகோ! அப் படியா! நல்லதாயிற்று. அதுவே போதுமானது. அந்தக் கள்ளன் என்ன குற்றம் செய்தான்?

இன்ஸ்பெக்டர் :—அவன் இரண்டு ஆடுகளைத் திருடி விற்ற தாகக் குற்றம் சுமத்தப்பட்டான்.

திவான் :—(புன்னகையோடு) அவன் குற்றம் சுமத்தப் பட் டான் என்றால், உண்மையில் அவன் அந்தக் குற்றத்தைச் செய்ய வில்லை யென்று அர்த்தம் ஆகிறது. அப்படித்தானே?

இன்ஸ்பெக்டர் :—(புன்னகையோடு) ஆம். ஆடுகளைத் திருடி னவன் வேறே ஒருத்தன். அவன் ஆடுகளை விற்றுப் பணத்தை எல் லாம் செலவுக்கு வைத்துக் கொண்டு ஊரைவிட்டு சிங்கப் பூருக்கு

ஓடிப் போய்விட்டான். அவனுக்குப் பதிலாக இந்தக் கள்ளப்பையனைப் பிடித்துத் தண்டனை செய்துவைத்தேன்.

திவான் :—இரண்டு ஆடுகளைத் திருடிய குற்றத்திற்காக அவனுக்குப் பத்து வருஷ தண்டனைகொடுக்கவேண்டியகாரணமென்ன?

இன்ஸ்பெக்டர் :—அவன் இதற்குமுன் இரண்டுதடவைகளில் நகைகளைத் திருடியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு, முதலில் ஒரு வருஷ தண்டனையும், பிறகு ஏழுவருஷ தண்டனையும் அடைந்தான். ஆகையால், அவனைப் பிடித்துத் தண்டனை சைய்துவைத்தால் தான், முதல் வகுப்பு இன்ஸ்பெக்டர் வேலை கேட்கலாமென்று நினைத்து நான் அவனைக் குற்றவாளியாக்கி தண்டனை செய்துவைத்தேன்.

திவான் :—ஓகோ! அப்படியா நீர் செய்தது நிரம்பவும் உசிதமான காரியமே. இதற்குமுன் அந்தக் கள்ளப் பையனுக்கு தண்டனை செய்து வைத்ததாகச் சொல்லுகிறீரே. அந்த வழக்குகளிலும், உண்மையில், அவன் குற்றம் செய்யவில்லையே?

இன்ஸ்பெக்டர் :—செய்யவில்லை.

திவான்:—அவனுக்கு இதற்குமுன் நீர் செய்துவைத்தஇரண்டு தண்டனைகளுக்காகவும் உமக்கு ஏதாவது உத்தியோக உயர்வுகிடைத்ததா ?

இன்ஸ்பெக்டர் :—ஆம்; கிடைத்தது. முதலில் அவனுக்கு ஒரு வருஷ தண்டனை செய்து வைத்தவுடன், அதற்காக மேல் அதிகாரிகள் என்னை மெய்ச்சி, எனக்கு முதல்வகுப்பு ஏட்டு வேலைகொடுத்தார்கள். பிறகு நான் அவனுக்கு ஏழு வருஷ தண்டனை செய்து வைத்தவுடன், எனக்கு இன்ஸ்பெக்டர் உத்தியோகம் கிடைத்தது.

திவான் :—(வேடிக்கையாகச் சிரித்து) ஓகோ; பேஷ்! பலே! அந்த ஒரே கள்ளப் பையன் உமக்கு ஏட்டு வேலை, இன்ஸ்பெக்டர் வேலை எல்லாம் செய்து வைத்தது போதாமல், இப்போது சூபரின்டெண்டு வேலையையும்செய்து வைக்கப்போகிறுன்; ஏன் அப்படிச் சொல்லுகிறது—செய்துவைத்து விட்டானென்றே நீர் நினைத்துக்கொள்ளலாம். அந்த ஒரே மனிதனுல், உமக்கு இந்த மாதிரி உத்தியோகம் மளமளவென்று உயர்ந்ததிலிருந்து, அவனை அதிர்ஷ்டசாலியென்று சொல்லுவதா, உம்மை அதிர்ஷ்டசாலியென்று சொல்வதா என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. இருந்தாலும், நீர் அச

காய சூரரென்றுதான் சொல்லவேண்டும். கொஞ்சம்கூட சம்பந்தப்படாத ஒரு மனிதன் மேல் ஒன்றன்பின் ஒன்றுப் பல குற்றங்களைச் சுமத்துவதென்றால், அது மற்றவரால் சுலபமாகச் செய்யக்கூடிய காரியமல்ல. அப்படிச் செய்ய எப்பேர்ப்பட்டவருடைய மனமும் கொஞ்சம் பின்வாங்கும். நீர் எதற்கும் பின்வாங்காத மகா திடமான மனசையுடையவர். போலீஸ் இலாகாவுக்கு உம்மைப் போன்ற மனிதர்கள்தான் சரியானவர்கள்! அதிருக்கட்டும், இந்த மூன்று வழக்குகளிலும் இந்தக் கள்ளப் பையன் சம்பந்தப்படவே இல்லை யென்று சொன்னீரே. அவைகளுக்கு வேண்டிய சாட்சிகளுக்கு என்ன செய்தீர்?

இன்ஸ்பெக்டர்:—சாட்சிகளுக்குத்தானா பஞ்சம். பட்டிக்காடுகளின் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் என்றால்சிம்ம சொப்பனமல்லவா. எங்களுக்கு நடக்கும் செல்வாக்கு ஒரு மகாராஜாவுக்குக் கூட அங்கே நடக்காது. நாங்கள் சாதாரணமாய் எந்த மனிதனோடும் பேசுகிறதில்லை. எவனையாவது நாங்கள் கூப்பிட்டு ஸ்டேஷனுக்குள் கொண்டுபோய்வைத்துக்கொண்டுசிநேகபாவமாய்ப்பேசிவிட்டால், அதுவே போதும். அவன் உடனே தனக்கு நிகர் யாருமில்லை யென்றும், தனக்கு ஒரு பெரிய பதவி வந்து விட்டதாகவும் நினைத்துக் கொள்வதோடு, நாங்கள் எதைச் செய்யச் சொன்னாலும் செய்ய உடனே இணங்கி விடுகிறான். எங்களோடு சிநேகமாயிருந்தால் தனக்கும்நல்ல செல்வாக்கு ஏற்படுமென்றுநினைத்துக்கொண்டு நாங்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் அவன் வருவான். பொய்ச் சாட்சிக்கு ஆள்கள் வேண்டுமானால், ஒரு நிமிஷத்தில் ஆயிரம் பேரானாலும் கிடைத்து விடுவார்கள்" என்றார்.

உடனே திவான், "ஓகோ! அப்படியானால் உங்கள் வேலைசுலபமானதுதான்; உமக்கு மனைவிமக்கள் இருக்கிறார்களா? சொத்துஏதாவது இருக்கிறதா?" என்றார்.

இன்ஸ்பெக்டர், "என் சம்சாரம் இறந்து போய்விட்டாள். குழந்தை குட்டிகள் முதலிய நச்சு எதுவுமில்லை. நான் சேர்ப்பாக ஒரு தட்டாரப் பெண்பிள்ளையை வைத்துககொண் டிருக்கிறேன். எனக்கு அதிக சொத்து ஒன்றுமில்லை. பாங்கியில் 1000-ரூ. போட்டிருக்கிறேன். அவ்வளவுதான்" என்றார்.

அதைக் கேட்ட வுடனே திவான் கனைத்துக்கொண்டு கம்பீரமாக நிமிர்ந்தார். அவரது முகக்களை உடனே மாறி, அதுவரையில்

அவர் அந்த இன்ஸ்பெக்டருடன் கபடமாகப் பேசினு ரென்பதை எளிதில் காட்டியது. அவ்வாறு நிமிர்ந்தவர் முன்னே பேசியதை விடச் சிறிது உரத்த குரலில் பேசத்தொடங்கி, 'ஐயா! இன்ஸ்பெக்டர் சொன்ன விஷயங்களை எல்லாம் கேட்டுக்கொண்டீர்களா? இனி நீங்கள் மறைந்திருக்கவேண்டிய அவசியமே இல்லை. இங்கேயே வந்துவிடலாம்" என்று தமக்கு வலது பாகத்தில் இருந்த ஓர் அறையை நோக்கிக் கூறினுர்.

அடுத்த நிமிஷத்தில் அந்த அறையின் கதவு திறந்துகொண்டது. அந்த சமஸ்தானத்துப் போலீஸ் சூபரின்டென்டெண்டும், முதல் நாள் வீரம்மாளின் புருஷனைத் தண்டித்த நீதிபதியும், இன்னம் இரண்டு முக்கிய அதிகாரிகளும் தபதபவென்று திவானிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர். திவான் அவர்களை அழைத்ததைக் கேட்டு, அவர்கள் வந்ததைக் கண்ட இன்ஸ்பெக்டர் திடுக்கிட்டு அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டார். அவரது உயிரில் பெரும் பாகமும் எமனுலகத்திற்குப் போய்விட்டதென்றே கூறவேண்டும். கையும் களவுமாய்ப் பிடிபட்ட கள்வனைப்போல அவர் திருட்டு விழி விழிக்கிருர். அவரது கைகால்கள் வெடவெடவென்று ஆடுகின்றன. உடம்பு திடுக்கு திடுக்கென்று தூக்கிப் போடுகிறது. பெருத்த திகிலும், குழப்பமும் எழுந்து அவரது மனத்தைக் கப்பிக்கொள்ளத் தொடங்கின. தம்மை திவான் ஏமாற்றிவிட்டாரென்றும், அன்றோடு தாம் தொலைந்துபோய் விட்டோம் என்றும் அவர் உடனே நிச்சயித்துக்கொண்டு, மரண தண்டனை யடைந்தவன் தனது உயிரைக்கொடுப்பதற்குமுன் எவ்வித மனப்பான்மையோடிருப்பானே, அவ்விதமான நிலைமையை யடைந்து, குன்றிக் குறுகித் தலைகுனிந்து ஊமைபோல நின்ருர். அங்கே வந்த நீதிபதி முதலியோரை திவான் ஆசனங்களில் உட்காரச் செய்து, அவர்களெல்லோரையும் நோக்கி, "இந்த இன்ஸ்பெக்டர் சொன்ன வரலாறு முழுதையும் நீங்கள் எல்லோரும் நன்ருகக் கேட்டுக்கொண் டிருந்தீர்களல்லவா?" என்று வினவினுர். அவர்களெல்லோரும், "ஆம். கேட்டுக்கொண் டிருந்தோம்" என்று உடனே உத்தரம் கூறினர்.

திவான் நீதிபதியை நோக்கி, "இவர் சொல்வதை அப்படியே எழுதிக் கொள்ளும்படி, நான் தங்களிடம் கேட்டுக்கொண்டேனே, அந்த மாதிரி எழுதினீர்களா?" என்ருர்.

நீதிபதி, "ஆம். இந்த இன்ஸ்பெக்டர் இங்கே வந்ததுமுதல் இதுவரையில் உங்கள் இருவருக்கும் நடந்த சம்பாஷணையை அப்படியே எழுதி இருக்கிறேன். இதோ படிக்கிறேன். கேளுங்கள்" என்று கூறித் தமது கையில் இருந்த ஒரு காகிதத்தை எடுத்து அதில் எழுதப்பட்டிருந்ததைப் படித்தார். திவானுக்கும் இன்ஸ்பெக்டருக்கும் நடந்த சம்பாஷணை முழுதும் தவறின்றி அப்படியே எழுதப்பட் டிருந்தது.

உடனே திவான் அங்கிருந்த போலீஸ் சூபரின்டென்டெண்டு முதலியோரை நோக்கி, "எங்களுக்குள் நடந்த சம்பாஷணை முழுதும் இந்தக் காகிதத்தில் சரியாக எழுதப்பட் டிருக்கிறதல்லவா?" என்றார். மற்றவர்கள், "ஆம்" என்றனர்.

திவான் உடனே இன்ஸ்பெக்டரை நோக்கி, "என்ன, ஐயா! நீர் என்ன சொல்லுகிறீர்? நாம் பேசியதை நீதிபதி சரியாக எழுதி இருக்கிறாரல்லவா?" என்றார்.

இன்ஸ்பெக்டர் மௌனம்.

திவான், "என்ன ஐயா! உம்மைத்தானே! நான் கேட்பதற்கு உத்தரம் சொல்லும்" என்றார்.

இன்ஸ்பெக்டர், "எனக்கு ஒன்றும் தெரியாது. இவ்விதமான சங்கதி எதையும் நான் தங்களிடம் சொல்லவில்லை" என்றார்.

திவான், (வியப்படைந்து) "ஓகோ? நீர் இவ்விதமான சங்கதியெதையும் என்னிடம் சொல்லவே இல்லையா? சரி? அப்படியே இருக்கட்டும். நீர் இவ்விதமான சங்கதியெதையும் என்னிடம் சொல்லவில்லையென்று இந்தக் காகிதத்தின் அடியில் உம்முடைய கையாலேயே எழுதிக் கையெழுத்துச் செய்யும்" என்றார்.

உடனே இன்ஸ்பெக்டர் தாம் நிரம்பவும் சாமர்த்தியமாக நடந்து கொள்ளுவதாக எண்ணி விசையாக நடந்துபோய் நீதிபதியிடத்திலிருந்த காகிதத்தின் அடியில் திவான் சொல்லியபடி எழுதிக் கையெழுத்துச் செய்துவிட்டு முன்னிருந்த இடத்திற்குச் சென்றார்.

அதன் பிறகு திவான் மற்றவர்களை நோக்கி, "சரி; இனி இதன் கீழ் நீங்கள் நால்வரும் கையெழுத்துச் செய்யலாம், என்னுடைய வேண்டுகோளின்படி நீங்கள் நால்வரும் இங்கே வந்து பக்கத்து அறையில் இருந்ததாகவும், இந்த இன்ஸ்பெக்டரும் நானும் மேலே

விவரிக்கப்பட்டபடி சம்பாஷித்ததை நீங்கள் கேட்டுக்கொண்டிருந்த தாகவும், பிறகு என்னால் உள்ளே அழைக்கப்பட்டதாகவும், இன்ஸ்பெக்டர் தாம் இவ்வித தகவல் எதையும் சொல்லவில்லையென்று மறுத்துவிட்டதாகவும் எழுதி நீங்கள் நால்வரும் கை யெழுத்துச் செய்யுங்கள்" என்றார்.

அவர்கள் அவ்வாறே எழுதிக் கையெழுத்துச் செய்து அந்தக் காகிதத்தை திவானிடம் கொடுத்தனர்.

அதை வாங்கி அதன் பின்புறத்தில் திவான் சிறிது நேரம் ஏதோ எழுதிக்கொண் டிருந்தபின் நிமிர்ந்து இன்ஸ்பெக்டரை நோக்கி, "ஐயா! இன்ஸ்பெக்டரே! நான் இந்த சமஸ்தானத்து மகா ராஜனுடைய பிரதிநிதி யென்பது உமக்குத் தெரிந்த விஷயம். நான் எல்லா நியாயஸ்தலங்களுக்கும் கடைசியான அப்பீல் நியாய ஸ்தலத்தின் நீதிபதியென்பதையும், எந்த நியாயாதிபதியின் தீர் மானத்தையும் தக்க ஆதாரத்தின் மேலோ, அல்லது, மகாராஜனது தயாளத்தைக் கருதியோ மாற்றவும், ரத்து செய்யவும் எனக்கு அதி கார முண்டென்பதையும் நான் உமக்கு எடுத்துக் காட்டுவது அநா வசியமென்று நினைக்கிறேன். நீர் என்னோடு பேசிய விஷயங்களை யெல்லாம் தக்க மனிதர்களான இவர்கள் நால்வரும் கேட்டுக்கொண் டிருந்ததாக ஒப்புக்கொண்டு, அதை அப்படியே எழுதிக்கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் பொய்சொல்லுகிறார்களென்றால், அதை யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். நீர் பெரிய உத்தியோகம் வகிப் பவராக இருந்தும் உமக்கு இவ்வளவு தூரம் வியவகாரஞானம் தெரி யாமல் போனது ஆச்சரியமான விஷயமே. நீர் என்னிடத்தில் இவ் விதமான தகவல் எதையும் தெரிவிக்கவில்லையென்று மறுத்துவிட் டால், அது உமக்கு நிரம்பவும்அநுகூலமாய்ப்போய்விடுமென்று நீர் நினைத்துக்கொண்டீர்போ லிருக்கிறது. முக்கியஸ்தர்களான நாங்கள் ஐவரும் கேட்டுக்கொண்டிருந்த விஷயத்தை நீர் மறுத்து அது நடக்கவில்லையென்றால் அதை எவரும் கேட்கப் போகிறதில்லை. அப்படிச் சொன்னதால், நீர் பெருத்த புரட்டுக்கார மனிதர் என்பதை எங்களுக்குமுன்பே நிரூபித்துக் காட்டியதாயிற்றேயன்றி வேறல்ல. நீர் இவ்விதமான புரட்டிலிறங்காமல், செய்ததை ஒப்புக்கொண்டிருந்தால் என்னுடைய தீர்மானம் இன்னம்கொஞ்சம் கடுமைக் குறைவாக இருந்திருக்கும். ஆயினும், இது வரையில் நீர் செய்துள்ள அக்கிரமங்களெல்லாம் திரண்டுவந்து இந்த சமயத்

தில் நீர் இப்படி நடந்துகொள்ளும்படி உமக்குப்புத்தி கொடுத்தது. நீர் எத்தனை நிரபராதிகளைத் தண்டனைக்குக் கொணர்ந்து, அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தாரையும் துயரக்கடலி லாழ்த்தி வயிறெரியச்செய்து, அவர்களுடைய குடும்பங்களை நாசப் படுத்தினீரோ! அது ஈசனுக்கே தெரியவேண்டும். இப்போது எங் களுக்குத் தெரிந்து நீர் அநியாயமாக ஒரு குடும்பத்தை நாசப்படுத்தி நிரபராதியான ஒரு மனிதனை மூன்று தடவை தண்டனைக்கு ஆளாக்கி விட்டீர். உம்முடைய விஷயத்தில் நான்கொஞ்சமும் தயா ளம் காட்டுவது தவறாகும். இப்போது ஆடுகள் திருடியதாகக் குற் றம் சுமத்தப்பட்டிருக்கிற மனிதரை நான் இந்த நிமிஷம் முதல் கௌரவமாகவும் கண்ணியமாகவும் விடுதலை செய்திருக்கிறேன். அதுவுமன்றி, இதற்குமுன் அவருக்கு நேரிட்ட தண்டனையும் தப் பானதென்றும், அவர் மூன்று வழக்குகளிலும் நிரபராதி என்றும் நான் இந்த சமஸ்தானம் முழுதும் பகிரங்கமாக விளம்பரப்படுத்தச் செய்கிறேன். நீர் செய்த அக்கிரமத்தால் புருஷன் பெண்சாதி ஆகிய இருவரது குடும்பத்து ஜனங்களெல்லோரும் இறந்துபோனார்கள்; குடும்ப சொத்துக்களெல்லாம் விரய மாயிற்று. அவர்கள் இரு வரும் மானமாய் ஜீவனம் செய்வதற்கும் வகையில்லாமல் போனதோடு அவர்களுடைய இல்லறவாழ்க்கையும் சுகமும் இல்லா மல் போயின. இத்தனைக்கும் காரணபூதரான உம்மை மரண தண்டனைக்கு ஆளாக்கினாலும், அது அத்தனை நஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் ஈடாகாது. சட்டப்படி இந்தக் குற்றத்திற்குமரண தண்டனை இல்லையேயென்று நான் விசனிப்பதோடு, உமக்குப் பத்து வருஷம் கடினக்காவல் சிக்ஷைகொடுக்கும்படி உத்தரவுசெய்வதன்றி, பாங்கியிலிருக்கும் உம்முடைய ஆயிரம் ரூபாயையும், அந்தக் கள் ளப் பிள்ளைக்கும் அவருடைய பெண்சாதிக்கும் நஷ்ட ஈடாகக் கொடுக்கும்படி தீர்மானிக்கிறேன். யாரடா சேவகர்கள்! அவர்களை அழைத்து வாருங்கள்" என்று சொல்லி வாய் மூடுமுன் இன்னொரு அறையிலிருந்த வீரம்மாளும் அவளது புருஷனும் ஓட்டோடியும் வந்து திவானுக்கெதிரில் கீழே விழுந்து கரைபுரண்டெழுந்த மன வெழுச்சியும், பயபக்தி விசுவாசமும் தோன்ற, சாஷ்டாங்கமாக நமஸ்காரம்செய்து எழுந்தனர். அவர்களது மனத்தில் பொங்கி யெழுந்த ஆநந்தமும் குதூகலமும் அவர்களை மெய்ம்மறந்து போகும்படி செய்து பரவசப்படுத்தின. அவர்களது கண்களிலிருந்து ஆநந்த நீர் மாலை மாலையாய்ப் பெருகி வழிந்தது. அவர்களது தேகம்

புளகாங்கித மடைந்து ஆநந்த மயமாக நிறைந்து இளகி இளகி உருகிப் பேரின்பத்தில் தோய்ந்து நின்றது. வீரம்மாள் முற்றிலும் தழுதழுத்த நயமான குரலில் பேசத்தொடங்கி, "சுவாமீ! எங்களுடைய தீராக் கவியைத் தீர்த்துவைத்த ஆண்டவனே! பரம தயாளுவே! காருண்ய வள்ளலே! தங்கள் மாளிகையில் கேவலம் வாசல் பெருக்கும் யோக்கியதைகூட இல்லாத என்னைத் தாங்களும் தங்கள் அருங்குண மனைவியாரும் தங்களுக்குச் சமமாக மோட்டார் வண்டியில் வைத்து அழைத்துவந்து, நாங்கள் ஏழேழு தலைமுறையில் தவம் செய்தாலும் நாங்கள் எதிர்பார்க்க இயலாத உபசரணைகளையும் சுகத்தையும் கொடுத்து, அணைந்துபோயிருந்த எங்கள் குலவிளக்கையும் ஏற்றி வைத்த தங்களுக்கு நானும் என் புருஷனும் எங்கள் தேகத்தை செருப்பாய்த் தைத்துப் போட்டால் கூட அது தாங்கள் கைம்மாறு கருதாமல் செய்த பேருதவிக்கு ஈடாகாது. தாங்களே திவான் என்பதை அறியாமல் நான் தங்களைக் குறித்து அவதூறான வார்த்தைகளை உபயோகித்தது இப்போது என் மனசை ஆயிரம் வாள்கள் கொண்டு அறுப்பது போல வதைக்கிறது. இந்தக் கலி காலத்தில் நாங்கள் தங்களையும் தங்கள் மனைவியாரையும் பேசுந் தெய்வங்களாகக் கண்டோம். நெடுங்காலமாய்ப் புண்பட்டு மறுகிக் கிடந்த இந்த ஏழைகளின் மனம் குளிரும்படி செய்து எங்களை உய்வித்த பரம தயாளுவே! தாங்கள் தங்கள் சம்சாரம் குழந்தைகளோடு என்றென்றும் சிரஞ்சீவியாயிருந்து அமோகமாய் வாழவேண்டும். என் அப்பனே! தங்களுடைய பெயரும் புகழும் மலைமேல் வைத்த தீபம் போல எங்கும் தெரிந்து என்றென்றைக்கும் நீடித்து நிற்கவேண்டுமையனே" என்று கூறி ஆநந்தக் கண்ணீர் சொரிந்து மேன் மேலும் கீழே விழுந்து விழுந்து கும்பிட்டாள். கண்ணுசாமி என்ற பெயர்கொண்ட அவளது புருஷன் காட்டாற்று வெள்ளம் போலக் கட்டிலடங்காமல் பொங்கி எழுந்த தனது மனவெழுச்சியையும், ஆநந்தப் பெருக்கையும் தாங்க வல்லமையற்றவனாய் ஊமை போல மாறித் தனது மனைவி கீழே வீழ்ந்தபோதெல்லாம் தானும் மெய்ம்மறந்து கீழே வீழ்ந்து வீழ்ந்து எழுந்து நின்று கன்னங்களில் அடித்துக்கொண்டு கைகுவித்து நின்றான்.

அந்த மகா பரிதாபகரமான காட்சியைக் கண்ட திவானும், நீதிபதி முதலிய மற்ற நால்வரும் இளகி உருகிப் பொங்கிப் பொருமினர். அவர்களது கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரை

யாக வழிந்தது. உடனே திவான் அவர்களைப் பார்த்து, "அப்பா கண்ணுச்சாமீ! வீரம்மா! உங்களைப் பிடித்திருந்த சநியன் இன்றோடு தொலைந்தது. இந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டர் உங்களுக்கு இது காறும் செய்த கெடுதல்களுக்கு நஷ்டஈடாக இவரிடமுள்ள சொத்து முழுதையும் கொடுத்து விடும்படி நான் உத்தரவு செய்திருக்கிறேன். ஆனால், நிரம்பவும் சொற்பத் தொகையான ஆயிரம் ரூபாய்தான் இவரிட மிருக்கிறது. அதைமாத்திரம் உங்களுக்குக் கொடுப்பது போதா தென்பது என் அபிப்பிராயம். ஆகையால், என் சொந்த ஜீவனத்திலிருந்து இன்னம் இரண்டாயிரம் ரூபாய் உங்களுக்குக் கொடுக்கும்படி நான் என் சம்சாரத்தினிடம் சொல்லி இருக்கிறேன். நீங்கள் போய் அதையும் வாங்கிக்கொண்டு, உங்களுக்கு எந்த ஊரில் இருக்க விருப்பமோ அங்கே போய் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருங்கள். ஜனங்கள் யாரும் உங்களைப்பற்றி இழிவாகவே பேசமாட்டார்கள். இனியும் உங்களுக்கு எவரேனும் தீங்கு செய்ய நினைத்தால், நீங்கள் எந்த நேரத்திலும் என்னிடம் வந்து முறையிட்டுக் கொள்ளலாம். நீங்கள் என்னுடைய ஜாகையில் சில தினங்கள் இருந்து விருந்துண்டுவிட்டு உங்களுக்குப் பிரியமான இடத்திற்குப் போய்ச் சேருங்கள்" என்று மிகுந்த அன்போடு கூறி முடித்தார். அதைக் கேட்ட கண்ணுசாமியும் வீரம்மாளும் முன்னிலும் பன்மடங்கு அதிகமாய்ப் பொங்கி யெழுந்த தங்களது நன்றி விசுவாசத்தின் பெருக்கை வெளிப்படுத்தி மறுபடி கீழே விழுந்து அவரை நமஸ்கரித்து விடை பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டு வெளியில் சென்றனர். பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் சேவகர்களால் சிறைச்சாலைக்கு நடத்தப்பட்டார். நீதிபதி முதலியோரும் திவானிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றனர்.

உடனே திவான் முதலியார் தமக்கெதிரில் வைக்கப்பட்டிருந்த இராஜாங்க சம்பந்தமான காகிதக் கட்டுகளில் தாம் அவசரமாக உத்தரவு பிறப்பிக்கவேண்டிய விஷயங்கள் ஏதேனும் இருக்கின்றனவா வென்று பார்த்தார்; அவசரமான விஷயங்களா யிருந்தால், அதற்கு அறிகுறியாக காகிதக்கட்டு சிவப்பு நாடாவினால் கட்டப்பட்டிருப்பது வழக்கம். அவ்வாறு சிவப்பு நாடாவினால்கட்டப்பட்டிருந்தகாகிதக்கட்டுகள் அவருக்கெதிரில் நான்கு இருந்தன. திவான் முதலியார் அவற்றுள் ஒன்றை யெடுத்துக் கட்டை யவிழ்த்துக் காகிதங்களைப் படித்து, விஷயம் இன்னதென்பதை உணர்ந்து கொண்டே

போய், அதன்மேல் தமது முடிவான உத்தரவை எழுதி மறுபடி அதைக் கட்டி அப்பால் வைத்தார். அப்போது வெளியில் இருந்த் பாராக்காரர்களுள் ஒருவன், "எஜமானே! தபால்காரன் சில கடிதங் கள் கொண்டு வந்திருக்கிறான்" என்று நிரம்பவும் பணிவாகவும் வணக்கமாகவும் மரியாதையாகவும் வெளியில் நின்றபடியே கூறி னான். அதைக் கேட்ட திவான், "தபாற்காரனை உள்ளே அனுப்பு" என்றார்.

அடுத்த நிமிஷம் தபாற்காரன் ஒருவன் உள்ளேவந்து குனிந்து அவருக்குக் கும்பிடு போட்டுவிட்டு சுமார் பதினைந்து காகிதங்களை எடுத்து திவானுக்கெதிரில் மேஜையின்மேல் வணக்கமாக வைத்து விட்டு, மறுபடி அவருக்கு இன்னொரு கும்பிடு போட்டுவிட்டு வெளி யிற் போய்விட்டான்.

திவான் முதலியார் புதிய கடிதங்களை யெல்லாம் எடுத்துத் தள் ளித் தள்ளிப் பார்த்தார். சர்கார் கடிதங்கள் சிலவும் சொந்தக் கடிதங்கள் சிலவும் இருந்தன. ஆனால், அவர் எதையும் படிக்கவில்லை. சிவப்பு நாடாவினால் கட்டப்பட்ட அவசரக் கட்டுகள் மூன்றையும் தாம் முதலில் பார்த்து உத்தரவுகள் பிறப்பித்து அனுப்பிய பிறகு புதுக்கடிதங்களை நிதானமாய்ப்படித்துப்பார்க்கவேண்டுமென்றஎண் ணத்தோடு அவசரக் கட்டுகளுள் இன்னொன்றை எடுத்து நாடாவை அவிழ்த்துக் காகிதங்களைப் படித்துக்கொண்டே போகத்தொடங்கி னார். அப்போது அவருக்கு பின்புறத்திலிருந்த ஒரு கண்ணாடிக் கதவு மெதுவாய்த் திறந்துகொண்டது. அதனால் ஏற்பட்ட ஓசை அற்ப ஓசையாகவே இருந்ததானாலும், நிரம்பவும் கூர்மையான புத் தியும் கவனமும் அமிதமான சுறுசுறுப்பும் உடையவரான திவான் அந்த ஓசையை உணர்ந்து திடுக்கிட்டு நிமிர்ந்து சரேலென்று பின் புறத்தில் திரும்பிப் பார்த்தார். அமிர்தத்தையும், இனிமையான குளிர்ச்சியையும் அள்ளிச் சொரியும் பூர்ண சந்திரபிம்பம் தோன்று வதுபோலப் புன்னகை பூத்த முகத்தோடும், அன்னத்தைப் பழித்த நடையோடும் அவ்விடத்திலிருந்து தம்மை நோக்கி வந்த தமது மனை யாட்டியான காந்திமதியம்மாளைக் காணவே, திவான் முதலியாரது தேகமும் மனதும் அவருடைய முயற்சியின்றி தாமாகவே இன்பமய மாய் நிறைந்து மலர்ந்து இளகி ஜ்வலிக்கத் தொடங்கின. அத்தகைய ஒப்புயர்வற்ற மாமதியைக்கண்ட அவரது வசீகரவதனமாகிய இனிய புஷ்பம் சந்தோஷத்தினால் தானாகவே மலர்ந்து இன்பமாகிய

கிரணங்களை நாலா பக்கங்களிலும் வீசவாரம்பித்தது. தாம் அவசரமான காகிதக் கட்டுகளைப் படித்துப் பரிசீலனை செய்து உத்தரவுகள் பிறப்பித்துக்கொண் டிருக்கையில், அதற்கு இடைஞ்சலாகத் தமது மனையாட்டி வந்துவிட்டாளே யென்ற ஒருவித ஆயாசமும், சஞ்சலமும் அவரது மனத்தில் எழுந்து வருத்தினவானாலும், அந்தப் பெண்மணியின் தோற்றத்தில் ஒருவிதமான மிருதுத் தன்மையும், பணிவும், வசீகர சக்தியும் தோன்றி அவரது மனத்தை எப்போதும் காந்தம்போலக் கவர்ந்து கொள்வது இயற்கையாதலால், அப்போதும் அவர் விலக்க இயலாத அத்தகைய கவர்ச்சியினால் மேற்கொள்ளப் பட்டவராய், மந்திரசக்தியினால் கட்டுப்பட்டுநிற்கும் நாகம்போலத் தமது மனோவேகம், சுறுசுறுப்பு, ஊக்கம், தேகத்தின் பரபரப்பு முதலியவற்றை யடக்கிக்கொண்டு அப்படியே ஓய்ந்து ஆநந்தமயமாய் மாறிப்போனார். அந்தப் பெண்ணரசியின் மகா அபூர்வமான வனப்பும், சிரேஷ்டமான கலியாண குணங்களும்,உத்தமமான நடையுடை பாவனைகளும், நேத்திராநந்தமான அலங்காரமும் ஒன்றுகூடி தெய்வீக சக்திவாய்ந்து காந்தம்போல அவரது மனத்தை வெகு சுலபத்தில் கவர்ந்துகொள்வது வழக்கமாதலால், அவ்வாறே அன்றைய தினம் காலையிலும் அவள் வந்தபோது அவர் அந்தப் பெண்மணியின் விஷயத்தில் வாத்சலயமும் பிரேமையும் வடிவெடுத்தது போலக் காணப்பட்டார். அந்த அன்னப்பேடு மாதுரியமான பலவிதச் சிற்றுண்டிகளை ஒரு வெள்ளித் தாம்பாளத்தில் வைத்து, அதைத் தனது இடதுகையில் தாங்கி, வலது கையில் பன்னீர் போலத் தெளிந்த சுத்த ஜலம் நிறைந்த வெள்ளிக்கூஜா வொன்றைச் சுமந்து பணிவாகக் குனிந்து மிருதுவாக அவரிடம் நெருங்கி வந்த காலத்தில், அந்த ஸ்திரீ ரத்னத்தின் காலில் நிறைந்திருந்த பாதஸரம் கலீர் கலீர் என்று சப்தித்ததும், வெள்ளி மெட்டுகளும், காலாழிகளும் கிண் கிண்ணென்று ஒலித்ததும், பொற்கொடிபோல ஜ்வலித்த அவளது மேனியில் தகத்தகாயமாக மின்னிய புதிய பட்டாடையின் மடிப்புகளும் சுருள்களும் ஒன்றன்மேலொன்று உராய்ந்து ஸரஸரவென்று ஓசை யுண்டாக்கியதும் இன்னதென்று விவரிக்க இயலாத ஒரு பிரத்யேகமான இன்பமாய்க் காணப்பட்டன. அந்த மாதரசி தனக்குத் தெரியாமல் தன்னிடம் அத்தகைய அபூர்வ சக்தியும் கவர்ச்சியும் வசீகரத் தன்மையும் நிறைந்திருக்கின்றன வென்பதை உணராதவளாய்த் தனது பர்த்தா ஏதோ சர்க்கார் வேலை பார்த்துக்கொண் டிருக்கையில் அவரது அநுமதி

யின்றித் தான் உள்ளே வந்ததைக் குறித்து அவர் தன்மீது கோபங் கொள்வாரோவென்று அஞ்சி அஞ்சி நடந்து மான்போல மருண்டு தயங்கித் தயங்கி அடிவைத்து அவரண்டையில் வந்து பணிவாகக் குனிந்து நின்றபடி, முல்லையரும்பின் வரிசைகள்போலக் கண்கொள்ளா அழகாய் விளங்கிய தனது சுந்தரப் பல் வரிசைகளில் சிறிதளவு வெளியில் தெரியும்படி நயமாகப் புன்னகை செய்தவளாய் அவரை நோக்கி நிரம்பவும் பணிவாகவும் மிருதுவாகவும் பேசத்தொடங்கி, "மணி ஒன்பது ஆகிறதே. வழக்கம்போலத் தாங்கள் வருவீர்களென்று சமயற்காரர்கள் இந்தப் பலகாரங்களை எட்டுமணிக்கே செய்து வைத்து விட்டார்கள். நான் இதுவரையில் பார்த்தேன்; அதிகநேரம் வைத்திருந்தால் இவைகளின் சூடு ஆறிப்போகுமென்று, இவ்விடத்திலேயே கொடுத்துவிட்டுப் போகலாமென்று நினைத்து எடுத்துக்கொண்டு வந்தேன். தங்களுடைய சந்தர்ப்பத்தை அறிந்துகொள்ளாமல் நான் இப்படி திடீரென்று வருவது தங்களுடைய வேலைக்கு இடஞ்சலாயிருக்குமோ என்ற பயமும், தாங்கள் கோபித்துக் கொள்வீர்களோ என்ற பயமும் ஒரு பக்கத்தில் இருந்தாலும், இவ்வளவு நேரமாகிவிட்டதே, தாங்கள் வெறும் வயிற்றோடு இருக்கிறீர்களே என்ற எண்ணம் என்னைத் தள்ளிக் கொண்டு வந்துவிட்டது. ஆசை வெட்கமறியாதல்லவா, ஆகையால் துணிந்து வந்துவிட்டேன். இவ்விடத்து சந்தர்ப்பம் எப்படி இருக்கிறதோ தெரியவில்லை" என்று விஞ்ஞானம் செய்வதுபோன்ற அதி மாதுரியமான மெல்லியகுரலில் கூறினாள். உடனே, திவான்வாஞ்சையாக அந்த இன்பவல்லியை நோக்கிப்புன்னகைசெய்து, "காந்திமதி! இவ்வளவு நேரமாகியும், நான் சாப்பிடாமல் வெறும் வயிற்றோடு இருக்கிறேனே என்று நினைத்துக் கனிகரத்தோடு நீ இவைகளைக் கொண்டு வந்திருக்கிறாய். அதற்குப் பதிலாக உன்மேல் நான் கோபித்துக் கொள்வதென்றால், அதைக் கேவலம் மிருகத்தன்மையென்றுதான் சொல்லவேண்டும். இத்தனை வருஷகாலமாய் நாமிருவரும் ஒன்றாக இருந்து பழகி இருக்கிறோமே. என்றைக்காவது நான் உன்மேல் அகாரணமாகவும் அநாவசியமாகவும் கோபித்துக் கொண்டதுண்டா. அப்படி இருக்க, நீ ஏன் இன்றைய தினம் இவ்விதமான பயம் கொள்ளவேண்டும். நான் இத்தனை வருஷகாலமாய் உன்னோடு பழகிப்பார்த்த வரையில் நீ அற்ப விஷயத்திலும் தவறாக நடந்ததை நான் ஒரு நாளும் காணவே இல்லை. ஆகவே, இன்று நீ உண்மையிலேயே தவறாக நடந்திருந்தாலும், அது என்

னுடைய நன்மையைக்கருதிச் செய்யப்பட்டதவறேயன்றி வேறல்ல. அதைத் தவறு என்று சொல்வதே சரியல்ல. அதை மிதமிஞ்சிய பிரியம் என்று சொல்லவேண்டுமே யன்றி தவறு என்று சொல்வது பிசகு. இருக்கட்டும். நீ இரண்டு கைகளிலும் பெருத்த பளுவை வைத்துக் கொண்டு நிற்கிறாய். செம்பையும் தாம்பாளத்தையும் இப்படி மேஜையின்மேல் வைத்துவிட்டு நீ கொஞ்ச நேரம் அந்த ஸோபாவின்மேல் உட்கார்ந்துகொள். நான் அவசரமான காகிதங்கள் சிலவற்றைப் படித்து உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருக்கிறேன். இன்னம் அரை நாழிகை சாவகாசத்தில், இந்த வேலை முடிந்துபோகும். உடனே பலகார வேலையை ஆரம்பித்துக் கொள்ளலாம். இப்போது தபாலில் வந்த காகிதங்கள் வேறே இருக்கின்றன. அவைகளைக் கடைசியாக வைத்துக் கொள்ளுகிறேன்" என்று அன்பாகவும் குதூகலமாகவும் கூறினார்.

அதைக்கேட்ட பெண்மணி, "தாங்கள் வேலை பார்க்கும்போது, நான் சும்மாவா இருக்கிறது. நானும் ஒரு வேலை செய்கிறேனே. நான் தங்களுடைய பக்கத்தில் நின்று இந்தப்பலகாரங்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்துத் தங்களுடைய வாயில் போட்டுக் கொண்டே இருக்கிறேன். அதனால் தங்களுடைய மற்ற வேலைக்குக் கெடுதல் இல்லாமல் நான் நிரம்பவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுகிறேன். இரண்டு வேலைகளும் ஒரே காலத்தில் நடக்கட்டுமே" என்று நிரம்பவும் மிருதுவாகவும் நயமாகவும் பணிவாகவும் கூறினாள். அதைக் கேட்ட திவான் மிகுந்த களிப்பும் பூரிப்பும் அடைந்து, "சரி; அப்படியானால், உன் சித்தமே எனக்குச் சட்டம். நீ வாயைத் திறக்கச் சொன்னால் திறக்கிறேன்; மூடச்சொன்னால் மூடிக்கொள்ளுகிறேன். ஆனால், ஒரு விஷயம் மாத்திரம் பயமாக இருக்கிறது. நான் சாப்பிடும் பலகாரத்தின் ருசியில், மறந்தாற் போல, ஹல்வா முதல்தரமா யிருக்கிறதென்று இந்த அவசர உத்தரவுகளில் எழுதிவிடப் போகிறேனே என்ற பயம் உண்டாகிறது. இருந்தாலும், பரவாயில்லை. உன் இஷ்டப்படியே நான் செய்கிறேன். இந்த சமஸ்தானத்தில் மற்ற எல்லா நியாயஸ்தலங்களையும்விட, என்னுடைய நியாயஸ்தலம் மேலானது. என் உத்தரவுக்குமேல் அப்பீல் கிடையாது. அதற்கெல்லாம் மேலானது உன்னுடைய உத்தரவு" என்று வேடிக்கையாகவும், தமது மனையாட்டியை ஸ்துத்தியம் செய்தும் கூறிவிட்டுத்தமது காகிதக் கட்டைக் கவனிக்கலானார்

அவரது சொற்களைக்கேட்டு அளவற்ற மகிழ்ச்சியும் பூரிப்புமடைந்த பெண்மணி பலகாரங்களை எடுத்தெடுத்து மிகுந்த வாஞ்சையோடு அவரது வாயில் போடத் தொடங்கினாள். திவான் அரை நாழிகை காலத்தில் அவசர விஷயங்களையெல்லாம் படித்து உத்தரவு பிறப் பித்துவிட்டு, தபாற்காரனால் கொணர்ந்து கொடுக்கப்பட்டிருந்த கடி தங்களை எடுத்துப் பார்க்க ஆரம்பித்தார். அவர் முதலில் எடுத்தது இராஜாங்க சம்பந்தமான ஒரு விண்ணப்பம். திவான் அதைப் படி த்து, அதற்குத் தகுந்த உத்தரவை எழுதியபடி தமது மனையாளைப் பார்த்துப் புன்னகை செய்து, "இன்றையதினம் நாம் செய்வது நல்ல ஏற்பாடு. ஒரே காலத்தில் இரண்டு காரியங்கள் முடிகின்றன. என் கச்சேரி வேலையும் ஆகிறது. வயிற்று வேலையும் எனக்குத் தெரியாமலேயே நடந்துகொண்டிருக்கிறது. சாப்பாட்டுக்கென்றே நான் செலவிடும் காலம் இப்போது வீணாகாமல் சர்க்கார் வேலைக்கு உபயோகப்படுகிறது. அதுவுமன்றி, பலகாரங்களில் கவனம் சென் றால், அதில் உப்பில்லை, இதில் புளி இல்லை என்று சொல்லவேண்டு மென்ற எண்ணமுண்டாகும். அதற்கும் இடமில்லாமல் போகிறது. பலகாரங்களில் எவ்விதமான குற்றமிருந்தாலும், அது தெரியாமல் போகிறது. இம்மாதிரியே இந்த வேலை தினம்தினம் நடந்தால் கூட அது நல்லதுதான் என்று நினைக்கிறேன்" என்று வேடிக்கை யாக மொழிந்தார்.

அதைக் கேட்ட பெண்மணி நிரம்பவும் பணிவாகவும் கனிவாக வும் அவரை நோக்கி, "இவ்விடத்து சித்தத்தின்படி நடந்துகொள்ள அடியாள் காத்திருக்கிறேன். அடியாள் இன்றைக்கு மாத்திரமா தங்களுக்கு அடியாள். நாச்சியார் சொல்லியிருப்பதுபோல எற் றைக்கும் ஏழேழ் பிறப்பிற்கும் அடியாள் தங்களுக்குக் குற்றே வல் செய்யக் கடமைப்பட்டவ ளாயிற்றே" என்றாள்

அவளது இனிய சொற்களைக் கேட்ட திவான் கட்டிலடங்காத குதூகலமும் ஆநந்தமு மெய்தி, "பலே! நன்றாகச் சொல்லுகிறாயே! நீ வைஷ்ணவ முதலியார் வீட்டுப் பெண்ணல்லவா. உனக்கு நாச்சி யார் பாடியுள்ள பாட்டு இந்த சமயத்தில் நினைவிற்கு வந்ததுபோ லிருக்கிறது. நீ உபயோகித்த இரண்டொரு வார்த்தைகளிலிருந்தே அந்தப் பாட்டு நன்றாக இருக்குமென்று நினைக்கிறேன். நாச்சியார் எந்த இடத்தில் யாரைக் குறித்து அப்படிச் சொன்னார்? அந்தப் பாட்டைச்சொல் கேட்கலாம்" என்றார். அதைக் கேட்ட மாதாசி

மிகுந்த கிலேசமும் நாணமும் அடைந்து நாணிக்கோணி, "நாச்சியார் தெய்வீகமாய்ப் பிறந்த பெண். அவர் இயற்கையிலேயே பகவத்பக்தி யுடையவராயும், வரகவியாயும் இருந்தார். அவர் நர மனிதர் எவருக்கும் வாழ்க்கைப்பட விரும்பாமல், "மற்றொருவர்க் கென்னைப் பேசவொட்டேன் மாலிருஞ்சோலை மாயற்கல்லால்" என்று சொல்லி, தான் ஸ்ரீமந் நாராயணனுக்கு வாழ்க்கைப்பட உறுதி செய்து கொண்டார். அந்த சந்தர்ப்பத்தில் அவர் தாம் புருஷராக அடைய எண்ணிய பரமாத்மாவை நினைத்து திருப்பாவை என்று முப்பது பாட்டுகள் பாடி இருக்கிறார். அதில் ஒரு பாட்டின் கருத்தைத்தான் நான் சொன்னேன்.

சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச்சேவித்து, உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள்கேளாய்,
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது ;
இற்றைப் பறைகொள்வானன்றுகாண், கோவிந்தா !
எற்றைக்கும், ஏழேழ் பிறவிக்கும், உன் றன்னோடு
உற்றோமே யாவோம், உனக்கே நாம் ஆட்செய்வோம்;
மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்."

என்பதுதான் அந்தப் பாசுரம். பரமாத்மாவுக்கும், ஜீவாத்மாவுக்கும் உள்ள சம்பந்தமும், புருஷனுக்கும் மனைவிக்கும் இருக்கவேண்டிய சம்பந்தமும் இந்தப் பாசுரத்தில் வெகு அழகாகச்சொல்லப்பட்டிருக்கிறது. முதன்முதலில் நான் இந்தப் பாடலைப் படித்த காலத்தில், இதில் சொல்லப்பட் டிருப்பதுபோலத்தான் நான் தங்களிடம் நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு அதுபோலவே நடந்து வருகிறேன்" என்றாள்.

திவான் முதலியார், "பேஷ்! பாட்டு வெகு நன்றாக இருக்கிறது. ஸ்திரீகள் இப்படிப்பட்ட அரிய கருத்துகள் அடங்கிய பாட்டுகளைப் படித்து, இவற்றின் கருத்துகளின்படி நடந்துகொள்வது அவசியந் தான். நான் சைவனாகையால் உங்கள் திருப்பாவையைப் படித்ததில்லை. இதுபோலவே தாயுமான சுவாமிகள் பாடலில், "அரும் பொனே மணியே!" என்று ஆரம்பிக்கும் ஒரு பாடல் இருக்கிறது. அதில்,

" இரும்புநேர் நெஞ்சகக் கள்வனானாலும் உனை
இடைவிட்டு நின்றதுண்டோ ?
என்று நீ அன்று நான் உன்னடிமை யல்லவோ

என்று தாயுமான சுவாமி பாடி யிருக்கிறார். அதுஎப்படிஇருக்கிறது பார்த்தாயா?" என்றார்.

அவரது மனையாட்டி, "அதுவும் நன்றாகவும் உருக்கமாகவும் இருக்கிறது. ஆனால், அது தெய்வத்துக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை மாத்திரம் குறிக்கிறது. நான் சொன்ன பாசுரம் தெய்வத்திற்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தையும், புருஷனுக்கும் மனைவிக்கும் உள்ள சம்பந்தத்தையும் சிலேடையாகச் சொல்லுகிறது. எங்களைப்போலிருக்கும் ஸ்திரீகளுக்கு இது அதிகமாகப் பயன் தரும். உலகப்பற்றைத் துறந்து பரம்பொருள் ஒன்றையே நாடி நிற்கும் மகான்களுக்கே தாங்கள் சொன்ன பாடல் உபயோகப்படும். அவ்வளவே வித்தியாசம்" என்றாள்.

திவான் முதலியார், "நீ சொல்வது உண்மைதான். அப்படியானால், நீ அந்தத் திருப்பாவைப் பாசுரத்தில் சொல்லப்பட் டிருப்பதுபோல நடந்துகொண்டு வருகிறாயா?" என்றார்.

காந்திமதி யம்மாள், "அதுபோலநடக்கவேண்டுமென்றஆசை இருக்கிறது, மன உறுதியும் இருக்கிறது. ஆனாலும், என் மனம் திருப்தி யடையும்படி இரவு பகல் எப்போதும் தங்களுக்குப் பணி விடை செய்யும்படியான சந்தர்ப்பமும்பாக்கியமும்தான்கிடைக்கிற தில்லை. மற்ற சகலமான விஷயங்களிலும் நான் மகத்தான சம்பத்தையும், சுகபோகங்களையும் பெற்றிருந்தாலும், அந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் எனக்குக் குறைதான். தாங்கள் இந்த ராஜ்யத்தில் மகாராஜனுடைய பிரதிநிதி ஸ்தானத்தில் இருப்பதுபற்றி, தாங்கள் காலாலிடும் வேலையைத் தலையாற்செய்ய நூற்றுக் கணக்கானசிப்பந்திகள் ஏற்பட்டிருக்கிறார்கள். நியாயமாய் எனக்குக் கிடைக்கவேண்டிய இன்பத்தை யெல்லாம் அவர்கள் கொள்ளையடித்துப் பங்கு போட்டுக் கொள்ளுகிறார்கள்" என்று நிரம்பவும் கொஞ்சலாகக் கூறினாள்.

அதைக் கேட்ட திவான் தமது சந்தோஷத்தை அடக்கமாட்டாதவராய்ச் சிரித்து, "ஆம். நீ சொல்வது வாஸ்தவந்தான். எனக்குப் பணிவிடைகள் செய்வது உனக்கு இன்பகரமா யிருக்கலாம். ஆனால், சம்பளத்திற்கு வேலை பார்க்கும் கூலியாள்களுக்கு அதுஒரு நாளும் இன்பகரமா யிருக்குமென்று நான் நினைக்கவில்லை. சிலருக்கு அது சர்வ சாதாரணமாயிருக்கும்; சிலருக்குத் துன்பகரமாகக் கூட இருக்கும்; எவருக்கும் இன்பகரமாக இருக்காது. ஒரு குழந்தை

தன்னுடைய கைவிரலை ஆநந்தமாகச் சப்பிக்கொண்டே இருக்கிறது அதற்கு அதில் ஒரு பெரிய இன்பம் இருப்பதாய்த் தெரிகிறது. நம்மைப் போன்றவர்களுக்கு அந்த விரல் உப்புக்கரிப்பாக இருக்கிறது. இதற்குக் காரணம் மனிதருடைய மனப்பிரேமையே யன்றி வேறல்ல. ஒரு மனிதன் எந்தக் காரியத்தையும் பிரேமையோடும் ஆசையோடும் செய்தால், அது உண்மையில் ஆநந்தமாகத்தான் தோன்றும்; மனிதர் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் தங்கள் தங்கள் கடமைகளையும் வேலைகளையும் மிகுந்த ஆசையோடும் பிரேமையோடும் செய்வதுதான் மகா சிலாக்கியமானது. ஒரு பெண்ஜாதி தன் புருஷனிடம் உண்மையான வாத்சல்யமும் பிரேமையும் வைத்து அவனுக்கு உப்பில்லாத கஞ்சியைக் கொடுக்கிறாள். அதே கணவனுக்கு ஒரு பரிசாரகன் பஞ்சபக்ஷிய பரமான்னங்களைச் சமைத்து உயிரற்ற யந்திரம்போல வந்து வந்து ஒழுங்காகவும் ஏற்பாடாகவும் பரிமாறுகிறான். இந்த இரண்டில், எது சிலாக்கியமானது, எதில் புருஷனுக்கு உண்மையான ஆநந்தம் உண்டாகும் என்று என்னைக் கேட்டால், பிரேமையோடு ஊட்டப் படும் கஞ்சிதான் நம் மனத்திற்கு உகந்ததாக இருக்குமென்று சொல்லுவேன். இதையெல்லாம் ஆழ்ந்து யோசித்துப் பார்க்கப் பார்க்க, பணிவிடைக்கு ஏராளமான ஆட்களை வைத்துக்கொண்டு, வெளிப் பார்வைக்குப் படாடோபமாய்இருக்கிற பெரியமனிதர்களை விட அன்பு நிறைந்த கற்பிற்கரசியான தன் பெண்ஜாதியினுடைய மனமார்ந்த சிஷ்ருஷைகளை அடைகிற புருஷனே உண்மையான பாக்கியவான்; அவனே முன் ஜென்மத்தில் தவம் செய்தவன்என்று சொல்லவேண்டும். இந்தசந்தர்ப்பத்தில் எனக்கு இன்னொரு சந்தேகமுதிக்கிறது. நான் இந்த சமஸ்தானத்தில் திவான் உத்தியோகம் பார்க்கிறேன். வெளிப் பார்வையில் நான் மற்றவரை விடப் பெரியவன் என்பது தெரியும்படியும், இந்த ஸ்தானத்தின்கௌரவத்தைக்குத் தக்கபடியும் எனக்கு ஏராளமான சிப்பந்திகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த தேசத்து அரசரோ என்னைவிடப் பன்மடங்கு அதிகமான மேம்பாடும் கௌரவத்தையும் உடையவர். ஏராளமான பரிவாரங்கள் எப்போதும் சூழ்ந்து அவரை நிரம்பவும் உன்னதமான ஸ்தானத்தில் வைத்து, அவர் மனசால் நினைக்குமுன் அவரது குற்றேவல்களை செய்து வருகிறார்கள். மகாராஜனை விட்டு, அண்டரண்ட பிரம்மாண்டமென்னும் சகலமான உலகங்களையும், கடல்களையும், மலைகளையும், ஆரணியங்களையும், ஆறுகளையும், அவற்றினுள் நிறைந்

துள்ள சகலமான ஜீவன்களையும், இன்னும், சூரிய சந்திரர்களையும், கோடாநுகோடி நட்சத்திர மண்டலங்களையும், ஆகாயவெளியையும் படைத்து, மகா விநோதமாக நிலைநிறுத்தி, நடத்திக்கொண்டே போகும் மகத்திலும் மகத்தானவரும், அணுவிலும் பரம அணுவான வரும், எவராலும் கண்டுபிடிக்க முடியாமல் எல்லா இடத்திலும் நிறைந்திருந்து சகலமான வஸ்துக்களையும் தமது இச்சா மாத்திரத்தில் படைத்துக் காத்து அழிப்பவரும், அறிவுமயமானவரும், வல்லமையே வடிவமானவருமாய் எக்காலத்திலும் மனிதரது புத்தியை பிரமிக்கச் செய்யும் பரமாத்மா இருக்கிறாரே. அவருடைய விஷயத்தை நாம் நினைத்துப் பார்த்தால், நம்முடைய புத்தி குழம்பிப் போகுமேயன்றி வேறல்ல. கேவலம் அற்ப மனிதனாகிய எனக்கே இத்தனை வைபவமும், இத்தனை ஆள் மாகாணங்களும் இருக்கையில், சர்வ வல்லமையும், சர்வ அதிகாரமும் வாய்ந்த பரம்பொருளின் கோலாகலத்தை நாம் மனசால்பாவிக்க முடியுமா? அவருடைய பணி விடைகளுக்கு எத்தனை கோடி ஜனங்கள் இருப்பார்கள். அவருடைய மகிமையை எடுத்துப் புகழ எத்தனை கட்டியக்காரர்கள் இருப்பார்கள். அவரது இராஜ சின்னங்கள் எப்படித்தானிருக்கு மென்றாவது அவற்றின் எண்ணிக்கையையாவது எவராவது கண்டு சொல்லமுடியுமா. எனக்குப் பணிவிடைகள் செய்யும் பாக்கியமும் இன்பமும் உன் ஆசைதீர உனக்குக் கிடைக்கிறதில்லையென்று நீ குறைக்கப்பட்டுக் கொள்ளுகிறாயே! இருட்டறையில் எதையும் அறியாமல் கிடந்து தடவும் ஒரு குழந்தையைப் போலக் கடவுளின் இருப்பிடத்தையும், அவரை அடையும் வழியையும், இந்த சிருஷ்டியின் மர்மத்தையும் அறியாமல் கிடந்து உழலும் மகா அற்ப சக்தி வாய்ந்தவர்களான மனிதர்கள் கடவுளுக்குப் பணிவிடைகள் செய்வதெப்படி? அவரை சந்தோஷப்படுத்துவதெப்படி? அவருடைய அருளொளியை அடைவதெப்படி? இதை நினைக்கநினைக்க, மூளை தெறித்துப் போய்விடும்போல இருக்கிறது" என்று கூறுவதும், புதிய தபால் ஒன்றை எடுத்து அதில் தமது கவனத்தைச் செலுத்துவதுமாயிருந்தார். அடிக்கடி அவரது வாயில் பலகாரத்தைச் சிறுகச்சிறுகப் போட்டுக் கொண்டிருந்த காந்திமதியம்மாள் அவர் ஒரு கடிதத்தைப் படித்துக் கீழே வைத்துவிட்டு இன்னொன்றை எடுத்த காலத்தில் அவருடன் பேசத் தொடங்கி, "மனிதருக்கும் கடவுளுக்கும் வித்தியாசமில்லையா? மனிதராகியநாம் சொற்ப அறிவை உடையவர்கள். கடவுள் ஒரே அறிவுச் சுடராக இருப்பவர். அவரே எல்லாவற்

றையும் படைத்துக் காத்தழிப்பவர். எல்லா ஜெந்துக்களின் தேவைகளும், மனப்பான்மையும் கண்ணாடியில்தெரிவதுபோல அவருடைய சித்தத்திற்குத் தெரிந்துகொண்டே இருக்கும். மனிதருடைய விஷயம் வேறு மாதிரியானது. ஒரு சுவருக்கு மறைவில் என்ன நடக்கிறதென்பது நமக்குத் தெரிகிறதில்லை. மனிதர் ஒருவரோடொருவர் கூடவே இருந்து பழகினாலும், ஒருவர் மனசில் என்ன விஷயமிருக்கிறதென்பது மற்றவருக்குத் தெரிகிறதில்லை; எலும்பு தோல் முதலியவற்றாலான சுவர் அவற்றிற்குள் இருக்கும் மனசை மறைத்துவிடுகிறது. அதை அவரே வெளியில் காட்டிக் கொண்டாலன்றி மற்றவருக்கு அது தானாகவே தெரிகிறதில்லை. ஆகையால் மனிதருக்குமனிதர் வெளிப்படையான செய்கைகளினால் தங்கள் மன நிலைமையைக் காட்டிக் கொள்ளவேண்டியது அவசியமாகிறது. அதுவும் எங்களைப்போன்ற ஸ்திரீகள் புருஷருடைய பணிவிடைகளுக்கென்றே ஜென்மமெடுத்தவர்கள். ஆகையால், நாங்கள் மற்றவர்களைவிட அதிக ஜாக்கிரதையாகவும் விழிப்பாகவும் நடந்து கொள்ளவேண்டும். மாதுரியமான தின் பண்டங்களை மனிதர் சாப்பிடும்போது அவர்களுக்கு அது எவ்வளவு இன்பகரமாயிருக்குமோ, அதுபோல, ஸ்திரீகளுக்கு தங்களுடைய புருஷருக்கும், புருஷரைச் சேர்ந்தவருக்கும், குழந்தைகளுக்கும் பணிவிடை செய்வது இன்பகரமாகத் தோன்றவேண்டும். அவ்விதமான மனப்போக்கை அவர்கள் ஆதியிலிருந்தே உண்டாக்கிக் கொள்ள வேண்டும். அதுதான் குடும்பவாழ்க்கையின்மர்மம்" என்று கூறியவண்ணம் பலகாரத்தை வாயில் கொடுத்தாள்.

திவான் முதலியார், "உலகத்திலுள்ள எல்லாப் பெண்பிள்ளைகளும் உன்னைப்போல இவ்விதமாகவே எண்ணுகிறார்களா என்பது தான் சந்தேகமாக இருக்கிறது. இருக்கட்டும்; வயிறு நிரம்பிப் போய்விட்டது. போதும்; தண்ணீர் கொடு" என்றார். அவ்வாறே பெண்மணி தண்ணீர்ப் பாத்திரத்தை எடுத்துக் கொடுக்க, திவான் அதை வாங்கிச் சிறிதளவு பருகியபின் பாத்திரத்தை அவளிடம் கொடுக்க, அவள் அதை வாங்கி அப்பால் வைத்தபடி பேசத் தொடங்கி, "பெரும்பாலோரான ஸ்திரீகள் தம்முடைய கடமைகளைச் சரியானபடி தெரிந்துகொண்டு ஒழுங்காய் நடந்து கொள்ளாதிருப்பதனால்தான் உலகத்தில் அநேக குடும்பங்களில் சண்டையும் பூசலும் மனஸ்தாபமும் அடியும் தடியுமாக இருக்கின்றன. இது எல்லோரும் அறிந்த விஷயந்தானே" என்றாள்.

அந்த சமயத்தில் திவான் படிக்க எடுத்த கடிதத்தின் மேல் விலாசத்தில் இருந்த எழுத்து அவரது கவனத்தைக் கவர்ந்துகொண் டது. அவர் தமது மனையாட்டியுடன் பேசுவதை விடுத்து அந்தக் கடிதத்தின் உறையை ஆவலோடு கிழித்தவண்ணம், "இது அப்பா வின் எழுத்துபோ லிருக்கிறது. இது அநேகமாய் அவர்களுடைய கடிதமாகத்தான் இருக்கவேண்டும்" என்று கூறியவண்ணம் உறைக் குள்ளிருந்த கடிதத்தை எடுத்தார்.

அவரது சொல்லைக் கேட்ட அந்த மாதரசியும் திடுக்கிட்டு ஆவ லும் ஆசையும் தோன்ற, "ஆ! அப்பாவுடைய கடிதமா? படியுங்கள்" என்று கூறிவிட்டு நிரம்பவும் பணிவாக ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின் றுள். அந்தக் கடிதம் தனது மாமனுரால் எழுதப்பட்ட கடிதமென் பதைக் கேட்டவுடன் அந்தப் பெண்மணி தனது மாமனுரை அப் போது நேரில் காண்பவள்போல மட்டிலடங்கா ஆநந்தம், குதூ கலம், பயபக்தி, விசுவாசம், நாணம் ஒடுக்கம் முதலிய உணர்ச்சி களை யடைந்து, கடிதத்தில் எழுதப்பட்டுள்ள விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் கொண்டாளாலுைம், அதை வெளியில் காட்டாமல் அடக்கிக்கொண்டு அசைவற்றுக் கற்சிலை போல ஒய்ந்து நின்று விட்டாள்.

கடிதத்தைப் பிரித்த திவான் அதன் ஆரம்பத்தையும் முடிவை யும் இரண்டொருமுறை திருப்பிப் பார்த்துவிட்டு, "சரி; அப்பாதான் எழுதி இருக்கிருர்கள். படிக்கிறேன் கேள்" என்று கூறியவண்ணம் கடிதத்தைப் படிக்கலானுர். அது அடியில் வருமாறு எழுதப்பட் டிருந்தது:—

திருவடமருதூர்,

....வருட....மீ....உ

சிரஞ்சீவி செல்வக் குமாரனுக்கு அநேக ஆசீர்வாதம்; உபய க்ஷேமம்.

கடைசியாக நீ அனுப்பிவைதத கடிதமும் பணமும் வந்துசேர்ந் தன. நீ எழுதியபடி பணத்தை உடனே பங்கீடு செய்துவிட்டேன்.

நீ பணம் அனுப்ப அனுப்ப, இவ்விடத்தில் என்னுடைய பொறுப்பும் கவலைகளும் மலைபோலப் பெருகிக்கொண்டே போகின் றன. நான் என்னுடைய சம்பாத்திய காலத்தில் ஒரு சிறிய ஜவு ளிக்கடைதான் வைத்து, அதில் கிடைக்கும் சொற்ப வருமானத்

தைக்கொண்டு நம்முடைய குடும்ப காலக்ஷேபத்தை நடத்தி, உன்னையும் படிக்க வைத்தேன், அந்தக் காலத்தில் எனக்கிருந்த சந்தோஷத்திலும் மனோதிடத்திலும் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இப்போது இல்லை. அப்போது நான் உன்னைப்படிக்கவைத்ததைக்கண்டு இந்த ஊரில் இருந்தவர்கள் எல்லோரும், "துணிக்கடைக்காரன் மகன் எம். ஏ படித்து எருமை மேய்க்கப் போகிறானோ! இந்த ரூபாயை வட்டிக்குப் போட்டாலும் மாசம் பத்து ரூபாய் லாபம்கிடைக்குமே!" என்று நிரம்பவும் ஏளனமாகப் பேசி புரளி செய்தார்கள். இப்போது உனக்குப் பெரிய திவான் உத்தியோகம் கிடைத்திருப்பதைப்பற்றியும், நீ மாசம் ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறதைப் பற்றியும் அதே மனிதர்கள் இப்போது என்னிடம் வந்து வாய் ஓயாமல் முகஸ்துதியாகப் பேசி, நம்மை செல்வத்தில் குபேரனென்றும், புத்தியில் பிரகஸ்பதி என்றும் கொண்டாடுகிறார்கள். இப்போது மளமளவென்று பெருகிக்கொண்டே போகும் நம்முடைய செல்வத்தைக் காணக் காண, எல்லோரும் உள்ளூற சகிக்க முடியாத பொறாமையும் வயிற்றெறிச்சலும் கொண்டு, "இவர்களுக்கும் இப்படிப்பட்ட வாழ்வு வருமா" என்று தமக்குத் தாமே புழுங்கிப் போகிறார்களானாலும், வெளிக்கு என்னை ஸ்துத்தியம் செய்கிறார்கள். அவர்கள் அப்படி ஸ்துத்தியம் செய்துக்கொண்டே என்னிடம் வருவதெல்லாம் எரிகிற வீட்டில் பிடுங்கின துலாபமென்ற எண்ணத்தோடன்றி வேறல்ல. அவர்களுடைய பொறாமையையும் துராசையையும் நான் தெரிந்துகொண்டும் ஒன்றையுமறியாதவன் போல நிரம்பவும் சாமர்த்தியமாய் நடந்து வருகிறேன். ஊரிலுள்ளவர்கள் என்னை எவ்வளவுதான் அபாரமாய் புகழ்ந்து பாராட்டினாலும், நீ தலையெடுத்தபிறகு நம்மிடம் உண்மையில் ஏராளமான செல்வம்இருப்பது உண்மையானாலும், எனக்குப் பழைய மன நிம்மதியும், சந்துஷ்டியும் இல்லவே இல்லை. என்விசனமும் விரக்தியும் தினம் தினம்பெருகிக்கொண்டே போகின்றன.

உன் தாயார் இறந்துபோய் கிட்டத்தட்ட ஐந்து வருஷ காலமாகிறது. என்றைக்கு அவளைப் பறி கொடுத்தேனோ அன்று முதலே எனக்கு இந்த ஜென்மம் வியர்த்தமாய்விட்டது. நீ இங்கே பக்கத்தில் எவ்விடத்திலாவது ஓர் உத்தியோகம் பார்ப்பாயென்றும், உன்னையும்,உன் சம்சாரம் குழந்தைகளையும் அடிக்கடி பார்த்தும்,உங்க

ளோடு இருந்து காலந் தள்ளுவதும் ஒருவித ஆறுதலாக இருக்கு மென்று நான் நினைத்த நினைப்பும் கை கூடவில்லை. இவ்விடத்திற்கு சுமார் ஐந்நூறு மயில் தூரத்திலுள்ள திருவனந்தபுரத்தில் நீங்கள் இருக்கவும், நான் என்னுடைய அறுபத்தைந்தாவது வயசு காலத்தில் தனியாக இந்த ஊரிலிருந்து ஏங்கித் தவிக்கவும் ஈசன் எழுதி விட்டான். இவ்விடத்திலுள்ள நம்முடைய பங்களாவை யாருக்காவது வாடகைக்குக் கொடுத்துவிட்டு,உங்களிடம்வந்து இருந்துவிடும்படி நீ பல தடவைகளில் எழுதி இருக்கிறாய். இப்போதும் நீ அதையேதான் சொல்லுவாய். ஆனாலும் என் மனம் அந்த விஷயத்தில் ஒரேவிதமான தீர்மானத்தைக் கொண்டிருக்கிறது; நம்முடைய முன்னோர்கள் தலைமுறை தலைமுறையாக இந்த க்ஷேத்திரத்தில் இருந்து ஈசனுடைய திருவடிநிழலை யடைந்திருக்கிறார்களாகையால், நானும் என் கடைசிக்காலத்தை இந்த க்ஷேத்திரத்திலேயே கடத்திவிட வேண்டுமென்று ஒரே உறுதியாக இருக்கிறேனென்பதை நான் பலதடவைகளில் உனக்குஎழுதியும் நேரில் சொல்லியு மிருக்கிறேன். அதையே தான் நான் எப்போதும் சொல்லுவேன். எனக்குத் தள்ளாமை வர வர அதிகரித்துக்கொண்டே போகிறது இந்த நிலைமையில், நான் ஒரு க்ஷணநேரமாவது இந்த க்ஷேத்திரத்தைவிட்டு வேறு எந்த ஊருக்கும் போக விரும்பவில்லை. எந்த நிமிஷத்தில் கடவுள் எனக்கு ஆள் அனுப்புவாரோ அந்த நிமிஷத்தில் புறப்பட நான் ஆயத்தமா யிருக்கவேண்டு மல்லவா? உன்னையும் உன் மனையாளையும் குழந்தை ராஜாபகதூரையும் பார்க்கவேண்டுமென்று என் மனம் துடிக்கிறது; என் கண்கள் பறக்கின்றன. இரவு பகல் எனக்கு உங்கள் நினைவே நினைவாக இருக்கிறது. எங்கே பார்த்தாலும், நீங்கள் மூவரும் நின்றுகொண் டிருப்பதுபோலவே என் மனம் உணர்கிறது; அப்படி இருந்தும், இந்த க்ஷேத்திரத்தைவிட்டு வெளியேற என் மனம் ஒருப்படமாட்டே னென்கிறது.

என்னுடைய துயரத்திற்கும், ஏக்கத்திற்கும் முக்கியமாக உங்களுடைய பிரிவாற்றாமையே காரணமென்பதை அறியாத இந்த ஊர் ஜனங்கள் என்னைப் பார்த்து மனம் போனபடியெல்லாம் பேசுகிறார்கள். சிலர் சொல்லுகிறார்கள், "ஏன், தாத்தா. நீங்கள் மாத்திரம் தனியாக இந்த ஊரில் இருந்து என்ன செய்கிறீர்கள்? பிள்ளைதான் ராஜபோகத்தில் இருக்கிறாரே. அங்கேபோய் சௌக்கியமாய் இருக்கக்கூடாதா" என்கிறார்கள். சிலர், "எவ்வளவுதான் பிள்ளை பெரிய

பதவியி லிருந்தாலும், பரம்பரையாக இருந்த ஊரையும், இவ்வளவு அழகாக இருக்கும் பங்களாவையும் விட்டு தூர தேசத்துக்குப் போவது சரியல்ல; இங்கேயே இருந்துவிடுங்கள். உங்களுக்கென்ன வயசு அவ்வளவு அதிகம் ஆகவில்லை. உடம்பு நிரம்பவும் திடமாகத் தானே இருக்கிறது. நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால், உங்களுடைய செல்வத்தைக் கருதி, நான் பெண்ணைக் கொடுக்கிறேன், நான் பெண்ணைக் கொடுக்கிறேனென்று ஆயிரம் பேர் முன்னுக்கு வந்து விழுவார்கள். நல்ல பெரிய பெண்ணாகப் பார்த்துப் பேசாமல் கட்டிக்கொள்ளுங்கள். உங்களுடைய கஷ்டமெல்லாம்நிவர்த்தியாகிவிடும். உங்களுடைய தள்ளாத காலத்தில் நீங்கள் தலைவலியென்று படுத்துக்கொண்டால். உங்களுக்குப் பற்றுப்போட ஒரு மனிதர் வேண்டாமா; நீங்கள் யோசிக்காமல் அப்படியே செய்துவிடுங்கள். உங்கள் பிள்ளை நல்ல குணவான். உங்களுடைய நன்மைக்கு அவர் குறுக்கே நிற்கமாட்டார்" என்கிறார்கள். இன்னும் சிலர், "என்ன, தாத்தா! உங்களுக்கு வயது அதிகமாய்விட்டது. உங்களுடைய ஆஸ்தியைக் கருதி யாராவது பெண் கொடுத்தாலும், பெண் யௌவனப்பருவமுள்ளதாக இருக்குமாகையால், அது உங்களை மதித்து அடங்கி நடக்குமென்பதை நாம் எப்படி நிச்சயமாகச் சொல்லுகிறது. பிள்ளையார் பிடிக்க, அது குரங்காய் முடிந்ததென்கிறபடி, நீங்கள் க்ஷேமப்பட வேண்டுமென்று ஒருபெண்ணைக்கட்ட, அதுவே உங்களுக்கு எமனாக முடிந்தாலும் முடியும். அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். பேசாமல், யாருக்கும் தெரியாமல் காதும் காதும் வைத்ததுபோல, எவளாவது ஒருத்தியை வைப்பாட்டியாக வைத்துக் கொள்ளுங்கள். அவள் ஒழுங்காக நடக்கிறவரையில் பாருங்கள். தவறாக நடந்தால், கழுதையை ஓட்டிவிடுங்கள்" என்கிறார்கள். இப்படி உலகம் பலவிதமாக இருக்கிறது.

இவைகளை யெல்லாம்விட பெரிய வேடிக்கையொன்றை உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த ஊர் வடக்கு வீதியிலுள்ள பெரியபண்ணை அண்ணாசாமி முதலியாரைப்பற்றி உனக்கு நன்றாக நினைவிருக்குமென்று எண்ணுகிறேன். இந்த ஜில்லாவிலேயே அவருக்கு மிஞ்சிய பணக்காரர் யாருமில்லைஎன்று ஜனங்கள்சொல்ல நீ கேட்டிருப்பாய். அது எவ்வளவு தூரம் நிஜம் என்பது சந்தேகம். இருந்தாலும் எனக்குத் தெரிந்தவரையில் அவருக்கு நூறு வேலி நஞ்சை நிலமிருக்கிறது. வருஷத்தில் எல்லாச் செலவுகளும் போக,

சுமார் பதினயிரம் ரூபாய்க்குமேல் மிச்சப்படுமென்பதைப்பற்றி சந்தேகமே இல்லை. இந்த ஊருக்கு அவரே தலைவர் என்பதும் உனக்குத் தெரிந்த விஷயம். ஊர் நியாயங்களை யெல்லாம் அவரே தீர்த்து வைக்கிறார். அவர் மகா புத்திமான், யோக்கியர். அவருக்கு இருபது வயசில் ஓர் ஆண்பிள்ளையும், பதினேழு வயசில் ஒரு பெண்ணும் இருக்கிறார்கள். பையனுக்குக்கலியாணம்ஆய்விட்டது.பெண்ணுக்கு இன்னம் கலியாணம் நடக்கவில்லை. எத்தனையோ இடங்களிலிருந்து பெண்ணுக்கு வரன் வந்துகொண்டே இருந்தது. அவருக்கும் அவருடைய சம்சாரத்துக்கும் எந்த வரனும் திருப்திகரமாகத் தோன்றவில்லை; எதற்கும் அவர்கள் சம்மதிக்கவில்லை. தங்களுக்கு வாய்க்கும் மாப்பிள்ளைக்கு ஆயிரம் வேலி நிலம் இருக்க வேண்டும். பையன் பி. ஏ. அல்லது, எம். ஏ. பரீட்சையில் தேறி இருக்க வேண்டும். அவன் சிவப்பாகவும், மன்மதன் போன்ற அழகுடையவனாகவும் இருக்கவேண்டும். அவனுக்கு இருபது வயதிற்கு மேல் அதிகம் ஆயிருக்கக்கூடாது. அவன் கலியாணம் ஆன அடுத்த க்ஷணம் முதல் மாமனார், மாமியார், பெண்ஜாதி முதலியோருக்கு அடிமையாய் நடக்கக் கூடியவனாக இருக்க வேண்டும் என்று இப்படியெல்லாம் அவர்கள் சொல்லிச் சொல்லி எல்லா வரனுக்கும் குற்றம் கூறி அனுப்பிக்கொண்டே இருந்தார்கள். அப்படிப்பட்ட மனிதர்கள் இப்போது தங்களுடைய பெண்ணை எனக்குக் கட்டிக் கொடுப்பதாய்ச் சொல்வதாயும், பெண்கூட அதற்கு இணங்கி விட்டதென்றும் எனக்கு நம்பிக்கையான செய்தி கிடைத்துக்கொண்டிருக்கிறது. மனிதருக்கு உன்னதமான பதவியும்,ஏராளமான பணமும் வந்து விடுமானல், அவர்கள் சொப்பனத்திலும் எதிர்பார்க்க முடியாத பெருமைகளெல்லாம் ஒன்றன்பின்னென்றாய் மளமளவென்று அவர்களுக்கு வந்து லபிக்கின்றன. இதே அண்ணுசாமி முதலியாரும், அவருடைய சம்சாரமும் இப்போது எப்படிப் பேசிக் கொள்கிறார்களாம் தெரியுமா? "இங்கிலீஷ்படிப்பு யாருக்குவேண்டும் ஜீவனத்துக்கு வேறே வழி இல்லாமல் திண்டாடுகிறவர்களல்லவா இங்கிலீஷ் படிப்பையும், அதன் மூலமாய் உத்தியோகத்தையும்நாடுகிறார்கள். இந்த இங்கிலீஷ் படிப்பு இந்தத் தேசத்துக்கு வந்த ஆரம்பத்தில் பி. ஏ. என்றால், மதிப்பு அதிகம். இப்போது பி. ஏ. படித்தவர்களும். எம். ஏ. படித்தவர்களும் காசுக்குநூறு, பீசுக்குப்பத்தாகக் கிடந்து இறைபடுகிறார்கள். அவர்கள் உத்தியோகத்துக்குப் போனலோ, அநேகமாய் குமாஸ்தா வேலைதான் கிடைக்கிறது அதி

விருந்து முப்பது நாற்பது சம்பளம் கிடைத்தால், அது அன்றாடம் வயிற்றை வளர்ப்பதற்குக்கூடப் போதுமானதா யிருக்கிற தில்லை குடும்பத்தில் யாராவது நோயாய் விழுந்துவிட்டாலும் சரி, ஊருக்குப் போகவேண்டு மென்றாலும் சரி, வேஷ்டி புடவைகள் நகைகள் வாங்கவேண்டு மென்றாலும் சரி, அவன் கடன் வாங்கவேண்டும். அல்லது, பழைய சொத்துக்களை அடமானம் வைக்கவேண்டும். அவனுக்கு நாலைந்து குழந்தைகள் பிறந்துவிடும் பக்ஷத்திலோ அவர்களுக்குக் கலியாணம் முதலியவைகளை நடத்த ஆயிரம் இரண்டாயிரம் வேண்டுமானால், அவன் திருடித்தான் பணம் சம்பாதிக்கவேண்டும். அல்லது, பெண்களைக் கன்னி கழியாமேலேயே வைத்திருக்க வேண்டும். இந்த அழகான உத்தியோகங்களுக்கோ போட்டியும் பொறாமையும் கணக்கில்லாமல்ஏற்படுகின்றன. இந்த உத்தியோகஸ்தர்களுக்கு ஏற்படும் மாறுதலோ மகா விநோதம். லாகூரிலிருப்பவர் இரங்கூனுக்கும், கல்கத்தாவிலிருப்பவர் கன்னியாகுமாரி முனைக்குமாய் மாற்றப்படுகிறார்கள். அப்படி மாற்றப்படுகிறவர்கள் பெரியவர்களுடைய துணையின்றி, தமது யௌவன மனைவிகளுடன் போவதும், குடும்ப வாழ்க்கையிலும், குழந்தைகளைப்பெற்றுப் பாதுகாப்பதிலும், ஆரோக்கியமான ஆகார முறைகளைக் கடைப்பிடிப்பதிலும் கொஞ்சமும் அநுபவமற்ற அந்த யௌவன மனைவிகள் தனியாக தூரதேசங்களுக்குப் போய்த் தவிப்பதும் சர்வ சாதாரணமாகிவிட்டன. யார் செத்தாலும்; யார் வாழ்ந்தாலும் புருஷன் மணிக்கிரமப்படி தன் அலுவலுக்குப் போய்ச் சேரவேண்டும். தந்தி கொடுத்தால்கூட சில சமயங்களில் ரஜா கிடைக்கிறதில்லை. இங்கிலீஷ் படிக்கிறவன் ஜாதியாசாரம் குலாசாரம் முதலியவற்றையெல்லாம் இழந்து தான் என்கிற மமதையில் ஆழ்ந்து, இங்கிலீஷ்காரரிலும் சேராமல், இந்தியரிலும் சேராமல், வௌவால்கள் போல அந்தரத்தில் தொங்கிக்கொண்டு எவருக்கும் உதவாத ஒரு தனி உலகத்தில் இருந்துவருகிறார்கள். ஆயிரம் பதினாயிரம் செலவிட்டு பி. ஏ. எம். ஏ. பரீட்சையில் தேறுகிறார்களே, அவர்கள் திடசாலியாய் நீடித்து நிற்பார்கள் என்ற நம்பிக்கையாவது உண்டா? அதிகமாய்ப் படிக்காதவர்களுடைய தேகக் கருவிகள் திடகாத்திரமாக இருக்கின்றன. இராப் பகல் உழைத்து உழைத்துப் படித்தாலும், மூளைக்கு அதிக வேலை கொடுத்து தேகத்தை நாற்காலியை விட்டு அசைக்காமல் போட்டிருப்பதாலும், உடம்பின் கருவிகள் வெகு சீக்கிரம் மலினமடைந்து போகின்றன. வயிற்று

நோய், அஜீரணம், குன்மம், நீர் ரோகம் முதலிய வியாதிகள் வந்து விடுகின்றன. சீக்கிரத்தில் நரம்புகளும் கெட்டுத் தளர்ந்துபோகின்றன. திடீரென்று இருதய ஓட்டம் நிற்பதால் பிராணன் போய் விடுகிறது. ஏராளமான திரவியத்தையும், உழைப்பையும், உயிரையும் செலவிட்டுச் சம்பாதித்த பி. ஏ. பட்டமும், உத்தியோகமும் அவன் மண்டையோடு ஒழிந்துபோகின்றன. மனைவி மக்களுக்கு ஓடுகள்தான் மிஞ்சுகின்றன. ஆகையால், நமக்குப் படித்தவனும் வேண்டாம், சர்க்கார் உத்தியோகத்திலிருக்கிறவனும்வேண்டாம். ஏராளமான பூஸ்திதியும் பணம் வைத்திருப்பதோடு, சாதாரணமான வியவகார ஞானமும், நற்குண நல்லொழுக்கமும் உடையவனாய் இருப்பதே போதுமானது. அவன் யௌவனப் புருஷனாயிருப்பதுகூட அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை. கொஞ்சம் வயசு முதிர்ச்சி யடைந்து, உலக அநுபவம் உடையவனாய் இருப்பானாகில், அவனே சிலாக்கியமான மாப்பிள்ளை. ஏனென்றால், வயசான மனிதன் யௌவனப் பிராயமுடைய தன் மனைவியை அத்யந்த பிரமையோடும் ஆசையோடும் நடத்துவான்; அவள் காலாலிடும் வேலையைச் சிரசால் செய்வான்; அவளை வையமாட்டான்; அடிக்கமாட்டான்! அவளுக்கு வேறு எவ்விதமான உபத்திரவமும் கொடுக்கமாட்டான். அவனுடைய புத்தி அன்னிய ஸ்திரீகளிடத்திலும் நாட்டங் கொள்ளாதாகையால், அவன் உறுதியான ஏக பத்நி விரதம் பூண்டு நடப்பான். அவன் அயல் மாதரை விரும்பினாலும், அவர்கள் அவனை மதிக்க மாட்டார்கள். ஒருவேளை தன் யௌவன மனைவி ஏதாவது தவறு செய்துவிட்டாலும், அவன் பொறுத்துக் கொள்வதோடு, அதை வெளியில் சொல்லிக் கொள்ளவும் மாட்டான். தன் பெண்சாதி உழைத்து வேலை செய்வதைக் காண, அவன் சகியான். அரிசிப் பானையை அடுப்பில் ஏற்றி இறக்குவதைத் தவிர மற்ற சகலமான காரியங்களையும் அவளுக்கு அவனே செய்து கொடுத்து விடுவான். அவனுக்கே சமயல் வேலையும் தெரிந்திருக்குமானால், பெண் ஜாதியை அடுப்பண்டையே அவன் போக விடமாட்டான். தான் திருடியோ, பொய் சொல்லியோ எப்படியாவது பணம் சம்பாதித்து தன் மனைவி கஷ்டப்படாமல் காப்பாற்றுவதோடு, வயிற்றை ஒடுக்கி, வாயை ஒடுக்கி, அவளுக்கு நல்ல புடவைகள், உயர்ந்த நகைகள் முதலியவைகளை வாங்கிக் கொடுத்து அவளைச் சந்தோஷப்படுத்த முயன்றுகொண்டே இருப்பான். யௌவனப் புருஷர்களோ பெண் தனக்குரிய சகலமான காரியங்களையும் செய்து அடிமைபோல நடந்து

கொள்ள வேண்டுமென்றும், எல்லா விதத்திலும் அவள் தம்மை சந்தோஷப்படுத்தித் தம்முடைய பிரியத்தைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்றும் எதிர் பார்ப்பார்கள். வயதான புருஷர்களோ, தாம் எப்பாடு பட்டாவது, எவ்விதம் நடந்து கொண்டாவது அவளை சந்தோஷப்படுத்தி, அவளுடைய மனம் தம்மிடம் பிரியம் கொள்ளும்படி செய்யவேண்டுமென்று இரவு பகல் அதே கவலையாகவும் கவனமாகவும் இருப்பார்கள். இதோ மூலைவீட்டு அகிலாண்டத்தம்மாள் தன்னுடைய மூத்தபெண்ணை அறுபது வயசான ஒருகிழவருக்குக் கட்டிக்கொடுத்தாள். அதைப்பற்றிஎல்லோரும்விசனப்பட்டார்கள்; இளைய பெண்ணை இருபத்தைந்து வயதுள்ள ஒரு சிறு பிள்ளைக்குக் கட்டிக் கொடுத்தாள். அதைப்பற்றி எல்லோரும் ஆநந்தமடைந்தார்கள். மூத்தபெண் புருஷனோடு சந்தோஷமாகவும் ஒற்றுமையாகவும் இருந்து, அந்த வீட்டுக்கே ஒரு சக்கரவர்த்தினிபோல விளங்கி திருப்தியாகவும் க்ஷேமமாகவும் இருக்கிறாள். அவளுக்கு இரண்டு மூன்று குழந்தைகளும் பிறந்துவிட்டன. இளைய பெண் வீட்டுக்குப் போகுமுன் புருஷன் காலராவினால் மாண்டுபோய் விட்டான். பெண் சரியான பக்குவகால மடைந்துதுக்கமும், துன்பங்களுமநுபவிப்பதோடு தாய் வீட்டிலிருந்து, நின்றால் குத்து, உட்கார்ந்தால் உதையாகத் தின்று, இருக்கவும் மாட்டாமல், சாகவும் மாட்டாமல் போக்கிடமற்றுத் தவிக்கிறது. இந்த விஷயங்களையெல்லாம் யோசிக்க, யோசிக்க நம்முடைய பெண்ணை, நமது ஜவுளிக்கடைக்காரர் குஞ்சிதபாத முதலியார் கட்டிக்கொள்ள இணங்கினால், இரட்டைச் சந்தோஷத்தோடு நாம் கட்டிக் கொடுத்துவிடுவோம்'' என்று அண்ணாசாமி முதலியாரும் அவருடைய சம்சாரமும் இப்போது பேசிக்கொள்வதாகப் பலதடவைகளில் எனக்குச்செய்தி எட்டியது. அவர்களை நான் பார்க்க நேரும் போதெல்லாம், அவர்கள் இதுவரையில் வேறே எவருக்கும் காட்டியிராத பிரியத்தையும் மரியாதையையும் காட்டி என்னை உபசரித்து அடிக்கடி தங்கள் வீட்டிற்கு வரும்படி வருந்தியழைக்கிறார்கள். மனிதன் கேவலம் பதராக இருந்தாலும், அவனிடம் பணம் மாத்திரம் இருக்குமானால், அவனுக்கு எப்பேர்ப்பட்ட பூஜிதையும் பெருமைப்பாடும் கிடைக்கின்றன. மனிதனிடம் சகலமான யோக்கியதைகளுமிருந்தாலும், அவனிடம் பணம் மாத்திரம் இல்லாமல் போகுமானால், அவன் கேவலம் நடைபிணத்துக்குச் சமானமாய்மதிக்கப்படுகிறான். ஊரின் நிலைமை இப்படி விநோதமாக இருக்கிறது. என்னுடைய மனசில் இருந்து என்னை வதைத்

துக் கொண்டிருக்கும், எண்ணங்கள் என்ன என்பதை ஜனங்கள் தெரிந்து கொள்ளாமல் தாறுமாறுகப் பேசுகிறார்கள். நானே தடுகுடு கிழவனாகிவிட்டேன். காடு வாவா வென்கிறது; வீடு போ போ வென்கிறது. எப்போது உன் தாயார் என்னை விட்டுப் பிரிந்து போனாளோ அன்றைய தினமே என் உயிரும் என் உடம்பை விட்டுப் பிரிந்து போய்விட்டதென்றே சொல்லவேண்டும். நான் வெற்றுடம்பாய் சாகவும்மாட்டாமல் இருக்கவும் மாட்டாமல்எமனுலகத்தின் வாசற் கதவைப் பிடித்துக்கொண்டு நிற்கிறேன். உன்னையும், உன் சம்சாரம், குழந்தை முதலியோரையும் நினைத்துக்கொண்டும், உங்களை எப்படியும் பார்த்து ஆநந்திக்கலாமென்று எண்ணிக்கொண்டும் இருப்பதே என்னுடைய வெற்றுடம்புக்கு ஓர் உயிர்போல இருப்பதால், அந்த பலத்தையே முக்கிய ஜீவாதாரமாகக் கொண்டு நான் இருந்து வருகிறேன்.

இப்போது சென்ற ஒரு மாசகாலமாய் உங்களெல்லோரையும் பார்க்க வேண்டு மென்ற ஆசை தோன்றி, அது முற்றிப் பெரிய பைத்தியம் ஆகி, புத்தியைக் கலக்கி, ஓயாமல் என்னை சஞ்சலத்தில் ஆழ்த்திக்கொண்டே இருக்கிறது. அதுவுமன்றி, நம்முடைய ஈசுவரன் கோவிலில் பிரம்மோத்சவம் வருகிறது. நாளைய தினம் கொடி ஏறப்போகிறது இதுவரையில் எந்த வருஷத்திலும் நடக்காதபடி அவ்வளவு புதுமையான அலங்காரங்களோடு அதிக விமரிசையாய் இந்த வருஷம் திருவிழா நடக்கப் போகிறதாம். ரிஷபவாகனத் திருவிழாவும், தேரும் கண்கொள்ளாக் காட்சிகளாக இருக்குமென்று எல்லா ஜனங்களும் அதே பேச்சாகப் பேசிக் கொள்ளுகிறார்கள். முதல்தரமான வாத்தியக்காரர்கள் வந்திருக்கிறார்கள். இப்போது முதலே ஊர் தேவேந்திர லோகம்போல விளங்குகிறது. எங்குப் பார்த்தாலும்குதூகலமும் சந்தோஷமுமே மயமாகக்காணப்படுகின்றன. இப்போது முதலே புதிய புதிய கடைகளும், இராட்டினங்களும், இன்னும் பலவிதமான வேடிக்கைகளும் வந்து வந்து ஊரெங்கும் நிறைந்து போயிருக்கின்றன. ஆறு நிறையத் தண்ணீர் போனாலும், நாய் நக்கி நக்கித்தான் குடிக்க வேண்டுமென்பதுபோல, நான் ஒருவனே துர்ப்பாக்கியவானாய்த் துயரமென்ற பெரிய பேய்க்கு அடிமையாய் இருந்துவருகிறேன்.

நீ ஒரு பெரிய சமஸ்தானத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவன். உன்னை நான் இந்தத் திருவிழாவைக்கருதி அழைப்பது

ஒழுங்கல்ல. சௌபாக்கியவதி காந்திமதியம்மாளையும், குழந்தையையும் பதினைந்து தினங்களுக்கு நீ இவ்விடம் அனுப்பி வைத்தால், நான் மறுபடி உயிர்பெற்று இன்னம்கொஞ்சகாலம் இந்தமண்ணுலகத்தில் இருப்பேன் என்று நம்புகிறேன். இடையில் நீ இரண்டு மூன்று தினங்களுக்காவது மகாராஜனுடைய அநுமதி பெற்றுக் கொண்டு எப்படியாவது இங்கே வந்து உன் முகத்தை எனக்குக் காட்டிவிட்டுப் போனால், என் மனம் குளிரும். என் உடம்பும் உயிரும் தளிர்த்துப் புத்துயிர் பெறும். ஏதோ கிழவன் பைத்தியம் பிடித்து உளறுகிறான் என்று நினைத்து அசட்டையாக இருப்பாயோ என்னவோ! நீ சற்புத்திரன் என்று உன்னை எல்லோரும் புகழுவதாக நான் கேள்வியுற்றிருக்கிறேன். அதை இப்போது நான் காரியத்தில் பார்க்கவேண்டும்.

என்னுடைய தவசிப்பிள்ளையாகிய இராமலிங்கத்தை நான் நாளைய மெயில் வண்டியில் அவ்விடத்திற்கு அனுப்பி வைக்கிறேன். இந்தக் கடிதம் உன்னிடம் வந்து சேரும் தினத்திற்கு மறுநாள் அவன் அங்கே வந்து சேருவான். அதற்கு மறுநாள் நல்ல நாளாகையால் அன்றைய தினம் தவறாமல் நீ சௌபாக்கியவதி காந்திமதியம்மாளையும் குழந்தை ராஜாபகதூரையும் அவனுடன் கூட்டி அனுப்பி வைக்கவேண்டியது. பிறகு நீ என்றைய தினம் புறப்பட்டு வரப் போகிறாய் என்பதையும் அவர்களிடம் சொல்லி யனுப்பவும்.

அவர்களை அனுப்பும்போது, பச்சைக் கொட்டைப் பாக்கு நாலைந்து குலைகள், நேந்திரங்காய் நூறு, மலையாளத்துச் செல்லப் பெட்டிகள் இரண்டு, இன்னும், அவ்விடத்தில் கிடைக்கக்கூடிய விநோதமான சாமான் ஏதாவதிருந்தால் அதையும் அனுப்பி வைக்கவும். அவர்கள் வந்தவுடன் மறுபடி நான் எழுதுகிறேன்.

அநேக ஆசீர்வாதம்,

குஞ்சிதபாத முதலியார்.

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படிக்கவே, திவான் முதலியாரது மனம் பிதிர்வாஞ்சையினால் இளகியது. தமது தந்தை முதிர்ந்த வயதடைந்திருக்கும் நிலைமையில் நெடுந்தூரத்தில் தனிமையிலிருந்து பிரிவாற்றாமையால் ஏங்கித் தவித்துக்கொண் டிருந்ததைப்பற்றி திவான் மிகுந்த கலக்கமும் சஞ்சலமும் அடைந்தார். தந்தையின் மனம் திருப்தியும் சந்தோஷமும் அடையும்படி தாம் எந்தக் காரியத்

லதயும் செய்யக் கடமைப்பட்டிருப்பாக அவர் எண்ணினர். அவரது விருப்பத்தின்படி தாம் தமது திவான் ஸ்தானத்தைவிட்டு ஒரு நாளைக்குக்கூட ராஜா எடுத்துக்கொண்டு போவது அநுசிதமாகத் தோன்றியது. ஆயினும் அவரது இச்சைப்படி தமது மனையாட்டியையும் குமாரனையும் சுமார் பதினைந்து தினங்கள் வரையிலாவது அனுப்பி வைப்பது அவசியமாகப்பட்டது. ஆனல், அதுகாறும் தமது மனைவி தம்மைவிட்டுப் பிரிந்து ஒரு தினங்கூட எவ்விடத்திலும் இருந்த தில்லை யாதலால், அவள் மனத்திற்கு அந்த ஏற்பாடு எவ்விதமிருக்குமோ என்ற நினைவும் கவலையும் எழுந்தன. அவர் உடனே தமது மனையாளினது முகத்தை நோக்கினர்.

அந்தப் பெண்மணி அந்தக் கடிதம் படிக்கப்பட்டபோது மிகுந்த பயபக்தி விநயத்தோடு அதைக் கேட்டுக்கொண்டே மௌனமாக நின்ருள். கடிதம் முடிவடைவதற்குள் அவளது மனம் இன்னதென்று விவரிக்க இயலாத பலவித உணர்ச்சிகளால் உலப்பப்பட்டு வருந்தத் தொடங்கியது. தனது மாமனரது பரிதாபகரமான நிலைமையைக் கேட்கக் கேட்க, தாங்கவொண்ணுத பெருத்த மனவேதனையும் இரக்கமும் தோன்றி வதைத்தன. அதோடு தான் தனது பிராணநாயகரை விட்டுப் பிரிந்துபோக நேரிடுமே என்ற ஏக்கமும் சஞ்சலமும் அபாரமாகப் பெருகி வளைத்துக் கொண்டன. ஆகவே அவளது வதனமாகிய சந்திரமண்டலத்தை சஞ்சலமாகிய மேகம் மறைக்கத் தொடங்கியது. அவளது மனம் முற்றிலும் குழம்பி ஏங்கித் தவிக்கிறதென்பதை அவளது முகத்தின் வாட்டமும் சோர்வும் சுலபத்தில் காட்டின. அந்தப் பெண்ணரசியின் மனநிலைமையை உள்ளபடி வெகு நுட்பமாக யூகித்தறிந்துகொண்ட திவான் அவளது விசனத்தை மாற்றி அவளை உற்சாகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு அவளைநோக்கி இனிமையாகப்புன்னகைசெய்து நயமாகவும் குழந்தைபோலவும் கொஞ்சலாகப் பேசத்தொடங்கி, "பத்துப் பதினைந்து தினங்களுக்கு உனக்கும், உன் குழந்தைகளுக்கும் நல்ல வேட்டைதான். முன் காலங்களில் பெண்கள் தாய் வீட்டுக்குப் போவதென்ருல் சந்தோஷப் படுவார்கள்; புருஷர் வீட்டுக்குப் போவதென்ருல், விசனப்படுவார்கள். ஏனென்ருல், தாய் வீட்டில் வேலை செய்யாமல் சந்தோஷமா யிருக்கலாம். புருஷர் வீட்டில் உழைத்து வேலை செய்யவேண்டும்; மாமனர் மாமியாருக்குப் பயந்து அடங்கி ஒடுங்கி மூலை முடக்குகளில் போய் ஒளிந்துகொண் டிருக்க

வேண்டும். இப்போதுஉன்னைப்போன்றவர்கள்மாமனார்வீட்டிற்குப் போனால், உனக்கு ராஜோபசாரம் நடக்கும், உன்னை அவர்கள் தரையில் நடக்கவிடமாட்டார்கள். தினந்தினம் விருந்து தினந்தினம் திருவிழா, தினந்தினம் சுவாமி தரிசனம், இரவு பகல் மேளவாத்தியத்தின் சங்கீதம். உன்பாடு கொண்டாட்டம்தான்" என்றார்.

தனது புருஷர் தனது ஏக்கத்தை விலக்கவும் தன்னை சந்தோஷப்படுத்தவும் அவ்வாறு பேசுகிறாரென்பதை உணர்ந்துகொண்ட பெண்மணி தான் தனது மனத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு அவரது மனப்போக்கின்படி நடந்துகொள்ள வேண்டுமென்றுஎண்ணிக் கொண்டவளாய் நிரம்பவும் பணிவாகப் பேசத்தொடங்கி, "சரி; தாங்கள் தந்தைசொன்மிக்கமந்திரமில்லையென்றுநினைக்கும்சற்புத்திரர். ஆகையால், தாங்கள் எப்படியும் பிதிர்வாக்கிய பரிபாலனம் செய்தே தீருவீர்கள். அதுபோலவே, நானும் தங்களுடைய சித்தமே சட்டமாக மதித்து நடக்கக் கடமைப்பட்ட தங்கள் அடிமை. தாங்கள் என்னை பார்த்து, "நீ போய், உடனே கிணற்றில் விழ வேண்டியது" என்று சொல்லும் பட்சத்தில், அதை நான் அந்த உத்தர க்ஷணத்திலேயே ஆநந்தமாக நிறைவேற்ற வேண்டியவள். ஆகையால், தாங்கள் பார்த்து என்னை ஊருக்கு அனுப்பி வைத்தால், நான் அதை சிரசாக வகித்து சந்தோஷமாய்ச் செய்கிறேன். நான் தங்களுடைய பிரியத்தை நிறைவேற்றுகிறேன் என்ற எண்ணத்தினால் மாத்திரம் நான் சந்தோஷமடைவேனே தவிர, அவ்விடத்தில் திருவிழாவில் காணப்படும் வேடிக்கைகளைக் கண்டு நான் சந்தோஷமடைகிறவளன்று. தாங்கள் என்னோடுகூட இருந்து எதைக்குறித்தாவது சந்தோஷம் அடைந்தால், அப்போது நானும் தங்களோடுகூட இருந்து அந்த சந்தோஷத்தைப் பங்கிட்டுக் கொள்ளுவேன். தாங்கள் இல்லாத காலத்தில் என் மனம் ஒரு நாளும் எதைப்பற்றியும் சந்தோஷ மடைந்ததே இல்லையென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். அநேகமாய் அந்தக் காலத்திலெல்லாம் பெருத்த ஏக்கந்தான் என் மனசில் குடிகொண்டிருந்திருக்கிறது" என்றாள்.

அதைக் கேட்ட திவான் முதலியார் தமது மனையாட்டியின் அந்தரங்கமான உறுதிமொழியை உணர்ந்து அவளது கற்பு விசேஷத்தை நினைத்து மிகுந்த மன இளக்கமும் குதூகலமுமடைந்தார். அதற்கு அறிகுறியாக அவரது முகம் சந்தோஷத்தினால் மலர்ந்

தது. கண்களில் ஆநந்த பாஷ்பம் சரேலென்று தோன்றி வெளிப் பட்டது.

அவர் அளவற்ற வாத்சல்யம் தோன்ற நெகிழ்வான குரலில், "ஏது இன்றையதினம் நீ யோசனையில்லாமல் அவசரப்பட்டுப் பேசுகிறாயே; நீ எப்போது பேசினாலும். ஆட்சேபனைக்கு இடம் கொடாமல் ஆணித் தரமாகவும் அழகாகவும் பேசுவாய் இப்போது நீ சொன்ன விஷயம் ஒப்புக்கொள்ளக் கூடியதாக இல்லையே" என்றார்.

அதைக் கேட்ட ஸ்திரீரத்னம் நடுநடுங்கிப் போய்த் தான் ஏதேனும் தவறான சொற்களை உபயோகித்திருக்கலாமோ வென்று அஞ்சிக் கலங்கி, "யானைக்கும் அடிசருக்குமென்பார்களே. அப்படி இருக்க, கேவலம் பேதையாகிய நான் தவறு செய்திருக்க மாட்டேனென்று நான் எப்படித் துணிந்து மறுக்கமுடியும். நான் அறிந்து எந்தத் தவறையும் செய்பவளன்று; அறியாமல் ஏதாவது தவறாகப் பேசி இருந்தால், தாங்கள் தான் அதை எடுத்துக் காட்டித் திருத்த வேண்டும்" என்று நயமாகவும் பணிவாகவும் குழந்தைபோல மழலையாகவும் மறுமொழி கூறினாள்.

திவான் முதலியார், "நான் இல்லாத காலத்தில் நீ சந்தோஷமே அடைகிறதில்லை யென்றும், நான் இல்லாததைப்பற்றி ஏக்கங் கொண்டிருப்பதென்றும் சொல்லுகிறாயே நம்முடைய குழந்தை ராஜாபகதூர் இருக்கிறானே. அவனுடைய அழகையும், புத்திசாலித் தனத்தையும், நற்குண நல்லொழுக்கத்தையும் கண்டு எல்லோரும் ஆநந்தமடைந்து, அவனை நிரம்பவும் மெய்ச்சி அபாரமாகப் புகழுகிறார்களே. அன்னியர்களே அப்படி இருக்க, பெற்ற தாயாகியநீ உன் குழந்தையைக் கண்டு எவ்வளவு அதிகமாக ஆநந்தமடைய வேண்டும். நான் இல்லாத காலத்தில் அவன் உன்னோடு கூட இருப்பதில்லையா? அப்போது நீ சந்தோஷ மடைவதில்லையா?" என்றார்.

அதைக் கேட்ட பெண்மணி நிரம்பவும் மரியாதையாகவும் பணிவாகவும் அடக்கமாகவும் மிருதுவான குரலிலும் பேசத்தொடங்கி, "பையனுக்குப் பன்னிரண்டு வயசு நடந்து கொண்டிருக்கிறது. அவனைத் தாங்கள் குழந்தை என்று மதிக்கலாம்; நான் அப்படி மதிக்கலாமா? என்னைப்போன்ற தாய்மார் குழந்தைகளைக் கண்டு சந்தோஷப்படும் பருவம் அநேகமாய் அவர்களுடைய மழலைச்சொல்திருந்து

கிற வரையில்தா னென்பது என்னுடைய அபிப்பிராயம். அதுவரை யில் அவர்களுடைய மழலைச் சொற்களைக் கேட்பதனாலும், அவர்க ளுடைய மூடத்தனமான விளையாட்டுகளைக் காண்பதனாலும், அல் லது, அவர்களுடைய அமிதமான புத்திசாலித்தனத்தையோ, அல் லது அழகையோ, அல்லது நற்குண நல்லொழுக்கத்தையோ காண் பதனாலும் தாய்மாருக்கு ஆநந்தமும் புளகாங்கிதமும் ஏற்படுவது சகஜமே. அதற்குமேல் அவர்களுடைய காரியங்களைக் கண்டு தாய் மார் சந்தோஷத்தை வெளியிடும் பட்சத்தில் அவர்களே அவனைக் கெடுத்தவர்க ளாவார்கள்; தாய்மார் குழந்தைகளைப் புகழ்வதும், தமது சந்தோஷத்தை அவர்களிடம் வெளிப்படுத்துவதும் அவர்க ளைக் கெடுத்துவிடக்கூடிய காரியங்களல்லவா. அவர்களுடையகுண விசேஷங்களைக் கண்டு தாய்மார் உள்ளூற சந்தோஷமடைந்தாலும், அதை அவர்களுக்குத்தெரியும்படி காட்டிக்கொள்ளாமல் இருந்தால் தான், குழந்தைகள் பயந்து திருந்தி நல்வழிப்பட்டு முன்னுக்கு வரு வார்கள். நம்முடைய பையனுக்கு மூன்றரை வயசு நிறைகிற வரை யில்தான் அவனுடைய காரியங்களும், அவனைக் காண்பதுவும் எனக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணின. அதன்பிறகு நான் அவனை நிரம்பவும் ஜாக்கிரதையாகப் பழக்கி வருகிறேன். அவ னுடையசிசுப்பருவத்தில் தாங்களும்அநேகமாய் சதாகாலமும் என் னோடு கூடவே இருந்தீர்கள். நாமிருவரும் சேர்ந்தே அவனுடைய விளையாட்டுகளைக் கண்டும், அவனுடைய சொற்களைக் கேட்டும் சந் தோஷப்பட்டோம். அவனுடையசிசுப்பருவம் தாண்டியபிறகு நான் அவனுடன் தனியாக இருந்து சந்தோஷமடைந்ததே இல்லை; இனி யும் அப்படிப்பட்ட தவறை நான் செய்யமாட்டேன்" என்றாள்.

திவான் திகைப்படைந்து, "நீ சொல்லுகிறது புது விஷயமாக இருக்கிறதே! பெண்பிள்ளைகளின் மனப்போக்கு உன்னைப்போன்ற வர்களுக்குத்தான் நன்றாகத் தெரியவேண்டும். நான் ஆண்பிள்ளை களின்மனப்போக்கைப்பற்றிநிச்சயமாகப்பேசக்கூடும். நம்முடைய ராஜாபகதூர் எனக்கு எப்போதும் குழந்தையாகத்தான் தென்படுகி றான். அவன் கிழவனாய், நான் அவனுக்குமேல் பெரிய தாத்தாவாய் இருந்தால்கூட, அப்போதும் நான் அவனைக் குழந்தை என்றுதான் மதிப்பேன்;. அப்படியேதான் கூப்பிடுவேன். அவனைக் காணும்போ தெல்லாம் சூரியனைக்கண்டு தாமரை மலருவதுபோல, என் மனமும் முகமும் தாமாகவே சந்தோஷத்தினால் மலர்ந்து போகின்றன.

அதை நீ எப்போதும் பார்த்துக்கொண்டேதா னிருக்கிறாய்" என்றார்.

காந்திமதியம்மாள், "நம்முடைய பையன் எள்ளளவும் தவறாக நடப்பவனே யன்றாகையால், அவன் கெடாமலிருப்பதற்கு நான் ஒருத்தி கண்டிப்பாய் இருப்பதே போதுமானது. ஆகையால், தாங்கள் அவனைக்கண்டு எவ்வளவு வேண்டுமானாலும் ஆநந்தமடையலாம். தாங்களும் அவனிடம்கண்டிப்பாய்நடந்துகொள்ளவேண்டிய அவசியமே இல்லை யென்பதைத் தெரிந்துகொண்டுதான் தாங்கள் அப்படி நடந்து கொள்ளுகிறீர்கள். தங்களுக்குத் தெரியாத விஷயமும் இருக்கிறதா. பையன் கெட்டவனாயிருந்தால், தாங்கள் அப்போது நடந்துகொள்ளுவது வேறுமாதிரியாக இருக்கும்" என்றாள்.

அதைக் கேட்ட திவான் முதலியார் மிகுந்த சந்தோஷமும் வியப்பும் அடைந்து ஆநந்தமாக நகைத்து, "அப்படியா! பையன் விஷயத்தில் நீ அவ்வளவு கண்டிப்பாகவும் ஜாக்கிரதையாகவும் இருக்கிறாயா! உலகத்தில் தகப்பனார்தான்பிள்ளையிடம் கண்டிப்பாக இருப்பது வழக்கம்; தாய்மார் செல்லம் கொடுத்துக் கெடுப்பார்கள் குழந்தை தாயிடம்தான் சலுகை சொல்லிக்கொள்ளும். எதற்கும் தாய்தான் குழந்தைக்காகப் பரிந்து பேசுவாள். நம்முடைய குடும்ப சங்கதி அதற்கு மாறாக இருக்கிறது. இப்படி இருப்பதனால், சந்தோஷமெல்லாம் எனக்குத்தான் கிடைக்கிறது" என்றார்.

காந்திமதியம்மாள், "நாங்களெல்லோரும் தங்களை சந்தோஷப் படுத்துவதற்காகத்தானே பிறந்திருக்கிறோம். எங்களால் தாங்கள் சந்தோஷமடையாவிட்டால், சம்சார மெதற்கு, பிள்ளை எதற்கு?" என்றாள்.

திவான் முதலியார் தமது மனைவியாளைப் பார்த்து, "அது போகட்டும்; நம்முடைய குழந்தையைக் கண்டு நீ சந்தோஷப்படுவதில்லையென்றே வைத்துக்கொள்ளுகிறேன். இதற்கென்று நீ ஒரு பெரிய திருவிழாவிற்குப் போகிறாய்; அவ்விடத்தில் சுவாமியின் புறப்பாடும், சுவாமி சேவையும் அமோகமாகவும நேத்திராநந்தமாகவும் இருக்குமே. சுவாமி தரிசனம் பண்ணுவதைவிட வேறுபிரமமாநந்தமும் உலகத்தில் இருக்குமா? அப்போது கூடவா உன மனசில் ஆநந்த முண்டாகாது?" என்றார்.

அதைக் கேட்ட மனையாட்டி, "நான்தான் நாஸ்திக மதத்தைச் சேர்ந்தவளாயிற்றே. உலகத்தில் தெய்வம் ஒன்று இருக்கிறதென்றும், அதை வணங்கி வழிபடவேண்டுமென்றும் நான் இது வரையில் நினைத்ததே யில்லை; இனியும் நினைக்கப் போகிறதில்லை. நான் தொழுவதற்கும், வணங்கி வழிபடுவதற்கும், ஆராதனை பண்ணுவதற்கும், பணிவிடைகள் செய்வதற்கும் பிரயத்தியக்ஷமான தெய்வம் தாங்கள் இருக்கையில் நான் வேறே தெய்வத்தை ஏன் வணங்க வேண்டும்? குலமகட்கழகுதம் கொழுநரைப்பேணுதல் என்று சொன்னார்களே யன்றி, கொழுநரை விட்டுக் கடவுளைப் பேணுதல் என்று சொல்லவில்லையே. ஸ்திரீகளாய்ப்பிறந்தவர்கள் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட கடமைகளை ஒழுங்காகச் செய்துகொண்டே போவார்களானால், அவர்கள் கடவுளின் கருணாகடாக்ஷத்தைத்தேடி யலைய வேண்டியதே இல்லை. அது தானாகவே கிடைத்துவிடுமென்று திருவள்ளுவர் தம்முடைய அழகான ஒருபாட்டில் சொல்லி இருக்கிறாரே தாங்கள் முக்கியமான என் உயிர் ஸ்தானமாகிய கழுத்தைத் தொட்டு எப்போது தாலி கட்டினீர்களோ, அப்போதே என் உயிரைப் பிடித்து உங்களோடு சேர்த்துக் கட்டிவிட்டீர்கள். உடம்பு உயிரைப் பொருத்ததாகையால், அதுவும் சேர்த்துக் கட்டப்பட்டதென்று சொல்லவேண்டியதேஇல்லை. எனக்குப்புகலிடம்தாங்களே. நான் அடையும் இன்பமும் தாங்களே. என்னுடைய உலகமும் தாங்களே.என்னுடைய கடவுளும்தாங்களே. என்வாழ்நாளெல்லாம் நான் என் தேகத்தை தங்களுடைய திருப்பணிகளுக்கே அர்ப்பணம் செய்துவிட்டேன். என்னுடைய தேகத்திலுள்ள ஒவ்வோர் அங்கமும் உங்களுக்குப் பயன்பட்டு அதனால் சந்தோஷமடை வதற்கே யன்றி வேறல்ல. நான் தலையைப் பெற்றது தினம் தினம் உங்களை வணங்கி அதனால் ஆனந்தமடைவதற்கு, நான் கண்களைப் பெற்றது என்றும் தெவிட்டாத உங்களுடைய வடிவழகைக் கண்டு மகிழ்வதற்கு; நான் காதுகளைப் பெற்றது, உங்களுடைய குரலொளியைக் கேட்டு இன்பமடைவதற்கு; நான் மூக்கை பெற்றது தாங்கள் இருக்குமிடத்தில் எவ்வித துர்க்கந்தமு மில்லாமல் சுத்தமாக இருக்கிறதா என்பதை முன்னதாகவே ஆராய்ச்சி செய்து வைத்து, தங்கள் தேக ஆரோக்கியம் கெடாமல் பாதுகாப்பதான பேரின்பத்தை அடைவதற்கு. நான் வாயைப் பெற்றது உங்களை எப்போதும் துதி செய்து பயபக்தி விசுவாசததைப் பெருக்கி, ஆநந்த பரவசமடைவதற்கு; நான் கைகளைப் பெற்றது, இரவு பகல் ஓயாது எப்போதும்

தங்களுடைய பணிவிடைகளைச்செய்து தினம்தினம் கைகூப்பித்தங் களைத் தொழுது அதனல் மகிழ்ச்சி அடைவதற்கு; நான் கால்களைப் பெற்றது ஒவ்வொரு தினமும் காலை நன்பகல் மாலை ஆகிய மூன்று காலங்களிலும் தங்களைச் சுற்றி பிரதக்ஷிணம் செய்வதற்கும், தாங் கள் அடியாளை நினைக்கும்போதெல்லாம் ஓடிவருவதற்கும். அப்படிச் செய்துசந்தோஷமடைவதற்குமேயன்றிவேறல்ல. சுருங்கச்சொல்லு மிடத்து நான் இந்த உடம்பைப் பெற்றது எத்தனை விதங்களில் இதைத் தங்களுக்குப் பயன்படுத்தலாமோ அத்தனை விதங்களில் பயன்படுத்தி, அதை பேரின்பமாக மதிப்பதற்கு. நான் ஹிருதயத் தையும், மனசையும் பெற்றது என் ஹிருதயமாகிய திருக்கோவிலில் சதாகாலமும் தங்களை வைத்து, மனசாகிய நந்தவனத்தில் புஷ்பிக் கும் நல்ல எண்ணங்கள், வாஞ்சை, பிரேமை, பயம், பக்தி முதலிய உணர்ச்சிகள் ஆகிய மலர்களால் அந்த ஒப்புயர்வற்ற தெய்வத்தை சதாகாலமும் அர்ச்சித்து, அதனல் பெருகும் இன்ப ஊற்றையே ஜீவாதாரமாய் எப்போதும் உண்டு, யாவரும் கண்டறியாத பேரானந் தத்தை அடைந்திருப்பதற்கே யன்றி வேறல்ல. தாங்கள் இருக்கும் இடமே எனக்கு புண்ணிய க்ஷேத்திரம். தங்களுடைய தரிசனமே சுவாமி தரிசனம். தங்களால் அடையும் இன்பமே தெய்வப் பிர சாதம். இந்த இன்பத்திற்கு நிகரான இன்பம் நான் வேறே எவ் விடத்திலும் கண்டதுமில்லை, இனி காணப் போகிறதுமில்லை, நான் திருவடமருதூருக்குப் போனலும் சரி, நேராக சொர்க்கலோகத் துக்கே போய் நம்மைப் படைத்த கடவுளுக் கெதிரில் நின்றலும் சரி; அங்கே என் மனம் இவ்விதமான ஆநந்தத்தை அடையுமா என்பது சந்தேகந்தான்" என்றாள்.

தமது மனையாட்டியின் அற்புதமான மனப்போக்கைக் கண்ட திவான் பேருவகைகொண்டு பூரிப்படைந்தவராய் அந்தமாதுசிரோன் மணியை நோக்கி ஆநந்தமாக நகைத்து, "ஏதேது! நீ பேசுவது மகா விபரீதமாக இருக்கிறதே! நீ நினைப்பதுபோலவே இன்னும் மற்ற எல்லாப் பெண்பிள்ளைகளும் நினைத்து சுவாமி தரிசனத்திற் குப் போகாமலேயே இருந்து சத்தியாக்கிரகம் செய்யத் தொடங்கி விட்டால், கடவுளின் பாடு திண்டாட்டம்தான். வேல்ஸ் இளவர சர் வந்த காலத்தில் மகாத்மா காந்தியின் ஆக்ஞைப்படி ஜனங்க ளெல்லோரும் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே இருந்து விட் டதுபோலத்தான் முடியும்" என்றார்.

காந்திமதியம்மாள், "பெண்பிள்ளைகள் மாத்திரந்தானே அப்படிச் செய்யும்படி திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். தங்களைப் போன்ற ஆண்பாலர் எப்போதும் கடவுளைத் தொழவேண்டியது தானே. வேல்ஸ் இளவரசர் வந்த காலத்தில் உத்தியோகஸ்தர் வகுப்பைச் சேர்ந்தவர்களெல்லோரும் அவரைவரவேற்று அவரைக் கொண்டாடவில்லையா? அதைப்போலவெளியுலக நிர்வாகத்தை வகிக்கிறவர்களான ஆண்மக்கள் கடவுளினிடம் சத்தியாக்கிரகம் செய்ய முடியாதல்லவா? அந்த பக்தகோஷ்டியே கடவுளுக்கு ஏராளமாக இருக்குமே" என்றாள்.

திவான் முதலியார் வேடிக்கையாக நகைத்து, "நாங்கள் மாத்திரம் கடவுளின் அருளை எதற்காக நாடுகிறது? இந்த விஷயத்தில் திருவள்ளுவர் சொன்னது குறைவாகச் சொன்னதென்றே நான் நினைக்கிறேன். தெய்வம்தொழாள்கொழுநற்றொழுதெழுவாள்,பெய்யெனப் பெய்யும் மழை என்று அவர் சொன்னாரே. அதாவது, ஒரு பெண்பிள்ளை பதிவிரதா தருமத்தைக் கடைப்பிடித்து, புருஷனையே தெய்வமாக வணங்கினால், அதுவே அவளுக்குப் போதுமானது. அவள் வேறே எந்தக் கடவுளையும் தொழவேண்டிய அவசியமில்லை என்று அவர் சொல்லுகிறார். அப்படிப்பட்ட உத்தமஸ்திரீக்குத்தெய்வகடாக்ஷமே தேவையில்லையென்று அவர் சொல்லவில்லை. அவளுக்கு தெய்வ கடாக்ஷம் தானாகவே உண்டாகும் என்று அதை நாம் அர்த்தம் செய்துகொள்ளவேண்டும். ஸ்திரீக்கு மாத்திரம் அவர் அப்படிச் சொல்லவேண்டிய காரணமென்ன? அது புருஷருக்கும் பொருந்துமல்லவா. ஸ்திரீகளுக்கு எப்படிப் பதிவிரதா தருமம் சொல்லப்பட்டிருக்கிறதோ, அதுபோல புருஷருக்கும் அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய தர்மங்கள் இருக்கின்றனவல்லவா. புருஷன் எப்போதும் தன்மனதையும், உடம்பையும் பரிசுத்தமாக வைத்திருக்கவேண்டும். அவன் எப்போதும் உண்மையையே பேசவேண்டும்; பிறருக்கு உதவி செய்ய வேண்டுமேயன்றி எவருக்கும் எவ்விதக் கெடுதலும் நினைக்கவும் கூடாது; செய்யவும் கூடாது. அவன் அன்னிய ஸ்திரீகளின்மேல் ஆசைகொள்ளாமல், ஒரேமனைவியோடு திருப்தியடைய வேண்டும்; எல்லா ஜீவன்களையும் தன் ஜீவன்போலவே மதித்து இரங்கவேண்டும். அவன் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ வேண்டும். அவன் தன் மனைவி மக்களைக் காப்பாற்றவேண்டும். இப்படியெல்லாம் சொல்லப்பட்டிருக்கும் புருஷதர்மங்களைத் தவறு

மல் ஒருவன் செய்துகொண்டே போவானாகில், அவனும் கோவிலுக்குப் போகவேண்டிய அவசியமு மில்லை; தெய்வத்தைத் தொழவேண்டிய அவசியமுமில்லை" என்றார்.

அவரது மனையாட்டி சந்தோஷத்தோடு நகைத்து, "அதுதான் பூர்த்தியான சத்தியாக்கிரகம். அப்போதுதான் கடவுள் ஏகாங்கியாய் உட்கார்ந்துகொண்டு எவரும் தம்மை நாடவில்லையே என்று நினைத்து விசனப்படுவார்" என்றாள்.

திவான் முதலியார், "உடனே நம்மெல்லோருக்கும் நம்முடைய சுயராஜ்யமாகிய மோக்ஷலோகம் சித்திப்பது நிச்சயம் கடவுள் ஏகாங்கியாய் உட்கார்ந்து ஏன் விசனப்படுகிறார்? அவரே நேரில் வந்து சந்தோஷமாக உலகத்தார் எல்லோரையும் மோக்ஷ லோகத்திற்கு அழைத்துப்போய்த் தமக்குச் சமதையாக வைத்துக்கொள்வார்" என்றார்.

அதைக் கேட்ட மனையாள் சந்தோஷமாகப் புன்னகைசெய்து, "ஆம், வாஸ்தவந்தான். கடவுள் எல்லோருடைய கண்ணுக்கும் தெரியும்படி இராமல் அரூபியாய் மறைந்திருந்து மதசண்டைகளும் ஏராளமான அக்கிரமங்களும் உலகத்தில் நடக்கும்படி விட்டிருக்கிறார். மனிதர் எல்லோரும் ஒரே கட்டுப்பாடாயிருந்து அவருடைய விஷயத்தில் பூர்த்தியான சத்தியாகிரகத்தை நடத்தித் தம் தம் தர்மங்களை ஒழுங்காக நிறைவேற்றிக் கடவுள் இருக்குமிடத்தைக் கண்டு பிடிப்பது முதன்மையான கடமைதானே" என்றாள்.

திவான் முதலியார் சந்தோஷத்தோடு தமது நாயகியைநோக்கி' "இந்த உலகத்திலுள்ள சகலமான ஜீவர்களும் கட்டுப்பாடா யிருந்து மோக்ஷ லோகத்திற்கு வந்துவிட்டால், இத்தனை பேரும் இருப்பதற்கு அங்கே இடம் இராதென்ற எண்ணமோ என்னவோ. அண்டாண்ட பிரம்மாண்டங்களையெல்லாம் சிருஷ்டிக்கும் அபார வல்லமையுடைய கடவுள் எல்லா ஜீவர்களும் இருக்கும்படியான பெரிய ஒரு மோக்ஷ லோகம் உற்பத்தி செய்ய அவருக்கு இன்னமும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை யென்றே நினைக்கிறேன்" என்றார்.

காந்திமதியம்மாள், "அவருக்கு அப்படிப்பட்ட எண்ண மிருந்தால் அவர் இந்த பூலோகத்தையும் மற்றுமுள்ள அண்டாண்டபிரம்மாண்டங்களையும் ஏன் சிருஷ்டிக்கிறார்? பழையகட்டிடங்களை இடித்

துப் புதிதாய் மெத்தைவீடு கட்டுவதுபோல. இந்த சிருஷ்டியை யெல்லாம் அழித்துவிட்டு எங்கே பார்த்தாலும் ஒரே மோக்ஷலோக மாய்க் கட்டி விடமாட்டாரா? எல்லோரும் மோக்ஷ லோகத்துக்கு வரவேண்டுமென்ற எண்ணம் கடவுளுக்கே இல்லைபோலிருக்கிறது. ஊர்களுக்கு வெளியிலுள்ள சேறிகளில் சிலர் எப்போதும் வசிப்பது போல, சுவர்க்கத்திற்குப் புறம்பான இந்தப்பூலோகம் முதலிய இடங் களில் எப்போதும் சிலர் இருக்கவேண்டுமென்பதே அவருடைய கருத்து போலிருக்கிறது'' என்றாள்.

திவான் முதலியார், "அதைத் தெரிந்துகொண்டுதான் திரு வள்ளுவர் முதலில் ஸ்திரீகள் மாத்திரம் சத்தியாக்கிரகம் செய்யும் படி சொன்னார்போலிருக்கிறது. ஏனென்றால், ஸ்திரீகள் எல்லோ ரும் பதிவிரதா தர்மத்தைக் கடைப்பிடித்து மோக்ஷ லோகத்திற் குப் போய்விட்டால், பூலோகமே புருஷர் மயமாகி விடுமாகையால், அப்போதாவது அவர்கள் போய் தம் தம் ஸ்திரீகளை அடைய வேண்டுமென்று நினைத்து தம்முடைய தர்மத்தைக் கடைப்பிடித்து நடப்பார்கள் என்பது அவருடைய கருத்தென்று நினைக்கிறேன். அது போகட்டும். அப்பா எழுதி இருப்பதைப் படிக்க, என்மனசு இன்னதென்று சொல்ல முடியாத ஒருவித சஞ்சல மடைகிறது. இந்த சமயத்தில் நாம் இப்படி வேதாந்தம் பேசிக்கொண் டிருப்பது சரியல்ல. தள்ளாத காலத்தில் அவர்கள் ஏகாங்கியாக இருந்து அவஸ்தைப்படும் போது, நாம் இங்கே அபாரமான போகபோக்கி யங்களில் ஆழ்ந்து கிடப்பதை நினைக்க, நினைக்க, நாம் இதுவரையில் தேடிய பொருள் போதுமென்று நினைத்து இந்த உத்தியோகத்தை உதறி எறிந்து விட்டு ஊருக்குப்போய் விடலாமா என்ற எண்ணம் அடிக்கடி உண்டாகிறது. நான் அம்மாதிரி செய்வதாக அவர்களுக்கு எழுதினால், செய்யவேண்டாம் என்று அவர்கள் கண்டித்து எழுதி விடுவார்கள். இந்த ஊர் அரசரும் என்னை விடமாட்டார் போலிருக் கிறது. இங்கேயே வந்து சேர்ந்து விடும்படி நான் அவர்களுக்கு எத்தனையோ தடவைகளில் எழுதியாய்விட்டது. அது விஷயத்தி லும் அவர்கள் ஒரே பிடிவாதமாக இருக்கிறார்கள், அவ்விடத்தில் அவர்களுடைய சௌகரியங்களைக் கவனிப்பதற்கு எத்தனையோ தவசிப்பிள்ளைகள் முதலியோர் இருந்தாலும், அதெல்லாம் சொந்த மனிதர்கள் கூட இருப்பதற்குச் சமானமாகுமா? உண்மையில் அவர்களுக்கு இந்த நிலைமை பொறுக்க முடியாததாகத்தான் இருக்

கும். அதற்குத் தக்கபடி நாம் எவ்விதமான பரிகாரமும் செய்யாமல் தத்தளித்துக்கொண் டிருக்கிறோம். இந்த நிலைமையில் அவர்கள் எழுதியுள்ள இந்த அற்ப காரியத்தையாவது நாம் செய்யாவிட்டால் நம்மைப் போன்ற மகா பாவிகள் வேறே யாரும் இந்த உலகத்தில் இருக்கமாட்டார்கள். நாம் இங்கே இல்லாமல் அங்கே இருந்தால், உன் மாமனுருக்கு ஆகவேண்டிய பணி விடைகளையெல்லாம் நீயே செய்யவேண்டியவளல்லவா. ஆகையால், நீ பையனை அழைத்துக் கொண்டு உடனே போவது அத்யாவசியமான காரியமென்று நினைக்கிறேன்" என்றார்.

அதைக் கேட்ட மனையாளின் முகம் மாறி மாறி இன்பத்தையும் துன்பத்தையும் காட்டியது. தனது மாமனுருடைய துயரத்தைப் போக்கத் தாங்கள் கடமைப்பட்டவர்கள் என்பதையும், தனது பிராணபதியின் நோக்கப்படி தான் நடந்துகொள்ள வேண்டியவள் என்பதையும் அவள் நன்றாக உணர்ந்தாளாதலால், அவரது ஆக்ஞையைத் தான் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டதாகக்காட்டமுயன்றாள். ஆயினும், தான் என்றும் பிரிந்தறியாத தனது உயிர்நிலை போன்ற புருஷரை விட்டுப் பிரிந்து போகவேண்டுமே என்ற வேதனையும் ஏக்கமும் தாமாகவே வந்து அந்த சந்தோஷத்தைக் குலைத்து அவளது முகத்தை விகாரப்படுத்தின. ஆயினும், அந்த மாதுசிரோன்மணி தனது சஞ்சலத்தை அதிகமாய் வெளியில் காட்டாமல் அடக்கிக்கொண்டுபேசத்தொடங்கி, "நாங்கள் மாத்திரந் தான் போகிறதா? எஜமானர் வருவதில்லையா?" என்று நயமாகவும் கொஞ்சலாகவும் ஏக்கத்தோடும் கூறினாள். அந்தப் பெண்மணியின் மனநிலைமையை அறிந்துகொண்டதிவான், "நான் ஒருநாளைக்கு வேலை செய்யாதிருந்தால், மறுநாள் காகிதங்கள் மலைபோல் குவிந்து போகின்றன; அவைகளைப் பார்த்துமுடிக்க நான் இரவு பகல் வேலை செய்ய நேருகிறது. ஆகையால், நான் ரஜா வாங்கிக்கொண்டு வருவதென்றால், நான்கு, அல்லது, ஐந்து நாள்களுக்கு மேல் நான் எங்கேயும் வந்து இருக்க முடியாது. நான் இப்போதேஉங்களுடன்கூட வரும் பட்சத்தில் திருவிழாவின் நடுவில் நான் மாத்திரம் புறப்பட்டுத் திரும்பி வந்துவிட வேண்டும். நான் தேர் அன்றைக்கு முதல் நாள் அங்கே வந்து சேருகிறேன்; அவ்விடத்தில் 2, 3-தினங்கள் இருந்து, உங்களையும் கூடவே அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்து விடுகிறேன். அதுதான் நல்ல யோசனையாகப் படுகிறது இப்போது

உன்னோடுகூட இரண்டு வேலைக்காரர்களை அனுப்புகிறேன். ஊரிலிருந்து வரப்போகும் தவசுப்பிள்ளையும்; இந்த வேலைக்காரர்களும் கூட இருந்தால், உங்களை ஜாக்கிரதையாக ஊரில் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள்" என்றார்கள்.

பெண்மணி சிந்தித்தபடி சிறிது நேரம் மௌனமாக நின்று, "தங்கள் சித்தம்" என்றாள்.

உடனே திவான் முதலியார், "சரி; அப்படியே செய்துவிடுவோம். இவ்விதமாய் நாம் செய்யப்போவதாக நான் அப்பாவுக்கு இன்றைய தபாலில் ஒரு கடிதமும் எழுதி அனுப்பி விடுகிறேன். அதிருக்கட்டும். நான் நேற்று அழைத்துக்கொண்டு வந்த வீரம்மாளையும் அவளுடைய புருஷனையும் உள்ளே அனுப்பினேனே. அவர்கள் வந்தார்களா?" என்றார்.

மனையாள், "ஓ! வந்தார்கள்; பெண் வந்து என் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து ஆநந்தக்கண்ணீர் சொரிந்து, தாங்கள் செய்த தீர்மானத்தையும் தெரிவித்தாள். அவளுடைய புருஷரும் பின்னால் வந்து என்னுடைய காலில் விழுந்து கும்பிட எத்தனித்தார். அப்படிச் செய்ய வேண்டாமென்று நான் தடுத்துவிட்டேன், அவர்கள் இருவரும் இருந்த நிலைமை நிரம்பவும் பரிதாபகரமான காட்சியாக இருந்தது. என்னையன்றி என் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. மனம் பொங்கிப் போய்விட்டது. உடம்பு அபாரமாகத் தவித்துத் தடுமாறியது. நம்முடைய பங்களாவிலேயே தனியான ஒரு விடுதியை அவர்களுக்கு ஒழித்துக் கொடுப்பதாகவும், இன்னும் மற்ற ஏற்பாடுகளையும் செய்து கொடுப்பதாகவும், அவர்கள் தங்களுடைய சாந்தி கலியாணச் சடங்கை இங்கேயே ஆநந்தமாக முடித்துக்கொண்டு போகலாமென்றும் நான் சொன்னேன். அந்தப்பெண் மகா புத்தி சாலி, நல்ல குணவதி. அவள், "அம்மணி! தாங்களும் தங்கள் பர்த்தாவும் சுத்தமாய் அணைந்துபோன எங்கள் குடும்ப விளக்கை ஏற்றிவைத்த தொன்றே எங்களுக்கு ஒருகோடிபெறுமே தங்களுடைய நிலைமைக்கு நாங்கள் ஒரு புழுக்குச் சமானம். தாங்கள் எங்களை ஒரு பொருட்டாக எண்ணி இவ்வளவு தூரம் எங்களுக்குப் பெருமைகொடுத்து எங்களைக் காப்பாற்றினீர்களே. இவ்வளவே போதுமானது. நாங்கள் இன்னும் அதிக உரிமை பாராட்டி இவ்விடத்தில் இருந்து, எங்கள் குடும்பக் காரியங்களைச் செய்ய

எத்தனிப்பது துணிச்சலும் துடுக்குமான செய்கை. எங்களுடைய யோக்கியதைக்குத் தகுந்த ஒரு சாதாரணமான இடத்திலிருந்தே, நாங்கள் எங்கள் காரியங்களை நடத்திக்கொள்வது தகுதியானது. ஆகையால், நாங்கள் எங்களுடைய ஊருக்கே போய் விடுகிறோம். தாங்கள் உத்தரவு கொடுக்கவேண்டும்" என்று கெஞ்சி வேண்டிக் கொண்டாள். நான் அவளுக்குப் புதிய புடவை, ரவிக்கைகள் நகைகள், பணம், வேஷ்டி முதலிய பொருள்களைக் கொடுத்து அனுப்பிவிட்டுத்தான் இங்கே தங்களிடம் வந்தேன்" என்றாள்.

அதைக் கேட்ட திவான் அளவற்ற மகிழ்ச்சியும் குதூகலமும் தோற்றுவித்து, "பேஷ்! நல்ல காரியம் செய்தாய்! மற்ற எல்லாவற்றையும்விட, சந்தர்ப்பத்தில் நீ இம்மாதிரி பெரும்புத்தியோடு நடந்து கொள்வதுதான் எனக்கு உன் விஷயத்தில் அவ்வளவென்றுசொல்ல முடியாத பெருத்த சந்தோஷத்தை உண்டாக்குகிறது. ஏராளமான ஐசுவரியமுள்ள பெரிய மனிதர் வீட்டுப் பெண்பிள்ளைகள் அநேகமாய்க் கிருபண சிரோன்மணிகளாகவும், பிறாது கஷ்டங்களை உணராதவர்களாகவும்,காருண்யமென்பதேஎள்ளளவும் இல்லாதவர்களாகவும், முக்கியமாய்த் தங்களைப்போன்ற பெண்பாலார் கஷ்டப்படுகிறார்கள் என்றால், அவர்களை வெட்டு என்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். அத்தி பூத்ததுபோல ஆயிரத்தில் ஒருவர் அந்தக் கோஷ்டியில் சேராதவர்களாக இருக்கிறார்கள். நல்ல வேளையாக, நீ இந்த விஷயத்தில் என்னுடைய மனப்போக்குக்கு ஒத்தபடி இருக்கிறாயே. இந்த விஷயத்தில் அதிர்ஷ்டவான்தான். இருக்கட்டும்; நேரமாகிறது நீ இந்தப் பாத்திரங்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு உள்ளே போ நான் பார்க்கவேண்டிய காகிதங்கள் ஏராளமாக இருக்கின்றன. பார்த்து விட்டு சரியான காலத்தில் நான் கச்சேரிக்குப் போகவேண்டும்" என்றார்.

அவர் கூறிய புகழ்ச்சியான மொழிகளைக் கேட்டு மிகுந்த பூரிப்பும் மகிழ்ச்சியும் அடைந்த பெண்மணி தான் கொணர்ந்திருந்த பாத்திரங்களை எடுத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு மறைந்து போய் விட்டாள்.

மேற்படி சம்பாஷணை நடந்த தினத்திற்கு மூன்றாவது நாள் காலையில் காந்திமதியம்மாள் தனது புதல்வனை ராஜாபகதூர் என்ற நற்குணச் சிறுவனோடு திருவடமருதூருக்குப் பிரயாணமானாள்.

திவான் முதலியாரது தந்தையான குஞ்சிதபாத முதலியாரால் அனுப்பப்பட்டு வந்த இராமலிங்கம் என்ற பெயருடைய தவசிப் பிள்ளையும் இன்னொரு பணிமகனும், ஒரு பணிமகளும் துணையாகப் புறப்பட்டனர். திவான் முதலியார் உயர்தர ஆபரணங்களால் தன்னை நன்றாக அலங்கரித்துக்கொண்டு போகும்போது தமது மனையாட்டிக்குக் கூறினாரானாலும், கற்பின் பீடிகையாய் விளங்கிய அந்தப் பெண்மணி தான் வசீகரமாகத் தன்னை அலங்கரித்துக் கொள்வது கொண்ட கணவரது சந்தோஷத்திற்கே யாதலால், அவரில்லாத இடத்தில் தான் அவ்வாறு இருப்பது தகாத செய்கை யென்றும், அது ஏதேனும் எதிர்பாராத பெருத்த பொல்லாங்கை விளைவிக்குமென்றும் நிரம்பவும் பணிவாக அவருக்கு மறுமொழி கூறித் தான் சாதாரணமான ஏழைஜனங்களுள் ஒருத்திபோலச் செல்ல அநுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டவளாய் அவ்வாறே தன்னை ஓர் ஏழை ஸ்திரீபோல அலங்கரித்துக் கொண்டாள். அந்தப் பெண்ணரசியின் தேகத்தில் அதுகாறும் இருந்து வந்த இருநூறு முன்னூறுரூபாய் விலைமதிப்புள்ள ஜரிகைப்புட்டாக்கள் நிறைந்த பட்டுச் சேலைகள் யாவும் பெட்டிக்குள்போய் மறைந்துகொண்டன. அவள் ஆறு ஏழுரூபாய் விலைபெற்ற ஐந்தாறு காங்குப்புடவைகளைத் தருவித்து வைத்துக்கொண்ட தன்றி, அவற்றுள் ஒன்றையெடுத்து அணிந்துகொண்டாள். அந்த அணங்கின் மேனியில் நிறைந்து ஜ்வலித்த வைர ஓலைகள், வைர மூக்குத் திருகுகள், வைர மிழைத்த ஒட்டியாணம், வைர சரங்கள், வைர வளையல்கள் முதலிய யாவும் இரும்புப் பெட்டிக்குள் நுழைந்து கொண்டன. செவியில் சிவப்புக்கல் ஓலைகளும், கைகளில் இரண்டிரண்டு தங்க வளையல்களும், கழுத்தில் தாலிச்சரடுமே காணப்பட்டன. அவ்வாறு தனக்குத்தானே ஏழ்மை நிலைமையை வகித்துக் கொண்ட ஸ்திரீரத்னமான காந்திமதி யம்மாள் தனது கணவரிடம் சென்று அவருக்கெதிரில் மண்டியிட்டு பயபக்தி விநயத்தோடு நமஸ்கரித் தெழுந்து வணக்கமாகக் கைகுவித்து நின்றபடி ஏதோ வார்த்தைகள் கூற எத்தனித்தாள். ஆனால், அவளது வாய் குழறிப்போய்விட்டது. மெல்லிய காற்றிலசையும் மாந்தளிர்போல அந்த மடவன்னத்தின் வாயிதழ்கள் நடுங்கின. கண்களிலிருந்து கண்ணீர் குபீரென்று பொங்கிமாலை மாலையாக வழியத் தொடங்கியது. சிரம் கீழே கவிந்தது. தான் அவரது கட்டளையை சிரமேற்கொண்டு அவரை விட்டுப் பிரிந்து போவதற்கு இணங்கினாளானாலும், தான் தனது உயிரை விட்டுப்

பிரிந்து போவதாகவும், அந்தப் பிரிவாற்ருமை அப்போது முதலே தன்னை வதைக்கத் தொடங்கி விட்டமையால், தான் அதிக காலம் அவரை விட்டுப்பிரிந்திருந்தால் தனது உயிர் நில்லாதெனவும் அவள் வாய்விட்டுக் கூறுவதைவிட ஆயிரமடங்கு தெளிவாக அவளது பரிதாபகரமான தோற்றம் அவளது மனநிலைமையை எடுத்துக் காட்டியது. அதைக் காண திவான் முதலியாரும் மிகுந்த மனக்கலக்கமும் சஞ்சலமும் அடைந்தவராய்த் தமது அரிய மனையாட்டியைத் தமக் கருகில் இழுத்து வாஞ்சையோடு ஆலிங்கனஞ்செய்து, "உங்களைவிட்டுப் பிரிந்திருப்பது எனக்கு மாத்திரம் சந்தோஷமாக 'இருக்கிறதென்று நினைக்காதே. உன் மன சங்கடத்தை நீ அடக்கமாட்டாமல் இப்படி வெளியில் காட்டுகிருய். நான் அதை வெளியில் காட்டாமல் உள்ளூறவே வைத்துத்தவித்துக்கொண்டிருக்கிறேன். இருவருக்கும் அவ்வளவே வித்தியாசம். என்ன செய்கிறது. நாம் பெரியவருடைய மனசுக்கும் திருப்திகரமாக நடந்துகொள்ள வேண்டுமல்லவா. அவருக்கும் நம்மையன்றி வேறே உற்ருர் உறவினர் யார் இருக்கிருர்கள். ஒருவருமில்லை யல்லவா. எல்லாவற்றிற்கும் நீங்கள் முதலில் போங்கள். தோன்றைக்கு முதல் நாள் நான் அவசியம் அங்கே வந்து சேருகிறேன். அதன்பிறகு 2. 3-தினங்கள் நாமெல்லோரும் அங்கே இருந்து உடனே புறப்பட்டு வந்து விடுவோம்" என்று அன்பொழுகக் கூறித் தமது அங்கவஸ்திரத் தலைப்பால் அவளது கண்ணீரைத் துடைத்து விட்டார். பெண்மணி! "நான் உங்களைவிட்டுப் பிரிந்துபோகவே இல்லை. என் உடம்பு மாத்திரந்தான் போகப்போகிறது. இந்த ஏக்கத்தில் எனக்கு அவ்விடத்தில் சாப்பாடுகூடச் செல்லாதென்று நினைக்கிறேன். இரவு பகல் நான் இவ்விடத்து நினைவாகவே உயிரை விட்டுக்கொண்டிருப்பேன். இந்தத் திரு உருவத்தை மறுபடி என் கண்கள் கண்டாலன்றி சீக்கிரம் என் உயிர் போய்விடும். இது நிச்சயமான சங்கதி" என்று முற்றிலும் நைவாகவும் துக்ககரமாகவும் கூறினுள். அதே சமயத்தில், அவர்களது புதல்வனுன ராஜாபகதூர் என்ற சிறுவன் அங்கே வந்து சேர்ந்தான். அவன் சுமார் 12-வயதடைந்தவனென்று நாம் முன்னமே கூறியிருக்கின்ருேம். தாய் தந்தை ஆகிய இருவரது அற்புதமான வனப்பும், தேஜஸும், உத்தம குணங்களும் பன்மடங்கு பெருகித் திரண்டு அவனுருவாய் வந்தனவோ என்று எவரும் ஐயுறத்தக்கபடி அந்த மனமோகன வடிவழகன் சகலமான உத்தம லக்ஷணங்களும் வாய்ந்து சுவர்ண பிம்பம்போல விளங்கினுன். அவனது

முகம் மகா தீவிரமான புத்தியையும், வீரத்தன்மையையும், கபட மற்ற சாத்விக இயல்பையும் தெற்றென எடுத்துக்காட்டிய தன்றி, இயற்கையிலேயே அந்த முகம் சந்தோஷத்தையும் புன்முறுவலையும் காட்டியவண்ணம் இருந்தது அவ்வாறு தோன்றிய தங்களது புதல்வனைக் காணவே பெற்றோரிருவரும் ஒருவரைவிட் டொருவர் தூர விலகினர். திவான் முதலியார், "தம்பீ! இங்கே வா" என்று அளவிட இயலாத வாஞ்சைப் பெருக்கோடு அவனைத் தமக்கருகில் அழைத்துத் தமது இரு கைகளாலும் தடவிக்கொடுத்து, "வண்டி தயாராகி விட்டதா?" என்றார்.

பையன், "தயாராகிவிட்டது. புறப்படலாமென்று வண்டிக் காரன் சொல்லச் சொன்னான்" என்று நிரம்பவும் பணிவாகவும் பய பக்தி விநயத்தோடும் மறுமொழி கூறினான்.

உடனே தந்தை, சரி; நேரமாகிறது. போவோம். தம்பீ! என்னைவிட்டுப் பிரிந்து போகிறதைப்பற்றி அம்மாள் நிரம்பவும் வியாகுலப்படுகிறாள். நீ எந்த விஷயத்திலும் அம்மாள் சொற்படி நடந்துகொள். அம்மாள் விசனப்படாமல் இருக்கும்படி நீ பார்த் துக்கொள்ள வேண்டும். அப்படியே செய்வாயா?" என்றார்.

சிறுவன், "அப்பா! உங்களைவிட்டுப் பிரிந்து போக எனக்கும் மனமில்லை. இன்று காலைமுதல் என் மனம் இன்னதென்று சொல்ல முடியாதபடி நிரம்பவும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறது. நீங் கள் தேருக்கு முன் புறப்பட்டு வரும்போது உங்களோடு கூடவே நாங்களும் புறப்பட்டுப்போனா லென்ன? எங்களுக்கு மாத்திரம்முன் னால் அவ்விடத்தில் என்ன வேலை இருக்கிறது?" என்று மழலையாக மொழிந்தான். அதைக் கேட்ட திவான் அன்பாக, "இல்லையப்பா! உன்னுடைய தாத்தா நீங்கள் இருவரும் முன்னால் வரவேண்டு மென்று எழுதித் தவசிப்பிள்ளையையும் அனுப்பி இருக்கிறார்கள் நாம் அவர்களுடைய பிரியப்படிதான் நடந்து கொள்ள வேண்டும்; ஆகையால். நீங்கள் முன்னால் போங்கள். பின்னால் நானும் வந்து விடுகிறேன். நடுவில் அதிக தினங்கள் இல்லை. அதுவரையில் எப் படியாவது பொறுத்திருங்கள். அம்மாள் விசனப்படாமல் நீ பார்த் துக்கொள்ள வேண்டியதை விட்டு, நீயே அழுது கொண்டிருந்தால், பிறகு அம்மாள் பாடு விபரீதத்துக்கு வந்து விடும். என்ன சொல்லு கிறாய்? நான் சொன்னபடி செய்வாயா?" என்றார்.

அதைக் கேட்ட இளஞ்சிறுவன் உடனே தன்னை ஒருவாறு தேற்றிக்கொண்டு, "அப்படியே செய்கிறேன் அப்பா! தாத்தாவினுடைய இஷ்டப்படிதான் நாம் நடந்துகொள்ளவேண்டும்" என்றான்.

அவ்வளவோடு அவர்களது சம்பாஷணை முற்றுப்பெற்றது. அதன் பிறகு அம் மூவரும் மௌனத்திலும் விசனத்திலும் ஆழ்ந்தபடியே வண்டி நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்குச் சென்றனர். அவர்களது மனத்தில் பெருகி நிறைந்திருந்த பிரிவாற்றாமை ஓர் உலகத்தையும் போர்த்தத்தக்கதாய் இருந்ததென்பதை அவர்களது முகத்தோற்றமே கண்ணாடிபோல வெளியிட்டது. அவர்களது ஆடைகளும் மற்ற சில்லரை சாமான்களும் அடங்கிய பெட்டிகளை வண்டியில் வைத்துவிட்டு தவசிப்பிள்ளையும், வேலைக்காரனும் வேலைக்காரியும் வண்டியண்டை ஆயத்தமாக நின்றனர். காந்திமதியம்மாளும், புதல்வன் ராஜா பகதூரும் ஏறி வண்டியில் உட்கார்ந்துகொண்டனர்.

வண்டிக்காரன், "ஓட்டலாமா?" என்றான். திவான், "சரி! ஓட்டு" என்று கூறிவிட்டுத்தமதுபார்வையைவண்டிக்குள் செலுத்தி அன்பே நிறைவாக அதற்குள் இருந்த இரண்டு அழகிய வடிவங்களையும் மனங்குளிரப்பார்த்தார். அப்போது, வண்டி நகரத்தொடங்கவே, உள்ளே இருந்த இருவரும் வாய்திறந்துபேசவும் வல்லமையற்றவராய் நிமிர்ந்து திவானினது முகத்தை உற்றுப் பார்த்தனர். அவர்கள் மூவரது விழிகளும் ஒன்றோடொன்று சேர்ந்து ஓர் உலகமடங்கிய செய்தியைக் கூறி விடை பெற்றுக்கொண்டன. பத்து நிமிஷம் வரையில் அந்தக் காட்சி நீடித்திருந்து, வண்டி தெருக்கோடியை யடைந்து அப்பால் திரும்பியவுடன் மறைந்துபோயிற்று. அதுவரையில் அந்த இன்ப வடிவங்களிலேயே தமது மனம் முழுதையும் லயிக்கவிட்டு மெய்ம்மறந்து அசைவற்றுச் சித்திரப் பதுமைபோல நின்றுகொண்டிருந்த திவான் வண்டி மறைந்துபோன பிறகும் சிறிது நேரம் தமது சுய உணர்வைப் பெறாமலேயே இருந்து, பத்து நிமிஷ நேரங்கழித்து அவ்விடத்தை விட்டுத் தமது விடுதிக்குப் போய்ச் சேர்ந்தார். அப்போது வெளியுலகத்தில் சூரியன் பிரகாசித்துக் கொண்டிருந்ததானாலும், அது அவரது உணர்ச்சியில்படாமல்போனமையால், அது இரவுபோல ஒரே இருள் மயமாகக் காணப்பட்டது. அவரது மனத்திற்குள் மறைந்திருந்து சதாகாலமும் அபாரமான குதூகலத்தையும் ஊக்கத்தையும் ஆநந்தத்தையும் உண்டாக்கிக்கொ

ண்டிருந்த முக்கியமான ஒரு ஜீவாதாரசக்தி திடீரென்று இல்லாமல் போய்விட்டதுபோல அவருக்குத் தோன்றியது. க்ஷண மாத்திரத்தில் கண்ணொளி மழுங்கப்பெற்ற மனிதன்போல நமது திவான் மனவொளி மழுங்கப் பெற்றவராய் உயிரற்ற சவமோவெனும்படி அப்படியே தமது ஆசனத்தில் சாய்ந்துவிட்டார். சாய்ந்தவர் வெகுநேரம் வரையில் அசைவற்று ஓய்ந்து ஏக்கம், விசனம், வேதனை முதலிய பலவகைப்பட்ட உணர்ச்சிகளால் உலப்பப்பட்டவராய்ச் சோர்ந்து தளர்ந்து கிடந்தார். தமது மனம் கோணுதபடி லலித குணத்தோடு தம்மிடம் எப்போதும் நடந்து வாஞ்சையே வடிவாக இருந்து வந்தவளான தமது மனையாட்டியையும் புத்திரனையும் விடுத்து அவர் அதற்குமுன் பிரிந்தே அறியாதவராதலால், திடீரென்று நேர்ந்த அந்தத் தனிமை அவரால் சகிக்கவே கூடாத நரக வேதனையை உண்டாக்கியது. அவர்கள் இருவரையும் தாம் கூடுகிற வரையில் அந்த மாளிகையில் தனிமையில் எப்படி இருப்பது என்ற கவலையும் சஞ்சலமும் அப்போதே தோன்றிப் பெருகி வதைக்கலாயின. எந்த இடத்தைப் பார்த்தாலும், எந்த வஸ்துவைப் பார்த்தாலும், அங்கங்கு தமது மனையாளும், புதல்வனும் சிரித்த முகத்தோடு நிற்பதுபோன்ற சாயல் அவரது அகக்கண்ணுக்குத் தோன்றியது. அவர் போஜனம் செய்வதற்கு நேரமாகிவிட்டதென்று சமயற்காரனொருவன் வந்து கூறிய பிறகே அவர் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து தமது சுய உணர்வை ஒருவாறு பெற்றூர். அவருக்கு போஜனத்திலேயே நாட்டம் உண்டாகவில்லையாளுலும், அவனது வற்புறுத்தலைத் தடுக்க இயலாதவராய் எழுந்து சென்று வேண்டா வெறுப்பாக இரண்டொரு கவளம் உட்கொண்டபின் எழுந்து வந்து தமது உத்தியோக அலுவல்களை அடியோடுமறந்து கட்டிலில்படுத்துவிட்டார்.

படுத்தவர் பிறகு மறுநாட் காலையிலேயே அறை விட்டுக் கீழே இறங்கினூர். தாம் அந்த மாளிகையில் தனிமையில் இருப்பது ஆயிரம் தேள்களால் கொட்டப்பட்டுக் கொண்டிருப்பதுபோல அவருக்குத் தோன்றியது. அதற்குமுன் அவருக்கு அழகாயும், இனிமையாயும் தோன்றிய வஸ்துக்களெல்லாம் அப்போது அழகற்று சுவையற்று வெறுக்கத் தக்கவையாய்த் தோன்றின. நாற்காலியில் உட்கார்ந்தாலும், எழுந்து உலாவினுலும், மற்றவரோடு பேசினுலும், உத்தியோக சம்பந்தமான காகிதங்களைப் படித்தாலும், அது ஏதோ

கசப்பான வஸ்துவை விளங்குவதுபோலவே இருந்தது. பொழுது போவது பரமவேதனையாகத் தோன்றியது. ஆகவே, தாம் உடனே அந்த மாளிகையை விட்டுப் புறப்பட்டு தொலைதூரத்திலுள்ள ஏதாவது ஊருக்குப் போய் முகாம் போட்டால், அப்போதாவது பிரிந்து போனவர்களின் நினைவு அவ்வளவாகத் தம்மை வருத்தாதென்ற ஓர் எண்ணம் உதித்ததாகையால் அவர் அவ்வாறே செய்வதென்று தீர்மானித்துக்கொண்டார். அவர் அதற்குமுன் அடிக்கடி வெளியூர்களுக்குப் போகும் காலத்தில், காந்திமதி யம்மாளும், அவர்களது புதல்வனும் அவர்களுடன் கூடவேதொடர்ந்து செல்வார்கள். ராஜா பகதூருக்குப் பிரத்தியேகமான ஓர் உபாத்தியாயர் நியமிக்கப்பட்டிருந்தாராதலால், அவரும் அவர்களுடன் கூடவே பிரயாணம்செய்து, அவனுக்குக்கல்வி பயிற்றுவிப்பது வழக்கம். காந்திமதி யம்மாள் தங்களது மாளிகையை விட்டு வெளியில் புறப்பட அசந்தர்ப்பமான நிலைமை ஏற்படும் சமயங்களில் மாத்திரம் திவான் மற்ற எல்லோரையும் வீட்டில் விட்டுத் தாம் மாத்திரம் சுற்றுப்பிரயாணம் போய் அதிககாலம் வெளியில் இராமல் சீக்கிரம் திரும்பி வந்து விடுவார். அத்தகைய அசந்தர்ப்பத்தில் தாம் மாத்திரம் தனிமையில் போவது போல இப்போதும் போய்விடுவதே தமது பிரிவாற்றுமைத் துன்பம் குறைவதற்கு அநுகூலமான காரியமென்று எண்ணி திவான் முதலியார் காந்திமதியம்மாள் திருவடமருதூருக்குப் புறப்பட்டுச் சென்ற தினத்திற்கு மறுநாள் காலையிலேயே திருவனந்தபுரத்தை விட்டு சுமார் முப்பது மயில் தூரத்திற்கு அப்பாலிருந்த ஓர் ஊருக்குப் போய்விட்டார். அவர் முகாம் செய்யுமிடங்களில் தமக்கென்றே பிரத்தியேகமாய் அமைக்கப்படும் பங்களாப் போன்ற பிரமாண்டமான கூடாரத்தில் இறங்கி இருப்பது வழக்கமாதலால், கூடார சந்மான்களும், அவருக்கும் அவரது மனைவி மக்களுக்கும் தேவையான போஜனம் படுக்கை உடைகள் முதலிய சௌகரியங்களைச் செய்து கொள்வதற்குத் தேவையான பாத்திரங்கள் படுக்கைகள் முதலிய சகலமான பொருள்களும் ஐந்தாறு பெரிய வண்டிகளில் போவது வழக்கம். அவருடன் இரண்டுசமையற்காரர்களும், ஆறேழுஜெவான்களும் இன்னும் ஏழெட்டுச் சிலலரைப் பணியாளர்களும், இரண்டு குமாஸ்தாக்களும், அவருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும், சமயா சமயங்களில் வைத்தியம் பார்ப்பதற்கு ஓர் ஆயுர்வேத நிபுணரும் செல்வார்கள். அவ்வாறு அவர்கள் முகாம் செய்யும் இடம்உயிர் பெற்று இயங்கும் ஒரு தர்பார் மண்டபம்போல விளங்கும். ஷெடி

கூடாரத்தின் முக்கியமான பெரும்பாகம் திவானும் அவரது குடும்பத்தினரும் பிரத்தியேகமாகவும் சௌக்கியமாகவும் இருப்பதற்கு உகந்ததாய் சயன மாளிகை, மடைப்பள்ளி, ஸ்நான அறை, கூடம் முதலிய பற்பல பாகங்களைக்கொண்ட ஒரு பெரிய மாளிகை போல இருந்தது. காந்திமதியம்மாளும் புதல்வனும் புறப்பட்டுப் போன தினம் இரவிலேயே தாம் மறுநாட் காலையில் சனிதோடர் மங்கலம் என்ற ஊருக்குப் போய் அவ்விடத்தில் நாலைந்து தினங்கள் வரையில் முகாம் செய்யப் போவதாயும், அதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் தமது சிப்பந்திகளிடம் கூறி இருந்தாராதலால், மறுநாள் விடியற்காலையில் அவர் படுக்கையை விட்டு எழுந்திருந்ததற்கு முன்பே இரண்டொருவர் தவிர மற்ற எல்லோரும் சகலமான சாமான்களுடனும் புறப்பட்டு முன்னால் போய்விட்டனர். மிஞ்சியிருந்த சிலர் அவருக்குத் தேவையான வண்டியுடன் ஆயத்தமாக இருந்தனராதலால், அவர் எழுந்தவுடன் வீட்டிற்குள் வேறு எந்த இடத்திற்கும் போக மனமற்றவராய் நேராக வெளியிற் சென்று வாசற்கதவை மூடிப் பூட்டிக்கொண்டு வண்டியில் உட்கார்ந்து விரைவாக அந்த ஊரை விட்டுப் பிரயாணமாய் சிலநாழிகை காலத்தில் சனிதோடர் மங்கலம் சென்று அவ்விடத்தில் தயாரிக்கப்பட்டிருந்த தமது கூடாரத்திற்குப் போய்ச் சேர்ந்தார். சேர்ந்தவர் வேலைக்காரரது வற்புறுத்தலைத் தடுக்கலாற்றாமல் தமது ஸ்நானம் போஜனம் முதலியவற்றையெல்லாம் ஒருவாறு முடித்துக்கொண்டாராலும், அந்தக் காரியங்களையெல்லாம் அவரது தேகம் இயந்திரம் போலத்தானாகச் செய்ததென்றே நாம்கூறவேண்டும். அவரதுமனம் திருவடமருதூருக்குச்சென்று கொண்டிருந்த இன்பஉருவான தமது நாயகியையும் புதல்வனையும் தொடர்ந்து சென்று, அதே நினைவில் லயித்துப்போயிருந்தது. அவர்கள் தம்மை விட்டுப் பிரிந்து போனதனால் ஏற்பட்ட ஏக்கமும் மனவேதனையும் ஒரே மும்முரமாகக் கிளம்பி அவர் தமது கவனத்தை வேறு எந்த விஷயத்திலும் செலுத்த இயலாதபடி அவரது மனத்தைப் பிடித்து வாட்டத்தலைப்பட்டன. அவர்கள் அந்நேரம் ரயிலில் போவார்களோ, காந்திமதியம்மாள் தம்மை நினைத்து உருகி அழுகிறாளோ, தமது புதல்வன் அவளுக்கு ஆறுதல் மொழி கூறாமல் வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறானோ என்று ஒன்றன் பின்னொன்றாக மாறி மாறி அவர்களது நினைவே தோன்றி அவரது மனத்தைப் புண்படுத்திக் கொண்டிருந்தது. அவர் படித்துப் பார்த்து உத்தரவுகள் பிறப்பிக்க

வேண்டிய அவசர விஷய சம்பந்தமான இராஜாங்கக் காகிதங்கள் வந்து வந்து மேன்மேலும் குவிந்துகொண்டே இருந்தன. அவ்வாறு தாம் அவசரமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்கள் ஏராளமாக இருக்குமென்ற காரணம் பற்றியே தாம் தமது மனைவியுடன் அப்போதே புறப்பட்டுத் திருவட்மருதூருக்குப் போகாமல் இருந்தாராகையால், அவ்விஷயங்களைத் தாம் சிறிதும் கவனிக்க இயலாமல் போய் விட்டதே யென்றும், அவ்வாறு வீணே பொழுதைப் போக்குவதைவிட, தாமும் அப்போதே அவர்களுடன் ஊருக்குப் போயிருந்தால், தங்கள் மூவருக்கும் பிரிவாற்றாமைத் துன்பம் இல்லாமல் போயிருக்குமே என்றும் நினைத்து நினைத்து உருகிய வண்ணம் அவர் படுக்கையிலேயே கிடந்து புரண்டு உழல, பொழுது வளர்ந்துகொண்டே போவதுபோலத் தோன்றி வதைத்தது, அவ்வாறு அவர் அன்றைய பகற்பொழுதை வெகு பாடுபட்டுப் போக்க, மாலை நேரம் வந்தது. தாம் ஓரிடத்திலேயே இருப்பதைவிட, எழுந்து வெளியில் சிறிது தூரம் சென்று உலாவிவிட்டு வந்தால், அப்போதாவது தமது மனம் அமைதி யடையாதாவென்ற நினைவைக் கொண்டவராய்நமது திவான் முதலியார் சயனத்தை நீத்து மெதுவாக அவ்விடத்தை விட்டு வெளிக்கிளம்பித் தமது கூடாரமிருந்த இடத்திற்கு அரை பர்லாங்கு தூரத்திற்கப்பாலிருந்த ராஜபாட்டைக்குச் சென்று அதன் வழியாக நடந்து செல்லத் தொடங்கினர்.

அது குளிர்ச்சியான மலைப்பிரதேசமாதலால் ஆகாயத்தை யளாவிய பிரம்மாண்டமான தேக்கு மரங்களும், மருத மரங்களும், நமை மரங்களும், வாகை மரங்களும், தானி மரங்களும், தணுக்கு மரங்களும் தழைத்துச் செழித்து வளர்ந்திருந்த தோப்புகளும் குன்றுகளுமே எங்கும் மயமாய் நிறைந்து தோன்றின. குளிர்ந்த மந்த மாருதம் நிரம்பவும் மனோக்கியமாக வீசிக்கொண் டிருந்தது. ஆகாயத்தில் வெகுதூரம் சென்றிருந்த மரக்கிளைகளின்மீது, கந்தருவ லோகத்திலிருந்து வந்திறங்கிய நடன மாதர்கள்போல, ஏராளமான மயில்கள் தமது தோகைகளை விரித்து நேத்திரானந்தமாக நடந்து கொண்டிருந்தன. கோகிலங்கள் ஒவ்வொரு மரத்திலும் இலக்ஷம்கோடிக் கணக்கில் நிறைந்துகனிந்தமகா உருக்கமானதமது குரல்களைக் கிளப்பி மேல்பஞ்சம ஸ்தாயியில் முறை வைத்து கானம் செய்துகொண் டிருந்தன. அந்த மாலையின் மலைக்காட்சி ஒப்புயர்வற்ற பிரம்மானந்தக் காட்சியாக அமைந்திருந்தது. நமதுதிவான்

முதலியார் அத்தகைய தெய்விகக் காட்சியின் இடையில் தமது மனத்தை அவற்றில் செலுத்த முயன்ற வண்ணம் மெதுவாக நடந்து சென்றுகொண் டிருந்தாரானாலும், அப்போதும் அவரது மனம் கட்டிலடங்காமல் ஓரே பிடிவாதமாக அவ்விடத்தை விட்டு வேறிடத்திற்குச் சென்றுகொண்டே இருந்தது. தமது மனையாட்டியும் புதல்வனும் இல்லாத எந்த இடமும் அவருக்கு உயிரற்றதாகவும், சுவாரஸ்ய மற்றதாகவும் தோன்றியதன்றி, அவரது மனம் ஒரு நிலையில் நில்லாது சுழன்றுகொண் டிருந்தமையால், அவரைச் சுற்றிலு மிருந்த பொருள்கள் யாவும் சுழலுவதுபோலத் தோன்றின.

"மண்சுழன்று, மால்வரை சுழன்றது, மதிஓர்
எண்சுழன்றது, சுழன்றதவ்வெறி கடல் ஏழும்,
விண்சுழன்றது, வேதமுஞ் சுழன்றது, விரிஞ்சன்
கண்சுழன்றது, சுழன்றது கதிரொடு மதியும்."

என்ற நமது தெய்விகப் புலவரது அற்புதமான வர்ணனை நமது திவான் முதலியாரது அப்போதைய நிலைமைக்கு அநேகமாய்ப் பொருத்தமானதாக இருந்தது. அவ்வாறு அவர் சிறிது நேரம் உலாவி அரும்பாடுபட்டுத் தமது மனத்தை அங்கிருந்த பொருட்களின்மீது திருப்ப முயன்றுகொண்டே செல்ல, பிரம்மாண்டமாக வளர்ந்து நீண்டிருந்த அழகிய தனது தோகையை விரித்து ஆனந்த நடனம் புரிந்துகொண்டிருந்த தோகைமயில் ஒன்று தற்செயலாக அவரது திருஷ்டியில் படவே, அவர் அதைப் பார்த்து, "ஆகா! ஐயோ! இதன் சாயல் தத்ரூபம் காந்திமதியின் சாயலைப்போலல்லவா இருக்கிறது! தன்னுடைய வடிவம் முழுதையும் தன்னோடு கொண்டுபோய் விட்ட என் காந்திமதி தன்னுடைய சாயலை மாத்திரம் எனக்குக் காட்டும்படி உன்னிடம் கொடுத்துவிட்டுப் போனாளா? ஆகா!" என்று நினைத்து நெக்கு நெக்குருகி நின்ற காட்சி,

"ஓடாநின்ற களிமயிலே! சாயற்கொதுங்கி உள்ளழிந்து
கூடாதாரில் திரிகின்ற நீயும் ஆசங்குளிர்ந்தாயோ?
தேடாநின்ற என் உயிரைத் தெரியக்கண்டாய், சிந்தைஉவந்து
ஆடாநின்றாய்; ஆயிரம் கண்ணுடையாய்க் கொளிக்குமாறுண்டோ?"

என்று அந்த வஞ்செழில் தோகை மயூரத்தை நோக்கி அவர் கேட்டதுபோல இருந்தது. அதற்குமுன் அவர் காந்திமதியம்மாளுடன் அவ்வாறு வெளியூர்களில் முகாம் செய்திருந்த காலங்களில், அத்

தகைய இயற்கை யழகுகளைக் காண்பது அவர்களுக்குத் தெவிட்டாத இன்பமாகவும் எல்லையற்ற ஆநந்தமாகவும் இருந்ததற்கு முற்றிலும் மாறாக திவானுக்குத் தமது பிரிவாற்றுமைத் துன்பத்தின் பெருக்கில், சிருஷ்டிப் பொருள்கள் யாவும் பெருத்த துன்பம் விளைப்பனவாய்த் தோன்றின. ஆகவே, அவர் கூடாரத்தில் இருந்ததைவிட வெளியில் போய் உலாவித் திரும்பியதில் அவரது மனம் அதிக சோர்வையும் ஏக்கத்தையும் வேதனையையும் அடைந்தது. அவ்வித நிலைமையில் அவர் திரும்பித் தமது கூடாரத்திற்கு வந்து சேர்ந்தார். அவருக்கு அன்றைய இராப்போஜனம் இராத போஜனமாகவே முடிந்தது. படுக்கையும் முள் படுக்கையாகவே இருந்தது. அவர் மறுநாட் காலையில் தமது சயனத்தை விடுத்தெழுந்த காலத்தில் முற்றிலும் சோர்ந்து தளர்ந்து வெளுத்து விகாரத் தோற்றமடைந்திருந்தார்.

அவரது துய்ரத்தையும் மாறுபாட்டையும் கண்ட சிப்பந்திகளனைவரும் அவரது தேகஸ்திதியைக் குறித்து மிகுந்த கவலையும் கலக்கமும் கொண்டு அவரைப் பலவாறு ஊக்கி சந்தோஷப்படுத்த முயன்றதன்றி, அவர் தமது போஜனம் தூக்கம் முதலியவற்றை அலட்சியம் செய்யாது தமது தேகத்தைத் தக்கபடி போஷிக்காவிடில் வெகு சீக்கிரத்தில் அவர் நோய் வாய்ப்பட நேருமென்று அன்போடும் பணிவோடும்கூறிவற்புறுத்தி நயந்துவேண்டிக்கொண்டனர். அவர்களது உருக்கமான வேண்டுகோளை மறுக்கவல்லமையற்ற திவான் அன்றையதினம் பகலிலும் தமது ஸ்நானம் போஜனம் முதலியவற்றை ஒருவாருக முடித்துக் கொண்டாராலும் அவரது மனம் அப்போதும் அவரது கட்டிலடங்காமலும், தமது கச்சேரி வேலைகளில் செல்லாமலும் வேரிடத்திற்கே சென்றுகொண்டிருந்தது. முதல்நாள் வந்த தபால்களும் அன்றையதினம் வந்த தபால்களும் ஏராளமாகக் குவிந்துபோயிருந்தன. அதுவுமன்றி, திருவநந்தபுரத்திலுள்ள அரசரிடத்திலிருந்து அவசரமாக அவருக்குச் சில கடிதங்களும் வந்திருந்தன. மற்ற கடிதங்களை அவர் அசட்டை செய்தாலும் அரசரது கடிதத்தை மாத்திரம் உடனுக்குடன் பார்த்து மறுமொழி கொடுக்க வேண்டுமென்பது அந்த இராஜாங்கத்தில் நடந்துவந்த அநுஷ்டானமாதலால் அரசரது கடிதங்கள்வந்திருக்கின்றனவென்ற அச்சத்தில் அவர் தமது மனவேதனையை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு, உடனே எழுந்துவந்து தமது ஆசனத்தில்

அமர்ந்து, அரசனிடத்திலிருந்து வந்திருந்த கடிதங்களையும், தமது பெயர்போட்டு வந்திருந்த சொந்தக் கடிதங்களையும் எடுத்து வைத்துக்கொண்டு, மற்றவைகளை தமது பிரதம குமாஸ்தாவே பிரித்துப் பார்த்து ஏதேனும் விசேஷச்செய்தி இருந்தால் தமக்குத் தெரிவிக்கும்படி திட்டம் செய்தபின், அரசரது கடிதங்களைப் படித்து அவைகளுக்குரிய உத்தரங்களை உடனுக்குடன் எழுதிவிட்டுத் தமதுபெயர் போட்டு வந்திருந்த சொந்தக் கடிதங்களை ஒவ்வொன்றாக எடுத்துப் படித்தார். அவற்றுள் நீளமான சர்க்கார் உறையுள்ள ஒரு கடிதம் இருந்தது. அதன் மேல்விலாசம் அவரது பெயருடன் எழுதப்பட்டிருந்ததாகையால் அதையும் அவர் பிரித்துப் படித்தார். படிக்கவே, அவர் மிகுந்த ஆச்சரியமும் பிரமிப்பும் அடைந்து அந்தக் கடிதத்தை மறுபடி இரண்டொருதரம் கவனமாகப் படித்தார். அது மஞ்சட்குப்பம் ஜில்லா கலெக்டரான ஒரு வெள்ளைக்கார துரையினால் அவருக்கு எழுதப்பட்டிருந்த முக்கியமான ஒரு கடிதம். தஞ்சை ஜில்லா திருவடமருதூரில் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மாணவன் பல பெரிய மனிதர்களிடம் யாசகம் வாங்கி இங்கிலீஷ்பள்ளிக்கூடத்தில் படித்து பி.ஏ. பரீட்சையில் தேறியிருந்தான். அவனுடைய குடும்பத்தில் விருத்தாப்பிய தசையடைந்த தகப்பன், தாய், சகோதர சகோதரிகள் முதலிய ஏராளமான ஜனங்கள் இருந்தமையால், அவர்களெல்லோரையும் போஷித்துக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு முன் குறிக்கப்பட்ட மூத்த பிள்ளைக்கே வந்துசேர்ந்தது. அண்ணாசாமி என்ற பெயர் கொண்ட அவன்தனக்கு ஏதேனும் உத்தியோகம் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்று பல உத்தியோக ஸ்தலங்களிலும் போய் முயற்சித்துப் பார்த்தான். எவ்விடத்திலும் அவனுக்கு உத்தியோகம் கிடைக்கவில்லை. வேறு கைத்தொழிலாவது வியாபாரமாவது செய்வது அவனுக்கு இழிவாகப்பட்டது. பல இடங்களில் அவன் கடன் வாங்கி வாங்கிச் செலவிட்டு வந்ததும் சிறிது காலத்திற்குமேல் நடக்கவில்லை. வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வகையில்லாதிருந்தமையால், எவரும் அவனுக்குக் கடன் கொடுக்க மறுத்தனர். முன்னரே கடன் கொடுத்திருந்தவர்கள் பணத்தைத் திருப்பிக் கொடுக்குமாறு அவனை அரிக்கலாயினர். அவனது நிலைமை பரமசங்கடமானதாகிவிட்டது. தான் என்ன செய்வது, எப்படித் தனது குடும்பத்தை நடத்துவது என்பதைப்பற்றி அவன் இரவு பகல் சிந்தனை செய்துசெய்து எவ்வித முடிவிற்கும் வரமாட்டாதவனாய்த் தத்தளித்துமுடிவில் தான் தற்கொலை

செய்துகொள்வதே எல்லாவற்றிற்கும் முடிவான பரிகாரமென்று நினைத்திருந்த காலத்தில், பக்கத்து வீட்டு மனிதர் தமக்கு வந்து கொண்டிருந்த இங்கிலீஷ் சமாசாரப் பத்திரிகையைப்பார்த்து விட்டு வெளியில் வந்து, "அடேய் அண்ணாசாமி! மஞ்சட்குப்பம்கலெக்டர் இன்று ஒரு விளம்பரம் வெளியிட்டிருக்கிறார். நாற்பது ரூபாய் சம்பளத்தில் இரண்டு ரெவினியு இன்ஸ்பெக்டர்களுக்கு மனிதர்கள் தேவையாம். அவர்கள் பி. ஏ. பரீட்சையில் தேறி இருக்க வேண்டுமாம்; தக்க பெரிய மனிதர்களிடம் நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கியனுப்ப வேண்டுமாம். நீ இதற்கு மனுப்போடு" என்று கூறிவிட்டுப் போனார்.

அதைக் கேட்ட அண்ணாசாமி மிகுந்த களிப்பும் நம்பிக்கையும் உற்சாகமும் கொண்டு, உடனே மனுவை எழுதி முடித்தான்; முடித்த பின். தக்க பெரிய மனிதர்களுடைய நற்சாக்ஷிப் பத்திரம் ஏதேனும் ஒன்றை அனுப்பவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதைப்பற்றி அவன் தனது தந்தையிடம் தெரிவிக்க, அவர் சிறிதுநேரம் யோசனை செய்து, "அடேய் அண்ணாசாமி! நம்முடைய குஞ்சிதபாத முதலியார் இருக்கிறாரே; அவருடைய பிள்ளை திருவநந்தபுரம் திவானாக இருக்கிறார். நீ உடனே போய்க் குஞ்சிதபாத முதலியாரைக் கண்டு, அவருடைய பிள்ளையிடத்திலிருந்து ஒரு நற்சாக்ஷிப் பத்திரம் வருவித்துக்கொடுக்கும்படி கெஞ்சிக்கேட்டுப்பார்" என்றார்.

அண்ணாசாமி அப்படியே போய்க் கேட்க, குஞ்சிதபாத முதலியார் தமது புத்திரன் தனக்கு நேரில் அறிமுகமில்லாத மனிதனுக்கு நற்சாக்ஷிப் பத்திரம் கொடுக்கமாட்டானென்று கண்டித்துக் கூறியனுப்பிவிட்டார். அந்த விசனகரமான செய்தியைக் கேட்டு மனமுறிவடைந்துபோன அண்ணாசாமி அவ்விடத்தை விட்டு வெளியில் வந்தான். வரும்போது, கிழவரால் படித்துவிட்டு மறதியாய் நடைச்சுவரின் மாடத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு கடிதத்தை நமது அண்ணாசாமி கண்டு அதை எடுத்துப்பார்த்தான். அது திருவநந்த புரத்திலிருந்த நமது திவான் முதலியார் தமது தந்தைக்கு எழுதிய ஒரு கடிதமாக இருந்தது. அதன் முடிவில் திவானினது கையெழுத்து தெளிவாகப் போடப்பட்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் பையனது மனதில் ஒரு யுக்தி தோன்றியது. அவன் உடனே அதை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து நமது திவானுடைய கை

யெழுத்ததைப் போலப் பல தடவை எழுதி எழுதிப் பழக, சிறிது நேரத்திற்குப் பிறகு, அவனால் எழுதப்பட்ட கையெழுத்து தத் ரூபம் நமது திவான் முதலியாரது கையெழுத்தைப் போலவே காணப்பட்டது. அவர் தனக்கு டைப் அடித்து எழுதிக்கொடுத்தது போல அவன் உடனே ஒரு நற்சாக்ஷிப் பத்திரம் தயாரித்து, அதன் அடியில் அவர் செய்ததுபோலக் கையெழுத்துச் செய்து அதைத் தனது மனுவோடு சேர்த்து மஞ்சட்குப்பம் கலெக்டர் துரைக்கு அனுப்பிவிட்டான்.

அந்த மனு கலெக்டர் கச்சேரிக்குப் போய்ச் சேர்ந்த காலத் தில் அந்த ஜில்லாவின் கலெக்டர் வேலைபார்த்த துரை அதற்குச் சில வருஷங்களுக்கு முன் சென்னை கவர்னர் துரையின் கச்சேரியில் உதவிக் காரியதரிசியா யிருந்த காலத்தில் நமது திவான் முதலியா ரும் அதே கச்சேரியில் அந்த துரைக்கு மேற்பட்ட பிரதம காரிய தரிசியா யிருந்து அவருக்கு வேலைகற்றுக் கொடுத்ததன்றி, அவர்க ளிருவரும் அப்போது நிரம்பவும் அந்தரங்கமான நண்பர்களாக இருந்தனராதலால், மேலே குறிக்கப்பட்ட நற்சாக்ஷிப் பத்திரத்தை நோக்கவே, கலெக்டர் துரைக்கு அந்த மனுதாரனது விஷயத்தில் மிகுந்த அநுதாபமும் பிரியமும் உண்டாகிவிட்டன. அந்த நற்சா க்ஷிப்பத்திரம் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

இந்த நற்சாக்ஷிப்பத்திரம் கொடுக்கப்பெறும் யௌவனப் புரு ஷரை நான் நன்றாக அறிவேன். இவர் பி.எ. பரீட்சையில் தேறியிருக் கிறார். இவர் எப்பொழுதும் சுறு சுறுப்பாகவும் ஊக்கமாகவும் திறமையாகவும் விரைவாகவும் எந்த வேலையையும் செய்யும் சுபாவ முடையவர். இவர் மகா புத்திசாலி; நற்குண நல்லொழுக்கமுடைய வர்; எஜமானரிடம் பணிவாகவும் பயபக்தி விநயத்தோடும் நடந்து கொள்ளத் தகுந்தவர். நான் இப்போது திவான் வேலைபார்க்கும் சமஸ்தானத்திலேயே இவருடைய அபார யோக்கியதைக்குத் தக்க ஒரு பெரிய உத்தியோகம் கொடுப்பது எனக்கு எளிதான காரிய மானாலும், இவர் எனக்கு ஒரு விதத்தில் பந்துவாயிருப்பது பற்றி இருவருக்கும் நான் இவ்விடத்தில் உத்தியோகம் கொடுத்தாலும், பிற்காலத்தில் இவரைச் சம்பள உயர்வான வேறு பெரிய உத்தி யோகங்களுக்கு மாற்றினாலும், அதைப்பற்றி இவ்விடத்திலுள்ள இதர சிப்பந்திகள் ஏதாவது வம்பு வளர்ப்பார்களாதலால், அதற்கு இடங்கொடுக்க எனக்கு விருப்பமில்லை. இவர் எந்தப் பதவியையும்

வகிக்க அருகரான சற்பாத்திரர். எந்த வினவானுகிலும் இவருடைய யோக்கியதைக்குத் தகுந்த நல்ல உத்தியோகம் ஒன்று கொடுத்து உதவும் பட்சத்தில், அது எனக்கே செய்யப்பட்ட பேருதவியாக் நான்மதிப்பேன். இவரது நன்மையையும் அபிவிருத்தியையும் மன தாரக் கோருகிறேன்:—

என்று நிரம்பவும் பரிவாக எழுதப்பட்டிருந்த நற்சாக்ஷிப் பத்திரத்தைப் படித்த கலெக்டர் துரையின் மனத்தில் இன்னோர் எண்ணம் தோன்றியது. அப்போது சென்னை துரைத்தனத்தாரிடத்திலிருந்து ஒரு புதிய உத்தரவு வந்திருந்தது. அதுவரையில் சப்மாஜிஸ்டிரேட்டு உத்தியோகங்களுக்கு நியமிக்கப்படுபவர்கள் அதற்கு முன் கீழ் உத்தியோகங்களில் பல வருஷகாலம் வேலைபார்த்து, ரெவினியூ, கிரிமினல் முதலிய பரீட்சைகளில் தேறியவர்களாகவே இருக்க வேண்டுமென்ற உத்தரவு இருந்து வந்தது. அப்போது வந்த புதிய உத்தரவில், நல்ல படிப்பாளியாகவும். மகா புத்திமானுகவும், திறமைசாலியாகவும், பெரிய இடத்துப் பிள்ளையாகவும், இருக்கும் யௌவனப் புருஷர்களில் இரண்டொருவரை ஒவ்வொருவருஷத்திலும் பொறுக்கி எடுத்து அவருக்கு நூறு ரூபாய் சம்பளம் கொடுத்து நேராக சப்மாஜிஸ்டிரேட் உத்தியோகத்திற்கும், மேல் உத்தியோகங்களுக்கும் பழக்க வேண்டுமென்று கவர்னர் எழுதி இருந்தமையால், நமது அண்ணுசாமிக்கு நேராக ஒரு சப் மாஜிஸ்டிரேட் உத்தியோகம் கொடுக்கலாம் என்ற எண்ணம் அந்தக் கலெக்டருக்கு உண்டாயிற்று. ஆயினும், அவ்வாறு அவருக்குத் தாம் உத்தியோகம் செய்து வைக்குமுன் தமது கருத்தை திருவனந்தபுரத்திலிருந்த திவான் முதலியாருக்கு எழுதி அவரது மறுமொழியைப் பெற்று அதற்குமேல் அதை நிறைவேற்ற வேண்டுமென்று தீர்மானித்து அந்த நற்சாக்ஷிப் பத்திரத்தையும் தமது கடிதத்தோடு கூட வைத்து நமது திவான் முதலியாருக்கு அனுப்பிவிட்டார். அந்தக் கடிதம் நமது திவான் முதலியார் காந்திமதியம்மாளையும், தமது புதல்வனையும் விட்டுப் பிரிந்து ஏக்கமுற்று சனிதோடர் மங்கலத்தில் முகாம் செய்திருந்த காலத்தில் அவரிடம் வந்துசேரவே, அவர் அதைப் படித்துவிட்டு முன் குறிக்கப்பட்டபடி. மிகுந்த வியப்பும் பிரமிப்பும் அடைந்தார். தாம் படித்து உத்தியோகம் பார்க்க ஆரம்பித்தது முதல் அது வரையில் எவருக்கும் தாம் அவ்விதமான நற்சாக்ஷிப்பத்திரம்கொடுத்ததே இல்லை என்பது அவருக்குத் தெளிவாகவும் நிச்சயமாகவும் நினைவிருந்தது. ஆனால், அதில் செய்யப்பட்டிருந்த

கையெழுத்து தத்ரூபம் தம்முடைய கையெழுத்தைப் போலவே இருந்தது. அந்த மனுதாரன் திருவடமருதூரிலுள்ளவன் என்பதை அவர் உணரவே, அவருக்கு உண்மை ஒருவாறு விளங்கிவிட்டது. தாம் தமது தந்தைக்கு எழுதிய ஏதேனும் ஒரு கடிதத்திலிருந்த தமது கையெழுத்தைப்பார்த்து அதைப்போலப் பொய்க் கையெழுத்திட்டு, அவனே அந்த நற்சாக்ஷிப் பத்திரத்தைத் தயார் செய்து கொண்டிருக்கிறான் என்று அவர் உடனே யூகித்துக்கொண்டு அடியில் வருமாறு தமக்குள்ளாகவே சிந்தனை செய்யலானார். "ஆகா! இந்த மனிதன் தான் பி. ஏ. பரீட்சையில் தேறி இருப்பதாக எழுதி இருப்பதும், இந்த நற்சாக்ஷிப் பத்திரத்தைப்போலவே பொய்யாக இருக்குமோ? அதுபொய்யாக இருந்தால், இவன் பெரிய உத்தியோகங்களைப்பார்க்க நேரும்போது இவனுடைய திருட்டு எப்படியும் தெரிந்துபோகும். ஆகையால் அந்தத்தகவல் நிஜமானதாகத்தான் இருக்கவேண்டும். அவ்வளவு தூரம்படித்திருந்தும், இந்த மனிதன் இப்படிப்பட்ட பெருத்தமோசத்தில் இறங்கி இருக்கிறானே? ஒழுங்கான கல்வியினால், மனிதருடைய புத்தி தீக்ஷண்யப் படுவதோடு அவர்களுடைய குணங்களும் நடத்தைகளும் செம்மைப்படவேண்டும். நற்குண நல்லொழுக்கத்தை மாத்திரம் உண்டாக்காமல் அறிவை உண்டாக்கும் படிப்பும் ஒரு படிப்பா! சே! இந்த மனிதன் எப்படிப்பட்ட படுமோசத்தில் இறங்கி விட்டான். ஏழ்மைத்தனமும் பணத்தாசையும் எப்பேர்ப்பட்ட புத்திசாலியையும் எப்படிக் கெடுத்துவிடுகின்றன. என் கையெழுத்தைப்போல இவன் போலிக் கையெழுத்திட்டதான இந்தக் குற்றத்திற்கு நியாயமாக இவன் ஏழு வருஷகாலம் கடினக்காவல் தண்டனை அடையத் தகுந்தவன். படிக்காத மூடன் அறியாமையினால் புரியும் ஒரு குற்றத்தை விட படித்தவன் அதே குற்றத்தைச் செய்வது அதிகக் கடுமையாக தண்டிக்கத் தகுந்தது. இது பொய்க் கையெழுத்தென்று நான் இப்போது மறுமொழி எழுதினால், உடனே இந்த மனிதன் தண்டனையடைவது நிச்சயம். இவன் இத்தனை வருஷம் அருப்பாடு பட்டுக் கற்ற கல்வியும், பெற்ற பட்டமும் வியர்த்தமாய் முடியும். இவனுடைய ஆயுள்கால பரியந்தம் இவன் எல்லோராலும் இகழப்பட்டுத் தலையெடாமல் கேவல நிலைமையில் இருந்து அழிவது நிச்சயம். இவனைச் சார்ந்து இவனையே சதமாக எண்ணி இருக்கும் இவன் தாய் தகப்பனார் முதலிய மற்றவர்களும் திக்கற்றவர்களாய்க் கிடந்து உழன்று அழிவது நிச்சயம். சிறைச்

சாலையிலிருந்து திரும்பி வந்தபின் இவன் மேன்மேலும் திருட்டுப் புரட்டு முதலிய கெட்ட காரியங்களில் இறங்கிப் பலருக்கும் தீங் கிழைத்துத் தனக்கும் துன்பத்தை விளைவித்துக் கொண்டாலும் கொள்ளலாம். ஆகவே, இவனை நான் இப்போது தண்டனைக்குக் கொண்டுபோய் முற்றிலும் இவனை அழித்துக் கெடுப்பதைவிட, இவ னுக்கு இந்த உத்தியோகம் கிடைக்கும்படி செய்தால், இவன் இதோடு திருந்திப் போவான். இவனுடைய ஏழ்மைத்தனமும் வில கும். இவனுடைய குடும்பத்தாருக்கும் நான் சாப்பாடு போட்டுக் காப்பாற்றியது போலாகும்" என்று திவான் முதலியார் தமக்குத் தாமே எண்ணமிட்டவராய் உடனே ஒரு காகித மெடுத்து மஞ்சட் குப்பம் கலெக்டருக்கு மறுமொழிக் கடிதம் எழுதினர். அண்ணு சாமி என்னும் மனுதாரன் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவ னுகையால், அவன் அபிவிருத்தி யடைந்து முன்னுக்கு வரவேண்டு மென்று தாம் பிரியப்படுவதால், கலெக்டர் துரை அவனுடைய திற மையை நேரில் பரீட்சித்துப் பார்த்து அவனுக்குத் தகுந்த ஓர் உத்தி யோகம் கொடுத்து உதவுமாறு அவர் அந்தக் கடிதத்தில் எழுதி முடித்து, அதையும் மற்ற தபால்களையும் அதற்கென்று பிரத்தியேக மாய் நியமிக்கப்பட்டிருந்த அஞ்சல் தபால்காரன் மூலம் கொடுத் தனுப்பி விட்டு, "உஸ்" என்று ஓய்ந்து சாய்மான நாற்காலியில் படுத்தார். அப்போது அவரது சமயற்காரர்களுள் ஒருவனுன முத்துசாமி என்பவன் சமையலறையிலிருந்து மெதுவாகத் தனது தலையை அவருக்கெதிரில் நீட்டினுன். அவனைக் கண்ட திவான், "என்ன விசேஷம்? இரண்டாவது வேளைக்கு ஏதாவது சாப்பிடும் படி கேட்க வந்தாயோ?" என்று புன்னகையோடு கூறினர்.

உடனே முத்துசாமி வணக்கமாகவும் மரியாதையாகவும் அவ ருக்கெதிரில் பதுங்கிப் பதுங்கி வந்து, "ஆம் எஜமானே! மணி மூன் ருகிறது. தாங்கள் 11-மணிக்கு போஜனம் செய்தீர்களாகையால் கொஞ்சம் பலகாரம் சாப்பிடுகிறீர்களா என்று கேட்டுப்போக வந் தேன்" என்ருன்.

உடனே திவான், "என்ன பலகாரம் செய்திருக்கிருய்?" என்ருர்.

முத்துசாமி, "மெதுவடையும் ஹல்வாவும் தயார் செய்திருக் கிறேன்" என்ருன்.

அவன் அவ்வாறு கூறிய சமயத்தில் திவானினது மனத்தில் இன்னொரு யோசனை தோன்றியது. தாம் மஞ்சட்குப்பம் கலெக்டருக்குக் கடிதம் எழுதியதோடு சும்மா இருந்துவிட்டால், அண்ணாசாமி என்ற மனுதாரன் தான் செய்த மோசடியை யாரும் கண்டுபிடிக்கவில்லையென்று நினைத்து, மேன்மேலும் அதே வழியில் இறங்கிக் கெட்டுப் போவானென்ற எண்ணமுதித்ததாகையால், தாம் அவனுக்கு உத்தியோகம் செய்துவைப்பது மாத்திரம் போதாதென்றும், அவன் மேன்மேலும் கெட்டுபோகாமல் தடுப்பதே முதன்மையான காரியமென்றும் நினைத்து, அவனுக்கே தாம் நேரில் ஒரு கடிதம் எழுதியனுப்பி அவனை எச்சரிக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டவராய்த் தமக்கெதிரிலிருந்த சமயற்காரனைப் பார்த்து "முத்துசாமி! அஞ்சல்காரன் புறப்பட்டுப் போய்விட்டானா என்று விசாரித்துக்கொண்டுவா?" என்றார். அவன் வெளியில் போய்த் திரும்பிவந்து, "அவன் இந்நேரம் இரண்டு மயில்தூரம் போயிருப்பான் என்கிறார்கள்" என்றான்.

திவான் சிறிது யோசனை செய்து, "சரி; இந்த ஊரில் தபால் ஆபீஸ் ஒன்று இருக்கிறது. வாரத்திற்கு இரண்டு தடவை தான் இங்கே இருந்து தபால்களைக் கட்டியனுப்புவது வழக்கம். இன்று தபால் அனுப்பும் தினம். நீ உடனே தபாலாபீசுக்குப் போய்த் தபால் கட்டு போய்விட்டதா என்று விசாரித்துக்கொண்டுவா. அதற்குள் நான் ஒரு கடிதம் எழுதிவைக்கிறேன்" என்றார்.

உடனே முத்துசாமி அப்படியே செய்வதாகச் சொல்லிய வண்ணம் அவ்விடத்தை விட்டு வெளியில் போய்விட்டான். உடனே திவான் திருவடமருதூர் அண்ணாசாமிக்கு அடியில் வருமாறு ஒரு கடிதம் எழுதினார்:—

ஐயா! நீர் சமீபகாலத்தில் மஞ்சட்குப்பம் ஜில்லா கலெக்டர் துரைக்கு உத்தியோக விஷயமாக மனுக் கொடுத்துக்கொண்டீரல்லவா; அதோடுகூட நீர் வைத்தனுப்பிய என்னுடைய நற்சாக்ஷி பத்திரத்தை அவர் என்னிடம் அனுப்பி உமக்கு உத்தியோகம் கொடுக்கலாமாவென்று கேட்டிருக்கிறார். அவர் என்னுடைய ஆப்த நண்பர் என்பதை நீர் தெரிந்துகொண்டே அதை அவருக்கு அனுப்பினீரோ அல்லது, தெரிந்துகொள்ளாமல் அனுப்பினீரோ என்பது விளங்கவில்லை. என்னுடைய நற்சாக்ஷிப்பத்திரத்திலிருந்து நீர் பி. ஏ.

பரீட்சையில் தேறியிருப்பதாகத் தெரிகிறது. இவ்வளவு பெரிய யோக்கியதா பக்ஷம் வாய்ந்துள்ள நீர் இனிமேலும் உத்தியோக மில்லாமல் இருந்தால், மறுபடியும் நீர் என்னுடைய நற்சாக்ஷிப் பத்திரத்தை உபயோகிக்கும்படியான உபத்திரவம் உமக்கு ஏற்ப டும். என்னுடைய நற்சாக்ஷிப் பத்திரம் உமக்கு உத்தியோகம் சம்பாதித்துக் கொடுக்காமல் வீணாய்ப் போகும் பக்ஷத்தில் நீர் இன்னம் வேறு பெரிய மனிதர்களிடம் இதுபோலவே நற்சாட்சிப் பத்திரங்கள் வாங்கியனுப்புவதான வீண் பிரயாசையை எடுத்துக் கொள்ள நேரும். ஆகையால், அதற்கெல்லாம் இடமில்லாமலும் நீர் இனி உம்முடைய திறமையை உத்தியோக அலுவல்களிலேயே உபயோகித்து முன்னுக்கு வரவேண்டுமென்ற எண்ணத்தோடும், நான் உம்மைப் பற்றி ஷை கலெக்டருக்கு சிபார்சு செய்திருக் கிறேன். நீர் கோரி இருக்கும் உத்தியோகத்தைவிடப் பெரிய உத்தி யோகம் உமக்குக் கிடைக்கலாமென்று நான் உறுதியாக நம்பு கிறேன். நீர் நற்சாக்ஷி பத்திரத்தை உபயோகித்த சந்தர்ப்பம் இதுவே கடைசியாய் இருக்கவேண்டுமென்று நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் உமக்குத் துணை இருந்து, நீர் சன்மார்க்கத்திலேயே நடந்து, நியாயமான வழியில் பொருள் தேடி, முன்னுக்கு வந்து, உமது ஆயுள்காலம் முடிய க்ஷேமகரமாய் இருக்க அருள்புரிவாராக:—

என்று திவான் முதலியார் கடிதமெழுதி முடித்து அதை உறையில் போட்டு மேல்விலாசமெழுதி முத்திரை ஒட்டி வாயை மூட, அப்போது சமயற்கார முத்துசாமி அங்கே வந்து, "எஜ மானே! தபால் ஆபீசுக்குப் போய் விசாரித்தேன். அவர்கள் காகி தங்களையெல்லாம் எடுத்து முத்திரை போட்டுக்கொண்டிருந்தார் கள்; இன்னம் கால் மணிநேரத்தில் கட்டுக்கட்டி விடுவார்கள். தங்களு டைய கடிதம் ஒன்று வருமென்றும் அதுவரையில் நிறுத்தி வைக் கும்படியும் நான் சொல்லிவிட்டு வந்தேன்" என்றான்.

உடனே திவான் தாம் எழுதி வைத்திருந்த கடிதத்தை அவ னிடம் கொடுத்து, 'சரி; நீயே இதை எடுத்துக் கொண்டுபோய் நேரில் போஸ்டு மாஸ்டரிடம் கொடுத்து இதைத் தவறாமல் இந்தக் கட்டில் சேர்த்தனுப்பச் சொல்லிவிட்டு வா" என்று கூற, முத்து சாமி கடிதத்தை வாங்கிக்கொண்டு விரைவாக வெளியில் ஓடினான்.

அப்போது திவானினது மனதில் இன்னொரு நினைவுண்டா யிற்று. தமது மனைவியும், புதல்வனும் இன்ன தினம் புறப்பட்டுத் திருவடமருதூருக்கு வருகிறார்களென்று தாம் தமது தந்தைக்கு மறு படி ஒரு கடிதம் எழுதவேண்டுமென்றும் காந்திமதியம்மாளுக்குத் தேறுதல் கூறி, அவளுக்குத் தனியாக ஒரு கடிதம் எழுத வேண்டு மென்றும் அவர் தீர்மானித்துக் கொண்டார். அந்த இரண்டு கடிதங் களையும் எழுதி முடிப்பதற்கு இரண்டொரு நாழிகை காலமாவது பிடிக்குமாதலால், அதற்கு முன்னரே தமது சிற்றுண்டி போஜனத் தை முடித்துக்கொண்டு அந்த வேலையில் இறங்க வேண்டுமென்று நினைத்து உடனே தமது இன்னொரு சமயற்காரனை கந்தனை அழைத்தார். அவர்கள் இருவரும் ஒவ்வொருநாளில் ஒவ்வொருவர் சமயல் செய்வதென்ற முறை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். அன் றையதினம் முத்துசாமியின் முறையாதலால், வடை, ஹல்வா முத லியவற்றை அவனே தயாரித்து வைத்திருந்தான். ஆயினும் திவான் தமது வேலையைக் கருதி கந்தனை அழைத்து, "அடேய்! கந்தா! வடையும் ஹல்வாவும் செய்து வைத்திருப்பதாக முத்துசாமி சொன்னான். எனக்குப் பசியே உண்டாகவில்லையானாலும், முத்து சாமி மறுபடி வந்து தொந்தரவு கொடுக்காமல் இருப்பதற்காக அந்தவேலையை முடித்துக் கொள்ளுகிறேன். நீ போய் இரண்டிலும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக்கொண்டு வா" என்றார்.

அவன் அவ்வாறே சென்று சுத்த ஜலமும், சிறிதளவு பலகார மும் கொணர்ந்து கொடுக்க, திவான் தமது கைகால்களைச் சுத்தி செய்துகொண்டு ஷை சிற்றுண்டிகளை வாங்கி உண்டு அந்த வேலையை முடித்துக்கொண்டு மறுபடி உட்கார்ந்து தமது மனை யாட்டிக்குக் கடிதம் எழுதுவதை முதலில் துவக்கிக்கொண்டார், பாத்திரங்களை எடுத்துக்கொண்டு போய் உள்ளே வைத்த கந்தன் மறுபடி திவானுக்கெதிரில் வந்தான். வந்தவன் வாழை இலையில் கட்டி வைக்கப்பட்டிருந்த ஒரு பொட்டலத்தைக் கொணர்ந்து அவருக்கெதிரில் பிரிக்க, அதற்குள் நான்கு வடைகள் இருந்தன. அவன் திவானைப் பார்த்து, "எஜமானே! நான் பாத்திரங்களை அலம்பி அலமாரியில் கவிழ்த்து வைக்கப் போனேன். அங்கே இந்தப் பொட்டலம் மறைத்து வைக்கப் பட்டிருக்கிறது. முத்து சாமி தங்களுக்குச் செய்யும் பலகாரங்களோடு, தனக்கும் எனக்கும் செய்து வைத்திருக்கிறான். அப்படியிருக்க, இப்படி

நான்கு வடைகளை எடுத்துக் கட்டி ஏன் மறைத்து வைத்தானென்பது தெரியவில்லை. நேற்று காலையில் நாம் இந்த ஊருக்கு வந்தது முதல் இவ்விடத்தில் பாத்திரங்கள் சுத்தி செய்வதற்காக ஒரு வேலைக்காரப் பெண் வந்திருக்கிறாள். அவளிடத்தில் முத்து சாமி அடிக்கடி ஜாடை காட்டிப் பேசுவதை நான் பார்த்தேன். அவளுக்குக் கொடுப்பதற்காகவே இதை அவன் ஒளித்துவைத்திருக்கிறான்போலிருக்கிறது. இதைத் தற்செயலாக எஜமான் பார்த்து, இது யாருக்கென்று அவனிடம் கேட்டால், அவன் என்மேல் பழி சுமத்திவிடுவான். இரண்டு பேர் இருந்து வேலை செய்யும் இடத்தில் அவன் இம்மாதிரி செய்வது எனக்கு அச்சமாக இருக்கிறது. ஆகையால், எஜமான் அவனைக் கண்டித்து வைக்கவேண்டும். அவன் செய்யும் காரியத்தினால் எனக்கும் பெருத்த அபக்கியாதி வரும்போல இருக்கிறது" என்றான்.

அதைக் கேட்ட திவான் அவனைப் பார்த்து இனிமையாகப் புன்னகை செய்து, "கந்தா! எந்த வஸ்துவானாலும் தொண்டை வரையில்தானே யப்பா ருசியாக இருக்கும். அதற்குமேல் அது ருசிக்காது. அப்படிப்பட்ட அற்ப சுகத்தை உண்டாக்கும் கேவலம் நான்கு வடைகளை முத்துசாமி எடுத்துத் தனியாக வைத்து விட்டால், அதனால் என்னுடைய குடி முழுகிப் போய்விடுமா? நீ சொல்வதுபோல அதை நானே கண்டிருந்தால், அது என்ன வென்றே நான் கவனிக்க மாட்டேன்; அது யாருக்கு வைக்கப் பட்டிருந்ததென்றும் கேட்டிருக்க மாட்டேன். ஆகையால், அவன் உன்மேல் பழிசுமத்தும்படியான சந்தர்ப்பமே நேர்ந்திராது. அவன் வேறே யாருக்கும் எடுத்து வைக்கவில்லையே. நமக்குப் பாத்திரங்கள் தேய்க்கும் வேலைக்காரிக்குத்தானே வைத்தான். இவ்வளவு பெரிய திவான் வீட்டில் அவள் வந்து வேலை செய்தும், அவளுக்கு இங்கே நான்கு வடைகள் கிடைக்கா விட்டால், அவளுக்கு வேறே யார்தான் கொடுக்கப்போகிறார்கள்? கந்தா! இருந்திருந்து, உன் புத்தி இந்த அற்ப விஷயங்களிலெல்லாம் போனது ஆச்சரியமாக இருக்கிறது. நீயும் சரி, அவனும் சரி, ஒருவன்மேல் மற்றவன் புகார் சொல்லாமல் இருவரும் ஒற்றுமையாய் இருக்கவேண்டும், உனக்குப்பிரியமானால், நீயும் வடைகளை எடுத்து உனக்கு வேண்டிய மனுஷ்யாளுக்குக் கொடப்பா! நமக்குக் கடவுள் ஏராளமான ஐசுவரியத்தைக்கொடுத்துக் கொண்டே இருக்கிறார். இதனால் நான் ஏழையாய்

விடமாட்டேன். நீபோய் உள்ளே வேலை இருந்தால் பார். எனக்கு அவசரமான அலுவல் இருக்கிறது. நான் அதைக் கவனிக்கிறேன்" என்று கூற, அதைக்கேட்ட கந்தன் மிகுந்த அவமானமும் முகவாட்டமு மடைந்து அவ்விடத்தை விட்டு உள்ளே போய்விட்டான். போனவன். திவானுக்குக் கொடுத்த பிறகு மிஞ்சியிருந்த வடைகளுக்குமேல், தான் கொண்டுபோன நான்கு வடைகளையும் போட்டுவிட்டு மனவருத்தத்தோடு வெளியில் போய்விட்டான். தபால் ஆபீசுக்குப் போயிருந்த முத்துசாமி திவானுடைய கடிதத்தைத் தபால் கட்டில் சேர்த்துவிட்டு விரைவாகத் திரும்பி யோடிவந்து கூடாரத்தை யடைந்து சமையலறைக்குள் சென்று வடைகள் வைத்திருந்த பாத்திரத்தைப் பார்த்தான். திவான் நான்கு வடைகளே சாப்பிட்டாராதலாலும், அவனால் ஒளித்து வைக்கப்பட்டிருந்த நான்கு வடைகளைக் கந்தன் எடுத்துக் கொணர்ந்து அந்தப் பாத்திரத்தில் போட்டிருந்தானாதலாலும், பாத்திரத்திலிருந்த வடைகள், தான் வைத்து விட்டுப் போனதுபோலவே அவனுக்குத் தோன்றின. ஆகவே, திவான் சிற்றுண்டி போஜனம் செய்துவிட்டார் என்று அவன் சந்தேகிக்க ஏதுவில்லாதிருந்தது. அதுவுமன்றி, கால் மயில் தூரத்திலிருந்த தபால் ஆபீசுக்கு அவன் இரண்டு தரம் ஓட்டமாய்ப் போய் ஓட்டமாய்த் திரும்பி வந்தமையாலும், அவன் காலையில் போஜனம் செய்து வெகுநேரமாகி விட்டமையாலும், அவனுக்குப் பசியும் தாகமும் உண்டாகிவிட்டன. ஆகையால், அவன் வடைப் பாத்திரத்தின் பக்கத்தில் உட்கார்ந்து மிகுந்த ஆவலோடும் விரைவாகவும் ஐந்தாறு வடைகளை எடுத்து முரித்து வாயில் போட்டுத் தின்று ஒரு செம்பு தண்ணீரைப் பருகியவுடன் அவ்விடத்தை விட்டு திவான் இருந்த இடத்திற்குச் சென்றான். அவ்வாறு செல்வதற்குள் அவனது தேகத்தில் இன்னதென்று விவரிக்க இயலாத ஒருவித உபத்திரவம் உண்டாகத் தொடங்கியது. தொண்டையில் அதிகமான வரட்சியும் முறுக்கலும் தோன்றின. மூளை சுழலத் தொடங்கியது, கால்கள் தள்ளாட வாரம்பித்தன. அந்த நிலைமையில் திவானுக்கெதிரில் போய் நின்ற முத்துசாமி, "எஜமானே. கடிதத்தை தபால்கட்டில் சேர்த்துவிட்டேன்" என்றான்.

அதைக் கேட்ட திவான், "சரி; நீ போ" என்றார்.

உடனே முத்துசாமி, "நாழிகை ஆகிறதே. எஜமானுக்குப் பலகாரம் கொண்டு வரலாமா?" என்று நிரம்பவும் பணிவாகவும் வணக்கமாகவும் கூறினான்.

திவான், "நான் பலகாரம் சாப்பிட்டு விட்டேன். நீ போன பிற்பாடு கந்தனைக் கூப்பிட்டுப் பலகாரம் கொண்டுவரச்சொல்லி சாப்பிட்டுவிட்டேன். போய், உன் காரியத்தைப் பார்" என்றார்.

உடனே முத்துசாமி, "எஜமானே! நான் தங்களுக்காகச் செய்து வைத்திருந்த வடைகள் எல்லாம் அப்படியே இருக்கின்றனவே. தாங்கள் ஒன்றுகூட எடுத்துக் கொள்ளவில்லைபோலிருக்கிறதே" என்றான்.

அதைக் கேட்ட திவான், "இல்லை, முத்துசாமி! நான் நான்கு வடைகள் சாப்பிட்டேன். ஒருவேளை காரியம் இப்படி நடந்திருக்கலாம். நான் பலகாரம் சாப்பிட்ட பிறகு கந்தன் அலமாரியண்டை போனானும். அவ்விடத்தில் நான்கு வடைகள் இலையில் பொட்டலமாகக் கட்டிவைக்கப்பட்டிருந்தனவாம். அதை அவன் எடுத்துவந்து என்னிடம் காட்டி, நீ அதை யாருக்கோ கொடுப்பதற்காக வைத்திருக்கிறாயென்றும், யாருக்காவது கொடுக்கவேண்டுமானால் இப்படி ஒளித்து வைக்காமல் தாராளமாக நேரில் எடுத்துக் கொடுக்கலாமென்றும், இப்படி ஒளித்துவைத்தால் மற்றவர்பேரில் சந்தேகம் ஏற்படுமே என்றும் அவன் என்னிடம் தெரிவித்தான். நீ வந்த பிறகு நான் அதை உன்னிடம் சொல்வதாகச் சொன்னேன். அந்தப் பொட்டலத்திலிருந்த வடைகளை அவன் உடனே கொண்டுபோய் விட்டான். ஒருவேளை அவன் அந்த வடைகளையும் பாத்திரத்தில் போட்டுவிட்டுப் போயிருக்கலாம். அதனால்தான் பாத்திரத்தில் வடைகள் குறையாமல் முன்போலவே இருக்கலாம். நீ வடைகளை ஏன் மறைத்துவைக்கிறாய்? உனக்கு இஷ்டமானவர்களுக்கு நீ தாராளமாகக் கொடுக்கலாம். இதனால் எனக்குப் பிரமாதமான நஷ்டம் வந்துவிடாது. இப்போது நீ மறைத்து வைத்ததால், இந்த அற்ப விஷயத்தில் நான் உனக்குச் சமாதானம் சொல்லிக்கொண்டிருக்கவும், நான் எழுதிக்கொண்டிருக்கும் முக்கியமான கடிதம் தடைப்படவும் நேர்ந்ததை நீயே பார்க்கிறாயல்லவா" என்றார்.

அதைக் கேட்ட முத்துசாமிக்கு இடி வீழ்ந்ததுபோலாய்விட்டது. தபாலாபீசிலிருந்து வந்தவுடன் வடைகளைத் தின்றது முதல் அவனது உடம்பில் பெருத்த சங்கடம் உண்டாகி அவனை வதைத்துக்கொண்டிருந்ததென்று முன்னமே கூறினோமல்லவா. அந்த உபத்

திரவம் படிப்படியாய் அதிகரித்து அவன் நிலை கொள்ளாமல் தத்தளித்துத் துவளும்படி செய்துகொண்டிருந்த சமயத்தில், இவான் கூறிய வரலாற்றை அவன் கேட்கவே, அவனது முகத்தில் பிரேதக்களை உண்டாகிவிட்டது. அவன் பிரமித்து ஸ்தம்பித்து இரண்டொரு விநாடிநேரம் நின்றபின் வேரற்ற மரம்போல இவானினது பாதத்தடியில் சாஷ்டாங்கமாக விழுந்து கைகளிரண்டையும் முன்னால் நீட்டிக் குவித்து மனநைந்து உருகி அழுதவண்ணம், "எஜமானே! நான் மகா சண்டாளன்! பரம துரோகி! படுபாவி! நெஞ்சில் கொஞ்சமும் விசுவாசமற்ற கொலைபாதகன்! உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கும் நன்றிகெட்ட நாயினும் கடையவன்! மகா புண்ணியாத்துமாவாகிய தங்களுக்கு நான் செய்ய நினைத்த கேடு எனக்கே வந்து வாய்த்தது. சுவாமீ! மகா பாவியாகிய என் முகத்தில் தாங்கள் விழிப்பதும், என்னோடுபேசுவதும் தகாத காரியமானாலும், தாங்களே இந்த சமஸ்தானத்திற்கு முக்கிய நியாயாதிபதியாகையால், தாங்கள் என் விஷயத்தில் ஒரே ஒரு காரியம் மாத்திரம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் இனி இரண்டொரு நாழிகை காலத்திற்குமேல் உயிரோடிருக்கப் போகிறதில்லை. அதற்குள் தாங்கள் என்னுடைய குற்றத்துக்குத் தக்க கடுமையான தண்டனை விதித்து விடவேண்டும். நான் கொலைக்குற்றம் செய்ய எத்தனித்த மகா பாதகன்; உங்களிடம் கத்தி முதலிய ஆயுதம் ஏதாவது இருந்தால், என் கை கால்களையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் வெட்டி என்னை சித்திரவதை செய்யுங்கள். சுவாமீ ஆண்டவனே! தாமதிக்காமல் அந்தக் காரியத்தை நிறைவேற்றுங்கள்" என்று நிரம்பவும் உருக்கமாக மன்றாடிக் கூறினன்.

அவன் திடீரென்று கீழே வீழ்ந்ததைக் கண்டும், அவன் கூறிய விபரீதமான சொற்களைக் கேட்டும் இவான் முற்றிலும் திகைப்பும் பிரமிப்பும் அடைந்து அவனை நோக்கி, "அடேய் முத்துசாமி! என்னடா இது? நீ சொல்வது எனக்குக் கொஞ்சமும் விளங்கவே இல்லையே! திடீரென்று கீழே விழுந்து, பைத்தியம் கொண்டவன்போல் ஏதோ உளருகிறாயே! எழுந்து நின்று சங்கதியை நன்றாகச்சொல்" என்றார்.

உடனே முத்துசாமி கண்ணீரை ஆறாய்ப் பெருகவிட்டு கீழே கிடந்துபுரண்டு தவித்தவண்ணம், எஜமானே! கடவுளே வந்து அவதரித்ததுபோல இருப்பவரும், புண்ணியமூர்த்தியும், பரமதயா

ளுவும், சர்வஜென ரக்ஷகரும், தர்மமும் நீதியும் சாந்தகுணமும் புத்திசாலித்தனமும் உருவெடுத்தது போலிருப்பவரும், இது வரையில் எனக்கு அன்னமிட்டுக் காப்பாற்றிய மகா உபகாரியுமான தங்களுக்கு விஷம்வைத்துக் கொன்றுவிடவேண்டுமென்ற கருத்தோடு நான் நான்கு வடைகளில் பாஷாணத்தைக் கலந்து தயார் செய்து அவைகளைப் பொட்டலமாய்க் கட்டி மறைத்து வைத்திருந்து கொஞ்ச நேரத்திற்கு முன், தங்களைத் தூண்டி அவைகளைத் தாங்கள் தின்றுவிடும்படி செய்வதற்காக வந்தேன். தாங்கள் யாருக்கு என்ன விதமான நன்மை செய்வதற்காக அந்தக் கடிதத்தை எழுதி என்னிடம் கொடுத்து என்னைத் தபாலாபீசுக்குத் துரத்தினீர்களோ தெரியவில்லை. கடவுள்தான் தங்களுக்கு அந்த சமயத்தில் ஏதோ ஒருவித எண்ணத்தை உண்டாக்கி அவசரமாய் என்னை வெளியில் அனுப்பவும், கந்தனை ஏவிக் கொண்டுவரச்செய்து பலகாரம் சாப்பிடவும் செய்திருக்கவேண்டும். அது மட்டுமா! நான் ஒளித்து வைத்திருந்த பாஷாணங் கலக்கப்பட்டிருந்த வடைகளைக் கந்தன் மற்ற வடைகள் இருந்த பாத்திரத்தில் போட்டுவிட்டான் போலிருக்கிறது, நான் தபாலாபீசிலிருந்து வந்தவுடன், எனக்குப் பசியாயிருந்ததாகையால், நான் ஐந்தாறு வடைகளை எடுத்துத் தின்றுவிட்டேன். மேலே கிடந்த விஷங்கலந்த வடைகளெல்லாம் என் வயிற்றுக்குள்ளேயே போய்விட்டன. விஷம் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. குடல்களெல்லாம் இன்னம் கொஞ்ச நேரத்தில் வெளியில் வந்து விடும்போலிருக்கின்றன. என் உடம்பு நிலை கொள்ளவில்லை. என் பிராணன் துடிக்கிறது. நான் உயிர்க்கழுவில் நிற்பதுபோல வதை படுகிறேன். இனி என் பிராணன் அதிக நேரம் நிற்காது. தாங்கள் அவசரமாய் எனக்கு ஏதாவது தண்டனை விதிக்காவிட்டால், என் மனசுக்கு ஒரு நிம்மதி ஏற்படாது. உடனே தயவு செய்யுங்கள்" என்று நிரம்பவும் உருக்கமாகக் கதறிப் பதறிக் கூறினார். அந்த வரலாற்றைக் கேட்ட திவான் முற்றிலும் திக்பிரமை கொண்டு நடுநடுங்கிப் பதறிப்போனார். தாம் என்ன செய்வது என்ன சொல்வது என்பதை அறியாது இரண்டொரு நிமிஷ காலம் தத்தளித்தபின் திவான் அவனைப் பார்த்து, "அப்பா முத்துசாமி! உனக்கு என்மேல் அவ்வளவு மன வருத்தமும், என்னைக் கொன்றுவிட வேண்டுமென்ற மன உறுதியும் ஏற்படும்படி, நான் உனக்கு என்ன தவறு செய்தேனப்பா? சொல்வாயானால், அதற்கு நான் உடனே ஏதாவது பரிகாரம் செய்து உன் மனக்

குரோதம் தீரும்படி நடந்து கொள்ளுகிறேன்" என்று கூறிவிட்டு விரைவாக எழுந்து அப்பால் போய் ஒரு சேவகனை அழைத்து, சமஸ்தான ஆயுர்வேத வைத்தியர் இருக்கிறாரா என்று கேட்க, அவன், "அவர் வெளியில் ஏதோ காரியமாய்ப் போனார்" என்றான். உடனே திவான், "உடனே ஓடி அவரை அவசரமாய் அழைத்துக் கொண்டு வா" என்று கூறிவிட்டு, மறுபடி உள்ளே வந்து முத்துசாமியைப் பார்த்து, அன்பு ததும்பிய குரலில் பேசத்தொடங்கி, "முத்துசாமி! நிஜத்தைச் சொல். நான் உனக்கு கெடுதல் செய்வேனென்று பயப்படாதே" என்று அவனுக்குத் தைரியமுண்டாகும் விதமாய்ப் பேசினார். அதைக் கேட்ட முத்துசாமி முன்னிலும் நூறு மடங்கு அதிகமாய்க் கலங்கி உருகி, "என் தெய்வமே! தங்களுடைய சிலாக்கியமான குணமே தங்களுடைய தலையைக் காத்தது; தங்கள் எனக்கு எள்ளளவும் கெடுதல் செய்யவில்லை. தங்களிடம் எனக்குக் கடுகளவும் பகைமையே கிடையாது; பணத்தாசைக்கு அடிமையாய், நான் இந்தக் காரியத்தைச் செய்யத் துணிந்தேன்; ஆள் கொல்லியென்று பணத்திற்கு ஒரு பெயர் உண்டல்லவா. அது நிஜமாகி விட்டது. நான் தங்களைக் கொல்ல இணங்கும்படி பணமே செய்தது; முடிவில் அது என்னையே கொன்ற விட்டது" என்றான்.

திவான், "நீ சொல்வதைப் பார்த்தால், வேறே யாரோ ஒருவர் உனக்குப் பணம் கொடுத்து, நீ எனக்குப் பாஷாணம் வைத்துக் கொல்லும்படி தூண்டினதாக அல்லவா அர்த்தம் ஆகிறது. அவர் இன்னார் என்பதையாவது தயவு செய்து வெளியிடு. அவருக்கு நான் ஏதாவது கெடுதல் செய்திருந்தாலும், அதற்கு நான் ஏதாவது பரிகாரம் செய்கிறேன்" என்றார்.

முத்துசாமி, "ஆண்டவனே! அதை மாத்திரம் கேட்க வேண்டாம். அதை நான் சொன்னாலும் தாங்கள் நம்பமாட்டீர்கள்' என்றான்.

உடனே திவான், "அப்பா! முத்துசாமி! நீ இவ்வளவு தூரம் உன் குற்றத்தை உணர்ந்து வருந்தி நல்ல மாதிரியாகப் பேசுகிறாயே! இந்த சமயத்தில் கூடவா நீ பொய் பேசுவாய். ஒருநாளும் பேசமாட்டாய். நீ சொல்லுகிறதை நான் உண்மையென்று நம்பத் தடையே இல்லை. நீ இப்போது இந்த ரகஸியத்தைச் சொல்லாவிட்டால் அந்த மனிதர் இன்னாரென்பது எனக்குத் தெரியப் போகி

றதில்லை. அவருடைய பகைமையையும் குரோதத்தையும் நீக்க வகையில்லாமல் போய்விடும். உன் மூலமாய்ச் செய்த இந்தப் பிரயத்தனம் தவறிப் போனதைக் கண்டு, அந்த மனிதர் மறுபடி இன்னம் யாரையாவது தூண்டி என்னைக் கொல்ல முயற்சிப்பார். அப்படி நான் இறந்து போவது உனக்குச் சம்மதமாயிருந்தால், நீ இந்த ரகஸியத்தை வெளியிட வேண்டாம்" என்று கூறினார்.

உடனே முத்துசாமி, "புண்ணியவானே! தாங்கள் சொல்வது நிஜமான சங்கதிதான். அந்த மனிதர் மறுபடியும் தங்களைக் கொல்ல எத்தனித்தாலும் எத்தனிக்கலாம். ஆகையால், நான் உண்மையைச் சொல்லி வைக்கிறேன். திருவடமருதூரிலிருந்து ஒரு மனிதன் வந்து ஒரு மாசகாலமாய் நம்முடைய திருவநந்தபுரத்தில் இருந்தான். அவன் என்னோடு பிரியமாகப் பேசிப் பேசி எப்படியோ என் சிநேகத்தைச் சம்பாதித்துக் கொண்டதன்றி, எனக்கு அடிக்கடி இனாம் சனாம்களும் கொடுத்துக்கொண்டே வந்தான் அவன் என்னிடம் நிரம்பவும் அந்தரங்கமான பிரியம் வைத்திருப்பதாக நான் எண்ணி அவனுடைய பிரியப்படியே நானும் நடக்கத் தொடங்கினேன். கடைசியில் சில தினங்களுக்கு முன் அவன் என்னிடம் ரொக்கமாக ஐயாயிரம் ரூபாயைக் கொடுத்து அதை ஒரு காரியத்திற்காகத் தங்கள் சம்சாரம் எனக்குக் கொடுக்கச் சொன்னதாகக் கொடுத்தான்."

திவான் முற்றிலும் குழம்பித் திகைத்து, "யார்! யார்! என்னுடைய சம்சாரமாகிய காந்திமதி யம்மாளா ஐயாயிரம் ரூபாயை உனக்குக் கொடுக்கச் சொன்னதாக அவன் சொன்னான்?" என்றார்.

முத்துசாமி, "ஆம்! ஆண்டவனே! எஜமானி யம்மாள்தான் கொடுக்கச் சொன்னதாக அவன் சொன்னான். உண்மையில் அது நிஜமோ பொய்யோ வென்பது எனக்குத் தெரியாது. எதற்காக அவ்வளவு பிரம்மாண்டமான பணத்தொகை எனக்குக் கொடுக்கப்படுகிறதென்று நான் அவனிடம் கேட்டேன். அவன் சொன்னதை வாயில் வைத்து இந்த சன்னிதானத்தில் வெளியிட வாய் கூசுகிறதானாலும் தங்களுடைய எதிர்கால க்ஷேமத்தைக் கருதி நான் எதையும் மறைக்காமல், நடந்ததை நடந்தபடி சொல்லவேண்டியிருக்கிறது. நம்முடைய எஜமானி யம்மாளுக்குத் திருவடமருதூரில் யாரோ ஓர் ஆசைநாயகர்

இருக்கிறாராம். அம்மாள் இங்கே வருகிறதற்கு முன் அதுவரையில் அவரோடு ஈருடலும் ஓருயிருமாய் இருந்தார்களாம். இங்கேவந்தபின் அங்கே திரும்பிப் போவதற்குத் தாங்கள் சந்தர்ப்பமே கொடுக்க வில்லையாம். அந்த ஆசை நாயகர் இரண்டு மாச காலத்திற் கொருதரம் திருவனந்தபுரத்திற்கு வருவாராம்; தாங்கள் இல் லாத காலங்களில் அம்மாளோடு பேசிவிட்டுப் போவாராம். அவர் இதே ஏக்கமாய்ப் பைத்தியங் கொண்டவர்போல இருக்கி றாராம். தங்களைக் கொன்றுவிட்டு அம்மாளை ஊருக்கே அழைத்துக் கொண்டுபோய் சாசுவதமாய்த் தாமே வைத்துக் கொள்ளவேண்டுமென்பது அவருடைய கருத்தாம். அதற்காக அவர் ஆளை இங்கே அனுப்பினாராம். அவன் இங்கே வந்து ஒரு மாச காலம் இருந்து, திருட்டுத்தனமாக அம்மாளைப் பல தடவைகண்டு பேசினனும் இருவரும் கலந்து யோசனை செய்து, எனக்கு ஐயாயி ரம் ரூபாய் கொடுத்து, நான் தங்களுக்குப் பாஷாணம் வைத்துக் கொன்று விட ஏற்பாடு செய்கிறதென்று அவர்கள் தீர்மானித்துக் கொண்டார்களாம். அதுவுமன்றி, திருவடமருதூரிலுள்ள தங்களு டைய தகப்பனருடன் அந்த ஆசைநாயகர்வேண்டுமென்றேசிநேகம் செய்துகொண்டு, உங்களெல்லோரையும் திருவிழாவுக்குஅழைக்கும் படி அவரைத் தூண்டி ஒரு கடிதம்எழுதச்சொன்னாராம். எப்படியா வது அம்மாளைத் தாங்கள் அனுப்பும்படி செய்து அவர்கள் ஊருக்குப் போன பிறகு தங்களைக் கொன்றுவிட்டால், அம்மாள்பேரில் சந்தே கம் ஏற்படாது, அவர்களுடைய கோரிக்கையும் பூர்த்தியடையும் என்ற எண்ணத்தோடு அவர்கள் இவ்விதமாக ஏற்பாடுசெய்திருப்ப தாக அந்த மனிதன் என்னிடம் சொல்லி ஐயாயிரம் ரூபாய் பணத் தையும் கொடுத்தான். அவ்வளவு அபாரமான பணத் தொகை கிடைக்கிறதே என்ற பேராசையாலும், நான்எஜமானியம்மாளிடம் வைத்திருந்த பயபக்தி விசுவாசத்தினலும், ஏமாறிப்போய் நான் இந்தக் காரியத்தைச் செய்வதாக ஒப்புக்கொண்டு பணத்தை வாங்கி ஓரிடத்தில் புதைத்து வைத்தேன். அந்த ஆளே பாஷாணமும் வாங் கிக் கொடுத்தான். அதை இன்று தங்களுக்குப்போட்டுவிடவேண்டு மென்று தனியாகக் கொஞ்சம் வடை மாவில் அதைக் கலந்துநான்கு வடைகள் சுட்டு இலையில் கட்டி ஒளித்து வைத்திருந்தேன். தாங் கள் பலகாரம் கொண்டுவரச் சொன்னல் அதை எடுத்துக்கொண்டு வரலாமென் றிருந்தேன். தெய்வமே முன்னிட்டு அது என் வயிற் றிலேயே போய்ச் சேரும்படி செய்துவிட்டது" என்றான்.

அவன் கூறிய சொற்களைக் கேட்ட திவான் திடுக்கிட்டு திக் பிரமைகொண்டு, "ஆ! அப்படியா! திருவடமருதூரிலிருந்து வந்திருந்த ஆள் அப்படியா சொன்னான்! அவன் குறித்தது என் சம்சாரத்தைத்தானா? நீ தெளிவான ஞாபகத்தோடுதான் சொல்லுகிறாயா? அல்லது, ஞாபகப் பிசகாகவோ, வேண்டுமென்று பொய்யாகவோ சொல்லுகிறாயா?" என்றார். அவ்வாறு அவர் கேட்கும்போதே அவரது மூளை முற்றிலும் கலங்கிச் சுழலத் தொடங்கியது. அவரது மனத்தில் பிரளயகாலச் சண்டமாருதம் போலக் குபீரென்று பொங்கி யெழுந்த உணர்ச்சிகளை அவர் தாங்கமாட்டாதவராய் அப்படியே நாற்காலியில் சாய்ந்தார்.

உடனே முத்துசாமி, "ஆண்டவனே! நான் தெய்வ சன்னிதானத்தில் நின்று சொல்வதுபோலச் சொல்லுகிறேன். அம்மாள் இதில் சம்பந்தப்பட் டிருக்கிறார்களோ இல்லையோ என்பதை நான் நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. அந்த ஆள் சொன்னதை நான் அப்படியே தெரிவித்துவிட்டேன். பொய் சொன்னால் நான் நரகத்துக்கே போவேன்" என்றான்.

அவனது முடிவான சொல்லைக் கேட்ட திவான் மின்சார சக்தியால் திடீரென்று தாக்கப்பட்டவர்போலத் தமது உணர்ச்சியை இழந்து அப்படியே முன்பக்கத்தில் மேஜையின்மேல் குப்புறச் சாய்ந்து பிணம்போ லாய்விட்டார்.

---

## 10-வது அதிகாரம்

---

### புலிக்குகைக்குட் புகுந்த பூம்பாவை

இனி நாம் நமது கோகிலாம்பாளைக் கவனிப்போம். அந்த உத்தமகுண மடந்தை தனது அன்னையிட்ட கட்டளையின்படி, சிறைச்சாலையி லிருந்த கண்ணபிரானைப் பார்த்து அவனுக்குத் தேறுதல் கூறி அவனது யோசனைகளை நிறைவேற்றிவைக்கும் கருத்துடன் சென்று போலீஸ் இன்ஸ்பெக்டரது சூழ்ச்சி வலைக்கு இலக்காய் அவரது சயன அறைக்குள் நுழைந்த வரலாறு முன்னரே கூறப்பட் டிருக்கிறது. அந்த ஏந்திழிலணங்கு முதலிலிருந்த அறையைக் கடந்து அதற்கப்பாலிருந்த இரண்டாவது அறைக்குள்

நுழைந்தவுடனே முதல் அறைக்கு வெளியிலிருந்த கதவு மூடப்பட்டு வெளிப்புறத்தில் தாளிடப்பட்டதென்பதும், அதே காலத்தில், இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளை மோகாவேசங் கொண்டவராய் அந்தப் பெண்மணியை ஒரு குழந்தையைத் தூக்குவது போலத் தூக்கி எடுத்துக்கொண்டு கட்டிலுக்குப் போகவேண்டுமென்ற கருத்தோடு எதிர்கொண்டோடி வந்து அவளிடம் நெருங்கி அவளைத் தூக்க முயன்றாரென்பதும் முன்னரே சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. சிறிதும் எதிர்பார்க்கப்படாத அந்த விபரீத நிகழ்ச்சியைக் கண்ட பெண்ணரசி திடுக்கிட்டு திக்பிரமைகொண்டு அபாரமான திகிலடைந்து சரேலென்று தத்திக் குதித்து சிறிது தூரம் பின்னால் நகர்ந்து, போலீஸ் இன்ஸ்பெக்டரது பிடியில் அகப்படாமல் விலகி நின்றாள். "ஹா! யார் இவர்! இது எந்த இடம்! போலீஸ் ஸ்டேஷனா இது! இது சயன அறைபோலக் காணப்படுகிறது! என்னுடைய பிராணபதி காணப்படவில்லை! வேறே யாரோ ஒரு மனிதர் இருக்கிறார்! இவர் ஏதோ துர்நினைவோடு யாரோ ஒரு ஸ்திரீயின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருப்பதாகவும் தோன்றுகிறது" என்ற நினைவுகள் அவளது மனத்தில் மின்னல் தோன்றி மறைவதுபோல ஓர் இமைப்பொழுதில் தோன்றி மறைந்தன. பதினாயிரங்கோடி தேள்களுக்கும் கொடிய சர்ப்பங்களுக்கும் இடையில் நிற்பவள்போல அந்த அருங்குணமணி தத்தளித்த வண்ணம் தான் என்ன செய்வதென்பதை அறியமாட்டாதவளாய், எதிரில் நின்ற மனிதர் யாரென்பதைத் தெரிந்துகொள்ளும் கருத்துடன் நிமிர்ந்து அவரை ஏறிட்டுப் பார்த்தாள். போலீஸ் இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளை கண்ணபிரானைக் கைதி செய்து அழைத்து வந்த சமயத்தில், ஏராளமான ஜனங்கள் அவரையும் ஜெவான்களையும் சூழ்ந்து மறைத்துக்கொண் டிருந்தமையால், அப்போது மிகுந்த நாணமும் வெட்கமும் அடைந்து தலைகுனிந்து நின்ற கலியாணப் பெண்ணான கோகிலாம்பாள் இன்ஸ்பெக்டரது முகத்தையாகிலும், மற்ற ஆண்பிள்ளைகளின் முகங்களையாகிலும் பார்த்தவளேயன்று. அதுவுமன்றி, இன்ஸ்பெக்டர் தமது சயன அறையிலிருந்து, அவளைத் தூக்கவந்த பொழுது, தமது உத்தியோக உடைகளை அணிந்துகொண்டிராமல் சாதாரணமான வஸ்திரங்களைத் தரித்துக்கொண் டிருந்தமையால், அவர் இன்னார் என்பதாவது, அவர் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர் என்ற குறிப்பாவது அந்த மடந்தைக்குத் தெரியவே ஏதுவில்லாது போயிற்று. அந்த இடம்

போலீஸ் ஸ்டேஷன் அல்லவென்பது மாத்திரம் அவளுக்குச் சந்தேகமற விளங்கவே, தன்னை அழைத்துவந்த மனிதன் அதுவே போலீஸ் ஸ்டேஷன் என்றும், அதற்குள் தனது ஆருயிர் மணாளர் இருக்கிறாரென்றும் சொன்னது எதனால் என்கிற சந்தேகமே எழுந்தெழுந்து அவளது மனத்தில் பெருத்த ஆச்சரியத்தையும் பிரமிப்பையும் உண்டாக்கி, அவளது அறிவு முற்றிலும் குழம்பிப் போம்படி செய்தது. ஆயினும், கண்ணபிரானைக் கைதிசெய்து அழைத்துப் போகவந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் நூற்றுக்கணக்கில் ரதிதேவிகள்போல நிறைந்திருந்த அத்தனை வடிவழகிகளில் தன்னைக் கண்டு அந்த க்ஷணநேரத்திற்குள் தன்மீது துர்மோகங்கொண்டு, அத்தகைய படுமோசச் சூழ்ச்சியைச் செய்யத் துணிந்திருப்பாரென்று நமது மாதுசிரோன்மணி சந்தேகிக்க எள்ளளவும் ஏதுவில்லையாதலால், அநேகமாய் ஏதோ ஆள்மாருட்டமும், தவறும் நேர்ந்திருக்க வேண்டுமென்ற எண்ணமே கோகிலாம்பாளது மனத்தில் தோன்றி சிறிதளவு மனோதிடத்தைக் கொடுத்துக்கொண்டிருந்ததானாலும், மகா துஷ்ட மனிதர்போலவும் காமாதுரர்போலவும் காணப்பட்ட அந்த மனிதரிடத்தில் தான் தனிமையில் அகப்பட்டுக்கொண்டிருந்தமையால், அவரிடத்திலிருந்து தான் நிஷ்களங்கமாக எப்படித் தப்பித்துக்கொண்டு போவது என்ற அபாரமான மலைப்பும் கவலையும் திகிலும் எழுந்தெழுந்து அந்த மெல்லியலாளை வதைக்கத் தொடங்கின. அவள் இயற்கையில் சுத்த சாத்விக குணமும், மிருதுத் தன்மையும் உருவெடுத்தது போன்றவளானாலும், அபாரமான புத்தி சாதுர்யமும், விவகார ஞானமும், சிறந்த பகுத்தறிவும் அவளிடம் பூர்த்தியாக நிறைந்திருந்தன. அதுவன்றி, அவளது தந்தை இறந்தபிறகு, அவரது அளவற்ற ஐசுவரியங்களையெல்லாம் நிர்வகித்துக் காப்பாற்ற வேறு ஆண்மக்கள் எவரும் இல்லாமையாலும், அவரது மனைவி, இளைய புதல்வி ஆகிய இருவரைக் காட்டிலும் கோகிலாம்பாள் பன்மடங்கு அதிக திறமை வாய்ந்தவளாயிருந்தமையாலும், வீட்டு நிர்வாகம் முழுதையும் அவளே ஏற்று நடத்தி வந்தவளாதலால், அக்கிரமத்தைக்கண்டு கண்டிக்கும் ஆற்றலும், சிறிதளவு மனத்துணிவும் அவளுக்குப் பழக்கமாகி இருந்தன. ஆகவே, அந்த மின்னற்கொடியாள் அஞ்சி நடுங்கி நாணித் தலைகுனிந்து குன்றிப்போய் தூரவிலகி நின்றாளானாலும், அவள் முற்றிலும் செயலற்ற கேவலம் அபலையாய்க் காணப்படாமல், தனக்கு எத்தகைய பயங்கரமான அபாயம் நேரிட்டாலும்,

தான் தனது கற்புநிலை தவருமல் நடக்கும் மனவுறுதி வாய்ந்தவள் என்பது அவரது மனத்தில் படும்வண்ணம் திடமான முகத்தோற்றத்தோடு காணப்பட்டு ஒருதரம் நிமிர்ந்து சோபப் பார்வையாக அவரை ஒரு பார்வை பார்த்து உருட்டி விழித்தாள். அந்தக் கூரிய பார்வை அவரது இருதயத்தில் ஈட்டிபோலப் பாய்ந்ததாகையால், கட்டிலடங்காதக் காமவெறிகொண்டு அவள்மீது பாய ஓடி வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் அவளது அருவருத்த பார்வையைக்கண்டு ஒருவித அச்சங்கொண்டவராய்த் தயங்கி சடக்கென்று அப்படியே நின்றுவிட்டார். அதைக் கண்ட பெண்மணி மரியாதையாகவும் தனது கண்ணியத்திற்குக் குறைவில்லாமலும் மிருதுவாகப் பேசத் தொடங்கி, "ஐயா! ஏதோ ஒரு பெருத்த தவறு நடந்துவிட்டது போலத் தோன்றுகிறது. எங்களுடைய நெருங்கிய பந்து ஒருவர் போலீஸ் ஸ்டேஷனில் அக்கிரமமாகச் சிறை வைக்கப்பட்டிருக்கிருர். அவர் தம்மைப் பார்க்க வரும்படி எனக்கு ஒரு கடிதம் அனுப்பினர். அந்தக் கடிதத்தை எடுத்துவந்த மனிதர் என்னை இங்கே அழைத்துக்கொண்டு வந்து, இதுதான் போலீஸ் ஸ்டேஷன் என்றும், இந்த அறைக்குள் அந்த உறவினர் இருக்கிருர் என்றும் சொல்லி என்னை உள்ளே அனுப்பினர். அவர் சொன்னதை நிஜமென்று நம்பி நான் இங்கே வந்துவிட்டேன். இந்த இடத்தைப் பார்த்தால், இது படுக்கையறை போலத் தோன்றுகிறது. தாங்கள் இன்னர் என்பதும் எனக்குத் தெரியவில்லை. தாங்கள் வேறே யாரோ ஒருவருடைய வருகையை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிகிறது. என்னை இதற்குள் அனுப்பிய மனிதர் இந்த அறையின் வெளிக்கதவை மூடித் தாளிட்டுக் கொண்டதாகவும் தெரிகிறது. தாங்கள் தயைசெய்து அந்த மனிதரைக் கூப்பிட்டுக் கதவைத் திறக்கச் செய்யுங்கள். நான் வெளியில் போகவேண்டும்" என்று நயமாகக் கூறினுள்.

அவளது சொற்களைக் கேட்ட இன்ஸ்பெக்டர் முற்றிலும் கபடமாகவும் குறும்பாகவும் மறுமொழி கூறத்தொடங்கி, "ஓகோ! அப்படியா சங்கதி! உன்னை இதற்குள் அனுப்பிய மனிதன் கதவை மூடி வெளியில் தாளிட்டுக் கொண்டானு! பேஷ்! அவன் செய்தது நமக்கு அநுகூலமான காரியந்தானே. அதைப்பற்றி சந்தோஷப்படுவதை விட்டு நீஏன் விசனப்படுகிருய்? புதிதாக சோபன அறைக்குள் நுழைகிற யௌவன ஸ்திரீகள் நிரம்பவும் லஜ்ஜைப்படுவார்க

றென்று நினைத்து வெளியிலுள்ள பந்து ஜனங்கள் இப்படித்தான் கதவை மூடிவைப்பார்கள். அதுவுமன்றி, பெண் நிரம்பவும் பிடிவாத குணமுடையதாயிருந்தால், அது கதவைத் திறந்துகொண்டு வெளியில் ஓடாமல் உள்ளேயே இருந்து புருஷருக்கு வசப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு வெளியில் ஜனங்கள் தாளிடுவது முண்டு. நீ எல்லா விஷயங்களையும் மறிந்த புத்திசாலியாக இருந்தும், இந்த அற்ப விஷயத்தை நீ தெரிந்து கொள்ளவில்லையா?" என்று சுலபமாகத் தமது கருத்தை வெளியிட்டு மறுமொழி கூறினர்.

அப்போதே தனது அபாயத்தை உணர்ந்த பெண்ணரசி அளவற்ற பிரமிப்பும், திகைப்பும், கலக்கமும் அடைந்து ஆத்திரப் பார்வையாக அவரை ஒருபார்வை பார்த்தாள். அவளது கண்கள் கோவைப் பழமாகச் சிவந்து போயின. கைகால்கள் முதலிய அங்கங்களெல்லாம் பதறி நடுங்கவாரம்பித்தன. அவள் மறுபடி கீழ்ப் பார்வையாக அவரை நோக்கி, "ஐயா! என்ன இது! நீங்கள் பேசும் மாதிரி நிரம்பவும் விநோதமாக இருக்கிறதே! நீங்கள் யாரென்பது எனக்குத் தெரியவில்லை. நான் யாரென்பது உங்களுக்கும் தெரியாது. நான் தவறுதலாக இந்த இடத்திற்குள் வந்துவிட்டதைக் கொண்டு, முற்றிலும் முகமறியாத, அன்னிய மனுஷியான என்னிடம் நீங்கள் இப்படித் தாறுமாறான வார்த்தைகளை உபயோகிப்பது நியாயமல்ல. நான் கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்த குலஸ்திரீ; உங்களுக்கு என்னைப்போன்ற தங்கைகளோ பெண்களோ இருக்கலாம். அவர்களிடம் அன்னிய புருஷர் இப்படி அவமரியாதையாக நடந்துகொண்டால், அதைக் கண்டு நீங்கள் சகித்திருப்பீர்களா? நீங்கள், வயதான தக்க பெரிய மனிதராகக் காணப்படுகிறீர்கள், உங்களுக்கெதிரில் வேறே யாராவது துஷ்டர்கள் அல்லது போக்கிரிகள் இம்மாதிரி ஒரு ஸ்திரீயிடம் அவமரியாதையாக நடந்துகொண்டால் அதைக்கண்டு நீங்கள் அவர்களைக் கண்டிக்க வேண்டியவர்கள். அப்படி இருக்க, நீங்களே இம்மாதிரி தகாத வார்த்தைகளை உபயோகிப்பது ஆச்சரியகாமாக இருக்கிறது. தயவுசெய்து முதலில் என்னை வெளியில் அனுப்பிவிட்டு மறுவேலை பாருங்கள்" என்று அழுத்தமாகவும் உறுதியாகவும் கூறினாள்.

அதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் சிறிதும் கிலேசம் கொள்ளாமல் மிகுந்த உருக்கமும் மன இளக்கமும் புன்னகையும் தோற்று

வித்து அவளை நோக்கி விளையாட்டாகப் பேசத்தொடங்கி, "அடி கோகிலா! நீ இப்போது என்னைப் பார்த்து ரொம்பவும் கோபமாகப் பேசினாயானாலும் உன்னுடைய குரலின் இனிமை வீணாகானம் போல என்னைப் பரவசப்படுத்திவிட்டது. கோகிலம் என்று உனக்குச் சரியான பெயரையே வைத்திருக்கிறார்கள். பெண்ணே! உன்னை நான் வைதேனா, தூஷித்தேனா, அல்லது கடிந்துகொண்டேனா, உன்னிடம் நான் பிரியந்தானே காட்டுகிறேன். நீ ஏன் இதற்குள் இவ்வளவு ஆத்திரப்பட்டுப் பேசுகிறாய்? நான் யார் என்பது உனக்குத் தெரியவில்லையென்பது நிஜமே. அதை நான் வெளியிடாமல் இருப்பேனா, உங்கள் குடும்பத்திற்கு ஏற்பட்டிருக்கும் இப்பேர்ப்பட்ட துன்பகரமான நிலைமையில் என் சிநேகம் உனக்குத் தானாக வந்து வாய்ப்பது பெருத்த அதிர்ஷ்டமென்றே நீ நினைத்து அதைப்பற்றி அளவற்ற சந்தோஷமடைவா யென்பது நிச்சயமான விஷயம். ஆனால் நீ நினைக்கிறதுபோல, உன்னை நான் அறிந்துகொள்ளாமல் இருக்கவில்லை. நீ துபாஷ் ராஜரத்தின முதலியாருடைய மூத்த பெண் கோகிலாம்பா ளென்பதை நான் நன்றாக அறிவேன். உன்னுடைய பெயரையும் குணாதிசயங்களையும் யோக்கியதையும் நான் நன்றாகத் தெரிந்துகொண்டே உன்னை இங்கே வரவழைத்தேன். ஆகையால், எனக்கு நீ முகமறியாத அன்னிய மனுஷியல்ல. அந்த விஷயத்தில் உனக்குக் கவலையே வேண்டியதில்லை. உனக்கு இப்போது சுமார் பதினாறு அல்லது பதினேழு வயசிருக்குமென்று நினைக்கிறேன். இவ்வளவு வயசுள்ள தங்கையையும் நான் படைக்கவில்லை. இவ்வளவு பெரிய பெண்ணைப் பெறவும் எனக்கு அவ்வளவு வயசாகவில்லை. நீ பேசுவதைப் பார்த்தால், எனக்கு அதிக வயசு ஆய்விட்டதென்று நீ எண்ணுவதுபோல இருக்கிறது. எனக்கு இப்போது சரியாய் முப்பது வயசுகூட ஆகவில்லை. உன்வயசுடைய பெண்களை நான் சம்சாரமாக வைத்து அனுபவிக்கத்தக்க விட புருஷனேயன்றி நீ எண்ணுகிறபடி நான் கிழவனல்ல. அதைப் பற்றியும் உனக்கு எள்ளளவும் கவலை வேண்டாம். அதுவுமன்றி, நீ தக்க கண்ணியமான குடும்பத்தைச்சேர்ந்த குலஸ்திரீ என்பது எனக்கு நன்றாகத் தெரியும். கேவலம் காசுக்குத் தங்களை ஆசையையும் தேகத்தையும் விற்கும் தாசிகளையும் வேசைகளையும் கண்டு ஆசைகொள்ளுகிறவர்கள் யாரென்றால், கொஞ்சமும் விவஸ்தையில்லாத தூர்த்தர்களே அப்படிச் செய்வார்களன்றி என்னைப் போன்ற கண்ணியமான குடும்பஸ்தர்கள் அப்படிச் செய்யமாட்

டார்கள். நீ எப்படி தக்க கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்த குலஸ்திரீயோ, அதுபோலு நானும் மரியாதைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த நிர்ணயந் தவருத ஆண்மகன். ஆகையால், எனக்கும் உனக்கும் சரியான பொருத்த மிருக்கிறதென்று கண்டே, நான் உன்னை இங்கே வரவழைத்தேன். ஆகையால் நீ எந்த வகையிலும் ஆட்சேபனை சொல்லு இடமில்லை" என்ருர்.

அதைக் கேட்ட பெண்மணி மிகுந்த கலக்கமும் திக்பிரமையும் கலவரமு மடைந்து தத்தளிக்கலானுள். தன்னை அவர்கள் வஞ்சித்து அவ்விடத்திற்கு அழைத்து வந்துவிட்டார்களென்ற நிச்சயம் உடனே அவளுக்கு ஏற்பட்டுவிட்டதானுலும், அவர்களது சூழ்ச்சிக்குக் கண்ணபிரான் இணங்கி எப்படிக் கடிதம் எழுதிக் கொடுத்திருக்கக்கூடும் என்ற சந்தேகமே எழுந்தெழுந்து வதைக்க வாரம்பித்தது. அதுவுமன்றி, அந்த மனிதர் அநேகமாய்ப் போலீஸ் இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தராகத்தான் இருக்கவேண்டும் என்ற எண்ணமும் உதித்தது. அத்தகைய துஷ்டரிடம் தனிமையில் அகப்பட்டுக் கொண்டிருந்த தான் அவ்விடத்திலிருந்து எவ்விதம் தப்பித்துப்போவது என்ற கவலையும் மலைப்பும் தோன்றி வதைக்கலாயின. அந்த அருங்குண மடந்தை தனது கடைக்கண் பார்வையை நாற்புறங்களிலும் செலுத்தி அந்த இடத்தின் அமைப்பை ஆராய்ச்சி செய்தாள். அது ஒரு பெட்டிபோல பந்தோபஸ்தாக அமைக்கப் பட்டிருந்தது. புஷ்பங்கள் நிறைந்த நேர்த்தியான பஞ்சணைக்கட்டில் ஒரு பக்கத்தில் போடப்பட்டிருந்தது. சுவர்களில் நிலைக்கண்ணாடிகளும், சிருங்கார ரஸத்தைக் காட்டிய ஏராளமான படங்களும் மாட்டப்பட்டிருந்தன. அறையின் மத்தியில் மேல் பாகத்தில் மின்சார விசிறியொன்று சுழன்று அந்த அறைக்குள் குளிர்ந்த இனிய காற்றைப் பரப்பிக்கொண்டிருந்தது. ஜன்னல்களின் கதவுகள் மூடித் தாளிடப்பெற்றிருந்தன. இன்னம், மேஜை நாற்காலிகளும் ஸோபாக்களும் பூத்தொட்டிகளும் மற்றும் பலவகைப்பட்ட அலங்கார வஸ்துக்களும் நிறைந்து கிடந்தன. தான் தப்பித்துப்போவதானுல், அந்த அறைக்கு முன்னுலிருந்த இரண்டாவது அறையின் வழியாகவே திரும்பிப் போவதைத் தவிர வேறு மார்க்கமில்லையென்பது கோகிலாம்பாளுக்கு உடனே விசிதமாயிற்று. அவ்வாறு தான் அபலையாய் அந்த இடத்தில் அகப்பட்டுக் கொண்டதைப்பற்றி அவள் அளவற்ற கலவர மடைந்தாளாளு

னும், தனது மனோதிடத்தை மாத்திரம் இழக்காமல் உறுதியாகவே இருந்து கீழ்ப்பார்வையாக அவரைப் பார்த்து மிருதுவாகப் பேசத் தொடங்கி, "நான் இங்கே வந்ததும், நீங்கள் என்னிடம் தகாதவிதமாய் நடந்துகொண்டதும் தற்செயலாய் நேரிட்ட தவறுகளென்று நான் இதுவரையில் எண்ணியது தப்பென்பது இப்போது நன்றாகத் தெரிந்துவிட்டது. போலீஸ் ஜெவான்கள் உங்கள் வீட்டு வாசலில் இருப்பதிலிருந்தும், போலீஸ் ஸ்டேஷனில் சிறைவைக்கப்பட்டிருக்கும் எங்கள் பந்துவினிடம் நீங்கள் கடிதம் வாங்கிக்கொண்டு வந்ததிலிருந்தும் நீங்கள் போலீஸ் இலாகாவைச் சேர்ந்த அதிகாரியாய்த்தானிருக்கவேண்டுமென்பதும் நிச்சயமாய் விளங்குகிறது. என் வருகையை நீங்கள் எதிர்பார்த்திருந்ததாகச் சொல்வதிலிருந்தும், உங்கள் மனிதன் எங்களிடம் சொன்னதெல்லாம் பொய்யென்பதும், நீங்கள் என்மேல் ஏதோ துர் ஆசை கொண்டு வேண்டுமென்றே சூழ்ச்சிசெய்து என்னை வரவழைத்திருக்கிறீர்களென்பதும் நன்றாகத் தெரிகின்றன. எங்களிடம் பொய்ச்சொல்லி எங்களை வஞ்சித்ததுபோல நீங்கள் உங்கள் வசத்தில் உங்கள் சிறைச்சாலையிலிருக்கும் எங்கள் பந்துவையும் நீங்கள் ஏமாற்றியே இந்தக் கடிதத்தை வாங்கிக்கொண்டு வந்திருக்கவேண்டுமென்று நான் உறுதியாக நம்புகிறேன். நான் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவேண்டுமென்று அவர்கள் ஒரு நாளும் எழுதியே இருக்கமாட்டார்கள். நீங்கள் ஏதோ தந்திரம்செய்து அவர்கள் எங்களுக்கு இம்மாதிரி கடிதம் எழுதியனுப்பும்படி செய்திருக்கிறீர்கள். நான் வந்தபோது வழியிலிருந்த போலீஸ் ஜெவான் எங்கள் வண்டிக்காரனைப் பிடித்துக் கொண்டுபோனது கூட, உங்களுடைய சூழ்ச்சியாகத்தானிருக்கவேண்டுமென்று நான் இப்போது எண்ணுகிறேன். எங்கள் பந்துவின் வீட்டில் தபால் திருட்டில் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் புதைக்கப் பட்டிருந்தனவென்று நீங்கள் கொண்டு வந்திருப்பதும் கற்பனையாகவே இருக்கவேண்டும். என்மேல் நீங்கள் கொண்டுள்ள துராசையை நிறைவேற்றும் கருத்தோடுதான் நீங்கள் எங்கள் பந்துவின்மேல் பொய்க் குற்றம் சுமத்தி நல்ல சமயத்தில் அவர்களைப் பிடித்துக்கொண்டுபோயிருக்கிறீர்கள்; போன இடத்தில் அவர்களைக் கடிதம் எழுதச் செய்து என்னை வருவிப்பது எளிதென்று எண்ணி நீங்கள் இவ்விதமானமுழுப்புரட்டில் இறங்கியிருக்கிறீர்கள். இப்போது எனக்கு எல்லாம் நன்றாக விளங்கிப் போய்விட்டது. ஆனாலும், இவ்வளவு தூரம் உங்களுடைய அதிகாரத்தையும் புத்தி

சாலித்தனத்தையும், உபயோகித்து வேலை செய்த நீங்கள் முக்கியமான ஒரு விஷயத்தை மாத்திரம் அலட்சியமாய் மதித்துவிட்டீர்கள். என்னுடைய மனவுறுதி எப்படிப்பட்டது என்பதையும், நான் உங்களுடைய கருத்திற்கு இசையத் தகுந்தவளா என்பதையும் நீங்கள் அறிந்துகொள்ளாமல், இவ்வளவு தூரம் வீண்பாடு பட்டதுதான் என் மனசில் சிரிப்பை உண்டாக்குகிறது. ஐயா! உங்களுடைய தந்திரமெல்லாம் கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்கிற தந்திரமேயன்றி வேறல்ல. என் விஷயத்தில் நீங்கள் கொண்டுள்ள கருத்து ஒரு நாளும் பலியாது. என்னைப் படைத்த ஈசுவரனே நேரில் வந்து அவருடைய வல்லமை முழுதையும் உபயோகப் படுத்தினலும், இந்த விஷயத்தில் என் மன உறுதியைமாற்ற அவரால் இயலாதென்று நான் துணிந்து சொல்லுவேன். நீங்கள் என்னைக் கண்ட துண்டமாய் வெட்டிச் சித்திரவதை செய்தாலும், நான் என் கற்பு நிலை தவறும்படியான காரியத்தை மன சாலும் எண்ணமாட்டேன். என் உயிரை வேண்டுமானுலும் நான் பரம சந்தோஷத்தோடு இழந்து விடுவேன்; என் கற்பை மாத்திரம் இழக்கமாட்டேன். இது சத்தியமான விஷயம். வீணுக நீங்கள் என்னை வதைப்பதனுலும், உங்கள் பொழுதைச் செலவழிப்பதனுலும் கடுகளவாவது உங்கள் எண்ணம் நிறைவேறப் போகிறதில்லை. தயவு செய்து என்னை வெளியில் அனுப்பிவிடுங்கள். கதவை அப்புறத்தில் தாளிட்டவர் கதவண்டையிலேதான் நிற்பாரென்று நினைக்கிறேன். தயவு செய்து அவரைக் கூப்பிடுங்கள்" என்று அழுத்தமாகவும் பணிவாகவும் கூறினள்.

அந்த மர்தரசியினது புத்திசாலித்தனமான யூகங்களையும், ஆணித்தரமான வாதங்களையும் கேட்ட இன்ஸ்பெக்டர் பராங்குசம் பிள்ளை முற்றிலும் பிரமித்துப் போனுரானுலும், அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், அவள் தனிமையில் வந்து தமது வசத்தில் அகப்பட்டுக்கொண் டிருந்தமையால், தாம் எப்படியாவது பலாத்காரம் செய்து அவளது தேகத்தைத் தமது வசப்படுத்தி விடலாமென்ற திடமான நினைவைக்கொண்டவராய், அந்த மடவன்னத்தை நோக்கி ஏளனமாகப் புன்னகைசெய்து, "கோகிலா! கதவை அப்புறம் தாளிட்டுக் கொண்ட கோவிந்தசாமி இப்போது கதவண்டை இருக்கமாட்டான். அவன் உன்னைக் கொண்டுவந்துவிட்ட பிறகு வேறொரு காரியத்தைக் கவனிக்கும்படி அவனிடம் நான்

சொல்லியிருந்தேன். ஆகையால், அவனாவது வேறே எவராவது இப்போது கதவைத் திறந்துவிட பக்கத்தில் இருக்க மாட்டார்கள். ஆகையால், நீ பிரியப்பட்டாலும் படாவிட்டாலும் குறைந்தது ஒரு நாழிகை நேரமாவது நீ என்னோடு இந்தப் படுக்கை யறையில் அவசியம் இருந்தே தீரவேண்டும். இந்தப் படுக்கை யறையில் ரதி தேவியைத் தோற்கச் செய்யும் அதியற்புதமான அழகு வாய்ந்த ஒரு பெண்ணுடன் நான் ஒரு நாழிகை நேரம் தனிமையிலிருந்தும், நான் அவளைச் சும்மா விட்டுவிடுவதென்றால், நான் ஆண் பிள்ளையிற் சேர்ந்தவனே யாகமாட்டேன். உன்னைப்போல முதலில் துள்ளிக் குதித்த பதிவிரதைகள் எத்தனையோ பேரை நான் பார்த்தாய் விட்டது. இப்படிப் பேசுவது பெண்பிள்ளைகளின் சாகஸங்களில் ஒன்றென்பதை நான் அநுபவத்தில் கண்டறிந்தவன். நீ எப்படி உன்னைப் படைத்த கடவுளே வந்தாலும், உன்னைச் சித்திரவதைச் செய்தாலும், உன் உயிரே போவதானாலும் என் கருத்திற்கு இணங்கிவரமாட்டாயென்று உறுதியாய்ச் சொல்லுகிறாயோ அதுபோலவே நானும் உனக்கு என் மனவுறுதியை எடுத்துச் சொல்லுகிறேன். இந்த அண்ட பிண்ட சராசரங்களெல்லாம் இடிந்து விழுந்தாலும், என்னைப் படைத்த கடவுளே வந்து குறுக்கிட்டாலும், என் கருத்து நிறைவேறாமல் தடைப்படப்போகிறதில்லை. உன் உயிர் இருந்தாலும், அல்லது போய்விட்டாலும், எப்படியும் நான் என் தீர்மானத்தை நிறைவேற்றியே தீருவேன். உன்னுடைய சரீரம் என்னுடைய ஆலிங்கனத்திற்கு வராமல் போகாது இது முக்காலும் திண்ணம். ஆனால், ஒரு விஷயம். ஸ்திரீகளின் தன்மையும் புஷ்பங்களின் தன்மையும் ஒரேவிதமானவை. புஷ்பங்களைக் கசக்கி முகர்ந்தால், நமக்கு எவ்வித சுகமுமுண்டாகாது; புஷ்பமும் நாசமாய்ப் போய்விடும். அதுபோல ஸ்திரீகளையும் அவர்களுடைய மனசு முறியாதபடி அடையவேண்டும். பலாத்காரத்தில் இறங்கினால், அது இருதிறத்தாருக்கும் நல்லதல்ல. அதை எண்ணியே நான் இவ்வளவு தூரம் பொறுமை பாராட்டுகிறேன். இல்லாவிடில் இந்நேரம் உன் கற்பெல்லாம் இருந்த இடம் தெரியாமல் பறந்துபோயிருக்கும். ஆனால், நீ என் விஷயத்தில் சில தப்பெண்ணங்கள் கொண்டிருக்கிறாயென்பது நன்றாகத் தெரிகிறது; உன்னை நான் அடையவேண்டுமென்ற கருத்தை, கண்ணபிரான் முதலியார் சிறைப்படுவதற்கு முன்பே கொண்டிருந்ததாக நீ நினைப்பது தப்பான யூகம். தபால் திருட்டில் சம்பந்தப்பட்ட

பொருள்கள் அவருடைய வீட்டில் புதைக்கப்பட்டிருந்தது போலீ சாரால் செய்யப்பட்டதல்ல. அதை அவரே செய்தாரோ, அல்லது, அவருடைய விரோதிகள் எவராவது செய்தார்களோ, அது எங்களுக்குத் தெரியாது. கண்ணபிரான் முதலியார் சிறைச்சாலைக்கு வந்தபிறகு, தாம் தப்ப வேறு வழி இல்லை என்று கண்டு, எப்படியாவது தம்மைத் தப்பவைத்தால், நாங்கள் எதைக் கேட்பதானாலும் அவர் கொடுப்பதாக வாக்களித்தார். அப்போது அங்கே இருந்த ஜெவானொருவன் அவரைப் பார்த்து "ஐயா! நீர் எதைவேண்டுமானாலும் கொடுப்பதாகச் சொல்லுகிறீரே நீர் இப்போது கலியாணம் செய்துகொள்ள எண்ணியிருக்கும்பெண்ணின்மேல் எங்களுள் ஒருவருக்கு ஆசை. நீர் ஒரு கடிதம் எழுதியனுப்பி அந்தப் பெண் அந்த மனிதருடைய வீட்டுக்கு வரும்படி செய்தால், நீர் தப்பும்படியான மார்க்கத்தை நாங்கள் செய்வோம்" என்றான். அதைக் கேட்டவுடனே அவர் முழுமனதோடு அந்தக் கடிதத்தை எழுதிக் கொடுத்தார். உங்களுடைய பங்களாவில் உன் தாயார், அவருடைய தாயார், இன்னும் உங்கள் உறவினர் முதலிய எத்தனையோ ஜனங்கள் இருக்கிறார்கள்; சாதாரணமாக அவர்தமக்கு ஒத்தாசைக்கு மனிதர் வேண்டுமென்ற கருத்தோடு எழுதி இருந்தால், பெரியவர்களுள் யாரையாவது அழைத்திருப்பாரே யன்றி, கலியாணம் ஆகாத யௌவனப் பெண்ணான உன்னை அழைத்திருக்க மாட்டார். அவர்களையெல்லாம் விட்டு உன்னை அவர் வரவழைத்ததிலிருந்தே அவருடைய உள்கருத்து உனக்குத் தெரியவில்லையா? அவர் இன்னொரு சங்கதியும் சொன்னார். நீ அவரிடம் அந்தரங்கமான பிரியம் வைத்திருக்கிறாயாம். அவர் உன்னுடைய உயிரை இரண்டு தடவைகளில் காப்பாற்றி விட்டாராம். அந்த உதவியை நீ மறக்கமாட்டாய் என்றும், செய்யாத எந்தக் காரியத்தையானாலும் செய்து அவரைக் காப்பாற்ற அவசியம் முன்வருவாயென்றும் அவர் உறுதியாக நம்பி இருக்கிறார். நீ இங்கே வந்தபிறகு, நாங்கள் சொல்வதை நீ உண்மையென்று நம்பாவிட்டால், உங்களுக்குள் ரகஸியமாக நடந்த ஒரு சங்கதியை அவர் அடையாளமாகச்சொல்லச் சொன்னார். நீ உங்கள் பங்களாவின் தோட்டத்தில் தனியாக ஊஞ்சற் பலகையில் உட்கார்ந்திருந்த சமயத்தில் அவர் பின்னாக வந்து உன்னைத் தூக்கி அப்பால் எடுத்துக்கொண்டு போய் உன்னைப் பாம்பு கடிக்காமல் காப்பாற்றினாராம். அதன்பிறகு நீயும் அவரும் கொஞ்சநேரம் தனிமையிலிருந்து செய்த லீலைகளையெல்லாம்

உனக்கு நினைவூட்டினால், நீ அந்தக் குறிப்பை உடனே அறிந்து கொள்ளுவாயென்றும் அவர் சொன்னார். உனக்கும் அவருக்கும் கலியாணம் நிறைவேறுவதற்கு முன்பே, நீ அவரிடம் அவ்வளவு தாராளமாய் நடந்துகொண்டவளாகையால், இந்த விஷயத்தைப் பற்றி உனக்கு அதிகமாய் எடுத்துச்சொல்ல வேண்டுவதில்லையென்றும், நீ உடனே குறிப்பை அறிந்துகொள்வாயென்றும் அவர் தெரிவித்தார். இப்போது உண்மையை உள்ளபடி தெரிந்துகொண்டாயா? இனி நீ எவ்வித ஆட்சேபமும் சொல்லாமல் என் கருத்துக்கு இணங்கி வருவாயென்று நினைக்கிறேன். தூர நிற்கவேண்டாம். என் கிட்டவா. நாமிருவரும் போய் நமக்காகக் காத்திருக்கும் கட்டிலின்மேல் உட்கார்ந்துகொண்டு சந்தோஷமாகப் பேசுவோம்'' என்று நிரம்பவும் நயமாகவும் உருக்கமாகவும் கூறினர்.

அவர் கூறிய சொற்களைக்கேட்ட பெண்ணரசி முற்றிலும் திகைப்பும் ஆத்திரமும் அடைந்து பதறி நின்றவண்ணம் அவரைப் பார்த்து, "ஐயா! நீங்கள் சொல்வது கேழ்வரகில் நெய் ஒழுகுகிறதென்ற கதைபோல இருக்கிறதன்றி வேறல்ல. நீங்கள் சொல்லும் கட்டுக் கதையை உண்மையென்று நம்பக்கூடிய பைத்தியக்காரி நானல்ல. கடவுள் இந்த உலகத்தில் உங்கள் ஒருவருக்குத்தான் பகுத்தறிவைக் கொடுத்திருப்பதாகவும், மற்றவரிடம் அது இராதென்றும் நீங்கள் நினைத்துப் பேசுகிறீர்கள்போலிருக்கிறது. நீங்கள் சொல்லும் விஷயத்தை என் வாயில் வைத்துப் பேசவே கூசுகிறதாகையால், அதைப்பற்றிவிரிவாகப்பேசநான் இஷ்டப்படவில்லை. இந்தப் படுமோசச் சூழ்ச்சியில் என் புருஷரும் சம்பந்தப்பட்டிருப்பதாக நீங்கள் சொல்வது முழுப்புரட்டு. அவர்கள் தங்களுடைய உயிர் போவதானாலும் இப்படிப்பட்ட மானக்கேட்டிற்கு இணங்கமாட்டார். நீங்கள் சித்திரவதை செய்ததினால் பயந்து அவர்கள் அப்படி ஏதேனும் தவறிச்சொல்லி இருந்தாலும், அது என்னைக் கட்டுப்படுத்தாது. ஒரு ஸ்திரீயைப் பார்த்து அவளுடைய கற்பை இழக்கும்படி கட்டளை இட, அவளுடைய தாய் தந்தையர்களுக்கும் அதிகாரமில்லை; அவளுடைய புருஷருக்கும் அதிகாரமில்லை; அவளைப் படைத்த கடவுளுக்குக்கூட அந்த அதிகாரமில்லையென்று நான் துணிந்து சொல்வேன். எங்கள் குடும்பத்தின் யோக்கியதையையும், என்னுடைய மனப்போக்கையும் தெரிந்துகொள்ளாமல் நீங்கள் கேவலம் தாசிவேசைகளிடம் நடந்து கொள்வதுபோல என்னி

டம் பேசுவது உங்களுக்குக் கொஞ்சமும் தகாது. இவ்வளவு தூரம் நீங்கள் பைத்தியக் காரத்தனமாய் நடந்து கொண்டதோடு நின்று விடுங்கள்; மேலும் அக்கிரமத்தில் இறங்கி வீண் கஷ்டங்களையும் அவமானத்தையும் அடையவேண்டாம். தயவு செய்து என்னை முதலில் வெளியில் அனுப்பிவிட்டு மறுவேலை பாருங்கள்" என்று நிரம்பவும் உறுதியாகவும் அலட்சியமாகவும் கூறினாள்.

இன்ஸ்பெக்டர் அவளைப் பார்த்து ஏளனமாகவும் கோபமாகவும் நகைத்து, "பேஷ்! பேஷ்! பலே! பெண் கெட்டிக்காரி? அடி கோகிலா! நீ எந்த தைரியத்தினால் என்னிடம் இப்படித் துணிந்து பேசுகிறாயென்பது தெரியவில்லை; யாரிடம் நீ இவ்வளவு துணிவாகப் பேசுகிறாயென்பதையும் நீ தெரிந்து கொள்ளாமல் நிரம்பவும் எடுப்பாகத் தூக்கி யெறிந்து பேசுகிறாய். நீ எவ்வளவுதான் கூச்சலிட்டாலும், அது வெளியில் கேட்கவே கேட்காது. இவ்விடத்தில் நீ வசமாக மாட்டிக்கொண்டிருக்கிறாய். அப்படி இருந்தும், நீ கேவலம் பெண்பிள்ளை என்பதை மறந்து பெரிய சிப்பாயிபோலப் பேச ஆரம்பித்து விட்டாய். ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து உன் மயிரைப் பிடித்து இழுத்துவந்து துச்சாதனன் செய்ததுபோல ஒரு நொடியில் உன்னை மானபங்கப்படுத்த எனக்கு வல்லமையுண்டு; நான் முன்னமே சொன்னது போல, தடியைக் கொண்டடித்துக் கனியவைப்பதைவிடத் தானாகவே கனியும்படி செய்வதே நலமானதென்ற ஒரு நினைவினாலேயே நான் இதுவரையில் பொறுத்து நின்றேன். நான் இப்போது முடிவாகவும் கடைசியாகவும் சொல்லி எச்சரிக்கிறேன். மரியாதையாக நீ வழிக்கு வரப்போகிறாயா? இல்லாவிட்டால், நான் என் பாணத்தைத் தொடுக்கலாமா? நான் ஒருவன்தானே இருக்கிறேனென்று நினைத்து நீ கடைசிவரையில் முரண்டலில் இறங்கி ஜெயித்துவிடலாமென்று நினைத்துக் கொண்டிருக்கலாம். அது வீண் எண்ணம். இந்த அறைக்கு வெளியில் பத்து ஜெவான்கள் இருக்கிறார்கள். அவர்களை ஏவினால், எமகிங்கரர்கள் போல எல்லோரும் வந்து உன் கைகளையும் கால்களையும் பிடித்து இழுத்துக் கட்டிலின் நான்கு கால்களிலும் இறுகக்கட்டி விடுவார்கள். அதற்குமேல் உன் நடலமெல்லாம் பலிக்காது. வீணாய் என் கோபத்தைக்கிளப்பிவிட்டு, நல்ல உடம்பைக் கெடுத்துக்கொள்ளாதே. நீ பேசும் மாதிரிலிருந்து, நீ நல்ல விவேகியென்று நான் யூகிக்கிறேன். ஆகையால், இந்த சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி

நீ புத்திசாலித்தனமாக நடந்துகொண்டு எங்களால் ஆகவேண்டிய காரியங்களை நிறைவேற்றிக்கொள். வீணாய்ப் பிடிவாதம் செய்து, நான் முரட்டுத்தனத்தில் இறங்கும்படி செய்யாதே" என்று கூறி அதட்டினர்.

அவரது சொற்களைக் கேட்ட கோகிலாம்பாள் சிறிதும் அச்சங்கொள்ளாமல், "ஐயா! நீங்கள் துச்சாதனனுடைய உபமானத்தைச் சொன்னது கும்பகர்ணன் நித்தியத்துவம் கேட்க எண்ணி நித்திரைத்துவம் கேட்டதுபோல் இருக்கிறது. நீங்கள் செய்யும் அக்கிரமத்தைக் கண்டிக்க இவ்விடத்தில் இப்போது யாரும் இல்லையென்கிற எண்ணத்தினல் நீங்கள் வீண் மமதைகொண்டு பேசவேண்டாம். சகலமான உலகங்களையும், அவைகளுள் அடங்கிய எல்லா ஜீவன்களையும் படைத்துக் காத்து அழிக்கிற கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன். அவர் எங்கும் நிறைந்திருந்து எல்லோருடைய செய்கைகளையும் பார்த்துக்கொண்டிருக்கிறார். நான் மனிதருடைய உதவி கிடைக்கமுடியாத இந்த இடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேனென்பது அவருக்கு நன்றாகத் தெரியும். நான் மனம் வாக்கு காயம் ஆகிய திரிகரண சுத்தியால் என் கற்பை இழக்க எண்ணாத பரிசுத்தமான மனுஷி என்பதும் அவருக்குத் தெரியும். அப்படி இருந்தும், என் விஷயத்தில் நீங்கள் அக்கிரமம் நடத்தும்படி அவர் விட்டுவிடுவாராளுல் அவருடைய சிருஷ்டி நீதியில்லாததும் கேள்வி முறையற்றதுமான சிருஷ்டியாய்விடும். அப்படி ஆகுமென்று நான் நினைக்கவே இல்லை. நான் எத்தனையோ பதிவிரதா ஸ்திரீகளின் கதைகளைப் படித்திருக்கிறேன். அவர்களெல்லோரும் இப்படித்தான் பயங்கரமான தனித்த இடத்தில் உங்களைப்போன்ற துஷ்டர்களிடம் அகப்பட்டுக் கொண்டதாகவும், முடிவில் வெகு சுலபமாகத் தப்பித்து நிஷ்களங்கமாய்ப் போனதாகவும் நான் படித்திருக்கிறேன். மேனகா, ஷண்முகவடிவு என்ற பெண்களின் கதையை நான் சமீபகாலத்தில் படித்திருக்கிறேன். அவைகளிலிருந்து நான் முக்கியமாகக் கற்றுக் கொண்ட படிப்பினை என்ன தெரியுமா? ஸ்திரீகள் திரிகரண சுத்தியாய்த் தம்முடைய கற்பைக் காப்பாற்றிக் கொள்ள எண்ணி அதே உறுதியாக இருக்கும் பட்சத்தில் இராவணனே வந்து அவர்களை எடுத்துப் போளுலும், அவர்களைக்கொண்டு

போய் இரும்புக் கோட்டைக்குள் சிறை வைத்தாலும், அவர்களுடைய கற்புக்குலையாமல் இருக்கும்படி கடவுள் ஏதாவது சூழ்ச்சி செய்வார் என்ற முக்கியமான படிப்பினையை நான் கற்றுக் கொண்டேன். அதுமுதல் என் கற்பைக் காப்பாற்றிக் கொள்வதைப் பற்றி நான் அதிகமாய்க் கவலைப் படுவதையே விட்டு விட்டேன். பெண்களுக்கு உறுதியான மனமொன்றே தேவை. மற்ற துணைக் கருவிகள் யாவும் தாமாகவே தோன்றுமென்பது மூக்காலும் திண்ணம். நீங்கள் சொன்ன துச்சாதனன் உபமானத்தில் அவனுடைய கருத்து எவ்வளவு தூரம் நிறைவேறியதென்பதை நீங்கள் அறிவீர்களென்று நினைக்கிறேன். ஆகையால், நீங்கள் வீணாய் மனப்பால் குடிக்கவேண்டாம். கற்பென்பது சர்வ வல்லமையுள்ள கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டுப் பாதுகாக்கப்படும் மகா பரிசுத்தமான ஒரு தெய்விக வஸ்து. அதை அழித்துக் கெடுக்க, உங்களைப் போன்றமனிதரால் ஆகுமென்று எண்ண வேண்டாம்'' என்றாள்.

உடனே இன்ஸ்பெக்டர் முன்னிலும் பன் மடங்கு அதிக ஆத்திரமும் ஆவேசமும் அடைந்து அவளை நோக்கிக் கோப நகை நகைத்து, ''அடி முட்டாளே! போ; உன்னுடைய புஸ்தகப் படிப்பை யெல்லாம் நீ என்னிடம் அளக்க ஆரம்பிக்கிறாயோ! அதற்கெல்லாம் இந்த சிங்கமா மசிகிறவன். பிரகலாதன் கம்பத்துக்குள்ளிருந்த நரசிங்கப் பெருமாளை வரவழைத்த கதையை யெல்லாம் சொல்லி நீ என்னை மிரட்டப் பார்க்கிறாயா? அதெல்லாம் பழைய காலத்துக் குப்பைகளென்பதை நான் அறிவேன். நீ சொல்லும் மேனகா பழங்களைச் சீவும் கத்தியை எடுத்து வைத்துக் கொண்டு தன்னைக் குத்திக் கொள்வதாகப் பயமுறுத்தினாள். அதைக் கண்டு அந்தப் பைத்தியக்கார சாயப்பு பயந்து ஏமாறி அவளை விட்டு விட்டான். நானாக இருந்தால் எங்கே, ''குத்திக்கொள், பார்க்கலாம்'' என்று சொல்லிக்கொண்டே அவளிடம் போயிருப்பேன். அவள் ஒரு நாளும் தன்னைக் குத்திக் கொண்டிருக்கவேமாட்டாள். நீ குறித்த ஷண்முக வடிவு பண்டாரத்தினிடம் அகப்பட்டுக் கொண்டபோது, அவளுக்குச் சிம்னி எண்ணெய் விளக்கொன்று அகப்பட்டது. அந்தமாதிரி விளக்கு இங்கே உனக்கு அகப்படாது. அந்தப் பெண்ணே எண்ணெயை ஊற்றிக் கொளுத்திக் கொண்டாளோ, அல்லது, அவள் உன்னைப்போல, அவனுடைய இஷ்டத்திற்கு இணங்காமல் பிடிவாதம் செய்ததால்,

"நமக்கு உபயோகப்படாதவள் எரிந்து போகட்டு மென்று அந்தப் பண்டாரமே அவள்மேல் எண்ணெயை ஊற்றிக் கொளுத்திப் பாயில் வைத்துச் சுற்றிக்கொண்டுபோய் எறிந்து விட்டு வந்தானே. நானாக இருந்தால், அப்படியேதான் செய்திருப்பேன். அடீ கோகிலா! நீ பேசும் முறுக்கைப் பார்த்தால், நீசுலபத்தில் வழிக்கு வரமாட்டா யெனத் தோன்றுகிறது. மயிலே மயிலே என்றால் அது இறகு போடாதுதான். இருக்கட்டும். அது இறகு போடும் படி நான் இதோ செய்கிறேன்" என்று கூறிய வண்ணம் அவளைப் பலாத்காரம் செய்யும் தீர்மானத்துடன் அவளை நோக்கி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தார். அதைக் கண்ட நமது மாதுசிரோன்மணி யான கோகிலாம்பாள் திரௌபதிதேவி, "ஆ! கிருஷ்ணா! துவாரகா வாசா!" என்று கண்ணபிரானைக் கூவியழைத்தது போலத் தன் மனத்திற்குள்ளாகவே, "ஐயோ! கடவுளே! இது முறையோ! இது உன் திருவுளத்திற்குச் சம்மதந்தானோ! சர்வேசுவரா! நீ தான் எனக்குப் புகலிடம்! உன் துணையின்றி எனக்கு வேறே யாரும் துணையில்லை. நீ விடுவதே வழி" என்று எண்ணிக் கடவுளை நினைத்து ஸ்தோத்திரம் செய்தபடி, அவ்விடத்தில் இருந்த சில பூத் தொட்டிகளுக்கு அப்பால் போய் நிற்க, இன்ஸ்பெக்டர் இரத்தங் குடித்த புலிபோல மூர்க்கமும் ஆவேசமும் காட்டி அவளைத் துரத்த வாரம்பித்தார்.

அந்த சமயத்தில், அந்த அறையில் கட்டிலிற்கு அப்பால் சுவ ரோரமாய்ப் போடப்பட்டிருந்த மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்த டெலிபோன் என்ற யந்திரத்தில் மணி கணகணவென்று அடித்துக் கொண்டது. அந்த ஓசையைக் கேட்ட இன்ஸ்பெக்டர் அளவற்ற கோபாவேசம் கொண்டவராய் உடனே சடக்கென்று நின்று, "இந்த எழவெடுத்த போலீஸ் கமிஷனருக்கு இதே வேலை; இவ னுக்குச் சமயம் தெரிகிறதில்லை, சந்தர்ப்பம் தெரிகிறதில்லை; எப் போதும் கூப்பிட்டுக் கொண்டேதா னிருப்பான். அவனுடன் நான் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருக்க இது சமயமல்ல. நான் இங்கே இல்லை என்று சொல்லிவிட்டு வந்துவிடுகிறேன்" என்று தமக்குத் தாமே எண்ணிக்கொண்டவராய் நமது கோகிலாம்பாளைப் பூத் தொட்டியண்டையிலே இருக்க விடுத்து, விரைவாக டெலிபோ னண்டை ஓடினார். ஓடினவர் அந்த யந்திரத்தை எடுத்து அதன் ஒரு பாகத்தைக் காதின்மேலும் இன்னொரு பாகத்தை வாய்க்கெதிரிலும் வைத்துக்கொண்டு அடியில் வருமாறு சம்பாஷிக்கத் தொடங்கினார்.

"யார் கூப்பிடுகிறது? ஓகோ! போலீஸ் கமிஷனர் ஆபிசிலிருந்தா பேசுகிறீர்கள்! நான் இன்ஸ்பெக்டருடைய வீட்டிலிருந்து பேசுகிறேன். இன்ஸ்பெக்டர் இப்போது வீட்டில் இல்லை. அவர் எங்கே போனுரென்பது தெரியவில்லை. நான் கோவிந்தசாமி அவர் வந்தவுடன், கமிஷனர் அவசரமாய் அழைத்ததாக அவசியம் சொல்லுகிறேன். வேறு விசேஷமில்லையே? போகலாமல்லவா?" என்று இன்ஸ்பெக்டர் சம்பாஷித்துவிட்டு அந்த யந்திரத்தைக் கீழே வைத்தார். அவர் சம்பாஷித்ததையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கோகிலாம்பாளினது மனத்தில் மின்னல் தோன்றுவதுபோல ஒரு யுக்தி தோன்றியது. அந்த அபாய சமயத்தில் தான் ஏதாவது தந்திரம் செய்தாலன்றி அந்த துராத்மாவிடத்திலிருந்து தான் தப்பித்துப் போவது துர்லபமென்று அந்த நற்குணவதி நினைத்தவளாய்த் தான் மறைந்துகொண்டிருந்த பூந்தொட்டிகளை விட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அறையோடு சேர்ந்தாற்போல இருந்த முன்னறைக்குள் ஓடி, இரண்டு அறைகளுக்கும் நடுவில் இருந்த கதவைச் சாத்தித் தானிருந்த பக்கத்தில் அவசரமாகத் தாளிட்டுக்கொண்டாள். அவ்வாறு அவள் செய்வாளென்று சிறிதும் எதிர்பார்க்காத இன்ஸ்பெக்டர் ஒருவித மனக்கலக்கமும் ஆத்திரமும் அடைந்தாராறுலும், கோகிலாம்பாள் எப்படியும் தமது வீட்டிற்குள் அகப்பட்டுக்கொண்டிருந்தமையால், தாம் உடனே அந்தக் கதவை நாதாங்கியை விட்டு அடியோடு கிளப்பி அப்பால் வைத்துவிட்டால், அவளை ஒரு நொடியில் பிடித்துக் குண்டுக் கட்டாய்க் கட்டித் தூக்கி வந்து கட்டிலின்மேல் போட்டுவிடலாம் என்று தீர்மானித்துக் கொண்டவராய் டெலிபோனை விட்டுக் கதவண்டை ஓடிவந்து அதை அசைத்துத் தூக்க முயன்றுர்.

அதற்குள் நமது கற்பிற்கரசி முன்பக்கத்திலிருந்த கதவண்டை ஓடி அதை இழுத்துப் பார்த்தாள். அது வெளியில் தாளிடப்பெற்றிருந்ததாகையால், திறந்துகொள்ளவில்லை. தன்னை உள்ளே அனுப்பினவனது பெயர் கோவிந்தசாமியென்பதை அவள் அதற்கு முன் இன்ஸ்பெக்டர் சொல்லத் தெரிந்துகொண் டிருந்தாளாகையால், அவள் தடதடவென்று விசையாகவும் ஆத்திரமாகவும் கதவைத் தட்டித் தனது குரலைத் தணிவுபடுத்திப் பேசத்தொடங்கி, "அப்பா! கோவிந்தசாமி! கோவிந்தசாமி!" என்று இரண்டு தடவை கூப்பிட்டாள். வெளியில் தயாராய் இருந்த கோவிந்த

சாமி, அவள் இன்ஸ்பெக்டருடைய பிடிக்கு அகப்படாமல் ஓடி வந்து தட்டுகிருளென்று முதலில் நினைத்தானுனாலும், அவள் கூப்பிட்ட மாதிரி அவனது மனத்தில் ஒருவித சந்தேகத்தை யுண்டாக்கியது. ஆகவே, அவன் உடனே கதவண்டை நெருங்கி நின்று பலகைகளின் இடுக்கில் வாயை வைத்து மெதுவாய், "ஏனம்மா கூப்பிடுகிருய்? என்ன விசேஷம்?" என்ருன்.

உடனே கோகிலாம்பாள் பதை பதைப்பாகவும் அவசரமாகவும் பேசத்தொடங்கி, "அப்பா கோவிந்தசாமி! இன்ஸ்பெக்டருக்கு இப்போது டெலிபோனில் சங்கதி வந்தது. ஏதோ தலைபோகிற காரியமாம். போலீஸ் கமிஷனர் இவரையும்கூட அழைத்துக்கொண்டு உடனே எங்கேயோ போகவேண்டுமாம். அதற்காக அவர் தம்முடைய ஆபீசை விட்டுப் புறப்பட்டு மோட்டார் வண்டியில் இங்கே வந்துகொண்டிருக்கிருராம். யாரோ ஒரு குமாஸ்தா இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு இந்தச் சங்கதியைச் சொன்னூர். அநேகமாய் இன்னம் கால் நாழிகையில் போலீஸ் கமிஷனர் இங்கே வந்து விடுவாராம். வந்தால் வெளியில் இருக்கும் ஜெவான்கள் பயந்து அவரை உள்ளே விட்டாலும் விட்டுவிடுவார்களாம். இன்ஸ்பெக்டரும் நீயும் வீட்டில் இல்லை யென்றும், எங்கேயோ போயிருப்பதாகவும் போலீஸ் கமிஷனருக்குத் தகவல் கொடுத்து அவரை அனுப்பிவிட வேண்டுமாம். கதவைத்திற என்று நிரம்பவும் படபடப்பாகவும் அவசரத்தைக் காட்டியும் கூறினுள். கோவிந்தசாமி அந்த வரலாற்றை உண்மையென்று நம்பி உடனே தாழ்ப்பாளை விலக்கிக் கதவைத் திறந்துவிட, பெண்ணரசி சரேலென்று வெளியில் வந்து நிரம்பவும் ரகஸியமாய் அவனுடன் பேசத்தொடங்கி, "போலீஸ் கமிஷனர் வந்துவிட்டுப் போகிறவரையில் ஐயா உள்ளேயே இருக்கப்போகிருராம். இந்தக் கதவைத் தாளிட்டு வெளியில் உடனே பூட்டிக்கொண்டு நீ எங்கேயாவது போய்க் கொஞ்ச நேரம் ஒளிந்திருந்துவிட்டு வரும்படி ஐயா உன்னிடம் சொல்லச்சொன்னுர். நான் உடனே கீழே போய் அங்கே இருக்கும் பாராக்காரர்களை எச்சரித்துவிட்டு, எங்கேயாவது மறைந்து கொள்ளுகிறேன்" என்று கூறியபடி மெத்தைப்படியை நோக்கி விசையாக நடக்கலானுள். அவள் கூறியது முழுதும் மெய் போலவே இருந்த தாகையால், கோவிந்தசாமி உடனே அந்தக் கதவைச் சாத்தி வெளியில் தாளிட்டுக்கொண்டு, பூட்டை எடுத்து வருவதற்காக முயன்றவன், "அம்மா! கீழே போக உங்களுக்கு வழி தெரியுமா? நானும் வரவேண்டுமா?" என்ருன்.

உடனே கோகிலாம்பாள், "எனக்கு வழி நன்றாக ஞாபகமிருக்கிறது. நீ முதலில் பூட்டை எடுத்து வந்து இந்தக்கதவைப் பூட்டு" என்று மறுமொழி கூறியபடி மெத்தைப்படிகளின் வழியாய்த் தடதடவென்று கீழே இறங்கி அவனது திருஷ்டியில் படாமல் மறைந்துபோய்விட்டாள். உடனே கோவிந்தசாமியும் பூட்டிருந்த இடத்தை நோக்கி ஓடிவிட்டான்.

கோகிலாம்பாள் தலைகால் தெரியாமல் ஒரு தாவில் இரண்டு மூன்று படிகள் வீதம் பாய்ந்து இரண்டே நிமிஷத்தில் கீழே இறங்கி விட்டாள். இன்ஸ்பெக்டர் ஒருகால் கூச்சலிட்டு கோவிந்தசாமியை அழைத்து உண்மையை வெளியிட்டு உடனே கதவைத் திறக்கச் செய்கிறாரோவென்ற நினைவும், அவர்கள் தன்னைத் தொடர்ந்து துரத்திக்கொண்டு ஓடிவருகிறார்களோ என்ற கிலியும் நடுக்கமும் அவளை ஒரே தள்ளாகத் தள்ளிக்கொண்டு வந்தமையால், அந்த இரண்டு நிமிஷமும் அவளது மனம் விவரிக்க இயலாத நரக வேதனையை யடைந்த தென்றே கூறவேண்டும்.

அவ்வாறு ஒரே ஓட்டமாக ஓடிக் கீழே இறங்கிய பெண்மணி அந்த மாளிகையின் முன் வாசலை அடைந்தாள். அவள் கோவிந்தசாமியோடு வந்த காலத்தில் நின்ற இரண்டு ஜெவான்களும் முன் போலவே அவ்விடத்தில் இருந்தனர். தான் உள்ளே இருந்து தப்பி ஓடிவந்து விட்டதைக் குறித்து அவர்கள் சிறிதும் சந்தேகம் கொள்ளாதபடி நமது கோகிலாம்பாள் அவர்களண்டை சென்று, "போலீஸ் கமிஷனர் அவருடைய கச்சேரியிலிருந்து மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு ஓர் அவசரகாரியமாய் இங்கே வருவதாக டெலிபோனில் செய்தி வந்தது. அவர் வரும் போது நான் உள்ளே இருப்பது சரியல்லவாம்! அதற்காக என்னை வெளியில் அனுப்பிவிட்டார்கள்; போலீஸ் கமிஷனர் இங்கே வந்து கேட்டால், இன்ஸ்பெக்டர் வீட்டில் இல்லை யென்று சொல்லி விடுங்கள்" என்று கூறியவண்ணம், தனது பார்வையை நாற்புறங்களிலும் செலுத்தித் தங்களது பெட்டிவண்டி எங்கே யாகிலும் இருந்ததோவென்று ஆராய்ச்சி செய்தாள். சிறிது தூரத்துக்கப்பால் பெட்டிவண்டி விடப் பட்டிருந்ததன்றி, குதிரையும் தனியாகக் கட்டப் பட்டிருந்தது. வண்டியின் பின் பக்கத்துப் பலகையின்மேல் காசாரி ஒருவன் படுத்துக் கொண்டிருந்ததையும்

உடனே கண்ட பெண்ணரசி ஓட்டமாக வண்டியண்டை ஓடினாள். அவள் கூறிய வரலாற்றை உண்மையென்றே நம்பிய ஜெவான்கள் இருவரும் போலீஸ் கமிஷனர் வரப்போகிறார் என்ற அச்சங்கொண்டு தமது உத்தியோக முறைமைப்படி ஒழுங்காகவும் விறைப்பாகவும் ஜாக்கிரதையாகவும் நிற்பதிலேயே தமது கவனத்தை செலுத்தினராதலால், கோகிலாம்பாள் வண்டியண்டை சென்றதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. அடுத்த நிமிஷம் அந்த அணங்கு பெட்டி வண்டியண்டை சென்று, "அடே யார் படுத்திருக்கிறது? என்று மிருதுவாகவும் விரைவாகவும் கூப்பிட, உடனே மினியன் திடுக்கிட்டு எழுந்து, "சாமி! நான்தான் மினியன் சாமி! வண்டி போடட்டுமா?" என்றான். முருகேசன் நடுவழியில் போலீஸ் ஜெவானால் அழைத்துக்கொண்டு போகப்பட்டானென்ற நினைவு அவளுக்கு நன்றாக இருந்ததாகையால், அங்கே படுத்திருந்தவன் அநேகமாய்ப் போலீஸ் இன்ஸ்பெக்டருடைய காசாரியாகத்தான் இருக்க வேண்டுமென்று நினைத்ததற்கு மாறாக, அவன் தங்கள் மினியனாக இருந்ததைக் காணவே, கோகிலாம்பாள் மிகுந்த ஆச்சரியமடைந்தாளானாலும், அவன் அவ்விடத்திற்கு வந்த வரலாற்றை அப்போது கேட்டுக்கொண்டிருப்பது உசிதமான காரியமல்லவென்று நினைத்து அவனை நோக்கி, "ஓகோ மினியனா! சரி; நாம் அவசரமாய்ப் போக வேண்டும். இங்கே ஒரு நிமிஷங்கூட இருக்கக்கூடாது. குதிரையை சீக்கிரம் பூட்டு" என்று அவசரத்தைக் காண்பித்து மொழிந்தாள்.

அவளது சொற்களைக் கேட்ட மினியன் மிகுந்த ஊக்கமும் துடிதுடிப்பும் அடைந்து, ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து குதிரையின் கட்டை அவிழ்த்து, அதை வண்டிக்குப் பக்கத்தில் கொணர்ந்து வண்டியை ஒரே நொடியில் ஆயத்தப்படுத்தி அதன் ஒரு பக்கத்துக் கதவைத் திறந்துவைத்து, "ஏறுங்க சாமி" என்று பணிவாகக் கூறினான். உடனே கோகிலாம்பாள் விசையாகச் சென்று வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு, தான் இருந்தது எவருக்கும் தெரியக்கூடாதென்ற நினைவினால் இரண்டு பக்கத்து ஜன்னல் கதவுகளையும் நன்றாக இழுத்து மறைத்துக்கொண்டு, "சரி; சீக்கிரமாக பங்களாவுக்கு ஓட்டு" என்று மினியனைப் பார்த்துக் கூறினாள். அவனும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தனது ஆசனத்தில் ஏறி உட்கார்ந்து குதிரையின் கடிவாள வாரையும் சவுக்கையும் தனது கைகளில்

பிடித்துக்கொண்டு குதிரையை விசையாக ஊக்க, அது உடனே ஓட வாரம்பித்தது. அதை உணரவே, கோகிலாம்பாளுக்கு அப்போதே உயிர் திரும்பத்தொடங்கியது. அதுவரையில் வெடவெடவென்று நடுங்கிக்கொண்டிருந்த அந்த மடந்தையின் கைகால்கள் முதலிய அங்கங்களெல்லாம் அப்போதே ஒருவாறு அமைதியடைய வாரம்பித்தன. பெருத்த கிலியினாலும், ஆத்திரத்தினாலும், கவலையினாலும், அவமானத்தினாலும் பதறிக் கொந்தளித்துத் தவித்துக் கொண்டிருந்த அவளது மனம் சிறிதளவு அவளது கட்டிலடங்கி வரத் தொடங்கியது. கால் நாழிகை காலத்தில் வண்டி இரண்டு மூன்று தெருக்களின் முடக்குகளில் திரும்பிப்போனதை உணர்ந்த கோகிலாம்பாள் அதற்குமேல் தனக்கு எவ்வித அபாயமும் நேராதென்றும், அந்தப் போலீஸ் அதிகாரி அதற்குமேல் தன்னை உபத்திரவிக்க முடியாதென்றும் நினைத்துத் தன் மனத்தை நிரம்பவும் தேற்றித் துணிவடைந்தவளாய், ஜன்னலின் கதவிடுக்குகளால் வண்டியின் மூன்று பக்கங்களிலும் தனது பார்வையைச் செலுத்தி வண்டிக்கருகில் யாரும் வரவில்லையென்பதைக் கண்டு உடனே மினியனை நோக்கி, "அடே மினியா! முருகேசனைப் போலீஸ் ஜெவான் அழைத்துக்கொண்டு போனானே; அவன் பங்களாவுக்கு வந்து சேர்ந்தானா? நீ இங்கே எப்படி வந்தாய்?" என்று வினவினாள்.

அதைக் கேட்ட மினியன், "சாமீ! நானு சொந்த அலுவலா ஆனைகவுனியண்டெ வந்தேனுங்க. நம்ப முருகேஸனைத் தாணாக்காரன் இட்டுக்கினு போனத்தை நானு தூரத்திலெ இருந்து பாத்தேனுங்க. வண்டியெ அப்பாலெ இப்பாலெ நவத்தி ஓட்டி இருப்பான், அதுக்காவ தாணாக்காரன் புடிச்சுக்கினு போறான்னு நெனெச்சிக்னேன். உள்ளற எஜமான் இருந்தத்தெப் பாத்தேன். வண்டியை ஓட்ட யாரும் காசாரி இல்லியேன்னு நெனெச்சு நானு நம்ப வண்டிக்கிப் பின்னாலெயே ஓடியாந்தேனுங்க. எப்படி ஓடியாந்தும் வண்டியெப் புடிக்க முடியல்லீங்க. கடெசியா எஜமான் ஒரு ஊட்டண்டெ வண்டியெ நிறுத்தி, எறங்கி உள்ளற போனத்தை நான் தெருக்கோடியெ இருந்து பார்த்தேனுங்க. அந்த அடையாளத்தைப் புடிச்சிக்கினு வண்டியண்டை வந்து சேந்து எஜமான் வாறந்தனியும் அப்பிடியே வண்டியிலெ குந்திக்கினு இருந்தேனுங்க. எஜமானும் வந்தீங்க. அம்பிட்டுத்தான் சங்கதிங்க" என்றான்.

அதைக் கேட்ட கோகிலாம்பாள், "ஓகோ! அப்படியா அதுவும கடவுள் கிருபைதான்! நல்லது. அதிருக்கட்டும். முருகேசன் வலது பக்கமாய் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்ததாகப் போலீஸ் ஜெவான் மிரட்டி அவனை ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போனானே. அங்கே அவனை அவர்கள் என்ன செய்வார்கள்?" என்று மிகுந்த கவலையோடு வினவினாள்.

உடனே மினியன் அலட்சியமாகப் பேசத்தொடங்கி, "அவுங்க என்ன பண்ணப் போறாங்க. வண்டி வலது பக்கமாக வந்துட்டா, அதுக்குள்ளற அந்த ஜெவானுக்குக் குடி முழுகிப் பூட்டுதுபோ லிருக்குது. முருகேசனை இட்டுக்கினு போயி அவன் தலையெச் சீவிப்புடப் போறதில்லே. ஏதாச்சும் ஒரு ரூவா அரை ரூவாக்காசு அவதாரம் போடப் போறாங்க. அதுக்குமேலே ஒண்ணும் செய்யப் போறதில்லீங்க. இல்லாமெப்போனா முருகேசன் கெட்டிக்காரனா யிருந்தா, ஒரு ரெண்டணாவை எடுத்து அந்தத் தானுக்காரன் சோப் பியிலே சொருவிப்புட்டா ஒடனே ஓடியாந்துள்ளாம்" என்றான்.

அதைக் கேட்ட கோகிலாம்பாள் மிகுந்த இரக்கமும் கவலையும் காட்டி, "அடே மினியா! அவனிடத்தில் சில்லரைக்காசு இருக் குமோ இருக்காதோ. அவன் அபராதத் தொகையைச் செலுத்த முடியாமல் கஷ்டப் படுவான். நாம் அவனைக் கவனிக்காமல் அலட் சியமாய் இருப்பது சரியல்ல. சீக்கிரமாக வண்டியைப் பங்களா வுக்கு ஓட்டி என்னை அங்கே கொண்டுபோய் விட்டு, நீ கொஞ்சம் பணத்தை எடுத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் அபராதம் செலுத்தி அவனை அழைத்துக் கொண்டு வந்து சேர்" என்றாள்.

அதைக்கேட்ட மினியன், "அப்படியே ஆவட்டுங்க எசமான். இதோ வேகமா ஓட்டறேனுங்க. ஆனா, நாம்ப போற ரஸ்தாவெல் லாம் ரிப்பேரு பண்ணறாங்களாம். மூங்கலெக் கட்டிக் குறுக்கே மறைச்சிக்கிருங்க. அதனாலே தான் அப்பாலே இப்பாலே இருக் கற ரஸ்தாவிலேபோயி சுத்திக்கினுவாறேன். இருந்தாலும் பரவா யில்லீங்க நாம்ப கடியப் பூட்லாமுங்க. முருகேசனை இதுக்குள்ளற தானாவுலே என்னா பண்ணிப்புடப் போறாங்க. அதெல்லாம் கெடு தல் எதவும் நடக்காதுங்க, நானு சணநேரத்துலே போயி அவனெ இட்டாறேனுங்க. எசமானுக்கு அந்தக் கவலெ வாணாங்க" என்று

கூறிய வண்ணம் குதிரையை நன்ருக அதட்டி ஓட்ட வாரம்பித் தான்.

அவன் கூறிய சொற்களைக் கேட்ட பெண்மணி வண்டி சீக்கிரம் பங்களாவை யடைந்து விடுமென்றும், உடனே மினியன் போய் முருகேசனை அழைத்துக்கொண்டு வந்து விடுவானென்று நினைத்துத் தன் மனத்தை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டாள். முருகேசனைப் பற்றி அவளது மனத்தை வதைத்துக் கொண்டிருந்த கவலை உடனே விலகியது. விலகவே, அந்த மடைந்தையின் மனம் தனது நிலைமையைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து போயிற்று. தனது ஆருயிர் மணாளனை கண்ணபிரான் அப்போது எவ்விடத்தில் என்ன நிலைமையில் இருக்கிருனே வென்றும், அவனைத் தான் காண இயலாமல் போய் விட்டதே என்றும், தான் புறப்பட்டு வர வேண்டுமென்று அவன் கடிதம் எழுதியனுப்பியதன் கருத்து எதுவாக இருக்குமென்றும் அந்தப் பெண்மணி பலவாறு எண்ணத் தொடங்கினுள். போலீசார் கண்ணபிரானை எவ்வளவுதான் வஞ்சித்திருந்தாலும், அல்லது, வதைத்திருந்தாலும், அவர்களது கேவலமான துர் எண்ணத்திற்கு அவன் இணங்கி இருப்பானு என்ற சந்தேகமே அடிக்கடி தோன்றி அவளது மனத்தைக் கப்பிக்கொண்டு புண்படுத்தலாயிற்று. தான் அவனுடன் நெருங்கிப் பழகிய சொற்ப காலப் பழக்கத்திலிருந்து, அவன் மானமும், ஆண்மையும், வீரத் தன்மையும் பூர்த்தியாக வாய்ந்தவனென்ற அபிப்பிராயமே அவளது மனத்தில் பதிந்துபோ யிருந்ததாகையால், அவன் தனது உயிரே போய்விடுவ தாளுலும் போலீசாரது கபடக் கருத்திற்கு இணங்கி இருக்கமாட்டானென்றும், அவர்கள் ஏதோ தந்திரம் செய்து அவ்வாறு கடிதம் எழுதி வாங்கி யனுப்பியிருக்க வேண்டுமென்றும் நமதுபெண்ணரசியான கோகிலாம்பாள் தனக்குத்தானே நிச்சயித்துக் கொண்டாள். அதுவுமன்றி, தன்னை அவ்வாறு வஞ்சித்து அழைத்துவர ஏற்பாடு செய்திருந்த மனிதர் கண்ணபிரான் அடைபட்டிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குரிய போலீஸ் இன்ஸ்பெக்டர் என்பதையும் அவள் யூகித்து நிச்சயித்துக் கொண்டாள். கண்ணபிரான் எழுதியனுப்பின கடிதத்தில், ஒரு முக்கியமான அதிகாரியின் அநுதாபமும், உதவியும் தனக்குக் கிடைத்திருப்பதாய் அவன் எழுதி இருந்ததைப் படித்த போதே அந்த மடந்தைக்கும் பூஞ்சோலை யம்மாளுக்கும் அது போலீஸ் இன்ஸ்பெக்டராகத்

தான் இருக்க வேண்டு மென்ற எண்ணம் உண்டாயிற்று. ஒரு சப் இன்ஸ்பெக்டருடைய தயவு அவனுக்குக் கிடைத்திருந்தால், அவன், "இந்த ஸ்டேஷன் அதிகாரியின் உதவி எனக்குக் கிடைத் திருக்கிற" தென்று எழுதி இருப்பான். போலீஸ் கமிஷனரோ ஸ்டேஷன்களுக்கு அதிகமாய் வருவதுமில்லை; கைதிகளோடு நெருங் கிப் பழகுவதுமில்லை. அதுவுமன்றி, அவர் வெள்ளைக்காரதுரை. கருப்பு மனிதர்கள் அபாரமான செல்வாக்கும் செல்வமும் வாய்ந்த வரா யிருந்தாலன்றி மற்றவருக்கு அத்தகை பெருத்த பதவியிலுள்ள துரைகளின் நெருங்கிய பழக்கமும் நட்பும் உதவியும் கிடைப்பது அரிதாதலால், கண்ணபிரானுக்குப் பழக்கமான முக்கிய அதிகாரி போலீஸ் கமிஷனருமன்று, சப் இன்ஸ்பெக்டருமன்று; அநேகமாய் அவர் பெரிய இன்ஸ்பெக்டராய்த்தா னிருக்கவேண்டுமென்று தாயும் மகளும் ஆரம்பத்திலேயே சந்தேகித்தனர். கோகிலாம் பாளின் மனத்திலிருந்த அந்த சந்தேகம் வேறு இரண்டு மூன்று விஷயங்களினால் நிச்சயப்பட்டது. கோவிந்தசாமி தன்னை அழைத் துச் சென்ற மாளிகை பிரம்மாண்ட மானதாக இருந்ததோடு அதன் வாசலில் ஜெவான்கள் பாராக்கொடுத்து நின்றனர். பிறகு தான் உட்புறத்தில் இருந்த காலத்தில் டெலிபோன் சம்பாஷணையில் அந்த மனிதர் தாம் போலீஸ் இன்ஸ்பெக்டரது வீட்டிலிருந்து பேசுவதாகவும், ஆனால் போலீஸ் இன்ஸ்பெக்டர் அப்போது வீட் டில் இல்லையென்றும், தமது பெயர் கோவிந்தசாமி யென்றும் மறு மொழி தெரிவித்தாரல்லவா? அதிலிருந்து, அந்த வீடு போலீஸ் இன்ஸ்பெக்டருடைய தென்பது சந்தேகமறத் தெரிந்தது. அந்த வீட்டிலிருந்த அவ்வளவு சிரேஷ்டமான சயன அறையை அவ்வளவு தாராளமாகவும் உரிமையோடும் கிலேசமின்றியும் உபயோகித்துக் கொண்டவர் இன்ஸ்பெக்டராகத்தான் இருக்கவேண்டும் என்ற நிச்சயம் ஏற்பட்டது. அதுவுமன்றி, தன்னை அழைத்துவந்து அறைக்குள் அனுப்பிவிட்டு வெளிக்கதவைத் தாளிட்டுக்கொண் டவனது பெயர் கோவிந்தசாமியென்று முதலில் அந்த மடந்தை யிடம் கூறிய மனிதர் பிறகு டெலிபோனில் தாமே கோவிந்தசாமி யென்று கூறியதிலிருந்து, தாம் இன்னாரென்பதை உள்ளபடி வெளியிட அவர் விரும்பவில்லை யென்பதும், அவரே இன்ஸ்பெக்ட ராக யிருந்தாலன்றி மற்றவர் அவ்வாறு தமது பெயரை மறைக்க வேண்டிய அவசியமில்லையென்பதும் நமது பெண்மணிக்கு நன்றாக விளங்கின. அதுவுமன்றி, அவரது கம்பீரமான தோற்றம் அமர்த்த

லான நடத்தை, எடுப்பான நடைநொடி பாவனைகள் முதலியவை களும் அவர் உத்தியோக அதிகாரத் திமிர் கொண்டவர் என்பதைத் தெள்ளிதில் காட்டினவராதலால், மகா கூர்மையான பகுத்தறிவைப் பெற்றிருந்த கோகிலாம்பாள் தன்னிடம் துராகிருத நினைவைக் கொண்டு பலாத்காரத்தை. உபயோகிக்க முயன்ற மனிதர் போலீஸ் இன்ஸ்பெக்டரே என்று உறுதியாக நிச்சயித்துக்கொண்டாள். அதுவுமன்றி, அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டர் தன்மீது துர்மோகம் கொண்டிருந்தது பற்றியே, கண்ணபிரானின் மீது பொய்க்குற்றம் நிர்மாணித்து அவனைக் கைதி யாக்கிக்கொண்டு போனதுமன்றி, அவனிடம் கடிதம் பெற்று அதைக்கொண்டே தன்னையும் வஞ்சித்திருக்கிறாரென்றும் அவள் நிச்சயமாக நம்பினாள். ஆனால், அந்த இன்ஸ்பெக்டரைத் தான் அதற்குமுன் பார்த்ததாகவே நினைவில்லையாதலால், அவர் எப்போது தன்னைப் பார்த்து அவ்விதமான துராசை கொண்டிருப்பாரென்ற சந்தேகமும் வியப்பும் தோன்றித் தோன்றி மறைந்துகொண் டிருந்தன. அப்போது காலை சுமார் பத்துமணி சமயமாயிருந்தது. அவள் அன்றையதினம் காலையில் எவ்வித ஆகாரமும் உண்ணாமல் புறப்பட்டுச் சென்றாளாதலால், ஆகாரமின்மையால் ஏற்பட்ட தேக அயர்வும் முகவாட்டமும் ஒருபுறம் இருக்க, திடீரென்று தான் தனது கற்பை இழப்பதான பிரமாண்டமான அபாயத்தில் அகப்பட்டுக் கொண்டதனால் ஏற்பட்ட பெருந் திகில், குலை நடுக்கம், அதன்பிறகு அவ்விடத்திலிருந்து தான் தப்பித்துக்கொண்டு வருவதற்குத் தான் செய்த தந்திரம் பலிக்காமல்போய்விடப் போகிறதே என்ற பேரச்சம், மன அலட்டல் முதலிய பலவகைப்பட்ட பலமான உணர்ச்சிகள் ஒன்று கூடி அந்த மின்னாளை நெடுநேரமாக வதைத்து விட்டமையால் அவள் முற்றிலும் சோர்ந்து தளர்ந்து வாடித்துவண்டுபெட்டிவண்டியில் அப்படியே சாய்ந்துகொண்டாள். அவளது கண்கள் தாமாகவே மூடிக்கொள்வதும் திறந்துகொள்வதுமாயிருந்தன. மூளையும் சிரமும் மயங்கிச் சுழன்றவண்ண மிருந்தன. ஆகவே, அந்த அருங்குண நங்கை வண்டி எந்தத் திக்கில் சென்றது, அல்லது, எந்தத் தெருவில் சென்றது என்பதையும் சிறிது கவனியாமல் வேதனைக் கடலில் மூழ்கியிருந்தாள். அதுவுமன்றி, மினியன் என்ற காசாரி அவர்களிடம் அந்தரங்கமான பயபக்தி விசுவாசம் உடைய உண்மையான வேலைக்காரனாதலால், அவன் தன்னிடம் கபடமாக நடந்து கொள்ளுகிறானென்பதையாவது, அவனும் கோவிந்தபுரம்

இளைய ஜெமீந்தாரும் சேர்ந்து கொண்டு தன்னைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டரது மாளிகைக்கு வந்திருப்பார்களென்றாவது அந்த அணங்கு கனவிலும் சந்தேகிக்க ஏதுவில்லாதிருந்தமையால், ஒரு வஞ்சக வலையிலிருந்து தப்பி வந்த தன்னை மறுபடி வீழ்த்த இன்னொரு வஞ்சக வலை விரிக்கப் பட்டிருக்குமென்பதை அவள் சிறிதும் எண்ணாமல், தனது மனம் முழுதையும் வேறிடத்தில் செல்லவிடுத்து மெய்ம்மறந்து போயிருந்தாள். ஆயினும், தான் தனது பங்களாவை விரைவில் அடையவேண்டுமென்ற ஆவலும், தனக்கு நேரிட்ட பேராபத்தைத் தனது தாயிடம் கூறி, மறுபடி ஏதேனும் தக்க ஏற்பாடு செய்து, கண்ணபிரானை விடுவிக்க முயற்சிக்க வேண்டுமென்ற ஆவலும் இன்னொரு புறத்தில் அவளை வருத்திக் கொண்டே இருந்தமையால் வழி நீண்டுகொண்டே போவது போலத் தோன்றி அவள் தனது பொறுமையை இழந்து தவிக்கும்படி செய்தது.

அவ்வாறு அந்த மங்கையர்க்கரசி குழம்பிய அறிவும், கலங்கிய மனதும், தளர்ந்த மேனியும், தவித்த அங்கங்களுமாய் வண்டிக்குள் வீற்றிருக்க, மினியன் கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தாரது விருப்பத்தின்படி வண்டியை விசையாகத் தென் திசையில் விடுத்துக்கொண்டே ஹைகோர்ட்டுக்குப் பக்கமாகச்சென்று கோட்டை மைதானத்தை யடைந்து, அதைத் தாண்டி மேலும் தெற்கு திக்கில் போகத் தொடங்கினான். அவன் துணிந்து அவ்வாறு செய்தானானாலும், கோகிலாம்பாள் அது இன்ன இடம் என்பதைத் தெரிந்து கொண்டு வண்டியை நிறுத்தும்படி திடீரென்று உத்தரவு கொடுத்து விட்டால், கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தாரின் கோரிக்கையின்படி தான் நடந்துகொள்ள இயலாமல் போய் விடுவதோடு, அவ்வளவு தூரம் தெற்கில் வண்டியை ஓட்டி வந்ததற்குக் காரணம் தான் சொல்ல நேருமே என்ற அச்சமும் அபாரமாக எழுந்து அவனை நடுக்குவித்தது. பாதைகள் பழுது பார்க்கப்படுவதாகத் தான் கூறிய சமாதானம் உண்மையாக இருந்தாலும், இடை இடையில் மேற்கு நோக்கி குறுக்கே சென்ற பத்துப் பதினைந்து பாதைகளையும் கடந்து, தான் நேராகத் தெற்கு திக்கில் ஒன்றரைமைல் தூரம் வந்து விட்டதற்கு தான் எவ்விதமான சமாதானமும் கூறினாலும், அது பொருத்தமாயிராதே என்ற பெருத்த கவலையும், அவள் கவனித்துக் கேள்வி கேட்டுவிட்டால் தான் தப்புவது துர்லபமென்ற

நிச்சயமும் மினியனது மனத்தில் தோன்றி அவனை அளவற்ற சஞ்சலத்தி லாழ்த்திக்கொண்டே இருந்தன. கோகிலாம்பாள் கேட்டுவிட்டால், தான் எவ்விதமான சமாதானம் கூறலாம் என்று அவன் ஒவ்வொன்றாக யோசித்து யோசித்துத் தனக்குத்தானே ஆக்ஷேபனை சமாதானங்கள் செய்துகொள்கிறான். எந்த சமாதானமும் அவனுக்குத் திருப்திகரமாகத் தோன்றவில்லை. அவன் கோட்டையைக் கடந்து அதற்கப்புறத்திலிருந்த கடற்கரைச் சாலையின் வழியாகச் செல்ல வாரம்பிக்க, அவனது உடம்பு தானாகவே நடுங்கத் தொடங்கியது. கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தார் தனது எஜமாட்டிக்கு எவ்விதமான கெடுதலோ, அல்லது, அவமானமோ செய்வாரோ என்ற பீதி அவனது மனத்தைக் கலக்க வாரம்பித்தது. அவனது அடி வயிற்றில் ஒருவித வேதனை தோன்றி, அவனை நிலைதடுமாறச் செய்தது. சிறிது தூரத்திற்கப்பாலிருந்த தோப்பிற்குள் தான் வண்டியை நிறுத்தினால், அப்போது எப்படியும் கோகிலாம்பாள் வெளிப்பக்கத்தை நோக்கி, அது இன்ன இடம் என்பதைக் கவனித்து உடனே உண்மையைக் கண்டுகொள்வாள், அல்லது, அவ்விடத்தில் கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தார் வந்து அவளுக்கு ஏதேனும் கெடுதல் செய்ய எத்தனித்தால், அப்போதும் அவள் அந்த இடம் இன்னதென்பதை அவசியம் உடனே கண்டுகொள்வாள், அதோடு தனக்கு அவர்களது வீட்டின் ருணம் அற்றுப்போவது நிச்சயத்திலும் நிச்சயம் என்று நினைக்க நினைக்க மினியனுக்கு அப்போதே அடிவயிற்றில் பெரிய கலக்கமும் குமுறலும் ஆரம்பித்தன. அவன் அத்தகைய விபரீத நிலைமையில் இருக்க, மேலும் இரண்டொரு நிமிஷநேரத்தில் வண்டி எதிரிலிருந்த தோப்பிற்குள் நுழைந்தது. நுழையவே, மினியனது மனவேதனையும், தேக அவஸ்தையும் அவனால் தாங்க இயலாத உச்சநிலையை அடைந்தன. அந்தத் தோப்பிற்குப் பக்கத்தில் தாழைகள் நிறைந்த மணல் பரப்பும், அதற்கப்பால் விஸ்தாரமான கடலும் இருக்கின்றன. தோப்பையடுத்தாற் போல அந்த ரஸ்தாவில் பிரம்மாண்டமான ஒரு இரும்புப் பாலம் இருக்கின்றது. அந்தப் பாலத்தண்டையில் வண்டியை நிறுத்தும்படி கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தார் அவனிடம் கோரியிருந்தாராதலால், அது அந்த இடத்தை யடைவதற்கு முன்பே மினியனது நிலைமை பரம வேதனையான நிலைமை யாகிவிட்டது. உண்மையிலேயே அவனுக்கு விலக்கமுடியாத ஒருவித தேகபாதை ஏற்பட்டுவிட்டது. அவன் அந்த ரஸ்தாவின் இரண்டு பக்கங்களிலும்

வெகுதூரம் வரையில் தனது பார்வையைச் செலுத்தியதன்றி, இரண்டு பக்கங்களிலுமிருந்த மறைவுகளையும் உற்று நோக்கினன். கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தார் எவ்விடத்திலும் காணப்படவில்லை. அவர் வருகிற வரையில் தான் அவ்விடத்தில் வண்டியை நிறுத்தினால், கோகிலாம்பாள் அதன் காரணமென்னவென்று கேட்பதோடு, வெளிப் பக்கத்தையும் கவனித்துப் பார்ப்பாளாதலால், தான் அகப்பட்டுக்கொள்வது நிச்சயமென்று நினைத்த மினியன் வண்டியை இரும்புப் பாலத்தின் ஆரம்பத்தில் நிறுத்திவிட்டு சடக்கென்று கீழே குதித்து, "சாமீ! எனக்கு அடிவவுத்துலெ என்னமோ தொந்தரவு பண்ணுதுங்க. வண்டி இப்பிடியே ஒரு நிமிச நேரம் நிக்கட்டுங்க. இந்த வாராவதிக்குக் கீயே போயிட்டு இதோ வந்துட்றேனுங்க" என்று கூறிய வண்ணம், அவள் ஏதேனும் மறுமொழி கொடுப்பாளோ என்பதையும் கவனிக்காமல் விசையாக நடந்து பக்கத்திலிருந்த சரிவின் வழியாகக் கீழே இறங்கி இரும்புப் பாலத்தினடியில் சென்று அதன் முதல் கணவாய்க்குள் நுழைந்தான். நுழையவே, அடுத்த நிமிஷத்தில், அதற்குப் பக்கத்திலிருந்த இரண்டாவது கணவாய் மறைவிலிருந்த ஒரு மனிதன் அவ்விடத்தை விட்டு விரைவாக நடந்து முதற் கணவாய்க்குள் வந்து நமது காசாரியை நோக்கிப் புன்னகைசெய்து அன்பாகவும் நயமாகவும் பேசத்தொடங்கி, "யாரப்பா நீ? உன் பெயர் மினியனா? புரசைப்பாக்கம் துபாஷ் ராஜரத்ன முதலியாருடைய மூத்த மகளைப் பெட்டி வண்டியில் வைத்து அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாயல்லவா?" என்று வினவினன்.

அதைக் கேட்ட மினியன் மிகுந்த ஆச்சரியமும் ஆவலும் அடைந்து அவனை உற்று நோக்கினன். அந்த மனிதனுக்கு சுமார் நாற்பது வயதிருக்கலாம். அவன் சாதாரணமாய்ப் பெரிய மனிதர்களின் வீடுகளில் வேலைசெய்யும் சம்பளக்காரன் போல, ஏழ்மை நிலைமையில் காணப்பட்டான். அவன் தன்னை அறிந்து கொண்டு கோகிலாம்பாளைப்பற்றி விசாரித்தமையால் அவன் கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தாருடைய வேலையாளாகத்தானிருக்க வேண்டுமென்றும், அவரால் அனுப்பப்பட்டு வந்திருக்க வேண்டு மென்றும் மினியன் உடனே யூகித்துக் கொண்டான். ஆயினும், அவனது மனம் பலவகைப்பட்ட சந்தேகங்களைக் கொண்டது. தான் பாலத்தடியில் மறைந்திருந்தால் கோவிந்தபுரம் இளைய ஜெமீந்தார் ரஸ்தாவோடு

வந்து கோகிலாம்பாளிடம் பேசி உண்மையைக் கிரகிப்பதாகத் தன்னிடம் கூறினரே யன்றி தமது ஆலைப் பாலத்தடியில் ஒளித்து வைத்திருப்பதாகக் கூறவில்லையாதலால், தான் எதிர்பாரா வகையில் அந்த மனிதன் வந்து தன்னிடம் கேள்வி கேட்டது மினியனுக்கு மிகுந்த வியப்பையும் கவலையையும் உண்டாக்கியது. ஆகவே விஷயம் இன்னதென்பதை அறிய ஆவல் கொண்ட மினியன் அந்த மனிதனை ஏற இறங்கப் பார்த்து, "என்னெ நீ அடையாளம் கண்டுக்கினெ; நீ ஆருங்கறது தெரியலியெ. ஒன்னெ ஆரு அனுப்பிச்சது?" என்றான்.

உடனே அந்த மனிதன், "நான் பேசுவதிலிருந்து என்னை யார் அனுப்பி யிருப்பார்களென்பது உனக்குத் தெரியவில்லையா. கோவிந்தபுரம் சின்ன ஜெமீந்தார் ஐயா என்னை இங்கே அனுப்பினார்கள். நான் அவர்களுடைய வேலைக்காரன். அவர்கள் இங்கே வந்து இந்நேரம் காத்திருந்தார்கள். நீ வரவில்லை. பக்கத்திலுள்ள கோட்டைக்கு ஓர் அவசர காரியமாய் அவர்கள் போயிருக்கிறார்கள். அதுவுமில்லாமல், நீங்கள் வரும்போது அவர்கள் இங்கே இருந்தால் அது சந்தேகத்துக்கு இடங் கொடுக்குமாம். உன் வண்டி இங்கே வந்து நிற்கையில், அவர்கள் தற்செயலாக வருகிறவர் போல வந்து, வண்டி நிற்பதைக் கண்டு அம்மாளோடு பேச்சுக்கொடுக்க வேண்டுமாம். அவர்கள் கோட்டைக்குள் போய்த் தங்களுடைய அலுவலை சீக்கிரத்தில் முடித்துக்கொண்டு வெளியில் வந்து கோட்டையின் கிழக்குப் பக்கத்தில் மறைவாக இருப்பதாய்ச் சொன்னார்கள். நீ வந்தவுடனே, உன்னோடு நான் பேசி, பெண் வண்டியில் வந்திருக்கிறதா என்பதைத் தெரிந்துகொண்டு சீக்கிரமாக ஓடிவந்துதம்மிடம் சொல்லும்படி திட்டம்செய்து, என்னை இங்கே நிறுத்திவிட்டுப் போயிருக்கிறார்கள். நான் போய் அவர்களை உடனே அழைத்துக்கொண்டு வருகிறேன். நீ இவ்விடத்திலேயே இரு; வண்டியண்டை நீ வரவேண்டாம். நான் போய் அவர்களை இங்கே அழைத்துவர ஐந்து நிமிஷநேரம் பிடிக்கும். அவர்கள் அம்மாளிடம் கால்மணி நேரமாவது பேசிவிட்டு, நீ இங்கே வந்திருக்கிறாயென்பதை அம்மாள் வாயின் மூலமாகவே தெரிந்து கொள்ளுகிறவர் போலக் காட்டிக்கொண்டுஉடனே உன்னைக்கூப்பிடுவார்கள். அநேகமாய் நானே உன்னைக் கூப்பிட இங்கே வருவேன். அதுவரையில் நீ இவ்விடத்திலேயே இரு. மேலே தலையைக்கூடக் காட்டவேண்

டாம்" என்ருன். அந்த வரலாற்றை உண்மையென்று நம்பிய மினியன் சிறிதுநேரம் யோசனை செய்தபின், "சரி; நீ ஓடி ஐயாவைக் கடிய இட்டா. இல்லாமெப்போனு, அம்மா இந்த எடம் இன்ன துங்கறத்தெக் கண்டுக்கினு கீழே எறங்கி வந்து என்னெக் கூப்பிட்டாலும் கூப்பிடுவாங்க" என்று ஆத்திரத்தைக் காட்டி மொழிந்தான். உடனே அந்த மனிதன், "நீ வண்டியை விட்டு இறங்கி இங்கே வந்தபோது அம்மாளிடம் என்ன சொல்லிவிட்டு வந்தாய்?" என்ருன். மினியன், "அடி வவுத்தெ நோவுதுன்னு சொல்லிப்புட்டு வந்தேன்" என்ருன்.

அந்த மனிதன், "அப்படியானல், அம்மாள் இந்தப் பக்கம் வரவும் மாட்டார்கள். உன்னைப் பார்க்கவும் மாட்டார்கள். நீ கவலைப் படாமல் ஒரு பக்கமாய்ப்போய் உட்கார்ந்துகொண்டிரு" என்று கூறியபின் அவ்விடத்தை விட்டு வெளியில் வந்து சரிவின் வழியாக மேலே ஏறி மினியனது திருஷ்டியில் படாமல் மறைந்துபோனன்.

அவ்வாறு தனியாய் விடப்பட்ட மினியன் சுமார் பத்து நிமிஷ காலம்வரையில் அவ்விடத்தில் தங்கி தனது தேகபாதையை நிவர்த்தி செய்து, இளைய ஜெமீந்தாரது வருகையை ஆவலோடு எதிர் பார்த்தவனுய் நின்றுகொண்டிருந்தான். வண்டிகள் தடதடவென்று போவதும் வருவதுமா யிருந்தன. நிமிஷம் கழியக் கழிய அவனது மனவேதனை அதிகரித்து மலையாய்ப் பெருகியது. தன் வண்டி நடுரஸ்தாவில் நிறுத்தப்பட் டிருந்தமையால், கோகிலாம்பாள்நான்கு பக்கங்களையும் பார்த்து, அது இன்ன இடம் என்பதை எப்படியும் அந்நேரம் கண்டுகொண்டிருப்பாளென்ற அச்சமே பெரிதாக அவனை வதைக்கத் தொடங்கியது.கோகிலாம்பாளும், சௌந்தரவல்லியம்மாளும் அதற்குமுன்பலதடவைகளில் கடற்காற்று வாங்கும்பொருட்டு அந்த இடத்திற்கு வந்திருப்பதால், அதன் அடையாளம் கோகிலாம் பாளுக்கு நன்ருகத் தெரிந்துபோய் விடுமாதலால், அந்தத் தடவை தான தப்பமுடியாதென்றும், அவர்களிடம் இனி தனக்கு வேலை கிலைக்காதென்றும் மினியன் நினைத்துப் பலவாறு எண்ணமிட்டவனு யிருந்தான். அவன் அவ்விடத்தில் சந்தித்த மனிதன் போன பிறகு, சுமார் அரைநாழிகை சாவகாசம் கழிந்தது. அந்நேரம் அநேகமாய் இளைய ஜமீந்தார் வந்து கோகிலாமபாளோடு பேசி முடித்திருப்பாரென்றும், அவர் தம்மைக்கூப்பிடுவாரென்றும் மினி

யன் நினைத்து ஆவலே வடிவாயும், வேதனையே நிறைவாயும் தவித்திருக்க, அப்பொழுது பாலத்தின்மேல் நின்றபடி சுந்தரமூர்த்தி முதலியார், "மினியா! அடே மினியா!" என்று மிகுந்த கவலையோடு அவனைக் கூப்பிட்ட குரல் உண்டாயிற்று. அடுத்த நிமிஷம் அவர் சரிவண்டை வந்து தமது முகத்தைக் கணவாய்ப் பக்கம் திருப்பி உள்பக்கம் பார்த்தபடி இன்னொரு முறை, "மினியா! மினியா!" என்று கூப்பிட்டார்.

இளைய ஜெமீந்தார் தான் தன்னை அழைக்கிறார் என்று நிச்சயித்துக்கொண்ட மினியன் கோகிலாம்பாளுக் கெதிரில், தனக்கும் அவருக்கும் அதற்குமுன் அதிகமான பழக்கம் இல்லை என்று காட்டிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டு மெதுவாக வெளியில் வந்து சரிவின் வழியாய் மேலே ஏறி இளைய ஜெமீந்தாரை நோக்கி, "என்ன சாமீ! நீங்க எங்கே வந்தீங்க! நான் வண்டியை ஓட்டிக்கினெ வந்தேன். ஒரே மயக்கமாப் போச்சு. குதிரெ இன்ன எடத்துக்குப் போவுதுன்னு எனக்குத்தெரியாமெப் பூட்டுது. ஒடனே வவுத்தெக் கலக்கிப்புட்டுது. வண்டியெ உட்டு எறங்கி மணலுக்குப் போயிப் படுத்தேனுங்க, அதுதான் தெரிஞ்சிது; திரியும் இப்ப நீங்க கூப்பிட்டீங்க. இதுதான் தெரிஞ்சுது" என்று மிகுந்த வியப்பும் துன்பமும் தோற்றுவித்தவனாய்ப் பேசினான். ரஸ்தாவில் வண்டிக்குள் இருந்த கோகிலாம்பாளுக்குக் கேட்கவேண்டுமென்று அவ்வாறு பேசினானாதலால், அவன் செவிடனிடம் பேசுவதுபோல பலமாக ஓங்கிப் பேசினான். அவன் கூறிய சொற்களைக் கேட்டும் கேளாதவர் போலத் தோன்றிய இளைய ஜெமீந்தார், "அடே மினியா! வண்டியைக் காணோமேயடா! நீ வண்டியை ரஸ்தாவில் நிறுத்திவிட்டுப் பாலத்தின் கீழே வந்ததாக என்னுடைய ஆள் வந்து என்னிடம் சொன்னான். நானும் அவனும் உடனே புறப்பட்டு இப்போதுதான் வருகிறோம். ரஸ்தாவில் இருந்த வண்டியைக் காணோமே! அது இதற்குள் எங்கே போயிருக்கும்?" என்று பதைபதைப்பும், வியப்பும், ஆவேசமும் தோன்றக் கூறினார்.

அந்தச் செய்தி மினியனுக்குப் பெருத்த இடி வீழ்ந்தது போலாய் விட்டது. அவன் திடுக்கிட்டு சகிக்கவொண்ணாத அபாரமான திகிலும் குலை நடுக்கமும் அடைந்து, "ஆ! என்ன! என்ன! ரஸ்தாவுலே வண்டி இல்லியா! இந்த எடத்துலேதானே நானு வண்டியை

நிறுத்தினேன். இதுக்குள்ளற அது எப்படி மாயமா மறைஞ்சு பூட்டுதுங்க" என்று கூறிய வண்ணம் ரஸ்தாவிற்கு ஓடி வந்து, அதன் இரண்டு திக்கிலும் திரும்பித் திரும்பிப் பார்த்தான். கண் கண்ட தூரம் வரையில் இரண்டு திக்குகளிலும் வண்டியே காணப் படவில்லை. சுந்தரமூர்த்தி முதலியார் கொணர்ந்திருந்த அவரது பீட்டன் வண்டிமாத்திரம் ரஸ்தாவில் காணப்பட்டது. மினியன் முற்றிலும் பிரமித்து ஸ்தம்பித்து இளைய ஜெமீந்தாரின் முகத்தைப் பார்க்க, அவரும் அதுபோலவே பெருத்த கலக்கமும் குழப்பமும் மனப்பிராந்தியும் அடைந்தவராய் அவனை நோக்கி, "என்னடா இது பெருத்த மாயமாக அல்லவா இருக்கிறது! நீ வரவில்லையென்று நினைத்து அந்தப் பெண்ணே ஒருவேளை வண்டியை ஓட்டிக்கொண்டு போயிருக்குமா? சே! அப்படி ஒரு நாளும் நடந்திராது. வேறே யாராவது வந்து வண்டி தனிமையில் நிற்பதைக் கண்டு குறும்புக் காக அதை ஓட்டிக் கொண்டு போயிருப்பார்களா? அல்லது, குதிரை மோட்டார் வண்டி முதலிய எதையாவது கண்டு மருண்டு வண்டியை இழுத்துக்கொண்டு ரஸ்தாவோடு போயிருக்குமா? இது எப்படித்தான் நடந்திருக்குமென்பது விளங்கவில்லையே!" என்று வியப்பே வடிவாகக் கூறினர். மினியன் முற்றிலும் சித்தப்பிரமை கொண்டவன்போல மாறித் தத்தளித்துத் தனது கைகளைப் பிசைந்துகொண்டு, "ஐயோ! சாமீ! எஜமானர் ஊட்டுக் கொயந்தெக்கி என்ன கதி வந்திச்சோ தெரியலியே!" என்று நிரம்பவும் தாபந்திரியமாகக் கூறிப் பரிதவித்தான். அது போலவே சுந்தரமூர்த்தி முதலியாரும் மிகுந்த கலக்கமும் விசனமும் தோற்றுவித்து, "இது பெரிய கண்கட்டு வித்தை போலல்லவா இருக்கிறது! இதே இடத்தில் கோகிலாம்பாள் வண்டியில் உட்கார்ந்து கொண்டிருந்ததை என் வேலைக்காரன் பார்த்து பத்து நிமிஷ நேரம் கூட ஆகவில்லை. இதற்குள் அவள் எப்படி மாயமாய்ப் போயிருப்பாளென்பது தெரியவில்லையே. அவள் மாத்திரம் மறைந்து போயிருந்தால் ஒரு வேளை அவள் கீழே இறங்கிப் போயிருப்பாளோ, அல்லது வேறே யாராவது அவளை அழைத்துக்கொண்டோ, பலவந்தமாய் அபகரித்துக்கொண்டோ போயிருப்பாளோ வென்று எண்ண வகையுண்டு. இவ்வளவு பெரிய வண்டி போன இடம் தெரியவில்லையே. நாங்கள் வடக்கு திக்கிலிருந்து வருகிறோமாகையால், அந்தப் பக்கமாய் வண்டி போகவில்லையென்பது நிச்சயம். தெற்குப் பக்கமாகத்தான் அது போயிருக்கவேண்டும். இந்த ரஸ்தாவோ தாரினால் மெழுகப்

பட்டிருப்பதால், வண்டிச் சுவடுகள் என்ற பேச்சுக்கே இடமில்லை. நாம் இப்போது தெற்கு திக்கில் விசையாகப் போய்ப் பார்ப்பதைத் தவிற வேறே எதையும் செய்வதற்கில்லை. மினியா! நீயும் எங்களோடு வண்டியில் உட்கார்ந்துகொள். போய்ப் பார்ப்போம்" என்று அவசரமாகவும் ஆத்திரமாகவும் கூறினர். அவரது சொற்களைக் கேட்ட மினியன் எவ்வித மறுமொழியும் கூறமாட்டாதவனாய்ச் சித்தப்பிரமை கொண்டவன் போலத் தோன்றி மருள மருள விழித்துத் தனது கைகளைப் பிசைந்துகொண்டு தத்ரூபம் ஊமை போலவே நின்றான். அதற்குள் சுந்தரமூர்த்தி முதலியாரது வேலைக்காரன் அங்குமிங்கும் ஓடி, தோப்பிற்குள்ளும், தாழைப் புதருக்கும் அப்பாலும் சென்று தேடிவிட்டு ஏங்கிய முகமும், பதறிய அங்கங்களுமாய்த் திரும்பி வந்து தமது எஜமானரைப் பார்த்து, "சாமி! வண்டி வடக்கிலும் போகவில்லை; பக்கங்களிலும் இல்லை. அது தெற்கில்தான் போயிருக்கவேண்டும். நாம் தெற்கே போய்ப் பார்க்கலாம்" என்றான்.

உடனே சுந்தரமூர்த்தி முதலியாரும் அவரது வேலைக்காரனும், மினியனும் அங்கிருந்த அவர்களது பீட்டன் வண்டியில் ஏறிக்கொண்டு அதைத் தெற்குதிசையில் விரைவாக ஓட்டிக்கொண்டு செல்லலாயினர். வண்டி சிறிதுதூரம் போனபொழுது சுந்தரமூர்த்தி முதலியார் மினியனை நோக்கி, "இந்த ரஸ்தாவிலிருந்து திருவல்லிக்கேணிக்குப் போகும்பாதைகள் மேற்குதிக்கில் எத்தனையோ பிரிந்து போகின்றனவே! அவளுடைய வண்டி இந்தப் பாதைகளில் எதன் வழியாகவாவது திருவல்லிக்கேணிப் பக்கம் போயிருக்குமோ என்னவோ. நாம் கண்ணை மூடிக்கொண்டு நேராகத் தெற்கே போய்க்கொண்டிருப்பது வீண்வேலையாக முடியுமோ என்னவோ தெரியவில்லையே" என்றார்.

உடனே அவரது வேலைக்காரன், "நாம் இப்படியே திருவல்லிக்கேணிக்குப் போகிறதாக வைத்துக் கொள்வோம். பெண் நேராகத் தெற்கே போயிருந்தால், நாம் இங்கே போவதும் வீணாய்த்தானே முடியும்" என்றான்.

அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி முதலியார் சிறிதுநேரம்யோசனை செய்து, "ஆம், நீ சொல்வதும் சரியான சங்கதிதான்! பல ரஸ்தாக்கள் எதிரில் குறுக்கிடும்போது, எவ்விதமான தகவலுமில்லாமல் நாம் தேடினால் இப்படிப்பட்ட திண்டாட்டந்தான் ஏற்படும். ஆனால்,

எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. பெண்ணை அழைத்துக் கொண்டு போன மனிதர் அவளுக்குக் கெடுதல் செய்ய நினைப்பவராயிருந்தால், அவர் வண்டியை ஊருக்குள் கொண்டுபோக எண்ண மாட்டார். அவர் பெண்ணுக்கு வேண்டிய மனிதராயிருந்து, அதற்கு உதவி செய்ய எண்ணினால் மாத்திரம், அவர் வண்டியைத் திருவல்லிக் கேணி வழியாகக் கொண்டு போயிருப்பார். அவரைத் தொடர்ந்துநாம் திருவல்லிக்கேணிக்குப் போகவேண்டிய அவசியமே இல்லை. பெண்ணுக்குக் கெடுதல் செய்ய நினைத்திருந்தால், அவர் வண்டியை நேரில் தெற்கேதான் கொண்டுபோயிருப்பார். ஆகையால், நாம் நேராகத் தெற்குத் திக்கில் பார்த்துக்கொண்டே மயிலாப்பூர் வரையில் போவோம்; அதற்கு அப்பாலும் கொஞ்ச தூரம் போய்ப் பார்த்து நிச்சயித்துக் கொள்வோம். வண்டி அங்கே காணப்படாவிடில், பெண் திருவல்லிக்கேணி வழியாய்த்தான் போயிருக்க வேண்டுமென்றும், அது பத்திரமாய் வீட்டுக்குப் போய்ச்சேருமென்றும் நாம் யூகித்துக் கொள்வோம்" என்று கூறியவண்ணம் தமது பீட்டன் வண்டியை விரைவாகத் தெற்கு திக்கில் ஓட்டினார்.

---

## 11-வது அதிகாரம்

### பேதையே போதியோ பித்தனாய் விடுத்தெனை?

சாலிதொடர் மங்கலமென்ற ஊரில் முகாம் செய்திருந்த திவான் முதலியார் தமது சமையற்காரனை முத்துசாமி தெரிவித்த வரலாற்றைக் கேட்டுத் தாங்கவொண்ணாத அபாரமான விசனத்தினாலும் மன எழுச்சியினாலும் தாக்கப்பட்டு மூர்ச்சித்து மேஜையின்மீது குப்புறச் சாய்ந்தாரல்லவா? அப்போது அவ்விடத்தில் முத்துசாமியைத் தவிர வேறு யாருமில்லையாதலாலும், அவர்களுக்குள் நடந்த சம்பாஷணை நிரம்பவும் தணிவான குரலில் ரகஸியமாக நடந்ததாதலாலும் முத்துசாமியும், திவானும் விபரீதமான நிலைமையிலிருந்தார்களென்பதை மற்ற எவரும் தெரிந்துகொள்ளவில்லை. அப்போது முத்துசாமியினது உடம்பின் நிலைமை சொல்லிலடங்காத மகாதுன்பகரமான நிலைமையாக இருந்தது. அவனது உடம்பிற்குள் சென்ற பாஷாணம் இரத்தத்தில் கலந்துகொண்டு உடம்பு முழுதும் பரவி தலைக்கும் ஏறிப்போய்விட்டதாகையால், அவனது உடம்பு கட்டிலடங்காமல் தத்தளிக்கிறது. ஒவ்வோர் அங்கமும் தெறித்துத்

தனித்தனியாய்க் கிழிந்து விடுமோவென்னும் நிலைமையை யடைந்தது. குடல்களும் இரத்தமும் உடம்பை விட்டு வெளிப்பட்டு விடக் கூடிய நிலைமையை யடைந்து விட்டன. தொண்டை வறண்டு போய் முறுக்கிக் கொள்ளுகிறது. வயிறு முழுதும் துண்டு துண்டாய்க் கிழிபட்டு வாய் வழியாக வெளியில் வந்து விடுமோ வென்னலாம் படி ஆய்விட்டது. அவனது கண்கள் தெறித்து வெளியில் வந்து விடத்தக்க நிலைமையை யடைந்தன. கீழே படுத்துப்புரள ஆரம்பித்த முத்துசாமி திவான் முதலியார் மூர்ச்சித்து மேஜையின் மீது குப்புறச் சாய்ந்து போனதைக் கண்டு சகியாதவனாய்த் தான் அநுபவித்த நரக வேதனையைச் சிறிது நேரம் மறந்து ஒருவித ஆவேசம் கொண்டவனாய் எழுந்தோடி சமயலறைக்குள் சென்று, ஓர் ஈரத் துணியையும், தண்ணீரையும் எடுத்துக் கொண்டு திரும்பி வந்து துணியினால் திவானினது முகத்தைத் துடைத்துவிட்டு, அவரை நிமிர்த்தி நாற்காலியில் சார்த்தி வாயைத் திறந்துதண்ணீரை வார்த்து, அவர் இரண்டொருவாய் விழுங்கும்படி செய்தான். அந்த அபாயவேளையில் தான் வேறே மனிதர்களை உதவிக்கு அழைத்தால் அவர்களிடம் தான் உண்மையான தகவலைச் சொல்ல நேரிடுமென்றும், அவ்வாறுதான் செய்வதுஉசிதமல்லவென்றும் முத்துசாமி எண்ணினான்; திவான் முதலியாரது மனையாட்டியைப்பற்றிய விஷயத்தைத் தான் மற்றவருக்குத் தெரிவித்து, திவானுக்குத் தலைகுனிவை ஏற்படுத்துவது உசிதமான காரியமல்ல, வென்று அவன் நினைத்தான். தான் விஷத்தைத் தின்றவரலாற்றை மற்றவர் கேட்பார்களாயின், தன்னை அவர்களெல்லோரும் துகைத்துச் சித்திரவதை செய்வார்களென்ற எண்ணமுண்டானதாயினும், தன்னைப்பற்றியே அவன் கவலை கொள்ளவில்லை. தான் திவானுக்கு விஷமிட நினைத்தது தனக்கே நேர்ந்ததென்று கூறுவதைக் கேட்டு மற்றவர் அதன் மூலகாரணத்தை அறிய எப்படியும் பிரயத்தனப்படுவாராதலால், தான் அதற்கு இடங் கொடுப்பது சரியல்லவென்று நினைத்து, முத்துசாமி வேறே எவரையும் உதவிக்கு அழைக்காமல் தான் உயிர்க்கழுவில் நின்று துடித்த பரம வேதனையான சந்தர்ப்பத்தில், பலவித சிகிச்சைகள் செய்து தண்ணீர் கொடுத்து விசிறி, திவான் முதலியாரது மூர்ச்சையை இரண்டு நிமிஷ நேரத்தில் தெளிவித்தான். அவர் தமது கண்களைத் திறந்து பார்த்தார். முத்துசாமி தத்தளித்துத் தனது பிராணனைப் பிடித்துக்கொண்டு நின்றதையும், வேறே யாரும் இல்லாததையும் உணர்ந்து" அப்பா!

முத்துசாமி! நம்முடைய வைத்தியரை அவசரமாக அழைத்து வரச் சொல்லி ஆளை அனுப்பி இருக்கிறேன். அவர் வருவார். அவரிடமும் மற்றவரிடமும் நீ உண்மையான வரலாற்றைச் சொல்லப் போகிறாயா?" என்றார்." முத்துசாமி நான் உண்மையைச் சொல்வது சரியல்ல, எலி கூடாரத்தைக் கடித்துவிடப் போகிறதென்று, அதைப் பிடிக்க எலிப்பாஷாணம் வாங்கி வைக்கப்பட்டிருந்ததாகவும், அதை சர்க்கரையென்று நினைத்து நான் தவறுதலாகச் சாப்பிட்டு விட்டேனென்றும் சொல்லிவிடுவோம். நான் தங்களுக்குப் பாஷாணம் கொடுக்க எத்தனித்ததையாவது, தங்கள் சம்சாரம் இதில் சம்பந்தப்பட் டிருக்கிறார்களென்பதையாவது நாம்வெளியிட வேண்டாம்" என்று கூறி வாய்மூடு முன், ஆயுள்வேத வைத்தியர் விரைவாக அவ்விடத்திற்கு வந்து, "எஜமானே! என்ன விசேஷம்? யாருக்கு உடம்பு சரிப்படவில்லை?" என்று பணிவாக வினவினர்.

உடனே திவான், "ஐயா! வைத்தியரே நம்முடைய முத்துசாமி எப்படியோ தவறுதலாகப் பாஷாணத்தைச்சாப்பிட்டு விட்டானும். அது இவனை சகிக்கமுடியாதபடி உபத்திரவப்படுத்துகிறதாம். உம்மிடம் பாஷாணத்தை முறிக்கக்கூடிய மாற்று மருந்து நல்லதாக இருந்தால், உடனே கொடுத்து இவனுக்கு ஆகவேண்டிய சிகிச்சைகளைச் செய்து இவன் பிழைக்கும் படியான வழியைத் தேடும்" என்றார்.

அவ்விதம் அவர் பேசி முடிக்குமுன் முத்துசாமி மயங்கி வேரற்ற மரம் சாய்வது போலத் தரையில் சாய்ந்து விட்டான். அவ்வாறு சாய்ந்தவனுக்கு வாந்தி பேதி முதலியவை பிரமாதமாக ஆரம்பமாயின. உடம்பிலிருந்த நீர் முழுதும் வெளியில் வந்துவிட்டதோடு இரத்தமும் பெருகி வெளிப்பட வாரம்பித்தது. பங்குனி சித்திரை மாதத்து ஆற்றுமணலின்மேல் கிடந்து புழுக்கள் துடிப்பதுபோல அவன் கீழே கிடந்து புரண்டு புரண்டு கைகால்களை முறுக்கிக்கொண்டு, "ஐயோ! அப்பா!" என்று முக்கி முனகி மரணாவஸ்தைப் படுபவன்போலக் கிடந்து தத்தளிக்கலானான். உடனே ஆயுள் வேதவைத்தியர் அவனது கைகளைப் பிடித்து நாடியைப் பரீட்சை செய்து பார்த்துவிட்டு பக்கத்திலிருந்த வேலைக்காரர்களை அழைத்து, முத்துசாமியை அவ்விடத்திலிருந்து தூக்கிக்கொண்டு தமது வைத்திய அறைக்குச் சென்று அவ்விடத்தில் அவனை வசதியான ஒரு கட்டிலின்மீது படுக்கவைக்கச் செய்து, விஷத்தைமாற்

றத் தக்க சிறந்த ஒளஷதங்களை உடனே எடுத்து உள்ளுக்குப் பிரயோகம் செய்ததன்றி, அவனது உடம்பையும் பிளானலினால் மூடி ஒத்தடம் முதலிய வெளிப் பிரயோகங்களையும் செய்யத் தொடங்கினார். அவர் தமது திறமை முழுதையும் காட்டி அவனுக்குரிய சிகிச்சைகளை யெல்லாம் விடா முயற்சியோடும், கவனத்தோடும் ஊக்கத்தோடும் செய்து கொண்டே இருந்தாரானாலும், இரத்தமாக வாந்தி யெடுப்பதும் வயிறு போவதும் வெகு நேரம் வரையில் குறையாமலேயே இருந்தன. அவனது கைகால்கள் முதலிய அங்கங்களெல்லாம் விரைவாகக் குளிர்ந்து தளர்ந்து போய்க் கொண்டே இருந்தனவானாலும் அவர் ஒத்தடத்தினால் அவைகளுக்கு சூடு ஏற்றிக் கொண்டே இருந்தார். முத்துசாமி பாஷாணத்தைத் தின்றுவிட்டு மரணாவஸ்தைப் பட்டுத் தவிக்கிறானென்றசெய்தி ஒரு நிமிஷத்தில் அந்தக்கூடாரம் முழுதும் பரவவே, திவானின் சிப்பந்திகளும் குமாஸ்தாக்களும் மற்றும் சநிதொடர் மங்கலத்து வாசிகள் சிலரும் ஓடோடியும் வந்துகூடி, அவனது பரிதாபகரமான தோற்றத்தைக் கண்டு மிகுந்த இரக்கமும் விசனமும் அடைந்து தம் தம்மா லேன்ற உதவியைச் செய்ய முன்னுக்கு வந்தனர். திவான் முதலியார் சித்தப்பிரமை கொண்டவர்போல மாறி எவரோடும் வாயைத் திறந்து பேசவும் சக்தி யற்றவராய் இடிந்து அப்படியே உட்கார்ந்து போய்விட்டார். தமது ஆருயிர் மனையாட்டியான காந்திமதி யம்மாளைப்பற்றித் தமக்குக் கிடைத்த விபரீதச் செய்தி ஒரு புறத்தில் அவரது உயிரைப் பருகியதானாலும், அவரது கவனம் முக்கியமாய் முத்துசாமியின் மீதே சென்றது. அவன் தத்தளித்துத் தவித்து உயிருக்கு மன்றாடிதைக் கண்டு கொண்டு பார்க்கவே சிறிதும் சகிக்கவில்லை யானாலும், திவான் அடிக்கடி எழுந்து போய் அவனைப் பார்த்து அவனது நிலைமைஎப்படி இருக்கிறதென்று கேட்பதே வேலையாகச் செய்யத் தொடங்கியதன்றி, தமக்குத் தாமே பலவாறு எண்ணமிடத்தொடங்கினார். "ஐயோ! தெய்வமே! கருணாநிதே! இவன் படுகிற பாட்டைப் பார்க்க சகிக்கவில்லையே பாவியாகிய என் பொருட்டு இவன் இப்படியும் துன்புறவேண்டுமா என் மேல் யாரோ சூஷாத்திரம் வைத்து என்னைக் கொல்ல எண்ணினால், அது இவனுக்கா வந்து வாய்க்கவேண்டும்! எய்தவனிருக்க, அம்பை நோவதுமுண்டா. இந்த முத்துசாமி எய்தவனல்லவே, அம்புதானே! எவன் இவனைத் தூண்டி எனக்கு விஷ மிட ஏற்பாடு செய்தானோ, அவன் இந்தப் பாஷாணத்தை உண்டிருந்தால், அப்

போது அது கொஞ்சமாவது நீதிக்கு ஒத்த காரியமாக இருக்கும். சே அதுகூடக் கொடிதினும் கொடிய சம்பவம்! அவன் என்னைக் கொல்ல எண்ணிய பகைவனானாலும், அவன் இந்தப் பாஷாணத்தைத் தின்று இப்படித் துடிப்பதைக் கண்டு நான் சகிப்பேனா! ஐயோ! கொடுமை! கொடுமை! ஈசனே! தயாபரனே! மனிதருடைய நீதி ஸ்தலத்தில்தான் கொலைக்குற்றம் செய்தவனுக்கு மரணதண்டனை விதிப்பதென்ற சட்டமிருக்கிறதென்றால், சிறிதும் பக்ஷபாதமும் தவறுமில்லாத உன்னுடைய நீதிஸ்தலத்தில் கூடவா பழிக்குப்பழி என்ற நியதி ஏற்பட்டிருக்கிறது. ஜெகதீசா! என்னப்பனே! ஐயோ! என் குடல் நடுங்குகிறதே! என்மனம் தவிக்கிறதே! என் அங்கங் கள் சோர்கின்றனவே! கடவுளே! மனிதருடைய நீதிஸ்தலத்தின் தீர்மானத்தைவிட உன்னுடைய தீர்மானம் அதிகக் கடுமையான தாக இருக்கிறதே! இந்த முத்துசாமி என்னைக் கொல்ல முயன் றானேயன்றி, என்னைக் கொன்றுவிட வில்லையே. ஒருவனை மற்ற வன் கொல்ல முயன்றால், அதற்கு மரணதண்டனை கொடுப்பதில் லையே! ஏதோ சில வருஷ காலத்திற்குக் கடுங்காவல் தண்டனை தானே கொடுக்கிறார்கள். அப்படி இருக்க, இந்த முத்துசாமி என் னைக் கொல்ல எத்தனித்த குற்றத்திற்கு இவனுக்கு இப்படிப்பட்ட மரணதண்டனையையும், பொறுக்க முடியாத கொடியவேதனையையும் விதிப்பது முறையாகுமா? ஈசுவரா! கிருபாநிதே! இவனை இவ்வளவு தூரம் தண்டித்ததே போதுமானது. இவ்வளவோடு இவன் பிழைத் துப் போகும்படி அருள் புரிய வேண்டும் என்னப்பனே! நீதிக்கேஉற் பத்தி ஸ்தானமாக அமைந்துள்ளவனான உனக்குத் தெரியாத விஷ யத்தை நான் எடுத்துச் சொல்லப் போகிறேனா!" என்று திவான் முதலியார் தமக்குள்ளாகவே கடவுளை நினைத்து உருக்கமாக தியா னம் செய்வதும், வைத்தியரிடம் சென்று முத்துசாமி பிழைத்துக் கொள்வானாவென்று அடிக்கடி கேட்பதும், தமது ஆசனத்தை யடைந்து சோர்ந்து சிறிது மயங்கிக் கிடப்பதுமாக மாறி மாறிச் செய்துகொண்டே இருந்தார்.

அவ்வாறு அந்தப் பிற்பகல் வேளை கழிய, இரவு வந்து சூழ்ந்து கொண்டது. திவானாகிலும், வைத்தியராகிலும், மற்ற சிப்பந்தி களாகிலும் ஆகாரத்தையாவது, நித்திரையையாவது நினையாமல், தங்களது கவனம் முழுதையும் முத்துசாமியின் விஷயத்திலேயே செலுத்தி அதே கவலையாகவும் நினைவாகவும் இருந்து அந்தக்

கொடிய இரவைக் கழிக்கலாயினர்; மற்றவாது மன நிலைமையை விட திவான் முதலியாரினது மனம் பதினுயிரங் கோடி மடங்கு துன்பகரமாகவும் விசன நிறைவாகவும் மாறிக் கொடிய நரக வேதனையில் ஆழ்ந்துபோ யிருந்தது. அவர் ஒரு நிமிஷமும் ஓய்வின்றிக் கடவுளை நினைத்து ஸ்தோத்திரம் செய்தபடியும் தமது நிலைமையைப் பற்றிப் பலவாறு சிந்தனை செய்தபடியும் இருந்தார். "என்னேடு உயிருக் குயிராய்ப் பொருந்தி வாஞ்சையும், பணிவும், மிருதுத் தன்மையும், கபடமற்ற உண்மையானகுணமும்வடிவெடுத்ததுபோல இதுவரையில் நடந்துவந்த அருமைக் கண்ணுட்டியான என் காந்திமதியும் இப்படிச் செய்திருப்பாளா! என்ன அதிசயம் இது! இப்படியும் உலகத்தில் நடக்குமா! மனத்திற்குள்கபடநினைவையும் திருட்டுக் குணத்தையம் வைத்து, அது சிறிதும் வெளியில் தெரியாமல் மறைத்துக்கொண்டு இத்தனை வருஷகாலம் இவள் என்னிடம் கபட நாடகம் நடக்க முடியுமா! இபள் அப்படிச் செய்திருப்பாளாஞல், இவளை என்னவென்று சொல்வது! தாசி, வேசைகளைக்காட்டிலும், கொடிய பாஷாணத்தைக் காட்டிலும், பயங்கரமான சர்ப்பத்தின் காலகோடி விஷத்தைக் காட்டிலும் லக்ஷம் கோடி மடங்குகொடிய மனதுவாய்ந்த பரமதுஷ்டையென்றல்லவா இவளை நான் மதிக்கவேண்டும். ரோஜாப்புஷ்பம், தாமரைப் புஷ்பம், மாந்தளிர் முதலியவற்றைக் காட்டிலும் மகா மிருதுவான குணமும், நடத்தையும் வார்த்தையும் வாய்ந்துள்ள இந்த மெல்லியலாள் வெளிப்பார்வைக்கு மாத்திரம் இப்படிக் காட்டிக்கொண்டு உள்ளுக்குக் காலகோடி விஷத்தை அடக்கிக்கொண்டிருப்பதுசாத்தியமான செய்கையா? இதை நினைக்க நினைக்க, என் அறிவு குழம்பிப் போகிறதே! மூளை தெறித்துப் போகும்போ லிருக்கிறதே! இதன் உண்மையை நான் எப்படி நிச்சயிக்கப் போகிறேன். முத்துசாமி, அவன் ஒப்புக்கொண்டது போல, பண ஆசையினுலும், என் மனையாட்டியின் மேல் வைத்திருந்த அபாரமான மதிப்பினுலும், மதியிழந்து இந்தக் காரியத்தைச் செய்ய இணங்கினுலும், இவனிடம் நற்குணம் இல்லாமல் போகவில்லை. இவன் கடைசியில் என்னிடம் வெளியிட்ட விஷயங்களில் பொய்க்கலப்பு இராதென்பது நிச்சயம். யாரோ ஒரு மனிதன் திருவடமருதூரிலிருந்து திருவநந்தபுரத்திற்கு வந்து, அவ்விடத்தில் சுமார் ஒரு மாசகாலம் இருந்ததும், காந்திமதியம்மாள் கொடுக்கச் சொன்னதாக ஐயாயிரம் ரூபாய் கொடுத்ததும் உண்மையேயன்றி சிறிதும் பொய்யல்ல. ஆனுல்,

அவள் உண்மையில் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறாளா, அல்லது, வேறே எவராகிலும் இவ்வாறு பொய்யானதகவலைச்சொல்லி முத்து சாமியை சுலபத்தில் ஏமாற்றும்படி திட்டம்செய்து அனுப்பி இருப் பார்களா என்பதும் நிச்சயமாகத் தெரியவில்லை. காந்திமதியம்மாள் இதில் சம்பந்தப்படாவிட்டாலும் கூட, வேறே யாரோ ஒருவர் என்னைக் கொல்ல வேண்டுமென்று தீர்மானித்திருப்பது நிச்சய மாகத் தெரிகிறது. எனக்குத் தெரிந்தவரையில் நான் யாருக்கும் அற்ப கெடுதலும் செய்ய நினைக்கவில்லை யாதலால் எனக்கு இந்த உலகில் எவரும் பகைவரே இல்லையென்பது நிச்சயம். அப்படி யானால் என்னைக் கொல்லவேண்டுமென்ற விபரீதமான சங்கற்பத் தோடு இருப்பது யார்? அவரது உள்கருத்து எதுவாக இருக்கலாம்? எனக்குத் தெரியாமல் யாராவது பங்காளிகள் இருப்பார்களா? அவர் கள் என்னைக் கொன்று விட்டால் என்னுடைய சொத்துகளை யெல்லாம் அடையலாமென்று எண்ணுகிறார்களா? நான் இறந்து போனால், என் தகப்பனார், மகன், என் மனையாட்டி ஆகிய மூவ ரும் இருக்கையில் என் சொத்து பங்காளியை எப்படிச் சேரும்? என்னைக் கொல்ல யத்தனித்தது போல, அந்தப்பங்காளிகள் மற்ற மூவரையும் கொல்ல இனி ஏதாவது ஏற்பாடு செய்வார்களோ? அல்லது, நான் இந்த சமஸ்தானத்து திவான் உத்தியோகம் பார்ப் பது எவருக்காகிலும் இடைஞ்சலாக இருக்குமோ? அதனால் என் னைக் கொன்றுவிட எத்தனிக்கிறார்களோ? ஒருவேளை அதுதான் நிஜமாய் இருக்கலாம். அல்லது, விஷயம் இன்னொரு மாதிரியாக வும் இருக்கலாம். என் மனையாட்டியான காந்திமதியம்மாளின் நற் குணங்களையும் அழகையும் கண்டு எவனாவது அவளிடம் துர்மோகம் கொண்டு, அவளை அடைய எண்ணி, அதற்குப் பூர்வ பீடிகையாக என்னைக் கொல்ல நினைத்திருப்பானோ? உண்மை எதுவென்பதை இப்போது எப்படி நிச்சயிக்கிறது. ஆயினும், ஒரு விஷயம் மாத் திரம் நிச்சயமாகப் படுகிறது. முத்துசாமி வெளியிட்ட வரலாற் றின் பிரகாரம் என் காந்திமதிக்கு ஆதிமுதல் ஓர் ஆசை நாயகன் இருந்து, அவன் என்னைக் கொல்ல யத்தனித்திருப்பதாக வைத்துக் கொண்டு பார்க்கும் பட்சத்தில், இதுவரையில் அவனுடைய துரா சையைப் பூர்த்தி செய்துவைத்த கடவுள், கடைசியில் இந்தப் பாஷாண விஷயத்தில் மாத்திரம் அவனுடைய கருத்துநிறைவேறாமல் போகும்படி செய்த காரணமென்ன? அவன் எனக்குப் பாஷாண மிட்டு என்னைக் கொல்வது அக்கிரமச் செய்கையென்று கண்டு கட

வுள் இதைத் தடுத்திருக்கும் பக்ஷத்தில், கடவுள் சாக்ஷியாய் எனக்கு மனையாட்டியாக வரப்போகும் இவளை அவன் திருட்டுத்தனமாய் அபகரிக்கவும், அவர்களிருவருக்கும் கள்ளநட்பு ஏற்படவும் கடவுள் எப்படி அநுமதி கொடுத்திருப்பார்? அவர் தவறாத நீதிவானாக இருந்தால் அதையும் நடவாமல் தடுத்திருக்க வேண்டுமல்லவா? ஆகவே, நான் என் அரிய மனையாட்டியின்மேல் உடனே சம்சயம் கொள்வது நியாயமல்ல; ஆயினும் இது மகாவிபரீதமான சம்பவமாதலால் இதை நான் அலட்சியமாக மதித்து இவ்வளவோடு விட்டு விடுவதும் யுக்தமாகத் தோன்றவில்லை. நான் ஏதாவது தந்திரம் செய்து, என்னைக் கொல்ல உத்தேசித்த மனிதர் யார் என்பதைக் கண்டு கொள்ளவேண்டும். கண்டபின், அவர்களுடைய கோரிக்கை நியாயமானதாக இருந்தால் அதை நானே பூர்த்தி செய்விக்க வேண்டும்" என்று திவான் பலவாறு எண்ணமிட்டு ஆக்ஷேபனை சமாதானங்கள் செய்துகொண்டே இருந்து, அன்றைய இரவைக் கழித்தார். ஆயுள்வேத வைத்தியரும் மற்ற ஜனங்களும் ஒன்று கூடி இரவு முழுதும் அரும்பாடுபட்டு முத்துசாமியின் உயிர் போகாமல் காப்பாற்றி அவனது வாந்தியும் பேதியும் நிற்கும்படி செய்தார்கள். வைத்தியர் சிறந்த நிபுணராதலால், அவரது ஔஷதங்கள் ஒன்றன்பின்னொன்றாக இராமபாணம்போலச் சென்று, இரத்தத்தில் கலந்து கொண்டிருந்த பாஷாணத்தை முறித்து விலக்கிப் பிரித்து வெளிப்படுத்தி, பொழுதுவிடிவதற்குள் இரத்தத்தைச்சுத்தி செய்து விட்டன. அவனது தேகத்தில் உயிரின் ஒரு திவலைமாத்திரம் மிஞ்சி நின்றதென்றே நாம் கூறவேண்டும். அத்தகைய நிலைமையில் அவன் அநேகமாய்ப் பிணம்போலவே கிடந்தான். இரவு முற்றிலும் அவனது குடல், வயிறு முதலிய கருவிகள் ஸ்தானபேதப் பட்டு நிலைதடுமாறிப் புண்பட்டு ஒரே ரணம்போல மாறிப்போய் விட்டமையால், அவைகளை ஆற்றி மறுபடியும் அவனுக்குப் பலமுண்டாக்கக் குறைந்தது இரண்டு தினங்களாகிலும் செல்லுமென்று வைத்தியர் கூறிவிட்டார். ஆயினும், அவன் அந்தக் கண்டத்திற்குத் தப்பிப் பிழைத்தானென்ற சந்தோஷச் செய்தி திவானையும் மற்ற எல்லோரையும் அளவற்ற சந்தோஷத்தில் ஆழ்த்தி மகிழ்விக்கச் செய்தது. அவன் பிழைத்துக் கொண்டானென்ற செய்தி திவானினது மனத்தின் துயரச்சுமையில் பெரும் பாகத்தையும் விலக்கியது. அவர் தமது சொந்த மனவேதனைகளினிடையில் அடிக்கடி எழுந்து போய்ப் போய் முத்துசாமியின் தேறுதலைக் கவனித்து வந்தார்.

அன்றையதினம் முழுதும் முத்துசாமி உயிரற்ற வெற்றுடல் போலவே கிடந்தான். ஆயினும் வாந்தி, வயிற்றுப்போக்கு முதலிய கெட்ட குறிகள் அடியோடு நின்று போயின. ஆயுள்வேத வைத்தியர் தமது பசியையாவது, தாகத்தையாவது, தூக்கத்தையாவது, தேக அலுப்பையாவது, பொழுதையாவது சிறிதும் பொருட் படுத்தாமல் முத்துசாமிக் கருகிலேயே இருந்து, அடிக்கடி மாறுபட்ட அவனது நிலைமைக்குத் தக்கபடி ஔஷதங்களையும், சிகிச்சைகளையும் பிரயோகம் செய்து கொண்டே இருக்க, அன்றைய பகலும் இரவும் கழிந்தன. முத்துசாமி நீராகாரம் பருகி இரவு பகல் தூங்கித் தூங்கி விழித்தானதலால், அவன் வலுவடைந்து தெளிவு பெற்று மறுநாட் காலையில் எழுந்து உட்கார்ந்தான். "அரண்மனை வைத்தியர் பாஷாணம் தின்றவனைப் பிழைக்கவைத்து விட்டார்" என்ற செய்தி அந்த ஊர் முழுதும் பரவியதாகையால், அந்த ஊர் வாசிகள் அனைவரும் அவரை அபாரமாகப் புகழ்ந்து அதே பேச்சாய்ப்பேசத் தொடங்கினர். அவர்களுள் பலர் கும்பல் கும்பலாக வந்து விஷமுண்டு பிழைத்தவனையும், அவனைப் பிழைக்க வைத்த வைத்திய நிபுணரையும் பார்த்துத் தமது வியப்பையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தி விட்டுச் சென்றனர். கூடாரத்திலிருந்த சிப்பந்திகளும் வைத்தியரும் முத்துசாமி பிழைக்க வேண்டுமே என்ற அபாரமான கவலையும் ஏக்கமும் விசனமும் கொண்டு தவித்து, அவன் தேறத் தேறத் தாங்களும் தெளிவடைந்து, அவன் தப்பிப் பிழைத்தானென்பதை உணர்ந்தவுடன் மிகுந்த களிப்பும் குதூகலமும் கொண்டு ஒருவரோடொருவர் மகிழ்ச்சியாகவும் வேடிக்கையாகவும் பேசத் தலைப்பட்டனராலும், திவான் ஒருவரே அதற்கு மாறான மன நிலைமையைக் கொள்ளத் தொடங்கினர். முத்துசாமி பிழைக்க வேண்டுமே என்ற கவலையும் அச்சமும் இருந்த வரையில் திவானினது கவனம் முழுதும் தமது சொந்த விஷயங்களை விடுத்து அவன் மீதே சென்று கொண்டிருந்தது. அவனது அபாயம் நீங்கிவிட்டது. அவன் பிழைத்துக் கொண்டான் என்ற நிச்சயம் ஏற்படவே, அவரது முகத்தில் மேகப்படலங்கள் சூழ்ந்து அதிகரித்து அடரத் தொடங்கின. தமது மனையாட்டியைப் பற்றிய நினைவு சதாகாலமும் தோன்றித் தோன்றி அவரது மனத்தைப் புண்படுத்தி எண்ணிறந்த சிந்தனைகளையும் சந்தேகங்களையும் கொண்டு தத்தளிக்க வாரம்பித்தது. தம்மீது அவ்வளவு அதிகமான பகைமை பாராட்டித் தம்மைக் கொல்ல எண்ணத் தக்க பெரிய விரோதி யாரும் தமக்கு இந்த

உலகில் இல்லையென்ற எண்ணம் உண்டாக உண்டாக, ஒருகால் முத்துசாமி கூறியதே உண்மையாக இருக்குமோ என்ற சம்சயம் பலமாக எழுந்து வதைக்கத் தொடங்கியது. "ஜனங்கள் நெருப்பில்லாமல் புகையுண்டாகாதென்று சொல்லுவார்களல்லவா? ஆகையால், ஏதேனும் சொற்பமாவது உண்மையில்லாமல் காந்திமதியம்மாளின்மீது இப்படிப்பட்ட அபவாதம் உண்டாயிருக்காது. சொல்லாமல் பிறவாது, அள்ளாமல் குறையாது என்ற சொல் பொய்யானதல்ல. அவள் முத்துசாமி சொன்னபடி முழுதும் சம்பந்தப்பட்டிருக்கிறாளா, அல்லது, சிறிதளவு சம்பந்தப்பட்டிருக்கிறாளா, அல்லது, அவள்பேரில் சொல்லப்பட்டது சுத்த அபாண்டமான கற்பனையா என்பதை நான் நிச்சயிக்கவேண்டும்; இது முதல் வேலை. இரண்டாவது வேலை, இவள் இதில் சம்பந்தப்படவில்லையானால், வேறே யார் இந்தக் காரியத்தைச் செய்யத் தூண்டியது, அப்படிச் செய்யத் தூண்டியவர்கள் நான் இறந்த பிறகு அதனால் எவ்விதமான நன்மையை அடைய எண்ணுகிறார்கள் என்று கண்டு பிடிக்க வேண்டும். மூன்றாவது அவர்களது கோரிக்கை நியாயமானதாக இருந்தால், அதை நானே நிறைவேற்றி வைக்கவேண்டும். இதற்குத் தகுந்த தந்திரம் எதையாவது நான் செய்யவேண்டும்" என்று திவான் முதலியார் ஒருவிதமான முடிவிற்கு வந்தார். முத்துசாமி பாஷாணமுண்ட தினத்திலிருந்து மூன்றாவது நாளைய இரவில் அவர் தமது போஜனத்தை முடித்ததாகக் காட்டிவிட்டுத் தமது சயனத்தையடைந்து அதன்மீது சாய்ந்த வண்ணம் காந்திமதியம்மாளையும் ராஜாபகதூரையும் நினைத்து மன நைந்துருகிக் கண்ணீர் விடுத்துப் பாகாய் நெகிழ்ந்தோடிக் கொண்டிருந்த தருணத்தில் அவரது இன்னொரு சமையற்காரனான கந்தன் பதுங்கி ஒதுங்கித் தத்திக் குதித்துக்கொண்டு அவருக்கெதிரில் பணிவாக வந்து நின்று தனது கைகளிரண்டையும் குவித்து அவரை நமஸ்கரித்தபடி வணக்கமாக நின்றான்.

எதிர்பாரா வகையில் அவனைக் கண்ட திவான் திடுக்கிட்டெழுந்து உட்கார்ந்து தமது கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அவன் தம்மிடம் முக்கியமான செய்தி எதையோ சொல்ல வந்திருக்கிறானென்று நினைத்து, "ஏனப்பா! கந்தசாமீ! எங்கே வந்தாய்? மறுபடியும் முத்துசாமி வேலைக்காரப் பெண்ணுக்கு எதையாவது கொடுத்தானா? அல்லது, வேறே ஏதாவது விசேஷம் உண்டா?" என்று அன்பாகவும் பிரியமாகவும் அவனிடம் வினவினர்.

அவரது சொற்களைக் கேட்ட கந்தன் அவமானத்தினாலும் அச்சத்தினாலும் குன்றிப்போய் ஒருவித நடுக்க மடைந்தானாயினும் தன்னை ஒருவாறு அமைதிப்படுத்திக்கொண்டு நிரம்பவும் வணக்கமாகவும் மரியாதையாகவும் திவானை நோக்கி, "எஜமானே! தாங்கள் அன்றைய தினம் கோபித்துக்கொண்டு எனக்குப் புத்தி சொல்லியதைக் கேட்டும் நான் மறுபடி முத்துசாமியின்மேல் புகார் சொல்வேனா? ஒருநாளும் சொல்ல மாட்டேன். அதுவுமன்றி, அவன் இப்பொழுதுதானே செத்துப்பிழைத்தான். அவன் உண்மையிலேயே இப்போது ஏதாவது தவறு செய்திருந்தாலும், இந்த சமயத்தில் தானா நான் அவன்மேல் புகார் சொல்வேன்? நான் வேறே யாரைப் பற்றியும் எதையும் சொல்ல வரவில்லை. என் சொந்த விஷயமாக நான் எஜமானிடம் ஒரு மனுச்செய்துகொள்ள வந்தேன். எஜமானுடைய உத்தரவு ஆனால் சொல்லுகிறேன். எஜமானுக்கு இப்போது அசந்தர்ப்ப சமயமாயிருந்தால், நான் நாளையதினம் வந்து விக்ஞாபனம் செய்து கொள்ளுகிறேன்" என்று நிரம்பவும் விநயமாகக் கூறினான்.

அதைக் கேட்ட திவான் அவனை நோக்கிப் புன்னகை செய்து நிரம்பவும் பட்சமாகப் பேச வாரம்பித்து, "ஓகோ! அப்படியா! உன் சொந்த விஷயமாகவா என்னோடு பேச வந்தாய்! சரி; அப்படியானால் சொல்லப்பா! என்ன விசேஷம்?" என்றார்.

உடனே கந்தன், "எஜமானே! நான் என்னுடைய சொந்த ஊரை விட்டுத் தங்களிடம் வேலைக்கு வந்து இரண்டு வருஷத்துக்கு மேல் ஆகிறதென்பது தங்களுக்குத் தெரிந்த விஷயம். நான் என் சொந்த ஜனங்களைப் பார்த்து எத்தனையோ வருஷகாலம் ஆய்விட்டதுபோல என் மனசில் ஒருவிதமான ஏக்கம் இருந்து வருகிறது. அதுவுமன்றி எனக்கு இப்போது வயசு முப்பது ஆகிறது. எங்கள் சொந்த மனிதர் வீட்டில், கலியாணம் செய்யத்தக்க பருவமடைந்த பெண் இருப்பதாயும், அதை எனக்குக் கட்டிக்கொடுக்க அவர்களுக்குப் பிரியமென்றும் கடிதம் வந்துகொண்டே இருக்கிறது. எனக்குப் பூர்வீகமான நிலம் கொஞ்சம் இருக்கிறது. அது சுமார் எழுநூறு எண்ணூறு ரூபாய் பெறும். அது என் தகப்பனார் காலம் முதல் ஒருவரிடம் முந்நூறு ரூபாய்க்கு அடமானமாக இருந்து வருகிறது. நான் ஊருக்குப் போய் அந்த நிலத்தை விற்று கடனைக் கொடுத்து விட்டு மிகுதி இருக்கும் பணத்தை வைத்துக் கொண்டு

என்னுடைய கலியாணத்தை ஒருவிதமாக முடித்துக் கொள்ளலா மென்று நினைக்கிறேன். அதுவுமன்றி, நான் இந்த இரண்டு வருஷ காலம் தங்களிடம் சேவித்ததில் ஒரு நானூறு ரூபாய் சேர்ந்திருக்கிறது. அதைவைத்துக்கொண்டு நான் அவ்விடத்திலேயே ஒரு சின்ன வியாபாரம் எதையாவது செய்து சொந்த ஊரிலேயே இருந்து என் ஜீவனத்தை நடத்தவேண்டுமென்ற எண்ணம் என் மனசில் இருந்து வருகிறது. இவ்விடத்தில் முத்துசாமிக்கும் சௌக்கியமாகி விட்டது. நாளையதினம் அவன் அநேகமாய் வேலைக்கு வரக்கூடிய நிலைமையி லிருக்கிறுன்; ஆகையால், நாளையதினம் முதலே எஜமானர் எனக்கு உத்தரவு கொடுத்தனுப்பினல் நலமாக இருக்கும்" என்று நிரம்பவும் வணக்கமாகக் கூறினன்.

அதைக் கேட்ட திவானினது மனத்தில் ஒருவித சந்தேகம் தோன்றியது. முத்துசாமி பாஷாணங் கலந்து வடை தயாரித்த அன்றையதினம் தமக்கும் அவனுக்கும் நடந்த சம்பாஷணையை ஒருவேளை கந்தன் கேட்டிருந்து, பாஷாணம் வைத்துக் கொல்ல நினைத்தவனை முத்துசாமியுடன் கூட இருந்து வேலை செய்வது அபாயகரமானதென்று நினைத்து, அவன் தம்மை விட்டுப் போய் விட எண்ணுகிருனே என்ற சந்தேக முதித்தது. ஆயினும், அவன் கலியாணம் செய்துகொள்ள வேண்டிய நிலைமையிலிருந்தது உண்மையான விஷயமாதலால், அவனைத் தடுக்கவாவது, அவனது உண்மையான கருத்து என்னவென்று கேட்கவாவது திவான் எண்ணவில்லை.

ஆகவே, திவான் மிகுந்த அன்பும் பிரியமும் தோற்றுவித்து அவனை நோக்கி, "கந்தா! நீ கலியாணம் செய்து கொள்ளவேண்டியது முக்கியமான விஷயமே. கலியாணம் செய்து கொண்டபின், யௌவனப் பிராயத்தினளான உன்சம்சாரத்தைத் தனிமையில் அழைத்துக் கொண்டு நீ இவ்வளவு தூரத்தில் மறுபடி வந்து வேலை பார்ப்பதும் உசிதமான காரியமல்ல. ஆகையால், நீ செய்திருக்கும் தீர்மானம் சரியானதே. அதை நான் முழு மனசோடு ஆமோதிக்கிறேன். நீ அப்படியே செய்யப்பா! உன்னுடைய சொந்த ஊர் எது? மாயவரமா?" என்றார்.

அவர் அவ்வளவு எளிதில் தனது கோரிக்கையை ஏற்றுக்கொண்டது பற்றி மிகுந்த மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைந்த கந்தன், "இல்லை எஜமானே! என்னுடைய சொந்த ஊர் தஞ்சாவூருக்குப் பக்கத்திலுள்ள கண்டியூர்" என்றுன்.

திவான், "அப்படியா! கண்டியூரா! சரி; நாளைக்கா புறப்பட்டுப் போகப் போகிறாய்?" என்றார்.

கந்தன், "ஆம். எஜமான் உத்தரவு கொடுத்தால், விடியற் காலையிலேயே புறப்பட்டுப் போக்குவண்டியில் ஏறிக்கொண்டு போக லாமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். நானென்ன மூட்டை கட்ட வேண்டுமா? வேறே ஏற்பாடுகள் செய்யவேண்டுமா? ஒன்று மில்லை. என் வேஷ்டிகளை எடுத்துக்கொண்டு புறப்பட்டால் பிரயா ணம் ஆய்விட்டது" என்றான்.

திவான், "சரி, அப்படியே செய். உனக்கு என்னிடத்தி லிருந்து எவ்வளவு சம்பளம் சேரவேண்டும்? சொன்னால், உடனே தருகிறேன்" என்றார்.

கந்தன், "எஜமானே! நேற்றுதானே முதல் தேதி. போன மாசத்துச் சம்பளத்தை நான் நேற்று தங்கள் குமாஸ்தாவிடம் வழக் கப்படி வாங்கிக்கொண்டு விட்டேன். எனக்குப் பாக்கி ஒன்று மில்லை. எஜமானருடைய உத்தரவும் ஆசீர்வாதமுந்தான் எனக்குக் கிடைக்கவேண்டும். வேறொன்றுமில்லை" என்றான்.

அவனது பெருந்தன்மையைக் கண்ட திவானினது மனம் இளகி ஒருவித மகிழ்ச்சியடைந்தது. அவர் அவனைநோக்கி, "அப்பா, கந்தசாமீ! நீ நேற்று இன்று ஆகிய இரண்டு தினங்களும் இங்கே வேலை செய்திருக்கிறாய். இந்த இரண்டு தினங்களுக்கும் நான் உனக்குச் சம்பளம் கொடுக்கக் கடமைப்பட் டிருக்கிறேன். அதுவு மன்றி, நீ ஊருக்குப் போய்ச் சேருகிற வரையில் உனக்குப் பிடிக் கும் பிரயாணச் செலவையும் நான் கொடுக்க வேண்டியவன். அப் படி இருக்க, உனக்குச் சேரவேண்டிய பாக்கி ஒன்றுமில்லையென்று நீ சொல்வது சரியல்ல. அதிருக்கட்டும். நீ சாப்பிட்டாய் விட் டதா?" என்றார்.

கந்தன், "இல்லை எஜமானே! தாங்கள் தூங்குவதற்குள் விஷ யத்தைத் தங்களிடம் சொல்லி உத்தரவு பெற்றுக்கொண்டு போய்ப் பிறகு என் சாப்பாட்டைக் கவனிக்கலாமென்று நினைத்தேன்" என்றான்.

திவான், "சரி; நீ போய் அந்தக் காரியத்தை முடித்துக் கொண்டுவா; அதற்குள் நான், உனக்குச் சேரவேண்டிய பணத்தை எடுத்து வைக்கிறேன்" என்றார்.

உடனே கந்தன், "எஜமானே! தாங்கள் எனக்கு முழு மனதோடு உத்தரவு கொடுத்ததே என் மனம் குளிரும்படி செய்துவிட்டது. தாங்கள் இதுவரையில் எனக்கு எவ்வளவோ பொருள் கொடுத்திருக்கிறீர்கள். இரண்டு நாளைய சம்பளத்தைப் பொருட்படுத்திக் கணக்கு வைத்து நான் கேட்கவில்லை. தாங்கள் படுத்து நித்திரை செய்யப்போகும் சமயத்தில் அதற்கு பங்கமாகத் தாங்கள் எழுந்து போய்ப் பணம் எடுத்து எனக்குக் கொடுக்க வேண்டியதில்லை. தயைசெய்து தாங்கள் தூங்கலாம். பணத்தைப் பற்றி அக்கரை இல்லை" என்று நிரம்பவும் பணிவாகக் கூறினான்.

அதைக் கேட்ட திவான், 'இல்லையப்பா! எனக்குத் தூக்கம் பிடிக்க இன்னம் வெகுதூரம் ஆகும். அதைப்பற்றி நீ கிலேசப் படவேண்டாம். நீபோய் உன் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அவசியம் வந்துவிட்டுப் போ" என்றார்.

கந்தன் அதற்கு மேலும் அவரை மறுத்துப் பேசமாட்டாதவனாய் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு அவ்விடத்தை விட்டு சமையலறைக்குப் போய்க் கால்நாழிகை காலத்தில் தனது போஜனத்தை முடித்துக்கொண்டு மறுபடி மெதுவாகவும் சந்தடி செய்யாமலும் தயங்கித் தயங்கி நடந்து திவானுக்கெதிரில் வந்து நின்றான்.

அவனைக் கண்ட முதலியார், "கந்தசாமீ! அதோ மேஜையின் மேல் ஒரு காகிதப் பொட்டலம் இருக்கிறதே. அதை எடுத்துக்கொள். உனக்குச் சேரவேண்டிய பணம் அதில் இருக்கிறது" என்றார்.

உடனே கந்தன் அவர் காட்டிய காகிதப் பொட்டலத்தைஎடுத்துக் கையில் வைத்துக்கொண்டு அவரைநோக்கிக் கீழே குனிந்து நிரம்பவும் பணிவாகவும் உருக்கமாகவும் நமஸ்காரம் செய்து, "எஜமானே; உத்தரவு வாங்கிக் கொள்ளுகிறேன். எஜமானியம்மாளும் இங்கே இல்லை. தாங்கள் தங்கள் உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளவேண்டும். நான் ஊருக்குப் போய் என் காரியங்கள் எல்லாம் முடிந்தபிறகு கடிதம் எழுதுகிறேன். எஜமானருடைய ஆசீர்வாதமும் அன்பும் எப்போதும் இந்த ஏழையின்மேல் இருக்கவேண்டும். நான் இந்த இரண்டு வருஷகாலம் இங்கேஇருந்ததில் தெரிந்தோ தெரியாமலோ நான் எத்தனையோ தவறுகள் செய்

திருக்கலாம். எதையும் எஜமானர் மனசில் வைக்கக்கூடாது. இந்த ஏழை தங்களுக்கு ஒரு காலத்தில் அடிமையாய் இருந்தவன் என்ற ஞாபகம் ஒரு மூலையில் இருக்கவேண்டும். எஜமானே! நான் போய் வருகிறேன். தாங்கள் தூங்குங்கள். உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் அடிக்கடி குமாஸ்தாவுக்குக் கடிதம் எழுதி எஜமானருடைய க்ஷேமத்தைப்பற்றி விசாரித்துக்கொண்டே தானிருப்பேன். நான் ஊருக்குப் போனவுடன் ஒருநடை திருவடமருதூருக்குப் போய் எஜமானியம்மாளுக்குக் கால் கும்பிட்டு குழந்தையையும் பார்த்துவிட்டுத்தான் வரப்போகிறேன். எஜமானே! உத்தரவு கொடுங்கள்" என்று நிரம்பவும் உருக்கமாகவும் பணிவாகவும் தழுதழுத்த குரலிலும் கூறி அவரை மறுபடியும் வணங்கி நமஸ்கரித்தான். அதைக் காண திவானினது மனம் இளங்கியது. அவரது கண்களில் ஆநந்தக் கண்ணீர் துளித்தது; அவர், "அப்பா! கந்தசாமி நீ போய்க் கலியாணம் செய்துகொண்டு க்ஷேமமாயிரு. உன்னுடைய நல்ல குணத்துக்கும் நல்ல நடத்தைக்கும் தக்கபடி கடவுளின் அநுக்கிரகம் உனக்குப் பூர்த்தியாக ஏற்படும். போய் உன் க்ஷேமலாபத்தைப்பற்றி எனக்கே நீ அடிக்கடி கடிதம் எழுது" என்றார்.

அதைக் கேட்ட கந்தன் மறுபடி பன்முறை குனிந்து குனிந்து கும்பிட்டு அவரை விட்டுப் பிரியச் சிறிதும் மனமற்றவனாய் அவ்விடத்தை விட்டு வெளியில் போனான்.

போனவனுக்கு அவனது ஆவேசம் அடங்க கால்நாழிகை நேரம் பிடித்தது. அதன்மேல் தனது கையிலிருந்த காகிதப்பொட்டலத்தின் நினைவு உண்டானதாகையால், அதைப்பிரித்து அதற்குள்ளிருந்த பணத்தை, அதற்குமுன் தான் தனது துணிமூட்டையில் முடிந்து வைத்திருந்த பணத்தோடு சேர்த்து முடியவேண்டுமென்ற எண்ண முதித்ததாகையால், அவன் உடனே அந்தக் காகிதப்பொட்டலத்தை எடுத்துப் பிரித்துப்பார்த்தான். பார்க்கவே, அவனுக்குக் குலைநடுக்கம் எடுத்துக்கொண்டது. அவனது தேகம் கிடுகிடென்று ஆடத் தொடங்கியது. அபாரமான திகிலும் வியப்பும் அவனது மனத்தில் எழுந்தன. அந்தப் பொட்டலத்தில் திவான் இரண்டு அல்லது மூன்று ஐந்து ரூபாய் நோட்டுகளை வைத்திருக்கலாமென்று அவன் நினைத்ததற்கு மாறாக, அதற்குள் ஆயிரம் ரூபாய் நோட்டுகள் நான்கும், நூறு ரூபாய் நோட்டுகள் நான்கும் இருந்தன. அவைகளைக் காண, அவனுக்கு சித்தப்பிரமை உண்டாகிவிட்டது. அவ

னது அறிவு மங்கியது. கண்கள் பூத்துப்போக, எதிரில் இருப்பது இன்னதென்பதே தெரியாமல் போயிற்று. திவான் தூக்கக் கலக்கத்தில் நோட்டுகளைத் தவறுதலாக எடுத்து வைத்திருப்பாரோ, அல்லது, தனது நாணயத்தைப் பரீட்சிப்பதற்காக அவ்வாறு செய்திருப்பாரோ என்ற பல நினைவுகள் தோன்றின. அவன் உடனே திவானுக்கெதிரில் ஓடிப் பதைபதைத்து நின்று நிரம்பவும் வணக்கமாகவும் அச்சத்தோடும் அவரை நோக்கி, "எஜமானே! இந்தப் பொட்டலம் எனக்காக வைக்கப்பட்ட பொட்டலமல்ல. இதில் நாலாயிரத்து நானூறு ரூபாய் பெறுமானமுடைய நோட்டுகள் இருக்கின்றன. வேறே எந்தச் செலவுக்காவது உத்தேசித்து இதை வைத்தீர்களோ, அல்லது, இராத்திரி வேளையாகையால், வெளிச்சக் குறைவினால் தப்பான நோட்டுகளை வைத்துவிட்டீர்களோ என்னவோ தெரியவில்லை. நோட்டுகளெல்லாம் அப்படியே இதோ இருக்கின்றன. எண்ணிப் பார்த்து எடுத்துப் பெட்டியில் பத்திரப் படுத்துங்கள். எனக்குப் பணமே வேண்டாம்" என்று பயபக்தி விநயத்தோடு கூறியவண்ணம் நோட்டுகளை யெல்லாம் அவருக் கெதிரிலிருந்த மேஜையின்மீது வைத்துவிட்டான்.

அதைக் கண்ட திவான் பெருந்தன்மையாக அவனை நோக்கிப் புன்னகை செய்து, "கந்தசாமீ! நான் தவறாக இந்த நோட்டுகளை உனக்குக் கொடுத்ததாகவா நீ எண்ணிக்கொண்டாய்! சே! நான் என் மனப்பூர்வமாய் உனக்குக் கொடுக்க வேண்டுமென்றே நான்கு ஆயிரம் ரூபாய் நோட்டுகளையும் நான்கு நூறு ரூபாய் நோட்டுகளையும் வைத்துப் பொட்டலம் கட்டிக் கொடுத்தேன். நோட்டுகளை நேரில் கொடுத்தால் நீ வாங்கிக்கொள்ள ஆட்சேபிப்பாயென்று நினைத்து நான் பொட்டலங்கட்டி மறைத்துக் கொடுத்தேன். நீ என்னிடம் இரண்டு வருஷகாலம் இருந்து எனக்கு உழைத்திருப்பதன்றி என்னை ஒரு தெய்வம்போல மதித்து உண்மையான பயபக்தி விசுவாசத்தோடு நடந்து கொண்டிருக்கிறாய். உன்னுடைய கடனைத் தீர்த்து உனக்குக் கலியாணம் செய்துவைத்து, உன்னை ஒரு வர்த்தகத்தில் அமர்த்தவேண்டிய பொறுப்பு என்னைச் சேர்ந்ததாயிற்று. எனக்குக் கடவுள் ஏராளமான செல்வத்தை அருளியிருக்கிறார். இந்தப் பணம் எனக்கு அற்பமானது; உனக்கோ இது மலை போன்றது. இதைக் கொண்டு உன் குடும்பம் க்ஷேமப்பட்டுப் போகும். ஆட்சேபனை சொல்லாமல் இதை நீ எடுத்துக் கொள்.

26

நீ இங்கே இருந்து ஊருக்குப் போய் உன் கடனைத் தீர்ப்பது வரையில் உனக்கு நானூறு ரூபாய் தீர்ந்துபோகும். பிறகு நாலாயிரம் ரூபாய் மிஞ்சும். ஆயிரம் ரூபாய்க்கு உன் சம்சாரத்துக்கு நகைகள் செய்து போடு. ஆயிரம் ரூபாயைக் கலியாணச் செலவுக்கு வைத்துக்கொள். மிகுதி இருக்கும் இரண்டாயிரம் ரூபாயை வைத்துக் கொண்டு உன் மனசுக்கு உகந்த வியாபாரம் எதையாவது செய். இந்தக் காலத்தில் குறைந்தது இரண்டாயிரம் ரூபாய் கூட முதல் வைக்காவிட்டால், அது ஒரு வியாபாரத்தில் சேர்ந்ததாகாது. ஆகையால், நான் எல்லா விஷயங்களையும் யோசனைசெய்தே இந்தத் தொகையை எடுத்துக் கட்டி வைத்தேன். நோட்டுகளை மேஜையில் வைக்காதே. எடுத்துக் கொள்; எடுத்துக்கொள்'' என்று அன்பாக வற்புறுத்திக் கூறினர். கந்தனுக்குத் தான் கண்டது கனவோ நனவோ என்ற சந்தேகம் ஏற்பட்டு விட்டது. அவன் தனது செவிகளையே நம்பாமல் பிரமிப்பும் மயக்கமும் அடைந்து இரண்டொரு நிமிஷ நேரம் ஸ்தம்பித்துப் போய் அப்படியே ஊமைபோல நின்று விட்டான். தாங்கவொண்ணுத அமிதமான ஆநந்தத்தினுல் அவனது மனம் பூரித்துப் பொங்கி எழுந்தது. அந்த அமிதமான எழுச்சியினுல் அவனது இருதயம் வெடித்துப் போய்விடுமோவென அஞ்சத்தக்க நிலைமை ஏற்பட்டது. அவன் முற்றிலும் மெய்ம்மறந்து பரவச மடைந்து திவானினது கால்பக்கத்தில் கீழே விழுந்து சாஷ்டாங்கமாக வணங்கி, “மகாப் பிரபுவே! காருண்ய வள்ளலே! கருணைக் கடலே! பேசுந் தெய்வமே! நானும் இதுவரையில் எத்தனையோ புண்ணியாத்மாக்களைப் பார்த்திருக்கிறேன்! இப்பேர்ப்பட்ட பெருந் தன்மையும் ஜீவகாருண்யமும் தயாளமும் வாய்ந்த உத்தமகுண புருஷரை நான் பார்த்ததே இல்லை. எஜமானே! எனக்கு எதற்காக இவ்வளவு பெரிய ஐசுவரியம்! என்னைப் போன்றவர்களெல்லோரும் உழைத்து பாடுபட்டுத் தங்களைப்போன்ற புண்ணியாத்துமாக்களுக்கெல்லாம் குற்றேவல் செய்யப் பிறந்தவர்களாயிற்றே. நாய்க்கு வால் அளந்து வைக்கப் பட்டிருக்கிறதென்று சொல்லுகிறபடி ஈசுவரன் ஒவ்வொருவனையும் அவனுடைய யோக்கியதைக்குத் தகுந்த நிலைமையில் தானே வைத்திருக்கிறுன். எங்களைப் போன்றவர்களுக்குத் திடீரென்று அபாரமான செல்வம் வந்துவிடுமானுல், உடனே செருக்கும், திமிரும், தானென்கிற ஆணவமும் உண்டாவதோடு நல்லவர் பெரியவர்களைப் பணியவேண்டுமென்ற சிரேஷ்ட குணமே

இல்லாமல் போய்விடுமே! நாலுகாசு அகப்பட்டு விட்டால், அதை வைத்துக்கொண்டு தலை கால் தெரியாமல் குதித்து ஊருக்கு அடங்காமல், ஜனங்களை இலட்சியம் செய்யாமல் பழைய கட்டுப்பாடுகளை மதியாமல், கண்டதே காட்சி கொண்டதே கோலமாய்ச் செய்து, முடிவில் அழிந்துபோகும்படி அது செய்து விடுமே! நிதான புத்தியும், எப்பொழுதும் பழைய நிலைமையை மறவாமல், நிறை தவறாமல், ஆணவம் கொள்ளாமல் நடக்கும் தன்மையும் உடைய புத்திமான்களுக்குத்தான் பெரிய செல்வம் உரியது; அவர்களிடம் தான் அது நீடித்து நிற்கிறது. யோக்கியதையற்ற மற்ற மனிதர்களிடம் செல்வம் உண்டாகுமானால், அது குடிக்கும், கூத்திக்கும், கள்வருக்கும், மோசக்காரருக்கும், கச்சேரிகளில் விரயம் செய்வதற்கும், வைத்தியர்களுக்குக் கொடுக்கவும், பங்காளிகள் அபகரிப்பதற்கும், இன்னம் இப்படிப்பட்ட அக்கிரமச் செலவுகளுக்குமே உபயோகப்படும். யோக்கியர்களிடம் இருக்கும் பொருள் அவர்களுக்கு நல்லவழி காட்டி அவர்கள் மேன் மேலும் அதிகரிக்கும் கீர்த்தியும் பெயரும் நற்குண நல்லொழுக்கமும் பெற்று க்ஷேமப்பட்டு அமோகமாய் வாழும்படி செய்கிறது. யோக்கியதை மற்றவர்களிடம் திடீரென்று வந்து சேரும் பொருள் அவர்களுக்குக் கெட்ட வழியையே காட்டி அவர்கள் மேன்மேலும் துர்க்குணங்களிலும் கெட்ட காரியங்களிலும் பழகி அபகீர்த்திக்கும் தூஷணைக்கும் நோய்க்கும் இலக்காய் முடிவில் அழிந்துபோகும்படி செய்கிறது. ஆகையால், செல்வத்தில் ஒன்றுமில்லை. மனிதரை உயர்த்துவதும் தாழ்த்துவதும் அவரவர்களுடைய குணமும் நடத்தையுமே யன்றிப் பணமல்ல. ஆனால், உலகத்திலுள்ள மனிதப் பதர்களுள் சிலர் அதிகப் பணம் படைத்தவன் எப்பேர்ப்பட்டவனானாலும் தமது சுயநலங் கருதி அவனிடம் சென்று அவனை இந்திரன் சந்திரன் என்று புகழ்ந்து அவனிடத்தில் அடிமைக்கும் அடிமையாக நடந்து கொள்ளுகிறார்கள். அப்படிச்செய்வதெல்லாம் அந்தப் போலிப் பணக்காரர்களை இன்னம் மேன்மேலும் கெடுக்கிற சாதனமே யன்றி வேறல்ல. இவைகளை எல்லாம் எண்ண எண்ண நான் நெடுநாளாக ஒருவித அபிப்பிராயத்தோடு இருந்து வருகிறேன். பணம் திடீரென்று அபாரமாய் வந்து எவனுக்கும் சேரக்கூடாது. அப்படி வந்தால், அதன் அருமை தெரியாதாகையால், அதைக் கிரமப்படி நடத்தவும், வைத்தாளவும் தேவையான அநுபவம் அவனுக்கு இராது. அது முடிவில் அவனுக்குக் கெடுதலே செய்

யும். மனிதன் உழைத்து உழைத்துக் காலக்கிரமத்தில் பொருள் தேடிச் சேர்ப்பானாயின் அதன் அருமை அவனுக்கு நன்றாகத் தெரியும். அதை நல்ல வழியில் உபயோகிக்க வேண்டுமென்றும், கெட்ட வழிகளில் விரயம் செய்யக் கூடாதென்றும், அவனுக்கு வேறே எவரும் சொல்லிக் கொடுக்கவேண்டிய அவசியமே இல்லை. மகாப் பிரபுவே! தங்களுக்குத் தெரியாத உலக வியவகாரம் நான் சொல்லிக் கொடுக்கப் போகிறேனா. இல்லை. எஜமானே! எனக்கு இவ்வளவு பெருத்த செல்வம் வேண்டாம், இது என்னைக் கெடுக்காவிட்டாலும், இதை வைத்துக் காப்பாற்றும் வல்லமை எனக்கு இல்லை. இதைப் பார்த்து ஒழுங்கா யிருக்கும் மற்றவர் துராசை கொண்டு இதை அபகரிக்க வேண்டுமென்றாவது ஏதேனும் மோசத்திலும் திருட்டிலும் கொலையிலும் இறங்கிக் கெட்டுப் போவார்கள். இது என்னையும் கெடுக்கும்; பிறரையும் கெடுக்கும். ஆகையால், இதைத் திருப்பி ஏற்றுக் கொள்ளுங்கள். இந்த ஏழையின்மேல் தங்கள் அன்பும் பட்சமும் மாறாமல் நீடித்து இருக்குமாயின், அதைக் காட்டிலும் நான் அடையத் தகுந்த பெருஞ் செல்வம் வேறொன்று மிராதென்று நினைக்கிறேன்" என்று கூறி எழுந்து கை கட்டி வாய் புதைத்து நின்றான்.

அவனது குணத்தழகையும், சொல்லழகையும் கண்ட திவான் முற்றிலும் பிரமித்து அளவற்ற மகிழ்ச்சியும், குதூகலமும் அடைந்து மிகுந்த வாஞ்சையும் உருக்கமும் தோன்ற, "அப்பா கந்தசாமீ! நான் என்னுடைய அநுபவத்தில் எத்தனையோ விதமான குணமுடைய மனிதர்களைப் பார்த்திருக்கிறேன். இவ்வளவு ஏழ்மை நிலைமையிலிருந்தும், பணத்தைக் கேவலம் துச்சமாக மதித்து அலட்சியமாய் விலக்கிய மனிதனைப் பார்த்ததே இல்லை. ஆகா! இதுவல்லவோ குணம்! இதுவல்லவோ தெய்விகச் செல்வம்! மனிதனுக்கு உள்ளதைக் கொண்டு திருப்தி அடையவேண்டுமென்ற மன அமைதியும், நிராசையும் ஏற்பட்டு விடுமானால், அவனிடம் ஒரு செல்லாக் காசுகூட இல்லையானாலும், செல்வத்தில் அவனே குபேரன்; புத்தியில் அவனே பிரஹஸ்பதி; அவனே சகலமான உத்தம குணங்களும் வாய்ந்த மகான்; நம்முடைய தேசத்தில் பூர்வீக காலங்களில் இருந்த மகரிஷிகளும தபோதனர்களும் இந்த நிலைமையை அடைவதற்காகவேதான் தமது ஆயுள் காலத்தையே செலவிட்டனர். மனிதன் இகபரம் ஆகிய இரண்டிலும் க்ஷேமப்படுவதற்கு இதுவே

சூக்ஷ்மமானவழி. எப்பேர்ப் பட்டவருக்கும் சித்திக்காத இந்த அரிய குணம் உன்னிடத்தில் இருப்பதைக் காண்பது எனக்கு நிரம்பவும் ஆநந்தமாக இருக்கிறது. அப்பா கந்தசாமீ! இந்த குணத்தை மாத்திரம் நீ எப்போதும் கைவிடாமல் நடந்துவந்தால், உனக்குக் கடவுள் ஒரு குறைவையும் வைக்கமாட்டார். ஒரு மனிதனுக்கு ஏராளமான செல்வம் இருக்குமானல், அவன் அதை நல்ல வழியில் செலவிடவேண்டுமென்று நீயே கொஞ்ச நேரத்துக்குமுன் சொன்னயல்லவா. எனக்குக் கடவுள் அபாரமான செல்வத்தைக் கொடுத்துக்கொண்டே இருக்கிருர். ஆனல், சாப்பிடுவதற்கு என் குடும்பத்தில் மனிதர்கள் அதிகமாக இல்லை. இருப்பவருக்கும், வயிறு கிடையாது. எவ்வளவு சாப்பிட்டாலும், செல்வம் மாளமாட்டேனென்கிறது. மிச்சப்படுவதை வைரங்களில்போட்டு நகைகளாக மாற்றி என் சம்சாரத்தின் உடம்பில் தொங்கவிட்டிருக்கிறேன். இன்னமும் மேன்மேலும் செல்வம் வந்துகொண்டே இருக்கிறது. என் சம்சாரத்தின் உடம்பில் நகைகள் போட இனி இடமே இல்லை. இந்தப் பொருளை வைத்துக்கொண்டு நான் என்னதான் செய்கிறது. நல்ல சற்பாத்திரமான மனிதர்களாய்ப் பார்த்து அவர்களுக்குத் தக்க அளவு கொடுப்பதைத் தவிர, நான் இதை நல்ல வழியில் எப்படிச் செலவிடுகிறது. என்னிடம் சன்மானம் பெற உன்னைப்போன்றவர்கள் தவிர, மற்ற எவர் அருகரானவர். நீ இதை வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டால், இந்தப் பொருள் எதற்கும் உபயோகப்படாமல் துருப்பிடித்து ஒரு மூலையில் கிடக்கவேண்டியதாகவே முடியும். ஆகையால், நீ தயவு செய்து இதை வாங்கிக்கொள்ளப்பா! நீ மாத்திரம் உறுதியான மனப்போக்குடையவனுக இருந்தால், இந்த அற்பச் செல்வம் உன்னை ஒருநாளும் கெட்ட வழியில் விடாது. நீ அவசியம் இதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இல்லாவிடில், என் மனம் வெகு நாளைக்கு இதை நினைத்து விசனப்பட்டுக்கொண்டே இருக்கும்'' என்ருர்.

அதைக்கேட்ட கந்தன் மறுபடி அவரை வணக்கமாகக் கும்பிட்டு, "எஜமானே! தாங்கள் இந்த ஏழையை ஒரு பொருட்டாய் எண்ணி, இவ்வளவு தூரம் மதிப்பாய்ப் பேசும்போது நான் தங்களுடைய ஆக்ஞையை மீறி நடப்பது சரியல்ல. பணத்தை அடியோடு விலக்கிவிட்டுக் காட்டில் போய் சருகைத் தின்று நிர்வாணத்தோடிருந்து தவம் செய்யும் நிலைக்கு நான் இன்னும் வரவில்லை. என்

மனசை விட்டுப் பொருளாசையும் போய்விடவில்லை. ஆனாலும் நான் சம்பாதிப்பதை நாணயமான வழியில் உழைத்து சம்பாதிக்கவேண்டு மென்பது என் கொள்கை யென்று நான் விக்ஞாபனம் செய்துக் கொண்டேன். அவ்வளவேயன்றி வேறல்ல. நான் இதை அவசியம் எடுத்துக் கொள்ளத்தான் வேண்டுமென்று தாங்கள் மனப்பூர்வமாக எண்ணுகிறபடியால் அப்படியே நான் இதை எடுத்துக்கொண்டு இதை நல்ல வழியில் உபயோகப்படுத்த முயற்சி செய்கிறேன். இனி நானும் என் குடும்பத்தாரும் சாப்பிடப்போகும் சாப்பாடு தங்களால் கொடுக்கப்பட்ட பிச்சையாதலால், நாங்கள் ஒவ்வொரு வேளையிலும் சாப்பிட முதல் கவளம் எடுக்கும்போது 'எங்களுக்கு அன்னமளித்த வள்ளல் நீடூழி வாழ வேண்டு'மென்று சொல்லி விட்டே சாப்பிடுவோம்" என்று கூறித் தனது நன்றியறிதலின் பெருக்கை வெளியிட்டான்.

உடனே திவான் முதலியார், "அப்பா! கந்தசாமி! உனக்கு அன்னமளிக்கிறவரும், எனக்கு அன்னமளிக்கிறவரும், இன்னும் மற்றுமுள்ள சகலமான பிராணிகளுக்கும் பசியை யறிந்து அன்ன மளிப்பவரும் சர்வ பிதாவாகிய கடவுளல்லவா! அவரைத்தான் நீயும் நானும் ஒவ்வொரு வேளையும், ஒவ்வொரு க்ஷணமும் நினைத்து அவருக்கே நன்றி யறிதல் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அவருடைய பெருமைக்கு முன் நான் எம்மாத்திரம்! அவர் என்னி டம் பொருளைக் கொடுத்து யார் யாருக்குக் கொடுக்கச் சொல்லுகி றாரோ, அவரவருக்கு நான் கொடுக்கவேண்டியவன். நான் எஜமான ருடைய வேலையைச் செய்யும் குமாஸ்தாவே யன்றி, முதலாளி யல்ல. நீ குமாஸ்தாவைத் தொழுவதைவிட முதலாளியையே தொழு, நேரமாகிறது. நீ போய்ப் படுத்துக்கொள். நானும் படுத் துக் கொள்ளுகிறேன்" என்றார்.

உடனே கந்தன், "அப்படியே ஆகட்டும். நான் உத்தரவு வாங் கிக் கொள்ளுகிறேன். காலையில் பார்க்கமுடியுமோ முடியாதோ. தங்களுடைய பட்சமும், ஆசீர்வாதமும் இந்த ஏழையின் மேல் எப் போதும் மாறாமல் இருக்கவேண்டும்" என்று முடிவாகக் கூறி அவ ருடைய காலில் விழுந்து வணங்கியபின் அவ்விடத்தை விட்டு அப் பால் சென்று மறைந்துபோனான்.

அந்த இரவு கழிந்தது. மறுநாள் முத்துசாமி தனது வேலையை ஒப்புக்கொண்டு திவானுக்கு வேண்டிய அன்னபானாதிகளைத் தயா

ரித்து அவரை உண்பித்தான். அவர் இலைக்கருகில் உட்கார்ந்து போஜனம் செய்துவிட்டதாகப் பெயர் பண்ணிவிட்டு எழுந்தாரே யன்றி அவருக்குப் போஜனம் முதலிய சகலமான வியவகாரத்திலும் ஒருவிதமான வெறுப்பும் விரக்தியும் தோன்றிவிட்டன. அவரது மனம் பெருத்த வியாகூலத்திற்கும் கவலைக்கும் இருப்பிடமாய்த் தத்தளித்துக்கொண் டிருந்ததென்பதை அவரது முகத்தோற்றமே எளிதில் காட்டியது. அவரது கவனம் தமது உத்தியோகக் கடமைகளிலாவது, தமது தேகபோஷணையிலாவது, இதர விஷயங்களிலாவது செல்லாமல் தம்மைக் கொல்ல யத்தனித்தவர் யாராயிருப்பவர் என்பதையும், காந்திமதியம்மாள் அதில் சம்பந்தப்பட்டிருக்கிறாளா இல்லையா என்பதையும், அவளுக்கு ஒரு கள்ள நாயகன் இருப்பது உண்மைதானா அல்லவா என்பதையும் எண்ணி எண்ணித் தனக்குத் தானே வாததர்க்கங்கள் செய்து உண்மையை நிச்சயிப்பதிலேயே சென்று லயித்துப்போ யிருந்தது. வெளித்தோற்றத்தில் அவர் வாடி வதங்கித் துவண்டு, நடக்கையிலேயே தூங்குகிறவர் போலக் காணப்பட்டவரானாலும், அவரது மனத்தில் எத்தனையோ கோடி சேனைகள் எதிர்த்து வெகு மும்முரமாக யுத்தம் நடத்துவதுபோலக் கோடானுகோடி எண்ணங்களும், சந்தேகங்களும், யூகங்களும், யுக்திகளும் தோன்றித்தோன்றி ஒன்றோடொன்று பெருத்த முஷ்டி யுத்தம் செய்துக்கொண் டிருந்தன. அவருக்குத் தெரியாமலேயே அவரைக் கூர்மையாய்க் கவனித்துக்கொண்டிருந்த முத்துசாமிதான் வெளியிட்ட விபரீதச் செய்தி அவரது மனத்தை அரித்துத் தின்றுக் கொண் டிருக்கிறதென்றும், அவர் ஒரு வேளை தமது உயிருக்கே ஏதேனும் ஹானி செய்துகொள்ள வழிபார்க்கிறாரோ வென்றும் நினைத்து, அவர் அப்படிச் செய்து கொள்ளாமல் தான் பார்த்துக் கொள்ளவேண்டுமென்ற தீர்மானத்துடனிருந்து வந்தான். ஆயினும் அவன் துணிந்து அவரிடம் மறுபடியும் அந்த விஷயத்தைப் பற்றிய பிரஸ்தாபத்தை எடுக்கவே மனமற்றவனாய் அவரை வெகு கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். அன்றைய தினம் காலை பத்து மணிக்கே தமது போஜனத்தை முடித்துக்கொண்ட திவான் உடனே மோட்டார் வண்டியைத் தயாரிக்கச்செய்து, அதில் ஏறிக் கொண்டு தாம் இன்ன இடத்திற்குப் போகிறோம் என்பதை எவருக்கும் தெரிவிக்காமல் அவ்விடத்தை விட்டுப் பிரயாணம் புறப்பட்டுத் திருவநந்தபுரத்திற்குப் போய்த் தமது மாளிகையை அடைந்தார். தாம் அவ்வாறு வந்ததாவது, மறுபடியும் அவ்விடத்

தைவிட்டுத் திரும்பிப் போனதாவது அண்டையிலிருப்பவர் எவ ருக்கும் தெரியாதபடி அவர் நிரம்பவும் ஜாக்கிரதையாகவும் மறை வாகவும் நடந்துகொண்டார். தமது மாளிகையை அடைந்தவர் வெகு நேரம் வரையில் தனிமையில் உள்ளே இருந்து, தமக்கு ஆக வேண்டிய சில முக்கியமான ஏற்பாடுகளைச் செய்துகொண்டார். இரகசியத்தில் ஒரு தையல்காரனை வரவழைத்து சில முக்கியமான உடைகளைத் தயாரித்துக்கொண்டார். முக்கியமாக அவர் ஓர் உயில் தயாரித்து அதில் தமக்குள்ள சொத்துக்கள் இன்னின்னவை யென் றும், தாம் தெய்வச் செயலாய் இறந்து போனால், தமக்குப்பின் தமது தகப்பனார் அவைகளை அடைவதென்றும், தமது மனைவியும் புத்திரனும் கிழவருடைய மனத்திற்குத் திருப்திகரமாக நடந்து கொள்ளும் பக்ஷத்தில், கிழவர் அவர்களைக் காப்பாற்றுவதென் றும், சகலமான சொத்துகளையும் தமது தந்தை அவரது இஷ்டப் படி விநியோகம் செய்துகொள்ளலாமென்றும், திவான் உயில் எழுதி, அதை முக்கியமான ஓர் இரும்புப்பெட்டியில் வைத்து பத் திரமாகப் பூட்டித் திறவுகோலை மற்ற திறவுகோல்களடங்கிய வளையத்தில் கோத்துக்கொண்டார். அவர் தமது ஜாகையில் ஆயி ரம் ரூபாய் நோட்டுகளாக சுமார் இரண்டு லக்ஷம் ரூபாய்க்கு நோட் டுகள் வைத்திருந்தார். அவைகளையெல்லாம், அவர் எடுத்து நீள மான வண்டிக்காரன் பை ஒன்றில் போட்டு அரைஞாண் கயிற்றோடு சேர்த்து இறுக்கிக் கட்டிக்கொண்டார். தையல்காரன் கொணர்ந்து கொடுத்த உடைகளையெல்லாம் செங்காவியில் நனைத்துக் காய வைத்து அவைகளோடு வேறு சில சாமான்களையும் வைத்து ஒரு சிறிய மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டார். அவ்வாறு அவர் தமது மாளிகைக்குள் போய்த் தமது சயன அறையையும், போஜ னம் ஸ்நானம் முதலியவை செய்த இடங்களையும் பார்க்கவே, காந்தி மதியம்மாளும், ராஜாபகதூரும் உயிலோடு அங்கங்கு நின்று சந் தோஷமாகச் சிரித்துக்கொண்டு அவருடன் பேசுவதுபோலவே அவர் உணர்ந்தார். அதற்கு முன் காந்திமதியம்மாள் அவருடன் சம்பாஷித்த அழகான வார்த்தைகள் யாவும் அப்போதும் அவரது செவிகளில் ரீங்காரம் செய்துகொண்டிருந்தன. அவள் தம்மோ டிருந்து தமது மனம் பரவசமடையும்படி பேசிய வார்த்தைகளும் செய்த செய்கைகளும் ஒவ்வொன்றாய் நினைவிற்கு வரவே, அவரது மனம் அவரை மிஞ்சி இளகிப் பாகாய் உருகத்தொடங்கியது. அவ ரது இரு கண்களிலிருந்தும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்

தோடத் தொடங்கியது. அவரது தேகம் பதறியது. அவர் குழந்தை அழுவதைப்போலத் தேம்பித் தேம்பி அழுது, "ஆ! என்ன உலகம்! என்ன புருஷன் பெண்ஜாதி! என்ன மனிதவாழ்க்கை! எல்லாம் மாயை! எல்லாம் பொய்த்தோற்றம்! இந்த உலகமும் இதிலிருக்கும் உயிருள்ளதும் இல்லாததுமான ஒவ்வொரு வஸ்துவும் அநித்தியம். எல்லாம் பொய்வடிவம். எல்லாம் அழிந்து போவது. கடவுளின் சிருஷ்டி முழுதும் ஒரே பொய் மயம். இதில் நிஜமான நீடித்த மாறாத அன்பும் உண்மையான பற்றும் எங்கிருந்து கிடைக்கும், எல்லாவற்றிற்கும் மூல காரணமாயும் உயிருக்குயிராயும் இருந்து படைத்துக் காத்தழிக்கும் தெய்வத்தினிடத்தில் உண்மையான மாறாத பயபக்தியுள்ளவர் இந்த உலகத்தில் எத்தனைபேர்? வெகு சொற்பமான மனிதரே கடவுளிடம் பக்தியுடையவராயிருக்கின்றனர். கடவுளுடைய கதியே இப்படியிருக்கையில், ஆற்று வெள்ளத்தில் கிடந்து மிதக்கும் ஒரு துரும்பு போல இருக்கும் அற்பஜெந்துவாகிய நான் பிறரிடம் மாறாத உண்மையான பிரியத்தை எதிர்பார்ப்பது பலிக்கக்கூடிய காரியமா? நான் எதிர்பார்ப்பது முடவன் கொம்புத் தேனெடுக்க எண்ணுவது போன்றதேயன்றி வேறல்ல. தந்தை தாய் தமர் தாரம் மகவு என்னும் இவையெல்லாம் சந்தையிற்கூட்டம் என்று சொன்னவர் அனுபவமில்லாமல் சொல்லவில்லை. ஆகா! காந்திமதீ! கடைசியாக நீ என்னைவிட்டுப் பிரிந்துபோக மனமற்றவள்போல நடித்தாயே! உன் உயிர் இங்கேயே இருப்பதாகவும், வெறும் உடல் மாத்திரம் போகிறதென்றும் சொன்னாயே! நான் இல்லாத இடத்தில் உனக்குச் சந்தோஷமே உண்டாகாதென்று நீ எவ்வளவோ வேதாந்தமெல்லாம் பேசினாயே! நீ இதுவரையில் செய்ததும் சொன்னதும் பொய் நாடகமாகவல்லவா முடிகின்றன. இருக்கட்டும். நான் எப்படியும் இதன் உண்மையைக் கண்டு பிடிக்கிறேன்" என்று தமக்குத்தாமே பலவாறு பிரலாபித்துப் பிதற்றுவதும் அழுவதுமாயிருந்தபின், அதிக நேரம் வீட்டில் இருக்க சகியாதவராய் அவ்விடத்தை விட்டு வெளிப்பட்டார். வெளிக்கதவைப் பத்திரமாகப் பூட்டி சாவிகளையெல்லாம் ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டு மறுபடி மோட்டார் வண்டியில் ஏறி எவருமறியாதபடி பிரயாணம் செய்து மாலை நேரத்தில் சுதி தொடர் மங்கலத்திற்கு வந்துசேர்ந்து, தாம் திருவனந்தபுரத்திற்குப் போய் வந்தசெய்தி எவருக்கும் தெரியாதபடியும், தாம் ஏதோ சர்க்கார் விஷயமாக எவ்விடத்திற்கோ போய்விட்டு வந்ததாக எல்லோ

ரும் நினைக்கும்படியும் வார்த்தைகள் கூறி, அன்றைய இராப்போஜனத்தை முடித்துக்கொண்டு படுக்கைக்குச் செல்லுமுன் தமது தலைமை குமாஸ்தாவை வரவழைத்து, "நான் விடியற்காலையில் புறப்பட்டு ஓர் ஊருக்குப் போய்விட்டுத் திரும்பி காலை 9, அல்லது 10-மணிக்குள் வந்துவிடுகிறேன். திருவனந்தபுரத்திலிருந்து தபால்கள் வந்தால் அப்படியே இருக்கட்டும்; நான் வந்தபிறகு பிரித்துப்பார்த்துக்கொள்ளலாம். என்னுடைய கொத்துச்சாவியை நான் கையில் கொண்டுபோனதில், அதை நான் அடிக்கடி எங்கேயாவது மறதியாய்ப் போட்டுவிடுகிறேன். அதை நான் இங்கே வேறே யாரிடத்திலும் கொடுப்பது சரியல்ல. நீரே பத்திரமாக அதை வைத்துக் கொள்ளும்; நான் வந்து வாங்கிக் கொள்ளுகிறேன்" என்று கூறித் தமது கொத்துச்சாவியை அவரிடம் கொடுத்தார். தலைமை குமாஸ்தா அதை வாங்கிக் கொண்டதன்றி அவரது கட்டளைப்படி நடந்துகொள்வதாகவும் மறுமொழி கூறி உத்தரவு பெற்றுக் கொண்டு தமது இடத்திற்குப் போய்விட்டார்.

திவான் தமது சயனத்தை யடைந்து படுத்துக் கொண்டாரானாலும், இரவு முழுதும் அவருக்கு நித்திரை யென்பதே உண்டாகவில்லையாதலால் அவர் பெருத்த வியாகூலத்தில் ஆழ்ந்தபடி இருந்து அந்த இரவைக் கடத்தினார். அந்த ஓர் இரவு பல இரவுகள்போலப் பெருகி நீண்டு அவரை நரக வேதனையி லாழ்த்தியது. ஆயினும், அவர் தமது மன வேதனைகளைப் பொறுத்திருந்து பொழுது விடியும் தருணத்தில் மற்றவர் எழுந்திருப்பதற்குமுன் எழுந்து, தமது மோட்டார் வண்டியில் உட்கார்ந்து அதை விடுத்துக்கொண்டு அவ்விடத்திலிருந்து மேற்கு திக்கில் சென்ற ரஸ்தாவோடு விரைவாகச் செல்லலானார்.

அந்த ரஸ்தா மேற்குத் தொடர்ச்சி மலைப் பிரதேசத்தில் மலை நாடுகளுக்குள் ஏறிச்சென்ற ரஸ்தாவாதலால், எங்கும் ஒரே மலையும் காடுமாக இருந்தன. இடையிடையில் வெகு தூரத்திற்கு ஓரிடத்தில் சிறிய சிறிய ஊர்கள் ஆங்காங்கு காணப்பட்டன. சனிதொடர் மங்கலத்திலிருந்து சுமார் முப்பது மைல் தூரம் வரையில் அவ்வாறு சென்ற திவான் முதலியார் அதுவே போதுமானதென்று நினைத்து அவ்விடத்தில் தோன்றிய ஒரு சிற்றாரைக் கடந்து அதற்கு அப்பால் காணப்பட்ட பயங்கரமான ஒரு காட்டிற்குள் தமது மோட்

டார் வண்டியைக் கொண்டுபோய், அதிலிருந்து கீழே இறங்கித் தமது மூட்டையைக் கையிலெடுத்துக் கொண்டார். எடுத்துக் கொண்ட பிறகு அவ்விடத்தில் ஒரு பனை ஆழத்தில் காணப்பட்ட ஒரு பள்ளத்தைப் பார்த்துத் தமது மோட்டார் வண்டியின் விசையைத் திருப்பிவிட்டார். விடவே, மோட்டார் வண்டி தடதடவென்று பள்ளத்தில் ஓடிக் கரணம் போட்டுக்கொண்டு தலை குப்புற விழுந்து உருண்டு புரண்டு பள்ளத்தின் அடியில் போய்ச் சாய்ந்துவிட்டது. உடனே திவான் தமது மூட்டையை எடுத்துக்கொண்டு சிறிது தூரத்திற்கு அப்பாலிருந்த தண்ணீர் சுனையண்டை போய் உட்கார்ந்துகொண்டு தமது மூட்டையை அவிழ்த்து அதற்குள்ளிருந்த அம்பட்டன் கத்தியை எடுத்துத் தமது தலைமயிர் மீசை முதலியவைகளையெல்லாம் அடியோடு க்ஷவரம் செய்து மழுங்க மொட்டையடித்துக்கொண்டு மூட்டையிலிருந்த காசிச் செம்பினால் சுனைத்தண்ணீரை எடுத்து ஸ்நானம்செய்து உடம்பைத் துடைத்துக்கொண்டு, நோட்டுகளடங்கிய வண்டிக்காரன் பையை அரைஞாணுகக் கட்டி காஷாயம் நனைத்த கோவணத்தை எடுத்து அணிந்து கொண்டார்; கழுத்துமுதல் கணைக்கால் வரையில் மூடிக் கொள்ளும் அங்கி யொன்றை எடுத்து மாட்டிக்கொண்டார்; முகம் தலை முதலிய இடம் முழுதிலும் விபூதியைப் பட்டை பட்டையாக அணிந்து கொண்டார்; கழுத்து காதுகள் தலை கைகள் முதலியவைகளில் ஏராளமான ருத்திராக்ஷ மாலைகளைத் தரித்துக் கொண்டார். மிகுதியிருந்த துணிகள் முதலிய சாமான்களைச் சிறிய மூட்டையாக இடுப்பைச் சுற்றி அங்கியின்மேல் கட்டிக்கொண்டு, இடது கையில் காசிச் செம்பைத் தொங்கவிட்டுக் கொண்டார்; வலது கையில் ஒரு தண்டத்தைப் பிடித்துக்கொண்டு அந்தத் தண்ணீர் சுனையை விட்டுப் புறப்பட்டு விரைவாக நடந்து பக்கத்திலிருந்த ஊரை யடைந்தார். அதுவரையில் சாதாரணமாக வந்தவர் ஊருக்குள் நுழைந்தபோது மிகுந்த பதைபதைப்பும் விசனமும் அவசரமும் காட்டிய வண்ணம் ஓடி, தமக்கெதிரில் காணப்பட்ட மனிதர்களை நோக்கி, "ஐயா! இந்த ஊர் கிராம முனிசீப்பு எங்கே இருக்கிறார்?" என்று வினவினர். அதைக் கேட்ட அந்த ஊர்வாசிகள் என்ன விசேஷம்? எதற்காக கிராம முனிசீப்பைத் தேடுகிறீர்கள்?" என்றனர். நமது திவான் நிரம்பவும் வேகமாக ஓடிவந்தவர்போல இரைக்க இரைக்கப் பேசத் தொடங்கி, "இதோ! பக்கத்தில் ஒரு கொடிய அபாயம் நேர்ந்துவிட்டது! ஒரு பெரிய மனிதர் அநியாயமாய்

இறந்து போய்விட்டார்! கிராம முனிசீப்பை நான் உடனே அழைத்துக்கொண்டு போய்க்காட்டவேண்டும். அவரைக் கூப்பிடுங்கள்; இல்லாவிட்டால் அவர் இருக்கும் இடத்தையாவது காட்டுங்கள். நான் போய் நேரில் சொல்லுகிறேன்" என்றான்.

அவரது விபரீதமான சொற்களைக் கேட்கவே, அண்டையிலிருந்த வீட்டார் எல்லோரும் பெருத்த கும்பலாக வந்து தெருவில் கூடிவிட்டனர். அவ்விடத்திலிருந்த மனிதர்களுள் ஒருவரே அந்த ஊரின் கிராம முனிசீப்பாதலால், அவர் திவான் சாமியாரைப் பார்த்து, "சாமியார் ஐயா! நான் தான் கிராமமுனிசீப்பு! என்ன அபாயம் நேர்ந்தது? யார் இறந்து போனது?" என்று மிகுந்த ஆவலோடும் பதைபதைப்போடும் கூறி வினவினர். உடனே திவான் சாமியார் முன்னிலும் பன்மடங்கு அதிகமாகத் துடிதுடித்து, "நீங்கள் தான் கிராம முனிசீப்பா! அப்படியானால் என்னோடு சீக்கிரமாக வாருங்கள். இன்னும் சில மனிதரையும் உதவிக்கு அழைத்துக் கொள்ளுங்கள். எல்லோரும் கையில் தடிகளை எடுத்து கொள்ளுங்கள். ஒரு மனிதரைப் புலி தூக்கிக்கொண்டு போகிறது. ஒருவேளை அவர் இன்னம் உயிரோடு இருக்கலாம்" என்றார்.

அந்த விபரீதச் செய்தியைக் கேட்கவே, கிராம முனிசீப்பும் இன்னும் அங்கிருந்த மற்றவர்களும் உடனே வீட்டிற்குள் ஓடி ஆளுக்கு ஒரு தடியாகக் கையில் எடுத்துக் கொண்டு ஓடிவந்து, "சாமியார் ஐயா! வாருங்கள் போவோம்! இடத்தைக் காட்டுங்கள்" என்று கூறியவண்ணம் புறப்பட ஆயத்தமாயினர். உடனே திவான் அவர்களெல்லோரையும் தம்மோடுகூட அழைத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாகச் சென்று பத்து நிமிஷ நேரத்தில், தாம் மோட்டார் வண்டியைப் பள்ளத்தில் தள்ளிவிட்ட இடத்தை யடைந்தார். அவ்வாறு எல்லோரும் ஓடிய காலத்தில் கிராமமுனிசீப்பும் மற்றவர்களும் திவானை நோக்கிப் பற்பல கேள்விகளைக் கேட்டனரானாலும், தாம் ஓடிய ஓட்டத்தில் தமக்குப் பிரமாதமான இரைப்பு தோன்றிவிட்டதுபோல அவர் நடித்துத் தமது கைகளின் ஜாடையினால் எல்லா விவரத்தையும் தாம் அந்த இடத்தில் போய்த் தெரிவிப்பதாகக் காட்டியவண்ணம் ஓடிவந்தார். அந்த இடத்தை அடைந்தவுடனே கிராம முனிசீப்பும் மற்றவர்களும் பக்கத்திலிருந்த பள்ளத்தைப் பார்த்தனர். அதற் அடியில் தாறுமாறாய்

விழுந்து கிடந்த மோட்டார் வண்டி அவர்களது திருஷ்டியில் படவே, எல்லோரும் பதறிப்போய்த் தடதடவென்று கீழே இறங்கி மோட்டாரண்டை போய்ச் சேர்ந்தனர். திவான் சாமியாரும் அவர்களுடன் கூடவே தொடர்ந்து கீழே சென்று, கிராம முனிசீப்பை நோக்கி, "ஐயா! இந்தக் கொடுமையை என்னவென்று நான் சொல்லுவேன்! நான் இந்த வழியாக வந்துக்கொண்டிருந்தேன். இந்த மோட்டார் வண்டியை ஓட்டிக்கொண்டு ஒரு மனிதர் இந்தப் பக்கமாய் வந்துகொண்டிருந்தார். வந்த வேகத்தில் மோட்டார் வண்டி ரஸ்தாவை விட்டுக் கொஞ்சம் ஒரு பக்கமாக விலகிவிட்டதுபோலிருக்கிறது. அடுத்த நிமிஷம் வண்டி தட தட வென்று கீழே இறங்கித் தலை குப்புறக் கவிழ்ந்து உருண்டு புரண்டு அடிக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது. அதற்குள்ளிருந்த மனிதர் முதலில் புரளலிலேயே வெளியில் வந்து வெகுதூரத்திற்கு அப்பால் போய்விழுந்தார். அப்படி அவர் விழுந்ததுதான் தாமசம். அதோ தெரிகிறதல்லவா புதர். அதற்குள்ளிருந்து ஒரு சிறுத்தைப்புலி ஒரே பாய்ச்சலாக அவர் மேல்பாய்ந்து அவரது தொடையைத் தன்வாயால் கௌவி அவரைக் கீழே போட்டுப் பரபரவென்று இழுத்துக்கொண்டு போக வாரம்பித்தது. அதைக்கண்ட நான் பதறிப்போய்ப் பெருத்த கூச்சலிட்டு அதைத் துரத்திக்கொண்டு ஓடினேன். அந்த சமயத்தில் அந்தப் பெரிய மனிதர் என்னைப் பார்த்து, "ஐயோ! ஐயோ! என் உயிர் போகிறதே! நான் இனி பிழைக்கமாட்டேன். இந்தப் புலியினிடத்திலிருந்து நான் இனி தப்பமுடியாது. நீங்கள் எனக்கு ஓர் உதவி செய்யுங்கள். நான் இந்த சமஸ்தானத்தில் திவான் உத்தியோகம் வகிப்பவன். கொஞ்ச தூரத்திற்கப்பாலுள்ள சநிதொடர் மங்கலத்தில் நானும் என் சிப்பந்திகளும் முகாம் செய்துகொண்டிருந்தோம். ஒரு முக்கியமான காரியமாய் நான் மாத்திரம் இங்கே வந்தேன். வந்த இடத்தில் எனக்கு இந்தக் கதி நேர்ந்துவிட்டது. நான் இனி தப்பிப் பிழைப்பது சாத்தியமற்ற விஷயம். நீங்கள் உடனே சநிதொடர்மங்கலத்துக்குப் போய் எனக்கு நேர்ந்த கதியை என் சிப்பந்திகளுக்குத் தெரிவியுங்கள். என் பிரதம குமாஸ்தாவிடத்தில் என் கொத்துச்சாவி இருக்கிறது. திருவனந்தபுரத்தில் என் வீட்டில் ஏராளமான சொத்து இருக்கிறது. உடனே போய்விட்டு வாசல் கதவிலிருக்கும் பூட்டின்மேல் சீல் வைத்து, வீட்டைச் சுற்றிலும் காவல் போடச்செய்து, தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த திருவட மருதூரிலுள்ள குஞ்சிதபாத முதலியார் என்று பெயர்

கொண்ட என் தகப்பனுருக்கு உடனே தந்தி கொடுத்து அவரை வரவழைத்து அந்தக் கொத்துச்சாவியை அவரிடம்கொடுத்து வீட்டிலுள்ள சொத்துக்களையெல்லாம் அவரிடம் ஒப்புவிக்கும்படி பிரதம குமாஸ்தாவிடம் சொல்லவேண்டும்" என்றார். அதற்கு மேலும் அவர் ஏதோ சொல்ல எத்தனிக்க, அதற்குள் அவருக்குப் பிரக்ஞை தவறிப் போய்விட்டது. பிறகு அவருடைய வாய் குழறிப் போய் மூடிக்கொண்டது. அப்போது நான் துரத்திக்கொண்டு வந்ததைக் கண்ட புலி அவரைக் கீழே வைத்துவிட்டு என்னையும் துரத்த வாரம்பித்தது. நான் பயந்துகொண்டு ஓட்டமாக ஓடிவந்து விட்டேன். மறுபடி அந்தப் புலி அவரைத் தூக்கிக்கொண்டு போனதை நான் தூரத்திலிருந்து பார்த்தேன். பக்கத்தில் ஏதாவது ஊர் இருந்தால், நான் வந்து சொல்லி மனிதர்களை உதவிக்கு அழைத்துக்கொண்டு வரலாமென்று நினைத்து ஓடி உங்களுடைய ஊருக்கு வந்தேன். அவ்வளவுதான் சங்கதி" என்று உளறிக்குழறித் திணறித் திக்கு முக்கலாடிக் கூறினர். அந்த வரலாற்றைக்கேட்ட மற்ற ஜனங்களெல்லோரும் துடிதுடித்துப் போய் மூலைக்கொருவராய்ப் பிரிந்து ஓடி வெகுதூரம் வரையில் சென்று பார்த்தனர். அந்த இடம் புல் பத்தைகளும், கருங்கல்லுமே நிறைந்த தரையாக இருந்தமையால், புலியின் காலடிச்சுவடுகள் தரையில் பதிந்திருக்க வகையில்லாது போயிற்று. சுமார் அரைநாழிகை காலம் வரையில் ஜனங்கள் வெகு தூரம் வரையில் சென்று புதர்களிலும், குகைகளிலும் தேடிப் பார்த்துப் பயனற்று வாடிய முகமும் ஏங்கிய மனதுமாய்த் திரும்பி வந்து சேர்ந்தனர்.

சிறுத்தைப் புலி திவானைக் கொன்று தின்று விட்டதென்று அவர்கள் தீர்மானித்துக்கொண்டு அதற்குமேல் தாம் என்னசெய்வதென்பதைப்பற்றிச் சிந்தனை செய்யலாயினர். சிலர் மோட்டார் வண்டியை மேலே ஏற்றி ஊருக்குக் கொண்டுபோக வேண்டுமென்றனர். உடனே கிராமமுனிசீப்பு மற்றவர்களை நோக்கி, "நாம் அப்படிச் செய்வது சரியல்ல. சட்டப்படி நான் இதைப்பற்றிப் போலீசாருக்கு எழுதவேண்டும். நல்ல வேளையாக, நம்முடைய போலீஸ் ஸ்டேஷன் எந்த ஊரில் இருக்கிறதோ அதே ஊரில் இந்தத் திவானுடைய சிப்பந்திகள் இப்போது இருக்கிறதாக அவர் சொன்னாராம். நாம் நம்முடைய ஊருக்குப் போவோம்; போலீசார் வந்து இந்த ஸ்தலத்தையும் வண்டியையும் பார்க்கிறவரையில், நாம்

சில வெட்டியான்களை இங்கே காவல் போட்டு வைப்போம்" என்று கூறிய பின் சில ஆட்களைக் காவலாக நிறுத்திவிட்டு மற்றவரை அழைத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுத் தங்களது ஊருக்குச் சென்றார். சென்றவர் உடனே தமது அறிக்கைப் புஸ்தகத்தை எடுத்து அதில் அந்தச் சம்பவத்தைப்பற்றிய விவரம் முழுதையும் தாம் தெரிந்துகொண்டபடி எழுதி அதற்கு மூன்று பிரதிகள் தயாரித்து ஒன்றைத் திருவனந்தபுரத்திலுள்ள மாஜிஸ்டிரேட் கச்சேரிக்கும், இன்னொன்றை சநிதொடர்மங்கலம் போலீஸ் ஸ்டேஷனுக்கும், மூன்றாவதை ஷை ஊரிலிருந்த திவானுடைய பிரதம குமாஸ்தாவுக்கும் ஆள்கள் மூலமாக அனுப்பிவிட்டு, சாமியார் வேஷம் பூண்டிருந்த திவானை நோக்கி போலீஸார் வருகிறவரையில் அவ்விடத்திலே இருக்கும்படி கேட்டுக்கொண்டார். சாமியார் தாம் தமது குருபூஜையை உத்தேசித்து திருவனந்தபுரத்திற்கு அன்றையதினம் போக வேண்டுமாதலால், தாம் அங்கே போய் விட்டு மறுநாள் அந்த ஊருக்கு வருவதாகக் கூறினார்.

உடனே கிராமமுனிசீப்பு யோசனை செய்து, அவருடைய வாக்குமூலத்தை ஒரு காகிதத்தில் எழுதி அதன் அடியில் அவரது கையெழுத்தைப் பெற்றுக்கொண்டார். சாமியார் வாக்குமூலத்தின் அடியில் மாயா விபூதிப் பரதேசி என்று தமது கையெழுத்தைச் செய்தபின் கிராமமுனிசீப்பு முதலியோரிடம் செலவு பெற்றுக் கொண்டு அந்த ஊரை விட்டுப் புறப்பட்டு திக்கு திசை யறியாமல் திருவனந்தபுரம் இருந்த திசைக்கு எதிர்த் திசையில் விரைவாகச் சென்று மறைந்து போய்விட்டார்.

அவ்வாறு சென்றவர் அன்றைய பகற்பொழுது முழுதும் பிரயாணம் செய்து மாலை ஐந்து மணி நேர சமயத்தில் ஒரு சிறிய ஊரை யடைந்தார். அதற்குமுன் அவர் அதிகமாய் உழைத்தே யறியாத மென்மையான தேகமுடைய மனிதராதலால், நீடித்த தேக உழைப்பினாலும் மனவேதனையினாலும் அவர் அயர்ந்து சோர்ந்து களைத்துத் தளர்ந்து மயங்கிக் கீழே விழத்தக்க நிலைமையை அடைந்துவிட்டார். கடுமையான பசியும் தாகமும் உண்டாகி அவரை வதைக்கத் தொடங்கின. ஆயினும், அவர் தமக்குப் பசிக்கிறதென்று அதுவரையில் எவரிடமும் கூறியறியாத மகா மானியான மனிதராதலால், தமது வயிற்றுக் கொடுமையை வெளியிட வெட்கி, அந்த ஊருக்கு வெளியில் இருந்த ஒரு குளத்தில் நாலைந்து

கை தண்ணீர் எடுத்து அருந்திவிட்டு ஊருக்குள் நுழைந்து ஒரு வீட்டுத் திண்ணையை அடைந்து, "சம்போ! சங்கரா! மகா தேவா!" என்று பன்முறை கடவுளைத்தியானித்து விட்டு அப்படியே திண்ணையில் படுத்துக் கடுமையான நித்திரையில் ஆழ்ந்து போய் விட்டார்.

மறுபடி அவர் விழித்துப்பார்த்த காலத்தில், பொழுது விடியும் தருணமாக இருந்தது. அந்த ஊர்ப் பெண்பிள்ளைகள் வீட்டு வாசல்களுக்குத் தண்ணீர் தெளிப்பதும் திண்ணைகளைப் பெருக்குவதுமாக விருந்தனர். திவான் சாமியாரது களைப்பு ஒருவாறு நீங்கிப் போயிருந்ததானாலும், உடம்பு நிரம்பவும் தளர்ந்து இலேசாய்க் காணப்பட்டது. பசி மந்தித்துப் போயிருந்தது. எழுந்து உட்காரவும் அவருக்கு சக்தி இல்லாமல் போய்விட்டது. ஆயினும் பொழுது விடியும்போது தாம் படுத்திருந்தால் அந்த வீட்டின் சொந்தக்காரர் வந்து கோபித்துக் கொள்வார் என்ற அச்சம் தோன்றியதாகையால், அவர் நலிந்து ஊக்கத்தை உண்டாக்கிக்கொண்டு எழுந்து திண்ணையை விட்டிறங்கி, ஊருக்கு வெளியிலிருந்த குளத்திற்கு வந்து தமது காலைக் கடன்களை முடித்தபின் குளத்தில் இறங்கி நன்றாக நீராடி வெளியில் வந்து விபூதி ருத்ராக்ஷமாலைகள் முதலியவற்றையணிந்துகொண்டு தமது அநுஷ்டானம் ஜெபம் முதலியவற்றை முடித்துக்கொண்டார். அவ்வாறு தமது ஸ்நானம் முதலிய கருமங்களை முடித்துக்கொள்ளவே அவரது அயர்வில் பெரும்பாகமும் விலகியது. தாம் எவரிடமாவது விசாரித்து அந்த ஊரில் தமது ஆகாரத்திற்கு ஏதேனும் மார்க்கம் இருக்கிறதா என்பதை அறியவேண்டுமென்ற தீர்மானத்தோடு ஊருக்குள் நுழைய, எதிரில் வந்த சில மனிதர்கள் அவரைக் கண்டு அவரது அருள் வழிந்த பெருந்தன்மையான முகத் தோற்றத்தைக் கண்டு அவர் யாரோ உண்மையான மகான் என்று நினைத்து அவரை வணங்கி, "சுவாமி! தாங்கள் எந்த ஊர்? இப்போது எங்கே போகிறீர்கள்?" என்று பயபக்தி விநயத்தோடு கேட்டனர்.

உடனே திவான் சாமியார் நிரம்பவும் பணிவாகவும் மரியாதையாகவும் அவர்களை நோக்கி, "நான் ஓர் ஏழைப் பரதேசி; உலகத்தில் விரக்திகொண்டு, அதைத் துறந்தவன். எனக்கு இப்போது சொந்த ஊர் கிடையாது. ஊர் ஊராய்ப் போய் ஆங்காங்கு இருக்கும் க்ஷேத்திரங்களில் சுவாமி தரிசனம் செய்து, புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, இப்படியே என் காலத்தைக் கடத்த

உத்தேசிக்கிறேன். இந்த ஊரில் சுவாமி கோவில் இருக்கிறதா?" என்றார்.

உடனே அவர்கள், "இந்த ஊரில் ஓர் அம்மன் கோவில் இருக்கிறது. பக்கத்தில் கொஞ்ச தூரத்தில் பெரிய ஊர் ஒன்று இருக்கிறது. அவ்விடத்தில் சிவன் கோவில் இருக்கிறது. அங்கே போனால் நீங்கள் சுவாமி தரிசனம் செய்துகொள்ளலாம்" என்றனர். உடனே திவான்சாமியார் அந்த ஊர் எந்தத் திக்கில் இருக்கிறதென்று அவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு அவ்விடத்தை நோக்கிச் செல்லலானார். தாம் உலகைத் துறந்த சந்நியாசி என்று தாம் வெளியிட்டவுடனே தமக்கு ஏற்பட்ட மதிப்பையும் மரியாதையையும் உணர்ந்த திவான் தமக்குத் தாமே பலவாறு எண்ணமிடலானார்; "ஆகா! என்ன மனிதர்களுடைய மனப்போக்கு! உலகத்தில் ஏராளமான செல்வம் படைத்த பிரபுக்களாயிருந்தால், ஜனங்கள் அவர்களைத்தான் தெய்வம்போல மதித்துக் கொண்டாடுகிறார்களென்றால், உண்மையிலேயே உலகத்தைத் துறந்த பரதேசிகளைக் கண்டால், அவர்களையும் ஜனங்கள் அபாரமாகப் பெருமைப் படுத்துகிறார்களே! இந்த விநோதமான முரண்பாட்டை என்னவென்று சொல்லுகிறது! நேற்று நான் சாமியார் வேஷம் போட்டு ஜனங்களை முதன் முதலில் வஞ்சிக்க எத்தனித்தது எவ்வளவு சுலபத்தில் பலித்தது! என் சொல்லை அந்த ஊர் ஜனங்களும் கிராம முனிசீப்பும் வேதவாக்கியமாக அல்லவா மதித்து அப்படியே உண்மையாக ஏற்றுக்கொண்டார்கள்! இதுவரையில் என் ஆயுசு காலத்தில் எந்த விஷயத்திலும் பொய்மையே பேசியறியாத நான் நேற்று எப்பேர்ப்பட்ட பெருத்த புளுகைச் சொல்லி உண்மைபோல நடிக்க நேர்ந்தது! சே! நான் காஷாயம் ருத்திராக்ஷம் முதலியவைகளைத் தரித்துக் கொண்டவுடன் இப்பேர்ப்பட்ட படுமோசத்தில்தானா இறங்க வேண்டும். ஆகா! காலக் கொடுமையை என்னவென்று சொல்லுகிறது! யாரோ ஒருவர் எனக்குச் செய்ய நினைத்த தீங்கு எவ்வெவ்விதமாக மாறி என்னை எப்படிப்பட்ட கோலத்திற்கும் செய்கைக்கும் தூண்டிவிட்டது! நான் உண்மையைக் கண்டு பிடிக்கிறவரையில் இன்னும் என்னென்ன தந்திரங்களை உபயோகிக்க வேண்டுமோ, எவ்வெவ்வித மாய்ப் புளுகவேண்டுமோ தெரியவில்லையே! காரியம் இவ்வளவு தூரத்திற்கு வந்த பிறகு நான் இனி பின்வாங்குவதும் யுக்தமானதல்ல; எனக்கும் என்னைச் சேர்ந்த மனிதர்களுக்கும் இது பொல்லாதவேளையென்பது பரிஷ்காரமாகத் தெரிகிறது. இந்தத் துன்பமெல்லாம்

எவ்வளவு காலம் நீடித்திருக்குமோ தெரியவில்லை. எல்லாவற்றிற்கும் நான் அங்கங்கு பற்பல மூர்த்தங்களாய் விளங்கும் பரம்பொருளைத் தரிசித்து, அவரது திருநாமங்களையே எப்போதும் ஜெபித்து என் பாப மூட்டையைக் குறைப்பதற்கு வழி தேடவேண்டும். அதுவுமன்றி நான் இப்போது உடனே திருவடமருதூருக்குப் போவது யுக்தமாகத் தோன்றவில்லை. நான் இறந்து விட்டேனென்ற செய்தி எப்படியும் இரண்டொரு தினங்களில் திருவடமருதூருக்கு எட்டும். அதைக் கேட்டு என் தகப்பனர் என்ன செய்வாரோ? அதை எப்படிச் சகித்திருப்பாரோ, அல்லது, அவர் தம்முடைய உயிரையே விட்டு விடுவாரோ, அதுதான் எனக்குப் பெருத்த கவலையாக இருக்கிறது. காந்திமதியம்மாள் உண்மையில் குற்றவாளியாக இருப்பதாக வைத்துக் கொண்டாலும், அவள் ஒப்புக்காகக் கொஞ்ச காலம் வரையில் துக்கப்படுபவள் போலக் காட்டி, பிறகு தன் இச்சைப்படி நடந்துகொள்ள ஆரம்பிப்பாள். நான் இப்போது திருவடமருதூருக்குப் போனல் அவர்கள் எல்லோரும் அடித்துக்கொண்டு அழுது புலம்புவதை யெல்லாம் நான் கண்ணுல் பார்க்கநேரும். அந்த உபத்திரவமெல்லாம் தீரட்டும். எல்லோருடைய மனமும் ஒருவிதமாய் அமைதி யடையட்டும். மூன்று நான்கு மாதகாலம்கழித்து எவரும் என்னைக் கண்டுகொள்ளாதபடி நான் ஊருக்குப் போய்ப் பார்க்கிறேன். உண்மையில் காந்திமதி குற்றமற்றவளா யிருந்தாலும், என்னைக் கொல்ல எத்தனித்த வேறொரு மனிதன் என்ன செய்ய எண்ணுகிருனென்பதும் அதற்குள் தெரிந்து போகும். ஆகையால், மூன்று நான்கு மாதகாலம் வரையில் நான் ஸ்தல யாத்திரை செய்து உண்மையில் பரதேசியாகவே இருந்து சுவாமி தரிசனம் தீர்த்தாடனம் முதலியவைகளைச் செய்துகொண்டே மெதுவாய்ப் பிரயாணம் போகிறேன்” என்று தமக்குள் ஒருவிதமாய்த் தீர்மானித்துக் கொண்டவராய்ப் பக்கத்து ஊரையடைந்தார்.

அடைந்தவர், அவ்விடத்தி லிருந்த சிவன் கோவிலுக்குச் சென்று சுவாமிதரிசனம் செய்து விபூதி முதலிய பிரசாதங்களைப் பெற்று, அந்த ஊரில் ஒரு சோற்றுக்கடை இருப்பதாக விசாரித்துத் தெரிந்துகொண்டு அவ்விடத்திற்குச் சென்று பணங்கொடுத்துத் தமது போஜனத்தை முடித்துக்கொண்டு வசதியான ஒரு சத்திரத்தின் திண்ணையில் அன்று முழுதும் படுத்திருந்தார். அன்றைய இரவிலும் அவர் அந்தச் சோற்றுக்கடையிலேயே தமது

போஜனத்தை முடித்துக்கொண்டு பகலில் படுத்திருந்த திண்ணையி லேயே படுத்து இரவையும் கழித்தார். அவரது மனம் முழுதும் காந்திமதியம்மாள், ராஜா பகதூர், தமது தந்தை ஆகிய மூவர்பேரி லும் மாறிமாறிச்சென்று லயித்துப் போயிருந்ததானாலும், அவரது வாய் ஓயாமல் சிவநாம ஸ்மரணை செய்தபடி இருந்தது. மறுநாள் காலையில் அவர் அந்த ஊரிலிருந்த நதியில் தமது ஸ்நானம் அநுஷ்டா னம் முதலியவைகளை நிரம்பவும் மனோக்கியமாக முடித்துக் கொண்டு முதல் நாளில் செய்ததுபோலவே சுவாமிதரிசனம் போஜ னம் முதலியவைகளைச் செய்துகொண்டு சத்திரத்துத் திண்ணையில் படுத்திருந்தார். அவ்வாறு அந்த முகமறியாத புதிய ஊரில் தமது தினப்படிக் காரியங்களை அவர் யதோக்தமாகச் செய்து பொழு தைப் போக்கியது அவருக்கு ஒருவிதத்தில் ஆறுதலாக இருந்தமை யால், தாம் "சொற்பகாலம் அந்த ஊரிலேயே சௌகரியமாக இருந்து பிறகு புறப்பட்டுப் போகலாம் என்ற நினைவு தோன்றி யது. அவ்வாறே செய்யவேண்டுமென்று அவர் தீர்மானித்துக் கொண்டு இரண்டாவது தினத்தையும் அதே ஊரில் போக்கினர். மறுநாளாகிய மூன்றாவது தினம் காலையில் அவர் தமது ஸ்நானம், அநுஷ்டானம், சிவ பூஜை முதலியவற்றை முடித்துக்கொண்டு சோற்றுக்கடைக்குப் போய் இலையில்உட்கார்ந்து போஜனம்செய்து கொண்டிருந்த காலத்தில் அவரைச் சூழ்ந்து நாற்புறங்களிலும் பந்தி பந்தியாக இலைகள் போட்டிருந்தன. பல மனிதர்கள் உட் கார்ந்து ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றித் தமக்குள் சுவாரஸ்யமாக சம்பாஷித்த வண்ணம் உண்டுகொண் டிருந்தனர். திவான் சாமியார் சுயநினைவுகளிலேயே தமது கவனத்தைச் செலுத்திய வண் ணம் இலையில் உட்கார்ந்து போஜனம் செய்து கொண்டிருந்தாரா லும் அங்குப் பேசப்பட்ட விஷயம் அவரது கவனத்தை உடனே கவர்ந்துகொண்டது. திவானுக் கெதிரில் உட்கார்ந்துகொண்டுபோஜ னம் செய்த ஒருவர் அவருக்குப் பக்கத்திலிருந்த இன்னொரு வரைப் பார்த்து, "ஏனப்பா! நாராயணசாமீ! திருவநந்தபுரத்துச் சங்கதியெல்லாம் கேள்விப்பட்டாயா?" என்றார். நாராயணசாமி, "இல்லையே! ஏன் என்ன விசேஷம் வேலாயுதம்?" என்றார்.

வேலாயுதம் நிரம்பவும் ஆச்சரியமாக, "என்ன விசேஷமா? சங்கதி ஊர் முழுதும் அடிபட்டுக்கிடக்கிறது. அதை நீ தெரிந்து கொள்ளாமல் இருக்கிறாயே! நம்முடைய முதலைமூஞ்சி சுப்பராயன்

இருக்கிறானல்லவா! அவன் ஏதோ ஒரு காரியமாய்த் திருவனந்தபுரத்துக்குப் போய்விட்டு நேற்று இரவில் திரும்பி இங்கே வந்தானாம். அவன் சொல்லுகிறான் சொல்லுகிறான்; வாய் ஓயாமல் சொல்லுகிறான், திருவனந்தபுரத்துத் திவானைப் புலி தூக்கிக்கொண்டு போய்விட்டதாம். அந்தச் சங்கதி தெரிந்த முதல் அந்த ஊர் அல்லோலகல்லோலப்பட்டுக் கிடக்கிறதாம். ஊரிலுள்ள ஜனங்களெல்லோரும் அதே பேச்சாகப் பேசி வாய்விட்டுக் கதறி யழுகிறார்களாம். அந்த திவான் இந்தக் கலிகாலத்திலேயே பிறக்கத்தகாத அவதார புருஷராம். பாரதத்தில் தர்மராஜனைப்பற்றிப் படித்ததெல்லாம் நிஜமாக நடந்ததோ என்னவோ. அவரை நாம் கண்கூடாகப் பார்க்கவில்லை. இவர்தான் இப்போது தத்ரூபம் தர்மராஜனாய் விளங்கினாராம். ஊரிலுள்ள ஒவ்வோர் ஏழைமனிதனுக்கும் அவர் குறைந்தது ஒவ்வொரு நன்மையாவது செய்திருப்பாராம். மகா சிரேஷ்டமான குணமும், நிரம்பவும் நிதானமான புத்தியும், பெருந்தன்மையும், பூததயை, இரக்கம், பச்சாதாபம் முதலிய குணங்களும், மகா பரிசுத்தமான நடத்தையும், ஈசுவர பக்தியும் அவரிடம் சம்பூர்ணமாக நிறைந்திருந்தனவாம். அவரைப்போன்ற திவான் இதுவரையில் இருந்ததில்லை யென்றும், இனி இருக்கப் போகிறதில்லையென்றும் ஜனங்கள் சொல்லிச் சொல்லிப் பதறி அழுகிறார்களாம். இரண்டு தினங்களாய் ஊர் முழுதும் ஒரே துயரத்தில் மூழ்கி இருக்கிறதாம். கடைகளெல்லாம் மூடிக்கிடக்கின்றனவாம். அவரவர்கள் வீட்டைவிட்டு வெளிக்கிளம்பவும்மனமற்றவராய், "என்ன உலகம்! என்ன வாழ்க்கை! நேற்று உயிரோடிருந்த தர்மராஜனை இன்று எமன் வாயில் போட்டுக் கொண்டான்; அவருடைய செல்வமென்ன செல்வாக்கென்ன, அழகென்ன, குணமென்ன. அவருடைய சம்சாரத்தை மகா லக்ஷ்மி என்றே சொல்லவேண்டும். அவருடைய குழந்தையின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் எத்தனை நாளானாலும் பசியே உண்டாகாது. அப்பேர்ப்பட்ட குடும்பம் ஒரு நிமிஷத்தில் சீர் குலைந்துபோய் விட்டதே! ஈவிரக்கமற்ற கொடியபாவியான கூற்றுவன் இப்பேர்ப்பட்ட மனிதரை ஒரு நிமிஷத்தில் வாயில் போட்டுககொண்டானே! நாமெல்லாம் எந்த மூலை. நாம் எதற்காக உழைத்துச் சம்பாதித்து இந்த வீணுடம்பை வளர்த்துப் போற்றவேண்டும். இப்படியே பட்டினி கிடந்து, நாமும் இறந்து போய்விடுவோமாய்' என்று சொல்லி அளவிட இயலாத ஸ்மசான வைராக்கியமடைந்து பிரலாபித்து வருந்தித் தவிக்கிறார்களாம்

அந்த ஊர் மகாராஜனே இந்தச் சங்கதியைக் கேட்டவுடன் பொறிக் கலக்கமும் சித்தப் பிரமையும் அடைந்து பஞ்சணையில் படுத்தவர் இரண்டு திங்களாய் எழுந்திருக்கவே இல்லையாம். அரண்மனைக் கதவுகளும் மற்றுமுள்ள சகலமான காரியாலயங்களின் கதவுகளும் மூடப்பட்டபடியே இருக்கின்றனவாம்; திவான் இறந்து போய் விட்டார் என்ற செய்தி ஜனங்களுக்கு நம்பிக்கையே படவில்லை. அவர் உயிரோடு இருக்கிறார் என்ற சங்கதி எங்கே இருந்தாவது சீக்கிரம் வரும் என்று அவர்கள் இன்னும் அசட்டுத் தனமாக எண்ணிக்கொண்டே இருக்கிறார்களாம்” என்றார்.

அதைக் கேட்ட நாராயணசாமியும் மற்றவரும் மிகுந்த வியப்பும் பிரமிப்பும் அடைந்து அப்படியே ஸ்தம்பித்துப் போய் வேலாயுதத்தின் வாயைப் பார்த்தபடி இருந்தனர். திடீரென்று தம்மை பற்றிய பிரஸ்தாபம் ஏற்பட்டதைக் கேட்ட திவான் திடுக்கிட்டுப் போனார். அரசர் முதல் ஊரிலுள்ள சகலமான ஜனங்களும், தமது குணாதிசயங்களை மெச்சித் தாம் இறந்துபோன செய்தியைக்கேட்டு விசனக்கடலிலாழ்ந்து கிடக்கிறார்கள் என்ற செய்தி அவரது ஹிருதயத்தில் சுறுக்கென்று தைத்து ஊடுருவிப் பாய்ந்து சகிக்கவொண்ணாத ஒருவித இளக்கத்தையும் மன எழுச்சியையும் உண்டாக்கியது. ஆநந்தத்தினாலோ விசனத்தினாலோ அவரது கண்களில் கண்ணீர் துளித்தது. அவரது முகாரவிந்தம் சரேலென்று மாறி விகாரப் பட்டது. தம்மை எவராகிலும் கவனிக்கப் போகிறார்களோ என்ற அச்சமும் கவலையும் உடனே எழுந்தனவாகையால் அவர் தமது இயற்கை நிலைமையைக் கைவிடாமல் எச்சரிப்பாக நடந்துகொண்டதன்றி, அங்குக் கூறப்பட்ட விஷயங்களைக் கேட்டும் கவனியாதவர் போல இருந்தார். வேலாயுதம் பேசி நிறுத்தியவுடன் நாராயண சாமி அவரை நோக்கி, “நீ சொல்லும் சங்கதி மகா விபரீதமான சங்கதியா யிருக்கிறதே! திவானையாவது புலி தூக்கிக்கொண்டு போகிறதாவது! அவருக்கு மாளிகை யில்லையா? பாராக்காரர்கள் இல்லையா? அவர் நடுக்காட்டில் தனிமையிலா இருந்தார்? நீ சொல்வது வெள்ளைக் காக்கை பறந்ததென்ற செய்தியாக அல்லவா இருக்கிறது. திவானாவது சாகிறதாவது! அவர் இந்நேரம் திரும்பி வந்திருப்பார்” என்றார்.

அதைக் கேட்ட வேலாயுதம் நிரம்பவும் ஆத்திரமாகப் பேசத் தொடங்கி, “சங்கதியை முழுமையும் தெரிந்து கொள்ளாமல் நீ அவ

சரப்பட்டு உளறுகிறாயே! இவ்வளவு பெரிய சங்கதியை யாராவது வேண்டுமென்று கட்டிவிடுவார்களா? நீ ஒருத்தன்தான் புத்தி சாலியா! திருவனந்தபுரத்திலுள்ள அத்தனை ஜனங்களுக்கும் அறிவில்லையென்று நினைத்துக் கொண்டாயா? ஒரு சங்கதி நிஜமானதா பொய்யானதா என்பதை நிச்சயிப்பதற்கு அவர்களுக்கு அவ்வளவு மூளை இல்லாமல் போய்விட்டதென்று எண்ணிக்கொண்டாயா! திவானாவது இனி வருவதாவது. அவரைப் புலி தின்று ஏப்பம் விட்டுவிட்டது. அவர் இந்நேரம் புலியின் இரத்தமாக மாறிப் போயிருப்பார். அவருடைய சொந்த ஊர் தஞ்சாவூர் ஜில்லாவில் திருவடமருதூர் என்ற ஸ்தலமாம். அங்கே அவருடைய தகப்பனார் விருத்தாப்பிய தசையில் இருக்கிறாராம். அந்த ஊரிலுள்ள சிவன் கோவிலில் இப்போது திருவிழா நடக்கிறதாம். அதற்காக திவானுடைய சம்சாரத்தையும் குழந்தையையும் அனுப்பும்படி கிழவர் எழுதி இருந்தாராம். திவானுடைய சம்சாரம் உத்தம குணங்களெல்லாம் நிறைந்த புண்ணியவதியாம். புருஷரும் பெண் ஜாதியும் ஒருவரைவிட்டொருவர் பிரிந்ததே இல்லையாம். திவான் தம்முடைய தகப்பனார் சொல்லை மீறமாட்டாதவராய் தம் சம்சாரத்தையும் பையனையும் நாலைந்து தினங்களுக்குமுன் ஊருக்கு அனுப்பினாராம். அனுப்பிய அந்த விசனத்தையும் ஏக்கத்தையும் பொறுக்க மாட்டாதவராய் திவான் சனிதொடர்மங்கலம் என்ற ஊருக்குப் போய்த் தம் சிப்பந்திகளுடன் முகாம் செய்திருந்தாராம். செய்திருந்தவர் ஏதோ இராஜாங்க விஷயமாய்த் தம்முடைய மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு தனிமையில் காடுகளும் மலையும் நிறைந்த ஒரு ரஸ்தாவின் வழியாய்ப் போனாராம். மோட்டார்வண்டி திடீரென்று வழிதப்பி பக்கத்திலிருந்த ஆழமான பள்ளத்தில் இறங்கித் தலைகுப்புறச் சாய்ந்து உருண்டு புரண்டு பாதாளத்துக்குப் போய்விட்டதாம். திவான் ஒரு பக்கத்தில் போய் விழுந்தாராம். அப்போது அவ்விடத்தில் புதரிலிருந்த ஒரு சிறுத்தைப்புலி வந்து அவர்மேல் பாய்ந்து அவரைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போய்விட்டதாம்” என்றார்.

நாராயணசாமி, “இது தனிக்காட்டில் அல்லவா நடந்தது! அதை யார் பார்த்தது? எல்லாம் யூகம்தானே?” என்றார்.

வேலாயுதம், “இல்லையப்பா இல்லை. அந்த சமயத்தில் யாரோ ஒரு பரதேசி அந்த வழியாக வந்தானாம். புலி திவானைத் தூக்

கிக் கொண்டு ஓடினதைக் கண்டு அந்தப் பரதேசி கூச்சலிட்டு அதைத் துரத்தினானாம். அப்போது திவான் அந்தப் பரதேசியிடம் தம்முடைய வரலாற்றை இரண்டொரு வார்த்தையில் சொன்னாராம். அதற்கு மேல் திவானுக்கு பிரக்ஞை இல்லாமல் போய்விட்டதாம். புலி திவானைக் கீழே போட்டு விட்டுப் பரதேசியைத் துரத்தியதாம். பரதேசி செத்தேன் பிழைத்தேனென்று ஓட்டம் பிடித்து பக்கத்தி லிருந்த ஊருக்கு வந்து இந்தத் தகவலை கிராம முனிசீப்பிடம் சொன்னானாம். உடனே ஜனங்களோடு கிராம முனிசீப்பு போய்ப் பார்த்து, அது நிஜமென்று கண்டு உடனே போலீசாருக்கும், மாஜிஸ்டிரேட்டுக்கும் எழுதினாராம். போலீசார் வந்து பார்த்து மோட்டார் வண்டியை வெளிப்படுத்தி அதைத் திருவநந்தபுரத்தில் கொண்டு போய்ச் சேர்த்தார்களாம். திருவடமருதூருக்கு உடனே தந்தி போயிற்றாம். திவானுடைய தகப்பனார் மாத்திரம் மோதியடித்துக் கொண்டு நேற்றையதினம் திருவநந்தபுரத்துக்கு வந்து தம்முடைய பிள்ளையிருந்த இடத்தைப் பார்த்துப் பார்த்து வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு கதறியழுது சொத்துகளையெல்லாம் ஒப்புக் கொண்டாராம். காரியம் இவ்வளவு தூரம் நடந்து போயிருக்கிறது. திவான் திரும்பிவந்து விடுவாரென்று நீ வெகு தாராளமாக உத்தரவு செய்துவிட்டாயே" என்றார்.

அப்போது வேறொருவர், "என் ஐயா! இந்தச் சங்கதியைக் கேட்டுக் கிழவர் மாத்திரந்தானா வந்தார்? அவரும் அவருடைய சம்சாரமும் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்ததே இல்லையென்றும், இப்போது பிரிந்ததைப் பற்றி திவான் நிரம்பவும் விசனப்பட்டாரென்றும் சொன்னீரே! ஐயாவைப் புலி யடித்தால், அம்மாள் வர வேண்டாமா?" என்றார்.

வேலாயுதம், "இந்த திருவநந்தபுரத்தில் அவர்களுக்கு யார் இருக்கிறார்கள்? இங்கே எதற்காக அந்த அம்மாள் வருகிறது? திவான்தான் எலும்புக்குக்கூட வழி இல்லாமல் மாயமாய் மறைந்து போய் விட்டாரே! அந்த அம்மாள் வந்து திருவநந்தபுரத்திலுள்ள திவானுடைய மாளிகையைக் கட்டிக் கொண்டு அழுகிறதா? கிழவர்கூட இந்த சந்தர்ப்பத்தில் இங்கே வந்தது அநாவசிய மென்று நினைக்கிறேன். இவ்வளவு பெரிய மனிதரான திவான் இருந்து இறந்த இடத்திற்கு அவருடைய மனுஷ்யாள் யாரும் வந்து அவர்

என்ன விதமாக இறந்தார் என்பதைக் கூடத் தெரிந்து கொள்ள வில்லையே யென்று ஜனங்கள் சொல்லமாட்டார்களா? அதற்காக அவர் வந்திருப்பார். எதையும் நேரில் வந்து பார்த்தால்தானே அவருக்கு விஷயம் நிச்சயப்படும். அதுவுமல்லாமல் திவானுக்கு ஏராளமான சொத்து இருந்ததாம். அதையெல்லாம் மற்றவர் அபகரித்துக் கொள்ளாமல் காப்பாற்ற வேண்டியவர் கிழவர்தானே. 10, 12-வயசில் திவானுக்கு ஒரு குழந்தை இருக்கிறதும். திவானுடைய சொத்தை யெல்லாம் பத்திரப்படுத்தா விட்டால், பையன் ஓட்டாண்டி ஆய் விடுவானல்லவா? கிழவர் மாத்திரம் வந்தது சரியான காரியம்" என்றார்.

அது வரையில் ஆழ்ந்து யோசனைசெய்பவர் போல் காணப்பட்ட நாராயணசாமி, "வேலாயுதம் சொல்வதெல்லாம் சரிதான். இருந்தாலும், என் மனசில் ஒருவிதமான சந்தேகம் உண்டாகிறது. காட்டில் திவானைப் புலி தூக்கிக்கொண்டு போனபோது அங்கே தற்செயலாய் ஒரு பரதேசி வந்ததாகவும். அவரிடம் திவான் எல்லா விஷயத்தையும் சொல்லிவிட்டு மூர்ச்சித்துப் போனதாகவும், பிறகு பரதேசிவந்து தம்மிடம் விவரத்தை தெரிவித்ததாகவும் கிராமமுனிசீப்பு எழுதினரல்லவா? அந்த இடத்தில்தான் இந்தக் கதை அவ்வளவு நம்பிக்கையாகப் படவில்லை. திவானுடைய மோட்டார்வண்டி தவறிப் பள்ளத்தில் விழுந்திருக்கலாம். அப்படி விழுந்த காலத்தில் திவானுக்குப் பலமாக அடிபடாமலிருக்குமா? அடிபெற்றவர் மூர்ச்சித்துப்போகாமல் இருந்திருப்பாரா? அல்லது, அவர் தெளிவான அறிவோடு இருந்ததாக வைத்துக்கொண்டாலும், புலி வந்து பாய்ந்து அவரைப் பல்லால் கௌவித் தூக்கிக்கொண்டு போகும் போதே கிலியினல் அவருக்கு உடனே உயிர் போய்விடுமே. அந்தச் சமயத்தில் திவான் பரதேசியிடம் தம்முடைய வரலாற்றை இப்படியெல்லாம் அழகாகச் சொல்லப் போகிறாரா!" என்றார்.

உடனே வேலாயுதம், "அப்படியானல் என்னதான் உன்னுடைய யூகம்? திவான் இறக்கவில்லை என்கிறயா?" என்றான்.

நாராயணசாமி, "திவான் இறக்கவில்லையென்று நான் சொல்லவரவில்லை. திவானைப் புலி அடித்திருக்காது. அவர் மோட்டாரிலிருந்து விழுந்து மூர்ச்சித்துக் கிடந்திருப்பார். அந்தப் பரதேசி

அதைப் பார்த்து அவரிடம்போய் அவருடைய கைவசத்தில் இருந்த நகைகள் பணம் முதலிய விலைபெற்ற சாமான்களையெல்லாம் அபகரித்து பத்திரப்படுத்திவிட்டுத் திவானைத் தூக்கிக்கொண்டுபோய் வேறே எங்கேயாவது பள்ளம் படுகுழியில் போட்டு மறைத்து விட்டு, இவ்விதமான கட்டுக்கதையை முனிசிப்பிடம் சொல்லியிருக்கலாம். நானுயிருந்தால் உடனே அந்தப் பரதேசியைச் சோதனை போட்டுப் பார்த்திருப்பேன்" என்றார்.

வேலாயுதம், "நீ மகா புத்திசாலி! அந்தப் பரதேசி அப்படிப் பட்ட திருட்டில் இறங்குகிறவனுயிருந்தால் அவன் பக்கத்து ஊருக்குப் போய், வேறே எவருக்கும் தெரியாமல் தனிமையில் காட்டில் நடந்த விஷயத்தைக் கிராம முனிசிப்பிடம் சொல்லியே இருக்கமாட்டான்; பொருளையெல்லாம் அபகரித்துக்கொண்டு சம்சயத்திற்கு இடமில்லாமல் வேறே எங்கேயாவது போயிருப்பான்; இந்த விஷயத்தை எவரிடத்திலும் பிரஸ்தாபிக்கவே மாட்டான்; அவன் எப்போது அவ்வளவு தூரம் போய்ச் சொன்னானோ, அது நிஜமாகவே இருக்கவேண்டும்" என்றார்.

அவ்வாறு அவர்கள் அந்தப் பரதேசியைக் குறித்து சம்பாஷித்திருந்தபொழுது அங்கிருந்த மனிதர்கள் எல்லோரும் திவானை அடிக்கடி கபட்டுப் பார்வையாகப் பார்த்தனர். ஆனால், அவர்மீது சந்தேகப்பட்டு அவர்கள் அவ்வாறு பார்க்கவில்லை. அவ்விடத்தில் ஒரு பரதேசி இருக்கையில் நாராயணசாமி இன்னொரு பரதேசியைப் பற்றி இழிவாகப் பேசுகிறாரே என்றநினைவினால் அவர்கள் அவ்வாறு பார்த்தனர். அவர்கள் தம்மைப் பார்க்கின்றனரென்பதை திவானும் உணர்ந்தார். அவர்கள் தம்மீது அதிக கவனம் செலுத்தும்படி விடுவது உசிதமல்லவென்று நினைத்த திவான் தமது போஜனத்தை அவ்வளவோடு முடித்துக்கொண்டு உடனே எழுந்து தண்ணீர்ச் செம்பை எடுத்துக்கொண்டு கை யலம்பும் பொருட்டுப் பின்புக்கத்திற்குச் சென்றார். அப்போது நாராயணசாமி வேலாயுதத்தைப் பார்த்து, "இந்தப் பரதேசி யாரப்பா? மற்றப் பரதேசிகள் ஊருக்குள் பிச்சையெடுத்துச் சாப்பிடுவார்கள். இவர் பணங் கொடுத்துச் சோற்றுக்கடையில் சுகமாக சாப்பிடுகிறாரே! இவர் பணக்காரப் பரதேசிபோ லிருக்கிறதே. இவர் உலகைத் துறந்திருப்பது புது மாதிரியாக இருக்கிறதே" என்றார்.

இன்னொருவர், "ஒருவேளை இந்தச் சாமியார்தான் திவான் இறந்ததைப்பற்றி கிராம முனிசீப்புச்குச் செய்தி சொன்னவரோ என்னவோ" என்றார்.

வேலாயுதம், "இவருடைய முகத்தையும், இவர் பேசுவதையும் பார்த்தால், இவர் இங்கிலீஷ் நாகரிகம் அறிந்த பரதேசியாகத் தோன்றுகிறார். இவர் தம்முடைய வாயைத்திறந்து யாரோடும் பேசுகிறதையே காணோமே!" என்றார்.

அவ்வாறு அவ்விடத்தில் நடந்த சம்பாஷணை முழுதையும் நன்றாகக் கேட்டுக்கொண்டே பின்புறத்தில் கை யலம்பிக்கொண்டிருந்த திவான் அதை விரைவாக முடித்துக்கொண்டு உள்ளேவந்து செம்பை வைத்த பின், சோற்றுக்கடைக்காரருக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டு விசையாக நடந்து அந்த இடத்தை விட்டு வெளியில் சென்றுவிட்டார். சென்றவர் தாம் எவ்விடத்திற்குப் போகிறோம் என்பதை எவரும் கண்டுகொள்ளாதபடி சாமர்த்தியம் செய்து ஆங்காங்கு சிறிதுநேரம் நிற்பதும் உட்காருவதும் எழுந்து மேலே செல்வதுமாய் நடந்து அந்த ஊரை விட்டு வெளிப்பட்டார். அதற்குமேல் தாம் அந்த ஊரில் இருப்பது தமக்கு அபாயகரமாய் முடியுமென்ற எண்ணம் தோன்றியதாகையால், திவான் சாமியார் எவரும் தம்மைக் கவனிக்காதபடி தந்திரமாக அந்தஊரை விட்டுப் பிரயாணமாகி விரைவாக நடந்து சுமார் பதினைந்து மைல்செல்ல, அவ்விடத்தில் ஓர் ஊர் குறுக்கிட்டது. அந்த ஊரிலும் கோவில் குளங்கள் சத்திரம் கடைகள் முதலிய வசதிகள் காணப்பட்டமையால், தாம் அந்த இரவை அவ்விடத்திலிருந்து கழிப்பதென்று நமது சாமியார் தீர்மானித்துக்கொண்டு அவ்வாறே அந்த ஊரில் தங்கினார். கோவில் சுவாமி தரிசனம், சத்திரத்தில் சாப்பாடு, திண்ணையில் படுக்கையாக அந்த இரவு கழிந்தது. அந்த ஊரும் இருப்பதற்கு வசதியானதாய் இருந்ததாகையால், தாம் அவ்விடத்தில் இரண்டு தினங்கள் இருந்து பிறகு புறப்பட்டுப் போவதென்று சாமியார் தீர்மானித்துக் கொண்டார். ஆனால், அவ்விடத்தில் அவர் ஒரு நாளைக்குமேல் அதிகமாய் இருக்க இயலாமல் போய்விட்டது. அந்த ஊரில் இருந்த சத்திரம் தர்மச்சத்திரமாதலால், அவ்விடத்தில் ஏழைப் பிரயாணிகளுக்கும், பரதேசிகளுக்கும் இலவசமாய்ப் போஜன மளிக்கப்பட்டதுபற்றி, அந்த சத்திரத்தின் திண்ணையில் ஏராளமான பரதேசிகளும், பிச்சைக்காரர்களும் எப்போதும்

நிரம்பி இருந்தனர். அவர்களுக்குள் சிலர் தவிர மற்றவர் விகாரமான தோற்றமும், அசங்கியமான ஆடைகளும், கஞ்சாக்குடித்தல், பங்கி யடித்தல், கள் குடித்தல் முதலிய துர்நடத்தைகளும், இழிவான சம் பாஷணையும் உடையவராய் இருந்தமையால், அவர்களுக்கிடையில் இருந்தது திவான் சாமியாருக்கு நிரம்பவும் துன்பகரமாக இருந்ததா கையால், அவர் அவ்விடத்தை விட்டு மறுநாளே புறப்பட்டுவேறோர் ஊருக்குப் போய்ச் சேர்ந்தார். அவ்வாறு திவான் மூன்றுமாதகாலம் நடந்து க்ஷேத்திரவாசம் தீர்த்த யாத்திரை முதலியவற்றைச் செய்தபடி ஒருநாள் தங்கிய இடத்தில் மறுநாள் தங்காமல் சென்று கொண்டே இருந்தார். அவ்வாறு தொடர்ச்சியாகக் கால் நடையாய் நடந்து சென்றமையாலும், ஒவ்வோர் ஊரில் ஒவ்வொரு விதமான ஆகாரமும் தண்ணீரும் கிடைத்தமையாலும், பஞ்சணையில் சயனித்த உடம்பைக் கரடுமுரடான திண்ணைகளில் போட்டுப்படுக்க நேர்ந்த மையாலும், எப்போதும் அவரது மனத்தில் குடிகொண்டு அதை ஓயாமல் புண்படுத்திக் கொண்டே இருந்த விசனமும் சஞ்சலமும் நிமிஷத்திற்கு நிமிஷம் பெருகிக்கொண்டே இருந்தமையாலும், தாம் உயிருக்குயிராய் நினைத்துக் காதலித்த காந்திமதியம்மாளையும் ராஜா பகதூரையும் நெடுங்காலமாய் விட்டுப்பிரிந்த ஏக்கத்தின் சுமையினா லும், காந்திமதியம்மாளின்மீது ஏற்பட்ட சம்சயமாகிய பெரும் பேய் விலகாமல் அவரது மனத்தைக் கெட்டியாகப் பிடித்து ஆட்டி வைத்தமையாலும், திவான் வெகுசீக்கிரத்தில் இளைத்துக் கருத்துத் துரும்பாய் மெலிந்து முற்றிலும் உருமாறிப் போய்விட்டார். அவ ரது தேக நன்னிலைமையும் குலைந்து இருமல் ஜுரம் முதலிய நோய்க ளுக்கு இருப்பிடமாயிற்று. மினுமினுப்பாக இருந்த அவரது முகம் வாடி வதங்கிக் காய்ந்துபோயிற்று. கன்னங்களின் எலும்புகள் வெளிப்படத் தொடங்கின. தாமே தமதுவடிவத்தைக் கண்ணாடியில் பார்த்தால், தமது அடையாளத்தைக் கண்டுகொள்ளக் கூடாதபடி அவர் அடியோடு மாறிப்போனார். அவ்வாறு இளைத்து முற்றிலும் வேறுபட்டுப் போனதற்கு அநுகுணமாக அவர் முன்னரே தமது சிரத்தை மொட்டையடித்து மீசையை எடுத்துவிட்டு, காஷாய அங்கி விபூதி, ருத்திராக்ஷ மாலைகள் முதலியவற்றை அணிந்து கொண்டி ருந்தமையால், அவரது பழைய தோற்றம் அடியோடு மாறிப்போய் விட்டது. அவருடன் எப்போதும் இருந்து பழகிய காந்திமதியம் மாளோ, திருவனந்தபுரத்தில் அவரோடு நெருங்கிப் பழகிய இதர மனிதர்களோ அவரை உற்று நோக்கினாலும், அவர் இன்னார் என்

பதை அறிந்துகொள்வது முற்றிலும் துர்லபமாகப் போய்விட்டது. அத்தகைய நிலைமையை யடைந்த திவான் சமிதொடர் மங்கலத்தை விட்டுப் புறப்பட்டதற்குச் சுமார் மூன்று மாத காலத்திற்குப் பிறகு திருவடமருதூருக்கு அருகில்போய்ச் சேர்ந்தார். இரண்டு மூன்று தினங்களில் தாம் தமது சொந்த ஊரை அடைந்து விடுவோம் என்ற நினைவு தோன்றத் தோன்ற அவரது ஆவலும் வேதனைகளும் மலைபோலப் பெருகி சகிக்கவொண்ணாத சஞ்சலத்தை உண்டு பண்ணின. தாம் எவ்விதமான விபரீதச் செய்தியைக் கேட்க நேருமோ என்ற எண்ணமும், தாம் இறந்துபோனதாகக் கேள்வியுற்ற தமது தந்தை உயிருடன் இருக்கிறாரோ, அல்லது, தமது செய்கையே அவருக்கு எமனாய் முடிந்துவிட்டதோ என்ற எண்ணமும், காந்திமதி யம்மாள் தமது கள்ள நாயகனோடு பகிரங்கமாய் வாழ்வதைத் தாம் காண நேருமோ என்ற எண்ணமும், அல்லது, அவள் குற்றமற்றவளாயிருந்தால், தான் வைதவ்விய மடைந்ததை சகியாமல் அவள் எவ்வித நிலைமையில் இருக்கிறாளோ அல்லது கிணற்றில் குளத்தில் விழுந்து இறந்துவிட்டாளோ என்ற எண்ணமும் மாறிமாறி மும்முரமாக எழுந்து பெருகி அவரை ஓயாமல் கொன்று கொண்டே இருந்தன. திருவடமருதூருக்குப் போய்த் தமது மனிதரைக் காண எத்தனித்தது தம்மை வெட்டக் கொண்டு போவதுபோல அவரால் சகிக்க இயலாத வேதனையான செய்கையாய் இருந்தது. ஆயினும் தாம் முக்கியமான ஒரு விஷயத்தில் உண்மை இன்னதென்று அறிந்து கொள்வதைக் கருதி நிரபராதிகளான தகப்பனார் ராஜாபகதூர் முதலியோரது மனத்தைப் புண்படுத்தி மூன்றுமாதகாலமாய்த் துயரக்கடலில் ஆழ்த்திக்கொண்டிருப்பதால், தாம் தமது மன உணர்ச்சிகளை எவ்விதமாகிலும் அடக்கிக்கொண்டு, உண்மையை உடனே கண்டு பிடிப்பது அத்தியாவசியமான காரியம் என்று தீர்மானித்துக் கொண்ட திவான் சாமியார் அரும்பாடுபட்டுத் தமது மனத்தை சாந்தப் படுத்திக்கொண்டு ஒருநாள் காலைவேளையில் திருவடமருதூரை யடைந்தார். அடைந்தவர் அந்த ஊர்க்குளத்திற்குப் போய் நீராடித் தமது நியமம் நிஷ்டைகளை முடித்துக் கோவிலுக்குப் போய் அர்ச்சனை தீபாராதனை முதலியவற்றைநிறைவேற்றி மிகுந்த பக்திப் பெருக்கோடு சுவாமி தரிசனம் செய்துகொண்டபின் ஊருக்குள்ளிருந்த ஒரு போஜன சாலையை யடைந்து தமது ஆகாரத்தை ஒருவாறு முடித்தபிறகு தமது மாளிகை இருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார். அவ்வாறு போனபோதே அவரது

மனம் பொங்கி யெழுந்து கட்டிலடங்காமல் பதறித் துடிக்க வாரம்பித்தது. இன்பப் பெருக்கோ துன்பப் பெருக்கோ என்பதே தெரியாதபடி பலவித உணர்ச்சிகள் ஒரே காலத்தில் ஒன்றுகூடி அவரது மனத்தை அமர்க்களப்படுத்த வாரம்பித்தன. தமது தந்தையைத் தாம் காணப் போகிறோம் என்ற ஆநந்தம் ஒருபுறம் எழுந்ததானுலும், அவர் எவ்விதமான நிலைமையில் காணப்படுகிறாரோ என்ற அச்சம் ஒரு புறத்தில் தோன்றி அபாரமான கவலையை உண்டாக்கியது. தமது மனையாளான காந்திமதியம்மாளும் அருங்குணப் புதல்வனும் தமது கண்ணில் படுவார்களோ, அல்லது கண்ணில் படாமல் வீட்டிற்குள்ளேயே இருப்பார்களோ என்ற சந்தேகமும் கவலையும் தோன்றின. விவரிக்க இயலாத மகா துன்பகரமான அத்தகைய மன நிலைமையில் திவான் சாமியார் வாய் ஓயாமல் இருமிக்கொண்டு தளர்நடை நடந்து சென்று தமது மாளிகையின் வாசலை யடைந்தார். அடையவே, அவ்விடம் அவர் எதிர் பார்க்காத விதமாய்த் தோன்றியது. மாளிகையின் வாசலில் ஒரு பெருத்த கலியாணப் பந்தல் காணப்பட்டது. வாழை மரங்கள், தோரணங்கள், தேர்ச்சீலைகள் முதலிய அலங்காரங்கள் மேற்படி பந்தலில் நிறைந்திருந்தன. பந்தலுக்குள் ஏராளமான ஜனங்களுக்கெதிரில் மேளக்கச்சேரி நிரம்பவும் இன்பகரமாக நடந்துகொண் டிருந்தது. அந்த மாளிகையில் அப்போது கலியாணம நடக்கிற தென்பது சந்தேகமறத் தெரிந்தது. ஒருக்கால் ராஜாபகதூருக்கு தக்க பிரபு எவரேனும் பெண் கொடுப்பதாக முன் வந்ததால், தமது தந்தை அந்தக் கலியாணத்தை நடத்துகிறாரோ என்ற எண்ணம் உண்டானதானுலும் அவன் பன்னிரண்டு வயதே யடைந்த குழந்தை யாதலாலும், அவன் தனது தகப்பனுரைப் பறிகொடுத்து மூன்றே மாதகால மானதாலும், அவ்வளவு துரிதத்தில் அவர்கள் அந்தக் கலியாணத்தை ஏற்பாடு செய்திருக்க மாட்டார்களென்று திவான் சாமியார் தீர்மானித்துக் கொண்டதன்றி, அந்த மாளிகை நிரம்பவும், வசதியாகவும் விசாலமாகவும் இருப்பதைக் கருதி வேறே எவரேனும் தமது தந்தையிடம் அதை இரவலாகப் பெற்று, அவ்விடத்தில், தமது கலியாணத்தை நடத்தலாம் என்று ஒருவாறு நிச்சயித்துக்கொண்டு அந்த மாளிகைக்கு எதிரிலிருந்த ஒரு வீட்டின் திண்ணையை யடைந்து உட்கார்ந்து, "சங்கரா! சம்போ! மகாதேவா! என்று கூறிக் கொண்டு அலுத்துச் சுவரில் சாய்ந்து கொண்டார். அவ்வாறு சாய்ந்தவர் எதிரிலிருந்த மாளிகையைப் பார்த்தபடியே சிறிது நேரம்

இருக்க, பந்தலுக்குள் போய் வந்து கொண்டிருந்த மனிதர்களைக் கவனித்து நோக்குவதும் அவ்விடத்தில் நடந்த மேளக் கச்சேரியைக் கேட்பதுமா யிருந்தார். அங்குக் காணப்பட்ட மனிதர்களுள் ஒருவ ராகிலும் தமக்குத் தெரிந்த மனிதராக இல்லாமல் புது மனிதராக இருந்ததை உணர்ந்ததன்றி, தமது தந்தையாவது, அவரது தவசிப் பிள்ளைகளையாவது, ராஜா பகதூரையாவது காணவில்லை. ஆகவே அவர் தமது சொந்த ஜனங்கள் எவ்வித நிலைமையிலிருக் கிறார்க ளென்பதையும், அவர்களுக்கும் அந்தக் கலியாணத்தை நடத்துவோருக்கும் என்ன சம்பந்தம் என்பதையும் நிச்சயிக்க மாட்டாதவராய் அப்படியே சிறிதுநேரம் சாய்ந்துகொண்டிருக்க, அவரிருந்த வீட்டிற்குள்ளிருந்த ஒரு ஸ்திரீ வெளியில் வந்தாள். வந்தவள் திண்ணையில் உட்கார்ந்திருந்து நமது சாமியாரைக் கண் டாள். கண்டவள் அவரது பெருந்தன்மையான தோற்றத்தைப் பார்த்து அவர் யாரோ மகான் என்றும், வெயிலுக்காக உட்கார்ந் திருக்கிறாரென்றும் நினைத்து அவருடன் பேச்சுக் கொடுக்காமல் மரி யாதையாகவும் வணக்கமாகவும் ஒரு பக்கமாய் விலகி தூர இருந்த படி, எதிர்த்த மாளிகையின் கலியாணப் பந்தலில் தனது பார்வை யைச் செலுத்திய வண்ணம் நின்றாள்.

உடனே நமது சாமியார் தமது ஆவலை அடக்க இயலாதவராய் நிரம்பவும் மிருதுவாகவும், வணக்கமாகவும், அன்பாகவும் அந்த ஸ்திரீயை நோக்கி, "அம்மா! நீங்கள் இந்த வீட்டிலிருப்பவர்கள் தானே?" என்றார்.

அதைக் கேட்ட அந்த ஸ்திரீ நிரம்பவும் விநயமாகவும் பணிவாக வும் அவரது பக்கம் திரும்பி, "ஆம், சுவாமி! நான் இந்த வீட்டி லிருப்பவள்தான்" என்றாள்.

உடனே திவான் சாமியார், "ஏனம்மா! எதிர்த்த வீட்டில் என்ன விசேஷம்? பந்தல் போட்டு மேளம் வாசிக்கிறார்களே!" என்றார்.

உடனே அந்த ஸ்திரீ, "கலியாணம் நடத்துகிறார்கள்" என் றாள்.

உடனே சாமியார், "அந்த வீட்டில் ஒரு பெரியவர் இருந்தாரே, அவருடைய மகனுக்கா கலியாணம்?" என்று எதையு மறியாதவர் போலக் கபடமாக வினவினார்.

உடனே அந்த ஸ்திரீயினது முகம் மாறுபட்டுப் போயிற்று. உண்மையான வரலாற்றைச் சொல்வதற்கு வெட்கினவள் போல அவள் நாணிக்கோணித் தயங்கி ஏளனமான புன்னகை செய்து; "கிழவருடைய பிள்ளை எங்கே இருக்கிறார்! அவர் போன இடத்தில் புல் முளைத்துப் போய் விட்டது. கிழவர்தான் இப்போது குமரராயிருக்கிறார்" என்று தணிவான குரலில் புரளியாகக் கூறினாள்.

அதைக் கேட்ட சாமியார் நிரம்பவும் வியப்படைந்தவராய் மிகவும் நயமாகவும் மரியாதையாகவும் அந்த அம்மாளை நோக்கி, "என்ன தாயே! ஒரு மாதிரியாகச் சொல்லுகிறீர்களே? நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே! கிழவர் குமரராகி இருக்கிறாரென்று எதனால் சொல்லுகிறீர்கள்?" என்றார்.

அவரது விநயமான சொற்களால் வசீகரிக்கப் பட்டவளாய் அந்த ஸ்திரீ அரிடம் ஒருவித அபிமானமும் பணிவும் தோற்றுவித்து, "நானு பொய் சொல்லவில்லை; நிஜத்தையே சொல்லுகிறேன். கிழவருடைய குடும்ப சங்கதி இந்த ஜில்லா முழுதும் பரவி இருக்கிறதே; அது உங்கள் வரையில் எட்ட வில்லையா?" என்றாள்.

உடனே திவான் மிகுந்த கலக்கமும் கவலையும் கொண்டு, "அம்மணி! நான் ஊரூராய் அலையும் பரதேசி. நான் சுமார் ஒருவருஷ காலத்துக்கு முன்பு இந்த ஊருக்கு வந்து எதிர்த்த வீட்டுத் திண்ணையில் தங்கி இருந்தேன். அந்த வீட்டின் சொந்தக்காரரான பெரியவர் என்னிடம் அன்பாகப் பேசி அன்ன மளித்து என்னை அனுப்பி வைத்தார். அவர் மாத்திரம் இந்த ஊரில் தனிமையில் இருப்பதாகவும், அவருடைய பிள்ளை வேறே எந்த ஊரிலோ பெரிய உத்தியோகத்தில் இருப்பதாகவும் நான் கேள்வியுற்றேன். இப்போது கலியாணப் பந்தலைப் பார்த்தவுடன், ஒருவேளை, அவருடைய பிள்ளைக்குத்தான் கலியாணமோ வென்று நினைத்துக் கேட்டேன். நீங்கள் சொல்வதைப் பார்த்தால், இடையில் ஏதேதோ மாறுதல்கள் நேர்ந்திருப்பதாக எண்ணவேண்டி யிருக்கிறது. பெரியவரும் அவருடைய பிள்ளை முதலியோரும் க்ஷேமமாய் இருக்கிறார்களல்லவா?" என்றார்.

அதைக் கேட்ட அந்த ஸ்திரீ, "சுவாமியார் ஐயா! இந்தக் குடும்பத்தின் சீர்குலைவை நான் என்ன வென்று சொல்லப் போகி

றேன்! பெரியவர் இதுவரையில் இந்த ஊரில் தனியாகத்தான் இருந்தார். இவருடைய குமரரர் திருவநந்தபுரத்தில் மாசம் ஐயாயிரம் ரூபாய் சம்பளத்தில் திவான் வேலையாக இருந்தார். அவருக்குக் கலியாணம் ஆய் அநேக வருஷகாலம் ஆகிறது. அவருக்கு 10, 12-வயசில் ஓர் ஆண் குழந்தை கூட இருந்தது" என்றாள்.

உடனே திவான் மிகுந்த திகிலும் கலக்கமும் அடைந்து, "குழந்தை கூட இருந்தான் என்கிறீர்களே! அந்தக் குழந்தை இப்போது இல்லையா?" என்றார்.

அந்த அம்மாள், "அந்தக் குழந்தை உயிரோடுதா னிருக்கிறான்; ஆனாலும், அவன் இப்போது இன்ன இடத்திலிருக்கிறானென்பது மாத்திரம் தெரியவில்லை" என்றாள்.

சாமியார், "அந்தப் பையனுடைய தகப்பனார் திருவநந்தபுரத்தில் திவான் வேலையில் இருப்பதாகச் சொன்னீர்களே! அவருடைய பையன் அங்கே இருந்து எங்கேயாவது போய்விட்டானா? அவர்களுடைய வரலாற்றை நன்றாகச் சொல்லுங்கள்" என்றார்.

அந்த ஸ்திரீ, "சுமார் மூன்றுமாச காலத்துக்குமுன் இந்த ஊர்க் கோவிலில் திருவிழா நடந்தது. அதற்காக வந்து விட்டுப் போகும்படி பெரியவர் தம்முடைய பிள்ளைக்குக் கடிதம் எழுதி, தவசிப்பிள்ளையையும் திருவநந்தபுரத்துக்கு அனுப்பினாராம். அவருடைய பிள்ளை வேலையை விட்டு வரமுடியவில்லையாம். அவர் தம்முடைய சம்சாரத்தையும், பிள்ளையையும் வேலைக்காரர்களோடு முன்னால் அனுப்பிவிட்டு, தாம் பின்னால் தேரன்றைக்கு முதல்நாள் இங்கே வருவதாகச் சொல்லி யனுப்பினாராம். வேலைக்காரர்களோடு திவானுடைய பெண்ஜாதியும் பிள்ளையும் இங்கேவந்து சேர்ந்தார்கள்; அவர்கள் காலையில் வந்தார்கள். அன்று பகல் முழுதும் பெரியவரோடு இருந்தார்கள். இரவில் எல்லோரும் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டு தூங்கினார்கள். மறுநாள் பொழுது விடிந்தவுடன் கிழவர் பார்க்கிறார். மருமகள், பேரன் ஆகிய இருவரும் போன இடம் தெரியவில்லை; இருவரும் மாயமாய் மறைந்து போய்விட்டார்கள். கிழவர் நிரம்பவும் பயந்து திகிலடைந்து ஊர் முழுவதும் தேடிப்பார்த்தார்; ஆள்களை விட்டு கிணறு குளம் முதலிய சகலமான இடங்களையும் ஒன்றுகூட பாக்கிவிடாமல் சோதனை

போட்டுப் பார்த்துவிட்டார். அவர்கள் இருவரும் காணமலேயே போய்விட்டார்கள்" என்ருர்.

அதைக்கேட்ட திவான் தமது செவிகளையே நம்பாமல் பேரிடியினுல் திடீரென்று தாக்கப்பட்டவர்போலப் பொறிக்கலக்கமடைந்து திக்பிரமை கொண்டு தத்தளித்து அந்த ஸ்திரீயை நோக்கி, "நீங்கள் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறதே! இரவில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தவர்களான இருவரும் எப்படித்தான் மறைந்து போயிருப்பார்கள்! இவர்களுக்கு விரோதிகள் யாராவது உண்டா? அவர்கள் இரண்டு பேரையும் தூக்கிக்கொண்டு போய் விரோதிகள் எங்கேயாவது மறைத்திருப்பார்களா?" என்ருர்.

அந்த ஸ்திரீ, "இவர்களுக்கு விரோதி யாரும் இல்லவே இல்லை. அப்படிச் செய்தது விரோதியாக இருந்தால், அவர்கள் கிழவரை மாத்திரம் உயிரோடு விட்டுப் போவார்களா? அந்தப் பெண்ணே தன்னுடைய பிள்ளையையும் அழைத்துக்கொண்டு எவருடனாவது அக்கரைச் சீமைக்குப் போயிருப்பாளோ என்றே ஊரில் எல்லோரும் சந்தேகங் கொள்ளுகிருர்கள்" என்ருள்.

திவான், "அதைப்பற்றி பெரியவர் தம்முடைய பிள்ளைக்கு எழுதவில்லையா?" என்ருர்.

அந்த ஸ்திரீ, "தாம் உடனே அப்படி எழுதினல், பிள்ளைக்கு அது நிரம்பவும் கஷ்டமாக இருக்குமென்று நினைத்து மேலும் இரண்டொரு நாள்கள் வரையில் நன்ருகத் தேடிப் பார்த்து, ஒரு வேளை அந்தப் பெண் புருஷனிடமே திரும்பிப் போயிருப்பாளோ என்பதைத் தெரிந்து கொண்டுவர ஓர் ஆளையே திருவனந்தபுரத்துக்கு அனுப்பலாமென்றிருந்தார். மூன்ருவதுநாள் திருவனந்தபுரத்திலிருந்து கிழவருக்கே ஒரு தந்தி வந்தது. அதைக் கண்டவுடன் தம்முடைய மருமகளும் பேரனும் அந்த ஊருக்குத் திரும்பி வந்துவிட்டார்களென்றுதான் அந்தத் தந்தியில் செய்தி எழுதப்பட்டிருக்குமென்று கிழவரும் மற்றவர்களும் நினைத்து நிரம்பவும் சந்தோஷமடைந்தனர்; ஆனல், தந்தியைப் பிரித்துப் பார்த்தவுடன் அவர்கள் எல்லோருடைய சந்தோஷமும் அழுகையாய் மாறிவிட்டது. அதிலிருந்த சங்கதி இந்த ஊரில் நடந்ததைவிடப் பதிணயிரம் பங்கு அதிக துக்கத்தை உண்டுபண்ணி விட்டது. திவான் எங்

கேயோ கிராமத்தில் முகாம் போட்டிருந்தபோது, வெளியில் எங் கேயோ போன சமயத்தில், அவரைப் புலி தூக்கிக்கொண்டு போய்த் தின்று விட்டதென்றும், உடனே கிழவர் புறப்பட்டுவந்து அவருடைய சொத்துகளை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் அந் தத் தந்தியில் செய்தி எழுதப்பட் டிருந்தது. அதைக் கேட்ட வுடனே கிழவர் அப்படியே மூர்ச்சித்து வேரற்ற மரம்போலக் கீழே சாய்ந்து விட்டார். பக்கத்திலிருந்தவர்களும் அதுபோலவே விசனக் கடலில் ஆழ்ந்து போனார்களானாலும், கிழவரைக் கவனித்து அவ ருக்கு ஆகவேண்டிய உபசாரணைகளைச் செய்து அவருடைய மூர்ச் சையைத் தெளியச் செய்தனர்; உடனே கிழவர் வாயிலும் வயிற்றி லும் அடித்துக்கொண்டு கதறி விழுந்து புரண்டழுது புலம்பி அள விட முடியாத விசனக் கடலில் ஆழ்ந்து போனார். காணாமல் போன மருமகளையும் பேரனையும்பற்றிக் கவலைப்பட்டு வருந்துவதா, அகால மரணமாய் இறந்துபோன தமது குமாரரைப்பற்றி அழுவதா, கிழ வர் என்ன செய்வார் பாவம்! அவர் பைத்தியங் கொண்டவர்போல மாறி அப்படியே இடிந்து உட்கார்ந்து போய்விட்டார். பக்கத்தி லிருந்தவர்கள் அவருக்குப் பலவிதமான ஆறுதல்கள் கூறி யாரோ விரோதிகள் மருமகளையும் பேரனையும் கொண்டு போனதன்றி, அந்த மாதிரி பொய்த் தந்தி கொடுத்திருப்பார்களென்று சொல்லிப் பெரியவரைப் பலவாறுதேற்றி, மறுநாள் அவரையும் தவசிப்பிள்ளை யையும் திருவநந்த புரத்துக்கு அனுப்பினார்கள். அவர்கள் இருவரும் அந்த ஊருக்குப் போய்ப் பார்த்ததில், காந்திமதியம்மாளும் அவ ளுடைய பிள்ளையும் அந்த ஊரிலும் காணப்படவில்லை. ஆனால், திவானைப் புலி அடித்துத் தின்றுவிட்டதென்ற செய்தி மாத்திரம் உண்மையானதென்பது தெரியவந்தது அந்த ஊரிலிருந்த மகா ராஜன் முதலிய எல்லோரும் கிழவருக்கு நிரம்பவும் மரியாதை செய்து, ஆறுதல் சொல்லித் தேற்றி, திவானுடைய குழந்தையைப் பத்திரமாகக் காப்பாற்றி முன்னுக்குக் கொண்டுவரும்படி சொல்லி அனுப்பினார்களாம். அங்கே இருந்து கிழவர் சுமார் இரண்டு லக்ஷம் ரூபாய் பெறுமானமுடைய சொத்துக்களை எடுத்துக்கொண்டு நாலை ந்து தினங்களில் இங்கே வந்து சேர்ந்தார். ஏற்கெனவே, இந்த ஊரில் அவருடைய வசத்தில் ஒரு லக்ஷம் ரூபாய் பெறுமானமுடைய சொத்து இருந்தது. ஆகமொத்தம் மூன்று லக்ஷம் ரூபாய் பெறு மானமுடைய சொத்து அவரிடம் இருந்ததானாலும், திடீரென்று தம்முடைய குமாரரையும் மருமகளையும், பேரனையும் ஒரே காலத்

தில் இழந்த துக்கம் சகிக்க முடியாததாகி விட்டது. அவர் உடனே நோயில் விழுந்துவிட்டார். அவருடன் வெகுகாலமாக இருந்துவரும் இராமலிங்கம் என்ற தவசிப்பிள்ளை அவருடைய சுய ஜாதியைச் சேர்ந்த மனிதர். அவருக்குச் சம்சாரமும், பதினாறு அல்லது பதினேழு வயசில் ஒரு பிள்ளையும், பதின்மூன்று வயசில் ஒரு பெண்ணும் இருக்கிறார்கள். கிழவர் நோயாய்ப் படுத்தவுடனே, அவரை ஓயாமல் கவனிக்கவும் அவருக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்யவும் மனிதர்கள் வேண்டுமென்று, தவசிப்பிள்ளை தம்முடைய சம்சாரம், பிள்ளை பெண் ஆகிய எல்லோரையும் இந்த இடத்துக்கே அழைத்துக்கொண்டார். எல்லோரும் சேர்ந்து இரவுபகல் பாடுபட்டுக் கிழவருக்கு மருந்துகள் கொடுத்துப் பத்தியச் சாப்பாடு போட்டு அவருக்கு ஆறுதல் பல சொல்லி அவருடைய மனசையும் உடம்பையும் தேற்றினார்கள். ஒரு மாச காலத்தில் கிழவருடைய விசனம் ஒருவிதமான சமனமடைந்தது. அவருடைய உடம்பும் கொஞ்சம் தேறியது. அதுவுமன்றி, இன்னொரு மாறுதலும் காணப்பட்டது. அந்தத் தவசிப்பிள்ளையும் அவருடைய குடும்பத்தாரும் கிழவரைத் தங்கள் சொந்த மனிதரைவிடப் பன்மடங்கு அதிக பிரியமாகவும் பட்சமாகவும் நடத்தினார்கள். அதுபோலவே, கிழவருக்கும் அவர்களிடம் ஒருவிதப் பற்றும் வாஞ்சையும் உண்டாகி விட்டன. தம்முடைய நெருங்கிய பந்துக்கள் எல்லோரும் போய் விட்டதனால், தாம் நிராதரவாக இருந்த சமயத்தில் அவர்கள் தம்முடைய பந்துக்களைவிட நூறு மடங்கு அதிகப் பற்றுதலாகவும், பிரியமாகவும், பணிவாகவும் இருந்ததைக் காணக் காண, அவர்களுடைய பாந்தவ்வியம் தமக்கு அத்தியாவசியமானதென்றும், அவர்கள் இல்லாவிட்டால் தாம் ஒரு நிமிஷங்கூட உயிரோடிருக்க முடியாதென்றும் கிழவர் எண்ணத் தொடங்கினார். தமக்குப் பிறகு, தம்முடைய மூன்று லக்ஷம் ரூபாய் பெறுமானமுடைய சொத்துக்கள் எவருக்குமில்லாமல் சர்க்காரைச் சேர்ந்துவிடுமே என்ற அச்சமும் கிழவருக்கும் மற்றவருக்கும் உண்டாகத் தொடங்கியது. தவசிப்பிள்ளை தங்களுக்கும் கிழவருக்கும் உள்ள சம்பந்தத்தை தேக சம்பந்தமாகச் செய்து கொண்டாலன்றி, அவருடைய சொத்துகளில் ஒரு துரும்பு கூடத் தங்களுக்குக் கிடைக்காதென்பதைக் கண்டு அதற்கு ஒரு யுக்தி தேடவாரம்பித்தார். அவருடைய மகள் கமலவல்லி என்பவள் நல்ல ரூபவதி. அவள் பதின்மூன்றுவது வயசிலேயே பெரிய மனுஷியாகி இருந்தாள்.

அவளைத் தாம் மெதுவாகக் கிழவருக்குக் கட்டி விட்டால், தெய்வானுகூலத்தால் அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்து விடுமானால், எல்லாச் சொத்தும் அதைச் சேர்ந்துவிடு மென்றும், குழந்தை பிறக்காவிட்டாலும். தம்முடைய பெண்ணும் தாமும் எல்லாச் சொத்தையும் தம்முடைய பிரியப்படி செலவிடலா மென்றும் நினைத்த தவசிப்பிள்ளையும் அவருடைய சம்சாரமும் தம்முடைய பெண்ணுக்கு இரவு பகல் போதனை செய்து, அதன் புத்தியைத் திருப்பி, கிழவரைக் கட்டிக் கொள்வதற்கு அவள்சம்மதிக்கும்படி செய்துவிட்டதன்றி, அந்தப்பெண் எப்போதும் அவருடன் கூடவே இருந்து, அவருக்கு ஆகவேண்டிய பணிவிடைகளை யெல்லாம்செய் யும்படியும் அமர்த்திவிட்டனர். அந்தப் பெண்ணின் பிரியத்தையும் பணிவையும் உழைப்பையும் கண்ட கிழவருக்கும் அவ்விடத்தில் ஒருவித வாஞ்சையும் பாசமும் ஏற்பட்டுப்போயின. திவான் இறந்து இரண்டு மாசகாலம் ஆவதற்கு முன் தவசிப்பிள்ளையும் அவருடைய குடும்பத்தாரும் காட்டிய பிரியத்தினாலும் செய்த உபசரணைகளினாலும் கிழவருக்குத் தாம் இழந்த மனிதர்களைப் பற்றிய நினைவு அவ்வளவாக மனசில் உறைக்காமல் போயிற்று. இரவு பகல் தமக்கெதிரிலேயே இருந்து இன்பமயமாக விளங்கிய அந்த அழகிய பெண்ணின் மேலேயே அவருடைய கவனம் செல்ல வாரம்பித்தது. அவருக்கு எந்தக் காரியம் ஆகவேண்டுமானாலும், அது கமலவல்லி இல்லாவிட்டால் முடியாது. ஒரு நிமிஷம் கமலவல்லி எங்கேயாவது போய்விட்டால், அவருக்கு இருக்கை கொள்ளாது. அடிக்கடி அவர் கமலவல்லி கமலவல்லியென்று எதற்காவது கூப்பிட்டுக்கொண்டே இருப்பார். அந்தப் பெண் அவரை அதற்குமுன் தாத்தா, தாத்தா வென்று கூப்பிட்டுக்கொண்டே இருக்கும். ஒருநாள் அந்தப்பெண் அவரைப் பார்த்து, "தாத்தா! ஒரு நிமிஷங்கூட உங்களுக்குக் கமலவல்லி இல்லாமல் காரியம் ஆகமாட்டேனென்கிறதே. மாயூரத்திலிருந்து யாரோ சிலர் பெண் கேட்க வந்து, என் தாயார் தகப்பனாருடன் அடிக்கடி பேசி விட்டுப் போகிறார்கள். என்னை இவர்கள் மாயூரத்தில் கட்டிக் கொடுத்துவிட்டால், அதற்குப் பிறகு நீங்கள் எந்தக் கமலவல்லியைக் கூப்பிடுவீர்கள்?' என்று நிரம்பவும் பிரியமாகவும் வாஞ்சையாகவும் உருக்கமாகவும் சொன்னாளாம். அதைக் கேட்ட கிழவருடைய முகம் உடனே வாடிப் போய்விட்டதாம். அவருடைய மனசில் ஒருவித ஏக்கம் உண்டாய் விட்டதாம். அவர் அதிக விசனமடைந்து கொஞ்சநேரம் மௌனமாக இருந்தாராம்.

உடனே பெண், "தாத்தா! என்னை நீங்களே கட்டிக்கொண்டு விடுங்கள். எனக்கும் உங்களை விட்டுப் பிரிந்துபோக மனமே இல்லை. நான் வேறே இடத்துக்குப் போனாலும் எப்போதும் உங்கள் நினைவாகவேதான் இருப்பேன்" என்றாளாம்.

அதைக் கேட்ட கிழவர் அதற்கு எவ்வித மறுமொழியும் சொல்லாமல் அப்போது பேசாமல் இருந்து விட்டாராம். ஆனாலும், அந்த விஷயம் அவருடைய மனசில் அது முதல் பதிந்து போகவே, அவர் பல தினங்கள் வரையில் அதைப்பற்றித் தீர்க்காலோசனை செய்தாராம். கடைசியில் எப்படியோ, கிழவருக்கும் கமலவல்லிக்கும் கலியாணம் நிச்சயமாகிவிட்டது. காரியம் இவ்விதம் முடிவாகி இருக்கிறதென்ற சங்கதி ஊராருக்குத் தெரிந்தால், ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமான அபிப்பிராயத்தை வெளியிடுவார்களாகையால், அதனால் கிழவருடைய எண்ணம் மாறினாலும் மாறலாமென்று நினைத்து, இதைக் கடைசிவரையில் வெளியிடாமல் வைத்திருந்து, நாள் வைத்து, பந்தல் போட்டு, சகலமான முஸ்தீபுகளையும் செய்துகொண்டு நேற்றுதான் இவர்கள் இந்த விஷயத்தைப் பகிரங்கப் படுத்தினார்கள். இன்று காலையில் முகூர்த்தம் நிறைவேறியது. பிறகு பந்திபோஜனம் நடந்தது. இப்போது மேளக்கச்சேரி நடக்கிறது" என்றாள்.

அந்த வரலாற்றை நிரம்பவும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டே இருந்த திவான் சாமியார், "ஓகோ! அப்படியா! சரிதான். நல்ல காரியம். தள்ளாத கிழவருக்கு இவர்களுடைய உதவி யாவது ஏற்படும்படி கடவுள் செய்தாரே! அதுவும் முன் ஜென்ம பூஜாபலன்தான். கலியாணப் பெண்ணின் தாயாரும் தகப்பனாரும் நல்ல குணமுடைய மனிதர்கள்தானே!" என்றார்.

அதைக் கேட்ட அந்த ஸ்திரீ, "இதுவரையில் அவர்கள் ஏழ்மை நிலைமையி லிருந்தார்கள்; நல்லவர்களாக இராமல் வேறு மாதிரியாயிருக்க அவர்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. இப்போது திடீரென்று புதுப்பணம் படைத்தவர்கள் ஆய்விட்டார்களே. இனி எப்படி மாறுவார்களோ! பணம் மனிதரை எப்படி வேண்டுமானாலும் செய்து விடும். என்னவோ பார்க்கலாம். எல்லாம் காலக்கிரமத்தில்தான் தெரியும்" என்றாள்.

திவான் சாமியார், "கலியாணப் பெண்ணின் மாதிரி எப்படி?" என்று நயமாக வினவினர்.

அந்த ஸ்திரீ, "அதையெல்லாம், இப்போது நாம் எப்படிக் கண்டுபிடித்துச் சொல்லமுடியும்? மனிதர் தமக்கு அதிகாரம் கிடைக்கிறவரையில் அடக்கமாகவும் நயமாகவும்தான் நடந்துகொள்ளுவார்கள். தம்முடைய ஸ்தானம் நிலைத்துப் போய்விட்டது, இனி மற்றவர் தம்மை அசைக்கமுடியாது என்று கண்டுகொண்டால், பிறகு அவர்கள் புது மாதிரியாகத்தான் நடந்து கொள்ளுவார்கள். இது எல்லா இடத்திலும் பிரத்தியக்ஷமாக நடக்கும் சங்கதிதானே" என்றாள்.

திவான் சாமியார், "ஆம்; அம்மா! நீங்கள் சொல்வது சரியான வார்த்தை. ஆனாலும் நான் பயந்து உங்களிடம் இன்னம் ஒரே ஒரு சங்கதி கேட்கிறேன். கோபித்துக் கொள்ளாமல் அதைமாத்திரம் சொல்லிவிடுங்கள். இந்தப் பெரியவர் திருவநந்தபுரத்திலிருந்து வந்த பிறகு நோயாய்ப் படுத்திருந்து தேறினால்லவா? அதன்பிறகு இவர்களுக்குள் ரகஸியமாக நடந்த விஷயங்களை யெல்லாம் நீங்கள் சொன்னீர்களே, அவைகளை யெல்லாம் நீங்கள் எப்படித் தெரிந்துகொண்டீர்கள்? யூகத்தின் மேல்தானே?" என்று விநயமாக வினவினர்.

அதைக் கேட்ட அந்த ஸ்திரீ, "எனக்கு அந்தத் தவசிப் பிள்ளையின் சம்சாரம் பழக்கமானவள். அடிக்கடி அந்த அம்மாள் என்னிடம் வந்து தங்கள் குடும்ப ரகஸியங்களை யெல்லாம் சொல்லிவிட்டுப் போவாள். இந்த விஷயங்களை யெல்லாம் அந்த அம்மாள் சொல்லத்தான் நான் தெரிந்துகொண்டேன். இல்லாவிட்டால் வேறு எப்படித் தெரியப் போகிறது" என்றாள்.

திவான் சாமியார், "சரி; கிழவர் தம்முடைய விருத்தாப்பிய தசையில் துயரத்துக்கு ஆளாய் முற்றிலும் அநாதரவான நிலைமையில் இருக்கிறார். இவர்கள் அவரையும் போஷித்துக் காப்பாற்றித் தாங்களும் க்ஷேமப்பட்டு நல்ல நிலைமையில் இருக்கவேண்டும். சரி; கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் எதற்காக? உலகைத் துறந்த பரதேசியான எனக்கு இந்த விசாரணை யெல்லாம் எதற்கு? சாப்

பிட்டவுடன் கொஞ்சம் அலுப்பாக இருந்தது. அதைப்பற்றி நான் கொஞ்சநேரம் திண்ணையில் உட்கார்ந்து கொண்டேன். நான் போய் விட்டு வருகிறேனம்மா!" என்று கூறியவண்ணம் தமது மூட்டை யையும் செம்பையும் தண்டத்தையும் எடுத்துக்கொண்டு அவ்வி டத்தை விட்டுத் தெருவிற்குப் போய்க் கலியாண வீட்டின் பக்கம் தமது முகத்தையும் திருப்பாமல் விரைவாக நடந்து அந்தத் தெருவை விட்டு அப்பால் சென்று மாயூரத்திற்குப் போகும் ரஸ்தாவோடு பிரயாணப்பட்டுவிட்டார்.

அவரது மனத்தின் அப்போதைய நிலைமை இன்னவிதம் இருந்ததென்பதை வாசகர்கள் யூகித்துக் கொள்வதே எளிதன்றி விவரித் துரைப்பது சாத்தியமற்ற காரியமென்றே கூறவேண்டும். அந்த நிமிஷம் வரையில் தாம் பிரத்தியக்ஷ தெய்வமாக மதித்திருக் கும் தமது தந்தை ஒரு பெண்ணை மணந்து வைபவமாய்க் கலியாணம் நடத்துகையில் தாம் கூட இருந்து அந்த சந்தோஷத்தைத் தாமும் அடையக் கொடுத்து வைக்கவில்லையே என்ற பெருத்த விசனமும் மனக் கொதிப்பும் அவரது மனத்தில் முக்கியமாகப் பொங்கி எழுத் தொடங்கின. அவர் கலியாணம் செய்துகொள்வதைப்பற்றி உண் மையில் அருவருப்பைக் கொண்டுள்ள ஊர் ஜனங்கள் வெளிப் பார் வைக்கு அதை மறைத்து, அதைப்பற்றித் தாம் சந்தோஷப் படுவ தாய்க் காட்டி, அந்தச் சடங்கை நடத்திவைத்து விருந்துண்டு மேளக் கச்சேரியைக் குதூகலமாய்க் கேட்டுக் கொண்டிருக்க, அதைப்பற்றி உண்மையிலேயே அபாரமான களிப்பும் ஆநந்தமும் அடையும் தாம் அந்த மாளிகையைப் பார்க்கவும் கொடுத்து வைக் காமல் உடனே புறப்பட்டு அந்த ஊரை விட்டே ஓட நேர்ந்ததே, ஈசுவரா! என்ன கொடுமை இது என்று சிவான் சகிக்க இயலாத பெருத்த ஏக்கமும் வேதனையும் துயரமு மடைந்தார். தமது மனைவி யும், ராஜா பகதூரும் எங்கேதான் போயிருப்பார்களென்று அவர் தம்மாலானவரையில் யூகித்து யூகித்துப் பார்த்து தமது மூளையை வதைத்துக் கொண்டதெல்லாம் வீணாகவே முடிந்தது. அந்த விஷயத்தில் அவர் ருஜுவான அபிப்பிராயம் எதையும் கொள்ள இயலவில்லை யானாலும், தனக்குப் பாஷாணமிட முயன்ற முத்துசாமி கூறிய வரலாறு ஒருவேளை நிஜமாய்த் தானிருக்குமோ என்ற சந்தேகம் நிவர்த்தியாக வழியில்லாம லிருந்ததன்றி, தாம் திருவடமருதூரில் கேள்வியுற்ற விபரீதச் செய்தி அந்த சந்

தேகத்தை அநேகமாய் ஊர்ஜிதப்படுத்தியது. திருவனந்தபுரத்தி லிருந்து புறப்பட்டு மாமனார் வீட்டிற்கு வந்த காந்திமதி யம்மாள் அதே இரவில் எங்கே போயிருப்பாள்! அவள் திரும்பித் திரு வநந்தபுரத்திற்கும் போகவில்லை. வேறு எவ்விடத்திலுங் காணப் படவில்லை; அவள்தான் போனாளென்றால், அவளுடைய சொற்படி ராஜாபகதூர் நடந்துகொள்ள எப்படி இணங்கினான்? ஒருக்கால் அவர்களிருவருக்கும் எதிர்பாராத அபாயம் ஏதேனும் நேர்ந்திருக் குமா! அவர்களிருவரும் ஆற்றில், கிணற்றில் தவறி விழுந்து தற் செயலாய் இறந்து போயிருப்பார்களா! அப்படியிருந்தால் அவர்க ளுடைய சவம்கூட வெளிப்படாமல் போக ஏதுவில்லையே! பிறகு எப்படித்தான் அவர்கள் மாயமாய் மறைந்து போயிருப்பார்கள்? காந்திமதியம்மாள் தானாக இணங்கியே ரகஸியமாய்ப் புறப்பட்டு இரவோடிரவாய் எங்கேயாவது போயிருந்தாலன்றி இப்படி யாதொரு கேடுமின்றி திடீரென்று மறைந்துபோக சாத்தியப்பட்டி ருக்காது. அவள் போவதற்கு முன்னாகவே, ராஜாபகதூரையும் அவள் சரிப்படுத்தி, அவன் தனது விருப்பத்திற்கு இணங்கும்படி செய்திருந்தாலன்றி, அவனும் இவ்வாறு திடீரென்று மறைந்து போயிருப்பதும் சாத்தியமற்ற விஷயம். ஆகவே, காந்திமதியம்மா ளைப்பற்றி முத்துசாமி கூறிய தகவல் உண்மையாகவே இருக்க வேண்டும். அவள் தனது குமாரனையும் அதற்கு இணங்கச் செய்து தன்னுடன்கூட அழைத்துக்கொண்டு போயிருக்கவேண்டும் என்ற நினைவுகள் தமது திவான் சாமியாரது மனத்தில் தோன்றி பெருத்த போர் விளைக்கத் தொடங்கின. தம்மிடம் அத்தனை வருஷ காலம் மகா உத்தமியாக நடந்து கொண்டவளான தமது காந்தி மதியம்மாளா அப்படித் தம்மிடம் துரோக சிந்தையாக நடந்து கொண்டிருப்பாளென்றும், தாம் கண்டதும், கேட்டதும் கனவோ நினைவோ வென்றும் திவான் எண்ண எண்ண, அவரது அறிவு சிதறிப் போகவாரம்பித்தது. அவர் முற்றிலும் பிரமித்துப் போய் விட்டார். வேறே எவனாகிலும் ஏதேனும் அநுகூலத்தைக் கருதித் தம்மைக் கொல்ல உத்தேசித்தானோ வென்று தாம் எதிர்பார்த்ததை ஊர்ஜிதப்படுத்த எவ்வித ஏதுவுமில்லையென்ற நிச்சயம் ஏற்பட் டது. ஆகவே, தாம் சந்நியாசம் வாங்கிக்கொண்டது தமக்கு சரி யான நிலைமை என்ற முடிவையும் அவர் அடைந்தார். பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால் எத்தாலும் மனிதர் வாழலாம்; அவள் ஏறுமாறாக நடப்பாளானால் கூறாமல் சந்நியாசம் கொள்

என்று முன்னோர் கூறிய விலைமதிப்பற்ற அருள்மொழி தமது விஷயத்தில் தானாகவே பலித்துவிட்டது என்று திவான் சாமியார் நினைத்துக்கொண்டார். எவ்வளவுதான் தமது மனைவியும், குமாரனும் தமக்கு உதவாமல் போய்விட்டாலும், தாம் உலகையும் பெருத்த பதவியையும் துறந்து, காஷாயம் வாங்கிக்கொண்டு யாத்திரைசென்றாலும், தமக்கு எவ்விதக் குற்றமும் புரியாத தமது தந்தையைத் தாம் விசனக் கடலில் ஆழ்த்தியதும், அவரைப் பார்க்காமல் போவதும் பெருத்த குற்றமென்று திவான் உணர்ந்தார். ஆயினும், தமது தந்தை தாம் இறந்துபோய்விட்டதாக நினைத்து, விசனக் கடலிலாழ்ந்து செயலற்று அநாதரவாயிருந்து, பிறருடைய உதவியையே எதிர் பார்த்து, கடைசியில் தமது மிகுதிக் காலத்தையும் அமைதியாகக் கடத்துவதற்கு அநுகுணமாக ஒரு பெண்ணை மணந்து கொண்டிருக்க, அந்தச் சமயத்தில், தாம் இன்னார் என்று அவரிடம் வெளியிட்டால், கிழவர் அந்த அபாரமான அதிர்ச்சியைத் தாங்கமாட்டாமல் திடீரென்று இறந்துபோனாலும் போய்விடுவார். இறந்துபோன புத்திரனை மறுபடி காண்பதான அமிதமான பேரானந்தம் ஒருபுற மிருக்க, இவ்வளவு விருத்தாப்பிய தசையில் தாம் கலியாணம் செய்துகொண்ட விஷயத்தைப் பற்றியும் காந்திமதியம்மாள் ராஜாபகதூர் ஆகிய இருவரையும் வரவழைத்த சமயத்தில் அவர்கள் காணாமல் போய்விட்டதைப் பற்றியும் தமது தந்தை சகிக்க வொண்ணாத கிலேசமும் சங்கடமும் அடைந்து தமது முகத்தில் விழிக்கவே விரும்பாமல் ஒருவேளை தமது உயிருக்கே ஹானி தேடிக்கொள்வாரோ என்றும் திவான் நினைத்தார். அவ்வாறு தமது தந்தையின் உயிருக்குத் தாம் ஹானி தேடுவதாவது, அவர் அந்தப் பெண்ணினிடம் எதிர்பார்த்த இல்லறவாழ்க்கையைத் தாம் கெடுப்பதாவது பரமபாதகமான செய்கைகள் என்று திவான் நினைத்தார். அதுவுமன்றி, அவரது பரிதாபகரமான நிலைமையைக் கருதியோ, அவரது அபாரமான செல்வத்தைக் கருதியோ, தமது யௌவனப் பெண்ணை அவருக்கு மணம்புரிவித்தவர்களுக்கும், அந்தப் பெண்ணுக்கும் தாம் விசனமுண்டாக்குவதும் பாவகரமான செய்கை யென்று திவான் எண்ணினார். ஆகவே, தாம் இறந்து போனதாகவே தமது தந்தை நினைத்து அந்தப் பெண்ணோடு சந்தோஷமாக இருந்து, மிஞ்சியுள்ள தமது ஆயுட்காலத்தைக் கடத்தும்படி தாம் விட்டுவிடுவதே தாம்செய்யத்தக்க காரியமன்றி, ஒருவாறு அமைதி யடைந்துள்ள தமது தந்தையின்

மனம் மறுபடி சஞ்சலமடைந்து புண்படும்படி செய்வது முற்றி லும் தகாத செய்கையென்று தீர்மானித்துக் கொண்டார். ஆயினும், தாம் தமது தந்தையின் திருவுருவத்தைத் தூரத்தில் இருந்தாகிலும் ஒரு தடவை மனங்குளிரப் பார்க்கவேண்டு மென்ற ஆசை அவ ரைத் தூண்டியதானாலும், அவராகிலும், தம்மோடு அதற்குமுன் பழகிய வேறு மனிதர் எவராகிலும் தம்மைப் பார்த்துத் தமது அடையாளத்தைக் கண்டு கொண்டால், அந்தக் கலியாணச் சந்தோ ஷம் உடனே சீர்குலைந்து போகுமென்று நினைத்தே இவன் அந்த இடத்தையும் ஊரையும் விட்டு உடனே அவசரமாய் வேறு ஊருக் குப் பிரயாணமாகி விட்டார். தாம் காசி முதலிய க்ஷேத்திரங்களுக் குப் போய் விட்டு மறுபடி திரும்பிவந்து தமது தந்தையைப் பார் த்து ஆநந்திக்கலாம் என்று இவன் முடிவாகத் தீர்மானித்துக் கொண்டார். இப்போது தாம் தமது தந்தையைப் பார்த்தால், அது தமக்கு மாத்திரம் சந்தோஷமாக இருக்குமன்றி, அவருக்கு அது பெருத்த பொல்லாங்காக முடியுமாதலால், தமது ஆசையைத் தாம் இப்போது அடக்கிக் கொண்டுபோய், சிறிது காலங்கழித்து மறு படி வருவதே உசிதமான செய்கையென்று நினைத்த இவன், தமது மனைவியின் நினைவையே தாம் சீக்கிரத்தில் மறந்துவிட வேண்டு மென்ற உறுதியான தீர்மானத்தோடும், கால்நடையாகவே தாம் நடந்து நேராகக் காசி யாத்திரை போவதென்று முடிவு செய்து கொண்டும் வடக்கு திக்கில் செல்லலானார்.

---

## 12-வது அதிகாரம்

### மோக முஷ்கரம்

சுந்தரமூர்த்தி முதலியார் பீட்டன் வண்டியில் மினியனையும் தமது வேலைக்காரனையும் உட்கார வைத்துக்கொண்டு, மிகுந்த பதை பதைப்பும் ஆத்திரமும் தோற்றுவித்தவராய்க் குதிரையை விரை வாக விடுத்துக்கொண்டு கடற்கரை யோரமாகத் தெற்கு திக்கில் போன ரஸ்தாவில் சென்றார். அவ்வாறு சென்றபொழுது வண்டியி லிருந்த மூவரும் தங்களது பார்வையை இரண்டு பக்கங்களிலும், முன் பக்கத்திலும் செலுத்தி, எவ்விடத்திலாகிலும் கோகிலாம் பாள் இருக்கின்றாளோவென்று ஆராய்ச்சி செய்துகொண்டே சென் றனர். அப்பொழுது இளைய ஜெமீந்தார் மினியனை நோக்கி, "ஏனப்பா மினியா! நீ போலீஸ் இன்ஸ்பெக்டருடைய வீட்டு

வாசலில் பெட்டிவண்டி யண்டை காத்திருந்தாயே. அம்மாள் உள்ளே இருந்து வெளியில் வந்து உன்னைக் கண்டு, எதிர்பாராத விதமாய் நீ வந்திருந்ததைப் பற்றி ஆச்சரிய மடைந்து உன்னிடம் ஏதாவது கேள்வி கேட்டார்களா?" என்று வினவினார்.

மினியன், "ஆமாஞ் சாமீ! கேய்வி கேட்டாங்க. நாம்ப தீர்மானம் சேஞ்சிக்கின மாதிரியே நானு சொல்லிப்புட்டேனுங்க. அத்தெ சரிதானுன்னு அவுங்க நம்பிப்புட்டாங்க" என்றான்.

சுந்தரமூர்த்தி முதலியார், "நானும் நீயும் அவர்களுக்குப் பின்னால் தொடர்ந்து வந்தோமென்ற சங்கதியையாவது, நான் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறேனென்ற சங்கதியையாவது நீ அம்மாளிடம் சொல்லவில்லையே?" என்றார்.

மினியன், "அதெயெல்லாம் நானு சொல்லுவேனுங்களா? ஒரு நாளுமில்லீங்க" என்றான்.

சுந்தரமூர்த்தி முதலியார், "சரி; நல்ல காரியம், நீ முதலில் ஒரு மாதிரியாய்ச் சொல்லி விட்டபடியால், இனி அதை வேறு விதமாய் மாற்றுவது தப்பு. ஆகையால், இனி இந்த அம்மாள் கேட்டாலும். வேறே யார் கேட்டாலும் நீ முன் சொன்னது போலவே சொல்லவேண்டும். தெரிகிறதா?" என்றார்.

மினியன், "அப்படியே ஆவட்டுங்க எசமான்" என்றான்.

சுந்தரமூர்த்தி முதலியார், "அது இருக்கட்டும். நீ வண்டியை இவ்வளவு தூரம் தெற்கு திக்கில் ஓட்டிக்கொண்டு வந்ததை அம்மாள் கவனித்து ஏதாவது கேள்வி கேட்டார்களா?" என்றார்.

மினியன், "இல்லீங்க இல்லீங்க. ரஸ்தாவெ ரிப்பேரு செய்யருங்கன்னு சொல்லிக்கினே நானு தெக்கே சாஞ்தூரம் வந்துட்டேனுங்க. சன்னலுக் கதவெல்லாம் மூடி இருந்திச்சுங்க. அம்மா என்னமோ ஒரு மாதிரியா வெசனமா குந்திக்கினு என்னத்தையோ நெனச்சுக்கினு இருந்தாங்க; நானு இம்பிட்டுத்தூரம் தெற்கே வந்தத்தே அவுங்க கவுனிக்கவே இல்லீங்க; தோப்புக்குள்ளற வந்த வொடனே நானு வண்டியே நிறுத்திப்புட்டு எறங்கி ஓடியாந்துட்டேனுங்க" என்றான்.

சுந்தரமூர்த்தி முதலியார், "சரி; நல்ல காரியம் செய்தாய். இனி அவர்கள் ஆயிரம் தட்வை கேட்டாலும் முன்னுக்குப்பின்

விரோதமில்லாமல் இதேமாதிரி நீ சொல்லிவிட வேண்டும்; இல்லா விட்டால், நீ அகப்பட்டுக் கொள்வாய். அதுவுமல்லாமல், நீ இன்னொரு சங்கதியையும் மறக்காதே. நான் பாலத்தின்மேலே இருந்து உன்னைக் கூப்பிட்டபோது, நீ ஒரு சங்கதி சொல்லிக்கொண்டு மேலே வந்தாயல்லவா; அதுபோலவே, உனக்கு மயக்கம் வந்து விட்டதென்றும், வண்டி இன்ன இடத்திற்குப் போகிறதென்பது தெரியாமல் போய் விட்டதென்றும் நீ சொல்லிவிட வேண்டும். அப்படிச் சொல்லா விட்டால், நீ ஏதோ கெட்ட எண்ணத்தோடு வேண்டுமென்றே இந்த அம்மாளைத் தெற்கு திக்கில் இவ்வளவு தூரம் கொண்டுவந்தாயென்று உன்மேல் குற்றம் சுமத்துவதோடு, அந்த அம்மாளுக்குத் தற்செயலாய் இப்போது ஏதாவது அபாயம் நேர்ந்திருந்தாலும், அதற்காகத்தான் நீ அழைத்துக் கொண்டு வந்திருப்பாயென்று உன்மேல் சம்சயங் கொள்ளுவார்கள். நான் சொல்வது தெரிகிறதா?" என்றார்.

உடனே மினியன், "ஆமாஞ்சாமீ! அதுக்காவத்தான் நானே அப்பிடிச் சொன்னேன்! இந்த ஓசனெயெல்லாம் எனக்கு இல்லேன்னு பாத்துக்கினீங்களா! நானு இன்னெநேத்தெ மனிசனு, நானு அம்பது வருசத்தெ முளுங்கி கொட்டையும் போட்டுப் பயமும் துன்ன மனிசனல்லவா எசமானே!" என்றான்.

அதைக் கேட்ட இளைய ஜெமீந்தார் அவனைப் பார்த்து வேடிக்கையாகப் புன்னகை செய்து, "நீ கெட்டிக்காரன் தான். ஆனால், பட்டப் பகலில்தான் கோட்டை விட்டுவிட்டாய்! இவ்வளவு தூரம் சாமர்த்தியம் செய்து, பெண்ணைப் பாலம் வரையில் கொண்டு வந்த நீ பக்கத்தில் இருந்தபோதே எவனோ வண்டியை ஓட்டிக்கொண்டு போயிருக்கிறானே. அதைக் கவனிக்காமல் நீ ஏமாறிப் போய்விட்டாயே. பெண் இப்போது எவர் வசத்தில் எவ்வளவு தூரத்தில் இருக்கிறதோ என்னவோ தெரியவில்லையே! பெண்ணுக்கு ஏதாவது அபாயம் நேர்ந்துவிடும் பக்ஷத்தில் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தவனான உன்னைத்தானே எல்லோரும் ஜெவாப்தாரி யாக்குவார்கள்" என்றார்.

அதைக் கேட்ட மினியன் மிகுந்த திகிலும் நடுக்கமுமடைந்து, "ஆமாஞ்சாமி, எசமாஞ் சொல்றது மெய்யான பேச்சுதானுங்க, என்னமோ எசமானுக்காவ நான் இம்பிட்டு தூரம் பித்தலாட்டம்

சேஞ்சுப்புட்டேனுங்க. எனக்கு எந்தத் தொந்தரையும் வராமே எசமாந்தான் பாத்துக்கணுங்க" என்று நிரம்பவும் பணிவாகவும். நயமாக இறைஞ்சியும் கூறினன்.

சுந்தரமூர்த்தி முதலியார், "சரி; இருக்கட்டும். உனக்கு எவ்வித உபத்திரவமும் இல்லாமல் நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நீ மாத்திரம் முன்னே சொன்னதுபோலவே எப்போதும் சொல்லி விடு. உனக்கு எவ்விதமான கெடுதலும் உண்டாகாமல் பார்த்துக் கொள்ள நானாயிற்று. அவர்கள் உன்னை வேலையிலிருந்து நீக்கினல், ஏற்கெனவே நான் வாக்குறுதி செய்து கொடுத் திருப்பதுபோல, இப்போது உனக்குக் கிடைப்பதைவிட இரட்டிப்புச் சம்பளம் கொடுத்து உன்னை நானே வைத்துக் கொள்ளுகிறேன். நீ இன்னொரு விஷயத்தையும் கொஞ்சம் மாற்றிச் சொல்லவேண்டும். நான் இப்போது இங்கே வந்து உன்னைக் கண்டு அழைத்துக் கொண்டு வந்ததாக நீ சொல்ல வேண்டாம். நீ பாலத்தின் அடியில் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு உடனே மேலேவந்து பார்த்ததாகவும், வண்டி காணமல் போகவே நிரம்பவும் கவலைப்பட்டுத் தேட ஆரம்பித்ததாக வும், வடக்கு திசையிலிருந்து உனக்குப் பழக்கமான மனிதர் ஒருவர் வந்ததாகவும், வண்டி வடக்கு திக்கில் போகவில்லை என்று அவர் சொன்னதாகவும், பிறகு நீ தேடிக்கொண்டே தெற்கு திக்கில் ஓடி வந்ததாகவும், ஒருக்கால் அந்த அம்மாள் என்னுடைய பங்களாவுக்கு வந்திருக்கலாமோ வென்று நினைத்து நீ என் பங்களாவுக்கு வந்து என்னைக்கண்டு சங்கதியையெல்லாம் சொன்னதாகவும், அதைக் கேட்டவுடன் நான் வண்டியில் உன்னையும் என் ஆளையும் வைத்துக் கொண்டு தேடப் புறப்பட்டதாகவும் நீ சொல்லவேண்டும். அவ்வளவுதான். வேறு அதிகமாய் எதையும் நீ சொல்லவேண்டாம். நான் பெரிய பதவியி லிருப்பவன். பெண்ணும் அதுபோலவே தக்க பெரிய மனிதர் வீட்டுப்பெண். அவர்களுடைய வீட்டில் நான் பெண்கொள்ளப் போகிறவன். அந்தப் பெண்ணை இவ்வளவு தூரம் தெற்கே கொண்டுவந்த விஷயத்தில் நானும் ஒருவனை சம்பந்தப் பட்டிருப்பேனே என்ற சந்தேகமே எவருக்கும் உண்டாகக்கூடாது. தெரிகிறதா?" என்றார்.

மினியன், "அப்படியே ஆவட்டும் எஜமானே!" என்றான்.

உடனே சுந்தரமூர்த்தி முதலியார் மிகுந்த கவலையும் விசனமும் கொண்டவர்போலக் காட்டிக்கொண்டு, "பிள்ளையார் பிடிக்க, அது

குரங்காய் முடிந்த கதையாய், நாம் ஏதோ ஒரு காரியம் செய்ய எண்ணினோம். அது வேறொன்றாய் முடிந்து போய்விட்டது. இந்தப் பெண்ணுடன் தனிமையில் இருந்து இரண்டொரு வார்த்தைகள் சொல்லவேண்டுமென்று நான் நினைத்து வண்டியை இப்படி ஓட்டிக் கொண்டு வரும்படி சொன்னால், அது இப்படிப்பட்ட எதிர்பார்க்காத துன்பமாய் முடிந்திருக்கிறது. எப்படியாவது தெய்வச் செயலால் பெண் நம்முடைய கண்ணில் பட்டுவிடுமானால், அதுவே போதுமானது. உடனே அதை நாம் பத்திரமாய் அதனுடைய ஜாகையில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு மறுவேலை பார்ப்போம்" என்று கூறினார்.

அதைக் கேட்ட மினியன் ஆழ்ந்த கவலையும் மனக்கலக்கமும் காட்டி, "என்னமோ ஆண்டவந்தாங் காப்பாத்தணும். நாம்பயாருக்கும் ஒரு கெடுதலும் எண்ணலே. அந்தக் கொயந்திக்கி நல்லது செய்யவே பாத்தோம். நம்புளுக்கு ஆண்டவன் கெடுதலு செய்ய மாட்டானுங்க" என்றான்.

அவ்வாறு அவர்கள் இருவரும் சம்பாஷித்துக்கொண்டே இருக்க, வண்டி மயிலாப்பூரை யடைந்தது அந்த ரஸ்தா கடற்கரை யோரமாகவே மயிலாப்பூருக்கு அப்பாலும் செல்லுகிறது. ஆயினும், அந்த இடத்தில் ஊருக்குள் போவதற்கு ஒரு கிளை ரஸ்தா பிரிந்து போகிறது. அந்த இடத்தண்டை அவர்களது வண்டி சென்ற காலத்தில், சுந்தரமூர்த்தி முதலியார் மினியனைப்பார்த்து, "அடே! மினியா! இந்த இடத்தில்தான் நாம் என்னசெய்வ தென்பது தெரியவில்லை. இந்தக் கிளை ரஸ்தாவின் வழியாக அவளுடைய வண்டி மயிலாப்பூருக்குள் போயிருக்குமா, அல்லது, நேராகவே இந்தப் பெரிய ரஸ்தாவில் கடற்கரை யோரமாகத் தெற்கு திசையில் எங்கேயாவது போயிருக்குமா என்பதை நாம் எப்படி நிச்சயிக்கிறது?" என்று குழம்பிய மனத்தோடு கூறினார்.

அதைக் கேட்ட மினியனும் மனக் குழப்ப மடைந்து அவர் கூறிய சந்தேகத்தை எப்படி நிச்சயப்படுத்துவ தென்பதை அறியாமல் தத்தளிக்கலானான். அவ்வாறு அவர்கள் சென்று கிளை ரஸ்தாவை யடைந்த காலத்தில், அவ்விடத்தில் ஒரு மனிதர் காணப்பட்டார். அவர் சுந்தரமூர்த்தி முதலியாருக்கு அறிமுகமான மனிதராயிருக்க, அதை உணர்ந்த இளையஜெமீந்தார் மிகுந்த மகிழ்ச்சியும் முக

மலர்ச்சியும் காட்டித் தமது கைகளைத் தட்டி, "ஐயா! பொன்னுசாமி நாயகரே! இங்கே நீங்கள் எவ்வளவு நாழிகையாய் நிற்கிறீர்கள்?" என்றார்.

பொன்னுசாமி நாயகர், "நான் இங்கே அரை நாழிகை நேரமாய் நிற்கிறேன். நானும் இன்னொரு மனிதரும் செம்படவர்குப்பத்துக்குப்போய் மீனுக்காக அச்சாரப்பணம் கொடுக்கவேண்டுமென்று இவ்வளவு தூரம் வந்தோம். அவர் பணம் எடுத்துக் கொண்டுவர மறந்துபோய் விட்டார். இங்கே வந்தபொழுதுதான் அவருக்கு அந்த நினைவு உண்டாயிற்று. என்னை இங்கே நிறுத்திவிட்டு அவர் பணம் எடுத்துக்கொண்டு வருவதற்காக ஓடி இருக்கிறார். அதனால் தான் நான் இங்கே நின்றுகொண் டிருக்கிறேன்" என்றார்.

உடனே சுந்தரமூர்த்தி முதலியார், "ஓகோ! அப்படியா சங்கதி! சரி, அதிருக்கட்டும். இந்த வழியாகக் கொஞ்ச நேரத்துக்கு முன் ஒரு பெட்டி வண்டி வந்ததா? வெள்ளைக் குதிரை பூட்டப்பட்டிருக்கும். இரண்டு பக்கங்களிலும் ஜன்னல்கள் மூடப்பட்டிருக்கும். உள்ளே ஒரே ஓர் அம்மாள் இருந்தார்கள். அந்த வண்டியை யாராவது ஓட்டிக்கொண்டு இந்தப் பக்கம் வந்ததை நீங்கள் பார்த்தீர்களா?" என்றார்.

அதைக் கேட்டவுடனே பொன்னுசாமி நாயகர் மிகுந்த ஊக்கமும் மகிழ்ச்சியும் தோற்றுவித்து, "ஆம்! ஆம்! பார்த்தேன். அது வெள்ளைக் குதிரை பூட்டப்பட்ட ஒரு பெட்டி வண்டி தான். யாரோ ஒரு காசாரி தனியாக இருந்து அதை வேகமாய் ஓட்டிக்கொண்டு கால்நாழிகை நேரத்திற்கு முன் வடக்கே இருந்து வந்தான். ஆனால், அந்த வண்டிக்குப் பின்னால் இன்னொரு பீட்டன் வண்டியும் வந்தது. அதில் யாரோ நாலைந்து மனிதர்கள் இருந்தார்கள்" என்றார்.

அதைக் கேட்ட இளைய ஜெமீந்தார் கட்டிலடங்கா மகிழ்ச்சியும் ஆவேசமும் பதைபதைப்பு மடைந்து, "வெள்ளைக் குதிரை பூட்டப்பட்ட வண்டியை அதன் காசாரி எந்தப் பக்கமாய் ஓட்டிக்கொண்டு போனான்?" என்றார்.

உடனே பொன்னுசாமி நாயகர், "அவன் வண்டியை நேராகத் தெற்கு திக்கில் விட்டுக்கொண்டுபோன மாதிரியாக இருக்கி

றது. ஏன், என்ன விசேஷம்? அவன் யாரை அழைத்துக்கொண்டு போகிறான்?" என்றார்.

சுந்தரமூர்த்தி முதலியார், "ஆகா! அப்படியா! தெற்கு திக்கிலா போனான். சரி; நாயகர் ஐயா! நான் இப்போது அவசரமாய்ப் போகவேண்டும். மறுபடி நாம் சந்திக்கும்போது சங்கதியை யெல்லாம் விவரமாகச் சொல்லுகிறேன்" என்று கூறியவண்ணம் சவுக்கை எடுத்து நன்றாக வீசிக் குதிரைக்கு ஓர் அடி கொடுக்க, அது நாற்கால் பாய்ச்சலில் பிடுங்கிக்கொண்டு தெற்கு திக்கில் ஓடவாரம்பித்தது. மயிலாப்பூரைச் சேர்ந்தவையும், அந்த ரஸ்தாவின் ஓரமாக இருந்தவையுமான சில பங்களாக்களையும் தெருக்களையும் கடந்து சுந்தரமூர்த்தி முதலியார் தமது பீட்டன் வண்டியை அமிதமான விசையோடு விடுத்துக்கொண்டு சென்று பத்து நிமிஷத்தில் மயிலாப்பூர் எல்லையைக் கடந்து அதற்கப்பால் கால் மைல் தூரம் சென்றார். அந்த ரஸ்தா கடற்கரையோடு மேன்மேலும் சென்றுகொண்டே இருந்தது. எங்கும் தோப்புகளும், பிரம்மாண்டமான தனிமரங்களுமே மயமாய் நிறைந்திருந்தன. கடற்பக்கத்தில் விஸ்தாரமாகப் பரவிய வெண் மணல் பரப்பும், ஆகாயத்தை யளாவிய அடர்ந்த பெரிய பெரிய தாழைப்புதர்களும் நிறைந்து கிடந்தன. எவ்விடத்திலும் மனிதர்கள் மறைந்திருந்து எத்தகைய அட்டூழியச் செய்கைகளையும் கூசாமல் நடத்துவதற்கு அநுகூலமான அடர்ந்த சப்பாத்திப் புதர்களும் தாழைப் புதர்களும் காணப்பட்டன. அவர்கள் சென்ற காலத்தில் ரஸ்தாவின் இரண்டு பக்கங்களிலும் வெகுதூரம் வரையில் மனிதர் காணப்படவில்லையாதலால், அந்த இடம் அப்போது நிர்மானுஷ்யமானதாகவும் பயங்கரமானதாகவும் காணப்பட்டது.

அத்தகைய தனிமையான இடத்தின் வழியாகத் தமது வண்டியை விடுத்துக்கொண்டு சென்ற சுந்தரமூர்த்தி முதலியார் இரண்டு பக்கங்களிலும், எதிரிலும் இருந்த மறைவான இடங்களை யெல்லாம் கூர்மையாகவும் கவனமாகவும் பார்த்து ஆராய்ச்சி செய்துகொண்டே செல்ல, சிறிது தூரத்திற்கெதிரில் ரஸ்தாவின் ஓரமாக நிறுத்தப் பட்டிருந்த இரண்டு வண்டிகளின் பின்புறம் தெரியவே, அதைக்கண்ட மினியன், "நம்ப வண்டி அதோ இருக்குது எசமானே! அதுக்குப் பக்கத்துலே ஒரு பீட்டன் கூட இருக்குதே!" என்று கூறிக்கொண்டு கட்டிலடங்கா

ஆத்திரத்தோடும் ஆவேசத்தோடும் துள்ளிக் குதித்தான். உடனே சுந்தரமூர்த்தி முதலியாரும் மட்டிலடங்காக் களிப்பும் வீரா வேசமும் மனக்கொதிப்பும் காட்டி, "ஆமடா! பெட்டி வண்டி அதுதானடா!" என்று கூறி ஆர்ப்பரித்த வண்ணம் குதிரைக்கு இன்னம் இரண்டு மூன்று அடிகள் கொடுத்துத் தமது பீட்டனை நிரம்பவும் விசையாக ஓட்டி வண்டிகள் இருந்த இடத் தண்டை நெருங்கினர். பீட்டன் வண்டியிலிருந்த மூவரது அங்கங் களும் மனமும் பதறிப் பறந்தன. பெட்டி வண்டிக்குள் கோகிலாம் பாள் இருக்கிறாளோவென்று மூவரும் உற்று நோக்கினர். அதற்குள் யாரும் இருந்ததாகத் தோன்றவில்லை. அதற்குச் சமீபத்திலும் வேறு மனிதர் காணப்படவில்லை. உடனே சுந்தரமூர்த்தி முதலியார், "என்னடா மினியா! வண்டி காலியாக இருக்கிறதே! மனிதரே காணப்படவில்லையே!" என்றார். உடனே மினியன், "ஆமாஞ் சாமீ! வண்டியிலெ இருந்தவங்க எங்கனே போனாங் களோ தெரியலியே!" என்று ஆத்திரத்தோடு மறுமொழி கூறினான்.

உடனே இளைய ஜெமீந்தார், "இந்தப் பீட்டன் வண்டியில் வந் தவர்கள் ஒருவேளை பெண்ணைப் பலாத்காரமாய்க் கட்டித் தூக்கிக் கொண்டு, பக்கத்தில் தாழைப் புதருக்கப்பாலுள்ள மணல் பரப்புக் குக் கொண்டுபோய் ஏதாவது உபத்திரவம் செய்கிறார்களோ என் னவோ தெரியவில்லையே!" என்றார்.

அவ்வாறு அவர்கள் சம்பாஷித்த சமயத்தில் "ஐயோ! ஐயோ! அக்கிரமம் செய்கிறார்களே! இதைத் தடுக்க இங்கே யாரும் இல்லையா" என்று கோகிலாம்பாள் நிரம்பவும் பயங்கரமாகக் கூச்ச லிட்ட ஓசை உண்டாகவே, அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி முதலி யாரும், மினியனும், வேலைக்காரனும் சடக்கென்று வண்டியை விட் டுக் கீழே குதித்தார்கள். அந்த ஒரு நொடியில் அவர்களது தேகங் கள் பறந்துபோயின. அவர்கள்முற்றிலும் மெய்ம்மறந்து வீராவேசங் கொண்டு எந்தத் திக்கிலிருந்து ஓசை உண்டாயிற்றோ அந்தத் திசையில் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தோடத் தலைப்பட்டனர். சுந் தரமூர்த்தி முதலியார் தமது பீட்டன் வண்டியை விட்டுக் குதிக்கு முன், எப்போதும் அவர் தமது பாதுகாப்பிற்காக வைத்திருந்த ஏழு குழாய்ப் பிஸ்டல் என்ற சிறிய கைத்துப்பாக்கியை எடுத்துத் தமது கையில் வைத்துக்கொண்டு முன்னால் பாய்ந்து ஓடினார். அவர்

முன்னும் மற்றவர் பின்னுமாய் அவர்கள் மூவரும் பறந்து சென்று பக்கத்திலிருந்த தாழைப்புதரைச் சுற்றிக்கொண்டு அப்பால் செல்ல, அவ்விடத்தில் நிரம்பவும் விசாலமாகவும் அடர்த்தியாகவும் காணப் பட்ட தாழைச் செடிகளின் இடையிடையில் வழிகளும், மணல் மேடுகளும் காணப்பட்டன. அவைகளுக்குள் நுழைந்த அவர்கள் மூவரும் சிறிது தூரம் புதருக்குள் செல்ல, நாற்புறங்களிலும் புதர் களால் சூழப்பட்டுத் தீவுபோலக் காணப்பட்ட ஒரு மண் திட்டின் மேல் ஐந்து முரட்டு மனிதர்கள் காணப்பட்டனர். அவர்களுள் நால்வர் இராணுவ இலாகாவைச்சேர்ந்த இந்திய சிப்பாய்கள்போல உடை தரித்திருந்தனர். ஐந்தாவது மனிதன் வண்டியோட்டும் காசாரிபோல நிஜார் சட்டை தலைப்பாகை முதலியவற்றை யணிந்த வனாய் நின்றான். அவர்கள் ஐவரும் கோகிலாம்பாளைப் பிடித்துக் கைகளையும் கால்களையும் கட்டவும், அவளது வாயில் துணிப்பந் தைச் சொருகவும் முயன்றுகொண் டிருந்தனர். ஆனால், கோகிலாம் பாள் அவர்களது கட்டிலடங்காமல் துள்ளிக் குதித்துத் தத்தளித்து அவர்கள் தன்னைத் தொடுவதற்கு இடங்கொடாமல் தன்னாலியன்ற வரையில் தடுத்துக்கொண்டும் கூச்சலிட முயன்றுகொண்டு மிருந் தாள். பார்வைக்கு முரடர்களாக இருந்த அந்த நான்கு சிப்பாயி களும் காசாரியும் நன்றாய்க் குடித்து வெறிகொண்டு இருந்தவர் போலக் காணப்பட்டமையால், அவர்களது உடம்பும், கைகளும், கால்களும் அவர்களது கட்டுக்கடங்காமல் தாறுமாறாய்ச்சென்றன. ஆகவே, கோகிலாம்பாள் நிரம்பவும் பலமாகத் திமிறி அவர்களது துராகிருதச் செய்கைக்கு வசப்படாமல் அதுவரையில் தப்பி இருந் தாள். அந்தச் சமயத்தில் அவ்விடத்தை யடைந்த சுந்தரமூர்த்தி முதலியார், "அடே மினியா! ஆள்கள் அதோ இருக்கிறார்கள்; எல்லோரையும் இவ்விடத்திலேயே சுட்டுத் தள்ளிவிடுகிறேன்" என்று கூச்சலிட்டுக்கூறி தமது கையிலிருந்த பிஸ்டலின் விசையை அழுத்தி ஆகாயத்தைப் பார்த்து ஒரு வெடிபோட, உடனே துப் பாக்கி படாரென்று வெடித்து பெருத்த ஓசையையும் புகைப்பட லத்தையும் உண்டாக்கியது. அதைக் கண்டு திடுக்கிட்டு மருண்டு நடுநடுங்கிப்போன அந்த முரடர்கள் ஐவரும், "அடே! ஆள்கள் வருகிறார்களடா! அவர்களிடம் துப்பாக்கிகூட இருக்கிறதடா! வாருங்கள் ஓடிப்போவோம்" என்று தமக்குள் அவசரமாகக் கூறிக் கொண்டனர். உடனே ஐவரும் திக்காளுக் கொருவராய் விழுந்து மறைந்து ஓடத் தலைப்பட்டனர். அதைக் கண்ட சுந்தரமூர்த்தி முத

வியா ,"விடாதே விடாதே பிடி பிடி" என்று ஓங்கிக் கூச்சலிட்டுக் கொண்டு அவர்களைப் பின் தொடர்ந்து மேலும் இரண்டு மூன்று வெடிகள் போட்டுக்கொண்டு தாழைப் புதருக்கு அப்பால் சிறிது தூரம் ஓடினார். அவரைத் தொடர்ந்து மினியனும் அவரது வேலைக் காரனும் ஓடினார்கள். ஆனால், அந்த முரட்டு மனிதர்களுள் எவனும் பிடிபடாமல் ஒரு க்ஷண நேரத்தில் எங்கேயோ போய் மாயமாய் மறைந்து போய்விட்டனர். நம்மவர் மூவரும் மேலும் இரண்டு மூன்று நிமிஷம் வரையில் அங்குமிங்கும் ஓடித் தேடிப் பார்த்து விட்டு, அதற்குமேல் எங்கும் போக மாட்டாதவராய்த் திரும்பிக் கோகிலாம்பாள் இருந்த இடத்திற்கு ஓடிவந்தனர்.

கோகிலாம்பாளின் கால்களும் கைகளும்சொற்பமாய்க் கட்டப் பட்டிருந்தன. வாயில் துணி அடைக்கப்பட் டிருந்தது. அதனால் அவள் மிகுந்த வேதனை அடைந்து கொண்டிருந்தாளானாலும்,மினிய னும் சுந்தரமூர்த்தி முதலியாரும் இன்னொருவனும் தனக்கு உத விக்கு வந்ததையும், அவர்கள் துப்பாக்கியால் சுட்டதைக்கண்டுசிப் பாயிகள் ஓடிப் போனதையும் காண அவளுக்கு ஓரளவு உயிர் திரும் பியது. ஆயினும், தான் எதிர்பாரா வகையில் அந்த அசந்தர்ப்பமான நிலைமையில் சுந்தரமூர்த்தி முதலியார் வந்து தன்னைக் கண்டது அவ ளால் பொறுக்க இயலாத மன வேதனையையும்வெட்கத்தையும்உண் டாக்கிவிட்டது. தான் அந்த இடத்திற்கு வந்த வரலாற்றையெல் லாம் அவர் ஒருக்கால் மினியனிடம்கேட்டுத் தெரிந்து கொண்டிருப் பாரோ என்ற கிலேசமும், பீதியும் எழுந்து அவளது உயிரைப் பரு கத் தொடங்கின. தனது நிச்சயதார்த்த சமயத்தில் திடீரென்று கண்ணபிரான் கைதி செய்யப்பட்டது, அதன் பிறகு சாயப்புவினால் கற்பகவல்லியம்மாள் அவமானப்பட்டது,பிறகு அந்த அம்மாள்தற்- கொலை செய்துகொள்வதாக எழுதி வைத்துப்போனது முதலிய சம் பவங்களால் முற்றிலும் புண்பட்டு முறிந்து போயிருந்த மனநிலைமை யில், அவளுக்கு இன்னபெக்டரால் பெருத்த அபாயம் நேரிட, அதையும் தெய்வானுக் கிரகத்தினால் தான் பரிகரித்துக் கொண்டு முற்றிலும் சோர்ந்து தளர்ந்து வாடித் துவண்டு மெலிந்து வந்த சம யத்தில் எதிர்பாரா விதமாய்த் திடீரென்று சிப்பாயிகளிடம் தான் அகப்பட்டுத் தனது கற்பைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுத் தனது உயிரையே கொடுத்துவிட எத்தனித்த சமயத்தில் திடீ ரென்று சுந்தரமூர்த்தி முதலியார் வந்து தன் உயிரையும் மானத்தை

யும் காத்ததனால் ஏற்பட்ட மன எழுச்சியும், அத்தகைய பரம விகாரமான நிலைமையில் இருந்த தான் அவரது முகத்தில் எப்படி விழிக்கிறது என்ற அபாரமானகிலேசமும் காட்டாற்றுவெள்ளம்போலத் திடீரென்று பொங்கி எழுந்து, அவள் சகிக்கத் தக்க வரம்பை மீறிப் பெருகிப் போனமையால், அந்த மடக்கொடி தனது கண்களைமூடிக் கொண்டு அப்படியே மயங்கி மணலில் சாய்ந்துவிட்டாள்.

அவளது விபரீத நிலைமையைக் கண்ட சுந்தரமூர்த்தி முதலியார் பதறிப்போய் ஓடோடியும் சென்று அவளண்டை நெருங்கி, அவளது வாயிலிருந்த துணிப்பந்தை எடுத்துக் கீழே போட்டுக்கை கால்கள் முதலியவற்றின் கட்டுகளையும் ஒரே நொடியில் விலக்கிய வண்ணம் மிகுந்த வாஞ்சையும் பிரேமையும் த்வனித்த நயமான குரலில், "கோகிலா! கோகிலா! உடம்பு என்ன செய்கிறது? எழுந்து வருகிறாயா! வண்டி வரையில் நீ நடந்து வரமுடியுமா?" என்றார்.

கோகிலாம்பாள் பேசாமல் அசைவற்றுப் படுத் திருந்தாள். ஆனால், மூச்சு மாத்திரம் வந்து கொண்டிருந்தது. அவள்மூர்ச்சித்து மயங்கிப் படுத்திருக்கிறாளென்று உணர்ந்த சுந்தரமூர்த்தி முதலியார் மினியனைப் பார்த்து, "மினியா! அம்மாள் பயத்தினால் மயங்கிப் படுத்திருக்கிறார்கள். ஆனாலும் பயமில்லை. கொஞ்ச நேரத்தில் தெளிவடைந்து எழுந்திருப்பார்கள். இந்த சிப்பாயிகள் பொல்லாதவர்கள். இவர்கள் போய்த் துணைக்கு இன்னம் பலரை அழைத்துக் கொண்டு திரும்பி வந்தாலும் வருவார்கள். நாம் இப்போது ஒரு நிமிஷம் கூட இங்கே அம்மாளை வைத்துக்கொண்டு இருப்பது சரியல்ல. அம்மாளைத் தூக்கிக்கொண்டு போய்வண்டியில் படுக்கவைத்துக்கொண்டு நம்முடைய பங்களாவுக்குப்போய் விடுவோம்.பிறகு நமக்குப் பயமே இல்லை. நாம் உடனே தண்ணீர் முதலியவை கொடுத்து விசிறி அம்மாளுடைய மயக்கத்தைத் தெளியவைக்கலாம்" என்றார்.

அதைக் கேட்ட மினியன், "ஆமாஞ்சாமீ! அப்பிடித்தாஞ்செய்யணுமுங்க" என்று துடியாக மறுமொழி கூறினான்.

உடனே சுந்தரமூர்த்தி முதலியார் தமது கையிலிருந்த ஏழு குழாய்ப் பிஸ்டலைத் தமது வேலைக்காரனிடம் கொடுத்துவிட்டுத் தமது பலம் முழுதையும் வெளிப்படுத்தி கோகிலாம்பாளை ஒரு

குழந்தையை எடுப்பதுபோலத் தூக்கி எடுத்துத் தமது மார்பின்மீது போட்டு அவளது சிரத்தைத் தமது இடது புஜத்தின்மீது சார்த்திக்கொண்டு அவ்விடத்தை விட்டு விசையாக ஓடவாரம்பித்தார். ஆரம்பித்தவர் தமது வேலைக்காரனைப் பார்த்து, "அடே! ஜாக்கிரதையாய் நான்கு பக்கங்களையும் பார்த்துக்கொண்டுவா. சிப்பாயிகள் மறுபடி வந்தாலும் வரலாம், பிஸ்டலில் இன்னும் மூன்று தோட்டாக்கள் வெடிபடாமல் இருக்கின்றன. அவர்கள் கிட்டவந்தால், தாக்ஷிணியம் பாராமல் சுட்டுத் தள்ளிவிடு" என்று கூறியவண்ணம், கள்வர் ஆட்டைத் தூக்கிக்கொண்டு ஓடுவதுபோல நிரம்பவும் துரிதமாகவும் வீராவேசத்தோடும் பாய்ந்து ஓடி இரண்டு நிமிஷ காலத்தில் ரஸ்தாவை யடைந்து, மற்றவரைக் கொண்டு பெட்டி வண்டியின் கதவைத் திறக்கச் செய்து, அதற்குள்ளிருந்த பலகையின்மீது கோகிலாம்பாளை மெதுவாகப் படுக்க வைத்து விட்டுத் தாமும் அதற்கெதிரில் இருந்த பலகையில் உட்கார்ந்து, அவள் கீழே விழுந்து விடாமல் தடுத்துக் கொண்டு, மினியன் அதை ஓட்டவும், தமது வேலைக்காரன் தம்முடைய பீட்டன் வண்டியை ஓட்டிக் கொண்டு வரவும் ஏற்பாடு செய்தார். உடனே பெட்டி வண்டியின் ஜன்னல்கள் மூடப்பட்டன. சிப்பாயிகள் கொணர்ந்திருந்த அவர்களது பீட்டன் வண்டியை இவர்கள் அசட்டையாக விட்டு விட்டனர். மற்ற வண்டிகள் இரண்டும் அடுத்த நிமிஷம் புறப்பட்டு மயிலாப்பூரை நோக்கி விசையாய்ச் செல்லத்தொடங்கி கால் நாழிகை காலத்தில் சுந்திரமூர்த்தி முதலியாரது பங்களாவை யடைந்தன. மூவரும் கீழே இறங்கினார்கள். சுந்தரமூர்த்தி முதலியார் உடனே உள்ளே சென்று அங்கிருந்து இரண்டு வேலைக்காரிகளையும் நான்கு வேலைக்காரர்களையும் அழைத்துக்கொண்டு விரைவாக வண்டியண்டை வந்தார். வேலைக்காரர்கள் ஒரு பெரிய ஸோபாவை எடுத்துக் கொண்டு வந்தனர். பெண்பிள்ளைகள் பெட்டி வண்டிக்குள் ஏறி, அப்போதும் மயங்கிப் படுத்திருந்த கோகிலாம்பாளை மெதுவாகத் தூக்கி வெளியில் கொணர்ந்து பக்கத்தில் அணைத்து வைக்கப்பட்டிருந்த ஸோபாவில் விட, உடனே வேலைக்காரர்கள் ஸோபாவோடு நமது கோகிலாம்பாளைத் தூக்கி எடுத்துக்கொண்டு பங்களாக் கட்டிடத்திற்குள் சென்று வசதியான ஓர் அறையில் ஸோபாவோடு அவளை வைத்தனர். உடனே ஸ்திரீகள் இருவரும் அங்குமிங்கும் ஓடி அவளது மயக்கத்தைப் போக்குவதற்குரிய பொருள்களைக் கொணர்ந்து பல வகையில் சிகிச்சைகள் செய்யத் தொடங்கினர். சுந்

தரமூர்த்தி முதலியார் தாம் மாத்திரம் ஸ்திரீகளோடு அந்த அறையில் இருந்து கொண்டு மற்ற ஆண்மக்களெல்லோரையும் வெளியில் அனுப்பிவிட்டார். வேலைக்காரிகள் இருவரும் நமது கோகிலாம்பாளுக்குத் தண்ணீர் கொடுத்து விசிறியால் சிறிது நேரம் வீசிக்கொண்டே இருக்க, அப்போதே தூங்கி விழிப்பவள் போல அந்த மின்னற் கொடியாள் தனது கண்களைத் திறந்துபார்த்து மருளமருள விழித்தாள். கடற்கரையில் மணற்பரப்பில் சிப்பாயிகளினிடையில் இருந்த காலத்தில் சுந்தரமூர்த்தி முதலியாரும் மற்றும் சிலரும் திடீரென்று தோன்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்து, அவர்களை விரட்ட எத்தனித்ததோடு அவளது உணர்வு போய் விட்டதாகையால் அவள் தனது கண்களைத் திறந்து பார்த்தவுடன், அதே நினைவு அவளுக்குத் தோன்றியது. தான் அப்போதும் மணல் பரப்பில் பயங்கரமான நிலைமையில் இருப்பதாகவே அவள் எண்ணிக்கொண்டு மிகுந்த திகிலும் நடுக்கமும் அடைந்து இரண்டொரு தரம் தனது கண்களை மூடிமூடித் திறந்துபார்த்தாள். இடையில் தான் தனது அபாயத்திலிருந்து தப்பிப் பத்திரமான வேறு இடத்தில் வந்திருப்பதை உணராமல் அவள் அஞ்சி நடுங்குகிறாளென்று யூகித்துக்கொண்ட சுந்தரமூர்த்தி முதலியார் சிறிது தூரத்தில் மரியாதையாக நின்றவண்ணம் மிகுந்த வாத்ஸல்யமும் மதிப்பும்உருக்கமும் காட்டி, "கோகிலம்! பயப்படாதே! முரடர்களெல்லோரையும் நாங்கள் அடித்துத் துரத்தி விட்டோம். நீ இப்போது சமுத்திரக்கரையில் இல்லை. இது என்னுடைய சொந்த பங்களா. இனி பயம் ஒன்றுமில்லை. உன்னுடைய சொந்த பங்களாவில் இருப்பதுபோலவே நீ எண்ணிக்கொள்ளலாம். இதோ இருப்பவர்கள் என்னுடைய வேலைக்காரிகள்; எல்லோரும் நம்முடைய சொந்த ஜாதியார்கள். உனக்கு என்னென்ன சௌகரியங்கள் வேண்டுமோ அவைகளை இவர்கள் உடனே செய்து கொடுப்பார்கள். வேண்டியதைச் செய்துகொள்" என்று கூறினார்.

அவரது சொற்களைக் கேட்கவே, கோகிலாம்பாளின் திகில் விலகியது. அவளது உடம்பில் நடுக்கமும் குறைந்தது. எதிர்பாராமல் தனக்கு நேர்ந்த பெரிய அபாயம் விலகியது என்ற எண்ணம் உண்டாகவே, அவளது மனம் தனது இயற்கையான திடத்தையடைந்தது. அவளது மயக்கமும் சோர்வும் நீங்க வாரம்பித்தன. அவள் நன்றாகத் தனது கண்களைத் திறந்துகொண்டு பார்த்தாள்.

தனது தங்கையை மணக்கப்போகிறவரான சுந்தரமூர்த்தி முதலியாரது பங்களாவில் தான் இருந்ததையும், அவருக்கெதிரில் தான் படுத்திருந்ததையும் உணரவே அவளது மனத்தில் சகிக்கவொண்ணாத கிலேசமும் நாணமும் எழுந்து வதைக்கலாயின. தனக்கு அன்று காலையிலிருந்து அதுவரையில் நேர்ந்த சம்பவங்களில் அவர் எவ்வளவு தூரம் தெரிந்துகொண்டிருப்பாரோ என்ற எண்ணமும், அவர் தன்னைப் பற்றி எவ்விதமான அபிப்பிராயம் கொண்டிருக்கிறாரோ என்ற எண்ணமும் எழுந்து அவளை அபாரமாக வருத்த ஆரம்பித்தன. அவர் தனக்கெதிரில் நிற்கையில் தான் படுத்திருந்தது ஒழுக்கத் தவறென்று நினைத்த பெண்மணி உடனே சரேலென்று எழுந்து உட்கார்ந்து ஸோபாவை விட்டுக் கீழே இறங்கவும் எத்தனித்தாள்.

அதைக் கண்ட வேலைக்காரிகள், "அம்மா! ஏன் எழுந்திருக்கிறீர்கள்? இப்படியே இன்னம் கொஞ்சநேரம் சாய்ந்துகொண்டிருங்கள். இதோ திண்டு போடுகிறோம். அதில் மெதுவாய்ச் சாய்ந்து கொண்டிருங்கள். உடம்பு சரியான நிலைமைக்கு வந்தவுடனே எழுந்திருக்கலாம்" என்று மிகுந்த அன்பும் வணக்கமும்காட்டி மொழிந்ததன்றி, சிறிது தூரத்தில் கிடந்த ஒரு திண்டை எடுத்து ஸோபாவின் ஒரு பக்கத்தில் வைத்து நமது கோகிலாம்பாளை மிருதுவாகப் பிடித்து அதில் சார்த்த முயன்றனர். அவள் தம்மைக் கண்டு நாணமடைந்து எழுந்திருக்க முயன்றதை யறிந்த சுந்தரமூர்த்தி முதலியார், "பெண்ணே! கோகிலம்! எழுந்திருக்காதே; எழுந்திருக்காதே. விழுந்துவிடப்போகிறாய். வேண்டுமானால் நான் அப்பால் போகிறேன்" என்று அன்பொழுக மொழிந்தவண்ணம் அவளுக்கெதிரில் நிற்காமல் சிறிது தூரம் விலகி ஒரு பக்கமாக மறைந்துகொண்டு வேலைக்காரிகளை நோக்கி ஏதோ சைகை செய்தார்.

கோகிலாம்பாளின் தேகம் அப்போதும் தனது பழைய நிலைமையை அடையாமல் முற்றிலும் கேவலமான ஸ்திதியில் இருந்தமையாலும், சுந்தரமூர்த்தி முதலியார் எதிரில் நிற்காமல் மறைந்து போனமையாலும், அவள் வேலைக்காரிகளின் வேண்டுகோளுக்கிணங்கி அப்படியே திண்டின்மேல் சாய்ந்துகொண்டாள்.

அவளுக்கருகில் இருந்த வேலைக்காரிகள் இருவரும் ஒரு தாய் தனது குழந்தைக்கு லாலனபாலனம் செய்வதுபோலக் கோகிலாம்

பாளின் மனத்திற்கு நிரம்பவும் ஹிதமாகவும் இன்பகரமாகவும் நடந்து, அவளுக்கு காப்பி முதலிய பானங்களைக் கொடுத்து அடிக்கடி விசிறி இரண்டொரு நாழிகை காலத்தில் அவள் நன்றாகத் தெளிவடையும்படி செய்தனர். அதன்பிறகு கோகிலாம்பாள் எழுந்து சாதாரணமாக உட்கார்ந்து கொண்டாள். அதுகாறும் மறைவில் இருந்த சுந்தரமூர்த்தி முதலியார் அங்கிருந்தபடியே பேசத் தொடங்கி, "பெண்ணே கோகிலம்! உடம்பு இப்போது எப்படி இருக்கிறது! வேலைக்கார மினியன் சொன்ன வரலாற்றைக் கேட்டதில், நீ இன்று காலைமுதல் இன்னும் ஆகாரமே சாப்பிடவில்லையெனத் தெரிகிறது. ஆகையால், முதலில் கொஞ்சம் ஆகாரம் சாப்பிட்டால்தான், உன் களைப்பெல்லாம் நன்றாகத் தெளியும். எழுந்து சமையல் கட்டுக்குப்போய்ச் சாப்பிடமுடியுமானால், அங்கேயாவது அழைத்துக்கொண்டு போகச் சொல்லுகிறேன்; அல்லது, இவ்விடத்திற்கு ஆகாரத்தைக் கொண்டுவரச் சொன்னாலும், இவர்கள் அப்படியே செய்வார்கள்" என்று மிகுந்த மன நெகிழ்வோடு நயந்து கூறினர்.

அவரது குழைவான சொற்களைக் கேட்ட பெண்மணி அளவற்ற நாணமும் கிலேசமும் அடைந்தாள். தான் உடனே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுத் தனது பங்களாவிற்குப் போய்விட வேண்டுமென்ற எண்ணமும் பதைப்பும் அவளது மனத்தில் எழுந்து தூண்டினவானாலும், தனது மானமும் பிராணனும் போகக்கூடிய நிலைமையில் தோன்றித் தன்னைக்காப்பாற்றி அழைத்து வந்து தனது விஷயத்தில் மிகுந்த பிரியமும் பாசமும்கொண்டு நிரம்பவும்மரியாதையாகவும் அருமையாகவும் தன்னை உபசரிப்பவரான சுந்தரமூர்த்தி முதலியாரது மனம் வருந்தும்படி தான் நடந்துகொள்வது தகாத செய்கையென்று நினைத்ததன்றி, அவர் தன் விஷயத்தில் செய்த பேருதவியைத் தான் உணர்ந்ததை இரண்டொரு வார்த்தையில் வெளியிட வேண்டுமென்றும் நினைத்துத் தனக்கருகில் இருந்த வேலைக்காரிகளை நோக்கி, "எனக்கு இன்றைய தினம் நேர்ந்த பிரமாதமான அபாய சமயத்தில் ஐயா வந்திராவிட்டால், இந்நேரம் நான் எமன் உலகத்துக்குப் போய்ச் சேர்ந்திருப்பேன். ஐயா தான் இன்று தெய்வம்போல வந்து என்னைக் காப்பாற்றினார்கள். எனக்கு இப்போது உடம்பில் கெடுதல் ஒன்றுமில்லை; உடம்பு நல்ல மாதிரியாகவே இருக்கிறது. நான் காலையில் எங்கள் பங்களாவை

விட்டுப் புறப்பட்டு வந்து வெகுநேரமாகிறது. நான் திரும்பி வீட்டுக்கு வரவில்லையே என்று நினைத்து என் தாயார் நிரம்பவும் கவலைப் பட்டுக்கொண் டிருப்பார்கள். என்னை ஒரு வண்டியில் வைத்து மெதுவாகப் புரசைப்பாக்கத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டால், பெருத்த உபகாரமா யிருக்குமென்று ஐயாவிடம் சொல்லுங்கள்" என்று நிரம்பவும் பணிவாகவும் மிருதுவாகவும் கூறினாள். அவள் வேலைக்காரிகளைப் பார்த்துப் பேசினாளானாலும், அவளது சொற்கள் சுந்தரமூர்த்தி முதலியாரது செவிக்கும் எட்டின. வீணாகானம் போல விருந்த அவளது இனிய குரலொலியைக் கேட்டு ஆநந்தபரவச மடைந்தவராய் இளைய ஜெமீந்தார் முன்னிலும் பன்மடங்கு அதிகஉருக்கமாகவும்வாஞ்சையாகவும்பேசத்தொடங்கி,"கோகிலம்! உங்கள் பங்களாவுக்குப் போகவேண்டுமென்று ஏன் நீ இவ்வளவு அவசரப்படுகிறாய்? இது யாருடைய பங்களாவென்று நினைத்துக் கொண்டாய்! இதையும் நீ உன்னுடைய சொந்தபங்களாவாய் ஏன் நினைத்துக் கொள்ளக்கூடாது? நீ சாதாரணமாக அங்கே இருந்தால் நான் லக்ஷம் தடவை வந்து அழைத்தாலும், நீ இங்கே வரக்கூடியவளா? ஏதோகடவுள் செயலால் நீ இங்கே வந்திருக்கிறாய். நீஇங்கே வருவதற்கு முன் உனக்கு நேர்ந்த பெருத்த அபாயத்தைக் குறித்து நான் நிரம்பவும் விசனம் கொள்ளுகிறேன். ஆனாலும், அந்த முகாந்திரத்தினால், நீ இங்கே வந்ததை நான் எங்களுக்கு எந்த ஜென்மத்திலும் கிடைக்காத பெருத்த பாக்கியமாக மதித்து, நான் அடைந்து கொண்டிருக்கும் ஆநந்தத்திற்கும் குதூகலத்திற்கும் அளவே சொல்லி முடியாது. சந்தோஷத்தினால்என் மனம் அப்படியே பொங்கிக் கூத்தாடுகிறது. என் தங்கைச்சி புஷ்பாவதி இந்தச் சமயத்தில் இங்கே இல்லையே என்ற குறைதான் என் மனதைப் புண்படுத்துகிறது. அவள் மாத்திரம் இப்போது இங்கே இருந்தால், நீ இங்கே வந்திருப்பதைப்பற்றி, அவள் அப்படியே குதித்து ஆநந்தக் கூத்தாடுவாள். என் தங்கைச்சியை நான் இதுவரையில் வேறே யாருடைய வீட்டிலும் ஒரு நிமிஷம் கூட விட்டு வைத்ததில்லை. அவள் கலியாணமாகாத பெண். அவளை வீட்டை விட்டு வெளியில் அனுப்பியது மற்றவருக்குத் தெரிந்தால், எங்களைப்பற்றி எல்லோரும் தூஷணையாகப் பேசுவார்கள். நான் அவளை உங்கள் பங்களாவில் இந்த இரண்டு தினங்களாய் விட்டுவைக்கவில்லையா? யாரைப்பற்றி நான் அவளை அங்கே விட்டிருக்கிறேன்? உங்களிடம் எங்கள் மனசில் ஏற்பட்டுப் போயிருக்கும் அளவிட முடியாத பிரியத்தினாலும்,

மதிப்பினலும் எங்களை மறந்து நாங்கள் உங்கள் பொருட்டு எந்தக் காரியத்தையும் செய்யத் தயாராக இருக்கிருேம். உங்கள்பொருட்டு நாங்கள் எங்கள் உயிரைக்கூடக் கொடுத்துவிடுவோம். கொஞ்ச நேரத்துக்கு முன் மினியன் ஓடிவந்து, வண்டியோடு ரஸ்தாவில் இருந்த உன்னைக் காணுமென்று சொல்லி, என்னை உதவிக்கு அழைத்தவுடன், என் உயிர் அப்படியே துடித்துப் போய்விட்டது. உடனே நான் பறந்துகொண்டு வந்தேன். கடற்கரையில் உன்னை அவமானப்படுத்த எத்தனித்த முரட்டுச் சிப்பாயிகளைக் கண்டால், வேறே யாரும் துணிந்து அவர்களிடம் நெருங்கவும் மாட்டார்கள்; அவர்களை எதிர்க்கவும் துணியமாட்டார்கள். வேறே யாருக்காவது இப்பேர்ப்பட்ட அபாயம் நேர்ந்திருக்குமாளுல்,நான்கூட அசட்டை யாக விட்டுத் தலைமறைவாகப் போய் அப்பால் நழுவி இருப்பேன். இந்த உலகத்தில் என்னுடைய மனமார்ந்த பிரியத்தையும் வாஞ்சை யையும் கவர்ந்துகொண்டவர்கள் நீ, உன் தாயார், உன் தங்கை ஆகிய மூவருமே. உங்கள் மூவரில் உன்னையே நான் என் ஹிருதய கமலத்தில் உச்ச ஸ்தானத்தில் வைத்திருக்கிறேன்; அது பற்றியே நான் இந்த அபாயத்தில் என் உயிரையும் பாராமல் வந்து விழுந்து உன்னைத் தப்பவைத்து மீட்டுக்கொண்டு வந்தேன். ஐந்து சிப்பாயி களுக்குமுன் நான் ஒருவன் தனியாக நின்று அவர்களை ஜெயித்தது அரிதினும் அரிதான காரியம். அந்தத் தனிமையான இடத்தில், வேறே யாரும் துணிந்து அவர்களை எதிர்க்கமாட்டார்கள். வந்தது வரட்டுமென்று துணிந்து விழுந்து நான் உன்னைக்கொண்டுவந்தேன். இல்லாவிட்டால், இந்நேரம், நீ சொல்லுகிறதுபோல, உன் மான மும் போயிருக்கும், உன் பிராணனும் போயிருக்கும். அப்பேர்ப் பட்ட மகா பயங்கரமான நிலைமையிலிருந்து தப்பிவந்தவளான நீ இன்று முழுதும் இவ்விடத்திலேயே நிம்மதியாகப் படுத்திருந்து விட்டுப் போவதே சரியான காரியம். அதை விட்டு நீ உடனே வீட்டுக்குப் போக வேண்டுமென்று அவசரப்படுகிருயே! அதைக் கேட்க என் மனம் எவ்வளவு அதிகமாய் சங்கடப்படுமென்பதைக் கூட நீ எண்ணவில்லையே! இதோ என் பங்களாவில் டேலிபோன் எந்திரம் இருக்கிறது. உங்கள் பங்களாவிலும் டேலிபோன் இருக்கி றது. நான் இதன் மூலமாய் உங்கள் பங்களாவிலிருக்கும் என் தங்கை யோடு பேசி, நீ க்ஷேமமாய் இருக்கிருயென்றும், இன்று மாலை வரையில் உன்னை இங்கே வைத்திருந்து கொண்டுவந்து விடுவதாக வும், மற்றவரலாற்றையும் உன் தாயாரிடம் சொல்லி அவர்கள்கவலைப்

படாமல் இருக்கச் சொல்லும்படியும் அவளிடம் கொஞ்சநேரத்துக்கு முன்புதான் சொன்னேன். உன் தாயார் உன்னைத் தேடிக்கொண்டு பட்டணத்திற்குப் போயிருப்பதாகவும், அவர்கள் திரும்பி வந்த வுடனே இந்த வரலாற்றைச் சொல்லி அவர்களைச் சாந்தப்படுத்தி வைப்பதாகவும் அவள் மறுமொழி சொன்னாள். நீ இப்பொழுது போனால் கூட உன் தாயார் வீட்டில் இல்லையாகையால், நீ அவர்களுடைய கவலையைப் போக்க முடியாது. அவர்கள் போய் உன்னைத் தேடக் கூடிய இடத்திலெல்லாம் தேடிவிட்டுத் திரும்பி வந்த பிறகு தான் நீயும் அவர்களைப் பார்க்க நேரும். அம்மாள் போகக் கூடிய இடம் இன்னதென்பதை உன் தங்கையிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு, அவ்விடத்திற்கு ஓர் ஆளை அனுப்பச் சொன்னேன். உன் தங்கை தனக்கு எந்தத் தகவலும் தெரியாதென்று சொல்லிவிட்டாளாம்; அவர்கள் எந்த இடத்திற்குப் போயிருக்கக் கூடுமென்பதை நீ சொன்னால், நான் அந்தத் தகவலை டெலிபோன் மூலமாய் என் தங்கைச்சிக்குத் தெரிவிக்கிறேன். அவள் ஆளை அனுப்பட்டும். அல்லது, நானே இங்கே இருந்து ஓர் ஆளை அந்த இடத்திற்கு அனுப்பி, நீ இங்கே வந்திருக்கிறு யென்ற விவரத்தை அவர்களுக்குத் தெரிவித்து அவர்கள் புரசைப்பாக்கம் பங்களாவுக்குப் போய்ச் சேரும்படி செய்கிறேன்; நீ இப்போது இங்கே சாப்பிட்டு விட்டு எப்படியாவது இன்று மாலை வரையில் இங்கே இருந்து போனால் தான் அது எனக்குச் சந்தோஷமா யிருக்கும். என் தங்கைச்சிமாத்திரம் உங்கள் ஜாகையில் இரண்டு தினங்களாய் இருக்கலாம். நீ மாத்திரம் இன்று மாலை வரையில் இங்கே இருக்கக்கூடாதா? எங்கள் வீட்டில் நீ சாப்பிடும் படியான சந்தோஷத்தை நாங்கள் அடையக் கூடாதா?" என்று நிரம்பவும் கனிவாகவும் நயமாகவும் கூறினார்.

அதைக் கேட்ட பெண்மணி மிகுந்த கலக்கமும் சஞ்சலமும் அடைந்து, தான் அவருக்கு எவ்விதமான மறுமொழி கூறுவதென்பதை அறியாது சிறிதுநேரம் தத்தளித்து மெளனமாக இருந்தாள். தனது தாய் தன்னைக் காணாமல் கவலை கொண்டு தேடியலைகிறாள் என்ற செய்தி கோகிலாம்பாளின் மனத்தைப் புண்படுத்தி வதைத்த தானாலும், அவள் திரும்பி பங்களாவிற்கு வந்தவுடனே புஷ்பாவதி தனது வரலாற்றைக் கூறி அவளது திகிலையும் கவலையையும் போக்குவாள் என்ற நினைவு ஒருவித ஆறுதலை உண்டாக்கியது. மினியன் அவரது பங்களாவிற்கு வந்து அவரை உதவிக்கு அழைத்து

வந்தானென்று அவர் கூறியதிலிருந்து, 'தான் இன்ஸ்பெக்டருடைய மாளிகைக்குப் போன வரலாறு அவருக்குத் தெரிந்திருக்காது என்ற நினைவும் கோகிலாம்பாளுக்கு மிகுந்த ஆறுதலை உண்டாக்கியது. அந்த இடத்தில் அதிக காலம் தங்கி இராமல் உடனே போய்விட வேண்டுமென்ற ஆவல் எழுந்து அவளைத் தூண்டிய தானாலும், தம்மிடம் அளவற்ற வாஞ்சையும், மதிப்பும் வைத்துள்ளவரும், தமது தங்கையை அனுப்பியுள்ளவரும், கடைசியில் தனது மானத்தையும் உயிரையும் காப்பாற்றிய பேருபகாரியுமான அவரது மனம் புண்படும்படி தான் தனது இச்சைப்படியே பிடிவாதமாக நடந்துகொள்வது ஒழுங்கல்லவென்று தீர்மானித்துக்கொண்ட நமது அருங்குண அணங்கு முன்போல வேலைக்காரிகளை நோக்கி மிருதுவாகப் பேசத் தொடங்கி, "எங்கள் சொந்தக்காரர் இரண்டொருவர் வீட்டுக்குப் போய்த் திரும்பி விடும்படி என்னை என் தாயார் அனுப்பினார்கள்; அவர்கள் அங்கெல்லாம் போய் என்னைத் தேடிப் பார்த்து விட்டு, நான் திரும்பி வேறு வழியாகப் பங்களாவுக்கு வந்திருப்பேனென்று நினைத்துக் கொஞ்ச நேரத்தில் பங்களாவுக்கே வந்துவிடுவார்கள். உடனே புஷ்பாவதி யம்மாள் விஷயத்தைச் சொன்னால், அவர்களுடைய கவலை நீங்கிப் போகும். ஆகையால், அங்கே இருந்தாவது இங்கே இருந்தாவது ஆளை அனுப்பவேண்டிய அவசியமே இல்லை. தாங்களும், தங்கள் தங்கைச்சியாரும் எங்கள் விஷயத்தில் வைத்திருக்கும் பிரியத்தையும் மதிப்பையும் நான் அறியாதவளல்ல. அதுவுமன்றி, கடைசியாய்த் தாங்கள் இப்போது எனக்குச் செய்த இந்த உதவிக்கு நாங்கள் இந்த உலகத்தையே தங்களுக்குக் கொடுத்தாலும் அது தங்கள் உதவிக்கு ஈடாகாது. நான் காலையில் சாப்பிட்டு விட்டே வீட்டிலிருந்து புறப்பட்டுப் போனேன். எனக்கு வயிற்றில் பசி இல்லையானாலும், தங்கள் சொல்லை மீறி நான் நடப்பது சரியல்லவாகையால், நான் கொஞ்சமட்டும் சாப்பிட்டு இன்னம் இரண்டொரு நாழிகைக்காலம் இவ்விடத்தி லிருந்துவிட்டே போகிறேன்" என்று பணிவாகக் கூறினாள்.

அவ்வாறு அவரது மனம் கோணாதபடி கோகிலாம்பாள் அவருக்கு மறுமொழி கூறினளானாலும், தனது அன்னை தன்னைத் தேடும்பொருட்டு பங்களாவைவிட்டுப் புறப்பட்டு வெளியில் போயிருக்கிறாள் என்ற செய்தி அவளது மனத்தில் மிகுந்த கலக்கத்தையும் கவலையையும் துன்பத்தையும் உண்டாக்கத் தொடங்கியது. போலீஸ் இன்ஸ்பெக்டர் வஞ்சகமாய்த் தன்னை அவரது மாளிகைக்

குக் கொண்டுபோன வரலாற்றைத் தனது தாயார் தெரிந்துகொள்ள ஏதுவில்லையாதலால், அவள் தன்னைத் தேடிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷன் முதலிய இடங்களுக்குப் போய்த் தன்னைக் காணாமல் எவ்விதம் தவித்துத் தடுமாறி வருந்துகிறாளோ வென்று நமது பெண்ணரசியான கோகிலாம்பாள் நினைத்து நினைத்து அதை வெளியிட மாட்டாதவளாய்த் தனக்குத்தானே சஞ்சலமடைந்து தத்தளிக்கலானாள். அதுவுமன்றி, தனது ஆருயிர் மணாளரான கண்ணபிரான் போலீசாரின் வஞ்சகச் சூழ்ச்சியை அறியாது கடிதம் எழுதிக் கொடுத்தமையால், அவரிருக்கு மிடத்திற்குத் தான் வரலாமென்று ஆவலோடு எதிர்பார்த்துப் பார்த்து ஏக்கமும் கலக்கமும் அடைந்து வருந்தி உழன்றுகொண் டிருப்பாரோ என்ற நினைவும் அந்த அருங்குண நங்கையை வதைக்கலாயிற்று. அவ்வாறு அவள் சகிக்கவொண்ணாத மனவேதனைகளுக்கு இலக்காய் நெருப்பில் கிடந்து கருகும் சருகுபோலத் துன்புற்று வாடி வதங்கித் துவண்ட வண்ண மிருந்தாளானாலும் தனக்கு நேரிட்ட கடைசி அபாயத்திலிருந்து தன்னைக் காப்பாற்றியவரும், தனது தங்கையை மணக்கப் போகிறவரும், தன்மீது அத்யந்த பிரியமும் பிரேமையும் கொண்டுள்ளவருமான சுந்தரமூர்த்தி முதலியாரது மனம் புண்படும்படி தான் நடந்துகொள்ளக் கூடாதென்ற எண்ணத்தினால், தான் தனது மனவேதனைகளைப் பொறுத்துக்கொண்டு எப்படியாகிலும் அவ்விடத்தில் இரண்டொரு நாழிகைக்காலம் இருந்துவிட்டுப் போகவேண்டுமென்ற தீர்மானத்தோடு பல்லைக் கடித்துக்கொண்டு அவ்விடத்தில் இருந்தாள்.

அவளுக்கும் சுந்தரமூர்த்தி முதலியாருக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த வேலைக்காரிகளுள் ஒருத்தி அவளை நோக்கி, "ஏன் அம்மா! எழுந்து சமையலறைக்கே வருகிறீர்களா? அல்லது, இங்கேயே சாப்பிடுகிறீர்களா?" என்று பணிவாகவும் அன்பாகவும் வினவினாள். தான் தனது கைகால்களைச் சுத்தம் செய்துகொள்ளாமல் போஜனம் செய்வதும், அந்த இடத்தில் போஜனம் செய்வதும் கோகிலாம்பாளுக்கு நிரம்பவும் அருவருப்பாகவும் அசுசியாகவும் இருந்தமையால், சமையலறைக்கே தான் வருவதாய் அந்த மடந்தை ஒப்புக்கொள்ள, வேலைக்காரிகள் இருவரும் அவளுக்குக் கைலாகு கொடுத்துத் தூக்கி மெதுவாக நடத்தி அழைத்துக்கொண்டு போயினர். அவ்விடத்தில் கோகிலாம்பாள் சகிக்கவொண்ணாத தனது மனவேதனையின் இடையில் தனது

தேகத்தை ஒருவாறு சுத்தி செய்துகொண்டு வேண்டா வெறுப் பாய்த் தனது போஜனத்தை முடித்துக்கொண்டு வேலைக்காரிகளின் உதவியால் முன்னிருந்த அறைக்கு வந்து அதே ஸோபாவின்மேல் உட்கார்ந்து கொண்டாள். வேலைக்காரிகள் அவளுக்குப் பலவகை யில் உபசாரணை செய்து தாம்பூலம் போடவிட்டு, சற்று படுத்துத் துயிலும்படி வேண்டிக்கொள்ள, அந்தப் பெண்மணி அவ்விடத்தில் இருக்கை கொள்ளாமல் தவித்த நிலைமையில் திண்டில் சாய்ந்தபடி ஒரு நாழிகைக்காலம் அப்படியே உறங்கியபின், சிறிதளவு தெளி வடைந்து எழுந்து உட்கார்ந்துகொண்டாள். வேலைக்காரிகள் அவளை விட்டகலாமல் பக்கத்திலேயே இருந்து, அவள் உறங்கி விழித்த வுடன் அவளை அன்பாக வற்புறுத்தி அவளுக்குச் சிற்றுண்டி காப்பி முதலியவைகளை வழங்கி உற்சாகமும் மகிழ்ச்சியும் உண்டாக்க யத்தனித்தனர். அதற்குள் சுந்தரமூர்த்தி முதலியார் வெளியில் சென்று மினியனுக்குத் திருப்திகரமாகச் சாப்பாடு போடச்செய்து, குடித்து அவனுடைய இஷ்டபடி அதைச் செலவிட்டுக் கொள் ளும்படி சொல்லி அனுப்பிவிட்டு, உள்ளே சென்று தமது போஜனத் தை முடித்துக்கொண்டு, டெலிபோன் மூலமாய்ப் புஷ்பாவதியுடன் பேசிவிட்டு கோகிலாம்பாள் இருந்த அறையண்டை வந்து அதற்கு முன் மறைந்து நின்று அவளுடன் பேசிய இடத்தை அடைந்து வேலைக்காரிகளின் பெயர்களைச் சொல்லி அழைத்து, "அம்மாளுக்கு உடம்பு இப்போது எப்படி இருக்கிறது? இப்போது தூங்குகிறார் களா விழித்துக்கொண் டிருக்கிறார்களா?" என்று நிரம்பவும் பட்ச மாகவும் உருக்கமாகவும் தணிவான குரலிலும் வினவினர்.

உடனே ஒரு வேலைக்காரி, "அம்மாள் விழித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். உடம்பு இப்பொழுது கொஞ்சம் குணப்பட்டிருக் கிற மாதிரியாயிருக்கிறது" என்று பணிவாக மறுமொழி கூறினாள்.

உடனே சுந்தரமூர்த்தி முதலியார், "பலகாரம் காப்பி எல்லாம் கொண்டுவந்து கொடுத்தீர்களா?" என்று நிரம்பவும் பரிவாக வின வினர். வேலைக்காரி, "ஆம், கொடுத்தேன். அம்மாள் மனம் பிடித்து எதையும் சாப்பிடவில்லை; எதையும் தொட்டுத் தொட்டுப்பார்த்து விட்டுச் சாப்பிட்டாய் விட்டதென்று பெயர் பண்ணி விட்டார்கள்" என்றாள்.

அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி முதலியார் சந்தோஷமாக நகை த்து, "ஓகோ! அவர்களுடையபங்களாவில் நாம் அவர்களைக்கொண்டு

போய் விடவில்லையே யென்று நம்முடைய பேரில் அம்மாளுக்குக் கோபம்போலிருக்கிறது! என்ன கோகிலம்! அப்படித்தானா?" என்று நிரம்பவும் விநயமாகவும் உருக்கமாகவும் கூறினார்.

அதைக் கேட்ட பெண்மணி ஒரு விதமான கிலேச மடைந்து நாணித் தவித்து, வேலைக்காரிகளை நோக்கி மிருதுவாகப் பேசத் தொடங்கி, "நன்றாயிருக்கிறது! எனக்குக் கோபமாவது வருகிறதாவது! இத்தனை பேரும் என்னை ஒரு பொருட்டாக மதித்து பிரியத்தை மழையாகப் பெய்து வருந்தி உபசரிக்கிறதாவது! அதைக் கண்டு நான் கோப மடைகிற தென்றால், என்னைப்போல நன்றிவிசுவாசம் அற்றவர்கள் வேறே யார் இருக்கப்போகிறார்கள்? கொஞ்ச நேரத்துக்கு முன் என் மானத்தையும் உயிரையும் காப்பாற்றியதற்கும், அதன் பிறகு எனக்கு நடக்கும் உபசரணைகளுக்கும் பதிலாக நான் உங்களெல்லோர் மேலும் கோபம் கொள்வதே சரியான மரியாதை. வாஸ்தவம்தான். நான் கோபத்தினால் எதையும் சாப்பிடவில்லை" என்று நயமாகவும் அடக்கிய மகிழ்ச்சியோடும் மறுமொழி கூறினாள்.

உடனே சுந்தரமூர்த்தி முதலியார் குதூகலமாய்ப் பேசத் தொடங்கி, "சரி, ஒருவர்மேல் நாம் அபாரமான பிரியம் வைத்துவிட்டால், அவர்கள் நம்மைக் கோபித்துக்கொள்வதும் நமக்கு இன்பமாகத்தான் இருக்கிறது. அவர்களுடைய கையால் அடிபடுவதுங் கூட மனசுக்கு ஆநந்தமாகத்தான் இருக்கும். ஆகையால், நீ என்மேல் எவ்வளவு வேண்டுமானாலும் கோபித்துக் கொள்ளலாம். கோகிலம்! அதையெல்லாம் நான் புஷ்பவருஷம் போலச்சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளத் தயார். ஆனால், நீ எதையும் சாப்பிடாமல் இப்படிப் பட்டினி இருப்பதுதான் எங்கள் மனசுக்கு சங்கடமாக இருக்கிறது. ஏன் கோகிலா! என்னை நீ இன்னமும் அந்நிய மனிதனென்று எண்ணுகிறாயா?" என்றார்.

அவ்வாறு அவர் மேன்மேலும் சம்பாஷிக்க எத்தனித்ததைக் கண்ட வேலைக்காரிகளுள் ஒருத்தி கோகிலாம்பாள் கவனிக்காதபடி மெதுவாய் நழுவி ஏதோ முக்கியமான காரியத்தை உத்தேசித்து எங்கேயோ போகிறவள் போல அந்த அறையை விட்டு வெளியில் போய்விட்டாள்.

கோகிலாம்பாள் அதன் மர்மத்தை அப்போது உணராதவளாய் அவள் போனதைப் பொருட்படுத்தாமல் சுந்தரமூர்த்தி முதலியார் கடைசியாகக் கூறிய சொற்களைக் கேட்டு ஒருவித இன்பமும் துன்பமும் நாணமும் அடைந்தவளாய் அவருக்குத் தான் எவ்விதமான மறுமொழி கூறுவதென்பதை யறியாது சிறிதுநேரம் தத்தளித்த பின் மிருதுவாகப் பேசத்தொடங்கி, "அப்படியெல்லாம் நான் இந்த இடத்தைப்பற்றி வித்தியாசமாக எண்ணவுமில்லை; அதனால் வேண்டுமென்று சாப்பிடாமல் இருக்கவுமில்லை. எப்போதும்நான்நிரம்பவும் சொற்பமாகவே சாப்பிடுகிறது வழக்கம். தவிர இந்த இரண்டு தினங்களாய் நம்முடைய குடும்பத்துக்குக் கெடுதல்களே நேர்ந்து கொண்டிருப்பதால், அவைகளால்என்மனம் நொந்துபோய் இன்னதென்று சொல்ல முடியாதபடி வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதுவுமன்றி, கொஞ்சநேரத்துக்குமுன் சம்பவித்த பயங்கரமான விபத்து இப்போதுதான் நடப்பதுபோல என் கண்ணுக்குமுன் அப்படியே புதிதாகத் தோன்றிக்கொண்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் இருக்கும் எனக்கு ஆகாரம் வேப்பங்காய் போல இருக்கிறது. எங்கள் வீடாக இருந்தால் நான் இவ்வளவு ஆகாரங்கூடச் சாப்பிட்டிருக்க மாட்டேன். தங்கள்பேரில் நான் வைத்துள்ள அபாரமான மதிப்பினால், என் மன அருவருப்பை நான் வெளியில் காட்டாமல், தங்கள் மனம் வருந்தக்கூடாதென்று நினைத்து பிடித்த வரையில் சாப்பிட்டேன். நான் ஆகார விஷயத்தில் கபடமாக நடந்துகொண்டதாய் நினைப்பது சரியல்ல. தங்கள் பிரியப்படி நான் இங்கே இவ்வளவு நாழிகைநேரம் இருந்தாய்விட்டது. இதற்குள் இரண்டுதரம் விருந்து நடந்து போய்விட்டது. இடையில் ஒரு சின்னத் தூக்கமும் ஆய்விட்டது. இனியாவது நான் புறப்பட்டுப் போக அநுமதி கொடுக்கலாமல்லவா? மினியன் இருந்தால், வண்டி தயாரிக்கும்படி செய்தால், காலத்தில் நான் எங்கள் ஜாகைக்குப் போய்ச் சேரலாம். நான் இல்லாவிட்டால் எங்கள் வீட்டு வியவகாரங்களெல்லாம் அப்படி யப்படியே இருந்த இடத்தில் இருக்கும்" என்று நயமாக வற்புறுத்திக் கூறினாள்.

அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி முதலியார், மிகுதி இருந்த இன்னொரு வேலைக்காரியின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு, "கெங்கம்மா! உன்னை மாத்திரம் தனியாக விட்டுவிட்டு அவள் எங்கே போனாள்?" என்றார்.

கெங்கம்மாள் நிரம்பவும் பணிவாகவும் வணக்க ஒடுக்கமாகவும் மறுமொழி கூறத்தொடங்கி, "அவள் தாகத்திற்குச் சாப்பிடப் போயிருப்பாள்போ லிருக்கிறது; இப்போது வந்துவிடுவாள்" என்றாள்.

உடனே சுந்தரமூர்த்தி முதலியார், "சரி; அப்படியானால், அவள் வந்து அம்மாளிடம் உட்கார்ந்திருக்கட்டும். நீ குதிரை லாயத்திற்குப் போய், இவர்களுடைய காசாரியைக் கூப்பிட்டு, அம்மாள் புறப்படப் போகிறார்க ளென்றும், பெட்டி வண்டியைத் தயாரித்து வைக்கும்படியும் சொல்லிவிட்டுவா" என்றார்.

கெங்கம்மாள் அப்படியே செய்வதாக மறுமொழி கூறியவண்ணம் உடனே எழுந்து வெளியில் போய்விட்டாள்.

சுந்தரமூர்த்தி முதலியார் மெதுவாய்க் கனைத்துக்கொண்டு, "கோகிலம்! எப்பேர்ப்பட்ட இடமாக இருந்தாலும் நீ தங்கக்கூடியவள் அல்லவென்பது எனக்கு நன்றாகத்தெரியும். இவ்வளவு நாழிகைக்காலம் பொறுமையோடு நீ இங்கே இருந்ததை நான் ஒரு பெரிய தவப்பயனாகக் கருதுகிறேன். இனிமேலும் நீ இவ்விடத்தில் இருக்க வேண்டுமென்று நான் உன்னிடம் கேட்டுக்கொள்வதாவது, அதைப்பற்றி உன்னை வற்புறுத்துவதாவது ஒழுங்கான காரியமல்ல. அப்படி நான் கேட்டுக்கொண்டாலும், நீ தாக்ஷிணியத்திற்கு அதன்படி இருக்கலாம். ஆனால், உன் மனம் வேண்டா வெறுப்பாக இருப்பதாய் உணருமேயன்றி, கொஞ்சமாவது சந்தோஷமடையவே போகிறதில்லை. உங்கள் குடும்ப நிலைமையைக் கருதி சந்தர்ப்பம் இப்போது சரியாக இல்லையென்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆகையால், உன் பிரியப்படியே வண்டியை ஆயத்தப்படுத்தும்படி சொல்லி அனுப்பிவிட்டேன். வேலைக்காரி திரும்பி வந்தவுடன் நீ புறப்பட்டுப் போகலாம். ஆனாலும் முக்கியமான ஒரு விஷயத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் உன்னிடம் தனிமையில் சொல்லவேண்டுமென்று நான் பிரியப்படுகிறேன். அதைக் கருதியே நான் வேறே யாரையும் அந்த வேலைக்கு அனுப்பாமல் இந்த வேலைக்காரியை அனுப்பினேன். நான் உன்னிடம் இன்ன விஷயத்தைப்பற்றித் தான் பிரஸ்தாபம் செய்யப் போகிறேன் என்பதை நீயே அநேகமாய் யூகித்துக்கொண் டிருப்பாயென்று நினைக்கிறேன்" என்று நயமாகவும் வாஞ்சையாகவும் உருக்கமாகவும் கூறினார்.

அவர் வேண்டுமென்றே வேலைக்காரியை அனுப்பிவிட்டுத் தன்னிடம் ஏதோ முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேசப்போகிறார் என்பதை அவள் எதிர்பார்க்கவே இல்லையாதலால், அதைக்கேட்டு அந்த மடந்தை திடுக்கிட்டுத் திகிலும் சஞ்சலமு மடைந்து தவிக்கலானாள். அவர் எதைக் குறித்துத் தன்னிடம் பேசுவாரோ என்பது அவளுக்கு நிச்சயப்படாமையால் அவளது மனம் அந்த ஒரு நிமிஷத்திற்குள் எண்ணாததை யெல்லாம் எண்ணி அபாரமாகத் தவித்துப்போய்விட்டது. அவள் அவருடன் துணிந்துபேசுவதற்கு முற்றிலும் அஞ்சி மௌனமாக இருந்தாள். அதைக்கண்ட சுந்தரமூர்த்தி முதலியார், "என்ன கோகிலம்! பேசாமடந்தை ஆய் விட்டாய்? நான் கேட்டதற்கு ஒன்றும் சொல்ல மாட்டேனென்கிறாயே! என்னோடு பேசக் கூடாதென்கிற எண்ணமா? என் மனசில் உள்ள விஷயத்தை நான் வெளியிடலாமல்லவா?" என்றார்.

கோகிலாம்பாள் முற்றிலும் தயக்கமாகவும் ஹீனஸ்வரத்திலும் பேசத் தொடங்கி, "என்ன விஷயம் அது? எனக்கு எதுவும் விளங்க வில்லையே" என்று பணிவாகக் கூறினாள்.

சுந்தரமூர்த்தி முதலியார், "நான் உன்னிடத்தில் வேறே எந்த விஷயத்தைப்பற்றிப் பேசப்போகிறேன்; ஆதியில் நான் என் தங்கை புஷ்பாவதியின் மூலமாய் உங்களுக்குச் சொல்லியனுப்பிய சங்கதி உனக்கு ஞாபகமிருக்குமென்று நினைக்கிறேன்" என்றார்.

கோகிலாம்பாள் திடுக்கிட்டுக் குழம்பிப்போய்த் தத்தளித்து, "தாங்கள் எதைக் குறித்துப் பேசுகிறீர்களென்பது விளங்க வில்லையே!" என்றாள்.

சு. முதலியார்:—மகாயூகமான புத்தியுடையவளான உனக்கு அது இன்னதென்று படவில்லையா? நீ ஸ்திரீ, நான் புருஷன்; நான் உன்னிடத்தில் ஸ்திரீ புருஷர் விஷயத்தைப்பற்றிப் பேசாமல் வேறே எதைப்பற்றிப் பேசப் போகிறேன்.

கோகிலாம்பாள்:—என்னுடைய மனசு இப்போது நிரம்பவும் குழம்பிச் சஞ்சலப்பட்டுக்கொண் டிருக்கிறது. இந்த நிலைமையில், எதுவும் எனக்கு அவ்வளவு நுட்பமாகத் தெரியவில்லை. தாங்கள் எந்த விஷயத்தைக் குறித்துப் பேசுகிறீர்கள் என்பது இப்போதும்

எனக்குத் தெரியவில்லை. ஒரு மனிதர் ஒரு சமயம் தம் தாயாருடன் பேசுவார், இன்னொரு சமயம், சம்சாரத்தோடு பேசுவார், இன்னொரு சமயம், பெண்ணோடு பேசுவார், அடுத்த சமயம் வேலைக்காரியோடு பேசுவார். எல்லாம் ஸ்திரீ புருஷர் சம்பாஷணைதான். பொதுவாக ஸ்திரீ புருஷர் சம்பாஷணை என்றால், அதிலிருந்து எனக்கு ஒன்றும் அர்த்தமாகவில்லை. தாங்கள் தயைசெய்து விஷயத்தைக் குறிப்பாகச் சொல்ல வேண்டுகிறேன்.

சு. முதலியார்:—(ஆநந்தமாக நகைத்து) பேஷ்! நன்றாகச் சொன்னாய்! நீ மகா சூக்ஷ்மமான புத்தியுடையவள் என்பதை ருஜுப்படுத்த இதைவிட வேறே அத்தாக்ஷி என்னவேண்டும். இதைக் கண்டுதான் நான் ஆதியிலிருந்து இந்த விஷயத்தில் ஒரே பிடிவாதமாக இருந்து வருகிறேன். நீ பேசும் ஒவ்வொரு வார்த்தையும் என்மனசை அபாரமாகக் கவர்ந்து என் தீர்மானத்தையே மேன்மேலும் பலப்படுத்துகிறதேயன்றி வேறல்ல. கோகிலம்! நான் ஸ்திரீகளை ஆராய்ந்து அவர்களுடைய குணதோஷங்களையும் மனக்குணக்குகளையும் கண்டு பிடிப்பதில் ரொம்பவும் தேர்ச்சி பெற்ற நிபுணன். இந்த விஷயத்தில் என்னைவிட என் தங்கைச்சி பத்துப்பங்கு அதிக புத்திசாலி. எத்தனையோ இடங்களில் எனக்குப் பெண் கொடுப்பதாகச் சொன்னார்கள். அங்கங்கு நானும், என் தங்கைச்சியும் போய்ப் பார்த்துத் தெரிந்துகொண்ட வரையில், எந்தப் பெண்ணும் திருப்திகரமாக இல்லை. ஒவ்வொருத்தியிடத்திலும் ஒவ்வொரு குற்றம் இருந்தது. ஆகையால், எந்த இடமும் எங்களுக்குப் பிடிக்கவில்லை. அதனாலேயே எனக்கு இதுவரையில் கலியாணம் ஆகவில்லையன்றி எனக்குப் பெண் கிடைக்காததனாலல்ல. என் தங்கை, தகப்பனார் முதலியோர் எனக்குத் தகுந்தபடி சகலமான அம்சங்களிலும் குற்றமற்றவளாயிருப்பவள் இந்த உலகத்திலேயே இல்லையென்றும், எனக்கு என் ஆயுசுகாலம் முடியக் கலியாணமே ஆகப்போகிறதில்லை யென்றும் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். இப்போது அன்றையதினம் நான் உன்னைப்பார்த்த பிறகும், மறுநாள் என் தங்கைச்சி உன்னைப் பார்த்த பிறகும், நான் எண்ணி இருந்தது கனவல்லவென்றும், அது அநுபவத்தில் பலிக்கக்கூடிய நினைவுதானென்றும் நானும் மற்றவர்களும் தீர்மானித்துக்கொண்டோம். அன்றையதினம் என் தங்கைச்சி இது விஷயமாக உன் தாயாரிடத்தில் பிரஸ்தாபித்த காலத்தில், இந்த விஷயத்தை எவ்வளவு தெளிவாக

எடுத்துச் சொல்லமுடியுமோ அவ்வளவு தெளிவாகச் சொல்லி இருக்கிறாள். நான் கலியாணம் செய்துகொள்வதானல், உன்னைத்தான் செய்துகொள்ளுகிறது, இல்லையானல், உன்னை நினைத்தபடியே இருந்து என் பிராணனை விட்டு விடுகிறது என்று நான் முடிவு செய்துகொண்டிருந்தேன். அன்றையதினம், என் தங்கை உன்னை எனக்குக் கட்டிக்கொடுக்கும்படி கேட்ட காலத்தில், அதற்கு முன்பே உன் விஷயம் முடிவாகி விட்டதென்றும், நீ கண்ணபிரான் முதலியாரைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிருயென்றும் உன் தாயார் சொன்னதன்றி, உன் தங்கை சௌந்தரவல்லியம்மாளை எனக்குக் கட்டிக் கொடுப்பதாகவும் சொன்னர்கள். அப்போது இருந்த நிலைமையில் வேறே வகையில்லாதிருந்தமையால், அதற்கு ஒருவிதமாக நாங்கள் இணங்கினேம். அவள் சகலமான அம்சங்களிலும் உனக்கு ஈடு நிற்கமாட்டாளானலும், பார்வைக்கு அவள் உன்னைப்போல இருப்பதைக் கருதியும், உங்கள் வீட்டில் சம்பந்தம் செய்துகொண்டால், அடிக்கடி உன்னைப் பார்த்து ஒருவித சந்தோஷமடையும் சந்தர்ப்பமாவது வாய்க்குமே என்பதைக் கருதியுமே முக்கியமாய் நான் உன் தங்கையைக் கட்டிக்கொள்ள அரை மனதோடு இணங்கினேன். அதன் பிறகு அந்தக் கண்ணபிரான் முதலியாருக்கும், அவரது தாயாருக்கும் காலவித்தியாசத்தினல் பல துன்பங்கள் நேர்ந்துவிட்டன. அப்படி நேர்ந்தவை நிஜமானவையோ, பொய்யானவையோ, நியாயமானவையோ, அநியாயமானவையோ. அதையெல்லாம் குறித்து நாம் இப்போது பிரஸ்தாபிப்பதும் ஆராய்ச்சி செய்ய ஆரம்பிப்பதும் சரியான காரியமல்ல. அவரைப்பற்றியும், அவருடைய தாயாரைப்பற்றியும் எல்லோரும் நிரம்பவும் இழிவாகவும் தூஷணையாகவும் பேசிப் புரளி செய்கிருர்கள். உண்மையில் அவர்கள் குற்றமற்றவர்களாக இருந்தாலும் இருக்கலாம். அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரங் காசு கொடுத்தாலும் வாராதென்பார்கள். ஆகையால் அவர்களுக்கு வந்த அவமானமும் இழிவும் இனி எந்த நாளிலும் அழியப் போகிறதில்லை. நான் விசாரித்துத் தெரிந்து கொண்டவரையில், கண்ணபிரான் முதலியார் இந்த வழக்கில் தப்புவது கடினமென்றும், எப்படியும் அவர் தண்டனையடைந்து விடுவாரென்றும் நிச்சயிக்க ஏதுவிருக்கிறது. அவர்களுடைய விஷயத்தில் உன்மனம் அபாரமானவாத்ஸல்யம் கொண்டு நிரம்பவும் இளகி அவர்களிடம் லயித்துப் போயிருக்கலாம். இருந்தாலும் அதைக் கருதி நீ கண்ணியத்திற்குக்குறைவான

செய்கையில் இறங்குவது ஒழுங்கல்ல. நீ பிடிவாதமாய் அந்த இடத் திலேயே வாழ்க்கைப்படுவே னென்று ஒரே மூர்க்கமாகச்சொல்லிக் கொண்டிருப்பதும் நல்லதல்ல. உன் தங்கைக்குக் கலியாணம் ஆக வேண்டும். நீ இப்படிப்பட்ட தலைக்குனிவான காரியத்தைச் செய் தால், வேறே தக்கமனிதர் யாரும் உன் தங்கையைக் கட்டிக்கொள்ள முன் வரமாட்டார்கள். நமக்கு வேண்டிய மனிதர்களை ஆபத்துக் காலத்தில் கைவிடக் கூடாதென்பது நியாயமான காரியமே. அவர் களை நாம் கைவிடவேண்டாம். பணத்தினாலும் தேகப் பிரயாசையி னாலும் நாம் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து நாம் கண்ணபிரான் முதலியாரை விடுவிக்கச் செய்வோம்; அந்த அம்மா ளையும் தேடிப் பிடிப்போம்; இன்னம் அவர்களுக்கு ஏதாவது பொருளுதவியும் செய்வோம்; அவ்வளவேயன்றி, எவ்வளவோ கண் ணியமாக இருந்துவரும் நம்முடைய குடும்பங்களின் பெருமையைப் போக்கடிக்கும்படியான காரியத்தைச் செய்து, தீராத மானக்கேட் டையும் இழிவையும் நாம் தேடிக்கொள்வது சரியல்ல. அவர் உன்னை இரண்டு சந்தர்ப்பங்களில் பெரிய அபாயத்திலிருந்து சாப்பாற்றினு ரென்பது உண்மைதான். அதைப்பற்றி நான் ஆக்ஷேபனை சொல்ல முடியாது. அவர் நம்முடைய சுயஜாதி மனிதரல்லவென்று வைத் துக் கொள்ளுவோம். அப்போது நீ அவரைக் கட்டிக்கொள்ள எண் ணுவாயா? மாட்டவே மாட்டாய். நம்முடைய மனசில் உண்டாகும் அபாரமான நன்றி விசுவாசத்தை நீ அப்போது வேறு பலவகையில் காட்டுவாய். அவருக்கு ஏராளமான சன்மானங்கள் கொடுப்பாய்; புகழ்ச்சிமொழிகளை உபயோகிப்பாய்; வீட்டைக்கட்டிக்கொடுப்பாய், நிலத்தைக் கொடுப்பாய், அல்லது, அவருடைய கலியாணத்தையே நடத்தி வைப்பாய்; அவ்வளவேயன்றி, இம்மாதிரி கலியாணப் பிரஸ் தாபம் உண்டாகாது. அது போலவே, நீ இப்போதும் நினைத்துக் கொண்டு, உன் எண்ணத்தை மாற்றிக் கொள்வதே தகுதியானகாரி யம். தூஷணைக்கும் இழிவுக்கும் இலக்கான மனிதரை நமக்குச் சரியான ஜாதி மனிதரென்று நாம் எண்ணக்கூடாதல்லவா? அதுவு மன்றி, இப்போது நான் இருக்கிறேன். கொஞ்ச நேரத்திற்குமுன் உனக்கு அந்தச் சிப்பாயிகளால் பெரிய அபாயம் நேரிட்டதல்லவா? அந்தச் சமயத்தில் நான் உயிருக்குத் துணிந்துவந்து விழுந்திராவிட் டால், இந்நேரம் உன் மானமும் போயிருக்கும், நீபிராணனையும்விட் டிருப்பாய். இந்தச் சமயத்தில் நான் உனக்குச்செய்த உதவிகண்ண பிரான் முதலியார் செய்த உதவிக்குக் குறைந்ததாகவா இருக்கிறது?

இப்படிப்பட்ட உதவிகளைக் கருதி ஒருஸ்திரீ தனக்கு உதவி செய்த மனிதரைக் கட்டிக்கொள்ளுகிறதென்றால், நீ இப்போது அவரையும் கட்டிக்கொள்ள வேண்டும், என்னையும் கட்டிக்கொள்ள வேண்டும். ஒரு ஸ்திரீக்குத் தன் ஆயுசு காலத்தில் இப்பேர்ப்பட்ட அபாயங்கள் எத்தனை நேருகின்றனவோ, அத்தனைப் புருஷர்களையும் கட்டிக் கொள்ளவேண்டுமென்று நாம் நினைப்பது பைத்தியக்காரத்தனமே யன்றி வேறல்ல. ஆகையால், நீ நன்றாக யோசனை செய்து பார்ப்பா யானால், நியாயம் உனக்கே விளங்கும். இதுவரையில் நடந்தது நடந்து போய்விட்டது. அதை இவ்வளவோடு விட்டுவிடுங்கள். நாமெல்லோரும் சேர்ந்து அவருக்கு எல்லா உதவிகளையும் செய் வோம். ஆனால், நீ அவரைக் கட்டிக்கொள்ள வேண்டுமென்ற நினைவை மாத்திரம் தயைசெய்து மாற்றிக்கொள். உனக்கு என்னைக் கட்டிக்கொள்ள இஷ்டமில்லா விட்டால் கூட அக்கறை இல்லை. நான் உன்னை வற்புறுத்த வில்லை—என்றார்.

அவர் அவ்வாறு திடீரென்று தனது கலியாண விஷயத்தைப் பற்றிய பிரஸ்தாபத்தை எடுப்பாரென்று கோகிலாம்பாள் சிறிதும் எதிர்பார்த்தவளன்றாதலால், அதற்கு தான் என்ன மறுமொழி கூறுவதென்பதை யறியாது தத்தளித்தாள். அவர் தமது சுய நலத்தைக் கருதாமல், தனது நன்மையையும் தங்கள் குடும்பத் தின் கண்ணியத்தையும் கருதியே அவ்வாறு பேசுகிறாரென்ற அபிப் பிராயம் அவளது மனத்தில் தோன்றியதானாலும், அந்த விஷயத் தில் பிறர் எவ்வித அபிப்பிராயங் கொண்டாலும், அதனால் தங் களுக்கு எத்தகைய கெடுதல்கள் உண்டாவதானாலும், தான் கண்ண பிரானைக் கலியாணம் செய்துகொள்ளும் விஷயத்தில் தனது தீர் மானத்தை வேறாக மாற்றுவது நியாயமல்ல என்ற முடிவு சிறிதும் தளர்வுறாமல் உறுதியாகவே இருந்தது. ஆனால், தான் மற்ற வர்களிடம் அதைப்பற்றி எதிர்வாத மாடுவது அநாவசியமான வேலையென்று அவள் எண்ணியதன்றி, தான் மற்றவரது மனம் கோணாதபடி அந்த விவாதத்தைத் தடுத்துவிட வேண்டுமென்ற நினைவோடு அந்தப் பெண்மணி மிருதுவான குரலில் பணிவாக வும் அடக்கமாகவும் பேசத்தொடங்கி, "இப்போது எங்களுடைய எண்ணமெல்லாம் சீர்குலைந்து போயிருப்பது தங்களுக்குத் தெரி யாததல்ல. எங்களுடைய மனசெல்லாம் தாமரை இலைத் தண்ணீர் போலத் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சமயத்தில்

நாம் கலியாண விஷயத்தைப் பற்றிப் பேசுவது உசிதமல்ல. நமக்கு ஏற்பட்டுள்ள இடர்களெல்லாம் ஒரு விதமாக நீங்கட்டும். அதன் பிறகு கலியாணம் முதலிய சந்தோஷ விஷயங்களைப்பற்றி யோசித்துக்கொள்ளலாம். தாங்களும், தங்கள் தங்கைச்சியாரும் அதிக தூரத்தில் இல்லை; கிட்டதானே இருக்கிறீர்கள். உங்களுடன் கலந்து யோசிக்காமலா மறுபடி கலியாணக் காரியமெல்லாம் நடக்கப்போகிறது. அதையெல்லாம் பிறகு நாம் சாவதானமாய்ப் பேசிக் கொள்ளலாம். இப்போது அதற்கு அவசரம் ஒன்றுமில்லை" என்று நிரம்பவும் விநயமாகவும் பணிவாகவும் கூறினாள்.

அவள் தந்திரமாகவும் தமக்கு இடங்கொடுக்காமலும் மறு மொழி கூறித் தப்பித்துக்கொள்ள நினைக்கிறாள் என்பதை எளிதில் உணர்ந்து கொண்ட சுந்தரமூர்த்தி முதலியார். "என்ன கோகிலம்! கலியாண விஷயம் ஆயுசுகால பரியந்தம் நம்முடைய க்ஷேமலாபங்களையும், சந்தோஷ வாழ்க்கையையும், நாமடைய எண்ணும் இன்பத்தையும், நமது பெருமைப் பாட்டையும், கண்ணியத்தையும் பாதிக்கக்கூடிய ஜீவாதாரமான விஷயம். நானோ இந்த உலகத்தில் உன்னையன்றி வேறே எவளையும் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை யென்ற தீர்மானத்துக்கு இப்போது வந்துவிட்டேன். உன் தாயாரும் நீயும் கண்ணபிரான் முதலியாரை நீ கட்டிக் கொள்வதென்று ஏற்கெனவே முடிவாகிவிட்டது பற்றி என்னைக் கட்டிக்கொள்ள இயலவில்லை யென்றும், அந்த ஏற்பாடு நடந்திராவிட்டால், என்னை நீ கட்டிக்கொள்ள ஆக்ஷேபணை இராதென்றும் சொன்னீர்கள். இப்போது அந்த ஏற்பாடு ரத்தாகிப் போன மாதிரியே இருப்பதால், அடுத்தபடியாக நீ என்னையே கட்டிக்கொள்ள இணங்கவேண்டியது நியாயமாகையால், இந்தச் சமயத்தில் நான் இந்தப் பிரஸ்தாபத்தை உன்னிடம் செய்தேனேயன்றி வேறொன்றுமில்லை. இப்போது உங்கள் மனநிலைமை சரியாக இல்லையென்பது எனக்குத் தெரியும். ஆனாலும், நீயும் நானும் தனிமையில் பேசி, ஒருவருக்கொருவர் நம்முடைய அந்தரங்கமான எண்ணத்தையும் உணர்ச்சியையும் வெளியிட்டுக் கொள்வதற்குத் தகுந்த சந்தர்ப்பம் இனி வாய்க்குமோ என்னவோ தெரியவில்லை. ஆகையால், இந்த விஷயத்தைப் பற்றி நான் பேசுவது உனக்கு ஓரளவு துன்பகரமாக இருந்தாலும், அதை நீ பொருட்படுத்த மாட்டாயென்று நம்பியே நான் இதைக் குறித்துப் பேச ஆரம்பித்தேன். அதுவுமன்றி, இந்தச் சந்தர்ப்பத்

தில் நாமெல்லோரும் சேர்ந்து கண்ணபிரான் முதலியாரை விடுவிக்கவும், அவருடைய தாயாரைத் தேடிப் பிடிக்கவும் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோமானாலும், அவரை நீ கட்டிக்கொள்வதா இல்லையா என்ற விஷயத்தை நாம் இப்போது தீர்மானித்துக்கொண்டால்தான், அதற்குத் தகுந்தபடி நாம் எவ்வளவு தூரம் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதை நிச்சயித்துக்கொள்ளலாம். அவர்கள்பேரில் ஏற்பட்டிருக்கும் அவதூறு நிஜமாக முடிந்தாலும் பொய்யாக முடிந்தாலும் எந்த வகையிலும் நீ அவரையே கட்டிக்கொள்வது என்கிற உறுதி உனக்கிருக்குமானால், நாம் அவருக்குச் செய்கிற உதவி ஒரு மாதிரியாக இருக்கும்; இனி நீ அவரைக் கட்டிக்கொள்வதில்லை, பரோபகாரத்தையும் பழைய சிநேகிதத்தையும் கருதி மாத்திரம் நாம் அவருக்கு உதவி செய்கிறதென்றால், அப்போது உதவி வேறு மாதிரியாக இருக்கும். நாம் நம்முடைய நெருங்கின உறவினருக்குச் செய்யும் உதவியும், ஜீவகாருண்யத்தை உத்தேசித்து அந்நியருக்குச் செய்யும் உதவியும் ஒன்று போலவே இருக்குமா? ஒருநாளுமில்லை. எப்பேர்ப்பட்ட மனிதர்களாயிருந்தாலும், இரண்டு வகையிலும் வித்தியாசம் அவசியம் இருக்கும். ஆகையால், அவருக்கும் நமக்கும் இனி ஏற்படப் போகும் பாந்தவ்வியம் எவ்வளவு என்பதை நாம் தீர்மானிப்பதற்கு இதைத்தவிர வேறு தகுதியான சந்தர்ப்பம் உண்டாகப் போகிறதில்லை. இப்போது உன்னுடைய மன நிலைமை சரியாக இருக்கிறதோ இல்லையோ, இந்த விஷயத்தை நீ எப்படியும் இப்போது முடிவு கட்டியே தீர்க்கவேண்டும். எனக்கும் இதில் முக்கியமான பாத்தியம் இருக்கிறதாகையால், நான் உன்னிடம் இவ்வளவு அதிகமாய் உரிமை பாராட்டிப் பேசுகிறேன். அவரை நீ கட்டிக்கொள்ளப்போகிறதில்லையென்றால், அப்போது நீ என்னைக் கட்டிக்கொள்ள ஒப்புக்கொண்டவளாக இருக்கிறாய். நான் உனக்குப் புருஷன் ஆகப்போகிறவன் என்கிற உரிமையில் இந்த விஷயத்தைப் பற்றிப் பேச எனக்குச் சுதந்திரம் ஏற்படுகிறது. நீ என்னைக் கட்டிக்கொள்ள இணங்கவில்லையானால், அப்போது நான் உன் தங்கையைக் கட்டிக்கொள்ளப் போகிறவனென்கிற உரிமையில், நான் இதைப் பற்றிப் பேச எனக்கு நீ சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். நான் சொல்வது தெரிந்ததா?" என்று நிரம்பவும் உருக்கமாகவும் வற்புறுத்தியும் கூறினார்.

கோகிலாம்பாள் மிருதுவாகவும் பணிவாகவும் மறுமொழி கூறத்தொடங்கி, "நான் அறியாத சிறு பெண்; இந்த விஷயம் நிரம்பவும் முக்கியமானது. வீட்டிற்குப் பெரியவர்களான என் தாயார் இருக்கிறார்கள். அவர்கள்தான் இந்த விஷயங்களையெல்லாம் தீர்மானிக்கவேண்டும். தாங்கள் சாவகாசமாய் எங்களுடைய பங்களாவுக்கு வந்தால், இந்த விஷயங்களைப் பற்றித் தாங்கள் அவர்களோடு நன்றாகக் கலந்து பேசிக்கொள்ளலாம். தாங்கள் பிரஸ்தாபிக்கும் விஷயத்தில் எவ்வித அபிப்பிராயமும் தெரிவிக்க எனக்கு இப்போது புத்தியும் சரியாக இல்லை; சுதந்திரமுமில்லை. நான் தங்கள் மனப் போக்குக்கு மாறாகப் பேசுகிறேனென்று மன வருத்தம் வைக்கவேண்டாம். தங்களுக்குக் கீழ்ப் படியாமல் நான் நடந்துகொள்வதாகவும் தாங்கள் கருதக் கூடாது," என்று நிரம்பவும் இறைஞ்சிக் கூறினாள்.

சுந்தரமூர்த்தி முதலியார் முன்னிலும் பன்மடங்கு அதிக மன இளக்கமும் உருக்கமும்காட்டி "என்ன கோகிலம்! இப்படி நீ எதற்கும் பிடி கொடாமல் பேசினால், நான் உன்னை என்ன செய்யமுடியும்? தானாகக் கனியாததைத் தடிகொண்டடித்துப் பழுக்க வைத்தால் அது எவ்வளவு சுகமாயிருக்குமென்பதை நான் உனக்குச் சொல்ல வேண்டியதில்லை. இப்போது உனக்குச் சிப்பாயிகளால் நேர்ந்த அபாயத்திலிருந்து உன்னை நான் விடுவிக்காமல், அந்தக் கண்ணபிரான் முதலியார் விடுவித்திருந்தால், நீ அவரிடம் நடந்து கொள்வது வேறு மாதிரியாக இருக்குமென்பது நிச்சயம். எதற்கும் மனசுதான் காரணம்; அந்த மனசு மனிதருக்கும் மனிதர் வித்தியாசம் பாராட்டும் சுபாவமுடையது. ஒரு மனிதரிடத்தில் ஆயிரம் பிழைகளும் ஊழல்களும் இருந்தாலும், ஸ்திரீகளுக்கு மனசில் ஒரு பிரியம் ஏற்பட்டுப் போகுமானால், அத்தனையும் அத்தனை அழகுகளாகத் தோன்றும். வேறொரு மனிதன் அந்த மனிதனைவிடச் சகலமான அம்சங்களிலும் மேம்பட்டவனாயிருந்தாலும், அதையெல்லாம் இந்த மனசு சட்டைசெய்கிறதில்லை. இது உலக இயல்பு. அதற்கு ஒத்தபடியேதான் நீ நடந்து கொள்ளுகிறாய். நான் உன்னை நினைத்து நினைத்து என் உயிரையே விட்டுக்கொண்டிருக்கிறேன். உனக்காக நான் என் உடல் பொருள் ஆவி ஆகிய எல்லாவற்றையும் கொடுத்துதவவும் எப்போதும் ஆயத்தமாயிருக்கிறேன். அந்தக் கண்ணபிரான் முதலியாரிடம் இருக்கும் இன்ன மேம்பாடு என்

னிடம் இல்லையென்று நீ எடுத்துக் காட்டுவாயானால், நான் அதையும் உன் முடிவான தீர்மானத்தையும் ஏற்றுக் கொள்ளுகிறேன். என் விஷயத்தில், உன் மன வுணர்ச்சி இன்ன மாதிரிதான் இருக்கிறது என்பதைப் பற்றிக் கடுகளவாவது நீ ஒரு கோடி காட்டாமல் மையமாகவும் சாமர்த்தியமாகவும் பேசுவதும் சரியல்ல. உன் தாயார் முதலிய பெரியோர் இந்த விஷயத்தை ஒருவிதமாக முடிவு கட்டவேண்டுமென்பது ஒருவிதத்தில் உண்மையாக இருந்தாலும் அவர்களுடைய முடிவு உன்னுடைய மன உணர்ச்சியையும் அபிப்பிராயத்தையும் அநுசரித்ததாக இருக்குமேயன்றி, வேறு மாதிரியாக ஒரு நாளும் இராது. ஆகையால், நீ எல்லாப் பொறுப்பையும் உன் தாயார்மேல் போட்டு, உனக்கு அதில் எவ்வித சம்பந்தமுமில்லாதது போலப் பேசுவதை நீ மனப்பூர்வமாகப் பேசுவதாய் நான் எப்படி ஒப்புக் கொள்ளுகிறது" என்று கூறினார்.

அந்தச் சமயத்தில் அவரது வேலைக்காரிகளுள் ஒருத்தி வந்து "காசாரி மினியன் பலமாகக் குடித்துவிட்டுப் பிணம்போலக் கிடக்கிறான். அவனை நான் கோலால் தட்டிக்கூடப் பார்த்துவிட்டேன். அவன் இப்போது எழுந்திருப்பவனாகத்தோன்றவில்லை. இரவு எட்டு, அல்லது, ஒன்பது மணிக்குத்தான் எழுந்திருப்பானென்று மற்றவர்கள் சொல்லுகிறார்கள்" என்றாள். அவள் கூறியதைக் கோகிலாம்பாளும் கேட்டுக்கொண்டே இருந்தாளாகையால் சுந்தரமூர்த்தி முதலியார் "என்ன கோகிலம்? வேலைக்காரி சொன்னதைக் கேட்டாயா? மினியன் வண்டி ஓட்டி உன்னை உன்னுடையபங்களாவுக்கு அழைத்துப் போவதாகத் தோன்றவில்லை" என்றார்.

அதைக் கேட்டவுடன் கோகிலாம்பாளின் மனம் தவித்தது. தங்களது வேலைக்காரன் வந்த இடத்தில்கூட அவ்வாறு குடித்துவிட்டு வெட்கங் கெட்டுப் படுத்திருக்கிறானே யென்ற எண்ணம் அந்த நற்குணவதியை நிரம்பவும் வதைத்தது. அவன்மீது அவளது மனத்தில் சகிக்கவொண்ணாத ஆத்திரமும் அதிருப்தியும் தோன்றின. அவள் தனது மனவேதனையில் தன்னை மறந்து பேசத்தொடங்கி, "இவன் எங்கேபோனாலும் தன்னுடையபெருமையைக் காட்டாமல் இருக்கிறதில்லை. இவர்களை விட்டாலும், நமக்குக் காரியம் ஆகிறதில்லை. இன்று காலையில் எனக்கு நேர்ந்த அபாயமும் இவனால் நேர்ந்ததென்றே நினைக்கிறேன். காலையிலும் இவன்

குடி மயக்கத்தினால் தன்னை மறந்து வண்டியை நேராகப் புரசைப் பாக்கத்திற்கு ஓட்டிக்கொண்டு போவதை விட்டு கோட்டைக்குத் தெற்கே ஓட்டிக்கொண்டு வந்து என்னை வழியில் வண்டியோடு இருக்கவிட்டு, இறங்கி எங்கேயோ போய்விட்டான். அவன் இந்தத் திக்கில் வந்திராவிட்டால், நம்மெல்லோருக்கும் இத்தனை உபத்திரவங்கள் நேரவே ஏதுவில்லாமல் போயிருக்கும்" என்றாள்.

சுந்தரமூர்த்தி முதலியார், "ஆம். நீ சொல்வது வாஸ்தவந்தான். எந்த இடத்திலும் காசாரிகள் அநேகமாய் ஒரே மாதிரியாகத்தானிருக்கிறார்கள். எனக்கு நான்கு காசாரிகள் இருக்கிறார்கள். மற்றவர்கள் மொந்தைகளைத் தம்முடைய வயிற்றுக்குள் போகவிட்டால், என் காசாரிகள் தாங்களே எப்போதும் கள் பானைக்குள் முழுகி ஸ்நானம் செய்துகொண்டே இருப்பார்கள். ஆனால், ஒரு காரியம். அவர்கள் எவ்வளவுதான் குடித்திருந்தாலும், தங்களுடைய நிதானம் மாத்திரம் தவறவிடமாட்டார்கள்; காரியத்திலும் ஏமாறமாட்டார்கள். ஏன் உங்கள் மினியனும் அவ்வளவு கெட்டவனாகத் தோன்றவில்லை. அவன் என்னிடம் வந்து பேசியபோது, தான் புரசைப்பாக்கம் போக எண்ணி வண்டியை மேற்கு திக்கில் ஓட்ட உத்தேசித்து இடையில் இருந்த இரண்டொரு ரஸ்தாக்கள் பழுது பார்க்கப்படுவதால் அடைபட்டுப் போயிருப்பதைக் கண்டு இன்னம் கொஞ்சதூரம் தெற்காக வந்து அடுத்த ரஸ்தாவின் வழியாய்ப் போக உத்தேசித்து இப்பால் வந்தானாம். வரும்போது திடீரென்று அடி வயிற்றில் ஏதோ சங்கடம் உண்டாயிற்றாம். பிறகு கொஞ்ச நேரத்தில் அவனுக்குக் கிறுகிறுப்பும் மயக்கமும் உண்டாகிவிட்டனவாம். அதன் பிறகு வண்டி இன்ன இடத்துக்குப் போனதென்பதே தெரியாமல் போய்விட்டதாம். அந்த நிலைமையில், கீழே இறங்கி வெளியில் போய்விட்டு வரவேண்டும்போல இருந்ததாம். வண்டியைப் பாலத்திற்குமேல் நிறுத்திவிட்டுப் போனானாம்; போய் அரை நாழிகை கழித்துவந்து பார்த்தானாம், வண்டி காணப்படவில்லையாம். அப்போது, அவனுக்கு அறிமுகமான மனிதன் எவனோ வடக்கு திக்கிலிருந்து வந்தானாம். அந்தத் திக்கில் பெட்டி வண்டி எதுவும் போகவில்லையென்று அவன் சொன்னானாம். அதன்மேல் இவன், உன்னுடைய வண்டி தெற்கு திக்கில்தான் போயிருக்க வேண்டுமென்று எண்ணி ஒரே ஓட்டமாக ஓடி நல்லவேளையாக என்னு

டைய பங்களாவுக்கு வந்து சேர்ந்து விஷயத்தைச் சொன்னான். நாங்கள் உடனே புறப்பட்டுத் தெற்கே ஓடிவந்தோம். மற்ற விவரமெல்லாம் உனக்கே தெரியும். இன்று காலையில் மினியன் குடித்து மயங்கி இருந்ததாக எண்ண ஏதுவில்லை. அவன் சொல்லும் வரலாறு உண்மையாகவே இருக்கலாம். எல்லாருடையதும் மனித தேகந்தானே. தேக பாதை என்பது எல்லோருக்கும் எந்த நிமிஷத்திலும் நேரக் கூடியதுதானே. ஒரு மனிதன் ஒரு சமயத்தில் ஒரு தவறு செய்கிறானென்பதைக் கொண்டு அவன் எப்போதும் தவறையே செய்கிறவன் என்று நாம் தீர்மானித்துக்கொள்வது தர்மமாகாது. காலையில் நடந்த தவறு தற்செயலாக நடந்ததென்றே நாம் எண்ண வேண்டும். இப்போது மினியன் கள் குடித்ததற்கு நானே உத்தரவாதி என்று சொல்லவேண்டும். இவன் உன்னுடைய காசாரியாகையால், நான் உன்மேல்வைத்துள்ள அபாரமான வாத்ஸல்யம் இவன் பக்கத்திலும் கொஞ்சம் திரும்பியது. அதனால் இவனுக்கு நான் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்று இனாம் கொடுத்தேன். இவர்களிடம் பணம் கிடைத்தால்தான், உடனே கள்ளுக்கடையைப் பற்றிய நினைவைத் தவிர வேறு எந்த நினைவும் உண்டாகிறதில்லையே. இவன் உடனே நேராக அங்கே போய்விட்டு வந்திருக்கிறான். இவனுக்கு இன்னொரு நினைவும் இருந்திருக்கலாம். ஐயா அம்மாளிடம் இவ்வளவு ஆசையாக இருக்கிறாராகையால், அம்மாள் சீக்கிரமாக இந்த இடத்தை விட்டுப் போய்விடமாட்டார்களென்று நினைத்துத் தான் கொஞ்சம் மயங்கி பிரம்மாநந்த நிஷ்டையில் இருக்கலாமென்று எண்ணினான்போலிருக்கிறது. நீ இங்கே இருக்கப் பிரியப்படாமல் அவசரப்பட்டு இப்படிப் பறப்பாயென்று இவன் எண்ணவேயில்லை. அந்த விஷயத்திலும் இவன் என்மேல் கொஞ்சம் மதிப்புடையவன் என்றே நான் எண்ணுகிறேன். அதிருக்கட்டும். மினியன் பாலத்தண்டையில் உன்னை வண்டியோடு விட்டுப் போனானே; அதன் பிறகு உன் வண்டியை யார் ஓட்டிக்கொண்டு மயிலாப்பூருக்கு அப்பால் வரையில் போனது? அவ்வளவு தூரம் வரையில் நீ ரஸ்தாவைக் கவனிக்காமலா இருந்தாய்?" என்றார்.

உடனே கோகிலாம்பாள், "நான் வண்டியில் வந்தபோது என் மனம் எதையோ நினைத்து வேதனைப் பட்டுக்கொண்டிருந்தது. நான் வழியைக் கவனிக்கவில்லை. மினியன் திடீரென்று வண்டியைநிறுத்தி விட்டு, தனக்கு அடி வயிறு நோகிறதென்றும், பாலத்தடிக்குப்

போய்விட்டு வருகிறேனென்றும் சொல்லிவிட்டுப் போனது என் காதில் விழுந்தது. உடனே ஐந்து நிமிஷத்தில் அவன் திரும்பிவந்த மாதிரி இருந்தது. வந்த மனிதன் இவனைப்போலவே சட்டை நிஜார் தலைப்பாகையெல்லாம் அணிந்து கொண்டிருந்தான். மினியன்தான் திரும்பி வந்து வண்டியை ஒட்டிக்கொண்டு போகிறானென்று நான் நினைத்து, வேறே எதிலேயோ என் கவனத்தைச் செலுத்தியபடி இருந்துவிட்டேன். கடைசியில் வண்டி நின்றது. கதவு திடீரென்று திறக்கப்பட்டது. நாலைந்து முரடர்கள் குபீரென்று பாய்ந்து என்னைத் தூக்கிக்கொண்டு கடற்கரைக்குள் ஓடினார்கள். ஓடி என்னைக் கட்டவும் மானபங்கப் படுத்தவும் எத்தனித்தார்கள். நான் அரைநாழிகை நேரம் வரையில் திமிறினேன். அதற்குள் தெய்வம் போலத் தாங்களும் மற்றவர்களும் வந்து என்னை விடுவித்தீர்கள்." என்றாள்.

அந்த வரலாற்றைக் கேட்ட சுந்தரமூர்த்தி முதலியார் மிகுந்த வியப்பும் அநுதாபமும் தோற்றுவித்து, "அப்படியா சங்கதி! இதெல்லாம் வேளையின் கூறென்றுதான் சொல்லவேண்டும். இல்லாவிட்டால், மினியனுக்கு உடப்பு சரியில்லாததனால் அவன் வழிதப்பி உங்கள் வண்டியைக் கடற்கரைப் பாலத்தண்டை கொண்டுபோய் நிறுத்திவிட்டு இறங்கிப் போவதும், அதே சமயத்தில் இந்தத் துஷ்ட சிப்பாயிகள் அங்கே வந்து நீ தனியாக வண்டியில் இருந்ததைக் காண்பதும் எப்படி ஒத்துக்கொண்டிருக்கும். இந்தச் சிப்பாயிகள் பீட்டன் வண்டியில் உட்கார்ந்துகொண்டு எங்கேயோ போவதற்காக அந்த வழியாக வந்திருக்கிறார்கள்; நீ தனியாகப் பெட்டிவண்டியில் இருந்ததைக் கண்டிருக்கிறார்கள், குடிவெறியில், தங்களை மறந்து தங்களுடைய வண்டியை ஒட்டிக் கொண்டு வந்த காசாரியை விட்டு, உன் வண்டியை முன்னால் ஒட்டிக்கொண்டு போகச் செய்து, தாங்கள் பின்னால் பீட்டன் வண்டியில் தொடர்ந்து வந்து மயிலாப்பூருக்கு அப்பால் போனவுடனே, உன்னிடம் பலாத்காரமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். என்னவோ பொல்லாத வேளையின் பலனாக உனக்கு இந்த அபாயம் நேர்ந்ததானாலும், முடிவில் உன் மானத்துக்கும் தேகத்திற்கும் எவ்வித களங்கமுமில்லாமல் எல்லாம் வல்ல இறைவன் உன்னைக் காப்பாற்றிவிட்டார். இதிலிருந்து தெய்வத்தின் கருணா நோக்கம் உன்மேல் பூர்ணமாக இருக்கிறதென்பது நிச்சயம். ஆனால், தெய்வம் எந்த அற்பக் காரியத்தையும் அநாவசியமாகச் செய்து காட்டுகிறதில்லை. ஒவ்

வொரு சம்பவத்தையும் காட்டி அதன்மூலமாய் எத்தனையோ பெரிய பெரிய காரியங்களைக் கொணர்ந்து பிணைப்பது அவருடைய இயற்கை. அதுபோலவே, ஏதோ பெருத்த உள்கருத்தை வைத்துக்கொண்டே அவர் இந்தப் பயங்கரமான சம்பவத்தைக் காட்டி விலக்கி இருக்கிறார். இந்தச் சம்பவத்தினால் உனக்கு அதிக கெடுதலாவது நீடித்த துன்பமாவது நேர்ந்து விடவில்லை. இதற்குமுன் ஒருவரோடொருவர் பேசிப் பழகாத நாம் இப்படி நெருங்கிப் பேசவும், ஒருவர் மனதை மற்றவர் நன்றாக அறியவும், இதற்குமுன் என்னைப்பற்றி நினைத்தே இராதவளான நீ என் விஷயத்தில் ஒரு விதமான அன்பும் பட்சமும் கொள்ளவும் இந்தப் பயங்கரமான சம்பவம் செய்ததே பிரத்தியக்ஷமான பலன். இதிலிருந்து கடவுளின் கருத்து இன்னதென்பதை நீ உன் பகுத்தறிவினாலும் யூகத்தினாலும் சுலபத்தில் தெரிந்துகொள்ளலாம். 'இந்த உலகத்தில் நீ சிநேகிதராகப் பாவித்துப் பட்சமாகவும் பிரியமாகவும் நடத்தக்கூடிய மனிதர் ஒருவர் இருக்கிறார். அவருடைய அருமையையும் நற்குணத்தையும் நீ இதன் மூலமாகத் தெரிந்துகொண்டு அவரிடம் பிரியமாக இரு. தான் கண்ட முயலுக்கு மூன்றேகால் என்று பிடிவாதம் பிடிக்காதே. முதலில் நீ தெரிந்துகொண்ட மனிதர்கள் நிகரற்றவர் என்று எண்ணாதே. அவரைவிடச் சகலமான அம்சங்களிலும் மேலானவர்களும், நீ ஆசைவைக்கக்கூடியவர்களும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களுள் உனக்குத் தக்க யோக்கியமான மனிதரை இதோ காட்டுகிறேன் பார்" என்று கடவுள் உனக்கு எடுத்துக் காட்டி என் சிநேகத்தை உனக்குச் செய்துவைக்கிறாரென்றே நீ எண்ணிக் கொள்ளவேண்டும். அதுவுமன்றி, கடவுள் தமது பேரருளினால் உனக்குக் காட்டிய பொருளை இவ்வளவோடு அசட்டை செய்து விலக்கி விடாமல், அதையே உன்னுடைய ஜீவதனமாகக் கொள்ளவேண்டுமென்பதையும் நீ இதிலிருந்து உணர்ந்து கொள்ளவேண்டும். நீ அறியாத முட்டாளல்ல; நல்ல விவேகி. உனக்கு நான் அதிகமாய் எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமே இல்லை" என்றார்.

அதைக் கேட்ட கோகிலாம்பாள் அவருக்கு எவ்விதமான மறுமொழி தருவதென்பதை யறியாமல் சிறிதுநேரம் தயங்கியபின் வேலைக்காரியை நோக்கி, "மினியன் இருக்கும் நிலைமையில், அவன் இன்று எனக்கு உபயோகப் படுவானென்று நான் நினைக்கவில்லை.

வேறே இவ்விடத்துக் காசாரி எவனையாவது கொஞ்ச நேரம் என்னோடு அனுப்ப முடியுமானால், தயை செய்து அப்படியாவது செய்தால் நலமாயிருக்கும். மனிதனுடைய குடி மயக்கம் தெளிகிறவரையில் நான் இங்கேயிருப்பது பலவகையில் எங்களுக்கு அசௌகரியமாக முடியும்" என்று நயமாகவும் பணிவாகவும் கூறினாள்.

அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி முதலியார் வேலைக்காரியை நோக்கி, "கெங்கம்மா! நீ போய் வண்டியைத் தயார்படுத்தும்படி நம்முடைய காசாரி வீரப்பனிடம் சொல்லிவிட்டு சீக்கிரமாக வா. அம்மாள் தனியாக இருக்கிறார்கள். இன்னொருத்தி தண்ணீர் குடிக்கப் போனவள் இன்னமும் வரவில்லையே!" என்று கூற, அதைக் கேட்டுக்கொண்டே கெங்கம்மாள் அவ்விடத்தை விட்டு அப்பால் சென்றாள். சுந்தரமூர்த்தி முதலியார் மறைவிலிருந்தபடி கெங்கம்மாளுக்குச் சைகை காட்டி, கொஞ்சநேரம் பொறுத்துத் திரும்பி வரும்படி ஊமை ஜாடையாகத் தெரிவித்தார். அதைத் தெரிந்து கொண்டு அந்த வேலைக்காரி அப்பால் போய்விட்டாள்.

உடனே சுந்தரமூர்த்தி முதலியார் மறுபடி கோகிலாம்பாளுடன் சம்பாஷிக்கத்தொடங்கி, "என்ன கோகிலம்! நீ வீட்டுக்குப் போக வேண்டுமென்ற அவசரத்திலேயே இருக்கிறாயேயன்றி, நான் கேட்டதற்கெல்லாம் சரியான உத்தரம் சொல்லமாட்டேனென்கிறாயே! அந்த மனிதரிடம் எவ்வளவு கெடுதலிருந்தாலும், அவருடைய விஷயத்தில் மாத்திரம் உனக்கு மாறாத பிரியம் ஏற்படவும், என்னிடத்தில் எவ்வளவு மேம்பாடு இருந்தாலும், என் விஷயத்தில் உன் மனம் கொஞ்சமும் பற்று என்பதையே கொள்ளாமலும் எள்ளளவும் ஒட்டாமலும் இருக்கவும், அவர் என்ன புண்ணியந்தான் செய்தாரோ, நான் என்ன பாவந்தான் செய்தேனோ தெரியவில்லை. கோகிலம்! ஏன் நீ இப்படிக் கொஞ்சமும் இரக்கமற்றவளாயும் உண்மையான பிரியம் இல்லாதவளாகவும் இருக்கிறாய்? உன் மனதை விட்டு உண்மையைத்தான் சொல்லலாகாதா?" என்று நிரம்பவும் வருந்தி தாபந்திரியமாய்க் கூறினார்.

அதைக் கேட்ட கோகிலாம்பாள், "தாங்கள் பிரஸ்தாபிக்கிற விஷயம் அற்ப சொற்பமான விஷயமல்ல. நானோ அறியாத சிறிய பெண். இதைக் குறித்து நான் ஏதாவது சொல்ல ஆரம்பித்தால் அது ஒரு வேளை தப்பாகமுடியும். இப்பேர்ப்பட்ட விஷயங்களையெல்

லாம் வீட்டிலுள்ள பெரியவர்கள் பேசிமுடிவு செய்வதே ஒழுங்கான காரியம். அதைப் பற்றியே நான் இந்த விஷயத்தை என் தாயாரிடம் பிரஸ்தாபிக்கும்படி சொன்னேன். என்னுடைய மன உணர்ச்சி எப்படி இருக்கிறதென்பதைச் சொல்ல வேண்டுமென்று தாங்கள் கேட்கிறீர்கள். என்னுடைய இப்போதைய நிலைமை பரம சங்கடமானதாக இருக்கிறது. என்னுடைய தாயாரிடம் தாங்கள் இதைப் பற்றிக் கேளுங்கள் என்று நான் மறுபடியும் சொன்னாலும், தங்கள் மனம் ஆயாசமடையும் போலிருக்கிறது. நான் என் மன உணர்ச்சியை எடுத்துச் சொல்வதென்றால், அதுவும் தங்களுக்கு அவசியம் வருத்தத்தை உண்டாக்கும். நான் உண்மையைப் பேச வேண்டுமேயன்றி, பொய்யைச் சொல்லித் தங்களை வஞ்சிப்பது பரமபாதகமான செய்கை. ஆகையால் நான் இருதலைக் கொள்ளி எறும்பைப்போல் எந்த வழியிலும் போகமாட்டாமல் தவிக்கிறேன்." என்று நிரம்பவும் பணிவாகவும், அன்பாகவும், உருக்கமாகவும் கூறினாள்.

அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி முதலியார் இன்பமும் துன்பமும் அடைந்தவராய், "சரி; எப்படியாவது இருக்கட்டும். உன் மனசிலுள்ளதை நான் உன் தாயார் மூலமாய்க்கேட்டுப்பின்னால் தெரிந்து கொள்வது நிரம்பவும் சிலாக்கியமான வேலை. நான் இதுவரையில் வைத்திருந்த தப்பான எண்ணம் இன்னமும் அநாவசியமாக நீடித்திருந்து என்னை வதைத்துக் கடைசியில் ஏமாற்றத்தில் முடிவதைவிட, இப்போதே அது பயனற்றது என்று நான் கண்டு என்னைத் தேற்றிக்கொள்ள முயற்சிப்பது நல்லதல்லவா. ஆகையால், நீ உன் அந்தரங்கமான நினைவை மறக்காமல் சொல்லிவிடு. ஆனால் அப்படி நீ சொல்வது என் எண்ணத்திற்குப் பிரதிகூலமானதாயிருக்குமானால் அதனால் நான் உன்னிடம் வைத்திருக்கும் வாஞ்சையும் மதிப்பும் எவ்வளவு குறைந்து போகுமென்று நீ நினைக்கவே வேண்டாம். நான் உன்மேல் ஆதியில் வைத்த ஆழ்ந்த பிரியம் என் கட்டையோடுதான் போகும்." என்று நிரம்பவும் மனதுருகி இறைஞ்சிக் கூறினார்.

கோகிலாம்பாள் தன்னிடம் அவ்வளவு அபாரமான பிரியமும் பிரேமையும் கொண்டுள்ள மனிதரது மனதை முறித்துவிடத்தக்க சொற்களைத் தான் வெளியிடவேண்டுமே என்ற நினைவினால் முற்றிலும் கலங்கி வருந்தித் தத்தளித்து மிருதுவாகவும் இளக்கமாகவும் பேசத்தொடங்கி, "தாங்கள் என்னை வற்புறுத்திப் பேசச் சொல்லி

தங்களுடைய நல்லமனசைக்கெடுத்துக்கொள்ள எத்தனிக்கிறீர்கள். தாங்கள் இன்று எனக்குச் செய்த உதவியின் பெருமையென்ன! தாங்கள் என் விஷயத்தில் வைத்துள்ள பிரியமென்ன! மதிப்பென்ன! அவைகளுக்கு ஒத்தபடி நடந்துகொள்ளக் கூடாத நிலைமையில் நான் இருக்கிறேனே என்பதைப் பற்றித்தான் என் மனம் அப்போது முதல் துடித்துக்கொண் டிருக்கிறது. எங்கள் குடும்பத்தில் ஆண்மக்கள் யாருமில்லை யென்பது தங்களுக்குத் தெரிந்த விஷயம். எங்கள் தகப்பனார் ஏராளமான சொத்துக்களைத் தேடிவைத்துவிட்டு, காலத்திற்குமுன் இறந்துபோய்விட்டார்கள். அவ்வளவு பெரிய சொத்தை வைத்துக்கொண்டு நிர்வகிக்க எங்களால் ஆகவில்லை. ஆகையால் எனக்கும் என் தங்கைக்கும் ஏற்படும் புருஷர்களுடைய தயவையே நாங்கள் நாடவேண்டிய நிலைமையி லிருக்கிறோம். பெரிய பணக்காரர்வீட்டுப் பிள்ளைகளுக்கு வாழ்க்கைப் பட்டால், அவர்கள் எங்களுடைய வீட்டில் வந்திருந்து எங்கள் சொத்தை நிர்வகிக்க இணங்கமாட்டார்களென்று நினைத்து நான் சாதாரணமான குடும்பத்திலுள்ள ஒருவரைக் கட்டிக்கொள்வதென்ற தீர்மானத்திற்கு என் தாயார் வந்தார்கள். எனக்கும் அது சம்மதமா யிருந்தது. ஆனால், என் தங்கை அதற்கு இணங்கவில்லை. அவள் தக்க பெரிய இடத்தில் தன்னை வாழ்க்கைப் படுத்தவேண்டு மென்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டாள். இந்தச் சந்தர்ப்பத்தில் தெய்வம் உங்கள் இருவரையும் எங்கள் குடும்பத்திற்கு அறிமுகம் செய்துவைத்தது. என்னுடைய எண்ணப்படி எனக்கு ஓர் இடம் ஏற்பட்டது. என் தங்கையின் இஷ்டப்படி அவளுக்கு இந்த இடம் ஏற்பட்டது. என்னை இந்த இடத்தில் கொடுப்பதென்ற தீர்மானத்தின்மேல், அவர்களுக்கும் நாங்கள் வாக்குக் கொடுத்துவிட்டோம். நிச்சயார்த்தம் வரையில் எல்லா ஏற்பாடுகளும் முடிந்து போயின. கடைசியில் ஏதோ பொல்லாத வேளையினால் அவர்களுக்கு இப்படிப்பட்ட இடைஞ்சல்கள் நேர்ந்துவிட்டன. அவை எப்படி முடியுமோ வென்பதும் நமக்குத் தெரியவில்லை. இந்த நிலைமையில் நாங்கள் திடீரென்று அவர்களை மறந்து, இதுவரையில் செய்த ஏற்பாடுகளை யெல்லாம் மாற்றி, உடனே வேறு கலியாண ஏற்பாடுகளைச் செய்வதென்றால், அதற்கு எங்கள் மனம் உடனே இடங்கொடுக்குமா? தாங்களே யோசித்துப் பார்க்கவேண்டும். அந்த இடந்தான் எனக்குக் கடவுளால் கட்டளையிடப்பட்ட இடம் என்ற நினைவினால், நான் அவர்களோடு பழகிய சொற்ப காலத்திற்குள், அந்த அம்மாளை என் மாமியார்

என்றும், அவர்களுடைய குமாரரை என் பர்த்தாவென்றும் நான் என் மனசால் எண்ணி, அவர்கள் அந்த ஸ்தானங்களுக்கு வந்து விட்டதாகவே எண்ணிக்கொண் டிருந்துவிட்டேன். இப்போதும் அந்த எண்ணம் மாறாமலேயே இருக்கிறது. கலியாணச் சடங்கும், திருமங்கலியதாரணமும் நடக்கவில்லையே தவிர, என் மனசில் நான் அவர்கள்தான் என் பர்த்தாவென்று எண்ணிவிட்டேன்; இன்னமும் அப்படியே எண்ணிக்கொண்டிருக்கிறேன். ஒரு புருஷர் ஒரு பெண்ணுக்குத் தாலி கட்டியபின், அவர் ஏற்கெனவே திருட்டு, கொலை முதலிய பல குற்றங்களைச்செய்திருந்து அவைகளுக்காகத் தண்டனை அடையும் பட்சத்தில், அந்தப் பெண் எப்படி வந்த அவமானத்துக்கும் பழிப்புக்கும் இலக்காக வேண்டுமோ, அதே நிலைமையில்தான் நான் இப்போது இருக்கிறேன். அவர்கள் என்னைத் தொட்டுத் தாலி கட்டவில்லையானாலும், கட்டிவிட்டதாகவே நான் என் மனசால் எண்ணிக்கொண்டுவிட்டேன். ஆகையால் இனி அவர்கள் எவ்வித இழுக்குமில்லாமல் வெளிப்பட்டாலும் நான் அவர்களுக்கே பெண்சாதி; அவர்கள் தண்டனை யடைந்து ஊரார் பழிக்க இழிவான நிலைமையில் வீட்டுக்கு வந்தாலும் அப்போதும் நான் அவர்களுக்கே பெண்சாதி" என்றாள்.

சுந்தரமூர்த்தி முதலியார்:—அவர் உன்னைக் கலியாணம் செய்துக்கொள்ள இஷ்டப்படாமல் வேறே இன்னம்உயர்வான இடம் எதையாவது பார்த்து அங்கே பெண்கேட்டால் உன் கதி என்ன ஆகிறது?

கோகிலாம்பாள்:—அப்படி அவர்களுடைய மனம் மாறுமென்று நான் நினைக்கவே மாட்டேன். அப்படியே தெய்வ சங்கற்பத்தால் அவர்கள் வேறே யாரையாவது கலியாணம் செய்துகொண்டாலும், நான் என்ன செய்கிறது? இப்போது ஒரு புருஷரை ஒரு பெண் சடங்குப்படி கட்டிக்கொள்ளுகிறாள். கொஞ்சகாலத்தில் புருஷர் அவளைத் தள்ளிவிட்டு வேறே ஒருத்தியைப் பிடித்துக் கொள்ளுகிறார். அப்போது அந்தப்பெண் என்ன செய்வாள்? அவள் வாழாவெட்டியாய்த் தன் தாயார் வீட்டில் இருந்து இறப்பாளல்லவா. அதுபோலவே என்கதியும்முடியட்டும். அதுவே நியாயமான செய்கையன்றி, நான் வேறுவிதமாக நடந்துகொள்வது முறையாகாது. நான் அவர்களைத் தேர்ந்தெடுத்ததிலிருந்து, நான் தங்களை இழிவுபடுத்துகிறதாகவாவது, தங்களிடம் அவர்களுக்குச் சமான

மான் யோக்கியதை இல்லையென்று எண்ணுகிறதாகவாவது நினைக்கவேண்டாம். ஏககாலத்தில் இந்த இரண்டு இடங்களைப் பற்றியும் கலியாணப்பிரஸ்தாபம் ஏற்பட்டிருந்து, நான் இந்த இடத்தைத்தள்ளி அந்த இடத்தை நாடி இருந்தால், தாங்கள் என்மேல் ஆத்திரப்பட ஒருவிதத்தில் ஏதுவுண்டு. அந்த இடத்தில் என்னைக் கொடுப்பதாக முடிவு ஆனபிறகே தங்களைப் பற்றிய பிரஸ்தாபம் வந்தது. ஆகையால், நாங்கள் ஏற்கெனவே செய்த முடிவான ஏற்பாட்டை மாற்றக் கூடவில்லை. அதுவே தவிர, நாங்கள் அந்த இடம் உயர்வானது இந்த இடம் தாழ்வானது என்ற விஷயத்தை எண்ணவே இல்லை. தங்களுடைய கண்ணியத்தைப் பாதிக்கக்கூடிய அபிப்பிராயம் ஏதாவது நாங்கள் கொண்டிருந்தால், என் தங்கையைத் தங்களுக்குக் கட்டிக்கொடுக்கவும் நாங்கள் இணங்கி இருக்க மாட்டோமல்லவா. அதைத் தாங்கள் ஆழ்ந்து யோசித்துப் பார்க்க வேண்டும். அதுவுமன்றி இந்த விஷயத்தில் முக்கியமான வேறொரு இடைஞ்சலுமிருக்கிறது. அதையும் தாங்கள் கவனிக்க வேண்டும். என்னுடைய தங்கை எப்போது தங்களைப் பார்த்தாளோ அதுமுதல் அவள் தங்களையே கட்டிக்கொள்ள வேண்டுமென்று ஒரே பிடிவாதமாக இருக்கிறாள். அவளுடைய பிரியம் முழுதும் இவ்விடத்திலேயே வந்து லயித்துப்போய்விட்டது. நான் எப்படி என் கலியாணம் முடிந்துபோனதாக எண்ணிக்கொண்டிருக்கிறேனோ, அதுபோலவே அவளும் தன்னுடைய கலியாணம் முடிந்துபோனதாகவே எண்ணிக் கொண்டிருக்கிறாள். இனி ஈசுவரன் பார்த்து அவளுடைய மனதை மாற்றினாலன்றி மற்ற எதனாலும் அவளுடைய மனம் மாறாதுபோலிருக்கிறது. தாங்கள் ஒருவேளை அவளைக் கட்டிக்கொள்ள இஷ்டப்படாமல், வேறே பெண்ணைக் கட்டிக்கொள்ள எண்ணினாலும், வீட்டிலுள்ள பெரியவர்களான என் தாயார் முதலிய நாங்கள் எல்லோரும் உங்களுடைய காலில் விழுந்தாவது உங்களை நயந்து இணங்கச் செய்யவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அப்படி இருக்க, நானே அவளுக்குப் போட்டியாக வருவதென்றால், அது தெய்வத்திற்குச் சம்மதியாகாது. அவள் வயிறெரிந்து எங்களெல்லோரையும் சபிக்கத் தொடங்குவாள். ஆனால் தெய்வச் செயலாய், தங்கள் மனம் என் விஷயத்தில் மாத்திரம் சபலிக்கிறதேயன்றி, தாங்கள் வேறு யாரையும் கட்டிக்கொள்ள எண்ணவில்லையென்பது பிரத்தியக்ஷமாகத் தெரிகிறது. ஆகையால் தாங்கள் என்மேல் கொண்டுள்ள எண்ணத்தைத் தயவுசெய்து என் தங்கையின்மேல்

மாற்றிக்கொள்ள வேண்டுமாய் நான் தங்கள் காலில் விழுந்து வேண்டு மானாலும் வேண்டிக்கொள்ளுகிறேன். கடைசியில், அவளுக்கும் எனக்கும் அதிக பேதம் ஒன்றுமில்லை. நாங்கள் இருவரும் இரட்டையாய்ப் பிறந்தவர்கள். இரண்டுபேரும் பார்வைக்கு ஒரே மாதிரியாக இருக்கிறோம். எங்களோடு எப்போதும் நெருங்கிப் பழகுகிறவர்கள்கூட எங்களுடைய அடையாளத்தைத் தெரிந்துகொள்ளமாட்டாமல் ஒருவரை ஒருவராய்த் தப்பாக எண்ணிக் கொள்ளுகிறார்கள். அப்படி இருக்க, தாங்கள் மாத்திரம் எதைக்கொண்டு எங்கள் இருவருக்குள்ளும் ஏதோ பெரிய தாரதம்மியம் இருப்பதாக எண்ணி இப்படிப் பாரபட்சமாக நடந்துகொள்ளுகிறீர்களோ தெரியவில்லை. அவள் அறியாத குழந்தை; பரமஸாது; மகா பெருந்தன்மையான குணமும் நடத்தையும் உடையவள்; தங்களிடம் பரம பிரீதியாக இருப்பதன்றி, தங்களுக்காக உயிரை வேண்டுமானாலும் விடக்கூடிய மகா உறுதியான எண்ணமுடைய பெண். என்னிடம் என்னென்ன விசேஷங்களும் சிறப்புகளும் இருப்பதாகத் தாங்கள் எண்ணுகிறீர்களோ அவைகளெல்லாம் அவளிடத்திலும் பூர்த்தியாக இருக்கின்றன. அவளைத் தாங்கள் கட்டிக்கொண்டால், கடவுள் தங்களுக்கு ஒரு குறைவையும் வைக்கமாட்டார். அவள் உலகத்தார் கண்ணுக்கு ராஜாத்திபோலவும் தங்களுக்கு அடிமைபோலவும் நடந்து கொள்வாள். ஆகையால் தாங்கள் என்னை விட்டு அவளைக் கட்டிக்கொள்வதில், அற்ப விஷயத்திலும் தங்களுக்கு எவ்வித வித்தியாசமும் உண்டாகாது. என்னிடம் தாங்கள் எதிர்பார்க்கும் சகலமான செல்வமும் பாக்கியங்களும் சுகமும் கடுகளவும் குறையாமல் அவளாலும் தங்களுக்கு ஏற்படும். தாங்கள் மனசில் எண்ணுவது வெறும் பிரமையேயன்றி, உண்மையில் யாதொரு நஷ்டமாவது சுகக்குறைவாவது சந்தோஷக் குறைவாவது உண்டாகாது. அவள் எனக்குப் பின்னால் பிறந்தவள். சிலருக்கு வெகுசீக்கிரத்தில் அறிவு முதிர்ச்சி உண்டாகி விடுகிறது. சிலருக்குச் சொற்ப காலத்திற்குப் பிறகு ஏற்படுகிறது. நான் விளையாட்டு சந்தோஷம் முதலியவற்றை நாடாமல் காரியத்தையே கவனித்துக்கொண்டிருக்கிறேன். அவள் எப்போதுப் சந்தோஷமாக இருக்கிறாள். ஏனென்றால் நான் எங்கள் குடும்பப்பொறுப்பு முழுதையும் வகித்துப் பார்த்துக்கொண்டு போகிறேனாகையால், அவளுக்கு எவ்விதப் பொறுப்பும் இல்லை, ஆகவே அவள் எப்போதும் சந்தோஷமும் விளையாட்டுமாக இருக்கிறாள். அவள் தங்களுக்கு வாழ்க்கைப்பட்டுத் தங்களுடைய குடும்பப்பொறுப்பை ஏற்றுக்

கொண்டு, அதற்குத் தகுந்தபடி எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படி அவசியம் நடந்துகொள்வாள். கேவலம் அசடுகளாய்த் தம் தாய் வீட்டில் இருக்கும் பெண்கள் புருஷர் வீட்டிற்குப் போனவுடன் எப்படி யெப்படியோ மகா புத்திசாலிகளாய் மாறிப்போவதை நாம் பார்க்கிறோம். என் தங்கைக்கென்ன கெடுதல்? அவளிடம் விவேகமில்லை யென்றாவது, நல்ல குணமில்லை யென்றாவது, நல்ல ஒழுக்கமில்லை யென்றாவது யாராவது சொல்ல முடியுமா? ஆகையால் தாங்கள் எப்படியாவது எங்களுடைய வேண்டுகோளுக் கிணங்கி இதற்குமுன் தாங்கள் ஒப்புக்கொண்டதுபோல அவளையே கட்டிக்கொண்டு எங்கள் குடும்ப நிர்வாகத்தையும் வகிக்கவேண்டும். தாங்கள் அவளை உல்லங்கனம் செய்துதள்ளிவேறேயாரையாவது கட்டிக்கொண்டால் அவளுடைய மனம் முறிந்து போய்விடும். அவள் தற்கொலை செய்துகொண்டாலும் கொள்வாள். பிறகு அந்தப் பாவம் தங்களைத்தான் சுற்றிக் கொள்ளும். என் விஷயத்தைப் பற்றித் தாங்கள் கொஞ்சமும் கவலை கொள்ளவேண்டாம். எனக்கு ஏற்பட்ட தலைவிதியை நான் எப்படியாவது ஏற்றுக்கொண்டே தீரவேண்டும். இப்போது சிறைச்சாலையில் இருக்கிறவர்களுக்குத் தண்டனை முதலிய இழிவு ஏற்படுமானாலும், அதன் பிறகு அவர்களை நான் கட்டிக்கொள்வதால், எனக்கு இழிவும் தூஷணையும் ஏற்படுவது நிச்சயமானாலும், என் அபிப்பிராயத்தில் நான் செய்வதே நிரம்பவும் பூஷணையான செய்கையென்றும் தர்மத்திற்கு ஒத்த செய்கை யென்றும் நான் கருதுகிறேன். ஆனால் என்னால், என் தங்கைக்காவது, நம்முடைய குடும்பங்களின் கண்ணியத்திற்காவது இழுக்குநேருமோவென்று தாங்கள் நினைப்பது சகஜமே. அதற்கும் நான் ஒரு பரிகாரம் செய்துவிடுகிறேன். என்னவென்றால், நான் இப்போது எங்கள் பங்களாவுக்குப் போனவுடன் என் தாயாருடன் இந்த விஷயத்தைப்பற்றிப் பேசி அதற்குத் தகுந்த ஏற்பாட்டைச் செய்யச் சொல்லுகிறேன். அதாவது எங்கள் சொத்தில் எனக்குச் சேரவேண்டியதை ஓர் உத்தேசமாகப் பிரித்துக் கொடுக்கச் செய்து, அதை நான் வாங்கிக்கொண்டு, என் தங்கையை விட்டு விலகிப் பிரிந்துபோய், எங்களுக்கு வண்ணாரப்பேட்டையில் இருக்கும் இன்னொரு பங்களாவில் நான் தனியாக இருந்து விடுகிறேன். என் தாயாரும் தங்கையும் ஒன்றாக இருக்கட்டும் தாங்கள் அவளைக் கட்டிக்கொண்டு எல்லாச்சொத்துகளையும் தங்களுடைய நிர்வாகத்தில் வைத்துக்கொண்டு க்ஷேமமாக இருங்கள்.

தங்கள் கலியாணத்திற்குக்கூட நான் வரலாமென்று தாங்களும், என் தங்கையும் அநுமதி கொடுத்தால் நான் வருகிறேன். இல்லையானால், நான் மறைவாக தூரத்தில் இருந்துவிடுகிறேன். ஆகையால் அந்த ஆக்ஷேபமும் தங்களுக்கு இனி இராதென்று நினைக்கிறேன். தெய்வம் என்னை இங்கே கொண்டுவந்து சேர்த்ததற்குத் தாங்கள் ஏதோ ஓர் உள் கருத்தை எடுத்துக் காட்டினீர்களல்லவா. அது ஒரு விதத்தில் உண்மையானாலும், என் மனசிற்கு இதுவே கடவுளின் உள் கருத்தெனப் படுகிறது. என் விஷயத்தில் தாங்கள் கொண்டுள்ள எண்ணத்தை நானே நேரில் மாற்றித் தாங்கள் என் தங்கையைக் கட்டிக்கொள்ளச் செய்து முகூர்த்தத்தையும் கூடிய சீக்கிரம் வைக்க நிச்சயம் செய்துகொண்டு போவதற்காகவே கடவுள் இந்த எதிர்பாராத சந்திப்பை உண்டாக்கி இருக்கிறாரென்று நான் கருதுகிறேன். எப்படியாவது தாங்கள் பெரிய மனசு பண்ணி இந்த ஏழைகளின் கோரிக்கையைப் பூர்த்திசெய்து வைக்கஒப்புக்கொள்ள வேண்டும். இதனால் தங்களுக்கு நிரம்பவும் புண்ணியம் வந்து லபிக்கும். இதைப்பற்றி நான் தங்களுக்கு அநந்தகோடி நமஸ்காரம் செய்து வேண்டிக் கொள்கிறேன்'' என்று நிரம்பவும்உருக்கமாகவும் விநயமாகவும் மரியாதையாகவும் கூறினாள்.

அவ்வாறு கோகிலாம்பாள் கண்ணபிரானை மணந்துகொள்ளும் விஷயத்தில் ஒரே பிடிவாதமான தீர்மானத்தோடிருப்பாளென்று சுந்தரமூர்த்தி முதலியார் சிறிதும் எதிர்பார்த்தவரே யன்றாதலால், அவளது முடிவான சொற்கள் அளவற்ற ஏமாற்றத்தையும் விசனத்தையும் பதைபதைப்பையும் உண்டாக்கின. தாம் அவளிடம் சாம தான பேத தண்டமென்ற நான்குவித உபாயங்களைப் பிரயோகித்தாலும், அவளது மன உறுதியைச் சிறிதும் அசைக்க இயலாதென்ற நினைவும்; தாம் அவளையே மணக்கவேண்டுமென்று கண்டுகொண்டிருந்த கனவெல்லாம் வீண் கனவென்ற நிச்சயமும் தோன்றவே, அவரது உள்ளம் ஏங்கித் தவித்தது. அவரது குதூகலமும் சந்தோஷமும் உல்லாசமும் இருந்த இடம் தெரியாதபடி மறைந்து போயின. அவரது முகம் வாட்டமடைந்து விகாரமாக மாறிப் போயிற்று. அதற்குமேல் அவளுடன்பேசுவதும், அவ்விடத்தில் நிற்பதும் அவருக்கு முற்றிலும் அருவருப்பாகவும் துன்பகரமாகவும் மாறிப்போயின. ஆயினும் தாம் அவ்வளவோடு சம்பாஷணையைத் திடீரென்று நிறுத்திவிட்டு அப்பால் போய்விட்டால், தாம்

அவளிடம் கோபமும் பகைமையும் குரோதமும் பாராட்டுவதாக அவள் எண்ணிக் கொள்வாளாதலால், தாம் அவ்வித சம்சயத்திற்கு இடங்கொடுப்பது உசிதமல்லவென்ற எண்ணம் அவரது மனத்தில் தோன்றியது. அதுவுமன்றி, அவள் தனது தங்கையைத் தமக்கு மணம் புரிந்து வைப்பதாய் உறுதியாக வாக்களிக்கையில், தாம் அவ்வாறு விகாரமாக நடந்துகொண்டு தமது க்ஷாத்திரத்தைக் காட்டினால், அவளது தங்கையை மணந்துகொள்ளத் தமக்குச் சிறிதும் விருப்பம் இல்லையென்ற எண்ணமும் அவளது மனத்தில் உதிக்கும் என அவருக்குப் பட்டது. ஆகையால், இருவகையிலும் அவள் தம்மீது சந்தேகம் கொள்ள இடங்கொடாமல் தாம் நிரம்பவும் எச்சரிப்பாக நடந்துகொள்ள வேண்டுமென்று முடிவு செய்து கொண்டவராய், சுந்தரமூர்த்தி முதலியார் அரும்பாடு பட்டுத் தமது மனத்தை அடக்கிக்கொண்டு அவளை நோக்கி முற்றிலும் கபடமாகவும் நயவஞ்சகமாகவும் பேசத்தொடங்கி, கோகிலம்! ஆகா! உன்னுடைய குணத்தை நான் வேறே எவரிடத்திலும் இதுவரையில் கண்டதே இல்லை; இனி நான் காணப் போகிறதுமில்லை. மனிதர் இப்படி ஒரே உறுதியாய் இருப்பது இந்தக் கலிகாலத்தில் மகா அருமையான விஷயம். நான் இந்த விஷயத்தை இப்போது உன்னிடம் இவ்வளவு தூரம் பிரஸ்தாபித்துப் பார்ப்பதற்கேயன்றி வேறல்ல. உன்னையே கட்டிக்கொள்ள வேண்டுமென்று முதல் முதலில் நான் ஒரே பிடிவாதமான எண்ணம் கொண்டது நிஜமே. அதன்பிறகு உங்கள் குடும்ப ரகஸியங்களை நான் என் தங்கையின் மூலமாய் அறிய அறிய, என்மனவுறுதி கொஞ்சம் கொஞ்சமாய்த் தளர்ந்து கொண்டே வந்தது. உன்னை விட்டு உன் தங்கையைக் கட்டிக்கொள்வதற்கு என் மனம் முதலில் இணங்குவது கொஞ்சம் பிரயாசையாகத்தான் இருந்தது ஆனால், உன் தங்கையும் நல்லகுணவதியென்றும், புத்திசாலியென்றும், சகலமான விஷயங்களிலும் உனக்கு அநேகமாய் சமதையாகச் சொல்லத் தகுந்தவளென்று புஷ்பாவதி எனக்குச் சொன்னாள். அதுமுதல் நான் உங்களிருவரையும் சமதையாகவே மதித்து வருகிறேன். கண்ணபிரான் முதலியாரை விட்டு வேறேயாரையும் நீ இனிகட்ட மாட்டாயென்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், அந்தப் பேச்சை எடுத்தால், அதன் மூலமாய் உன் தங்கையை எனக்குக் கொடுக்கும் விஷயமாவது நிச்சயப்படுமல்லவா? முக்கியமாய் அதைக் கருதியே நான் உன்னிடம் இந்தப் பிரஸ்தாபத்தைச்செய்தது. அதுவுமன்றி நான் உன்

னிடம் வைத்துள்ள அளவிடமுடியாத வாஞ்ஸையும் பிரேமையும் மதிப்பும், எந்த முகாந்திரத்தை வைத்துக்கொண்டாவது நான் உன்னோடு கொஞ்சநேரமாவது பேசி அந்த ஆநந்தத்தையடையவேண்டுமென்று என்னைத் தூண்டிக்கொண்டே இருந்தன. நீ தனிமையில் சௌகரியமாக இங்கே இருப்பதுபற்றி, இது தான் அதற்குச் சரியான சந்தர்ப்பமென்று கண்டு, உன்னோடு நான் இதைப்பற்றிப் பேசினேனேயன்றி, நான் உண்மையான கருத்தோடு பேசவில்லை. இவ்வளவு உருக்கமாகவும் பரிவாகவும் உன் தங்கையைப்பற்றி நீ பேசியதைக்கேட்க, என் மனம் அப்படியே உருகித் தவித்துப் போய்விட்டது. அக்காள் இருந்தாலும் இப்படியல்லாவா இருக்க வேண்டும். ஆகா! தான் விலகிக் கொண்டாவது தங்கையைச் சந்தோஷப்படுத்த வேண்டுமென்று இவ்வளவு தயாளபுத்தியோடும் பெருந்தன்மையோடும் வேறே யார்நடந்துகொள்ளப் போகிறார்கள்! இப்பேர்ப்பட்ட குணமுடைய அக்காள் ஒருத்தி எனக்கு இருக்கக் கூடாதா என்ற ஏக்கம் என் மனசில் பலதடவை தோன்றிவிட்டது. இந்த விஷயத்தில் சௌந்தரவல்லி யம்மாள் என்னைவிடப் பதினாயிரம்மடங்கு அதிக பாக்கியவதியென்பதே என்னுடைய எண்ணம். அம்மா! கோகிலம் உன்னுடைய பிரியப்படி உன் தங்கையையே நான் கட்டிக்கொள்ளுகிறேன். இது ஒரே உறுதியான வார்த்தை. இந்த உறுதியிலிருந்து நான் பிறழுவேனென்று இனி நீ நினைக்கவேண்டாம். இந்த விஷயத்தை நீ உன் தாயாரிடத்திலும் சொல்லி, இதையே முடிவான ஏற்பாடாக வைத்துக் கொள்ளச் சொல்லலாம். அதுவுமன்றி, உன் தங்கை ஒருவேளை இது முடியுமோ முடியாதோ என்ற சந்தேகத்தை வைத்துத் தன்மனதை அலட்டிக்கொண்டிருக்கலாம். நீ இப்போது உங்கள் பங்களாவுக்குப் போனவுடன் நேராக அவளிடம் போய் நான் அவளையே கட்டிக் கொள்ள இணங்கிவிட்டேனென்ற செய்தியைச் சொல்லி அவளுடைய விசனத்தை மாற்றி அவள் சந்தோஷம்கொள்ளும்படி செய். ஆனல், நான் ஒரே ஒரு விஷயத்தை மாத்திரம் உங்களிடம் கேட்டுக் கொள்ள எண்ணுகிறேன். சமீப காலத்தில் உன்னுடைய நிச்சயதார்த்த கலியாணம் தடைப்பட்டுப் பார்ப்பவருக்கு விகாரமாக முடிந்தது. அதுவுமன்றி நாமெல்லோரும் உயிருக்குயிராக மதிக்கும் கண்ணபிரான் முதலியார் சிறைச்சாலையி லிருக்கிறார். நான் விசாரித்துப் பார்த்தவரையில், அவர் நற்குண நல்லொழுக்க முடையவரென்றும், திருட்டுபுரட்டு முதலிய கெட்ட விஷயங்களில்

இறங்கக்கூடியவர் அன்றென்றும் தெரிந்துகொண்டேன். ஆகை யால், இந்த சந்தர்ப்பத்தில் நாமெல்லோரும் நமது கவனத்தையும் பொழுதையும் முற்றிலும் அந்த விஷயத்தில் செலவிட்டு அவர் தண்டனை யடையாமல் அவரைத் தப்ப வைக்க வேண்டும். அதுவே நாம் இப்போது செய்யத்தக்க முதல் காரியம். இந்தச் சமயத்தில் நாம் இந்தக் கலியாணத்தை நடத்தினால், அது பார்ப்பவர் பழிக்க வும் தூஷித்துப் பேசவும் இடங்கொடுக்கும். நம்முடைய மனசுக் கும் அது அவ்வளவாக சந்தோஷமாய் இருக்காது. சந்தோஷமும் ஆநந்தமு மில்லாமல் செய்வது கலியாணமே ஆகாது. நான் உன் னோடு பேசவேண்டுமென்று எப்படி ஆவல்கொண்டு துடித்திருந் தேனோ, அதுபோல, உன் தங்கையைக் கட்டிக்கொண்டு அவளு டன் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்ற ஆவலின் மிகுதியினால் என் மனம் எவ்வளவோ துடிக்கிறதானாலும், சந்தர்ப்பத்தைக் கருதி அதையெல்லாம் நான் இப்போது அடக்கிக்கொண்டிருப்பதே நான் இப்போது செய்யத்தக்க காரியம். நீங்கள் கண்ணபிரான் முதலி யார் விஷயத்தில் துயரமடைந்து தவிக்கிறீர்களென்பது என் மன சில் மாத்திரம் உறைக்கவில்லையா? அதை நான் நன்றாக உணரு கிறேன். அதுவுமன்றி, அவருடைய விஷயத்தில் என் மனசிலேயே ஒருவிதமான பிரியமும், கவர்ச்சியும், பாசமும் ஏற்பட்டுப் போன தாகையால், அதைக் கருதியும் நான் இப்போது இந்தக் கலியாண சந்தோஷத்தை அடைய என் மனம் இடந்தரவில்லை. அவரும் நானும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே கலியாணப் பந்தலில் ஒரே முகூர்த் தத்தில் உங்களிருவரையும் கட்டிக்கொண்டால் தான், என் மனம் உண்மையில் ஆநந்தமடையும். அவருடைய வழக்கு வெகு சீக்கிரத் தில் ஒரு மாதிரியாக முடிந்துவிடுமென்று நினைக்கிறேன். நாம் ஐயாயிரம் பதினாயிரம் செலவிட்டுப் பெரிய பாரிஸ்டர் துரைகளை அமர்த்தி அவரை விடுவித்து அழைத்து வந்து, அடுத்த முகூர்த்தத் தில் நாம்கலியாணங்களை முடித்துவிடுவோம். அவர் களங்கமில்லாமல் திரும்பிவந்தால் கூட சில ஜனங்கள் தமக்குள் அவரைப்பற்றி இழி வாகத்தான் பேசிக்கொள்வார்கள். யார் எப்படி வேண்டுமானாலும் பேசிக்கொள்ளட்டும். அதை நாம் காதிலேயே போட்டுக் கொள்ளா மல், நம்முடைய காரியத்தை நம்முடைய யுக்தம்போலச் செய்து கொள்வோம். ஆகையால், உன் தங்கையின் கலியாணத்தையும் உன் கலியாணம் வரையில் நிறுத்தி வைக்கவேண்டும். அந்த விஷ யத்திற்கு உன் தங்கை ஒருவேளை இணங்காவிட்டாலும் நீயும் உன்

தாயாரும் அவளிடம் ஹிதமாகப் பேசி, அவளுடைய மனதைச் சாந்தப்படுத்தி வையுங்கள். நாம் முதலில் அவருடைய வழக்கை ஒன்றுமில்லாமல் செய்து விடுவோம். அதுவுமன்றி, உன் மாமியாரையும் தேடிக் கண்டுபிடிப்போம்" என்று உண்மைபோலவும் உருக்கமாகவும் கூறினர்.

அவரது சொற்கள் யாவும் உண்மையானவை என்றே நம்பிய நமது நற்குண மடந்தை அவர்மீது முன்னிலும் நூறுமடங்கு அதிகரித்தவாத்ஸல்யமும்,மதிப்பும்கொண்டதன்றி, அவர்மேலான மனப்போக்குடைய உத்தமகுணப் புருஷரென்றும் உறுதியாக எண்ணிக்கொண்டு, மிகுந்த நன்றியறிதலும், மன இளக்கமும், நெகிழ்வும் காட்டி அவரை நோக்கி மிருதுவாகவும் வாஞ்சையோடும் பேசத் தொடங்கி, "அப்படியே தங்கள் இஷ்டம்போலவே நாங்கள் நடந்து கொள்ளுகிறோம். கொஞ்சம் பொறுத்தே என் தங்கையின் கலியாணத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்று எனக்கும் என் தாயாருக்கும் எண்ணமாயினும், உங்கள் இருவருக்கும் அந்த எண்ணம் எப்படி இருக்குமோ என்பதைக் கருதி நாங்கள் உங்கள் பிரியப்படி நடந்துகொள்வதென்று தீர்மானித்திருந்தோம். இப்போது தங்கள் கருத்தும் எங்கள் கருத்தும் ஒத்துப்போய் விட்டன. நானும் என் தாயாரும் சௌந்தரவல்லியம்மாளை எப்படியாவது சமாதானப்படுத்தி அவளும் இந்த ஏற்பாட்டுக்கு இணங்கும்படி செய்கிறோம். என்னல் எங்கள் குடும்பத்திற்கு ஏற்பட்ட அவமானத்தைக் கருதி, தாங்கள் ஒருவேளை என் தங்கையைக் கட்டிக்கொள்ள மறுத்து விடுவீர்களோவென்று நாங்கள் நிரம்பவும் அஞ்சிக்கொண்டிருந்தோம். அந்த விஷயத்தில் தாங்கள் இப்போது உறுதிமொழி சொன்னதொன்றே போதுமானது. இந்த சந்தர்ப்பத்தில் கடவுள் தங்களையும், தங்கள் தங்கையையும் எங்களுக்குச் சிநேகம் செய்துவைத்து, தங்கள் பிரியம் மாருமல் இருக்கும்படி செய்தது எங்களுடைய பூர்வ ஜென்ம பூஜா பலனென்றே நினைக்கிறேன்" என்று முற்றிலும் நைவாகவும் விநயமாகவும் கூறினள்.

அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி முதலியார் சந்தோஷமாக நகைத்து இனிமையான குரலில், "இந்த சந்தர்ப்பத்தில் நமக்குள் பரிச்சயமும் சிநேகமும் ஏற்பட்டதை உங்களுடைய பூஜா பலன் என்று சொல்வதா, எங்களுடைய பூஜா பலன் என்று சொல்வதா

என்ற சந்தேகம் முதலில் எனக்கு உண்டாகிறது. அதை நாம் இப்போது நிவர்த்தி செய்ய வகையில்லை; அதைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம். இப்போது ஆகவேண்டிய அவசர காரியத்தை நாம் முதலில் கவனிக்கவேண்டும். இந்த வேலைக்காரி ஏன் இன்னமும் திரும்பி வரவில்லையென்பது தெரியவில்லையே! மினியனுடைய குடி மயக்கத்தைப் பார்க்கும்போதே இவளும் ஒரு வேளை மயங்கிக் கீழே விழுந்திருப்பாளோ என்னவோ தெரியவில்லையே! இருக்கட்டும். நானே போய் வண்டியைத் தயாரிக்கச் செய்துவிட்டு இதோ ஒரு நிமிஷத்தில் திரும்பி வருகிறேன்" என்று நயமாகக் கூறியவண்ணம் அவ்விடத்தை விட்டு வெளியில் சென்று விட்டார்.

சென்றவர் பத்து நிமிஷ நேரங் கழித்து வேலைக்காரிகளோடு திரும்பி வந்து முன்னிருந்த இடத்தை அடைந்தார். வேலைக்காரிகள் இருவரும் கோகிலாம்பாள் இருந்த இடத்திற்கு வந்தனர். உடனே சுந்தரமூர்த்தி முதலியார் முன்போல ஓங்கிய குரலில் சம்பாஷிக்கத் தொடங்கி, "கோகிலம்! நான் உன்னை அதிக நேரம் இங்கே தாமதப்படுத்தாமல் உடனே உன் ஜாகைக்கு அனுப்பிவிட வேண்டுமென்று எவ்வளவு தூரம் முயற்சித்தாலும் எதிர்பாராத இடைஞ்சல் எதாவது வந்து குறுக்கிடுகிறது. எனக்கு நான்கு காசாரிகள் இருப்பதாக நான் சொன்னேனல்லவா. அவர்களுள் ஒருவனுடைய கைக்குழந்தை நோயாக இருந்தது; அது திடீரென்று இறந்து போய் விட்டதாம். அதற்காக எல்லோரும் அந்தக் காசாரியின் வீட்டுக்கு ஓடி இருக்கிறார்கள்; குழந்தையை அடக்கம் செய்துவிட்டு இன்னம் ஒரு நாழிகைக்காலத்தில் வந்துவிடுவார்கள். உடனே நீ புறப்பட்டுப் போய்விடலாம். நான் இப்போதுகூட டெலிபோனில் என் தங்கையோடு பேசி, இன்னம் ஒரு நாழிகைக் காலத்தில் உன்னைப் பத்திரமாய் அங்கே கொண்டுவந்து சேர்ப்பதாகச்சொல்லிவிட்டு வந்தேன். இருந்தது இருந்தாய்; பல்லைக் கடித்துக்கொண்டு இன்னம் ஒரு நாழிகை இருந்து விட்டு உடனே புறப்பட்டுப் போகலாம். இப்போது விளக்கு வைக்கும் நேரமாகி விட்டது. இங்கே இராத்திரிக்கு ஆகவேண்டிய சமையலும் ஆகிவிட்டதாம். காசாரிகள் வருவதற்குள் நீ உன்னுடைய சாப்பாட்டையும் முடித்துக்கொள். 'பசி இல்லை; வீட்டில்போய்ச் சாப்பிடுகிறேன். என்ற ஆட்சேபணைகளை நீ சொல்லாமல் எங்களுக்குச் சந்தோஷம் ஏற்படும்படி நீ எப்படியாவது கொஞ்சம் சாப்பிட வேண்டும்"

என்று வருந்தி நயமாக வற்புறுத்தி வாஞ்சையோடு கேட்டுக் கொண்டார். நமது பெண்மணி விரைவில் தங்களது பங்களாவுக்குப் போய்ச் சேரவேண்டுமென்றும், அவர் கூறிய சந்தோஷச் செய்தியைத் தனது தங்கைக்கும் தாயாருக்கும் தெரிவித்து முக்கியமாய்த் தனது தங்கையைச் சந்தோஷப்படுத்த வேண்டுமென்றும், தனது தாய் தன்னைத் தேடிக்கொண்டுபோன இடங்களில் கண்ணபிரான் முதலியாரைப் பற்றிய செய்தி எதையாகிலும் தெரிந்து கொண்டு வந்திருக்கலாமாதலால், அதையெல்லாம் தான் கேட்டு அறிய வேண்டுமென்றும் அளவற்ற ஆவலும் துடிதுடிப்புங்கொண்டு தன் மன நிலைமையை வெளியிட மாட்டாதவளாய்த் தவித்துக் கொண்டிருந்தாளானாலும், வண்டியை ஓட்டுவதற்குக் காசாரி எவரும் இல்லாமற் போனமையால், தான் சுந்தரமூர்த்தி முதலியாரது வேண்டுகோளை மறுப்பதனால் அவரது மனம் புண்படுமேயன்றி, தனக்கு எவ்வித அநுகூலமும் ஏற்படாதென்று கண்டு, அவரது விருப்பத்தின்படியே போஜனம் செய்வதாக இணங்கினாள். அதைக் கேட்டு சுந்தரமூர்த்தி முதலியார் அளவற்ற பூரிப்படைந்தவராய் அவ்விடத்தை விட்டு அப்பால் போய்விட்டார்.

* * * *

இனி நாம் புரசைப்பாக்கம் பங்களாவில் அன்றையதினம் பகலிலிருந்து நடந்து வந்த இன்னொரு முக்கியமான விஷயத்தைக் கூறுவோம். அன்றைய காலையில் கோகிலாம்பாள் பங்களாவை விட்டுப் புறப்பட்டுச் சென்றபொழுது புஷ்பாவதி சுந்தரமூர்த்தி முதலியாருடன் தனிமையில் பேசி அவரை அனுப்ப, அவர் காசாரி மினியனைத் தம்மோடு அழைத்துக்கொண்டு, கோகிலாம்பாளுக்குத் தெரியாதபடி அவளது வண்டியைத் தொடர்ந்து சென்றாரென்று சொன்னோமல்லவா. அவர் சென்றபின்பு, புஷ்பாவதியின் மனதும் அமைதியாக இருக்கவில்லை. அவள் வெளிப் பார்வைக்குக் கபடமேயறியாத பரம ஸாதுவைப்போல நடித்துப் பூஞ்சோலையம்மாளுடன் கூடி இருந்து அந்த அம்மாளின் சொற்களுக்குத் தகுந்தபடி தானும் அநுசரணையாகப் பேசியபடி அவளுக்கு நிரம்பவும் ஹிதமாக நடித்து வந்தாளாயினும், அவளது மனம் கட்டிலடங்காமல் துடிதுடித்து எண்ணிறந்த யூகங்களையும் யோசனைகளையும் செய்து துரித கதியில் ஓடிக்கொண்டிருந்தது. பூஞ்சோலையம்மாளின் சொந்தக்காரர்கள், ஏதோ முக்கியமான ஒரு காரியத்தைக் கருதி, யாரா

கிலும் ஒருவர் வரவேண்டுமென்று தங்களுக்கு எழுதியிருந்ததாக அந்த அம்மாள் கூறியது உண்மையான வரலாறல்லவென்று புஷ்பாவதி நிச்சயித்துக்கொண்டாள். பூஞ்சோலையம்மாளது பங்களாவில் நிச்சயதார்த்த முகூர்த்தம் நடத்தப்பட்ட காலத்தில் மணமகன் கைதியாக்கப்பட்டதும், பிறகு கற்பகவல்லியம்மாள் மானபங்கப்பட்டதும் அவர்களது உறவினர் அனைவருக்கும் பரிஷ்காரமாகத் தெரிந்த விஷயங்களாதலின், அத்தகைய விபரீத சம்பவங்களினால் சகிக்கவொண்ணாத அவமானமும் துயரமும் வேதனையும் அடைந்திருந்த பூஞ்சோலையம்மாளை எவரும் அவ்வாறு திடீரென்று அழைத்திருக்க மாட்டார்களென்ற எண்ணமே புஷ்பாவதியின் மனத்தில் எழுந்தெழுந்து அவளை ஊக்கிக்கொண்டிருந்தது. அத்தகைய பெருத்த அவமானத்தினாலும், துயரத்தினாலும் பாதிக்கப்படக்கூடியவள் முக்கியமாய் மணப்பெண்ணாகிய கோகிலாம்பாளேயாதலால், அந்த அசந்தர்ப்ப வேளையில் எத்தகைய முக்கிய காரியமானாலும் கோகிலாம்பாள் நேரில் போனது முற்றிலும் அசம்பாவித காரியமாய்த் தோன்றியது. பூஞ்சோலையம்மாளது குடும்பத்தில் பெண் மக்களே இருந்தனரென்பது அவர்களது உறவினருக்குத் தெரிந்த விஷயமாதலால், அவர்கள் ஏதேனும் பேச விரும்பினால், தாங்களே நேரில் புரசைப்பாக்கம் பங்களாவிற்கு வருவதே இயற்கையன்றி, அசந்தர்ப்பமான நிலைமையிலுள்ள பெண்டீரை அழைத்தார்களென்பது பொருத்தமான செய்தியாகத் தோன்றவில்லை. ஆதலால் புஷ்பாவதியம்மாள் பூஞ்சோலையம்மாள் கூறிய வரலாற்றைச் சிறிதும் நம்பாதிருந்ததன்றி கோகிலாம்பாள் எதைப்பற்றி அவ்வளவு அவசரமாகத் தனியாகப் போகிறாள் என்பதையும் அறிய வேண்டுமென்ற ஆசையும் ஆவலும் பிரமாதமாக எழுந்து அவளைத் தூண்டிக்கொண்டிருந்தனவாயினும், அவள் தனது மன நிலைமையை வெளியில் காட்டிக் கொள்ளாமல் சிறிதும் கபடமேயறியாத பேதை போலப் பூஞ்சோலையம்மாளுடன் இருந்து அவளுக்குரிய ஆறுதல் மொழிகளையும் வேதாந்தங்களையும் கூறிக்கொண்டிருந்தாள். பூஞ்சோலையம்மாள் குடும்ப வியவகாரங்களைப்பற்றி வேலைக்காரர்களோடு சம்பாஷித்திருந்த காலங்களிலும், அவைபோன்ற வேறு அற்ப காரியங்களைக்கருதி புஷ்பாவதியை விட்டு வெளியில் போயிருந்த காலங்களிலும், அவள் மெதுவாக அவ்விடத்தை விட்டு சௌந்தரவல்லி யம்மாள் இருந்த இடத்திற்குப் போவதும், அவளிடம் அந்தரங்கமாகப் பல விஷயங்களைப்பற்றிப் பேசுவதுமா

யிருந்தாள். தமது சொந்தக்காரரது விருப்பத்தின்படி ஏதோ காரியத்தைப்பற்றி கோகிலாம்பாள் அவசரமாய்ப் போய் இருக்கிருள் என்ற செய்தியைக் கேட்டவுடனே சௌந்தரவல்லியம்மாள் அதை நம்பாமல் கைகொட்டிக் கலகலவென்று நகைத்து, "இது முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றில் மறைக்கிற கதையாக இருக்கிறதே! எங்களுடைய சொந்தக்காரர்கள் நாலைந்து வீட்டுக்காரர்கள்தான் இருக்கிருர்கள். அவர்கள் எல்லோரும் தக்க பெரியமனிதர்கள்; அவர்கள் எங்களை எப்போதும் மரியாதையாக நடத்துகிறவர்கள். அவர்கள் எங்களிடம் எதைப்பற்றியாவது பேசவேண்டுமானுல் தாங்களே நேரில் வருவார்களே யன்றி எங்களை ஒருநாளும் அழைத்ததில்லை, அவர்கள் வந்தாலும், எங்கள் தாயாருடன் தான் எதைப்பற்றியும் பேசுவார்கள், நானும், என் அக்காளும் தூரவேதா னிருப்போம. எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் என் அக்காள் எவருடைய வீட்டிற்கும் தனியாகப் போகவுமில்லை. அவளை அவ்வளவு பாத்தியதையோடு அழைக்கக் கூடியவர்களுமில்லை. இதில் ஏதோ சூது இருக்கிற தென்பது நிச்சயமான சங்கதி. நேற்று இரவில் நான் அந்தக் கற்பகவல்லி யம்மாளை வீட்டை விட்டுத் துரத்தியதோடு இவர்களுடைய எண்ணம் மாறிவிடு மென்றல்லவா நான் நினைத்தேன். இன்னமும் இவர்கள் அந்தக் கண்ணபிரானுடைய பைத்தியம் பிடித்து அலைகிருர்கள் போலிருக்கிறதே. அந்தக் கண்ணபிரானைத் தப்பவைக்க வேண்டுமென்ற நினைவோடு இவர்கள் ஏதோ முயற்சி செய்வதாகத் தோன்றுகிறது. அதற்காகக் கோகிலாம்பாள் யாருடைய சிபார்சைக் கோரியாகிலும் போயிருக்கிருளோ, அல்லது, அவருக்காக எவரையாவது வக்கீல் அமர்த்தப் போயிருக்கிருளோ வென்பது தெரியவில்லை. இருந்தாலும் கோகிலாம்பாள் அசாத்தியமான துணிச்சல்காரியாய் விட்டாள். கண்ணபிரானுடைய மோகத்தில் இவள் தன்னுடைய கௌரவத்தையும் நாணத்தையும் அடியோடு துறந்து இப்படி நடந்து கொள்வாளென்றும் நான் கனவிலும் எண்ணவில்லை. அம்மாளுக்கும் வரவரப் புத்தி கெட்டுப்போய் விட்டது. அக்காள் எதைச் சொன்னுலும் அதன்படியே அம்மாள் ஆடுகிருள். இருக்கட்டும். கோகிலாம்பாள் திரும்பி வரட்டும். அவளுக்குச் சரியான மண்டகப்படி நடத்தி வைக்கிறேன். நேற்று இரவு நான் பேசிய பேச்சில் கற்பகவல்லி போன இடந்தெரியாதபடி உடனே பறந்து போய்விட்டாள். இந்நேரம் அவள் சமுத்திரத்தில் விழுந்து மாண்டுபோய் இருப்பாள்.

கோகிலாம்பாளுடைய கதியும் அதேமாதிரிதான் முடியப்போகிறது. நான் கேட்கப்போகும் கேள்விக்கு உத்தரம் சொல்லமாட்டாமல் இவள் உடனே நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகப்போகிறாள் பார்''என்றாள்.

அதைக் கேட்ட புஷ்பாவதி நிரம்பவும் விநயமாகவும் ஹிதமாகவும் பேசத்தொடங்கி, "சௌந்தரா! நான் இங்கே இருக்கிறவரையில் நீ ஆத்திரப்பட்டு எதையும் செய்துவிடாதே. பிற்பாடு நாங்கள் தான் உன்னைத் தூண்டி விட்டோமென்ற பழிக்கு நாங்கள் ஆளாக வேண்டும். கோகிலாம்பாள் திரும்பி வீட்டுக்கு வருகிறவரையில் நான் இங்கே இருந்து எங்கள் ஜாகைக்குப் போய் விடுகிறேன். பிறகு நீ உன்னுடைய இஷ்டம்போல எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்'' என்றாள்.

உடனே சௌந்தர வல்லியம்மாள், "அப்படியானால் நீ இன்று இராத்திரி இங்கே இருக்கப் போவதில்லையா? நேற்று இரவு நீ எனக்குச் செய்துகொடுத்த வாக்குறுதியை மறந்து போய்விட்டாயா? கற்பகவல்லி இந்த பங்களாவை விட்டுப் போய்விட்டால் இன்றிரவு சரியாகப் பத்துமணிக்குஉன்தமயனார்என்னிடம் வந்து பேசும்படிசெய்வதாய் வாக்களித்தாயே. அதை நீ நிறைவேற்றி வைக்கப் போகிறதில்லையா? நேற்றிரவு முதல் என் மனம் படுகிற பாட்டை நான் எப்படித்தான் எடுத்துச் சொல்லப் போகிறேன். சாப்பாட்டைக் கண்டால் வேப்பங்காயைக் காண்பதுபோல எனக்கு உடனே குமட்டல் உண்டாகிறது. இரவு முழுதும் தூக்கமென்பதே உண்டாகவில்லை. எப்போது பார்த்தாலும் எனக்கு உன் தமயனாருடைய நினைவே நினைவாக இருக்கிறது. சதாகாலமும் அவர்களுடைய வடிவம் என் கண்ணுக்கு முன் நிற்பதுபோலவே இருக்கிறது. இன்றைய பகல் எப்போது தொலையுமென்றும், இரவு எப்போது வருமென்றும் நினைத்து நான் நரக வேதனை அநுபவித்துத் துடிதுடித்துத் தவிக்கிறேன். சொன்ன சொல்லை மறந்து நீ இப்படிச் செய்வது தர்மமாகுமா? காலையில் உன் தமயனார் வந்திருந்தார்களே. அவர்கள் என்னைப்பற்றி ஏதாவது சொன்னார்களா? கற்பகவல்லியை நான் துரத்திவிட்ட விஷயத்தை நீ அவர்களிடம் சொன்னாயா? அவர்கள் இன்றிரவு பத்து மணிக்கு வருவதாகச் சொன்னார்களா? இப்போது அவர்கள்எங்கே போயிருக்கிறார்கள்?'' என்றுகட்டிலடங்காத பெருத்த மனக் கிளர்ச்சியோடு பதைபதைத்துக் கூறினாள்.

உடனே புஷ்பாவதி, "அம்மா! சௌந்தரா! உனக்கு நான் செய்து கொடுத்த வாக்குறுதியை மறந்து விட்டேனென்று நினைக்காதே. நாங்கள் இன்னமும் இவர்களுடைய சம்பந்தத்தைவிட்டு விலகாமல் ஒட்டிக்கொண்டிருப்பது எதனால் தெரியுமா? உன் விஷயத்தில் எங்கள் இருவருக்கும் ஏற்பட்டிருக்கும்பிரியம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. உன்னுடைய ஸாஸகுணமும், பெரும்போக்கான புத்தியும், உல்லாசமான இயல்பும், மனிதரிடம் ஒட்டிக்கொண்டு வாஞ்சையாக இருக்கும் தன்மையும் எங்கள் மனசுக்கு ஒத்தாற் போல இருப்பதால், என் தமையனார் உன்னையே கட்டிக்கொள்ள வேண்டு மென்று நாங்கள் முடிவு செய்துவிட்டோம். இனி சூரியன் தெற்கு வடக்காகப் போனாலும் அந்தத் தீர்மானம் மாறப்போகிற தில்லை. இருந்தாலும், இடையிடையில் இவர்கள் தாறுமாறாக நடந்துகொள்வதுதான் எங்களுடைய கண்ணியத்தை நிரம்பவும் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. நேற்றிரவோடுதான் அந்தக் கற்பகவல்லியம்மாள் போய்விட்டாளே. அதோடு இவர்கள் அவர்களுடைய நினைவை விட்டொழித்துவிட்டு கோகிலாம்பாளுக்கு வேறே தக்க இடம் பார்க்கக்கூடாதா? காலையில் எழுந்தவுடன் இவர்களுக்கு யாரோ ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதைப் பார்த்தவுடன் கோகிலாம்பாள் புறப்பட்டு ஓடி இருக்கிறாள். அநேகமாய் அது கண்ணபிரான் சம்பந்தமான விஷயமாகத்தான் இருக்க வேண்டுமென்பது என்னுடைய தமயனாரின் அபிப்பிராயம். இவர்கள் இதோடு கண்ணபிரானை மறந்து போவதானால்தான் இன்று என் தமயனார் வருவார். இல்லையானால், உங்கள் இருவருக்கும் சந்திப்பு ஏற்பட இன்னம் கொஞ்சகாலம் பிடிக்கும்" என்றாள்.

அதைக் கேட்ட சௌந்தரவல்லியம்மாளின் மனத்தில் இன்பமும் துன்பமும் மாறி மாறித் தோன்றி அவளை சகிக்கவொண்ணாத சஞ்சலக்கடலில் ஆழ்த்தின. சுந்தரமூர்த்தி முதலியார் தன்னை மணக்கும் விஷயத்தில் அவள் உறுதி கூறியது பெருத்த மகிழ்ச்சியைக் கொடுத்ததானாலும், தனது தாய் அக்காள் ஆகிய இருவரது துர் நடத்தையினால், தனக்கு அன்றைய இரவில் கிடைக்குமென்று தான் மிகுந்த ஆவலோடும் ஆசையோடும் எதிர்பார்த்த சந்திப்பும் ஆநந்தமும் கிடைக்காமல் போய்விடும் போலிருக்கின்றனவே என்ற நினைவு சகிக்கவொண்ணாத அபாரமான துயரத்தையும் சஞ்சலத்தையும் ஏக்கத்தையும் உண்டாக்கின. ஆயினும் அவள் முற்றி

லும் பரிதாபகரமான தோற்றத்தோடு புஷ்பாவதியை நோக்கி நிரம்பவும் இளக்கமாகவும் மனநைவோடும் பேசத்தொடங்கி, "என்ன புஷ்பாவதி! நான் படும் கஷ்டம் உன் மனசில் உறைக்கவில்லையா? உங்கள் இருவர் விஷயத்திலும் நான் ஏதாவது தவறுனகாரியம் செய்திருந்தால், நீங்கள் என்னை அசட்டை செய்வது நியாயமே. என் அக்காளும், அம்மாளும் துர்ப்புத்தி பிடித்தலைந்தால் அதற்காக என்னிடம் நீங்கள் கடுமை காட்டலாமா? அநேகமாய் அந்தக் கடிதம் அந்தத் துருக்கச்சி கற்பகவல்லி யிடத்தி லிருந்தே வந்திருக்கவேண்டும். நேற்றிரவில் இங்கே இருந்து புறப்பட்டு ஓடின சிறுக்கி எங்கேயோ போய் இருந்துகொண்டு, இவர்களுக்குக் கடிதம் எழுதியனுப்பி இருக்கிருள் போலிருக்கிறது. அவனை மறுபடி அழைத்து வருவதற்காக இவள் ஓடி இருக்கிருள் போலிருக்கிறது. இருந்தாலும் என்ன? நான் இவர்கள் மூவருக்குமே சரியான மரியாதை நடத்துகிறேன். அதைப்பற்றி நீ கவலைப்படாதே. அந்தக் கடிதம் யாரிடத்திலிருந்து வந்திருக்கிறதென்பதை நான் இதோ ஒரு நொடியில் கண்டு பிடித்து விடுகிறேன். அந்தக் கடிதம் அம்மாளுடைய பெட்டியில்தான் இருக்கும். நான் மெதுவாகப் போய் அம்மாளுக்குத் தெரியாமல் அதை எடுத்துக்கொண்டு வந்து பார்த்து இவர்களுடைய மர்மத்தைத் தெரிந்துகொண்டு அதை வைத்துக்கொண்டே இவர்களுடைய மானத்தை வாங்கிவிடுகிறேன். இதைக் குறித்து இவர்கள் உன்மேல் ஏதாவது சந்தேகங் கொள்வார்களென்று நீ அஞ்சவேண்டியதில்லை" என்ருள்.

அதைக் கேட்ட புஷ்பாவதி, "இருக்கட்டும். பார்க்கலாம். இன்று மாலைக்குள் என் தமயனுர் அநேகமாய் மறுபடியும் இங்கே வருவார்; அல்லது ஏதேனும் செய்தி சொல்லியனுப்புவார். நான் திரும்பவும் அவருடன் பேசி, அவரைச் சரிப்படுத்துகிறேன். எல்லாவற்றிற்கும் நீ இந்தக் கடிதத்தை எடுத்து அதன் விஷயத்தைத் தெரிந்துகொள்" என்று கூறிய பின் பூஞ்சோலையம்மாளிருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

உடனே சௌந்தரவல்லியம்மாள் நேராக சமயலறைக்குச் சென்று தனது போஜனத்தை முடித்துக்கொண்டதாகக் காட்டிய பின் நேராகத் தனது சயன அறைக்குச் சென்று படுத்துக்கொண்டு, ஒரு வேலைக்காரியை அழைத்து, "அம்மாள் சாப்பிடுவதற்காக என்னை அழைத்துவரச் சொன்னுல், நான் சாப்பிட்

டாய் விட்டதென்றும், படுத்துத் தூங்குவதாகவும் சொல்லிவிடு. அவர்கள் சாப்பிட இலையில் உட்கார்ந்தவுடனே இங்கே வந்து என்னிடம் சொல்" என்று கூறி அவளை யனுப்பிவிட்டுச் சயனத்தில் மிகுந்த ஆவலோடு படுத்திருந்தாள். அதன் பிறகு அரை நாழிகைக் காலம் கழிந்தது. வேலைக்காரி மறுபடி அங்கே தோன்றி பூஞ்சோலை யம்மாளும் புஷ்பாவதி யம்மாளும் இலையில் உட்கார்ந்து விட்டதாகக் கூறிவிட்டுச் சென்றாள். உடனே சௌந்தரவல்லி யம்மாள் மெதுவாக எழுந்து எவருக்கும் தெரியாமலும் சந்தடி செய்யாமலும் தனது தாயின் விடுதிக்குள் நுழைந்து மேஜைகள், பெட்டிகள் முதலியவற்றை ஆராய்ந்து பார்த்து, பூஞ்சோலை யம்மாளால் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த கண்ணபிரானது கடிதத்தைக் கண்டு பிடித்து அதை எடுத்து இடையில் சொருகி மறைத்துக்கொண்டு, தான் அந்த இடத்திற்கு வந்த குறிப்பே தெரியாதபடி எல்லாவற்றையும் பழையபடியே வைத்துவிட்டு விரைவாக நடந்து வந்து தனது சயனத்தை யடைந்து முன்போலப் படுத்துக்கொண்டாள். அவ்வாறு தான் போய்க் கடிதத்தை எடுத்து வந்ததை எவரும் பார்க்கவில்லையென்று நிச்சயித்துக்கொண்டு அதனால் நிரம்பவும் களிப்படைந்த நிலைமையில் சௌந்தர வல்லியம்மாள் கட்டிலடங்கா ஆவலோடும் பதைப்போடும் கண்ணபிரானது கடிதத்தைப் பிரித்துப் பார்க்கலானாள். அந்தக் கடிதத்தின் விஷயம் இக்கதையின் முதல் பாகத்தில் பூர்த்தியாக வெளியிடப்பட் டிருக்கின்ற தாயினும், வாசகர்களின் சௌகரியத்தைக் கருதி அதை நாம் மறுபடியும் இங்குப் பிரசுரிக்கிறோம். ஷை கடிதம் அடியில் வருவாறு எழுதப்பட்டிருந்தது.

சௌபாக்கியவதி கோகிலாம்பாள் அம்மாளுக்கு ஈசனருளால் சர்வா பீஷ்டமும் சர்வமங்களமும் உண்டாவதாக.

நாமிருவரும் ஒன்றுபட்டு வாழ்வதற்குப் பரிபக்குவமான காலம் இன்னமும் வரவில்லை யென்பது இன்றையதினம் காலையில்ஏற்பட்ட புதிய இடையூறிலிருந்து நன்றாகத் தெரிகிறது. நேற்று சாயுங்காலம் நாமிருவரும் பூஞ்சோலையில் தனியாக சந்திக்க நேர்ந்தபோது திடீரென்று நேர்ந்த இடையூறுதான் நம்முடைய சுக வாழ்க்கைக்குக் கடைசியான இடையூறாக இருக்குமென்று நான் நினைத்தேன். அதைக் காட்டிலும் பிரமாதமான பேரிடியாக இப்போது வந்து வாய்த்திருக்கிறது. பலாக்கனியின் வெளியில் கோடிக் கணக்கில்

முட்களை நிறுத்தி, உட்புறத்தில் மாதுரியமான சுளைகளை வைத்துப் பத்திரப்படுத்தி யிருப்பதுபோல, மனிதருக்காகக் கடவுள் படைத்திருக்கும் ஒவ்வோர் இன்பத்தையும் பற்பல இடைஞ்சல்கள் சூழ்ந்து பாதுகாத்திருக்கச் செய்திருக்கிருர்.

அன்றையதினம் நீயும், உன் தங்கையும் கடற்கரைக்குப்போக ஆசைப்பட்டு, ஸாரட்டில் ஏறிக்கொண்டுபோன காலத்தில் மோட்டார் வண்டியினுல் உங்களுக்குப் பிராணுபாயமான விபத்து நேரப் போகிறதென்பதை நீங்கள் கனவிலும் எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள். அதுபோல, நேற்றையதினம் சாயுங்காலம், நீ பூஞ்சோலைக்குப் போகுமுன், ஊஞ்சற்பலகையி னடியில் நாகப்பாம்பு வருமென்பதை நீ எதிர்பார்த்தே இருக்கமாட்டாய். மனிதருடைய உயிரும் உடலும் எங்கெங்கே போகின்றனவோ, அங்கங்கே அவைகளின் நிழல் போல, அபாயமும் கூடவே இருந்து வருகிறது என்று அன்றைய தினம் நீயே சொல்லி யிருக்கிருய். ஆகையால் இன்றையதினம் எனக்கு அபாயம் நேர்ந்ததைப்பற்றி நான் உனக்கு அதிகமாக சமாதானம் சொல்ல வேண்டுமென நினைக்கவில்லை. என்மேல் சுமத்தப் பட்டிருக்கும் மகா இழிவான இந்தத் திருட்டை நான் செய்யக் கூடியவ னல்லவென்பது உன் மனசுக்கே நிச்சயமாகத் தெரிந்த விஷயம். ஆனுலும் இதனுல் உனக்கு அபாரமான விசனமும் சகிக்க முடியாத அவமானமும் மனவேதனையும் ஏற்பட்டிருக்கு மென்பதைப்பற்றிச் சந்தேகமேஇல்லை. நான், திரிகரண சுத்தியாக, இந்தக் குற்றத்தையாவது வேறே எந்தக் குற்றத்தையாவது செய்தவனல்லவாகையால், பரம தயாளுவும் மகா நீதிமானுமாகிய கடவுள் என்னை அநியாயமாகத் தண்டிக்க மாட்டாரென்று நான் உறுதியாக நம்பி யிருக்கிறேன். ஆகையால், உனக்கும் எனக்கும் ஏற்பட்டுள்ள இந்த அவமானத்தையும் துயரத்தையும் ஈசுவரன் அதிசீக்கிரத்தில் நிவர்த்தி செய்து, நாமிருவரும் ஆநந்தம் மடையும்படி சேர்த்து வைப்பாரென்பதை நீ நிச்சயமாக நம்பலாம்.

கடவுள் பரம தயாநிதி யாகையால், அவருடைய மக்களாகிய நாம் அநியாயமாக வருந்துவதை அவர் பார்த்துக்கொண்டு அசட்டையாக இருக்காமல், எப்படியும் ஒரு வழிகாட்டி உதவுவாரென்பது என்னுடைய விஷயத்தில மெய்யாகிவிட்டது. நான் இருக்கும் இந்த நிராதரவான நிலைமையில், ஒரு முக்கியமான அதிகாரியின் அநுதாபமும், உதவியும் எனக்கு ஏற்பட்டிருக்கின்றன. நான் இந்தக் குற்

றத்தைச் செய்யவில்லை யென்பதை அவர் சந்தேகமறத் தெரிந்து கொண்டிருக்கிருராகையால் அவருக்கு என் விஷயத்தில் இப்படிப் பட்ட பெருத்த தயாளமும் இரக்கமும் உண்டாகி இருக்கின்றன. உடனே ஒருவக்கீலையமர்த்தி, என்பொருட்டு மாஜிஸ்டிரேட்டினிடத்தில் போய் வாதாடச் செய்தால், என்னை ஜாமீனின்மேல்இப்போது விடுவித்துக்கொண்டு போகலாமென்றும்,பிறகு இந்தவழக்கின்விசாரணை நடக்கும்போது, தக்க ஆதாரங்களைக் காட்டி, சாட்சியங்களை விடுத்து, விடுதலை பெறலாமென்றும், ஷை அதிகாரி யோசனை சொல்லுகிருர். அது எனக்கும் யுக்தமாகவே தோன்றுகிறது; நான் இந்தத் திருட்டு விஷயமாக உன் மனம் திருப்தி யடையும்படி சில சமாதானங்களை நேரில் சொல்லிக்கொள்ள வேண்டி இருப்பதாலும், வக்கீல் விஷயமாக ஆகவேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் சொல்லவேண்டி இருப்பதாலும், நான் இருக்குமிடத்திற்கு நீயே நேரில் வரும்படியான சிரமத்தை உனக்கு நான் கொடுக்கலாமென்று துணிந்து இந்தக் கடிதத்தை அனுப்பலானேன். நீ இங்கே வருகிருயென்பதைப் பிறர் அறிந்துகொண்டால், அதனால், உனக்கு ஒருவித இழிவும், பழிப்பும், அதைப்பற்றிப் பிறர் புரளி செய்யும்படியான சந்தர்ப்பமும் ஏற்படும். அதுவுமன்றி, நீ என்னிடத்தில் வந்து என்னைப் பார்ப்பதற்கு அநுமதி கொடுத்துள்ள, முன் குறிக்கப்பட்ட பெரிய உத்தியோகஸ்தருக்குப் பெருத்த துன்பம் நேர்ந்துவிடும். ஆகையால், நீ வருவது எவருக்கும் தெரியாதபடி மறைவான ஒரு பெட்டி வண்டிக்குள் உட்கார்ந்துகொண்டு வந்தால், இந்தக் கடிதம் கொண்டுவரும் ஆள் உன்னை நேராக என்னிடத்திற்கு அழைத்துக் கொண்டு வருவான். மற்ற சகலமான விஷயங்களையும் நாம் சவிஸ்தாரமாக நேரில் பேசிக்கொள்ளலாம்.

வீட்டிற்குள் அந்தப்புரத்தில் தெய்வம் போல வைத்துப் போற்றப்படத் தகுந்தவர்களான உன்னைப்போன்ற மெல்லியலார்களை அந்நிய புருஷர்கள் இருக்கக்கூடிய இப்படிப்பட்ட பொது ஸ்தலங்களுக்கு வரும்படி அழைப்பது,ஆண்மைத்தனமுள்ள புருஷர் செய்யத்தக்க காரியமல்லவானாலும், வேறே வழியில்லா திருப்பதாலும், இந்த உலகத்தில் உன்னைத்தான் நான் என்னுடைய உயிருக்குயிராக மதிப்பதாலும், நீ உன்னுடைய உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் எனக்காக தத்தம் செய்துவிட்டதாக நேற்றைய தினம் உறுதிமொழி கூறியதைக் கருதியும், நான் இந்த அபாயத்தி

லிருந்து என்னைத் தப்புவிப்பதான பெருத்த கீர்த்தியையும், புண்ணியத்தையும் உனக்கே உண்டாக்கிக் கொடுக்க எண்ணி உனக்கு இவ்வாறு எழுதத் துணிந்தேன்.

ஆனால், இன்னொரு முக்கியமான விஷயம். இந்தக் கடிதம் உன்னிடத்தில் வந்து சேரும்போது, அவ்விடத்து நிலைமையும், சந்தர்ப்பமும் சரியாக இருந்தால் மாத்திரம், நீ புறப்பட்டு வரலாம்; அங்கே அசந்தர்ப்பமாக இருந்தால், நீ உன்னுடைய சௌகரியம்போல நடந்துகொள்ளலாம்.

உன்னிடத்தில் நான் இவ்வளவு அதிகமாக உரிமை பாராட்டி இந்தக் கடிதம் எழுதிய விஷயத்தைப் பற்றி நீ ஆயாசப்பட மாட்டாயென்று நான் உறுதியாக நம்பி இருக்கிறேன். மற்றவை நேரில்.

இங்ஙனம், அன்பன்,

கண்ணபிரான்.

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த சௌந்தரவல்லியம்மாள் அளவற்ற வியப்பும் ஆத்திரமும் அடைந்தாள். "ஆகா! அப்படியா சங்கதி! ஊர்ச்சொத்தைக் கொள்ளையடித்து மானபங்கப்பட்டுச் சிறைச்சாலையில் அடைபட்டிருக்கும் இந்த மனிதப்பதர் கோகிலாம்பாளைச் சிறைச்சாலைக்கு வரும்படி எழுதியிருக்கிறனே! ஆகா! இவனுக்கு எவ்வளவு ஆணவமும் செருக்கும் உண்டாகிவிட்டன! எங்கள் யோக்கியதை என்ன! எங்களுக்கிருக்கும் அபாரமான செல்வமென்ன! இவன் யார்? எங்கள் வீட்டில் கேவலம் ஒரு சேவகன் வேலை செய்வதற்குக்கூட இவனுக்கு யோக்கியதை இல்லை. இவன் கோகிலாம்பாளைச்சிறைச்சாலைக்கு அழைக்கிறதாவது? அவளென்ன வயசான கிழவியா, அல்லது, சிறு குழந்தையா? சரியான பக்குவகாலமடைந்த குமரி! அவளைப் பார்த்துத் தான் அடைபட்டிருக்கும் இழிவான சிறைச்சாலைக்கு வரும்படி அந்தநாய் அழைக்கிறது! அதை சிரமேல் ஏற்று, இந்த எல்லாம் கற்ற முட்டாள் உடனே புறப்பட்டு ஓடுகிறது? வீட்டிற்குப் பெரியவளான தாய்க்குட்டிச்சுவர் அம்மா திரியே போகும்படி பெண்ணைக் கூட்டியனுப்பி விட்டு, சொந்தக்காரர் வீட்டுக்கு அவசர காரியத்தினிமித்தம் போவதாய்ச் சாக்கு சொல்லி அதை மெழுகுவது! என்ன ஆச்சரியம் இது! உலகத்தில் இப்படிப்பட்ட விநோதமும் நடக்குமா? இவர்கள் பூஞ்சோலையில் சந்தித்து ஆநந்தமாக இருக்க முயற்சித்தபோது ஏதோ

பெரிய இடையூறு நேர்ந்துவிட்டதாக எழுதியிருப்பது, நான் திடீ ரென்று போய் இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் கட்டிப்பின் னிக்கொண்டு கிடந்ததைக் கண்டு அதைப்பற்றி இவர்களைக் கண் டித்ததையே குறிக்கிறது. அப்படியானால் இவர்கள் பூஞ்சோலையில் செய்த காரியம் ஒழுங்கானது! நான் அதைப்பற்றி இவர்களைக் கண் டித்தது அக்கிரமச்செய்கை! இவர்கள் குதூகலமாய் ஒருவர் மடி யின்மேல் மற்றொருவர் படுத்து ஆநந்தமாகப் பேசிக் கொஞ்சிக் குலாவி மெய்ம்மறந்து போயிருந்தது இவர்களுடைய அபிப்பிராயத் தில் ஆநந்தமல்லவென்றால், இவர்கள் அப்போது அதற்கு மேலும் என்னென்ன செய்து ஆநந்தமடைய உத்தேசித்தார்களோ, அதற்கு இடையூறாக நான் போனேனோ தெரியவில்லை. இதிலிருந்து இவர் கள் அவ்விடத்தில் என்ன எண்ணத்தோடு சந்தித்தார்களென்பது எளிதில் விளங்குகிறது. இவர்கள் அங்கே சந்தித்து சகலமான விஷ யங்களையும் ஆசைதீரச்செய்து பார்த்துவிட எண்ணினார்களென் பதை ருஜுப்படுத்த இதைவிட வேறே அத்தாக்ஷி தேவையே இல்லை. கோகிலாம்பாளை மானபங்கப்படுத்த இந்த ஒரு கடிதமே போதுமானது. இன்னம் நிச்சயதார்த்தம்கூட சரியாக முடிய வில்லை. இதற்குள் இவர்கள் ரகசியத்தில் வெகுதூரம் முன்னால் சென்று சாந்தி கலியாணம் வரையில் நடத்திக் கொண்டார்களே! அதுவும் போதாதென்று அவன் அடைபட்டிருக்கும் சிறைச்சாலை க்குக்கூட இவள் போய் கொஞ்சமும் வெட்கம், சிக்கு, சூடு, சொரணை முதலியது எதுவுமில்லாமல் மூக்கறுந்தவளாய் போலீஸ் ஜெவான்களுக் கெதிரில் அவனுடன் பேசுகிறதாம்! தூ! மானங் கெட்ட நாய்கள்! இப்படியும் மனித சுபாவம் கெட்டுப் போகுமா! சிறைச்சாலையில் அடைபட்டிருக்கும் மனிதன் யாரையாவது ஒத் தாசைக்கு அழைக்கவேண்டுமானால், அதற்கு என் தாயார் இல்லை யா, அல்லது, அவனுடைய தாயார்தான் இல்லையா, அல்லது இன் னம் வேலைக்காரர்கள் இல்லையா? அவர்களுள் யாரையாவது வரு வித்துத் தனக்கு ஆகவேண்டியதைச் செய்து கொள்ளலாகாதா? இதற்குப் பதினாறு வயசுக் குமரி ஒருத்தி தேவையா? இதைப்பற்றி நினைக்க நினைக்க, இதில் ஏதோ சூதிருக்க வேண்டுமென்றே எண்ண வேண்டி யிருக்கிறது. அழகான யௌவனக் குமரியைச் சிறைச் சாலைக்குள் வரவழைத்து அவளோடு தான் பேசினால், அங்குள்ள போலீஸ் அதிகாரிகளும் ஜெவான்களும் அவளுடைய அழகைக் கண்டு மோகித்து இரங்கி அவனை விட்டுவிடுவார்கள் என்று

எண்ணி அவன் இவளை அழைத்திருக்க வேண்டும். அல்லது, இவளை யாராவது பெரிய அதிகாரியிடம் தூதாய் அனுப்பி, தன் விஷயத்தில், அநுகூலம் செய்யும்படி கேட்டுக்கொள்ளச் செய்தால் இவள் அவரை எப்படியாவது சரிப்படுத்தட்டும் என்று எண்ணி இவளை வரவழைத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால், மற்ற பெரியவர்களை விட்டு குறிப்பாக இவளை அழைத்ததற்கு யாதொரு முகாந்திரமு மில்லை. இவள் காலை எட்டு மணி சுமாருக்குப் போனுள். இப்போது நடுப்பகல் வேளை. இது வரையில் இவள் சிறைச் சாலையில் என்ன செய்கிறது? சாதாரணமான கருத்தோடு இவளை அவன் அழைத்திருந்தால், இவர்கள் அரை நாழிகை பேசப் போகிறார்கள்; அல்லது, ஒரு நாழிகைதான் பேசிக்கொண்டிருக்கப் போகிறார்கள். சரியாக அரை நாள் ஆய்விட்டதே! அவன் இவளை யாரிடத்திற்கோ அனுப்பி இருக்க வேண்டு மென்பதே நிச்சய மான விஷயம். ஆகா! கோகிலாம்பாள் இருந்த இருப்பென்ன! அவள் பேசும் வேதாந்தமென்ன! மற்றவருக்கு போதிக்கும் நீதிகளென்ன! அப்படிப்பட்ட புனிதவதி இப்போது தேவடியாள் தனத்தில் இறங்கிஇருப்பதென்ன! அடடா! உலகத்தில் அநேகமாய் எல்லோருமே இப்படித்தான் நடந்துகொள்வார்கள் போலிருக்கிறது! தாம் சம்பந்தப்படுகிற வரையில், தங்களை எந்த நீதியும் கட்டுப்படுத்தாது. தங்களுடைய சுயநலத்தை சாதித்துக் கொள்வதற்கு தாம் எப்படிப்பட்ட இழிவான காரியத்திலும் இறங்கலாம்; எதைவேண்டுமானாலும் கூசாமல் செய்யலாம். அவ்வளவும் நியாயமும் அவசியமானசெய்கை. மற்றவருக்கு எப்படிப்பட்ட சந்தர்ப்பம் நேர்ந்தாலும், அவர்கள் அற்ப தவறும் செய்யாமல், திராசுமுனை நிற்பதுபோல நடுநிலை தவறாமல் ஒழுங்காய் நடந்துகொள்ளவேண்டும். ஒரு மயிரிழை தவறி நடந்தாலும், அதோடு குடி முழுகிப் போய்விட்டதென்று சொல்லி இப்பேர்ப்பட்ட சுயநலவாதிகள் அமர்க்களப் படுத்திவிடுவார்கள். இருக்கட்டும். அந்தக் கோகிலாம்பாள் வரட்டும். நான் இன்று அவளை இலேசில் விடுகிறதில்லை. இன்றோடு அவள் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகவேண்டும், அல்லது வீட்டை விட்டு இராத்திரியே ஓடிப்போக வேண்டும். அப்படிப்பட்ட பெரிய மானபங்கம் பண்ணி விடுகிறேன். இந்தக் கடிதத்தை நான் புஷ்பாவதி யம்மாளிடம் காட்டுவது சரியல்ல. காட்டினால், இவளும், இவளுடைய தமயனாரும் இவர்களிடம் வைத்துக்கொண்டிருக்கும் கொஞ்ச மதிப்பும் அடியோடு போய்விடும். இவளுடைய

தமயனார் என்னைக் கட்டிக் கொள்ளமாட்டேனென்று சொன்னாலும் சொல்லிவிடுவார். அதுவுமன்றி, அவள் புறப்பட்டுப் போயிருப்பதைப்பற்றி இவர்களுடைய மனம் ஏற்கெனவே ஆயாசப்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த நிலைமையில் இந்தக் கடிதத்தை இவர்கள் பார்த்தால், அது எரிகிற நெருப்பில் எண்ணெயை வார்த்த மாதிரி முடியும். இன்று இரவு எப்படியாவது அவரை நான் வரவழைத்து வைத்துக்கொண்டு, அக்காள் செய்தமாதிரி நானும் செய்து சந்தோஷப்பட வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், என் ஆவல் அடங்காதுபோலிருக்கிறது. என் உடம்பு அவர்களை நினைத்துக் கட்டிலடங்காமல் பறந்துகொண்டிருக்கிறது. என் மனம் பைத்தியம் பிடித்தமாதிரி அதே நினைவாய் நினைத்து என்னைச் சதாகாலமும் கொன்றுகொண்டே இருக்கிறது. எப்படியாவது நான் இன்று இரவு புஷ்பாவதியின் தமயனாரை வரவழைத்து அவருடன் பேசி அந்த ஆநந்தம் எப்படி இருக்கிறதென்பதைப் பார்த்தே தீரவேண்டும். அக்காள் வரட்டும். அவளுக்கு நான் வழி சொல்லுகிறேன். இவர்களுடைய துர்க்குணங்களும், துர்நடத்தையும் என் மனசுக்குப் பிடிக்கவில்லையென்றும், சுத்தமான மனுஷி என்றும், நான் புஷ்பாவதிக்கும், அவளுடைய தமயனாருக்கும் இன்று எப்படியாவது மெய்ப்பித்துக் காட்டிவிடுகிறேன்'' என்று சௌந்தரவல்லியம்மாள் தனக்குள்ளாகவே பலவாறு எண்ணமிட்டு, ஒருவிதமாக முடிவு செய்துகொண்டு கண்ணபிரானது கடிதத்தைச் சிறிதாக மடித்து, அதைத் தனது இரவிக்கைக்குள் சொருகி பத்திரப்படுத்திக் கொண்டு போஜனம் செய்து அலுத்து உறங்குகிறவள் போலத் தனது மஞ்சத்தில் வெகுநேரம் வரையில் படுத்திருந்தாள்.

புஷ்பாவதியம்மாளும் பூஞ்சோலையம்மாளும் தங்களது போஜனத்தை முடித்துக்கொண்டதும், பிற்பகலில் சுமார் நான்கு மணி வரையில் உட்கார்ந்து சம்பாஷித்திருந்ததும், காலையில் வண்டிக்கார முருகேசன் வந்து பூஞ்சோலையம்மாளிடம் தனிமையில் பேசியதும், புஷ்பாவதியம்மாள் பிற்பகலில் நித்திரையிலாழ்ந்து போனதும், அந்த சமயத்தில் பூஞ்சோலையம்மாள் கோகிலாம்பாளைத் தேடும் பொருட்டுப் புறப்பட்டுப் போனதும் முன்னரே விரிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே, நாம் அவைகளை விட்டு, மேலே நிகழ்ந்த வரலாற்றைக் கூறுவோம்,

பூஞ்சோலை யம்மாள் தனது பங்களாவை விட்டுப் புறப்பட்டுப் போன பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம், அவர்களது பங்களாவிலி ருந்த டெலிபோன் யந்திரத்தில் மணி கணகணவென்று அடித்துக் கொண்டது. அந்த டெலிபோன் யந்திரம் ஸ்திரீகளின் மகாலில் ஒரு பக்கத்தில் வைக்கப்பட்டிருந்ததென்பதை இவ்விடத்தில் நாம் குறிப் பிடுவதவசியம். அந்த மகாலின் மூன்று பக்கங்களில் முறையே பூஞ் சோலை யம்மாள், செளந்தரவல்லி யம்மாள், கோகிலாம்பாள் ஆகிய மூவரது படுக்கையறைகளும் தனித்தனியாக அமைக்கப்பட்டிருந் தன. ஷை மகாலில் டெலிபோனின் மணி ஒலித்தால், அது பக்கத்தி லிருந்த மூன்று சயன அறைகளிலும் உடனே கேட்கும்! ஆகவே, மேலே கூறப்பட்டபடி பிற்பகல் நான்கு மணிக்குப் பிறகு டெலி போன் யந்திரம் ஒலித்தகாலத்தில் செளந்தரவல்லி யம்மாள் தனது சயனக்கிரகத்தில் பலவகைப் பட்ட எண்ணங்களினாலும் ஆவலினா லும் வதைப்பட்டுப் படுத்திருந்தாள். தனது தாய் கோகிலாம்பாளைத் தேடும்பொருட்டுப் புறப்பட்டுப் போயிருக்கிறாளென்றும், புஷ் பாவதி யம்மாள் படுத்துத் தூங்கிக்கொண் டிருக்கிறாளென் றும் வேலைக்காரியின் மூலமாய்த் தெரிந்துகொண்டு, புஷ்பாவதி யம் மாள் எப்போது விழித்து எழுந்திருப்பாள் என்ற ஆவலுடன் சயனித்திருந்தவள், டெலிபோனின் ஓசையைக் கேட்கவே, அவளுக் குக்கோகிலாம்பாளைப்பற்றிய நினைவே உண்டாயிற்று. அவள் பங் களாவுக்குத் திரும்பி வாராமல் அவ்வளவு காலம் வெளியில் தங்க நேர்ந்ததைப் பற்றித் தங்களது தாய்க்கு ஏதேனும் சமாதானம் சொல்லுவதற்காக அவள் எங்கிருந்தாவது அழைக்கிறாளோ என்ற எண்ணம் தோன்றியது. அவள் தனது அக்காளிடம் கொண்டிருந்த அருவருப்பும், கோபமும் உடனே அபாரமாய்ப் பெருக வாரம்பித் தன. அவளுடன் தான் பேசுவது தகாதென்ற க்ஷாத்திர நினைவும் வெறுப்பும் தோன்றின. ஆகவே, அவள் அலட்சியமாக ஒரு வேலைக் காரியை அழைத்து, "அடீ! ஜெயா! டெலிபோனில் யாரோ-பேசக் கூப்பிடுகிறார்கள். போய்ப்பேசி, யார் கூப்பிடுகிறார்கள் என்பதை யும், விஷயம் என்ன என்பதையும் தெரிந்துகொண்டுவா" என்றாள்.

உடனே அந்த வேலைக்காரி டெலிபோனண்டை சென்று அதை எடுத்து வைத்துக்கொண்டு பேசிவிட்டு உடனே செளந்தர வல்லி யம்மாளை நோக்கி அவசரமாய்ப் பேசத்தொடங்கி, "அம்மா! மயிலாப்பூரிலுள்ள ஜெமீந்தார் ஐயா புஷ்பாவதி யம்மாளுடன் பேச

வேண்டுமாம். அவர்களை டெலிபோனண்டை அனுப்பும்படி சொல்லுகிறார்கள்" என்றாள்.

அதைக் கேட்ட சௌந்தரவல்லி யம்மாள் திடுக்கிட்டெழுந்து உட்கார்ந்துகொண்டு, "ஆ! மயிலாப்பூரிலிருந்து அவர்களா கூப்பிடு கிறார்கள்! புஷ்பாவதி யம்மாளையா கூப்பிடுகிறார்கள்!" என்று ஓங் கிய குரலில் வியப்பாகக் கூறினாள். அப்போது புஷ்பாவதி யம்மாள் அந்த மகாலுக்குப் பக்கத்திலிருந்த பூஞ்சோலை யம்மாளது சயன விடுதியில் படுத்திருந்தாள். அவள் நெடுநேரமாக அயர்ந்து துயின்று கொண்டிருந்தமையால், அப்போது அவளது தூக்கம் கலைந்து கொண்டிருந்த சமயமாதலால், வேலைக்காரியும், சௌந்தரவல்லி யம் மாளும், "புஷ்பாவதி" என்ற பெயரை இரண்டு மூன்று தரம் உச்ச ரித்தது அவளது உணர்வில் படவே, அவள் சரேலென்று விழித்துக் கொண்டெழுந்து உட்கார்ந்து தனது முகத்தை துடைத்துக்கொண்ட வண்ணம் மகாலிலிருந்த வேலைக்காரியைப் பார்த்து, "என்ன ஜெயா? என்னையா கூப்பிடுகிறார்கள்? யார் கூப்பிடுகிறது?" என்று வினவினாள். வேலைக்காரி, "ஆம், அம்மா! மயிலாப்பூரிலிருந்து உங்கள் தமயனார் உங்களைக் கூப்பிடுகிறார்கள்" என்றாள். உடனே புஷ்பாவதியம்மாள் சரேலென்று எழுந்து பாய்ந்து சென்று டெலிபோன் யந்திரத் தண்டைபோய் அதை வாங்கி வைத்துக்கொண்டு பேசத்தொடங்கி னாள். ஓரிடத்திலுள்ள ஒருவர் இன்னோரிடத்திலுள்ள வேறொருவரு டன் டெலிபோன் யந்திரத்தின் மூலமாய்ப் பேசினால், பக்கத்தி லுள்ள மனிதர்களுக்குச் சமீபத்திலுள்ளவர் பேசுவதே கேட்கு மன்றி தூரத்திலுள்ளவர்கள் பேசுவது கேட்காதென்பது எல்லோ ருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே, புஷ்பாவதி யம்மாள் பேசியது மாத்திரம் சௌந்தரவல்லி யம்மாளுக்கும் வேலைக்காரிக்கும் தெரிந்த தேயன்றி, சுந்தரமூர்த்தி முதலியார் என்ன பேசினாரென்பது அவர் களுக்குத் தெரிய ஏதுவில்லை. அவர்களிருவரும் சம்பாஷித்திருந்த காலத்தில் இடையில் புஷ்பாவதியம்மாள் தனக்குப் பக்கத்திலிருந்த வேலைக்காரியைப் பார்த்து, "அடி ஜெயா! பெரிய அம்மாள் இப் போது எங்கே இருக்கிறார்கள்?" என்று கேட்க, வேலைக்காரி, "அவர் கள் ஏதோ அவசர காரியமாய் வண்டியில் எங்கேயோ போயிருக் கிறார்கள்?" என்றாள். அதைக் கேட்ட புஷ்பாவதி பூஞ்சோலை யம் மாள் அநேகமாய்க் கோகிலாம்பாளைத் தேடிக்கொண்டே போயி ருக்க வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டதன்றி வேலைக்காரியை

யும் அவ்விடத்தை விட்டுப் போகும்படி அனுப்பிவிட்டு, சுந்தரமூர்த்தி முதலியாருடன் அரை நாழிகை நேரம் வரையில் சம்பாஷித்துக் கொண்டிருந்தாள். அவர் அன்று காலையில் மினியனுடன் மோட்டார் வண்டியில் உட்கார்ந்து கோகிலாம்பாளின் வண்டியைத்தொடர்ந்து போனது முதல் கடைசியில் தாம் கோகிலாம்பாளை சிப்பாயிகளிடத்திலிருந்து மீட்டுத் தமது பங்களாவில் கொணர்ந்து வைத்திருந்தது வரையிலுள்ள வரலாறு முழுதையும் சுருக்கமாக அவளிடம் கூறியதன்றி, பூஞ்சோலையம்மாள் கோகிலாம்பாளைத் தேடிக்கொண்டு போயிருக்கிருள் என்பதை அவள் கூறத் தெரிந்துகொண்டு முடிவாக அவளிடம் முக்கியமான ஒரு விஷயமும் கேட்டுக்கொண்டார். "புஷ்பாவதி! இந்த விவரத்தையெல்லாம் இப்போது நீ செளந்தரவல்லி முதலிய எவரிடத்திலும் வெளியிட வேண்டாம். நான் இப்போது உன்னிடம் என்ன பேசினேனென்று அவர்கள் கேட்டால், நீ எப்போது அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு இங்கே வருவாயென்று நான் உன்னைக் கேட்டதாகவும், பூஞ்சோலையம்மாள் பங்களாவை விட்டு எங்கேயோ போயிருப்பதாகவும், அவர்கள் திரும்பி வந்து சேர்ந்தவுடன் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அவர்கள் எப்போது போக அநுமதி கொடுக்கிருர்களோ அப்போது வருவதாய் நீ எனக்குச் சொன்னதாகவும் சொல்லிவிடு. நான் இவ்விடத்தில் கோகிலாம்பாளுடன் நயமாகப் பேசி அவள் நம்முடைய ஏற்பாட்டுக்கு இணங்கும்படி சொல்லிப் பார்க்கிறேன். அவள் இணங்கிவிட்டால், நான் உடனே அவளை வண்டியில் வைத்துக்கொண்டு மாலைக்குள் அங்கே வருகிறேன். அவள் நம்முடைய பிரியப்படி இணங்கி வராமல் கண்ணபிரானையே கட்டிக்கொள்ளப் போவதாய் ஒரே பிடிவாதமாகப் பேசினுல் நான் மறுபடி டெலிபோனில் உன்னைக் கூப்பிடுகிறேன். நீ டெலிபோனுக்கு வரவேண்டாம். எப்படியாவது நீ தந்திரம் செய்து, உனக்குப்பதிலாக செளந்தரவல்லியம்மாள் டெலிபோனுக்கு வந்து என்னுடன் பேசும்படி செய்துவிடு. நான் உன்னிடம் உள் ரகஸியத்தை யெல்லாம் சொல்வதுபோல அவளிடம் நேரில் எல்லா விஷயங்களையும் சொல்லி அவளைத் தூண்டிவிடுகிறேன். அவள் மூலமாகவே அதன் பிறகு நாம் நம்முடைய காரியத்தைச் சாதித்துக் கொள்வோம்" என்று கூறி முடித்தார். அதைக் கேட்டு அப்படியே செய்வதாகக் கூறிவிட்டு புஷ்பாவதியம்மாள் டெலிபோனை வைத்து விட்டு உல்லாஸமாக நடந்து செளந்தரவல்லியம்மாளின் சயன அறையை அடைந்து, "என்ன செளந்தரா! தூக்கமா? என்று வாஞ்சையாகவும் நயமாகவும் வினவினுள்.

அதைக் கேட்ட சௌந்தரவல்லி யம்மாள் மிகுந்த களிப்பும் குதூகலமு மடைந்தவளாய் முக மலர்ச்சியுடன் சரேலென்று எழுந்து உட்கார்ந்துகொண்டு, "வா; புஷ்பாவதி! நான் தூங்கவில்லை; விழித்துக் கொண்டுதா னிருக்கிறேன். வா. வந்து இப்படி என் பக்கத்தில் உட்கார்ந்துகொள்" என்று வாஞ்சையோடும் உருக்கமாகவும் கூறி உபசரித்துப் புஷ்பாவதியைக் கட்டிப்பிடித்து ஆசையோடு இழுத்துக் கட்டிலின்மீது தனக்குப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள்.

புஷ்பாவதியம்மாள் மிகுந்த மகிழ்ச்சியும் உல்லாஸமும் தோற்றுவித்து, "என்ன சௌந்தரா! காலையில் பெண்ணை அனுப்பிவிட்டு, இப்போது அம்மாளும் போய்விட்டார்கள்போலிருக்கிறதே! தமக்கு இங்கே அவசர காரியமிருப்பதனால், தாம் ஒரு நிமிஷங்கூட இவ்விடத்தை விட்டு அசைய முடியவில்லை யென்றும், அதனால் தாம் கோகிலாம்பாளைத் தனிமையில் அனுப்புவதாகவும் அம்மாள் சொன்னார்களே! இப்போது அவர்களே போய்விட்டார்களே? இரண்டு பேர்களும் ஒரே காரியத்தை உத்தேசித்துப் போயிருப்பார்களா. அல்லது, அம்மாள் வேறே இன்னம் ஏதாவது காரியத்தை உத்தேசித்துப் போயிருப்பார்களா? இவர்கள் எப்போது திரும்பிவருவார்களென்பது தெரியவில்லையே! என் தமயனார் இப்போது டெலிபோன் மூலமாய் என்னோடு பேசி, நான் எப்போது அங்கே வருவேனென்றும், எனக்காக வண்டி அனுப்பலாமா வென்றும் கேட்டார். நான் அதற்குச் சரியான உத்தரம் சொல்ல முடியவில்லை. காலையில் கோகிலாம்பாள் பங்களாவை விட்டு எங்கேயோ போயிருக்கிறாளென்ற விஷயம் அவருக்குத் தெரியும். அதுவே அவருடைய மனசுக்கு சுத்தமாய்ப் பிடிக்கவில்லை. இப்போது அம்மாளும் அவளைத் தேடிக்கொண்டு போயிருக்கிறார்க ளென்றால், இன்னம் அவர் பல வகையில் சந்தேகங் கொள்வார். அதுவுமன்றி முக்கியஸ்தர்களான இருவரும் இல்லாதபோது எனக்கு இங்கே எவ்வித அலுவலுமில்லையாகையால் என்னை அழைத்துக்கொண்டு போக அவர் வண்டியை அனுப்பிவிடுவார். நான் ஒரு மாதிரியாய்ச் சொல்லி அவரை அனுப்பிவிட்டேன். நான் இன்று காலை முதல் இங்கே இருந்து என்ன சாதிக்கிறேனென்பது எனக்கே தெரியவில்லை. லக்ஷணமாய் சாப்பிடுவதையும், சுகமாய்த் தூங்குவதையும் தவிர, நான் இங்கே வேறே எந்த விதத்திலும் உபயோகப் படுவதாகத் தோன்றவில்லை. இவர்கள் இருவரும் ஏதோ முக்கியமான காரியத்

ஷைதக் கருதி எங்கெங்கோ போய் அலைந்துகொண் டிருக்கிருர்கள். நான் சும்மா இருப்பது என் மனசுக்கு ஒரு விதத்தில் வேதனையாக இருந்தாலும், உன்னை விட்டுப் பிரிந்து போக என் மனம் இடந்தர வில்லை. அதை எண்ணியே நான் என்தமயனுரை சமாதானப்படுத்தி யனுப்பிவிட்டேன்." என்று நிரம்பவும் உருக்கமாகவும் வாஞ்சை யோடும் மொழிந்தாள்.

அவளது சொற்களை உண்மையாகவே மதித்த சௌந்தரவல்லி யம்மாளினது மனமும் கண்களும் கலங்கி இளகின. கண்ணீரும் துளித்தது. அவள் மிகுந்த வாத்ஸல்யமும் நன்றி விசுவாசமும் பொங்கிய மனத்தினளாய், "புஷ்பாவதி! நான் உன்னிடத்திலும் உன் தமயனுரிடத்திலும் வைத்துள்ள பிரேமையும் வாஞ்சையும் இவ் வளவு அவ்வளவென்று சொல்லமுடியாது. அதுபோலவே நீங்களும் என்மேல் உண்மையான மதிப்பும் பாசமும் வைத்திருக்கிறீர்கள். உங்களுடைய நல்ல மனசைக்கெடுப்பதற்கு, தாயும் மகளும்சேர்ந்து என்னென்னவோ தகாத காரியங்களை யெல்லாம் செய்து என் அங்க மெல்லாம் குன்றிப் போகும்படியும், என்மனம் புண்பட்டுப் பதறும் படியும் நடந்துகொள்ளுகிருர்கள். நீங்கள்என்மேல் மனப்பூர்வமான பிரியம்வைத்திருப்பது உண்மையானுல் அவர்கள் செய்வதைக்கருதி நீங்கள் என்னைத் தண்டிக்கக்கூடாது. அம்மாளும், அக்காளும் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, நீ இன்று முழுதும் இங்கே இருந்துதான் போகவேண்டும். என் மனம் படும்பாட்டிற்கு,நீஇந்த சமயம் இங்கே இருப்பது தேவாமிருதம் சாப்பிடுவதுபோல அவ் வளவு அதிக இன்பகரமாகத் தோன்றுகிறது. இந்த சமயத்தில் நீ என்னை விட்டுப்போகவே கூடாது. அதுவுமன்றி எனக்குச்செய்த வாக்குறுதியை எப்படியும் இன்றிரவு நீ நிறைவேற்றியே தீரவேண் டும். நீ இப்போது அவர்களுடன் டெலிபோன் வழியாக அரை நாழிகை வரையில் பேசினுயே, இவ்வளவுதானு பேசினீர்கள்? வேறு எதைப்பற்றியும் நீங்கள் பேசவில்லையா? அவர்கள் இன்றிரவு இங்கே வருவதைப்பற்றி நீயாவது அவராவது எவ்வித பிரஸ்தாப மும் செய்யவில்லையா? அவர் என்னைப்பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையா?" என்று மிகுந்த ஆவலும் உருக்கமும் தோன்றக் கூறினுள்.

புஷ்பாவதி சந்தோஷமாகப் புன்னகைசெய்து நயமாகப் பேசத் தொடங்கி, "என்ன சௌந்தரா! நான் உன்னைப்பற்றிப் பேசாமல்

விட்டிருப்பேனென்று நினைக்கிறாய்? நானும் அவரும் பேசும்போது உன்னைப்பற்றிய பேச்சைத்தவிர வேறு முக்கியமான பேச்சே கிடையாதே. நான் இங்கே இருப்பதும், அவர் அடிக்கடி இங்கே வருவதும் யாரைப்பற்றி என்று நினைக்கிறாய்? என் தமயனாரும் நானும் உன்னிடம் வைத்துள்ள ஆசை இவ்வளவுதான் என்று நான் எப்படி உனக்கு எடுத்துக் காட்டப்போகிறேன். அவர் எப்போதும் உன் பைத்தியமே பைத்தியமாகப் பிடித்தலைகிறார். அவர் பத்து வார்த்தைகள் சொன்னால் ஒன்பது வார்த்தைகள் என்னைப்பற்றியதாகவே இருக்கின்றன. அவர் எப்போது என்னோடு பேசினாலும், அவர் என்ன கேள்வி கேட்கிறார் தெரியுமா? சௌந்தராவுக்கு என்னைக் கட்டிக்கொள்ள உண்மையில் ஆசைதானா? நான் அவளிருக்கும் இடத்துக்குத் தனியாக வந்தால், அவள் கூச்சமில்லாமல் என் இஷ்டப்படி நடந்துகொள்வாளா, அல்லது, பிணங்கிக்கொண்டு தூரப் போய் மறைந்து நிற்பாளா, அவள் அடிக்கடி என்னைப்பற்றியே பேசுகிறாளா என்று அவர் இந்த மாதிரி உன்னைப்பற்றிய கேள்விகளையே கேட்கிறாரே யன்றி, வேறு எதையும் கேட்கிறதில்லை" என்றாள்.

சௌந்தரவல்லி அளவற்ற ஆநந்தமும் குதூகலமும் அடைந்து பூரித்துப்போய் முகமலர்ச்சி யடைந்து பரவசமுற்று, "ஆ! அப்படியா! ஐயோ! நீ சொல்வதைக் கேட்க கேட்க சந்தோஷம் என்னை அப்படியே ஆகாசத்தில் தூக்கிக்கொண்டு போகிறது. புஷ்பாவதி ஐயோ! இந்தப் பாழும் பொழுது தொலையமாட்டேனென்கிறதே! எப்பொழுது இரவு வருமோ தெரியவில்லையே! எப்பொழுது நான் என் மனமாற, என் ஆசைதீர, என் உள்ளங் குளிர அந்த துரையைக் கண்டு அவருடன் ஒரு வார்த்தையாவது பேசுவேனோ! ஆகா! நீ இப்போது டெலிபோனில் அவர்களுடன் பேசியபோது, அவர்கள் என்ன பேசுகிறார்களென்று அறிய வேண்டுமென்று என் மனம் எவ்வளவு அதிகமாய்த் துடித்துப் பதறியது தெரியுமா? அவர்களுடன் நானும் தாராளமாய் டெலிபோனில் பேசும்படியான காலம் எப்போது வரப்போகிறது புஷ்பாவதி! ஐயோ! நான் என்ன செய்வேன்! என் தேகம் கட்டில் அடங்காமல் தவித்துப் பறக்கிறதே! இந்த என் வேதனை எப்போது தீருமோ தெரியவில்லையே!" என்று முற்றிலும் உருக்கமாகக் கூறினாள்.

அப்போது புஷ்பாவதி நயமாகப் புன்னகை செய்து, "சௌந்தரா! கவலைப்படாதே! நீயும் அவரும் கலந்து பேசி ஆநந்தமாக

இருக்கும் காலம் சமீபத்தில் நெருங்கிவிட்டது. பொறுத்தது பொறுத்தாய்; இன்றுஇரவு பத்துமணி வரையில் பொறுத்துக்கொள். நான் எப்படியாவது பிரயத்தனப்பட்டு அவரை வரவழைக்கிறேன். அதுவரையில் உனக்குப் பொறுக்காது போலிருந்தால் நீ இன்னொரு காரியம் செய்கிருயா? மறுபடி என் தமயனுர் என்னை டெலி போனில் கூப்பிட்டு என்னுடன் பேசுவதாய்ச் சொல்லி இருக்கிருர். எனக்குப் பதில் நீ டெலிபோனிலிருந்து அவருடன் பேசுகிருயா? "யார் பேசுகிறது" என்று அவர் கேட்டால், "புஷ்பாவதி" யென்று நீ சொல்லிவிட்டு அவருடன் பேச்சுக் கொடு. அவர் உன்னைப்பற்றி யும் உன் அக்காள் முதலியோரைப் பற்றியும் என்னசொல்லுகிரு ரென்பதை நீயே நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். அதன் பிற காவது உன் மனம் கொஞ்சம் சமாதானப்படும்" என்ருள்.

அந்த யுக்தியைக் கேட்ட சௌந்தரவல்லியம்மாள் கட்டிலடங் காப் பெருமகிழ்ச்சியும் குதூகலமு மடைந்தவளாய், "ஆம், புஷ்பா வதி. நல்ல யோசனை சொன்னுய்! அப்படியே பேசுகிறேன். ஆனல், அவர்கள் மறுபடி இன்று டெலிபோன் வழியாய்ப் பேசுவார்களோ மாட்டார்களோ! அல்லது, அதற்குள் அம்மாள் திரும்பி வந்துவிட் டால் அதுவும் இடைஞ்சலாய்ப் போகும்" என்ருள்.

புஷ்பாவதி, "என் தமயனுர் இவர்களைப்பற்றிப் பலதடவை ஆவலாய்க் கேட்டாராகையால் இதை நிச்சயமாய்த் தெரிந்துகொள் ளுகிறவரையில் அவர் சும்மா இருக்கமாட்டார். ஆகையால், அவர் மறுபடி அவசியம் பேசுவாரென்றே நம்புகிறேன். அவர் பேசாவிட் டால், நானுவது அவரை டெலிபோன் மூலமாய்க் கூப்பிட்டு அவரு டன் பேச்சுக் கொடுத்து, நடுவில் நான் விலகிக்கொண்டு உன்னை விட்டு விடுகிறேன். நீ பேசலாம். உன் அம்மாள் முதலியோர் வந்தா லென்ன? நான் எப்படியாவது தந்திரம் செய்து அவர்களை அப்பால் அழைத்துக்கொண்டு போய்விடுகிறேன். அப்போதும் நீ பேசலாம்' என்ருள்.

அந்த ஏற்பாட்டையும் சௌந்தரவல்லியம்மாள் மகிழ்ச்சியோடு ஆமோதித்தாள். அதன்பிறகு அவர்களிருவரும் சந்தோஷமாகவும் வேடிக்கையாகவும் வெகுநேரம் வரையில் சம்பாஷித்துக் கொண்டே இருந்தனர். சௌந்தரவல்லியம்மாள் சுந்தரமூர்த்தி முதலியாரை நினைத்து விரகவேதனையுற்று ஆவல் தீயினல் தகிக்கப்பட்டு எப்

போது இரவு வேளை வருமோவென்றும், எப்போது டெலிபோன் யந்திரம் ஒலிக்குமென்றும் சதாகாலமும் ஜெபித்து தியானம் செய்து கொண்டிருந்தாள். தான் சுந்தரமூர்த்தி முதலியாருடன் டெலிபோனில் பேசி முடிக்கிறவரையில் தனது தாயும் கோகிலாம்பாளும் வராமலிருக்கவேண்டுமே என்று தெய்வங்களையெல்லாம் வேண்டிய வண்ணம் தவித்திருந்தாள். நாழிகை ஏறஏற அவளது தேகமும் மனதும் கட்டிலடங்காமல் துடிக்கத் தொடங்கின. அவளது ஆவலும் வேதனையும் மலைபோலப் பெருகி உச்சநிலையை யடைந்தன. அப்போது மாலைப் பொழுதும் வந்தது. பங்களாவில் வேலைக்காரர்கள் விளக்கேற்றினர். அப்போது பூஞ்சோலையம்மாளாகிலும் கோகிலாம்பாளாகிலும் வந்து சேரவில்லை. புஷ்பாவதியும் சௌந்தரவல்லியம்மாளும் ஒரே இடத்தில் நெடுநேரமாய் உட்கார்ந்திருந்தனராதலால் தாங்கள் டெலிபோனண்டையில் ஒரு வேலைக்காரியை வைத்துவிட்டு, அது ஓசை செய்தால் உடனே ஓடிவந்து தங்களிடம் செய்தி சொல்லும்படி அவளிடம் திட்டம் செய்துவிட்டு, தாங்கள் இருவரும் அவ்விடத்தை விட்டு வெளியில் போய்ப் பூஞ்சோலைப் பக்கத்தில் சிறிதுநேரம் நடந்து விட்டுத் திரும்பி வரலாமென்ற எண்ணம் தோன்றவே, அதைக் கருதி அவர்களிருவரும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட ஆரம்பித்தனர். அதே சமயத்தில், டெலிபோனில் மணி கணகணவென்று அடித்துக் கொண்டது. அதைக் கேட்க, அவர்களிருவரும் திடீரென்று மிகுந்த களிப்பும், ஊக்கமும், மயிர்ச்சிலிர்ப்பும் அடைந்தனர். முக்கியமாய் சௌந்தரவல்லியம்மாளின் மனம் இன்னதென்று விவரிக்க இயலாத பலமான எழுச்சியையும், துடிதுடிப்பையும், ஆவலையும், கொண்டு அவளைப் பலமாக ஊக்கியது. உடனே புஷ்பாவதி அவளை நோக்கி, "சௌந்தரா! கூப்பிடுகிறது அநேகமாய் என் தமயனாராய்த்தானிருக்கவேண்டும். போய்ப் பேசு. நானும் உன்பக்கத்திலேயே நிற்கிறேன். யார் பேசுகிறதென்று அவர்கேட்டால், தயங்காமல் என் பெயரைச் சொல். அவர் கேட்கும் எந்த சங்கதிக்காவது பதில் சொல்ல உன்னால் முடியாவிட்டால், உடனே என் பக்கம் திரும்பி அதைச் சொல்; நான் உனக்கு வேண்டிய தகவலைத் தெரிவிக்கிறேன். அதை வைத்துக்கொண்டு நீ பேசு. நான் பேசுவது போலவே நீ தாராளமாகப் பேசவேண்டும். நாணத்தினால் நீ திக்கித்திக்கிப் பேசினால், அவர் உடனே சந்தேகங்கொண்டு, பேசுகிறது நானல்லவென்று கண்டுபிடித்து விடுவார்" என்று கூறி, எச்சரித்தாள்.

சௌந்தரவல்லி யம்மாள் தனக்குப் புருஷராய் வரப்போகும் மணமகனுடன் தான் பேசப் போவதைப்பற்றி அபாரமான சந்தோஷமும் பூரிப்பும் அடைந்து மெய்ம்மறந்து போனவளாய் விரைவாக நடந்து டெலிபோனண்டை போய்ச் சேர்ந்தாள். அதை எடுக்கும்போதே அவளது கைகளும் தேகமும் வெடவெடவென்று ஆடத்தொடங்கின. தான் புஷ்பாவதி யல்லவென்றும், சௌந்தரவல்லியென்றும் சுந்தரமூர்த்தி முதலியார் கண்டுகொண்டால் அவர் தன்னைப்பற்றி ஏதேனும் தப்பபிப்பிராயம் கொள்வாரோ என்ற அச்சம் ஒரு புறத்தில் அவளை வதைத்தது. தான் அவருடன் சுவாரஸ்யமாக சம்பாஷித்துக்கொண் டிருக்கையில், தனது தாயார், அல்லது, அக்காள் ஆகிய எவரேனும் வந்துவிட்டால், தான் சுந்தரமூர்த்தி முதலியாருடன் பேசியதாக வெளியிட நேருமே என்ற திகிலும் இன்னொரு புறத்தில் வருத்தியது. அவ்வாறு தவித்த வண்ணம் சௌந்தரவல்லி யம்மாள் டெலிபோனைக் கையிலெடுத்து வைத்துக்கொண்டு, "யார் கூப்பிடுகிறது?" என்று வினவினாள்.

மயிலாப்பூரில் தமது பங்களாவில் இருந்த சுந்தரமூர்த்தி முதலியாரே அப்போதும் டெலிபோன் வழியாய்ப் பேச எத்தனித்தவரென்பது நாம் கூறாமலேயே விளங்கி இருக்கும். அவர் உடனே மறுமொழி கூறத்தொடங்கி, "யார் அது? புஷ்பாவதியா?" என்று நயமாகவும் அன்பாகவும் வினவினார்.

அவரது குரலைக் கேட்கும்போதே சௌந்தரவல்லி யம்மாளது தேகத்தில் ஆநந்தம் பாவத் தொடங்கியது. உரோமம் சிலிர்த்து உச்சியைப் பிடித்து உலுக்க வாரம்பித்தது. இன்பப் பெருக்கினால் தேகம் பரவசமடைந்தது. மூளை சுழலவாரம்பித்தது. தனக்கு அத்தகைய பேரின்பத்தை உண்டாக்கும் தனது மணவாளர் அப்போது தனக்கருகில் இல்லையே என்றும், இருந்தால் அப்போது அந்த சுகம் இன்னம் ஆயிரமடங்கு அதிகமாயிருக்குமே யென்றும் நினைத்து ஆவலினாலும் ஆசையினாலும் துடி துடித்தவளாய் மறுமொழி கூறத்தொடங்கி, "ஆம்; நான் புஷ்பாவதிதான்" என்றாள்.

உடனே சுந்தரமூர்த்தி முதலியார், "என்ன புஷ்பாவதீ! என்னுடைய செல்வச் சீமாட்டியான சௌந்தரவல்லியம்மாள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாள்?" என்று மிகுந்த வாஞ்சையோடு வினவினார்.

அவரது அபாரமான புகழ்ச்சி மொழியைக் கேட்கவே, சௌந்தரவல்லியம்மாள் நேராக சுவர்க்கலோகத்தில் நுழைந்துவிட்டவள் போல ஒரே ஆநந்தமயமாக நிறைந்து மெய்ம்மறந்து பரவசமடைந்து போனாள். அவர் தன்னிடம் அவ்வளவு இன்பகரமாகப்பேசி முதன் முதலில் கேட்கும் கேள்விக்குத் தான் பொய்யான மறுமொழி கொடுக்கவேண்டி யிருக்கிறதே என்ற ஒருவித மனக்கிலேசம் எழுந்து அவளை வதைத்ததானாலும், அவள் சந்தர்ப்பத்தைக் கருதி அவருக்கு உடனே மறுமொழி கூறத்தொடங்கி, "சௌந்தரவல்லியம்மாள் இப்போது பக்கத்தில் கட்டிலில் உட்கார்ந்துகொண் டிருக்கிறாள்" என்றாள்.

அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி முதலியார் நிரம்பவும் வேதனைப்படுகிறவர் போலத் தமது குரலை மாற்றிக் கொண்டு, "ஆகா! கட்டிலின்மேலா உட்கார்ந்துகொண் டிருக்கிறாள்! நானும் வந்து அந்தக் கட்டிலில் அவளுக்குப்பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, அவளோடு குழந்தைபோல விளையாடிக் கொஞ்சவேண்டுமென்று என் மனம் துடிக்கிறது. என் உடம்பு பறக்கிறது. இங்கே இருந்து அந்த இடம் நான்கு மைல் தூரத்தில் இருக்கிறது. இந்த தூரத்தை நான் மந்திர சக்தியினால் இதே க்ஷணத்தில் கடந்து அங்கே வந்து விட முடியுமானால், அப்படியே செய்வேன். ஆனால், அங்கே அதன் தாயார் முதலியோர் இருப்பார்கள். ஒருவேளை அதிர்ஷ்டவசத்தினால், அவர்கள் யாரும் இல்லையென்று வைத்துக்கொண்டாலும், என் எஜமானியம்மாளின்மனநிலைமை அதற்கு இடங்கொடுக்குமோ கொடுக்காதோ. நான் வந்து கட்டிலின் பக்கத்தில் உட்கார்ந்தவுடன், எவனோ திருடன் வந்துவிட்டானென்று என்னைப் பிடித்து சௌந்தரவல்லி போலீசாரிடம் ஒப்புவித்து விடுமோ என்னவோ?" என்று அளவற்ற களிப்பும், ஆவலும் மனவேதனையும் காட்டிப் பேசினார்.

அதைக்கேட்கவே, சௌந்தரவல்லியின் நிலைமை சகிக்கவொண்ணாததாகிவிட்டது. அதற்கு முன்னரே அந்த மடந்தை அவரைத் தான் எப்போது தனிமையில் வரவழைத்துப் பேசி இன்பமுறலாமென்றும், அவர் அதற்கு இணங்குவாரோ மாட்டாரோவென்றும் நினைத்துப் பெரிதும் ஆவல் கொண்டு ஏங்கித் தவித்திருந்தாளாதலால், அவர் கூறிய சொற்கள் அவளுக்கு முற்றிலும் ஹிதமாகவும் அமிர்த வருஷம்போலவும், அவளை இன்பக்கடலில் ஆழ்த்துவதாகவும் இருக்கவே, அவள் அப்படியே பிரம்மாநந்த சுகத்தில் லயித்

துப்போய் அவரை நோக்கி, "அவளும் உங்களுடன் தனிமையில் பேசவும், உங்களோடு கொஞ்சநேரமாவது சந்தோஷமாக இருக்கவும் ஆவல்கொண்டு தவித்து என்னிடம் சதாகாலமும் அதே பேச்சாகப் பேசிக்கொண்டிருக்கிருள். அவளுடைய தாயார் ஏதோ அவசர காரியமாய் பங்களாவை விட்டு எங்கேயோ போயிருக்கிருர்கள். ஆனாலும், அவர்கள் அடுத்த நிமிஷமே திரும்பி வந்தாலும் வந்துவிடலாம். இன்று இரவு பத்துமணி சுமாருக்கு நீங்கள் அவளுடைய சயன அறைக்கு வரும்படி செய்வதாக நான் அவளுக்கு உறுதிமொழி கொடுத்திருக்கிறேன். ஆகையால், நீங்கள் எப்படியாவது வந்து என்னுடைய வாக்குறுதியையும் அவளுடைய மனோபீஷ்டத்தையும் பூர்த்திசெய்து வைக்கவேண்டும்" என்று நிரம்பவும் உருக்கமாக வேண்டிக் கொண்டாள்.

உடனே சுந்தரமூர்த்தி முதலியார் விசனகரமான குரலில் பேசத்தொடங்கி, "அம்மா! புஷ்பாவதி! நான் உயிருக் குயிராகவும் என் கண்ணுட்டியாகவும் மதித்திருக்கும் சௌந்தரவல்லியம்மாளின் உள்ளம் மகிழ்ந்து குளிரும்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையும் ஆவலும் என்மனசிலும் பிரமாதமாக இருக்கின்றன. ஆனாலும், சில முக்கியமான காரியங்களைக் கருதி நான் இப்போது என்னுடைய ஆசையை அடக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. சௌந்தர வல்லியம்மாள் நல்ல தங்கமான குணமுடைய பெண்தான். அதன் அழகுக்கும், நற்குண நல்லொழுக்கத்திற்கும் ஈடு சொல்லத்தகுந்த வேறே பெண் இந்த உலகத்திலேயே இருக்காதென்பது நிச்சயமான விஷயம். அதன்மேல் நாம் அற்பமும் குறை கூறுவதற்கில்லை. அதன் அக்காளும், தாயாரும் செய்யும் காரியங்கள் நமக்கும் வெகு சீக்கிரத்தில் தலைக் குனிவை உண்டாக்கும் போலிருக்கின்றன. அதனால்தான் அந்த பங்களாவில் அடி வைப்பதற்கும் கூசுகிறது. உன்னைக்கூட அங்கே அதிகநேரம் நிறுத்தி வைப்பது அநுசிதமாக தோன்றுகிறது. இன்று காலையில் கோகிலாம்பாள் புறப்பட்டு யாரோ சொந்தக்காரருடைய வீட்டுக்கு ஏதோ அவசர காரியமாய்ப் போயிருப்பதாக நீ என்னிடம் சொன்னாயல்லவா. ஏற்கெனவே நடந்த பல சம்பவங்களையும் இதையும் எண்ணி என் மனம் நிரம்பவும் சங்கடப் பட்டுக்கொண் டிருந்தது. அக்காள் இப்படி இருப்பதைப் பார்க்க, தங்கையும் இப்படித்தான் இருப்பாளோ என்ற சந்தேகம் பலமாக எழுந்து என்னைவதைத்துக்கொண்

டே இருந்தது. இன்று பிற்பகல் நான்குமணி சுமாருக்கு நான் டெலிபோனில் உன்னோடு பேசினேனல்லவா. டெலிபோனை விட்டு நான் அப்பால் போனேன். சௌந்தரவல்லியம்மாளின் வீட்டுக் காசாரி மினியன் வந்து நின்றான். அவனுடைய உடம்பு துடிக்கிறது; முகம் சகிக்க முடியாத ஆவலைக் காட்டுகிறது; அவன் பேச ஆரம்பித்தால் வாய் குழறிப் போகிறது. ஏதோ பெரிய அபாயத்தில் மாட்டிக் கொண்டவன்போல அவன் திருட்டுவிழிவிழிக்கிறான். அவன்வருவானென்று நான் எதிர் பார்க்கவேயில்லையாகையால், அவனைக் கண்டவுடன் நான் திடுக்கிட்டுப் போனேன். என்மனசில் பெருத்த திகில் உண்டாகிவிட்டது. "என்னடா மினியா! எங்கே வந்தாய்? என்ன விசேஷம்?" என்று நான் ஆவலோடு கேட்டேன். உடனே அவன் தான் வந்த காரணத்தை எடுத்துச் சொன்னான். கோகிலாம்பாள் இன்று காலையில் பங்களாவை விட்டுப் புறப்பட்டாளல்லவா; புறப்பட்டவள் எங்கெங்கோ போய்த் தனிமையில் அலைந்தாளாம். அவளுடையபெட்டிவண்டியை ஓட்டிக்கொண்டுபோன முருகேசன் ஆனைகவுனியண்டை இறங்கி ஒரு ஜெவானோடு எங்கேயோ போய்விட்டானாம். அதன்பிறகு கோகிலாம்பாளுடைய வண்டியை வேறே யாரோ ஒருவன் ஓட்டிக்கொண்டு போனானாம். அங்கே தற்செயலாக வந்த மினியன் வண்டிக்குப் பின்னாகவே போனானாம். கோகிலாம்பாள் தன்னுடைய கையில் பக்ஷண பலகாரங்களையெல்லாம் பெருத்த மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு சென்னைடவுன் போலீஸ் இன்ஸ்பெக்டருடைய வீட்டுக்குள் தனியாகவே போய்விட்டாளாம். போனவள் வெகுநேரம் வரையில் போலீஸ் இன்ஸ்பெக்டருடைய வீட்டிற்குள் இருந்து விட்டுத் திரும்பி வெளியில் வந்தபோது கையில் பலகாரமூட்டை இல்லையாம். முருகேசனுக்குப் பதிலாகத் தான் வண்டியோட்ட வந்திருப்பதாய் மினியன் அவளிடம் சொன்னானாம். பிறகு அவள் வண்டிக்குள் உட்கார்ந்துகொள்ள மினியன் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தானாம். வண்டி கோட்டைக்குப் பக்கத்தில் சமுத்திரக்கரை யோரமாயிருக்கும் இருப்புப் பாலத்தண்டை வந்தவுடன் மினியன் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கி ஏதோ தேக பாதையினால் பாலத்தண்டையில் போனானாம். போனவன் திரும்பிவந்து பார்த்தானாம். வண்டியும் இல்லை; அதற்குள்ளிருந்த கோகிலாம்பாளும் காணப்படவில்லை. அவன் உடனே திகிலடைந்து திகைத்துப் போய் அங்குமிங்கும் ஓடித் தேடிப் பார்த்தானாம். கடைசியில் அவன்

தெற்கு திக்கில் ஓட்டமாக ஓடி நம்முடைய பங்களாவுக்கு வந்து இந்தச் சங்கதியைச் சொன்னான். அதைக் கேட்ட என் தேகம் பதறிப்போய் விட்டது. கோகிலாம்பாள் எவ்வளவு தான் நம்முடைய கண்ணியத்திற்குக் குறைவான காரியங்களைச் செய்தாலும் அவள் என் கண்மணியான செளந்தரவல்லியம்மாளின் அக்காளாகையால் அந்த அபாய சமயத்தில் அவளைக் கைவிடுவது நியாயமல்லவென்று நினைத்து,என்னுடைய மனவுணர்ச்சியை அடக்கிக்கொண்டு,உடனே ஓர் ஆளுடன் புறப்பட்டு ஸாரட்டில் ஏறிக்கொண்டு வெகு தூரம் ஓடி துப்பு விசாரித்து அவளைத் தேடியதில், மயிலாப்பூருக்கு அப்பால் தாழைப் புதர்கள் நிறைந்த மணல் காட்டில் நாலைந்து முரட்டு சிப்பாய்கள் அவளைக் கொண்டு போய் வைத்துக் கொண்டு பலாத்காரம் செய்துகொண்டிருந்ததைக் கண்டேன். நான் என் உயிருக்குத் துணிந்து போய் விழுந்து அத்தனை சிப்பாயிகளையும் அடித்துத் துரத்தினேன். மயங்கி உணர்வற்றுக்கிடந்த கோகிலாம்பாளை நான் உடனே தூக்கிக்கொண்டு ஓடி வண்டியில் போட்டுக் கொண்டு இங்கே வந்து சேர்ந்து அவளுக்குரிய உபசரணைகளைச் செய்து அவளுடைய மயக்கம் தெளியும்படி செய்தேன். ஆனாலும், அவள் நிரம்பவும் துர்ப்பலமான நிலைமையில் இருந்தாளாகையால் அவளை உடனே அவ்விடத்திற்கு அழைத்து வரக்கூடவில்லை. காலையில் இன்ஸ்பெக்டருடைய வீட்டுக்குள் அவளை என்ன செய்தார்களோ! பிறகு அந்தமுரட்டு சிப்பாயிகள் அவளைஎன்னசெய்தார்களோ! எதையும் நான் இப்போது நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. அவளும் உண்மையை உள்ளபடி சொல்வாளென்று நான் நினைக்கவில்லை. ஏதோ ஜீவகாருண்யத்தை உத்தேசித்தும், நமது கண்ணாட்டி செளந்தராவைக் கருதியும் அவளுக்கு நான் உதவி செய்தேனானாலும், அவளுடைய உடம்பைப் பார்க்கவே எனக்குக் கூசுகிறது. அந்த உடம்பு எவ்வெவ்வகையில் மானபங்கப் பட்டதோ தெரியவில்லை. அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டர் பரஸ்திரீகளைக் கெடுப்பதில் மகா தீரராம். அவர் பெண்ஜாதி யில்லாமல் தனிமையில் இருக்கிறவராம். அவரிடம் போன ஸ்திரீ தப்பி வருகிறதே இல்லையாம். சிப்பாயிகளின் விஷயமோ சொல்லவேண்டியதில்லை. இதை யெல்லாம் நினைக்க நினைக்க என் மனம் நிரம்பவும் புண்பட்டதாகையால் நான் உடனே இந்தச் சங்கதியை உனக்குத் தெரிவிக்கவில்லை. ஆனாலும், நீ முன்னே சொன்னதிலிருந்து, ஒருவேளை இவளுடைய தாயார் இவளைத்தேடிக் கொண்டுதான் எங்கேயாவது போயிருக்கிறார்களோ என்று

நினைத்து, அவர்களுடைய மனவேதனையைப் போக்குவதற்காக நான் இப்போது இந்த விஷயத்தைச் சொல்லுகிறேன். காரியம் இவ்வளவு தூரத்துக்கு வந்த பிறகு இனி நான் அவர்களுடைய வீட்டில் எப்படிக் கால் வைக்கிறது. உன்னைத் தான் நான் அதிககாலும் அவ்விடத்தில் எப்படி விட்டு வைக்கிறது. நீ என் செல்வச் சீமாட்டிக்குக் கொடுத்துள்ள வாக்குறுதியை நான் எப்படி நிறைவேற்றுகிறது. நீயே சொல் பார்க்கலாம். இதுவரையில் நடந்து போனதை யெல்லாம் நான் தள்ளிவிட்டு அங்கே வந்து நம்முடைய காரியத்தைக் கவனிக்கிறேனென்று வைத்துக் கொள். கோகிலாம்பாள் இனியும் சும்மா இருப்பாளென்று நினைக்கவில்லை; அந்தக் கண்ணபிரான் முதலியார் விஷயத்தில் அவள் கொண்டுள்ள மோகத்திலும் பைத்தியத்திலும் அவள் துணிந்து எவருக்கும் அஞ்சாமல் எந்தக் காரியத்தை வேண்டுமானாலும் செய்வாள் போலிருக்கிறது. அவளால் அவளுடைய குடும்பத்துக்கும் நம்முடைய குடும்பத்துக்கும் என்றைக்கும் மாறாத பழிப்பும் இழிவும் தலைக்குனிவும் நேரப்போவது நிச்சயம். இந்த தர்மசங்கடத்தில் நான் என்ன செய்கிற தென்பதை அறியாமல் விழிக்கிறேன். இல்லாவிட்டால், நான் என் ஆசைக்கண்ணாட்டியின் பிரியப்படி நடந்துகொள்ள இவ்வளவு நேரம் பின்வாங்குவேனா? கரும்புதின்ன யாராவது லஞ்சல் கேட்பார்களா? நீயே யோசித்துச் சொல். இந்த வரலாற்றை யெல்லாம் நீ நம்முடைய சௌந்தரா விடம்சொன்னால், அவளுடையமனம் புண்படும். அவள் நிரம்பவும் மானமுடையபெண்; அவள் யாரையும் இலட்சியம் செய்யமாட்டாள்; தாயென்றும்பார்க்கமாட்டாள்; தங்கையென்றும் பார்க்கமாட்டாள். அவள் உடனே தங்களுடைய வேலைக்காரரையும் சொந்த ஜனங்களையும் கூப்பிட்டு வைத்துக் கொண்டு அக்காளையும் அம்மாளையும் அவர்களுக்கெதிரில் மானபங்கப்படுத்திவிடுவாள். அதை சகிக்க மாட்டாமல் கோகிலாம்பாள் இன்றிரவே வீட்டை விட்டு எங்கேயாவது ஓடினாலும் ஓடிவிடுவாள். அல்லது தற்கொலைசெய்து கொண்டு இறந்துபோனாலும் போவாள். அந்தப் பழி நமக்கு உதவாது. ஆகையால், நீ இந்த வரலாற்றை யெல்லாம் அதனிடம் சொல்லி, அதன் நல்லமனதையும் சந்தோஷத்தையும் கெடுக்க வேண்டாம். இன்றிரவு எட்டு எட்டரை மணிக்கு கோகிலாம்பாள் அங்கே வந்துசேரும்படி அனுப்பி விடுகிறேன். அதற்குள் பூஞ்சோலையம்மாளும் வந்து விடுவார்கள்; இவள் எப்படியாவது பொய்யைச் சொல்லி மெழுகித் தப்பித்துக் கொள்ளட்டும்".

என்று நிரம்பவும் விசனகரமாகவும் மிகுந்த மனவேதனையைக் காட்டியும் கூறினர்.

அவரது சொற்களைக் கேட்ட செளந்தரவல்லியம்மாளது மனநிலைமை எப்படி இருந்திருக்குமென்பதை வாசகர்கள் யூகித்துக் கொள்ள வேண்டுமேயன்றி அதை விரித்துரைப்பது சாத்தியமற்ற காரியம். தான் உயிருக்குயிராக மதித்து, விரக நோய் கொண்டு சதாகாலமும் எண்ணி உருகி ஏங்கித் தவித்து சுந்தரமூர்த்தி முதலியார் தனது கருத்திற்கிசைந்தபடி நடந்து கொள்ளப் போகிறாரா என்று நினைத்து நினைத்துத் தத்தளித்திருந்ததற்கு நிரம்பவும் அநுகுணமாக அவரும் தன்னைவிட நூறுபங்கு அதிகமாய்த் தன் மீது காமமுற்றுத் தவிக்கிறாரென்பதை அறிந்ததும் அவளுக்கு சுவர்க்கலோகமே வழி திறந்து தனக்குள்ளிருக்கும் பேரின்ப சுகத்தை அவள் மீது மழைபோலப் பெய்ததுபோல அவள் உணர்ந்தாளானாலும், தான் அடைந்ததும் இனி அடைய எண்ணியதுமான பேராநந்த சுகத்திற்கு இடையூறாகத் தனது அக்காள் அத்தகைய இழிவான செய்கைகளில் இறங்கி அவரது மனத்தைப் புண்படுத்தி, அவரது பிரியம் மாறிப்போகத் தக்க நிலைமையை உண்டாக்கி விட்டாளே என்ற எண்ணம் பெருத்த கோபத்தையும், ஆத்திரத்தையும், பதைபதைப்பையும் உண்டாக்கியது. கண்ணபிரான் கடிதம் எழுதித் தன்னைத் தப்பவைப்பதற்காக கோகிலாம்பாளை இன்ஸ்பெக்டரிடம் அனுப்பி இருக்க வேண்டுமென்ற நிச்சயம் உடனே அவளுக்கு பட்டுவிட்டது. கோகிலாம்பாள் அப்படியும் கேவலமாக நடந்து கொள்வாளா என்ற ஆச்சரியமும், அவள் அப்படி நடந்து தன் மனோபீஷ்டம் நிறைவேறாமல் கெடுத்து விட்டாளே என்ற ஆத்திரமும் ஆவேசமும் கட்டிலடங்காமல் எழுந்தன. அவளது தேகம் தடதடவென்று ஆடத் தொடங்கியது. கோகிலாம்பாள் அப்போது அவ்விடத்தில் இருந்தால், அவளது கால்களைப் பிடித்து இரண்டாய்க் கிழித்து விடலாமே, அவள் இல்லையே என்று நினைத்துப் பதறிக் கடுஞ்சினங் கொண்ட சிங்கம்போல மாறினாள். தான் அதற்கு மேலும் டெலிபோன் யந்திரத்தண்டை நின்று சுந்தரமூர்த்தி முதலியாருக்கு ஏதேனும் மறுமொழி கூறவேண்டுமென்பதையும் கவனியாமல், பக்கத்திலிருந்த புஷ்பாவதியை நோக்கி சுந்தரமூர்த்தி முதலியார் கூறிய வரலாற்றைச் சுருக்கமாய் இரண்டொரு சொற்களில் விவரித்து, அவளே வந்து அவருக்கு மறு

மொழி கொடுக்கும்படி அழைக்க, புஷ்பாவதி உடனே டெலிபோனண்டைபோய்ப் பேசி அவருக்கு ஏதோ இரண்டொரு வார்த்தைகள் கூறி, கோகிலாம்பாளை அழைத்துக்கொண்டு வரும்படி கூறிய பின் டெலிபோனை மூடிவிட்டு இப்பால் வந்துவிட்டாள்.

சௌந்தரவல்லி யம்மாள் சுந்தரமூர்த்தி முதலியாரின் விஷயத்தில் கொண்ட விரக வேதனையும் ஆவல் தீயும் கோகிலாம்பாளின் மீது பெருத்த பகைமையாகவும் சகிக்கவொண்ணாத ஆத்திரமாகவும் மாறின. பிரளயகாலத்துச் சண்டமாருதம்போல அவளது மனத்தில் அபாரமான கோபாவேசம் மூண்டெழுந்தது. தான் அடைய எண்ணியிருந்த பேரின்ப சுகத்திற்கு இடையூறாகக் கோகிலாம்பாள் குறுக்கிட்டு, தமது மணாளரின் மனது முறிந்து மாறிப் போய்த் தன்னை வெறுத்து விலக்குமாறு தூண்டத்தக்க இழிவான காரியங்களைச் செய்துவிட்டாளே என்ற ஆங்காரமும் ஆவேசமும் பெருத்த காட்டுத் தீ போல மூண்டு பற்றி எரியத் தலைப்பட்டன. அவள் அந்த இரண்டொரு நிமிஷ காலத்தில் சுந்தரமூர்த்தி முதலியாரையும் மறந்தாள்; புஷ்பாவதி யம்மாளையும் மறந்தாள்; உலகத்தையும் மறந்தாள்; தன்னையுமறந்தாள். தான் புஷ்பாவதியையும் தன்னோடு அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்பதையும் எண்ணாமல் அந்த மடந்தை ஒரே மூர்க்கமான முகத் தோற்றத்தோடு நேராகத் தனது சயனத்திற்குச் சென்று அதன்மேல் ஏறி உட்கார்ந்து நாற்புறங்களிலும் திரும்பி ஒரு பார்வை பார்த்துவிட்டு இரண்டு மூன்றுதரம் நெடுமூச்செறிந்தாள். தனது சுக வாழ்க்கைக்கும் பெருத்த இடையூறாக வந்து தோன்றியுள்ள தனது அக்காளைத் தான் உடனே தண்டிக்க அவள் அப்போது அவ்விடத்தில் இல்லையே என்ற பெருத்த ஏக்கமும் ஏமாற்றமும் தோன்றி அவளது ஆத்திரத்தையும் வேதனையையும் முன்னிலும் பன்மடங்கு பெருக்கின. அவ்வாறு அவள் கட்டிலடங்கா வீராவேசத்தோடு போய்க் கட்டிலின்மீது உட்கார்ந்ததைக் கண்ட புஷ்பாவதி யம்மாள், தானும் கூட இருந்து அவளது மனத்தைத் தங்கள் கருத்திற்கு ஒத்தபடி திருப்ப அதுவே பரிபக்குவமான நிலைமை யென்றுணர்ந்துகோகிலாம்பாளது இழிவான செய்கையைக் கேட்டு நிரம்பவும் வெட்கிக் குன்றிப்போனவள் போல நடித்து விசனகரமான முகத்தோடு மெல்ல நடந்து சௌந்தரவல்லி யம்மாளிருந்த கட்டிலண்டைசென்று அதற்குமுன் உட்கார்ந்திருந்ததுபோல அந்த மடந்

தையினருகில் உட்கார்ந்துகொண்டு, வாடித் துவண்டுபோனதோற் றத்தோடு சிறிது நேரம் மௌனமாக வீற்றிருந்தபின் மிருதுவான குரலில், சௌந்தரா! என்னைப்போல முட்டாள் இந்த உலகத்தில் வேறே யாருமிருக்க மாட்டாளென்று நினைக்கிறேன். என் தமயனர் கூப்பிட்டால், நானே போய்ப் பேசாமல், அறியாத குழந்தையான உன்னை அனுப்பி, சந்தோஷமாக இருந்த உன் மனசைக் கெடுத்துப் பாழாக்கி விட்டேன். என் புத்தியைச்செருப்பால் அடித்துக்கொள்ள வேண்டும். அவர் சாதாரணமான சங்கதி எதையாவது பேசுவா ரென்று நினைத்து உன்னை யனுப்பினல், அது பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதையாயிற்று. உனக்கு அதிக சந்தோஷம் உண்டாக்கி உன்மன ஆவலைவிலக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத் தோடு நான் இந்தக் காரியத்தைச் செய்தால், உன் மனசில் இதற்கு முன் இருந்த சந்தோஷமும் உற்சாகமும் பறந்துபோய் விட்டன. துயரமும், ஆத்திரமும் வந்து சூழ்ந்து கொண்டன. என்ன வேளைப் பிசகு இது! நானே போய்ப் பேசி இருக்கக்கூடாதா? என்னிடம் என் தமயனர் இந்த வரலாற்றைத் தெரிவித்திருந்தால், நான் என்னி டம் இதைச் சொல்லவே போகிறதில்லை. என் தமயனர்கூட இதை யெல்லாம் உங்களிடம் சொல்ல வேண்டாமென்று கடைசியில் என்னிடம் சொல்லி என்னை எச்சரித்துவிட்டு டெலிபோனை விட்டுப் போனர். எனக்குப் பதிலாக நீயே இருந்து அவருடன் பேசி எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டாயென்பதை அவர் அறிந்தால், என்மேல் அவர் கடுமையாகக் கோபித்துக் கொண்டாலும் கொள் வார். அவர் இதற்குமுன் சாதாரணமான விஷயங்களைபற்றிப் பேசியது போல இப்போதும் பேசுவாரென்று நினைத்தல்லவா நான் பைத்தியக்காரத்தனம் செய்து விட்டேன்" என்று முற்றிலும் விசனகரமாகவும் அயர்வாகவும் வாட்டமாகவும் கூறினள்.

அதைக் கேட்ட சௌந்தரவல்லி யம்மாள், "உன்மேல் என்ன தப்பிதம்! அந்தக் கெட்ட கழுதை போய்த் தாறுமாறய் நடந்து கொண்டால், அதற்கு நீதான் உத்தரவாதியா? பசுபோல இருந்த அந்த இராக்ஷசி இப்படிப் புலிபோலப் பாய்வாள் என்று யாருக்குத் தான் தெரியும். உன் தமயனர் இப்பேர்ப்பட்ட விபரீத சங்கதியைச் சொல்லப் போகிருரென்பது உனக்குக் கனவிலும் தெரிந்திருக்கஙியா யமில்லை. இதைப்பற்றி சந்தேகிக்க கொஞ்சமாவது ஏதுவிருந்தால், நீ என்னை டெலிபோனுக்கு அனுப்பி இருக்கவே மாட்டாய். நீ

இதைக் கேட்டுக்கொண்டு பேசாமல் இருந்து ஏதாவது சாக்குச் சொல்லி மெதுவாய்ப்புறப்பட்டு வீட்டுக்குப் போய்விடுவாய். அதன் பிறகு உங்கள் இருவரையும் நான் இந்த ஜென்மத்திலேயே பார்க்க முடியாமல் போயிருக்கும். காரியம் இப்படி நடந்ததும் தெய்வத்தின் செயலென்றே நினைக்கிறேன். இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் நான் உனக்கு பதிலாக டெலிபோனில் உன் தமயனோடு பேச வேண்டுமென்று தெய்வம்தான் நம் இருவருக்கும் புத்தி கொடுத்ததென்று நினைக்கிறேன். இந்த துஷ்டையின் காரியங்களை நான் இப்போதே தெரிந்துகொண்டது நல்லதாயிற்று. கெட்ட விஷயங்களை பெரிய மரமானபிறகு கோடரியைக் கொண்டு வெட்டுவதை விட, முளையாயிருக்கும் போதே நகத்தால் கிள்ளி எறிவது நல்லதென்று ஜனங்கள் சொல்லுவார்கள். அதுபோல, இந்த விஷயம் ஆரம்பிக்கும்போதே இதற்குத் தக்க பரிகாரம் தேடவேண்டும். பிறகு இவளுடைய துர்நடத்தைகள் அதிகரித்து எல்லோருக்கும் தெரிந்து சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்துவிட்டால், அதற்குமேல் நாம் எவ்விதமான பரிகாரமும் செய்யமுடியாமல் போய்விடும். ஆகையால், இந்த விபரீதச் செய்தி எனக்கு இப்போது தெரிந்ததே நல்லதாயிற்று" என்று கூறினாள்.

புஷ்பாவதி யம்மாள் சௌந்தரவல்லி யம்மாளது கோபத்தைக் கண்டு நிரம்பவும் பயந்துவிட்டவள் போல நடித்து, "உனக்குத் தெரியாததற்கு நான் சொல்லிக் கொடுக்கப் போகிறேனா! நீயும் குழந்தையல்ல; நன்றாய்ப் படித்த புத்திசாலி. அதோடு மானத்தில் கண்ணுடையவள். உனக்கு நான் அதிகமாய் எதையும் சொல்லிக் கொடுக்க வேண்டியதே இல்லை. நீ பேசுகிற மாதிரியைப் பார்த்தால் உன் அக்காள் இன்று தாறுமாறாய் நடந்துகொண்ட விஷயத்தில் நீ ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள உத்தேசிக்கிறாய் என்று நினைக்க வேண்டியிருக்கிறது" என்று நயமாகக் கூறினாள்.

சௌந்தரவல்லி யம்மாள் மிகுந்த பதைப்பும் ஆத்திரமும் தோன்ற, "இல்லாவிட்டால், இதை யாராவது சும்மா விட்டுவிடுவார்களா? இது என்ன சாதாரணமான விஷயமா? எங்கள் குடும்பத்தின் பெருமைக்கே ஹானி தேடக்கூடிய செய்கையல்லவா! இவள் ஒருத்தி இப்படிக் கெட்டுப்போனதைக் கண்டு ஜனங்கள் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மற்றவரையுமல்லவா தூஷித்து இளக்காரப்படுத்திப் பேசுவார்கள். அது என்னைக்கூட பாதிக்கு

மல்லவா. அதற்கு நான் ஒருநாளும் இடங் கொடுக்கமாட்டேன். இவள் வரட்டும். அவசியம் நான் இவளுக்குத் தக்க சிக்ஷை நடத்தியே தீரப்போகிறேன். இன்றோடு இவள் இந்த வீட்டை விட்டு ஓடிப்போக வேண்டும். அல்லது, அந்தத் துருக்கச்சி செய்ததுபோல இவளும் இரவோடிரவாய் ஓடி சமுத்திரத்தில் விழுந்து மாண்டு போகவேண்டும்" என்றாள்.

புஷ்பாவதி முற்றிலும் இரக்கமாகவும் விசனகரமாகவும் பேசத் தொடங்கி, "அப்படியானால், என்னதான் செய்யப்போகிறாய்? நீ அவள்மேல் குற்றம் சுமத்தினால், தான் அப்படியொன்றும் செய்யவில்லையென்று அவள் மறுத்துவிடுகிறாள். அப்போது நீ என்ன செய்யப்போகிறாய்? அவளைக் கண்டிக்க இங்கே வேறே ஜனங்கள் ஒருவருமில்லை. உங்கள் தாயார் ஒருவர்தானே இருக்கப் போகிறார்கள். அவர்கள் மூத்த பெண்ணை ஒருக்காலும் விட்டுக் கொடுத்துப் பேசக் கூடியவர்களன்று" என்றாள்.

சௌந்தரவல்லியம்மாள் சிறிதுநேரம் யோசனை செய்து, "இருக்கட்டும். நான் ஒரு காரியம் செய்கிறேன். நான் இப்போது நாலைந்து வேலைக்காரர்களைக் கூப்பிட்டு அவசரமாகத் துரத்தி குதிரை வண்டிகளில் ஏறிக்கொண்டுபோகச் செய்கிறேன். இந்த ஊரில் எங்களுடைய சொந்தக்காரர்கள் ஏழெட்டு வீட்டார் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கண்ணியமும், யோக்கியதா பக்ஷமும் வாய்ந்த தக்க பிரபுக்கள். கோகிலாம்பாளை இன்று காலை முதல் காணோமென்றும், அவளைத் தேடிக்கொண்டு போன அம்மாளும் திரும்பிவர வில்லையென்றும், அவர்களுக்கு ஏதேனும் பெருத்த அபாயம் நேர்ந்திருக்க வேண்டுமென்று நான் அஞ்சுவதாகவும், நான் யௌவனப் பிராயத்துப் பெண்ணாயிருப்பதால், நான் அவர்களிருவரையும் தேடிக் கொண்டுபோக முடியாமல் தவித்திருப்பதால், உறவினர்கள் எல்லோரும் உடனே புறப்பட்டு அவசரமாய் இங்கே வரவேண்டுமென்று நான் எங்கள் வேலைக்காரர்கள் மூலம் செய்தி சொல்லி அவர்களை உடனே துரத்திவிடுகிறேன். சுமார் ஐம்பது ஜனங்களாவது இங்கே உடனே வந்து கூடுவார்கள். அவர்கள் புறப்பட்டு இங்கே வந்துசேர எட்டரை அல்லது ஒன்பது மணியாவது பிடிக்கும். அதற்குள் அம்மாள் வந்துவிடுவார்கள். வந்தவுடன் வேலைக்காரர்களையும் வேலைக்காரிகளையும் வைத்துக் கொண்டு நாம் கேட்போம். கோகிலாம்பாளை அவர்கள் காலையில்

எங்கள் சொந்தக்காரர் வீட்டுக்கு அனுப்பியதாகவே சொல்வார்கள். அந்த சொந்தக்காரர்கள் யாரென்று நாம் கேட்போம். அவர்கள் யாராவது ஒருவருடைய பெயரைக் குறித்து, அவர்கள்தான் கடிதம் எழுதி யனுப்பியதாகச் சொல்வார்கள். பிறகு கோகிலாம்பாளும் வரட்டும். அவளும் அநேகமாய் உண்மையை மறைத்தே பேசுவாள். அதற்குள் அம்மாள் அவளுடன் கலந்து பேசி, இன்ன சொந்தக்காரர் வீட்டுக்குப் போனதாய்ச் சொல்லும்படி போதித்து விடுவார்கள். அவளும் அப்படியே சொல்லட்டும். நாம் பேசாமல் அதை யெல்லாம் கேட்டுக் கொண்டே இருப்போம். கொஞ்ச நேரத்தில் சொந்தக்காரர்கள் எல்லோரும் வந்து சேர்ந்து விடுவார்கள். அம்மாள் குறித்த சொந்தக்காரரும் அவசியம் வருவார். அவர் தாம் கடிதம் எழுதவில்லை யென்று சொல்லப்போகிறார். இவர்களுக்கு வந்த கடிதத்தை நான் எடுத்து இதோ வைத்திருக்கிறேன். அதை நான் உனக்குக் காட்டக்கூடாதென்று இதுவரையில் மறைத்து வைத்திருந்தேன். காரியம் இவ்வளவு விபரீதத்துக்கு வந்தபிறகு இனி நான் அதை மறைத்து வைப்பது அநாவசியம். இதை நீ படித்துப் பார். இந்தக் கடிதத்தை நான் எடுத்து எல்லா ஜனங்களுக்கும் காட்டி, அம்மாள் சொன்ன புளுகையும் ரூதரித்துவிட்டு, காசாரி மினியனைக் கொண்டு கோகிலாம்பாள் எங்கெங்குப் போனாள், என்னென்ன செய்தாளென்பதையும் வெளிப்படுத்தி விடுகிறேன். மினியன் ஒருவேளை மாற்றிச் சொன்னால், உன் தமயனாரைக் கொண்டு அதை உறுதிப்படுத்தி விடுவோம். இப்படியெல்லாம் இவளுடைய சாயத்தை, சொந்த ஜனங்கள் வேலைக்காரர்கள் முதலியோருக்கு முன், நான் வெளுக்க அடித்து, இவளும் கண்ணபிரானும் பூஞ்சோலையில் செய்த காரியத்தையும் வெளியிட்டு விடுகிறேன். எல்லோரையும் வைத்துக் கொண்டு நான் கேட்கிற கேள்வியில், தாயும் மகளும் இன்றோடு இந்த பங்களாவை விட்டு ஓடிப்போகும்படி செய்து விடுகிறேன். நீ மாத்திரம் ஒரு காரியம் செய்யவேண்டும். மறுபடியும் நீ உன் தமயனாரை டெலிபோன் வழியாய்க் கூப்பிட்டு, கோகிலாம்பாளை ஓர் ஆள் மூலமாய் தனியாக முதலில் அனுப்பிவிட்டுக் கொஞ்ச நேரம் கழித்து, மினியனை அழைத்துக்கொண்டு அவர்கள் வந்து சேரும்படி நீ சொல்லி எச்சரித்துவை. நான் போய் அம்மாள் வருவதற்குள் வேலைக்காரர்களை உடனே எங்கள் சொந்த ஜனங்களுடைய வீடுகளுக்குத் துரத்தி விட்டு வருகிறேன்" என்று ஆத்திரத்தோடு

ஆவேசத்தோடும் கூறியவுடன் சரேலென்று கட்டிலைவிட்டிறங்கி வேலைக்காரர்களிருந்த இடத்திற்குப் போய்விட்டாள். அவள் கூறியதை யெல்லாம் அரை மனதோடு கேட்பவள்போல நடித்த புஷ்பாவதி யம்மாள் தனியாக விடப்பட்டவுடன் விரைவாக டெலிபோனண்டை சென்று சுந்தரமூர்த்தி முதலியாரை அழைத்து, சௌந்தரவல்லி யம்மாள் தங்களது விருப்பத்தின்படியே காரியத்தை நிறைவேற்றப் போகிருள் என்பதைத் தெரிவித்து, அவள் கேட்டுக்கொள்வதுபோலக் கோகிலாம்பாளை முன்னால் அனுப்பி, மினியனோடு பின்னால் வரும்படி கூறிவிட்டு சௌந்தரவல்லி யம்மாள் வேலைக்காரர்களிடம் என்ன பேசுகிருளென்பதை அறிந்து கொள்ளும்பொருட்டு அங்கே சென்றாள்.

---

## 13-வது அதிகாரம்

### ஏழரை நாட்டான் தர்பார்—இறந்து பிழைத்தவர்.

தமது தந்தை ஒரு யௌவனக் குமரியை மணந்து கொள்வதுணர்ந்து அவரது இன்ப வாழ்க்கையைத் தாம் சீர்குலைப்பதைவிடத் தமது வாழ்க்கையையே சீர்குலைத்து உலகப்பற்றை விலக்கி ஊரூராய்ச் சென்று, புண்ணிய தீர்த்தங்களிலாடி, க்ஷேத்திர வாசம் செய்து, தமது ஜென்மத்தை ஒழித்து நற்கதி யடைய வேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்ட நமது திவான் முதலியார் திருவடமருதூரை விடுத்துச் சென்றபின் முறையே மாயூரம், வைத்தீசுவரன் கோவில், சிதம்பரம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களை அடைந்து, அவ்விடத்தில் இரண்டொரு தினங்கள் இருந்து சுவாமி தரிசனம் செய்துகொண்டு மேலும் வடக்கில்சென்று, திருவண்ணாமலை, காளஹஸ்தி, திருக்கழுக்குன்றம், திருப்போரூர், திருத்தணிகை, திருவொற்றியூர், திருப்பதி, பத்திராசலம், சிருங்கேரி, பண்டரீபுரம், ஜெகந்நாதம், பிருந்தாவனம், கோகுலம், காசி, கயா, ஹரித்துவாரம், காஷ்மீரம் வரையில் கால்நடையாகவே பிரயாணம்செய்து, ஆங்காங்கு காணப்பட்ட இயற்கை யற்புதங்களையும், மனிதரது நடை யுடை பாவனை வேறுபாடுகளையும் கண்டு, அவ்வவ்விடத்தில் வெவ்வேறு பெயருடன் கோவில் கொண்டுள்ள பரம்பொருளை தரிசித்து, சத்திரத்தில் போஜனமும் திண்ணையில் சயனமுமாய் சதாகாலமும் ஈசுவரனைதியானம்செய்தபடி தமதுபொழுதைப்

போகத்தொடங்கினர். அவர் சென்றடைந்த புண்ணிய க்ஷேத்திரங்களிலெல்லாம், ஏராளமான ஸாதுக்கள், பைராகிகள், பரதேசிகள் ஞானிகள் முதலிய மகான்களின் சங்கமும், சகவாசமும் ஓயாமல் கிடைத்துக்கொண்டே இருந்தன. அவர்களுள், உலகத்தின் அநித்தியத் தன்மையை உணர்ந்து, மனப்பூர்வமாக உலகைத் துறந்து பரம்பொருளொன்றையே நாடிநின்ற அபார புத்தியுள்ள மேதாவிகளும் சிலர்காணப்பட்டனராதலால் அவர்களுடன்சம்பாஷிப்பதும்பொழுதைப் போக்குவதும் திவானுக்கு இன்பகரமாகவும், தமது துயரத்திற்கும் விரக்திக்கும் ஒரு பெரிய ஆறுதலாகவும் இருந்தன. அவ்வாறு அவர் நல்லோர் இணக்கமும், அறிவாளர் துணையும் பெற்றே அநேகமாய்த் தமது யாத்திரையை நடத்திக்கொண்டு சென்றாராதலால், அவர் சென்ற இடத்திலெல்லாம், அவருக்கு அநேகமாய் மரியாதையான வரவேற்பும், உபசரணையும், தர்மபோஜனமும் கிடைத்து வந்தன. ஆகவே, அவர் தமது இடையில் பையில் கட்டிவைத்திருந்த நோட்டுகளை வெளியில் எடுப்பதற்கே பிரமேயம் ஏற்படாமல் போயிற்று. மற்ற துறவிகளோடு நெருங்கிப் பழகப்பழக, நமது திவான் முதலியாரும் அநேகமாய் உலகப்பற்றை யொழித்து மெய்ஞ்ஞானத்தை நாடியவலயும் ஜீவன் முத்தராக மாறிக்கொண்டே இருந்தார். அவரது உடம்பு கருத்துத் துரும்புபோல மெலிந்து போயிற்று. கன்னங்களின் எலும்புகள் மேலோங்கி நின்றன. முதன் முதலில் அவர் தமது சிரத்தை மொட்டையாக்கிக் கொண்டபிறகு அப்படியே விட்டு விட்டாராதலால், மறுபடி அவரது தலையில் உரோமம் வளர்ந்து பெருத்த ஜடைகளாய்த் திரண்டு போயிற்று. முகம் முழுதும் உரோமம் மூடிக்கொள்ள, அவரது மோவாயின் கீழ் சாமரைபோல ஒருசாண் நீளத்தில் தாடியும் ஏற்பட்டுவிட்டது. ஆகவே, அவரது பழைய தோற்றம் அடியோடு மாறி போய்விட்டது. அவரது பழைய மேம்பாடு முற்றிலும் மறந்துபோய்விட்டது. அவர் அதற்குமுன் மாதம் ஐயாயிரம் ரூபாய் சம்பளத்தில் மகாராஜனுடைய பதவியில் இருந்தவர் என்ற குறிப்பாவது, இங்கிலீஷ்பாஷையில் எம். ஏ. பட்டம்பெற்ற மேதாவி என்ற குறிப்பாவது சிறிதும் தெரியாதபடி அவர் கேவலம் பரதேசிகளுள் ஒருவராய் மாறிப் போனதன்றி அவர் பழைய பெருமைப் பாட்டையாவது, அதிகார தோரணையையாவது, பெருந்தன்மையான தோற்றத்தையாவது வகிக்காமல், ஏழையிலும் பரம ஏழையாகவும், அடியார்க்கு அடியாராகவும், ஸாதுவிலும் பரம ஸாதுவாகவும் நடந்து கொண்டு

எந்தத் தொண்டையும் இழிவாய் மதிக்காமல் எவர் கொடுத்த போஜனத்தையும் இளக்காரமாய் நினையாமல் தெய்வ பிரஸாதம்போல் உண்டு உண்மையான ஞானியைப்போலவே நடந்துவந்தார். ஆயினும், அவர் சந்தித்த பெரியாருள் சாமுத்திரிகா லக்ஷணம், ரேகை சாஸ்திரம், சோதிட சாஸ்திரம் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றிருந்த சிலர் நமது திவானைக் காணும்போதே, "அப்பனே! நீ பெருத்த பதவிக்குரிய புண்ணியாத்மா வாயிற்றே! இப்பொழுது ஏழுரை நாட்டுச் சனியனுடைய கோளாறினால், நீர் இப்படிச் சீர் குலைந்து உரு மாறித் திரிகிறாய்! ஏழுரை வருஷம் வரையில் நீ இப்படித்தான் இருப்பாய். அதன் பிறகு, நீ இழந்த நவ நிதிகள் எல்லாம் உன்னிடம் மறுபடி தாமாகவே வந்து சேரப்போகின்றன. மறுபடி நீ முன்னிருந்த பதவியைவிடப் பன்மடங்கு மேலான பதவியை யடைந்து, பெண்ஜாதி பிள்ளையுடன் அமோகமாய் வாழப்போகிறாய்! அதன் பிறகு உன் ஆயுசு காலம் முடிய உனக்கு எவ்வித இன்னலும் நேராது. இது நிச்சயமான வார்த்தை. நளமகாராஜன் பிறந்த வேளையில் நீயும் பிறந்திருக்கிறாய். ஆகையால், அவ்வரசனைப்போல நீயும் சநிபகவானுடைய ஆக்கினைக்கு உள்பட்டு நடந்துதான் தீரவேண்டும்" என்று கூறினர். ஆயினும், நமது திவான் முதலியாருக்கு அவர்களது எதிர்கால ஜோசியத்தில் அவ்வளவு நம்பிக்கை ஏற்படவில்லை. தமக்கு இனி பழைய நிலைமை ஏற்படப்போகிறதா என்ற மலைப்பும் அவநம்பிக்கையும் தோன்றி அவரது மனத்தை சந்நியாச நிலைமையே தமக்குரிய பற்றுக்கோல் என்று எண்ணும்படி செய்தது. பல வருஷகாலம் வரையில் இன்பமே வடிவாகத் தமக்கருகில் இருந்து வந்த தமது அருமை மனையாட்டியான காந்திமதியம்மாளின் நினைவு அடிக்கடி வந்து வந்து குளத்து நீரைப் பாசி மறைப்பதுபோல அவரது மனத்தைக் கப்பிக்கொள்ளும். அவர் அறியாமல் அவரது கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடும். "ஆ! காந்திமதி! நீயும் நானும் இருந்தது கனவோ, அல்லது, நிஜமோ என்பது கூட இப்போது சந்தேகமாய் விட்டதே! ஐயோ! என் கண்ணே! நான் உயிருக்குயிராய் மதித்த என் பாக்கியமே! எவருக்கும் கிட்டாத பெருத்த தெய்விகச் செல்வத்தைக் கடவுள் உன் வடிவமாக எனக்களித்திருப்பதாக அல்லவா நான் நினைத்து மன மகிழ்ந்திருந்தேன். அது கிஞ்சித் போகமாக முடிந்ததே, காந்திமதி! வெளிக்கு என்னிடம் நீ வஞ்சகமாக நடந்து உள்ளுக்குள் இன்னொரு ஆசை நாயகனையா நினைத்து உருகிக்கொண் டிருந்தாய்! சே! பிறருடைய

சாட்சியங்களினால், இப்பேர்ப்பட்ட அபவாதத்திற்கு நீ இலக்கானு யானாலும், என் மனம் மாத்திரம் அதை இப்போதும் உண்மை யென்று நம்ப மாட்டேனென்கிறதே! அப்படியானால், திருவட மரு தூருக்கு வந்த நீ எங்கேதான் மாயமாய் மறைந்து போனாயோ தெரிய வில்லையே! உனக்கும் நம் அருமைப் புதல்வன் ராஜா பகதூருக் கும் திடீரென்று என்ன அபாயந்தான் நேர்ந்ததோ தெரியவில் லையே!" என்று திவான் முதலியார் ஒவ்வொருநாளும் அவர்களை நினைத்து நினைத்துப் பாகாய் உருகுவதும், பிறகு, "சே! என்ன நினைவு இது! அவர்கள் யார்? நான் யார்? அவர்களை நான் ஏன் நினைத்து அழுகிறேன்! அவர்கள் என்னோடிருக்கவும், அதனால் மூவ ரும் ஆநந்த மடையவும் கொஞ்ச காலத்திற்குத்தான் பரமாத்மா வின் கட்டளைபோலிருக்கிறது! கொடுத்தவன் எடுத்துக்கொண்டான். அவர்களை எனக்காக நானா சிருஷ்டித்துக் கொண்டேன். எவனோ படைத்துக் கொடுத்தான்; எவனோ அபகரித்துக்கொண்டான். அவர் கள் என்னோடிருந்த வரையில்தான் என் உடைமை. அவர்களைக் குறி த்து என்மனம் ஏன் இப்படி உருகித் தவிக்கிறது! மனிதன் உடம்பை என்னுடையது என்னுடையது என்று நினைத்து அல்லும் பகலும் இதை, போஷித்துக் காப்பாற்றி வளர்க்கிறான். கடைசியில் உயிர் வேறு உடல் வேறாய்ப் பிரிந்துபோகின்றன. அதன் பிறகு அந்த உயிர்தான் இந்த உயிரற்ற உடம்பை நினைத்து வருந்தப்படப் போகி றதா, அல்லது இந்தப் பிணந்தான் அதற்குமுன் தனக்குள்ளிருந்து பிரிந்துபோன உயிரைப்பற்றி நினைத்து விசனமடையப் போகிறதா? இரண்டுமில்லை. மனிதனுடைய சொந்த உடம்பின் கதியே இப் படி இருக்கையில் அதற்குமுன் தன்னோடிருந்து பிரிந்துபோன மனைவி மகனை நினைத்து அவன் விசனித்து அழுவது மூடத்தனமே யன்றி வேறல்லவென்பது தெரிந்திருந்தும், அந்த நினைவை அவன் விலக்க முடியாமல் அழுது புலம்பியே தீரவேண்டி இருக்கிறதே! ஈசுவரா! பரம்பொருளே! பரமபுருஷா! உன் சிருஷ்டியின் விநோ தத்தையும் உன் திருவிளையாடலின் மர்மத்தையும் நான் என்ன வென்று சொல்லப்போகிறேன்!" என்று இவர் பன்முறை நினைத்து விரக்தியை மேன்மேலும் அதிகரிக்கச் செய்ய முயற்சிப்பார். அவ்வாறு திவான் முதலியார் தாமரை இலைத் தண்ணீர்த் துளிபோல உலகப்பற்றையும், பழைய நினைவுகளையும் ஒழித்தும் ஒழிக்கா மலும் இருந்து, தேசயாத்திரை புரிந்து வட தேசங்களிலுள்ள முக் கியமான ஊர்களுக்கெல்லாம் சென்றார். தாம் தமது ஊரை விட்

டுப் புறப்பட்டு எத்தனை நாட்களாயின, எத்தனை மாதங்கள் கழிந்தன, எத்தனை வருஷங்கள் சென்றனவென்ற கணக்கையாவது நினைவையாவது அவர் வைக்காமல் போய்க்கொண்டே இருந்தார். மறுபடி தாம் தென் தேசங்களைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணமும் தமது பிதா க்ஷேமமாயிருக்கிருரா வென்பதை நேரில் காண வேண்டுமென்ற வேட்கையும் அவரது மனத்தில் தோன்றி வதைக்கலாயின. ஆகவே, அவர் மறுபடி திரும்பித் தென் திசையில் யாத்திரை செய்யலானர். முன் கூறப்பட்டபடி உலகப்பற்றை உண்மையிலேயே விடுத்த மெய்த்துறவிகளின் சகவாசம் அவருக்கு அடிக்கடி வாய்த்ததாலும், அவர் தமது விரக்தியினாலும் சாத்விகமான ஆகாராதிகளினாலும், ஊரூராய் அலைந்து திரிவதால் ஏற்பட்ட மெலிவினாலும் அவருக்குப் பஞ்சேந்திரியங்களின் வேட்கை குறைந்துகொண்டே வந்தமையாலும், அவரது தேவைகள் படிப்படியாய்க் குறைந்துபோயின. ஒரு நாளைக்கு இரண்டு பிடி அன்னமும் நான்கு கையளவு தண்ணீரும் உட்கொண்டால், அதுவே அவருக்கு மறுநாள் அந்த நேரம் வரையில் போதுமானதாக இருந்தது. அந்த ஆகாரம் அவருக்கு அநேகமாய் இலவசமாகவே கொடுக்கப்பட்டுப்போயிற்று. அதுவுமன்றி, ஐந்து ரூபாய் செலவிட்டு இரண்டு ஜதை வஸ்திரங்களும் அங்கிகளும் தைத்துக்கொண்டால், இவ்வகளே அவருக்கு ஒரு வருஷகாலத்திற்கு வந்தன. ஆதலால், ஆயிரம் ரூபாய் நோட்டுகளாக இருந்த இரண்டு லக்ஷம் ரூபாயில், அவர் ஒரே ஓர் ஆயிரம் ரூபாய் நோட்டை எடுத்து மாற்றிய பணத்தில் பெரும் பாகமும் மிச்சமிருந்தது. எவரேனும் கஷ்ட தசையில் இருப்பதைக் கண்டால், அவருக்கு நமது திவான் சிறிதளவு பொருளுதவி செய்வதையும் வழக்கமாக வைத்துக்கொண் டிருந்தார். ஊரூராய்த் திரியும் ஏழைப் பரதேசியாகிய தாம் அடிக்கடி பெருத்த பெருத்த தொகைகளை எடுத்து தானம் வழங்கினல், அதைக் காணும் பிறர் தமக்கு எங்கிருந்து பணம் வருகிறது என்பதை அறியவேண்டுமென்று தமக்குத் தெரியாமலேயே கவனித்திருந்து தாம் தமது மடியில் பணம் வைத்திருப்பதைக் கண்டு கொள்வார்கள் என்றும், அதனல், தமக்கு ஏதேனும் அபாயம் நேரும் என்றும் நினைத்து திவான் தமது பொக்கிஷத்தை அடிக்கடியும் அதிகமாயும் வெளியில் எடுக்காமல் நிரம்பவும் எச்சரிப்பாக நடந்துகொண்டார்.

அவ்வாறு நாட்கள் கழியக் கழிய, தாம் அவ்வளவு பெருத்த பணத்தொகையைக் கட்டிக் காத்து அதைக் குறித்து இரவு

பகல் கவலையுற்றது அவருக்கு அநாவசியமான பாரமாகப்பட்டது. தாம் கண்ட ஆயிரக்கணக்கான துறவிகளுள் எவரும் தமது கையில் பணமே வைத்திருந்ததாகத் தோன்றவில்லை. அவரவர்கள் எங்கேனும் ஆகாரம் கிடைத்தால் உண்பதும், இடம் கிடைத்தால் படுப்பதுமாக இருந்தனரேயன்றி, மறுநாளைக்கு என்ன செய்வது என்ற நினைவையாகிலும், தான் பணம் சேர்க்க வேண்டுமென்ற கவலையையாகிலும் கொண்டதாகவே தோன்றவில்லை. அவ்வாறு இருந்தவர்களே உண்மையில் உலகைத் துறந்த ஞானிகளென்றும், மற்ற எல்லாவற்றையும் துறந்தும் பெருத்த பணத்தொகையை மாத்திரம் துறக்காமல் சுமந்து திரியும் தாம் போலித் துறவியேயன்றி உண்மைத் துறவியல்லவென்றும், அந்தப் பொருள் தம்மிடம் இருக்கும் வரையில் தாம் கடைத்தேறப் போவதில்லையென்றும் அவர் எண்ணத் தொடங்கினர். ஆகவே, தாம் கூடிய விரைவில் அந்தத் தொகையை எவரேனும் சற்பாத்திரர்களாய்ப் பார்த்து அவர்களுக்கு வழங்கிவிட்டு, உண்மைத் துறவியாகிவிட வேண்டுமென்று தீர்மானத்தை அவர் செய்துகொண்டதன்றி, தாம் அதை எவருக்குக் கொடுக்கலாம் என்று பலதினங்கள் வரையில் அதே சிந்தனையாக இருந்தபடி தெற்குத்திக்கில் பிரயாணம் செய்துகொண்டே வந்தார். அப்போதும் அவருக்கு அடிக்கடி காந்திமதியம்மாளைப் பற்றிய நினைவும் ராஜாபகதூரைப் பற்றிய நினைவும் அடிக்கடி தோன்றி அவரது மனத்தை உருக்கிக்கொண்டே இருந்தன. தாம் அவர்களை மறந்துவிட வேண்டுமென்று அவர் எவ்வளவோ முயன்று பார்த்தாராயினும், அந்த முயற்சி சிறிதும் பலியாமல் போனதன்றி எதிர்மறையான பலனையே கொடுத்துக்கொண்டிருந்தது. தமது பிரயாண சமயங்களில் திடீரென்று அழகிய ஸ்திரீகள் எவரேனும் அவரது திருஷ்டியில் படுவார்களாயின், அவர்களைத் தாம் பார்த்தால் தமது காந்திமதியம்மாளது நினைவு வந்து வருத்தப்போகிறதே என்ற நினைவினால் அவர் எந்த ஸ்திரீயையும் கண்ணெடுத்துப் பார்ப்பதே கூடாதென்பதை ஒரே பிடிவாத விரதமாக அநுஷ்டித்து வந்தார். அவர் அவ்வாறு செய்துவந்தது காந்திமதியம்மாளைப் பற்றி அவரது மனம் ஓயாமல் நினைத்து வருந்திப் புண்பட்டிருந்தது அதிகரிக்காமல் இருப்பதற்கு அநுகூலமாக இருந்தது. ஆயினும், பத்துப் பன்னிரண்டு வயதுள்ள அழகிய குழந்தைகள் தமக்கெதிரில் போவதையாகிலும், விளையாடுவதையாகிலும், அல்லது, பேசுவதையாகிலும் அவர் கண்டுவிடுவாரானல், அவரது மனம் உடனே பொங்கித்

தவித்துப்போகும். அவரது கண்களிலிருந்து தண்ணீர் மாலை மாலையாய்ப் பெருகி வழியும். அவர் தமது அருங்குணப் புதல்வனை ராஜாபகதூரை நினைத்துக் கட்டிலடங்காமல் தேம்பித் தேம்பி யழுவதால் துக்கம் அவரது நெஞ்சை யடைத்துக்கொள்ளும். அவர் உடனே வாய் விட்டுத் தமக்குத் தாமே புலம்பத் தொடங்குவார். அவரது தேகம் பதறி ஆடும். "ஐயோ! என்னப்பா! என் கண்மணியே! உன்னை நான் காணும்போதெல்லாம் என் மனம் அப்படியே பூரித்துப் பொங்கி விடுமே! உன்னை நான் என் முன்னோரின் தவப்பயனென்று எண்ணி எண்ணிப் பரவச மடைவேனே! ஐயோ! என் செல்வச் சீராளா! உன் முகத்தை நான் மறுபடியும் என் கண்களால் காணப்போகிறேனா! இந்தக் கட்டை இனி அதிககாலம் இந்த மண்ணில் நிலைத்து நில்லாதுபோ லிருக்கிறதே! உன் முகத்தை நான் பார்க்காமலே இறந்து போய் விடுவேனோ! ஐயோ! ஈசுவரா! பரமதயாளுவே! என்னப்பனே! எவருக்கும் கிடைக்காத பேரின்பத்தை அந்தக் குழந்தையின் மூலமாய் எனக்குக் காட்டி மறைத்து விட்டாயே! அவ்வளவு கொடுமையாக என்னைத் தண்டித்து ஒறுப்பதற்கு நான் உன் விஷயத்தில் என்ன அபசாரம் செய்தேனோ தெரியவில்லையே! ஆ! என் ராஜாபகதூரை நினைக்க நினைக்க, என் மனமும் அங்கமும் உருகி உட்கார்ந்து போகின்றனவே. எனக்கு இன்பச்சுடர் கொளுத்தும் என் அருந்தவச் செல்வனை இவ்வளவு நீண்டகாலமாய் நான் பார்க்காமல் இருந்தும், என் உயிர் போகாமல் எப்படித்தான் இந்த உடலில் நிலைத்திருக்கிறதென்பது எனக்கே தெரியவில்லையே. ஐயோ! கண்ணே! உன் தேகத்தைக் கட்டி யணைக்காமல் என் அங்கமெல்லாம் குழைகிறதே! உன் அழகான சொற்களைக் கேளாமல், என் செவிகளெல்லாம் பாழ்த்துப்போய் விட்டனவே! தாமரை மலருவது போல எப்போதும் இனிமையாகச் சிரிக்கும் உன் முகத்தைக் காணாமல் என் கண்களுக்கு இந்த உலகமே இருண்டு அழகற்றுத் தோன்றுகிறதே; ஹா என்ன செய்வேன்; நான் எவ்வளவுதான் பட்டினிபோட்டுக் கொண்டாலும் இந்தப் பாவியுடல் அழியமாட்டேனென்கிறதே! ஈசா! ஈசா! கருணாநிதே! பரமகிருபாநிதே! இந்த ஏழையேன் தவிப்பது உன் திருவருளுக்குத் தெரியவில்லையா! என்மேல் கருணைபாலிக்கலாகாதா! என்னை உன்பாதாரவிந்தங்களில் சேர்த்துக்கொள்ளு முன் என் அருங்குண மணியின் முகத்தை எனக்கு ஒரு முறையாவது காட்டுவாயோ மாட்டாயோ தெரியவில்லையே! ஆ! என் கண்

மணியே! இவ்வளவு சிறிய வயசில் நீ எவ்வளவோ நியாயமெல்லாம் பேசுவாயே! எவரேனும் தவமுகப் பேசினாலோ, அல்லது நடந்து கொண்டாலோ, கூசாமல் நீ அவர்களைத் திருத்தும் அழகென்ன! நியாயாதிபதியைப் போல நடுநிலை தவறாமல் எதையும் நீ முடிவுசெய்யும் உன் அபாரபுத்தி யென்ன! உன் தாயாரிடம் எவ்வளவுதான் மதிப்பும், மரியாதையும் வைத்திருந்து, அவளுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடந்தாலும், அவளுடைய துர்நடத்தையைக் கண்டு நீ கண்டிக்காமல் எப்படிப் பொறுத்துக் கொண்டு அவளுக்கு அநுசரணையாக இருக்கிறுயென்பது தெரியவில்லையே! சே! நீ ஒருநாளும் அப்படி இருக்கவே மாட்டாய்! உன் தாயாக இருந்தாலும், அவள் கெட்ட வழியில் பிரவேசித்தால், நீ அதைக் கண்டு ஒரு நிமிஷமும் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டாய். அவள் தன்னுடைய துர்நடத்தை உனக்குத் தெரியாதபடி நிரம்பவும் ஜாக்கிரதையாகவும் தந்திரமாகவும் உன்னிடம் நடந்து கொண்டிருக்கிறுளென்றே நினைக்கிறேன். நீயும் அவளால் முற்றிலும் வஞ்சிக்கப்பட்டே இருக்க வேண்டுமென் பதைப்பற்றி சந்தேகமே இல்லை. என்னேடிருந்தால் எப்பேர்ப்பட்ட அபாரமான செல்வத்தில் நீ இருந்து சுகப்படுவாய்! இப்போது நீ உன் தாயின் வஞ்சகத்தில் பட்டு என்ன நிலைமையில் இருக்கிறுய் என்பது தெரியவில்லையே! சரியான பொருளுதவி இல்லாமையினல் நீ எவ்விதமான கஷ்டங்களுக்கு ஆளாயிருக்கிறுயோ தெரியவில்லையே! நியாயமாய்ப் பார்த்தால் என் தந்தையிடத்தில் இருக்கும் சொத்துகளும் இப்போது என்னிடத்தில் இருக்கும் பெருத்த பணத்தொகையும் உன்னையே சேரவேண்டியவைகளல்லவா. என் தகப்பனரிடம் இருப்பவை போனலும், இப்போது என்னிடம் இருப்பதே உனக்கு ஏராளமாய் விடுமே. நீ இருக்கும் இடம் தெரிந்தால் இதையாவது உனக்கு அனுப்பி விடுவேனே! என் கண்ணே! என் அருங்குண நிதியே! நீ எங்கே இருக்கிறுயோ தெரிய வில்லையே! நான் எப்படி உன் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்கப் போகிறேன்'' என்று திவான் சாமியார் அடிக்கடி பலவாறு பிரலாபித்துத் தமக்குத்தாமே விம்மி விம்மி யழுது கண்ணீர் சொரிவார்.

அவ்வித மன நிலைமையில் அவர் வடக்குத் திக்கிலிருந்து சென்னைக்கு வந்தார்; வந்தவர் அந்தப் பட்டணத்தின் தெருக்களோடு

போய்க் கொண்டிருந்த காலத்தில் பக்கத்தில் இருந்த ஒரு பிரபல மான கட்டிடத்தை அவர் தற்செயலாகப் பார்த்தார். அது ஒரு தினசரி சமாசாரப் பத்திரிகையின் காரியாலயம் என்று அவர் உணர்ந் தார். அப்போது அவரது மனத்தில் ஒருயுக்தி தோன்றியது. தாம் அந்தப் பத்திரிகையில் ஒரு விளம்பரம் பிரசுரித்தால், அதன் மூல மாய்த் தமது மகன் இருக்கும் இடம் தமக்குத் தெரியலாமென்ற யோசனை தோன்றவே, அவர் அவ்வாறே செய்யவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு, மறைவான ஓரிடத்திற்குச் சென்று, தமது மடியிலிருந்து அதற்குத் தேவையான பணத்தொகையை உத்தேச மாக எடுத்து வைத்துக் கொண்டு, அந்தக் காரியாலயத்திற்குள் நுழைந்து, அடியில் வரும் விளம்பரத்தை மறு நாளைப் பத்திரிகை யில் வெளியிடும்படி ஏற்பாடு செய்து, அதற்குரிய கட்டணத்தை அப்போதே செலுத்தினர். அந்த விளம்பரம் அடியில் வரு மாறு:—

சென்ற சில வருஷங்களுக்கு முன் திருவநந்தபுரம் சமஸ்தானத் தில் திவான் வேலையிலிருந்து புலி யடிக்கப்பட்டதனால் இறந்து போன—முதலியாருடைய பணம் சுமார் இரண்டு லக்ஷம் ரூபாய் வரையில் ஓரிடத்தில் இருக்கிறது. தமக்குப் பிறகு அந்தத் தொகையை ராஜாபகதூர் என்ற பெயர்கொண்ட தமது குமாரனி டம் சேர்த்து விட வேண்டுமென்று அவர் கைச்சாத்துக் கொடுத் திருக்கிறார். அந்தச் சிறுவன் இப்போது இன்ன இடத்தில் இருக் கிறானென்பது தெரியாமலிருக்கிறதாகையால், அவனாவது, அல் லது, வேறு எவராவது அவனுடைய தற்கால இருப்பிடத்தை அடியிற் காணப்படும் விலாசத்திற்கு எழுதி யனுப்பினால், ஷை தொகையை உடனே அவனிடம் சேர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்படும். இவ்விஷயத்தில் உதவி செய்யும் கனவான்களுக்கு எனது மன மார்ந்த நன்றியறிதலை முன்னதாகவே தெரிவித்துக் கொள்ளுகி றேன்.

இங்ஙனம்,
மேகலிங்கப் பண்டாரம்.

என் விலாசம்:—

தஞ்சை ஜில்லா, திருவடமருதூர் போஸ்டு மாஸ்டர்
மேல் பார்த்து, மேகலிங்கப் பண்டாரம்.

என்ற விளம்பரத்தை மறுநாளைய பத்திரிகையில் பிரபலமான இடத்தில் பெரிய எழுத்துகளில் பிரசுரிக்கும்படி ஏற்பாடு செய்து விட்டு நமது திவான் சாமியார் வெளியில்சென்று திருவட மருதூர் போஸ்டு மாஸ்டருக்கும் ஒரு கடிதம் எழுதி, மேலே காட்டப் பட்ட விலாசத்திற்கு வரும் கடிதங்களைத் தாம் நேரில் வந்து கேட் கும் வரையில் ஜாக்கிரதையாக வைத்திருக்கும்படி அதில் கண்டு அதை ரிஜிஸ்டர் செய்து அனுப்பி விட்டார்.

அதன் பிறகு திவான் சாமியார் சென்னையில் சில தினங்கள் தங்கி அவ்விடத்திலிருந்து கால் நடையாகவே புறப்பட்டு மேலும் தென் திசையில் யாத்திரை செய்யலானார். அதற்கு முன் தாம் வடக்குத் திக்கில் சென்ற காலத்தில் எந்தெந்த ஊர்களின் வழியாகப் பிரயாணம் செய்தாரோ அவைகளை விட்டு வேறு வழியாகச்சென்று இடையிலுள்ள க்ஷேத்ரங்களில் தங்கி தீர்த்தாடனம் சுவாமி தரி சனம் முதலியவற்றைச் செய்துகொண்டே சுலபமாகவும் மெதுவாக வும் ஒரு நாளைக்கு சொற்பதூரமாகவும் நடந்து சுமார் இருபது தினங்களுக்குப் பிறகு ஒருநாள் பிற்பகலில், தமது ஜென்ம பூமி யாகிய திருவடமருதூருக்குப் போய்ச் சேர்ந்தார். அந்த ஊரை வெகு தூரத்திற்கப்பால் காணும்போதே, சிதம்பரத்தைக் கண்ட நந்தனார் எவ்வாறு உள்ளங் குளிர்ந்து உவகை பூத்து ஆநந்த பரவசமடைந்து இன்பமும், துன்பமும், ஆவலும், சந்தோஷ மும் கொண்டு மெய்ம்மறந்து துடி துடித்தாரோ, அது போல நமது திவான் சாமியாரும் தமது மனவெழுச்சியைத் தாங்கமாட்டாதவராய்த் தவித்துத் தத்தளிக்கலானார். பல ஆண்டுக ளாகப் பிரிந்திருந்த தமது தந்தையைத் தாம் காணப்போகிறோம் என்ற ஆசையினாலும் சந்தோஷத்தினாலும் அவரது மனம் பொங்கி யெழுந்து துடித்தது. அவர் தமது இளைய மனைவியுடன் சந்தோஷமாகவும் க்ஷேமகரமாகவும் இருப்பார். இவருக்கு இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்து அழகாய் வளர்ந்திருக்கும், தாம் தூரத்திலிருந்தபடியே அவைகளைப் பார்த்து ஆநந்தமடையலாம் என்று அவர் பலவாறு எண்ணி எண்ணி இன்பக் கனவு கண்டபடி மெய்ம்மறந்து நடந்தார். அதுவுமன்றி, தாம் சமாசாரப் பத்திரி கையில் பிரசுரித்த விளம்பரத்திற்கு ஏதேனும் மறுமொழிக் கடி தம் வந்து தபால் ஆபீசில் இருக்கலாமென்றும் அதன் மூலமாய்த் தாம் தமது அருங்குணப் புதல்வன் இருக்கு மிடத்தை அறிந்து,

அவ்விடம் சென்று அவனைக் கண்டு நெடுங்காலமாய்த் தமக்கு இல்லாமல் போயிருந்த பேரின்பத்தை அநுபவிக்கலாம் என்றும் அவர் உறுதியாக நம்பி, அதைக் குறித்தும் மிகுந்த ஆவலும் பதை பதைப்பும் தாங்க வொண்ணாத மனக்கிளர்ச்சியும் அடைந்தவராய் நடந்து தமது சொந்த ஊரை யடைந்தார். ஊருக்குள் நுழைந்த பொழுதே இன்னதென்று விவரிக்க இயலாத ஒருவித இன்பம் அவரது உச்சிமுதல் உள்ளங்கால்வரையில் பரவியது. உரோமம் சிலிர்த்தது. அவர் ஆநந்த பரவச மடைந்தவராய்ச் சென்றார். பழைய இடங்களையும், கோவிலின் மதில்களையும், கோபுரங்களையும், பிரம்மாண்டமான நந்திகேசுவரரையும், நான்கு வீதிகளையும் காணவே, அவரது மனத்தில் புதைந்து கிடந்த பழைய காலத்து நினைவுகள் யாவும் சண்ட மாருதம்போல எழுந்து கோடா நு கோடி ஞாபகங்களையும், சம்பந்தங்களையும் பலவகைப்பட்ட உணர்ச்சிகளை யும் கிளப்பிவிட்டன.

அத்தகைய சகிக்க வொண்ணாத மன நிலைமையில் திவான் சாமியார் அந்த ஊர் தபால் ஆபீசை யடைந்து அதன் தலைவரைக் கண்டு, அவருடன் இங்கிலீஷில் சம்பாஷித்து, தாம் வெளியிட்ட விளம்பரத்திற்கு ஏதேனும் மறுமொழி வந்திருக்கிறதோவென்று மிகுந்த ஆவலோடும் மன வேதனையோடும் வினவினார். இளைத் துக் கருத்துத் துரும்புபோல மெலிந்திருந்த அந்தப் பரதேசியைக் கண்ட தபால் கச்சேரித் தலைவர் முதலில் கம்பீரமாக நிமிர்ந்து கருடப் பார்வை பார்த்து அசட்டையாகவும் அலட்சியமாகவும் அவரை மதித்துத் துடுக்காகவும் இளக்கமாகவும் மறுமொழி கூறத் தொடங்கினானாலும், சாமியார் இங்கிலீஷ் அழகாகவும் விநய மாகவும் சம்பாஷித்ததைக் கண்டு அவரிடம் சிறிதளவு மதிப்பு வைத்து, பட்டுவாடா செய்யப்படாமல் பாக்கியாய்த் தமது கச்சே ரியில் வைக்கப்பட்டிருந்த காகிதங்களை யெல்லாம் எடுத்து ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினார். அந்த ஒரு நிமிஷமும் நமது சாமியாருக்கு ஒரு யுகமாகத் தோன்றியது. அவரது ஆவல் வேதனை அபாரமாகப் பெருகி உச்ச நிலையை யடைந்து விட்டது. பத்து நிமிஷ காலம் வரையில் காகிதங்களை ஆராய்ந்து சோதனை செய்து பார்த்த தபால் அதிகாரி தமது உதட்டைப் பிதுக்கி, "அப்படிப்பட்ட கடிதங்கள் ஒன்றும் வரவில்லை" என்று கூறினார். அது திவான் சாமியாருக்கு நம்பிக்கைப் படவில்லை யாதலால் அவர்

உடனே தபால் தலைவரை நோக்கி, "ஐயா! தயவு செய்து நன்றாய்ப் பார்த்து சொல்லுங்கள்; ஒருவேளை எங்கேயாவது காகிதங்களுக்குள் காகிதமாய் மறைந்திருக்கலாம். பிரயாசை கொடுப்பதற்கு மன்னிக்க வேண்டும்" என்று நயமாகவும் பணிவாகவும் ஏக்கத்தோடும் விசனகரமாகவும் கூறினர்.

காகிதங்களை யெல்லாம் பார்த்து முடித்த தபால் தலைவர், "ஐயா! நன்றாய்ப் பார்த்துச் சொல்வது ஒன்று, நன்றாய்ப் பார்க்காமல் சொல்லுவதொன்று உண்டா? நன்றாய்ப் பார்க்காமல் யாராவது இல்லை யென்று சொல்லுவார்களா? அப்படியானல் நான் என் வேலையை அஜாக்கிரதையாகப் பார்க்கிறேனென்று நீர் சொல்லுகிறீரா? எனக்கு நீர் வேலை கற்றுக் கொடுக்கிறீரா? நான் இல்லை யென்றால், அது நிச்சயமாக இல்லைதான். நான் நன்றாக ஆராய்ந்து பார்த்துச் சொன்னேனென்பதே அதன் அர்த்தம். தெரிகிறதா? எனக்கு அவசர வேலை யிருக்கிறது. சொன்னதையே மறுபடி திருப்பித் திருப்பிச் சொல்ல எனக்கு நேரமில்லை. நீர் போகலாம். அடே போஸ்டுமேன்! ஜன்னல் கதவை மூடு. கொஞ்ச நேரம் கழித்து மறுபடி திறக்கலாம்" என்று நிர்த்தாக்ஷிணியமாகவும் முன்கோபமாகவும் பேசினர்.

அதைக் கேட்ட திவான் சாமியார் அவமானத்தினல் குன்றிப்போய் அவ்விடத்தை விட்டு அப்பால் நடந்தார். தாம் வெளியிட்ட முக்கியமான விளம்பரத்திற்கு எவ்வித உத்தரமும் இல்லாமல் போகுமென்று அவர் எதிர்பார்க்கவே இல்லையாதலால், முற்றிலும் பிரதிகூலமான அந்த மறுமொழியைக் கேட்டது அவருக்கு இடி வீழ்ந்தது போலாய்விட்டது. எப்படியும் தாம் தமது அருந்தவப் புதல்வனைக் காணலாம் என்ற எண்ணம் அவலமாய்ப் போய்விட்டதே என்ற ஏக்கமும், துயரமும், அந்த விபரீதச் செய்தியால் ஏற்பட்ட மன அதிர்ச்சியும் அவரது அறிவைக் கலக்கிச் சித்தப்பிரமை கொண்டவர்போல மாற்றிவிட்டன. "என்ன ஆச்சரியம்! இவர்கள் இருவரும் எங்கேதான் போயிருப்பார்கள் என்பது தெரியவில்லையே! உயிரோடு இருக்கிறார்களோ; இறந்து போய்விட்டார்களோ என்பதுகூட நிச்சயமாய்த் தெரியவில்லையே! ஒருவேளை இந்த விளம்பரம் அவர்கள் வரையில் எட்டாமல் போயிருக்குமா? இது பெருத்த விந்தையாக இருக்கிறதே! இனி நான் எப்படித்தான் முயற்சி செய்யப்போகிறேன்! எப்படித்தான் அவனைக் கண்டு

பிடித்து இந்தப் பணத்தை அவனிடம் சேர்க்கப்போகிறேன். இனி தற்செயலாய் எவ்விடத்திலாவது நான் அவனைக் கண்டா லன்றி என் முயற்சியால் அது பலிதமடையாதென்று நினைக் கிறேன். இனி தற்செயலாய் நான் அவனைக் காணப்போகிறே னென்பதை ஒரு நிச்சயமாக வைத்துக்கொண்டு இனியும் நான் இந்தப் பணத்தைத் தூக்கிச் சுமப்பது பலனற்றதாக முடிந்தாலும் முடியலாம். அவனுக்கு மற்றதெல்லாம் பிராப்தமில்லாது போனது போல இதுவும் அவனுக்குப் பிராப்தமில்லைபோ லிருக்கிறது. போகட்டும். என் தகப்பனருக்கு அநேகமாய் இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்திருக்கலாம். அவர்களாவது சுகப்படட்டும். நான் எப்படியாவது தந்திரம் செய்து இந்தப் பணத்தை என் தகப்பனரிடம் சேர்த்து விடுகிறேன்" என்று திவான் சாமி யார் தீர்மானித்துக் கொண்டு தமது மாளிகை இருந்த தெருவை நோக்கி நடக்கலானர். துக்கமும், ஏக்கமும், ஏமாற்றமும் ஒரே மூர்க்கமாக அவரது மனத்தைச் சூழ்ந்து கப்பிக்கொண்டன. ஆயி னும், தாம் தமது அருமைத் தந்தையைக் காணப்போகிறோம் என்ற நினைவினல் சிறிதளவு ஊக்கமும் உற்சாகமும் மனத்தெளிவும் கொண்டு அவர் தளர்நடை நடந்து, இரண்டொரு நிமிஷ நேரத் தில் தமது மாளிகையின் வாசலை யடைந்து, அதற்கு எதிரிலிருந்த வீட்டின் வாசல் திண்ணைக்குப் போய், அதன்மேல் உட்கார்ந்து கொண்டு மிகுந்த ஆவலோடும் ஆசையோடும் எதிர்த்த வீட்டை நோக்கி, யாராகிலும் மனிதர்கள் வெளியில் வருகிறார்களோ வென்று பார்த்துக் கொண்டே இருந்தார். சில குழந்தைகள் உள்ளே இருந்து ஓடிவருவதும், மறுபடி உள்ளே போவதுமா யிருந்ததைக்காணவே, நமது திவான் சாமியாரின் முகம் சந்தோஷத் தினல் மலர்ந்தது. மனம் ஆநந்த மடைந்தது. அக் குழந்தை கள் அநேகமாய்த் தமது தந்தையின் இரண்டாந்தாரத்துக் குழந் தைகளாகத் தான் இருக்க வேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு அதைக் குறித்து அபாரமான மகிழ்ச்சியும், குதூகலமும் அடைந்த வராய்த் தமது பிதா அப்போது வீட்டில் இருக்கிறாரோ, வெளி யில் வருவாரோ மாட்டாரோ என்று பலவாறு ஐயமுற்று ஆவலே வடிவாக வீற்றிருக்க, அவர் உட்கார்ந்திருந்த வீட்டிற்குள்ளிருந்து ஒரு ஸ்திரீ வெளியில் வந்தாள். வந்தவள் திண்ணையில் உட்கார்ந்தி ருந்த சாமியாரைப் பார்த்துப் பதுங்கி ஒதுங்கி தூர விலகி வெளி யில் வந்து குறட்டின் மேல் ஒரு பக்கமாக நின்றவண்ணம் அவ

ரைப் பார்ப்பதும், அவர் யாரென்று கேட்கலாமோ கூடாதோ வென்று சந்தேகம் கொள்வதும், பிறகு தெருவைப் பார்ப்பதுமாய் நின்றாள்.

அப்போது நமது சாமியாரும் நிமிர்ந்து அந்த ஸ்திரீயின் முகத்தைப் பார்க்க, அதற்கு முன் தமது தந்தையின் கலியாண தினத்தன்று தாம் அங்கே உட்கார்ந்திருந்த சமயத்தில் தம்முடன் பேசிய ஸ்திரீயே அவள் என்பது உடனே தெரிந்து போய்விட்டது. ஆயினும், அந்த அம்மாள் முன்னர் இருந்ததைவிட வயது முதிர்ச்சியடைந்து தளர்ந்து போய்க் காணப்பட்டாள். அவர் உடனே அந்த ஸ்திரீயை நோக்கி மரியாதையாகவும் நயமாகவும் பேசத்தொடங்கி, "அம்மணீ! என்னுடைய அடையாளம் உங்களுக்குத் தெரிகிறதா?" என்றார்.

அந்த ஸ்திரீ வியப்படைந்து அவரை நன்றாக உற்றுப்பார்த்து "அடையாளம் தெரியவில்லையே? நீங்கள் யார்? இதற்கு முன் எப்போது என்னைப் பார்த்தீர்கள்?" என்றாள்.

சாமியார், "தாயே! உங்களுடைய அடையாளம் எனக்கு நன்றாய்த் தெரிகிறதே! உங்களுக்கு என் அடையாளம் தெரியவில்லையா? எதிர்த்த வீட்டிலுள்ள பெரியவருக்கு இரண்டாவது கலியாணம் நடந்த அன்றைய தினம் நான் வந்து இதே திண்ணையில் கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தேன். அப்போது பந்தலில் மேளக்கச்சேரி நடந்துகொண்டிருந்தது. நீங்கள் வெளியில் வந்தீர்கள். அப்போது நான் உங்களோடு கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருந்தேன். ஆனால், அப்போது என் தலை மொட்டையாக இருந்தது. இப்போது என் முகமும் தலையும் தாடியும் ஜடைகளுமாயிருக்கின்றன. ஆகையால், உங்களுக்கு என் அடையாளம் தெரியவில்லை போலிருக்கிறது" என்றார்.

அந்த ஸ்திரீ ஆச்சரியத்தோடு அவரை உற்றுநோக்கிச் சிறிது நேரம் யோசனைசெய்து பார்த்து, "ஓகோ! அப்படியா! ஆம். இருக்கலாம்! எனக்கும் ஒருவிதமாக நினைவுண்டாகிறது. அது இப்போதைக்குச் சுமார் ஏழுவருஷங்களுக்கு முன் நடந்த சங்கதியல்லவா?" என்றாள்.

சாமியார், "கிழவருக்குக் கலியாணமாகி இப்போது ஏழு வருஷகாலம் ஆகி விட்டதா! கலியாணம் நேற்று நடந்த மாதிரியாக

இருக்கிறதே! பெரியவருக்கு ஏதாவது குழந்தைகள் இருக்கின்றனவா? அதோ திண்ணையில் இருக்கின்றனவே, அவைகள் பெரியவருடைய குழந்தைகளா! பெரியவருடைய மருமகள் பேரன் முதலியவர்களைப் பற்றி அதற்குப் பிறகு ஏதாவது செய்தி கிடைத்ததா? கிழவர் திடமாக இருக்கிறாரா?" என்று நயமாக வினவினார். அவரது சொற்களைக் கேட்ட அந்த ஸ்திரீயினது முகத்தில் பரிகாசப் புன்னகை அரும்பியது. அவள் வியப்போடு அவரது முகத்தை நோக்கி, "சாமியார் ஐயா கேட்கிற கேள்விகளைப் பார்த்தால், கலியாணத்துக்குப் பிற்பாடு இதுவரையில் சாமியார் ஐயா இந்த உலகத்திலேயே இல்லைபோ லிருக்கிறதே! இவ்விடத்துச் செய்தியே எதுவும் உங்களுக்குத் தெரியாதுபோ லிருக்கிறதே!" என்றாள்.

சாமியார் திடுக்கிட்டு மிகுந்த திகிலும் கலவரமு மடைந்து அந்த ஸ்திரீ எவ்விதமான விபரீதச் செய்தியைத் தெரிவிப்பாளோ என்ற கவலையும் கலக்கமும் கொண்டாராயினும், தமக்கு அந்தக் குடும்பத்தில் ஏதோ சம்பந்த மிருப்பதாய் அவள் சந்தேகங் கொண்டு விடுவாள் என்கிற நினைவினால் அரும் பாடுபட்டுத் தம்மை அடக்கிக்கொண்டு, "ஏழுவருஷத்திற்குமுன் இங்கிருந்து புறப்பட்டுப் போன நான் வடக்கே காசி காஷ்மீரம் வரையில் யாத்திரை போய் விட்டு இப்போதுதான் நேராகத் திரும்பி வருகிறேன். நான் இந்த ஊருக்கு வந்து இன்னம் அரைநாழிகை கூட ஆயிருக்காது. வந்தவன் நேராக இந்தத் திண்ணைக்கே வந்தேன். எனக்கு எந்தத் தகவலும் தெரியாது. ஏனம்மா!" ஏதாவது விசேஷமுண்டா? பெரியவர் க்ஷேமமாயிருக்கிறாரல்லவா!" என்றார்.

அந்த ஸ்திரீ, "சரி, சரி! உங்களுக்கு ஒன்றுமே தெரியாது போலிருக்கிறது; கிழவர் செத்துப்போய் இரண்டு வருஷத்துக்கு மேல் ஆகிறதே! அவருடைய குடும்பமே பூண்டற்றுப் போய்விட்டதே!" என்றாள்.

தமது ஆருயிர் தந்தை இறந்து போய்விட்டார் என்ற துக்ககரமான செய்தியைக் கேட்கவே, நமது திவான் முதலியாரது தேகம் தானகவே கிடுகிடென்று ஆடியது. அவரது உயிரில் பெரும் பாகமும் போய் விட்டதென்றே மதிக்க வேண்டும். அவரது மூளையும் அறிவும் குழம்பிப் போயின. அது பூமியோ ஆகாயமோ என்பது தெரியாதபடி அவருக்குப் பெருத்த கலக்கம் ஏற்பட்டு

விட்டது. தாங்க வொண்ணாத பெருத்த துக்கம் எழுந்து கப்பிக் கொண்டது. அபாரமான விசையோடு அழுகை பொங்கி நெஞ்சை யடைத்தது. கண்களிலிருந்து கண்ணீர் குபீரென்று வழியத் தொடங்கியது. திடீரென்று பொங்கி யெழுந்த அளவற்ற விசனத்தைத் தாங்கமாட்டாமல் அவரது ஹிருதயம் வெடித்துவிடுமோ என்ற நிலைமைக்கு வந்துவிட்டது; அவர் மின்சார சக்தியால் தாக்கப்பட்டவர்போல அந்த ஸ்திரீயை நோக்கி, "ஆ! அப்படியா! பெரியவர் இறந்தா போய்விட்டார்! அடடா! ஐயோ! அவருக்குக் கொள்ளி போட்டது யார்? கருமாதி முதலிய அந்தியக் கிரியைகளை யெல்லாம் செய்தது யார்? அவருடைய மூத்தபிள்ளை இறந்து போய்விட்டாரே! பிறகு அவருக்கு ஏதாவது குழந்தைகள் உண்டா?" என்றார்.

அந்த ஸ்திரீ, "அவருடைய பிள்ளை இறந்துபோய் விட்டால், அதன் பிறகு பெரியவருடைய பிணம் சுடுகாட்டுக்குப் போகாமல் வீட்டிலேயே இருந்துவிடப்போகிறதா? யாராவது கொள்ளிபோட்டுக் கொளுத்தாமல் சும்மா விட்டுவிடப் போகிறார்களா? எப்படியோ கிழவருடைய காரியமும் முடிந்தது. அவருக்குக் குழந்தையுமில்லை, குட்டியுமில்லை; கலியாணம் ஆனபிறகு அவர் தம்முடைய பெண்ஜாதியைத் தம்முடைய கையால் தொட்டுக்கூட இருப்பாரோ? மாட்டாரோ? அவர் தம்முடைய பெரிய பிள்ளை போன விசனத்தில் இடிந்து உட்கார்ந்து போனவர் அதன்பிறகு தேறவே இல்லை. அவருடைய மருமகளும், பேரனும் போனவர்கள் போனவர்களே. நாளது தேதிவரையில் அவர்களைப்பற்றி எவ்விதமான செய்தியும் கிடைக்கவில்லை" என்றாள்.

சாமியார், "ஆ! அப்படியா! அப்படியானால் இப்போது பெரியவருடைய சொத்துக்களையெல்லாம் அவருடைய இரண்டாவது சம்சாரமும், அவளுடைய தாய் தகப்பன்மாரும் வைத்து அநுபவித்துக்கொண் டிருக்கிறார்களா?" என்றார்.

அந்த ஸ்திரீ, "கிழவர் இறந்த பிறகு ஒரு மாசகாலம் வரையில் அவர்கள் இந்த ஊரில் இருந்தார்கள். அதற்குள் அவர்கள் இந்த வீடு, நிலம் முதலிய சொத்துக்களை யெல்லாம் விற்றுப் பணமாக்கி எடுத்துக்கொண்டு இரவோடிரவாய் எங்கேயோ போய் விட்டார்கள். இப்போது அவர்கள் எந்த ஊரி லிருக்கிறார்களென்பது யாருக்கும் தெரியாது" என்றாள்.

திவான், "அம்மணி! பெரியவர்கள் அவருடைய இளைய சம்சாரத் தைகை கையால் தொட்டுக்கூட இருக்கமாட்டார்களென்று சொன் னீர்களே! முன் தடவை நீங்கள் சொன்னதில், அந்தப்பெண் கிழவ ருடன் எப்போதும் கூடவே இருந்து அவருடைய பிரியத்திற்குப் பாத்திரமாய் அவருக்கு நிரம்பவும் கீழ்ப்படிந்து நடந்ததாகச் சொன்னீர்களே! முதலில் அப்படி நடந்துகொண்ட பெண்ணை பிற்பாடு அவர் தொடக்கூட முடியாமல் போன வகை யென்ன?" என்றார்.

அந்த ஸ்திரீ சிறிது தயங்கி, "அவரவருக்கு அதிகாரமும் உரி மையும் ஏற்பட்டு நிலைக்கிறவரையில் அநேகமாய் ஜனங்கள் அப் படித்தான் பணிவாகவும் ஹிதமாகவும் நடந்து கொள்ளுகிறார்கள்; பிறகு புது மாதிரியாய் மாறி விடுகிறார்கள். பெரியவருக்கு அப் போது அறுபது வயசுக்கு அதிகம் ஆயிருக்கும். யௌவனக் குமரி யைப் பார்த்து அவர் கட்டிக்கொண்டால், அது எப்படிப் பொருந் தும்! கலியாணமாகி ஆறு மாசத்திற் கெல்லாம், எல்லோரும் சேர்ந்து கிழவரை மூலையில் உட்கார்த்தி விட்டார்கள். பெண்ணுக் கும் யார் யாரோ சிநேகமானார்கள். கடைசியில் அது எப்படி யெப் படியோ முடிந்தது. அதை நாம் வாயில் வைத்துப் பேசுவதும் சரி யல்ல; முன்பு அவருடைய மருமகள் வழி காட்டியது வீணாய்ப் போகுமா? இவளும் அதே வழியைப் பின்பற்றினாள்" என்றாள்.

அந்த மகா விபரீதமான வரலாற்றைக் கேட்டுக்கொண்டே போன திவானுக்கு, அவரது மனதில் அபாரமாகப் பொங்கி எழுந்த விசனத்தினாலும் வேதனையினாலும் அதற்குமேல் அந்த ஸ்திரீயுடன் பேச இயலாமல் போய்விட்டது. அந்தக் கன்ன கடூர மான வரலாற்றை அதற்குமேல் கேட்கவும் அவரது மனம் இடந் தரவில்லை. அவருக்கு ஒருவித மயக்கமும் கிறுகிறுப்பும் தோன்ற வாரம்பித்தன. அவர் அந்த ஸ்திரீயை நோக்கி, அம்மணீ! இந்த வரலாற்றைக் கேட்க, என் மனம் நிரம்பவும் சங்கடப்படுகிறது. இதை ஏன் கேட்டோமென்றாய் விட்டது. உலகத்தில் எங்கே போனாலும் அக்கிரமங்களும், துக்கமும், துயரமுமாகவே இருக் கின்றன. எல்லாம் பரம்பொருளின் செயல்; நம்மால் ஆவதொன் றில்லை; இருக்கட்டும். நான் வெகு தூரத்திலிருந்து வந்ததினால் கொஞ்சம் அயர்வும் மயக்கமும் உண்டாகின்றன. நான் இப்படியே கொஞ்சநேரம் படுத்துக்கொள்ளுகிறேன்" என்று கூறியவண்ணம்,

அப்படியே மயங்கித் திண்ணையில் படுத்துவிட்டார். உண்மையி லேயே அவர் அலுப்பினால் அவ்வாறு சயனித்துக் கொண்டா ரென்று நினைத்துக்கொண்ட அந்த ஸ்திரீ தனது வீட்டு அலுவல் களைக் கவனிக்க உள்ளே போய்விட்டாள்.

திவான் முதலியார் பேச்சு மூச்சு முதலிய உயிர்ச்சின்னங்க ளற்று சவம்போலத் திண்ணையிலேயே மயங்கிப் படுத்திருந்து, வெகு நேரங் கழித்துத் தாமாகவே தெளிவடைந்து எழுந்து உட் கார்ந்தார். தாம் அப்போது எழுபது வயதடைந்த கிழவர் போலாய் விட்டதாக அவர் உணர்ந்தார். அவரது ஜீவனில் பெரும்பாகமும் போய்விட்டதென்றே கூறவேண்டும். தமது உயிர் அதிக நாட்கள் நில்லாதென்றும், வெகு சீக்கிரத்தில் அது தமது உடலை விட்டுப் பிரி ந்துபோய் விடுமென்றும் அவரது மனத்தில் ஓர் எண்ணம் தோன்றி மேலாடியது. இந்த உலகம் பாழ்த்து ஒரே இருள்மயமாக அவருக் குத் தோன்றியது. பசி தாகம் முதலிய எவ்வித தேகபாதையும் உண்டாகவில்லை. அவருக்கு எல்லாம் துக்கமயமாகவும் துன்ப நிறை வாகவும் தோன்றியது. [illegible] அதற்குமேல் அந்த ஊரில் இருப்பது தகாதென்று நினைத்து அவ[illegible] உடனே அவ்விடத்தை விட்டு எழுந்து நடந்து பிரயாணமாய் விட்டார். இன்ன திசையில் போகிறோம் இன்ன ஊருக்குப் போகிறோம் என்பதையே உணராமல் தூக்கத் தில் நடப்பவர்போல அவர் நடைப்பிணமாய்ச் சென்று கொண்டே இருந்தார். அவர் தகப்பனாரது வாழ்க்கை அவ்வாறு சீர்குலையவும், முடிவில், அவர் இறந்துபோகவும் காரணபூதராயிருந்தது தாமே என்ற நினைவு தோன்றத் தோன்ற, தாம் பெருத்த பஞ்சமா பாதகம் செய்துவிட்டதாகவும், அதற்குத் தாம் நரகத்தை யடைவதைத் தவிர வேறு பிராயச்சித்தம் இல்லவே இல்லையென்றும் அவர் எண் ணிக்கொண்டவராய்த் தமக்கு எதிரில் காணப்பட்ட ரஸ்தாவோடு வெகுதூரம் நடந்து பக்கத்திலிருந்த ஓர் ஊரையடைந்து ஒரு சத்தி ரத்தில் படுத்து அன்றைய இரவைப் போக்கினார்.

அதன் பிறகு அவர் இரண்டு நாட்கள் வரையில் அன்னந் தண்ணீரின்றி நடந்து எவ்விடத்திலும் இருக்கை கொள்ளாதவராய் ஊரூராய்த் திரிந்து அப்படியே பட்டினி கிடந்து தாம் தமது உயிரை மடித்துக்கொள்வதே தாம் செய்யத்தக்க காரியம் என்ற தீர்மானத்தோடு வெகுதூரம் பிரயாணம் செய்து மூன்றாவது நாள் மாலையில் ஒரு சத்திரத்தை யடைந்த சமயத்தில் சகிக்கவொண்

ஞாத நாவறட்சியினால் களைத்து மூர்ச்சித்து நடுப்பாதையில் அப்படியே வேரற்ற மரம்போலச் சாய்ந்துவிட்டார். பக்கத்தில் இருந்த கடைக்காரர்கள் பலர் அந்த விபரீதக் காட்சியைக் கண்டு திடுக்கிட்டு எழுந்து ஓடிவந்து அவரைத் தூக்கி எடுத்துப் பக்கத்திலிருந்த சத்திரத்துத் திண்ணையில் கொண்டுபோய்ப் படுக்கவைத்து வாயில் தண்ணீரை வார்த்து அவரது மயக்கத்தைத் தெளிய வைத்து அவருக்கு அங்குக்கிடைத்த ஆகாரம் சொற்பம் கொடுத்து வற்புறுத்தி உண்ணச்செய்துவிட்டுப் போயினர். அன்றிரவில் அந்தத் திண்ணையில் படுத்திருந்த திவான், "ஆகா! பட்டினி கிடந்து இந்த உயிரை மடித்துவிட நினைத்து வந்தேன். நடு ரஸ்தாவில் மயக்கம் என்னைத் தள்ளிவிட்ட நினைவிருக்கிறது. அப்படியே நான் கொஞ்ச நேரம் கிடந்தால் என் உயிர் போயிருக்குமே. இவர்கள் ஏன் என்னை மறுபடி பிழைக்க வைத்தார்கள். மனிதர்கள் இல்லாத நடுவழியில் நான் விழுந்து இறந்திருக்கக்கூடாதா! இன்னமும் நான் பிழைத்திருந்து மேன்மேலும் என்னென்ன துன்பங்களை அநுபவிக்கக் கடவுள் திருவுளம் பற்றியிருக்கிறாரோ தெரியவில்லையே! சம்போ! சங்கரா! பரம்பொருளே! இதுவரையில் நான் அநுபவித்த தண்டனை போதாதா? நான் செய்த பாவமலை இன்னமும் பாக்கி இருக்கிறதா? ஈசா! பரமேசா! என்னப்பனே! காருண்யமூர்த்தியே! என்னால் தாங்கமுடியவில்லையே என்னப்பனே! என்னை இவ்வளவோடு க்ஷமித்து உன் பாதாரவிந்தங்களில் சேர்த்துக்கொள்ள வேண்டுமப்பனே! உன்னை யன்றி எனக்கு வேறே புகலிடம் எங்கிருக்கிறது? இந்த நாயேனை இனி இப்புவியில் வைத்திருப்பதில் யாருக்கு என்ன உபயோகம்! போதும், போதும், தீனதயாளுவே! இன்றிரவு நான் தூங்குவது இனி விழிக்காத கடைசித் தூக்கமாய்ச் செய்துவிட வேண்டும். என் அண்ணலே! காருண்ய வள்ளலே!" என்று கடவுளை நினைத்து நினைத்து உருகிய வண்ணம் படுத்து நித்திரை செய்து அன்றைய இரவைக் கழித்துவிட்டு மறுநாள் காலையில் எழுந்து மறுபடி பிரயாணம் செய்யும் கருத்தோடு ஒரு தெருவின் வழியாக நடந்து வந்துகொண்டிருக்கையில், ஒரு வீட்டு வாசலில் "ஐயோ! அப்பா! அடிக்கிறார்களே! கொல்லுகிறார்களே! இந்தப் பாழும் பிராணன் போகமாட்டேனென்கிறதே" என்று ஓர் ஓசை கேட்டது. அங்கு நின்ற சிலர், "இறங்கடா திண்ணையை விட்டு. க்ஷயரோகம் பிடித்த கிழக்கழுதை! திண்ணையில் படுத்து எங்கு பார்த்தாலும் காறிக்காறிக் கோழையைத் துப்பி எப்போது பார்த்

தாலும் கொள்ளு கொள்ளென்று இருமிக்கொண்டே படுத்திருக்கிருய்! எழுந்துபோய் ஊருக்கு வெளியிலுள்ள பாழுஞ் சாவடியில் படுத்துக்கொள். இது தொற்று வியாதி. உன் எச்சிலைக் குழந்தை குட்டிகள் மிதித்தால் அவர்களுக்கும் க்ஷயரோகம் தொற்றிக்கொள்ளும்'' என்று கூறி அதட்டி, திண்ணையில் படுத்திருந்த ஒரு குடு குடு கிழவனை இரண்டு மூன்று மனிதராய்ப் பிடித்து பலவந்தப் படுத்தித் தூக்கி ரஸ்தாவில் எறிந்து அடிக்கவும் உதைக்கவும் முயன்றனர். அந்தக் கிழவனுடைய உடம்பில் எலும்பும் தோலுமே காணப்பட்டன. பார்வைக்கு அவனுக்கு எண்பது வயது ஆயிருக்கலாம்போலத் தோன்றியது. அவனது தோல்கள் சுருங்கித் திரைந்து காய்ந்து தொங்கிக் கொண்டிருந்தன. அவனது இடையில் அழுக்கடைந்த ஒரு கோவணமும், தோளின் மேல் ஒரு கந்தைத் துணியும் காணப்பட்டன. அவனது வலக் கரத்தில் ஒரு மூங்கில் கோலும், இடதுகையில் ஒரு தகரக் குவளையும் இருந்தன. அவன் வாய் ஓயாமல் இருமி இருமி சகிக்கவொண்ணுதபடி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தான். அவ்வாறு மகா பரிதாபகரமான நிலைமையில் இருந்த ஒரு பிச்சைக்காரனை சில சண்டாளர்கள் சிறிதும் ஜீவ காருண்யம் ஈவிரக்கம் முதலிய இன்றி வெளியேற்றி ரஸ்தாவில் கொணர்ந்துபோட்டு வதைத்ததைக் கண்ட நமது திவான் முதலியார் அப்படியே பதைத்துப் போனுர். நோய் வாய்ப்பட்டு, அப்போதோ, அடுத்த நிமிஷமோ இறப்பது என்ற நிலைமையில் இருந்த அந்தக் கிழவனை அந்தக் கிராதர்கள் அப்படியும் கொடுமையாய் நடத்துகிருர்களே என்ற எண்ணத்தினுல் திவான் பதறிப்போனுர். அவரது மனத்தில் மலைபோல அழுத்திக் கொண்டிருந்த பெருந் துயரத்தை யெல்லாம் அவர் அந்த ஒரு நிமிஷ நேரம் மறந்து ஆவேசம் கொண்டவர்போலப் பாய்ந்து "ஐயா! அவரை உபத்திரவிக்க வேண்டாம்! சாகப்போகிற கிழவர் ஐயா! உங்களுக்குப் புண்ணியமுண்டு. அவரை விட்டுவிடுங்கள். அவர் இந்த இடத்திலும் இருக்காமல், நான் அவரை ஊர்ச்சாவடிக்கு அழைத்துக் கொண்டு போகிறேன்'' என்று நயந்து இறைஞ்சி நிரம்பவும் பணிவாகக் கூறியவண்ணம் கிழவனண்டைபோய் நிரம்பவும் உருக்கமாகவும் அன்பாகவும் அவனது கையைப் பிடித்து "ஐயா! வாருங்கள். நான் உங்களை வசதியான வேறே இடத்துக்கு அழைத்துக் கொண்டுபோய்ப் படுக்க வைக்கிறேன்'' என்று அழைக்க, அவ்விடத்தில் நின்ற முரடர்கள் அவ்வளவோடு கிழவனை விட்டு விட்டுத் தமது

வீட்டிற்குப் போயினர். தன்னை அவர்கள் வற்புறுத்தி ஹிம்சித்த சமயத்தில் பரமசிவன்போலத் தோன்றித் தன்னிடம் அன்போடு பேசித் தனக்கு உதவி செய்வதாக ஒரு பரதேசி வந்ததைக் கண்ட கிழவன் அளவற்ற மகிழ்ச்சியும்,உற்சாகமும் அடைந்து நமது திவான் சாமியாரைப் பார்த்து, "சாமியார் ஐயா! உங்களுக்கு அநந்த கோடி புண்ணியமுண்டு; நல்ல சமயத்தில் நீங்கள் வந்து சேர்ந்தீர்கள். நீங்கள் வராவிட்டால் இந்தப் புண்ணியாத்துமாக்கள் என்னை இந்நேரம் சித்திரவதை செய்து விடுவார்கள். நான் எழுந்து நடந்தால், கிறுகிறுப்பும் மயக்கமும் கீழே தள்ளுகின்றன. என்னைப் பிடித்துக் கொண்டே வந்தால், நான் நடந்து வருகிறேன். மெதுவாய் என்னை இந்த ஊர்ச்சாவடியில் கொண்டுபோய் விட்டுவிடுங்கள்" என்றான்.

திவான் முதலியார் அப்படியே செய்வதாக இணங்கி, மெதுவாக அவனைத் தூக்கி நிறுத்தி நடத்திக்கொண்டு அந்த ஊர்ச்சாவடி எங்கே இருக்கிறதென்பதை விசாரித்தறிந்து அங்கே போய் வசதியான ஓரிடத்தில் கிழவனைப் படுக்கவைத்து, "ஐயா! நான் போய் ஏதாவது ஆகாரம் கொண்டுவருகிறேன். சாப்பிடுகிறீர்களா? என்றார்.

உடனே கிழவன் சகிக்கவொண்ணாத ஆநந்தமும் நன்றியறிதலும் காட்டி, "சுவாமிகளே! நீங்கள் மகாராஜனாய் என்றும் சிரஞ்சீவியாய் இருக்கவேண்டும். நான் ஐம்புலன்களும் அறிவும் பெற்ற மனிதனாய்ப் பிறந்திருந்தாலும் என்னை சகலமான ஜனங்களும் கேவலம் புழுவைவிட இழிவாக மதித்து, என்னைக் காலால் மிதிக்கக்கூட அருவருப்புக்கொண்டு விலகிப்போகிறார்கள். என்னப் பன்! என் தெய்வம்! நீங்கள் இந்த சமயம் வந்து என்னை இவ்வளவு அருமையாக நடத்தி பிரியமாக உபசரிப்பதைப்பார்த்தால் கடவுளே என்மேல் இரக்கங்கொண்டு உங்கள் ரூபமாய் என்னைக் காப்பாற்ற வந்திருப்பதாக நான் எண்ணுகிறேன். சுவாமி! நான் உங்களைவிட வயசில் பெரியவன். நான் கையெடுத்து உங்களைக் கும்பிட்டால் உங்களுக்குக் கெடுதல் என்று சொல்லுவார்கள். ஆகையால், உங்கள் பெற்றோர் பெரியோருக்கு நான் நமஸ்காரம் பண்ணுகிறேன்" என்று நிரம்பவும் உருக்கமாகவும் வணக்கமாகவும் கண்ணீர் விடுத்துக் கூறியவண்ணம் தனது இரண்டு கைகளையும் குவித்து திவான் முதலியாருக்குப் பன்முறை கும்பிடு போட்டான்.

தோற்றத்தில் அவன் கேவலம் பிச்சைக்காரன்போல இருந்தாலும், அவனது சொற்கள் படிப்பாளியின் சொற்கள்போல ஒழுங்காகவும் விநயமாகவும் இருந்ததைக் கண்ட திவான் சாமியார் உடனே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு மறுபடி அந்த ஊருக்குள் சென்று நேராக ஜவுளிக்கடைக்குப் போய் இடுப்பில் உடுத்திக் கொள்ளத்தக்க வஸ்திரங்கள் நான்கு, மேலே அணியத்தக்க அங்க வஸ்திரங்கள் நான்கு, கம்பளிச் சால்வையொன்று, கீழே போட்டுப் படுத்துக் கொள்ளுவதற்கு ஜமக்காளம் ஒன்று ஆகிய ஜவுளிகள் எல்லாவற்றையும் வாங்கி மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு பாத்திரக்கடைக்குப் போய் இரண்டு மூன்று பாத்திரங்களை விலைக்கு வாங்கி எடுத்துக் கொண்டு நேராக அந்த ஊர்ச் சோற்றுக் கடையை யடைந்து புதிதாக அப்போதே தயாரிக்கப்பட்டு சுடச் சுட இருந்த அன்னம், குழம்பு, கறிகள், அப்பளம், நெய், வாழை இலை முதலியவற்றை வாங்கி எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு விரைவாகச் சாவடிக்கு வந்து சேர்ந்தார். சேர்ந்தவர் தாம் கொண்டு வந்திருந்த ஜவுளிகளையும், அன்னம் முதலிய ஆகார பதார்த்தங்களையும் எடுத்துக் கிழவனுக்கு முன் வைக்கவே, அத்தனை சாமான்கள் தனக்கு வந்து சேருமென்று கனவிலும் எதிர்பார்க்காத அந்தக் கிழவன் தனது கண்களையே நம்பாமல் களிப்பும் பேரின்பமும் அடைந்து பூரித்து அப்படியே ஸ்தம்பித்துப் போய்த் தனது மூக்கின்மேல் விரலை வைத்து, "சுவாமிகளே! எனக்கு இன்று முதல் மறுபடியும் சுக்கிரதசை ஆரம்பமாகிறதுபோ லிருக்கிறது. என் உடம்பிலுள்ள இந்தக் கோவணமும் கந்தைத்துணியுமே எனக்குக் கடைசி மோவாசை யென்றல்லவா நான் எண்ணியிருந்தேன். நான் சுடச்சுட சாதமும், குழம்பும் கண்ணால் கண்டு எவ்வளவோ காலமாய் விட்டது. இப்படிப்பட்ட பாக்கியம் மறுபடியும் எனக்குக் கிடைக்குமென்று நான் நினைக்கவே இல்லை. பட்டினி கிடந்து இப்படியே எங்கேயாவது திண்ணையில் மாண்டு கிடப்பேனென்று எண்ணினேன். தெய்வத்தின் கருணை கடாக்ஷம் மறுபடியும் என் பக்கம் கொஞ்சம் வீசுகிறது. நீங்களே இப்போது எனக்குப் பேசும் தெய்வம். உங்களைப் பார்த்தால், உலகைத் துறந்த பரதேசி போலிருக்கிறீர்கள். உங்களுக்கு இவ்வளவு விலை பெற்ற சாமான்கள் இவ்வளவு சுலபத்தில் கிடைத்ததுதான் ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது. எல்லாம் என்னையாளும் ஈசன் செயல்; கொடுப்பவனும் அவன், குறைப்பவனும் அவன், எடுப்பவனும் அவன். நம்

மால் ஆவது ஒன்றுமில்லை" என்று தழுதழுத்த குரலில் கூறித் தமது நன்றியறிதலின் பெருக்கையும் உள்ளத்தின் உவகையையும் எடுத்துக் காட்ட, உடனே சாமியார், "ஐயா! நீங்கள் எனக்கு உபசார வார்த்தை சொல்வது இருக்கட்டும். முதலில் காரியத்தைப் பாருங்கள்" என்று வாத்ஸல்யத்தோடு கூறினர்.

உடனே அந்தக் கிழவன் பாலியப் பருவத்தின் திடத்தையும் தேகபலத்தையும் அடைந்து விட்டவன்போல மாறிப்போய்த் தட்டுத் தடுமாறி எழுந்து, எதிரிலிருந்த ஒரு வாய்க்காலுக்குச் சென்று தனது தேகத்தை சுத்தம் செய்துகொண்டு திரும்பிவந்து திவான் சாமியார் கொணர்ந்திருந்த வஸ்திரங்களுள் ஒன்றை எடுத்து இடையில் அணிந்து வேறொன்றை எடுத்து உடம்பைப் போர்த்திக் கொண்டு சாமியாரிடமிருந்த விபூதியை வாங்கி யணிந்து கொண்டு ஐந்து நிமிஷம் வரையில் சிவத்தியானம் செய்து கடவுளைப் பிரார்த்தித்தபின் கீழே உட்கார்ந்து கொள்ள, திவான் சாமியார் அவனுக்கெதிரில் வாழை இலையை விரித்து அன்னம் முதலியவற்றை எடுத்துப் பரிமாற, கிழவனது போஜனம் திருப்திகரமாக நிறைவேறியது. நெடுநாள் பட்டினி கிடந்து சருகுபோலக் காய்ந்து சாரமற்றுப் போயிருந்த கிழவனது உடம்பில் பளுவான உணவு செல்லவே, அதைத் தாங்கமாட்டாமல் அவனுக்கு அலுப்பும் தூக்கமும் வந்து விட்டன. அவன் அப்படியே படுத்து வெகு நேரம் வரையில் தூங்கி விழித்துப் புத்துயிரும் புதுக்களையும் பெற்று எழுந்து உட்கார்ந்து கொண்டான். அப்போதும் அவ்விடத்திலேயே இருந்த திவான் சாமியார் அவனை நோக்கி, "ஐயா! உங்களுக்கு உடம்பு இப்போது எப்படி இருக்கிறது? கொஞ்சம் சௌக்கியமாக இருக்கிறதா? இனி நீங்கள் தைரியமாகப் போவீர்களா? இந்த ஜவுளிகளையும் பாத்திரங்களையும் உங்களுடைய உபயோகத்துக்கு வைத்துக் கொள்ளுங்கள். இவைகள் தவிர, நான் உங்களுக்கு ஐந்நூறு ரூபாய் பணம் தருகிறேன். அதை வைத்துக்கொண்டு நீங்கள் உங்களுடைய சொந்த ஊர் எதுவோ அதுக்குப்போய் சௌக்கியமாய் இருங்கள். வேறே எந்த இடத்திற்கும் போய் அலைய வேண்டாம். நானும் புறப்பட்டுப்போய் என் விதியைத் தொலைக்கிறேன்" என்றார்.

அதைக் கேட்ட கிழவனுக்குத் தன்னை யறியாமல் ஆநந்தபாஷ்பம் பொங்கி வழிந்தது. உடம்பு பரவசமடைந்தது. அவன் நிரம்ப

வும் வணக்கமாகவும் பயபக்தி விநயத்தோடும் பேசத்தொடங்கி, "சுவாமிகளே! நான் முன்னே சொன்னபடி எனக்கு இப்போது மறுபடி சுக்கிரதசை ஆரம்பமென்றே நினைக்கிறேன். ஆனால், எனக்குப் பணமென்றாலே பயமாக இருக்கிறது. பணம்தான் மனிதருக்கு எமன். பணத்தினாலேயே மனிதர் பூஜிதையும் சுகமும் அடைகிறது. பணத்தினாலேயே மனிதருக்கு கஷ்டங்களும், கவலைகளும், துயரமும், அபாயங்களும் நேருகின்றன. அது இல்லாவிட்டாலும், மனிதருக்கு உய்வில்லை. அதை வைத்திருப்பதும் அபாயகரமாக இருக்கிறது. நான் இதற்கு முன் ரொக்கமாக சுமார் ஆயிரம் ரூபாய் பணம் வைத்துக்கொண்டிருந்தேன். என்னோடு இருந்த ஒரு பரதேசி எனக்கு வேண்டியவன்போல இருந்து நான் தூங்கியபோது அதை அபகரித்துக்கொண்டு ஓடிப்போய் விட்டான். இப்போது இந்தப் பணத்தை வைத்துக்கொண் டிருந்தாலும், இதன் கதியும் அப்படித் தான் முடியுமோ என்னவோ! எனக்கும் பணத்துக்கும் இராசியே இல்லை" என்றார்.

திவான் சாமியார், "ஆம்; ஐயா! ஆயிரம் ரூபாய் பணத்தைக் கையில் வைத்திருந்த நீங்கள் உங்கள் ஊரில் சௌக்கியமாய் இராமல், பரதேசிகளோடு கண்டவிடத்தில் ஏன் தங்கினீர்கள்? அது உங்களுடைய தவறுதானே? நீங்கள் காஷாயம் வாங்கிக்கொண்ட பரதேசியாகவும் தோன்றவில்லை. அப்படி இருக்க, நீங்கள் ஊரோடு நிலையாய் ஏன் இருக்கவில்லை?" என்றார்.

கிழவன்:—சுவாமிகளே! அந்த வயிற்றெரிச்சலை நான் என்னவென்று சொல்லப்போகிறேன்! நான் வெளிப்பார்வைக்கு ஒரு மனிதனைப்போலக் காணப்பட்டபோதிலும் நான் உண்மையில் மனிதனே யல்ல! என்னுடைய வரலாற்றை நீங்கள் கேட்டால் இப்பேர்ப்பட்ட மகா பாவியோடு நாமேன் பேசினோமென்றும், இவனுக்கு நாமேன் உதவி செய்தோமென்றும் நினைத்து உங்களையே தூஷித்துக் கொள்வீர்கள். நான் இறந்தவரிலும் சேராமல் இருப்பவரிலும் சேராமல் நடைப்பிணமாய் இருந்து வருகிறேன். நாய் நரி காக்கை கழுகு பூச்சி புழுக்கள்கூட எங்கள் ஊரில் இருக்க அனுமதியுண்டு. நான் எவரும் செய்யாத பெருத்த பாவத்தைச் செய்தவனாகையால், எங்கள் ஊரார் என்னை ஊருக்குள் சேர்க்கவே மாட்டார்கள். நான் உள்ளே போனால், என்னை எவராவது கல்லால் அடித்துக் கொன்று விடுவார்கள்.

திவான் சாமியார்:—என்ன ஆச்சரியம் ஐயா இது! ஜனங்கள் அப்படி விபரீதமாய் நடந்துகொள்ளும்படியான எந்தப் பாவத்தை நீங்கள் செய்துவிட்டீர்கள்.

கிழவன்:—என் மனசார நான் ஒரு பாவத்தையும் அறியேன். நான் எவர் விஷயத்திலும் அற்பமான தவறும் செய்யவில்லை. நான் இன்ன பாவந்தான் செய்தேனென்று சொல்ல எனக்கே தெரிய வில்லை. ஆனால், எங்கள் ஊர் ஜனங்களுக்கு நான் அப்பேர்ப்பட்ட கொடும்பாவி யாகிவிட்டேன்.

திவான் சாமியார்:—என்ன ஆச்சரியம் ஐயா இது! நீங்கள் சொல்வது எனக்குக் கொஞ்சமும் விளங்கவில்லையே! நம் முன்னோர் மனிதர் இன்னின்ன காரியம் செய்தால் அது பாவம் என்று கண்டு எழுதி அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந் திருக்கிறார்கள். நீங்கள் அப்படிப்பட்ட காரியம் எதையும் செய்யாதிருந்தால், ஜனங்கள் உங் களைப் பாவியென்று ஏன் மதிக்கிறார்கள்?

கிழவன்:—சுவாமிகளே! நான் மூடகமாய்ப் பேசிக்கொண்டே போனால் உங்களுக்கு இது விளங்கவே விளங்காது. இது எவ் விடத்திலாவது சாதாரணமாய் நடக்கிறகாரியமாக இருந்தாலல்லவா இது மனசில் படும். இது எந்த இடத்திலும் நடவாத மகா புதுமை யான விஷயம். ஆகையால், நான் சொன்னால்தான் இது தெரியும். சொல்லுகிறேன் கேளுங்கள். நான் இப்போது பார்வைக்குப் பிச் சைக்காரனாக இருந்தாலும் கொஞ்சகாலத்துக்குமுன் வரையில் நான் பெருத்த லக்ஷாதிபதியா யிருந்தவன். என் பெண்ஜாதி உறவினர் கள் முதலியோர் இன்னமும் இருக்கிறார்கள். என்னைப்போல அபார மான செல்வத்திலும், செல்வாக்கிலும், பெருமைப் பாட்டிலும் இருந்தவனுமில்லை, என்னைப்போல ஒரு நிமிஷத்தில் பிச்சைக்கார னாய்க் கேவலம் நடைப்பிணமாய் நடத்தப்பட்டு விரட்டப்பட்ட வனும் இல்லை யென்றே சொல்லவேண்டும். எனக்கு வயசு முதிர்ந்து போனமையால், அடிக்கடி எனக்கு மார்படைப்பும், மயக்கமும் உண்டாவது வழக்கம். தண்ணீர் குடித்து, நாலைந்து ஏப்பம் விட்டால் அந்த உபத்திரவம் உடனே சாதாரணமாய் விலகிப் போய்விடும். நான் கடைசியாய் என் சம்சாரத்துடனும் மற்ற சொந்த ஜனங்க ளுடனும் இருந்து தாம்பூலம் போட்டுக்கொண் டிருந்தபோது எனக்கு திடீரென்று மார்படைப்பும், மயக்கமும் வந்துவிட்டன. அதற்குமுன் அந்த உபத்திரவம் கொஞ்சநேரம் இருந்து விலகிப்

போகும். அந்தத் தடவை விலகவே இல்லை. என் பிரக்ஞை எனக்கு சுத்தமாய் இல்லாமல் போய்விட்டது. அந்த மாதிரி நான் எவ்வளவு நேரம் இருந்தேனென்பதும் இடையில் என்னென்ன காரியங்கள் நடந்தன வென்பதும் எனக்குத் தெரியவே இல்லை. ஆனால், நான் மறுபடி விழித்துக்கொண்டு பார்க்கையில், நான் எங்கே இருந்தேன் தெரியுமா? எங்கள் ஊர்ச் சுடுகாட்டில் கட்டைகளும் முட்டைகளும் நெருப்பும் புகையுமாயிருந்த ஒரு சிதையின் மேல் நான் இருக்கக் கண்டேன். நெருப்பு நாலாபக்கங்களிலும் என்னைச் சுட்டதை உணர்ந்து அதைப் பொறுக்கமாட்டாமல் நான் துள்ளி சிதையை விட்டு வெளியில் குதித்தேன். அப்போது நடு நிசிவேளை. எங்கும் ஒரே இருள் மயமாய் நிறைந்திருந்தது. அது குளிர்காலமாகையால், எங்கும் ஒரே பனியாக மூடிக்கொண்டிருந்தது. நான் வஸ்திரம் அரைநாண் கயிறு முதலிய எந்தத் தொந்தரவும் இல்லாமல் பிறந்த மேனியாய் நின்றேன்; சிறிது தூரத்தில் பிணம் சுடும் தோட்டி கையும் தடியுமாய் உட்கார்ந்து கொண்டிருந்தவன், நான் திடீரென்று எழுந்து நின்றதைக் கண்டு திடுக்கிட்டுத் திகில் கொண்டு எழுந்து நடுநடுங்கி என்னை உற்றுப்பார்த்த வண்ணம் எனக்கருகில் நெருங்கி வந்தான். அந்த ஊரில் நான் பெருத்த பணக்காரனாகையால், நான் அவனுக்கு வருஷவாரி நெல் பணம் முதலியவை கொடுத்து அவனுடைய குடும்பத்தைக் காப்பாற்றுகிறவனாகையால், அவன் என்னிடம் அதிக பயபக்தி விசுவாசத்தோடு நடந்துகொள்வது வழக்கம். மார்பு அடைத்ததனால் மயங்கி விழுந்த நான் சுடுகாட்டில் சிதையின்மேல் இருந்தது எனக்கு எப்படி அபாரமான வியப்பாக இருந்ததோ, அதுபோல, செத்துப் போய் எரிந்துகொண்டிருந்த பிணம் திடீரென்று எழுந்து நின்றது அவனுக்கு வியப்பாகவும் திகிலாகவும் இருந்தது. இருவரும் ஒருவரையொருவர் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டோம். உடனே நான், "அடே! காத்தான்! நான் இப்போது இங்கே இருப்பதைப் பார்த்தால், நான் இறந்துபோய் விட்டேனென்று எண்ணி என்னுடைய ஜனங்கள் என்னைத் தூக்கிக்கொண்டு வந்து சிதையில் படுக்கவைத்து தீமூட்டிவிட்டுப் போய்விட்டார்கள் என்றே எண்ணவேண்டி யிருக்கிறது. உண்மையில் என் உயிர் போகாமல் இருக்கையில் ஜனங்கள் ஏன் இப்படிச் செய்தார்கள் என்பது தெரியவில்லையே!" என்றேன். உடனே காத்தான் அளவிட முடியாத ஆநந்தமும் பூரிப்பு மடைந்து, தன் கையை எடுத்து வணக்கமாகக்

கும்பிட்டு, "சாமி! எசமானே! தர்மராசாவே! நீங்க எறந்துட்டீங் கன்னு கேட்டதும் எம் மனசு கொதிச்சுப்போச்சு சாமீ! எனக்கும் எம்புள்ளே குட்டிங்களுக்கும் தாராளமாக் கஞ்சி வாக்கற கர்ணமவ ராசா எறந்து பூட்டாறென்னு நாங்கள்ளாம் அளுதது சொல்லி முடியாது. நல்ல வேளை பொளச்சிக்கிட்டீங்க! எங்க உள்ளங் குளுந்து துங்க. ஒங்குளுக்கு மாரடெச்சு மூச்சு பேச்சு எல்லாம் நின்னுபோச்சுதாம். ஒடம்பெல்லாம் சில்லிட்டுப் போச்சாம். மத்தி யானம் மொதக்கொண்டு ராத்திரி பத்துநாளிவரையிலே அப்பிடி யே இருந்திச்சாம், எல்லாரும் பாத்து எஜமானுக்கு உசிருபோயி டிச்சின்னு முடிவு கட்டி, பாடையிலே வச்சு, கொட்டுமுழக்கோடே கொண்டாந்து நெருப்பு வச்சுட்டு இப்பதாம் போறாங்க. எசமா னுக்கு ஒடம்புலே துணி கிணி ஒண்ணுமில்லெ. வெட வெடன்னு நடுக்குது. வாங்க; நான் எசமானே ஊட்டுலே கொண்டாந்து உட் டுட்டுப் போறேன்" என்று உருக்கமாகவும் வாஞ்சையாகவும்சொன் னன். அவனுடைய உண்மையான பிரியத்தைக் காண, என் உள் ளம் பூரித்தது. நான் நிரம்பவும் சந்தோஷமடைந்து அவனைப் பார்த்து, "அப்பா! காத்தான்! நான் நிர்வாணமாயிருக்கிறேன். இப்படியே ஊருக்குள் வரவெட்கமாக இருக்கிறது. நீ உடனே எங் கள் வீட்டுக்கு ஓடி, நான் பிழைத்துக்கொண்டேனென்ற சந் தோஷ சங்கதியைச் சொல்லி, இரண்டு துணிகளோடு யாரையாவது உடனே இங்கே அழைத்துக்கொண்டுவா" என்றேன். காத்தான் உடனே என்னுடைய வீட்டுக்குப் போய் அரை நாழிகை கழித் துத் திரும்பி இரைக்க இரைக்க ஓடிவந்தான். அவனுடன் வேறே யாரும் வரவில்லை. அவனுடைய கையில் ஒரு சிறிய மூட்டை இருந்தது. நான் பிழைத்துக்கொண்டேனென்ற சங்கதியைக் கேட்டு ஜனங்களெல்லோரும் ஆசையாக ஓடி வருவார்கள் என்று நான் நினைத்ததற்கு இது முற்றிலும் மாறாக இருந்ததன்றி, நான் கட்டிக்கொள்ளும் துணியை அவர்கள், பிணம் சுடும் தோட்டியிடம் கொடுத்தனுப்பியதும் எனக்கு ஆச்சரியமாகவும் ஆயாசமாகவும் இருந்தது. நான் உடனே அவனைப் பார்த்து, "என்னடா காத்தான், வேறேயாரும் வரவில்லையா?" என்றேன். அவன் நிரம்பவும் துக்ககர மான குரலோடு பேசத்தொடங்கி, "எசமானே! நானு இந்த அக் கரமத்தெ என்னென்னு சொல்வேனுங்க! எசமான் எறந்துபோயிட் டீங்கன்னு ஒங்களோடே சம்சாரம் சொந்தக்காரரு எல்லாரும்மோதி யடிச்சு அளுது பொரண்டுக்கிட்டுக் கெடந்தாங்க. ஐயோ! எங்க

மவராசன் போயிட்டாரே! இன்னமே அவரேக் காணப்போறமா இன்னு பொலம்பினுங்க. அப்ப நாம் போயி இந்த மாதிரி நீங்க பொளச்சு உசிரோடே இருக்கிறீங்கன்னு சொன்னேன். அப்ப எசமானுடைய சம்சாரமும் இன்னம் ரெண்டு மூணு பேரும் இருந்தாங்க. எசமானுடை சம்சாரம், "அடே காத்தான்! பொணத்துக்கு எப்பவாவது உசிரு வந்ததுண்டா. நரம்பு முறுக்கு ஒரு வேளை அது எளுந்து குந்தி இருக்கும். தடியாலே ஒரே அடியா அடிச்சு இடுப்பெ முறிச்சு நெருப்புலேபோட்டுடக் கூடாதா. நீ இந்தச் சங்கதியெச் சொல்லவா வந்தே, போ. ஒடனே அடிச்சு நெருப்புலெ போட்டுக் கொளுத்திப் புடு" இனுங்க. அதெக் கேட்ட ஒடனே என் வவுறு பத்திஎரிஞ்சு போயிடிச்சு எசமானே! சொந்தப் பொஞ்சாதி இப்பிடியும்மனந்துணிஞ்சு சொல்லுவாங்களான்னு நானுஆச்சரியப்பட்டுப் பூட்டெனுங்க. அப்பாலே நான் அவுங்களெப் பாத்து," தாயே! அப்பிடி யெல்லாம் சொல்லா தீங்க, எசமான் சாவக்கிலே இல்லீங்க. நெருப்புச் சூடு பட்ட ஒடனே மாரடெப்பு சடக்குனு நீங்கிப்போயி பொளெச்சி எளுந்து உசிரோட இருக்குறாங்க. உசிரோடே இருக்கறவங்களே அடிச்சிக்கொல்ல, நானு கொலெகாரனல்லங்க. அப்பிடி நானு ஒரு நாளும் செய்யமாட்டேனுங்க" இன்னேன். ஒடனே அவுங்க என்ன சொன்னுங்க தெரியுமா? "அடே காத்தான்! எறந்துபோனதாக மந்தரம் கிந்தர மெல்லாம் சொல்லிக் கொளுத்தின பொறவாலெ, மனிசரு ஊருக்குள்ளற வந்தா, அது அந்த ஊருக்கே ஆவாது அவுங்க சொந்த மனிசரும் அவரெப் பாக்கவே கூடாது. அவரு தப்பித்தவறி வந்தா யாராச்சும் அடிச்சுக் கொன்னுப் புடுவாங்க. நீ ஒரு காரியம் செய்யி, நாங்க ஒங்கையிலே ஆயிரம் ரூவா பணமும் ரெண்டு துணியும் தாரோம். அதெக்கொண்டு போயி அவருக்கிட்ட குடுத்து ராவோடெ ராவாப் பொறப்புட்டு எங்கிடாச்சும் தொலெ தூரத்துக்கப்பாலே போயிடச் சொல்லு. இந்தப் பக்கத்துலேயே அவரு இன்னமே தலெ காட்டினு, அநியாயமா அவரெ அடிச்சுக் கொன்னுப்புடுவாங்க. நீயும் இந்தச் சங்கதியெ யாருக்கும் சொல்லாதே. ஒனக்கும் ஒரு நூறு ரூவா தாரோம்" இன்னுசொல்லி ஒங்களுக்கு ரெண்டு துணியும் ஆயிரரூவா பணமும் எனக்கு நூறு ரூவாயும் குடுத்தாங்க. நானு அதுக்கு மேலே மறுத்துச்சொல்ல முடியலீங்க. அதெயெல்லாம் எடுத்துக்கிட்டு வந்துட்டேனுங்க. அம்பிட்டுதான் சங்கதி. எல்லாம் இதோ இருக்குதுங்க. எசமான் பிரியப்படி செய்யுங்க" என்

ருன். அந்த வரலாற்றைக் கேட்டவுடன் என் மனம் எப்படிக் கொதித்திருக்குமென்று நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள். அதற்குமேல் என்ன செய்கிறது, நான் வெகுநேரம் வரையில் யோசித்து யோசித்துப் பார்த்தேன். ஒன்றும் தோன்றவில்லே. அவர்களுடைய பிரியப்படி நான் செய்வதைத்தவிர வேறு நான் என்ன செய்வதென்பது தோன்றவில்லே. நான் துணிகளையும் ஆயிரம் ரூபாய் பணத்தையும் வாங்கிக்கொண்டு அந்த ஊரை விட்டே வந்துவிட்டேன். தோட்டி தொட்ட துணியை வாங்குவது அருவருப்பாக இருந்தாலும், நான் நிர்வாணமாக இருந்தேனுகையாலும், குளிர் என்னுல் தாங்க முடியவில்லேயாகையாலும், பொழுது விடிகிறவரையிலாவது அவைகளை வைத்திருந்து பிறகு வேறே வேஷ்டிகள் வாங்கிக்கொண்டு அவைகளை எறிந்துவிடலாமென்று நினைத்து அவைகளை வாங்கிக்கொண்டு வந்துவிட்டேன். அதுமுதல் நான் ஊரூராய் அலேந்தேன். என்னிடமிருந்த பணத்தையும் நான் முன்னே சொன்னபடி ஒரு பரதேசி அபகரித்துக் கொண்டுபோய் விட்டான். அதன் பிறகு தகரக்குவளே, கோவணம், கந்தைத்துணி, மூங்கில்குச்சி, க்ஷயரோகம் ஆகிய ஐந்து பொருள்களும் தான் எனக்குத் துணையாக மிஞ்சி நின்றன. நான் ஊரூராய் அலேந்து பிச்சையெடுத்து எப்போது இந்த உயிர் உடலே விட்டுப் பிரிந்து போகுமென்று வழி பார்த்துக்கொண்டே இருந்த நிலேமையில் ஆண்டவனைப்போல நீங்கள் வந்து என்னுடைய துன்பங்களைப் போக்கி என் மனசைக் குளிரச் செய்தீர்கள். அதனுல்தான் நான் எனக்கு மறுபடி சுக்கிர தசை ஆரம்பிக்கிறதோ என்றேன்" என்ருர்.

அந்த மகா ஆச்சரியகரமானதும் எங்கும் நடவாததுமான சம்பவத்தைக் கேட்டு திவான் சாமியார் முற்றிலும் ஸ்தம்பித்து திக்பிரமை கொண்டு கல்போலச் சலேமந்து போய் இரண்டொரு நிமிஷ நேரம் மௌனமாக இருந்தபின், "ஐயா! உங்கள் வரலாற்றைப் போல எங்கும் நடந்ததாக நான் இது வரையில் என் காதாலும் கேட்டதே இல்லே. உங்களுடைய சம்சாரம் இப்படியும் செய்தார்களா வென்பது எனக்கு நம்பிக்கைப் படவில்லே. அந்த அம்மாள் இப்போது எங்கே இருக்கிருர்கள்?" என்ருர்.

கிழவர், "அவள் எங்கே இருந்தால் எனக்கென்ன? இப்படியெல்லாம் அவள் செய்த பிறகு அவள் எங்கே இருக்கிருள்

என்று தெரிந்துகொள்ளவும், அவளுடைய முகத்தைப் பார்க்கவும் என் மனம் எண்ணுமா?" என்றார்.

அதைக் கேட்ட திவான் சாமியார், "வாஸ்தவம். உங்களுடைய சொந்த ஊர் எது?" என்றார்.

கிழவர், "என் சொந்த ஊர் திருவடமருதூர்?" என்றார்.

திவான் திடுக்கிட்டு, "ஹா! திருவடமருதூரா? இதோ கும்ப கோணத்துக்கு அடுத்தாற்போல இருக்கிறதே! அந்தத் திருவடமரு தூரா?" என்றார்.

கிழவர், "ஆம், ஆ. அதே திருவடமருதூர்தான்" என்றார்.

திவான் முதலியார், "தங்களுடைய நாமதேயம் என்னவோ?" என்றார்.

கிழவர், "என்னைக் குஞ்சிதபாத முதலியார் என்பார்கள்" என்றார்.

அந்தப் பெயரைக் கேட்ட திவான் மெய்மறந்து மின்சார சக்தியால் தாக்கப்பட்டவர் போலத் துள்ளிகுதித்து, "ஹா! ஹா! என்ன! என்ன! தங்கள் பெயர் குஞ்சிதபாத முதலியாரா? அவர்களுடைய குமாரர்கூட எங்கேயோ திவான் உத்தியோகத்திலிருந்த தாகச் சொன்னார்களே? அந்தக் குஞ்சிதபாத முதலியாரா தாங்கள்?" என்றார்.

கிழவர், "ஆம்; அதே பாவிதான் இந்த நடைப்பிணம். ஏன் நீங்கள் வியப்போடு கேட்பதைப் பார்த்தால் நீங்கள் திருவடமரு தூருக்குப் போயிருப்பதாகவும், என்னைப்பற்றிக் கேள்வியுற் றிருப்பதாகவும் தோன்றுகிறதே!" என்றார்.

அதைக் கேட்ட திவான் சாமியார் அதற்குமேல் பேசமாட்டா மல் அபாரமான துக்கத்தினாலும் மன எழுச்சியினாலும் தாக்கப் பட்டு மூர்ச்சித்துப் பக்கத்திலிருந்த சுவரில் அப்படியே சாய்ந்து விட்டார்.

இரண்டாம் பாகம்

முற்றிற்று.

---

திருமகள் விலாச அச்சு நிலையம், சென்னை:— (23—7—1948.)

B. R. N.

— & —

SONS.

MADRAS.